VR11,31'N75
31N25 (4.3)
61690

# Tamil Nadu Legislative Assembly Debates

*Thirteenth Session of the Fifth Legislative Assembly under the Constitution of India.*

6th, 7th, 8th and 10th March 1975.

VOLUME LXIV (Nos. 1 to 4)

TABLE OF CONTENTS

*Thursday, 6th March 1975.*


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i–vi |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... ... | vii |
| List of the Tamil Nadu Legislative Assembly Members with their Constituencies ... ... ... | ix–xvi |
| 1. Questions and Answers ... ... ... | 1-34 |
| 2. General discussion on the Budget for the year 1975–76 ... ... ... ... ... | 34-123 |
| 3. Papers laid on the Table ... ... ... | 123–124 |


*Friday, 7th March 1975.*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | 135-167 |
| 2. Points of Order— | |
| (i) Publication in the "Indian Express" referring to a D.M.K. Member as A.D.M.K. Member ... | 167-170 |
| (ii) Revision of Deputy Speaker's ruling about Members criticising the Constitution ... ... | 170-171 |

வெளியீடு—23—7—1975]
Issued—23—7—1975]

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைக

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DI

# பணித்துறை வெளியீ

## OFFICIAL REPORT

வியாழக்கிழமை 1975 மார்ச் 6

**Thursday 6th March 1975**

தொகுதி LXIV—எண் 1

**Volume LXIV—No. 1**

©
தமிழ் நாடு அரசு
1975

GOVERNMENT OF TAMIL NADU
1975

சட்டமன்றப் பேரவைத் துறை
சென்னை-600009.

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-600009.*

விலை 50 காசுகள்]
PRICE 50 Paise]

PAGES

*Friday, 7th March* 1975.—cont.

3. Announcement—
The Indian Ports (Tamil Nadu Amendment) Bill, 1975 ... ... ... ... ... ... 171

4. Government Bill—
The Indian Ports (Tamil Nadu Amendment) Bill, 1975 ... ... ... ... ... ... 171-172

5. General discussion on the Budget for the year 1975-76—*cont.* ... ... ... ... ... 172-256

6. Papers laid on the Table ... ... ... 256-257

*Saturday, 8th March* 1975.

1. Questions and Answers ... ... ... ... 265-299

2. Point of Order—
Statement by the Public Works Minister ... 299-300

3. Government Bills—
(i) The Tamil Nadu Land Encroachment (Amendment) Bill, 1975 ... ... ... ... 300

(ii) The Tamil Nadu Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1975 ... ... ... 301

4. General discussion on the Budget for the year 1975-76—*cont.* ... ... ... ... 301-391

5. Papers laid on the Table ... ... ... 391-392

*Monday, 10th March* 1975.

1. Questions and Answers ... ... ... ... 305-420

2. Presentation of Reports—
Reports (Sixth and Seventh) of the Committee on Delegated Legislation ... ... ... 420



PAGES

*Monday, 10th March* 1975—cont.

3. Points of Order—
(i) Conference of Chief Ministers and Food Ministers of States at Delhi ... ... ... ... 420

(ii) Alleged incorrect information furnished by the Minister for Harijan Welfare to the House ... 420-421

4. General discussion on the Budget for the year 1975-76—*cont.* ... ... ... ... ... 421-530

5. Papers laid on the Table ... ... ... ... 530-531

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 30 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 31 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 32 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 33 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.). |
| 34 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.). |
| 35 இராமன், திரு. மூ. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 36 இராஜாங்கம், மாண்புமிகு திரு. என். (அமைச்சர்). .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 37 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. .. | கன்னியாகுமரி. |
| 38 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 39 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |
| 40 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பெரணமல்லூர். |
| 41 எட்மண்ட், திரு. க. உரொ. .. .. | திருச்செந்தூர். |
| 42 கணபதி, மாண்புமிகு திரு. என். (பேரவைத் துணைத் தலைவர்). .. | பாபநாசம். |
| 43 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குனேரி. |
| 44 கணேசன், திரு. எல். .. .. | ஒரத்தநாடு. |
| 45 கணேசன், திரு. சி. .. .. .. | குற்றாலம். |
| 46 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | இணைத்துக்கடவு. |
| 47 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேஸின் பிரிட்ஜ். |
| 48 கதிரவன், திரு. கா. மு. .. .. .. | தென்காசி. |
| 49 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 50 கந்தசாமி, திரு. கே. பி. .. .. .. | சாத்தான்குளம் |
| 51 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 52 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 53 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. .. | பாலக்கோடு. |
| 54 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 55 கருணாநிதி, திரு. தாழை மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 56 கருணைநாதன், திரு. சோ. .. .. | கூனூர். |
| 57 கருப்பையா, திரு. ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ.வ |
| 58 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 59 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு. | முதுகளத்தூர். |
| 60 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர். |
| 61 கார்த்திகேயன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |
| 62 காவேரிமணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம். |
| 63 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 64 கிட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 65 கிருட்டிணன், திரு. நா. .. .. .. | பேரணம்பட்டு (செ. வ.). |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 67 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 68 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 69 குப்பல் இராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 70 குமாரசாமி, திரு. அ. சே. .. .. | திருக்கோயிலூர். |
| 71 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 72 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 73 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 74 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனப்பள்ளி. |
| 75 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ. வ.). |
| 76 கோபால், திரு. கே. பி. .. .. .. | கம்பம். |
| 77 கோவிந்தசாமி, திரு. வி. செ. .. .. | காவேரிப்பட்டிணம். |
| 78 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர். |
| 79 கோவிந்தராசன் துரை, திரு. .. .. | கந்தர்வகோட்டை. |
| 80 கோவிந்தன், மாண்புமிகு புலவர் கா. (பேரவைத் தலைவர்). | செய்யாறு. |
| 81 கோவை செழியன், திரு. .. .. | காங்கேயம். |
| 82 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி. |
| 83 சங்குமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம். |
| 84 சதாசிவம், திரு. செ. .. .. .. | ஆண்டிமடம். |
| 85 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 86 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 87 சண்முகம், திரு. பெரி. .. .. .. | திருவாடானை. |
| 88 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம். |
| 89 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |
| 90 சத்தியவாணிமுத்து, திருமதி .. .. | பெரம்பூர் (செ.வ.). |
| 91 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. .. | இராமநாதபுரம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
| --- | --- |
| 92 சம்பத், திரு. டி. வி. | செம்பனார்கோவில். |
| 93 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 94 சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 95 சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 96 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி. |
| 97 சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 98 சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி (செ.வ.) |
| 99 சீனிவாசன், திரு. பெ. | விருதுநகர். |
| 100 சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 101 சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 102 சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 103 சின்னசாமி திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 104 சின்னசாமி, திரு. வ. | வந்தவாசி (ஆ. வா.) |
| 105 சின்னராசு, டாக்டர் ச. அ. | ஓசூர் (செ. வ.) |
| 106 சின்னவெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 107 சுந்தரம், திரு. ஒ. என். | திண்டுக்கல். |
| 108 சுப்பிரமணியம், திரு. வ. | சிங்காநல்லூர். |
| 109 சுப்பிரமணியம், திரு. எஸ். கே. | சத்தியமங்கலம். |
| 110 சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 111 சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 112 சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை. |
| 113 சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 114 சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ. வ.) |
| 115 சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 116 சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ. வ.) |
| 117 சுப்பையா, திரு. வ. ஆர். | கடயநல்லூர். |
| 118 சுருளிவேல், திரு. மு. | போதிநாயக்கனூர். |
| 119 சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 120 சுவாமிதாஸ், திரு. எ. | பத்மநாபபுரம். |
| 121 செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ. வ.) |
| 122 ஜெயராமன், திரு. சி. | சேலம்-1. |
| 123 செல்லத்துரை, திரு. வீ. | ஓமலூர். (செ. வ.) |
| 124 செல்லையா, திரு. குழ. | பேராவூரணி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
| --- | --- |
| 125 செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம். |
| 126 சேதுராமன், திரு. சி. | சிவகங்கை. |
| 127 சோலையா, திரு. த. | மானாமதுரை. |
| 128 சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ. வ.) |
| 129 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். | அருப்புக்கோட்டை. |
| 130 சௌந்தரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 131 டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 132 தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை-மேற்கு. |
| 133 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 134 தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 135 தவமணித்தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 136 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்ராம்பள்ளி |
| 137 தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 138 தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 139 திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 140 துரைசாமி திரு. வ. க. | குடியாத்தம். |
| 141 துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 142 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 143 துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 144 தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 145 தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 146 தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 147 தோப்பூர் திருவேங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 148 நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 149 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 150 நரசிம்மன், திரு. வ. சி. | ஆரணி. |
| 151 நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 152 நாகராஜன், டாக்டர் க. | வடமதுரை. |
| 153 நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ. |
| 154 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டன்சத்திரம். |
| 155 நாச்சியப்பன், திரு. வ. எம். டி. | ஆத்தூர். |
| 156 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 157 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 158 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). .. | திருவல்லிக்கேணி. |
| 159 நைனுமலை, திரு. இரா. .. .. | ராசிபுரம். |
| 160 பத்மநாபன், திரு. பொ. .. .. | திருநெல்வேலி. |
| 161 பத்மாவதி, திருமதி. வ. கோ. .. .. | முசையூர். |
| 162 பரந்தாமன், திரு. ஆ. .. .. .. | கடம்பத்தூர். |
| 163 பரமசிவம், திரு. எம். .. .. .. | தாரமங்கலம். |
| 164 பலராமன், திரு. என். எஸ். .. .. | அரக்கோணம். |
| 165 பழனிசாமி, திரு. நா. .. .. .. | பொங்கலூர். |
| 166 பழனிசாமி, திரு. என். கே. .. .. | பெருந்துறை. |
| 167 பழனிசாமி, திரு. மு. .. .. .. | வெள்ளக்கோயில். |
| 168 பழனிச்சாமி, புலவர் சி. .. .. | பழனி (செ.வ.) |
| 169 பழனியப்பன், டாக்டர் ச. மு. .. .. | கோபிசெட்டிபாளையம். |
| 170 பழனியம்மாள், திருமதி வி. ப. .. | தாராபுரம். |
| 171 பழனிவேலன், திரு. க. .. .. | வரகூர். |
| 172 பழனிவேலன், திரு. மு. .. .. | நாமக்கல். |
| 173 பழனிவேலு, திரு. பி. .. .. .. | ஆத்தூர். |
| 174 பழனிவேல் ராஜன், திரு. .. .. | தேனி. |
| 175 பன்னீர் செல்வம், திரு. எம். .. .. | ஆம்பூர் (செ. வ.) |
| 176 பாண்டுரங்கம், திரு. சி. .. .. .. | செங்கம் (செ. வ.) |
| 177 பாலகிருட்டிணன், திரு. கு. .. .. | மன்னார்குடி. |
| 178 பாலசுந்தரம், திரு. வை. .. .. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 179 பாலையா, திரு. வ. .. .. .. | கொளச்சல். |
| 180 பெரியசாமி, திரு. கு. .. .. .. | கொடவாசல். |
| 181 பெரியசாமி, திரு. தி. ஒ. .. .. | அவிநாசி. |
| 182 பெருமாள், திரு. செ. .. .. .. | காட்டுமன்னார்கோயில். |
| 183 பெருமாள், திரு. வ. ஆர். .. .. | காரியப்பட்டி. |
| 184 பொம்மன், திரு. கு. அ. .. .. | கூடலூர் (செ. வ.) |
| 185 பொன் சொக்கலிங்கம், திரு. பி. .. | சிதம்பரம். |
| 186 பொன்னப்ப நாடார், திரு. ஆர். .. .. | விளவங்கோடு. |
| 187 பொன்னுமலை, திரு. தி. .. .. | பனைமரத்துப்பட்டி. |
| 188 பொன்னுரங்கம், திரு. வ. எம். .. | சோளிங்கபுரம். |
| 189 மணலி கந்தசாமி, திரு. சி. .. ... | திருத்துறைப்பூண்டி. |
| 190 மணியன், திரு. பி. எஸ். ... ... | சோழவந்தான். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 191 மதியழகன், திரு. கே.ஏ. .. .. | ஆயிரம் விளக்கு. |
| 192 மருதாசலம், திரு. என். .. .. | பேரூர் (செ. வ.). |
| 193 மலைக்கண்ணன், திரு. வீ. .. .. | இளையாங்குடி. |
| 194 மன்னியப்பன், திரு. சி. .. .. | கிருஷ்ணகிரி. |
| 195 மாணிக்கம், திரு. என். .. .. | பென்னகரம். |
| 196 மாணிக்கவாசகம், திரு. இரா. .. .. | தொண்டாமுத்தூர். |
| 197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமநாதபுரம் மாவட்டம்), |
| 198 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். .. .. | பட்டுக்கோட்டை. |
| 199 மாரிமுத்து, திரு. மூ. .. .. | தலைவாசல் (செ.வ.) |
| 200 மீனாட்சிசுந்தரம், திரு. மா. .. .. | வேதாரண்யம். |
| 201 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். .. | மேலப்பாளையம். |
| 202 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. .. | லால்குடி. |
| 203 முத்து, திரு. வ. .. .. | சங்கரி (செ. வ.) |
| 204 முத்துசாமி, திரு. ப. .. .. .. | வேடசந்தூர். |
| 205 முத்துச்செல்வன், திரு. பு. செ. .. | முசிறி. |
| 206 முத்துவேல், திரு. ந. .. .. .. | வானூர் (செ. வ.) |
| 207 முத்தையா, திரு. கே. கே .. .. | கடலூர். |
| 208 முத்தையா, திரு. எம். .. .. .. | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 209 முருகையன், திரு. எஸ். .. .. | கலசப்பாக்கம். |
| 210 முனியாண்டி, திரு. ஆ. .. .. .. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 211 முனு ஆதி, திரு. மு. .. .. .. | திருப்போரூர். |
| 212 முனுசாமி, திரு. ரா. ரா. .. .. | மேல்மலையனூர். |
| 213 மொய்தீன், திரு. திருப்பூர் வ. எம். .. .. | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 214 மோசஸ், திரு. ம. .. .. .. | நாகர்கோயில். |
| 215 ரங்கநாதன், திரு. கே. .. .. .. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 216 ராமசாமி, திரு. இ. .. .. .. | வால்பாறை. |
| 217 ராமசாமி, திரு. ஜி. .. .. .. | திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). |
| | பவானிசாகர் (செ. வ.) |
| 218 ராமராசன், திரு. வ. க. .. .. | பவானி. |
| 219 இராஜா, திரு. ஏ. எம். .. .. | திண்டிவனம். |
| 220 ராஜாராம், திரு. ஜி. .. .. .. | திருமங்கலம். |
| 21 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | |

**தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.**

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | தொகுதி (2) |
|---|---|
| 1 அண்ணாமலை, மாண்புமிகு திரு. சி.வி.எம். (அமைச்சர்). | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. .. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை .. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அரங்கநாயகம், திரு. செ. .. .. | கோயம்புத்தூர்-மேற்கு |
| 6 அழகமுத்து, திரு. து. ப. .. .. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 7 அழகர்சாமி, திரு. சோ. .. .. .. | கோவில்பட்டி. |
| 8 அழகுத் தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 9 அனந்தநாயகி, திருமதி த. ந. .. .. | மயிலாப்பூர். |
| 10 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 11 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 12 ஆண்டி அம்பலம், திரு. எம். .. .. | மேலூர் வடக்கு. |
| 13 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ |
| 14 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 15 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 16 ஆல்டா எம். பௌலர், திருமதி .. | நியமன உறுப்பினர் |
| 17 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 18 ஆறுமுகம், திரு. எஸ். .. .. | வீரபாண்டி |
| 19 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 20 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திகுளம் |
| 21 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 22 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி |
| 23 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 24 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 25 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 26 இராசாராம், மாண்புமிகு திரு. க. .. (அமைச்சர்). | சேலம் 2. |
| 27 இராசு, திரு. ஜே. எஸ். .. .. .. | பெரம்பலூர். (செ.வ.) |
| 28 இராதாகிருட்டிணன், திரு. எம். எஸ். .. | தண்டராம்பட்டு |
| 29 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 222 லத்தீப், திரு. எம். ஏ. | வாணியம்பாடி. |
| 223 வகாப், திரு. கே. ஏ. | ராணிப்பேட்டை. |
| 224 வடிவேலு, திரு. சி. க. | தொட்டியம். |
| 225 வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ. வ.) |
| 226 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கற்பட்டு. |
| 227 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 228 வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 229 வெள்ளைத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 230 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 231 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 232 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 233 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 234 ஜோதி வெங்கடாசலம், திருமதி. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 235 ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்:—

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.

2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.

3 திரு. கோவிந்த் சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

---

### தமிழ் நாடு ஆளுநர்.

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, ஆயத்துறை.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுச் சுகாதாரம், மருத்துவம், நகர அமைப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பின்தங்கிய வகுப்பினர் நலன், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராம தான இயக்கங்கள்.

5. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

6. மாண்புமிகு திரு. செ. மாதவன் (உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறுநிதி உதவி, ஆலைத் துணிகள், துணி, கைத்தறி, சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

His Excellency Thiru KODARDAS KALIDAS SHAH

Members of the Council of Ministers

1. The Hon. Dr. M. KARUNANIDHI: (Chief Minister) in-charge of Public, Finance, Planning, General Administration matters relating to Indian Civil Service Officers and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition and Excise.

2. The Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN: (Minister for Education and Tourism) in-charge of Education including Technical Education, Official Language, Legislature, Tourism and Tourist Development Corporation.

3. The Hon. Thiru K. ANBAZHAGAN: (Minister for Health) in-charge of Public Health, Medicine and Town Planning.

4. The Hon. Thiru N. V. NATARAJAN: (Minister for Backward Classes) in-charge of Backward Classes, Registration, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

5. The Hon. Thiru P. U. SHANMUGAM: (Minister for Public Works) in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

6. The Hon. Thiru S. MADHAVAN: (Minister for Food and Co-operation) in-charge of Food and Co-operation, Agricultural Refinance, Textiles, Yarn, Handlooms, Law, Courts and Prisons.

7. The Hon. Thiru S. J. SADIQ PASHA: (Minister for Industries) in-charge of Industries, Mines and Minerals, Iron and Steel Control, Companies, Electricity and Wa[illegible]

8. THE HON. THIRU Si. Pa. ADITANAR : (Minister for Agriculture) in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing, Agro-Engineering and Services Co-operative Societies at the Block, District and apex level including the Federation.

9. THE HON. THIRU A. P. DHARMALINGAM : (Minister for Revenue) in-charge of Revenue, Board of Revenue, Districts Revenue Establishment, Deputy Collectors, Youth Service Corps and Prosperity Brigade.

10. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY : (Minister for Local Administration), in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions and Water Board.

11. THE HON. THIRU K. RAJARAM : (Minister for Labour), in-charge of Labour, Housing, Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics, Employment and Training and Slum Clearance Board.

12. THE HON. THIRU C. V. M. ANNAMALAI : (Minister for Social Welfare), in-charge of Social Welfare including Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages and Approved Schools and Vigilance Service.

13. THE HON. THIRU O. P. RAMAN : (Minister for Commercial Taxes in-charge of Commercial Taxes, Forest including Cinchona, Animal Husbandry, Legislation on Money Lending, Rural Indebtedness and Legislation on Chits.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Transport), in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN : (Minister for Religious Endowments), in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk, Operation Flood Project, Tamil Nadu Dairy Development Corporation, Information and Public Relations and Film Technology.

16. THE HON. THIRU N. RAJANGAM : (Minister for Harijan Welfare) in-charge of Harijan Welfare, Indians Oversees and Refugees and Evacuees, Newsprint Control, Passports and Cinematograph Act.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம்.ஏ.

### பேரவைத் துணைத் தலைவர்

திரு. என். கணபதி, பி.எஸ்.ஸி., பி.எல்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. டாக்டர் க. நாகராசன்.
2. திரு. துரைமுருகன்.
3. திரு. கு. காமாட்சி.
4. திரு. கா. காளிமுத்து.
5. திரு. என். டென்னிஸ்.
6. திரு. கே. கந்தசாமி.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### குழு அலுவலர்

திரு. ப. சுப்பராயன், எம். ஏ.

### உதவிச் செயலாளர்கள்

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.
திரு. கே. பாலகுரு, பி.ஏ.

### விவாதப் பதிப்பாளர்

திரு. கே. சுந்தரராசன்.

### எஸ்டேட் அதிகாரி

திரு. வி. சீதாராமன். பி.காம்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*வியாழக்கிழமை, 1975 மார்ச் 6*

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் 201, 202, 203 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

#### திருப்புவனம்—புல்வாய்க்கரை சாலை

* 204 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம்—புல்வாய்க் கரை நெடுஞ்சாலையினை சீர்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அத்திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) ரூபாய் 75,500 செலவில் இச்சாலை செப்பனிடப்பட்டுள்ளது.

#### கொடைக்கானல் வட்டத்தில் மலைச்சாலைகள்

* 205 வினா—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மதுரை மாவட்டம், கொடைக்கானல் தாலுக்காவில், பெரும்பாறையில் இருந்து ஒட்டன்சத்திரத்திற்கு பெரியூர் வழியாகவும், பண்ணைப்புரத்திலிருந்து ஒட்டன்சத்திரத்திற்கு பெரியூர் வழியாகவும் மலைச்சாலைகள் அமைப்பது குறித்து அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

(இ) ஆமெனில், அது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, இப்பொழுது கொடைக்கானலுக்கு அதிகமான பயணிகள் போய்க்கொண்டிருக்கிறார்கள். கேள்வியில் குறிப்பிட்டிருக்கக்கூடிய மலைச்சாலைகள் அமைப்பதால் அப்பகுதி மக்களுக்கு வசதி ஏற்படும் என்று கோரிக்கைகள் விடப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்தப் பாதைகளை அமைப்பது குறித்து அரசு மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் குறிப்பிடுகிற கொடைக்கானல்—பழனி ரோடு வேலை நடந்து கொண்டு இருக்கிறது. அநேகமாக இந்த வருஷத்திற்குள் முடிந்து விடவேண்டுமென்று போட்டிருக்கிறோம்.

கொடைக்கானல் தாலுக்காவில் பெரும்பாறையில் இருந்து ஒட்டன்சத்திரத்திற்கு பெரியூர் வழியாகவும் பண்ணைப்புரத்திலிருந்து ஒட்டன்சத்திரத்திற்கு பெரியூர் வழியாகவும் பாதைகள் அமைப்பது குறித்து கேட்டிருக்கிறார்கள். இது முழுமையாகச் செப்பனிடப்படுமா என்று கேட்டதற்கு "இல்லை" என்று தெரிவித்திருக்கிறேன். இடையிலே சில பாதைகளை எடுத்துச் செய்து கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு பாச்சலூர்—ஒட்டன்சத்திரம் (வழி வடக்காடு) பாதை 34.80 கிலோமீட்டர் தூரம், 44 லட்ச ரூபாய் செலவில் இவ்வேலை நடைபெற்று வருகிறது. அதேபோல், தடியன்குடிசை—கே. சி. பட்டி சாலை 13.8 கிலோமீட்டர் தூரம். இச்சாலை போடும் வேலை மத்திய சாலை நிதித் திட்டத்தில் நடைபெற்று வருகிறது. அதேபோல், ஆடலூர்—கே. சி. பட்டி ரோடு போடும் வேலையும் மத்திய சாலை நிதித் திட்டத்தில் நடைபெற்று வருகிறது. பாச்சலூர்—ஒட்டன்சத்திரம் பாதையும் மத்திய சாலை நிதித் திட்டத்தின்கீழ் 44 லட்ச ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது. மீதி உள்ள இடங்கள் நிதிப் பற்றாக்குறை காரணமாக எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. கே. எஸ். கோதண்டராமையா எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி மதுரை மாவட்ட சாலைகள் பற்றியது . . .



THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, these ghat roads are very important and especially in the northern portions of our State in Dharmapuri district at Harur and Hosur taluks there are a number of ghat sections. There are no roads in many places and where there are roads, they require immediate repairs. May I know from Hon. Public Works Minister whether he will prepare a scheme to see that all these ghat roads are improved and kept well.

THE HON. THIRU P. U. SHANMUGAM : It is very unfortunate that the hon. Member has not brought it to the notice of the Government. I request him to send a detailed note abour it. We will examine it.

## பம்புசெட்டுகள் வாங்கக் கடன்கள்

* 206 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கூட்டுறவு நிலவள வங்கிகள் விவசாயிகளுக்குப் பம்பு செட்டுகள் வாங்குவதற்குக் கடன் வழங்குவதை நிறுத்தி வைத்துள்ளனவா?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) மின் வாரியத்திற்கு ஏற்பட்டிருக்கும் நிதி முடக்கம், மூலப்பொருள்கள் கிடைக்கப் பெறாமை மற்றும் மின் தட்டுப்பாடு ஆகியவற்றின் காரணமாக மின் விசையேற்றங்களுக்கு மின்சாரம் வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது. இதன் காரணமாக விவசாயிகள் மின் விசையேற்றங்களைப் பயன்படுத்த இயலாமையினால் நிலவள வங்கிக் கடனைத் திருப்பிக் கட்ட முடியாமல் போய்விடும். இக்காரணத்தினால் விசையேற்றத்திற்குக் கடன் வழங்குதல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. டீசல் விசையேற்றங்களுக்குக் கடன் இப்பொழுது வழங்கப்படுகிறது.

திரு. அ. ஆறுமுகம் . தலைவர் அவர்களே, கடந்த மூன்றாண்டு காலமாக நிலவள வங்கிகளிலிருந்து கடன் வாங்கிய விவசாயப் பெருமக்கள் கடனுக்கு வட்டி கட்ட முடியாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மின் இணைப்பு கிடைக்கும் வரையில் வட்டி கட்ட வேண்டியதில்லை என்ற வகையில் விதியைத் தளர்த்த அரசு முன்வருமா?

7. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, கம்பெனிகள், மின்சாரம், முகமதியர் அறக் கட்டளைகள்.

8. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பகுதி, வேளாண்மை பொறியியல் சம்பந்தமான பகுதிகள், வட்டாரக் கூட்டுறவுச் சங்கங்கள், இணைப்பு அளவிலான கழகங்கள் உட்பட்ட மாவட்டச் சங்கங்கள்.

9. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சி தலைவர்கள், இளைஞர் அணி சேரணி.

10. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், குடிநீர் வாரியம்.

11. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர், வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு. எடைகள், அளவைகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், வேலை வாய்ப்பும் பயிற்சி அளித்தலும், குடிசை மாற்று வாரியம்.

12. மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மகளிர்-சிறுவர் நலம் உட்பட சமூக நலம், மீனவர், இரவலர்கள் விடுதி, அநாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகளும் கண்காணிப்புப் பணிகளும்.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (வணிக வரித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வணிக வரிகள், சிங்கோனா உட்பட காடுகள், கால் நடை வளர்ப்பு, கடன் கொடுத்தல் குறித்த சட்டம், கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல், சீட்டுகள் குறித்த சட்டம்.



14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள்-அச்சுத்துறை, அரசு அச்சகம்.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அற நிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அறக் கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் வழங்குத் துறை, பால்வள முனைப்புத் திட்டங்கள், தமிழ் நாடு பால்வள நிறுவனங்கள், விளம்பரம், பொதுத் தொடர்பு, படச் சுருள் தொழில் நுட்பவியல்.

16. மாண்புமிகு திரு. என். இராசாங்கம் (அரிசன நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள், திரைப்படச் சட்டம்.

[1975 மார்ச் 6

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இது தனியாகப் பரிசீலிக்கப்படவேண்டும்.

* 207 வினா—திரு. கே. என். குமாரசாமி :

திரு. ஆ. பரந்தாமன் : மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நிலவள வங்கிகளில் புதுக் கிணறு வெட்ட கடன் வழங்கும் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) நிலநீர் இயக்குநர் அனுமதி பெற்று, எருதுகளை உபயோகித்து தண்ணீர் இறைத்து நீர்ப் பாசனம் செய்யக் கூடிய வாய்ப்புள்ள புதிய கிணறுகள் வெட்டக் கடன் வழங்குவது நிறுத்தப்படவில்லை. ஆனால் புதியதாக மின் மோட்டார் அல்லது டீசல் எண்ணெயினால் இயங்கக் கூடிய பம்பு செட்டுகளைப் பொருத்தக் கடன் வழங்கப்படுவது, மின்சாரம் மற்றும் டீசல் எண்ணெய்த் தட்டுப்பாடு காரணமாகத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. பிறகு, மத்திய அரசு, 1973–74-ம் ஆண்டு வழங்கிய டீசல் எண்ணெயின் அளவைவிட அதிகமாகக் கொடுக்க முன்வந்துள்ளபடியால், டீசல் எண்ணெயினால் இயங்கக் கூடிய பம்பு செட்டுகளைப் பொருத்தக் கடன் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, டீசல் என்ஜின் வாங்க தற்போது எவ்வளவு ரூபாய் கடன் அளிக்கப்படுகிறது? எத்தனை தவணைகளில் திருப்பித் தரவேண்டும் என்று அரசு விதிமுறை வகுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவர் அவர்களே, நிலவள வங்கியில் ஏற்கெனவே அளித்துவந்த முறைகள் இல்லாதபோது புதிதாகக் கிணறு வெட்ட நில வள வங்கிகள் மூலமாகக் பணம் வழங்கப் பட்டது. ஆனால், இப்பொழுது உள்வெட்டு வெட்டுவதற்குக் கடன் கேட்டால் பழைய முறை அனுசரிக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். ஏற்கெனவே அந்த அளவு முறையில் இல்லாமல் கடன் கொடுத்த அதே கிணற்றுக்கு உள்வெட்டு வெட்ட அனுமதி வழங்க அரசு ஆலோசிக்குமா?



1975 மார்ச் 6]

மாண்புமிகு திரு. செ .மாதவன்: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி ரொம்ப முக்கியமான கேள்வி. ஏற்கெனவே கிணறு வெட்ட கடன் கொடுத்துவிட்டு அதே கிணற்றை ஆழப்படுத்துவதற்குக் கடன் கேட்கும்பொழுது கொடுக்கக்கூடாது என்று ரிசர்வ் வங்கியினர் சொல்லி வருகிறார்கள் . மாண்புமிகு அங்கத்தினருடைய கேள்வியைத் தான் நானும் ரிசர்வ் வங்கியிடம் கேட்டேன். ஆனால், அவர்கள் ஒத்துக்கொள்வதாக இல்லை.

திரு. தி. பொன்னுமலை : தலைவர் அவர்களே, நில நீர் ஆய்வாளர்கள் மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று சேலம் மாவட்டத்தில் பல இடங்களில் மேலும் பரிசோதனை செய்தார்கள். அந்த ரிப்போர்ட் அரசுக்கு வந்துவிட்டதா? மேலும் அடிக்கிணறு வெட்ட ஏதாவது கடன் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சேலம் மாவட்டத்தில் மறுபரிசீலனை பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை.

திரு. கு. காமாட்சி : தலைவர் அவர்களே, டீசல் இன்சின் வாங்குவதற்கு சப்சிடி வழங்கப்படுகிறதா, அப்படியானால் எவ்வளவு தொகை என்பதை அறியலாமா? அடுத்து, நம்முடைய மாநிலத்தில் 60–70 சத வீத பூமி "ராக்கி ஸாயில்" என்று சொல்லப்படுகிறது. இரண்டு கிணறுகளுக்கும் இடையேயுள்ள இடைவெளியைக் குறைப்பதற்கு ஆய்வு நடந்துகொண்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஆயிரம் ரூபாய் நாம் உதவித் தொகையாக வழங்குகிறோம். இரண்டு கிணறுகளுக்கு இடையேயுள்ள தூரத்தைப் பற்றி நான் ஏற்கெனவே விளக்கியிருக்கிறேன்.

திரு. பூ. எட்டியப்பன் : தலைவர் அவர்களே, ஆயிரம் ரூபாய் சப்சிடி கொடுக்கப்படுகிறது. ஆனால், எந்தக் கம்பெனியில் வாங்க வேண்டுமென்று சொல்கிறோமோ அங்கேதான் வாங்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தி சப்சிடி கொடுப்பதால் ஒரு பலனும் இல்லை. சப்சிடி கொடுத்துவிட்டு, வேண்டுமானால் அரசாங்கத்தினால் அங்கீகாரம் செய்யப்பட்ட கம்பெனிகளிலிருந்துதான் வாங்க வேண்டுமென்று நிபந்தனை விதிப்பது பற்றி அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, நம்முடைய நிர்வாகத்திலே இயங்குகிற அமைப்பின் மூலமாக வாங்கவேண்டுமென்று நாம் சொல்கிறோம். அவர்கள் நிர்ணயிக்கும் விலையைவிட

வெளியேயுள்ள விலைக் குறைவாக இருக்கும் என்று அங்கத்தினர் சொல்வதுதோல் தோன்றுகிறது. அப்படி இருக்குமானால், அவர்கள் எழுதியனுப்பினால் பரிசீலிக்கலாம்.

திரு. ப. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஒரு கிணற்றுக்கும் இன்னொரு கிணற்றுக்கும் இடையே உள்ள தூரம் 600 அடிக்குக் குறைவாக இருந்தால், அவற்றுக்கு அடிவெட்டு வெட்ட கடன் இல்லை என்று சொல்கிறார்கள். இந்தக் கண்டிஷனைத் தளர்த்தும் அதிகாரம் யாரிடத்தில் இருக்கிறது என்பதை அறியலாமா? தற்போது வறட்சி நிலைமை நீடித்திருப்பதால் அந்த கண்டிஷனைத் தளர்த்த அரசாங்கம் தாக்கீது பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, "க்ரௌண்டு வாட்டர் டிசிப்ளின்" பின்பற்றவேண்டும் என்பது பொதுவான விதியாகும். அந்த விதியின் அடிப்படையில்தான் இரண்டு கிணறுகளுக்கிடையேயுள்ள தூரம் நிர்ணயிக்கப்படுகிறது. அதைப் பின்பற்ற வேண்டுமென்று ரிசர்வ் வங்கி வலியுறுத்துகிறது.

திரு. டி. இராசரத்தினம்: தலைவரவர்களே, ஆயில் இன்ஜினுக்காகக் கொடுக்கப்படுகிற தொகை மிஷின் வாங்கினவுடனேயே அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் அப்படி அளிப்பதாக உறுதி அளித்திருக்கிறார்கள்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, இரண்டு கிணறுகளுக்கு இடையே குறிப்பிட்ட தூரம் இருக்கவேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்ட தூரத்திற்குள்ளேயே க்ரௌண்டு வாட்டர் இருக்குமானால், அங்கே கிணறு தோண்டுவதற்கு அனுமதி அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, தூரம் இருக்கவேண்டும் என்பது ஒன்று. இன்னொன்று,—டெபாசிட் ஆஃப் வாட்டர். இரண்டு கிணறுகளுக்கிடையே குறிப்பிட்ட தூரம் இல்லாவிட்டாலும், தண்ணீர் இருப்பதாகத் தெரிந்தால் அந்த இடத்தில் கிணறு வெட்டலாமா என்பதுதான் அவருடைய கேள்வி. இதையும் நாம் ரிசர்வ் வங்கியிடம் வலியுறுத்திப் பேசிப் பார்த்தோம். தூரத்தை விட்டுவிட்டு, டெபாசிட் ஆஃப் வாட்டர் என்ற பார்முலாவை எடுத்துக்கொண்டு அனுமதி தாருங்கள் என்று கேட்டோம். அதற்கும் அவர்கள் ஒப்பவில்லை.



திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, ஒரு கிணற்றுக்கும் இன்னொரு கிணற்றுக்கும் இடையே இடைவெளி எவ்வளவு இருக்க வேண்டும் என்ற பிரச்சினை குறித்து வேளாண்மைத் துறை அமைச்சர் சொல்லும்போது, "பஞ்சநாதன் இஸ் தி ஸீலிங்" என்று சொன்னார்கள். உண்மையிலே இருக்கும் கோளாறு க்ரௌண்டு வாட்டர் ஸெல்லில் தான். வடார்க்காடு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், அங்கே க்ரௌண்டு வாட்டர் ஸோர்ஸ் நல்ல முறையில் இருக்கிறது. ஆனால், அவர்கள் இராமனுதபுரம், சேலம் போன்ற மாவட்டங்களுக்கு விதித்திருப்பதை இங்கேயும் விதித்திருக்கிறார்கள். ஐம்பது அடி, நூறு அடி இடைவெளி தேவையில்லை. பத்து அடி இடைவெளியில் கிணறு எடுத்தால்கூட தண்ணீர் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட மாவட்டங்களுக்காவது இதிலிருந்து விலக்கு அளித்து க்ரௌண்டு வாட்டர் செல் திறமையான முறையில் செயல்பட வேண்டிய ஏற்பாடுகளை அமைச்சர் அவர்கள் செய்வார்களா? அல்லது வடார்க்காடு மாவட்டத்திற்குத் தனிச் சலுகை அளிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எல்லா மாவட்டத்திற்கும் ஒரே விதியிருக்கிறது, அடி தூரம் இருக்கிறது என்பது தவறு. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு மாதிரியிருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதெல்லாம், நானும் உண்மையென்று ஒப்புக் கொள்வதெல்லாம், இந்த அடித்தூரம் என்று பார்க்காமலேயே, இன்றைக்கு வெட்டப்படுகின்ற கிணறுகளிலே தண்ணீர் இருக்கின்றது. இதைக் காண்கின்றபொழுது உங்களுடைய விதி தவறானது என்று பொதுமக்களிடையே ஒரு கருத்து எழுப்பப்படுகிறது. இதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. முழுமையான பணியாக, ஒவ்வொரு இடத்திலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றிய வாரியாக, தண்ணீர் எங்கே கிடைக்கிறது என்று இறுதி முடிவு எடுக்கும் வரை இந்தக் குழப்பம் தொடரும் என்றுதான் நான் கருதுகிறேன்.

திரு. எஸ். முருகையன்: தலைவரவர்களே, இந்த உலக வங்கியினுடைய ஒப்பந்தப்படி கடன் வாங்கி கிணறு வெட்டி, அந்தக் கிணற்றிலே தண்ணீர் வரவில்லையென்றால், அடி வெட்டு வெட்டத் தடையிருக்கிறதா? அப்படித் தடை இருந்தால், அந்தத் தடையை நீக்கி, உடனடியாக, தண்ணீரில்லாத கிணறுகளுக்கு அடி வெட்டு வெட்ட, கடன் கொடுக்க அரசு முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் ஏற்கெனவே சொன்னேன். அப்படிப்பட்ட வாதம் சரியான வாதம் என்றுதான் கருதுகிறேன். காரணம், நாமே கடன் கொடுத்து வெட்டப்பட்ட கிணறுக்கு, விதியைப் பயன்படுத்தி கடன் கொடுக்கக் கூடாது என்று சொல்வது தவறு என்றுதான் தோன்றுகிறது. இருந்தாலும் மத்திய அரசு தலையிடும் என்று கருதுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்தப் பிரச்சினை குழப்பமான பிரச்சினையாக இருக்கிறது. நாம், போகக்கூடிய இடங்களில் இதைத்தான் சொல்கிறார்கள். கலெக்டரைக் கேட்டால், நாங்கள் மேலே எழுதியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். கிட்டத்தட்ட, ஏற்கெனவே இருக்கக்கூடியது, 500 அடி, 600 அடி என்று நிரந்தரமாகச் சொல்கிறார்கள். உண்மையாகவே, ஆழப்படுத்த வேண்டும், கிணறு அடி வெட்டு வெட்ட வேண்டுமென்று நினைப்பவர்கள் பாதிக்கப்படுகிறார்களே. ஆகவே, இந்த விதியைத் தளர்த்தி ஏற்கெனவே ஆர்டரிலே வந்தமாதிரி, எங்கெல்லாம் ஆழப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறார்களோ, எங்கெங்கெல்லாம் புதுக் கிணறு தோண்ட வேண்டுமென்று விரும்புகிறார்களோ, அங்கெல்லாம் அவர்களே அனுமதி கொடுக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

Will they leave it to the discretion of the local authority ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கிரவுண்ட் வாட்டர் டிசிப்ளினை ஃபாலோ பண்ண வேண்டுமென்றால், அவர்களுடைய அனுமதியில்லாமல் அங்கங்குள்ள லோக்கல் அத்தாரிட்டீஸ் தாமே செய்ய முடியாது. ஆனால், எப்படியாவது கிரவுண்ட் வாட்டர் அத்தாரிட்டீசிடம் சொல்லி, இன்னும் கொஞ்சம் அதிகமாக, ஆழமாகப் பரிசீலித்து, எந்த எந்த மாவட்டத்திலே தண்ணீர் இருப்பதாகக் கருதுகிறார்களோ அங்கேயெல்லாம் அடிகளைக் குறைக்கலாம். பரிசீலனை செய்யலாம். ஏற்கெனவே பரிசீலனை செய்து பல மாவட்டங்களிலே அடிகளைக் குறைத்திருக்கிறார்கள்.

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள், நில நீர் ஆய்வுத் தலைமைப் பொறியாளர் அவர்கள் தமிழ் நாட்டிலே நிலத்தண்ணீரேயில்லை, ஆகவே கிணறு எடுப்பதற்கு அதிகாரம் வழங்கவில்லை என்ற தவறான எண்ணத்தைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இன்றைக்கு அவர்கள் தெரிவிக்கின்ற கருத்து 150 அடி ஆழம் வரைதான் அக்கருத்து பொருந்தியிருப்பதாக நாங்கள் அறிகிறோம். 250 அடிக்கு மேல் நீர்





வளம் சரியாக இருக்கிறது. (மணியடிக்கப்பட்டது) சில கேள்விகளுக்கு வார்த்தைகள் நீளும், மன்னிக்கவேண்டும். அதற்கடுத்து, கோயம்புத்தூர், சேலம் போன்ற மாவட்டங்கள், மேற்கு வெளிப் பிரதேசங்கள்—உயர்ந்த பூமியாகவிருக்கிறது. கிழக்குப் பகுதியாக இருக்கிற செங்கல்பட்டு, தென்னாற்காடு, தஞ்சாவூர் போன்ற பகுதிகளில் தண்ணீர் தோண்டுவது சுலபமாக இருக்கிறது. அங்கெல்லாம் கிணறு எடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா? அடுத்து, ஏற்கெனவே கொடுத்த கடன்களுக்கு, நிலவள வங்கி மூலம், இன்னும் ரூ. 2,000, ரூ. 3,000 இதற்காகக் கூடக் கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ் நாட்டிலே தண்ணீரே இல்லையென்று இந்த ஆய்வாளர்கள் சொல்லவில்லை. ஆனால், எங்கெங்கே தண்ணீர் இருக்கிறதோ, அங்கு அந்த விதிகளைப் பின்பற்ற வேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். அதனால்தான் இந்தச் சங்கடம் ஏற்படுகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, நிலவள வங்கியின் மூலமாக, கிணறுகள் வெட்டவும், போர் வெல் எடுக்கவும் கடன் கொடுக்கப்படுகிறது. இந்த ஐ.நா. கடன் கொடுக்க முடியாது என்ற நிலையில், திருத்துறைப்பூண்டி தாலுகா முழுவதிலும், அதே போல் மன்னார்குடி தாலுகாவிலே 19 கிராமங்களிலும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக, நம்முடைய அரசாங்கத்திலிருந்தே அவர்களுக்குக் கடன் கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அரசாங்கம், நேரடியாகக் கடன் கொடுத்தபொழுது, 1966–67-ம் ஆண்டு 2¼ கோடி, 3 கோடி ரூபாய்தான் கொடுக்க முடிந்தது. இப்பொழுது ஏ.ஆர்.சி., யூ.என்.டி.பி. ஸ்கீம் வந்தபிறகு, மிக அதிகமாக, 9 மடங்கு, 10 மடங்கு கொடுக்கின்ற வாய்ப்பை நாம் பெற்றிருக்கிறோம். அவர்களுடைய விதிகளைப் பின்பற்றிக் கொடுப்பதுதான் மேலானது. ஆனால், அவர்கள் அடி தூரம் கணக்கிடுகிறார்கள். கடற்கரை ஓரத்திலே வெட்டக் கூடாது என்ற விதியும் இருக்கிறது. அதனாலும் அவர்கள் பாதிக்கப்படலாம்.

திரு. சீ. க. வடிவேலு: இப்பொழுது தமிழகத்திலே எங்கே பார்த்தாலும் வறட்சி நிலைமையிருந்து கொண்டிருக்கிறது. ஆனால், நிலவள வங்கிமூலம் கடனைப் பெற்றுக்கொள்ள சில விதிமுறைகளைப்

பின்பற்ற வேண்டி இருக்கிறது. அங்குள்ள விவசாயிகளுக்கு, அங்குள்ள ஊராட்சி ஒன்றியம் மூலம் அரசாங்கம் ஏதாவது கடன்கள் கொடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏற்கெனவே, இப்பொழுது விளக்கம் சொன்னேன். நாம் நிலவள வங்கியின் மூலமாகக் கடன் கொடுக்க முயற்சி எடுத்ததற்குப் பிறகு 10 மடங்கு அதிகமாகக் கொடுத்திருக்கிறோம். முன்னால், விவசாயிகள் குறைவாகத்தான் பெற்றார்கள். அதைப் பார்த்துத்தான் இன்னும் அதிகமாகக் கடனை வாங்கவேண்டுமென்ற ஆர்வம் விவசாயிகளிடம் ஏற்பட்டிருப்பது என்பது உண்மை. அதைப் பார்த்தவுடன் தண்ணீரே இல்லாமல் கிணறு வெட்டிவிட்டால், பணம் திருப்பிக் கட்டச் சிரமம் ஏற்படும். அதனாலே, விதியைப் பின்பற்ற வேண்டியிருக்கிறது.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, வறட்சியின் அவசியத்தை முன்னிட்டு, ஆழமாக வெட்டுவதற்கு, ஏற்கெனவே வெட்டிவிட்டால், மறுபடியும் வெட்டுவதற்குப் பணம் கொடுப்பதில்லை—அதற்குச் சில விதிகளிருக்கின்றன என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். இப்படி அந்தப் பலன் கிடைக்காத காரணத்தாலே, மீண்டும் வெட்டாமல், முதலிலே கொடுத்த பணமும் கிடைக்காது—மாநில அரசாங்கத்துக்கும் சரி, மத்திய அரசாங்கத்துக்கும் சரி—விவசாயிகளுக்குப் பலனில்லையென்றால், அரசுக்கு மீண்டும் பணம் வரப் போவதில்லை. ஆகவே, விவசாயிகளுக்குப் பலன் கிடைக்கும் வகையிலே, மறுபடியும் தண்ணீர் கிடைக்கின்ற வகையிலே, மத்திய அரசுக்கு ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் கருத்தை, நாம் ஏற்கெனவே வலியுறுத்தியிருக்கிறோம். நானும் விளக்கிச் சொன்னேன். மத்திய அரசு நிதியமைச்சரிடத்திலே பேசப்பட்டிருக்கிறது. குறைந்தபட்சம், மாண்புமிகு அங்கத்தினர்கள் சொல்லியது போல் ஒரு விதிவிலக்காவது கொடுப்பார்களானால், வெட்டப்பட்ட கிணறுகளுக்காவது பலன் கிடைக்கும் என்பது உண்மை.

திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : தலைவரவர்களே, தற்பொழுது குடிநீர் வாரியத்தின்மூலம் எங்கள் பகுதிகளிலே போரிங் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். கிணற்றுக்கு லோன் கொடுப்பதற்குப் பதிலாக, போரிங்போட்டு, அதனைக் கடனைப் போல வசூலிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

(பதிலில்லை)



திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, இந்த விதிகளைப் பின்பற்றினால் நிலவள வங்கியிலே கடன் அளிப்பதில்லை. காரணம், அது வேண்டுமானால் சாலை போடுவதற்கும், மேல்நிலைத் தொட்டி கட்டுவதற்கும் தான் கொடுக்கப்படுமே தவிர, புதுக் கிணறுகள் வெட்டுவதற்குப் பணம் இல்லையென்று சூளூர், பல்லடம் போன்ற பகுதிகளிலுள்ள நிலவள வங்கிகளிலே சொல்கிறார்கள். அது எந்த அடிப்படையிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விதிகளைப் பின்பற்றி கிணறு வெட்ட முடியுமென்றால், அதற்குக் கொடுக்காமலிருப்பது ஆச்சரியம் தான். அப்படி இருக்கமாட்டார்கள். நான் முன்னரே சொன்னதைப் போல், மின்சாரம் கிடைக்காத பகுதியிலே கிணறு வெட்ட அனுமதி கொடுத்தால், பின்னாலே பணம் திருப்பிப் பெற முடியாது. அது காரணமாக இருக்கலாம். அப்படி இருந்தால், அரசு அதைப் பரிசீலிக்கும்.

*Essence from Jasmine*

* 298 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Agricultural University, Coimbatore has set up a pilot plant for the extraction of essence from Jasmine; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) ரூ. 10,000 செலவில் முன்னோடி இயந்திரம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

திரு. தி. பொன்னுமலை : சேலம் மாவட்டத்திலே மல்லிகைப் பூ ஆயிரம் ஏக்கரிலே பயிர் செய்யப்படுகிறது. சில நேரங்களிலே ரூ. 2 கூடப் பயிரிடும் விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. அதனால், விவசாயிகள் ரொம்பவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, தமிழகத்திலே மல்லிகைப் பூத் தைலத் தொழிற்சாலை ஏற்படுத்தி, நிரந்தர மார்க்கெட் உண்டாக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, இப்போது மல்லிகைப் பூவிலிருந்து தைலம் "எஸ்ஸென்ஸ்" தயாரிப்பது என்பது இன்னும் பரிசோதனையில் தான் இருக்கிறது.

ஒரு முன்னோடி இயந்திரமென்று சொன்னேன். இது நாள் ஒன்றுக்கு பத்து கிலோ பூக்களிலிருந்து தான் தைலம் எடுக்கக்கூடியது. இன்னும் சோதனையில் இருக்கிறது.

*Pesticides*

* 209 *Q*.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state the steps taken to assess the annual requirement of pesticides for the State and to procure them without delay?

<u>மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்</u>: விவர அறிக்கை * ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

<u>* 210. வினா—திரு. சோ. அழகர்சாமி</u>: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1973–74-ல் விவசாய விநியோக டெப்போக்களில் விற்கப் பட்ட பூச்சி மருந்து எந்தெந்த நிறுவனங்களிலிருந்து வாங்கப் பட்டது?

<u>மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்</u>: விவரப்பட்டியல் @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

<u>திரு. எஸ். வடிவேல்</u>: பூச்சிக்கொல்லி மருந்துகளை வயலில் அடித்தாலும் கூட பூச்சிகள் சாவதில்லை. ஆகவே, உறுதியான நல்ல பூச்சி மருந்துகளை அரசாங்கமே டெப்போக்கள் வைத்துக் கொடுக்க முயற்சி செய்யுமா?

<u>மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்</u>: மாண்புமிகு உறுப்பினர் சொன்ன ஆலோசனை பரிசிலனையில் இருக்கிறது.

<u>திரு. கு. இராசமாணிக்கம்</u>: தஞ்சை மாவட்டத்திற்குத் தேவை யான அளவுக்கு பூச்சிகொல்லி மருந்துகள் கிடைக்கவில்லை. அது மட்டுமல்ல, விலைகளும் அதிகமாக இருக்கின்றன. தஞ்சை மாவட்டத் திலேயே பூச்சிகொல்லி மருந்து தொழிற்சாலை நிறுவ அரசுக்கு உத்தேசம் உண்டா?

* 125–127-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@ 127–131-ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



<u>மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்</u>: தஞ்சை மாவட்டத்தில் எந்த இடத்தில் தேவையான அளவிற்குக் கிடைக்கவில்லை என்று சொன்னால் கொடுக்க ஏற்பாடு செய்ய முடியும். ஏன் என்றால் அரசின் கையிருப்பில் தேவையான அளவிற்கு பூச்சிக்கொல்லி மருந்துகள் இருக்கின்றன.

<u>திரு. தொ. ப. சீனிவாசன்</u>: பூச்சி மருந்துகளில் முக்கியமான வற்றை விவசாயிகளுக்குக் கொடுக்காமல் தேவையற்ற வேறு பொருள்களை வாங்கவேண்டுமென்று டெப்போக்களில் இருக்கிற அதிகாரிகள் சொல்கிறார்கள். அந்தச் சங்கடத்தை தவிர்க்க அரசு முன்வருமா?

<u>மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்</u>: தேவையற்ற பூச்சி மருந்துகளை விவசாயிகள்மேல் திணிப்பது ஒரு பெரும் குற்றமாகும். அந்தக் குற்றத்தை யாராவது செய்திருந்தால் மாண்புமிகு உறுப்பினர் துறைக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. கே. என். குமாரசாமி</u>: தலைவர் அவர்களே, ஒரு ஆண்டுக் குத் தேவைப்படுகிற பூச்சி மருந்து எவ்வளவு என்று அந்த ஆண்டுக்கு முன்னாலேயே கணக்கெடுத்து வாங்கி வைத்துக் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வருஷா வருஷம் இப்படித்தான் சொல்லப்படுகிறது. ஆனால் வருஷா வருஷம் இந்தப் பிரச்சினை எழுகிறது. மருந்துகள் கிடைக்காத காரணத்தினால் பல்வேறு தனியார்களிடம் சென்று அதிக விலைக்கு வாங்குகிற சூழ்நிலை இருக் கிறது. ஆகவே ஒரு ஆண்டுக்குத் தேவையான அளவை கணக்கெடுத்து முன்கூட்டியே பெற்றுவருகிறோம் என்று சொல்வது எந்த அளவிற்குப் பொருந்தும் என்று தெரியவில்லை. தேவையான அளவு என்று சொன்னாலுங்கூட அந்த அளவிற்கு வாங்குவதில்லை. தனியார்கள் மிகவும் அதிகமாக வாங்குகிறார்கள். தேவையான அளவிற்கு இந்த ஆண்டாவது வாங்குவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

<u>மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்</u>: தேவையான மருந்து என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லியபடி முன்கூட்டியே வாங்கி அரசின் கையிருப்பில் இருக்கிறது.

<u>திரு. ஏ. எம். இராஜா</u>: பூச்சி மருந்துகளில் ஸ்டம்போரர் என்ற குருத்துப் பூச்சியைப் போக்குவதற்கு கொர்ரடான் என்ற மருந்து இருக்கிறது. அது ஒரு ஏக்கருக்கு 7 கிலோ தேவைப்படுகிறது. அதையும் இரண்டு முறைகள் போடவேண்டுமென்று சொல்கிறார்கள்.

ஒரு கிலோ 15 ரூபாய் என்ற விலை விற்பதால் ஒரு முறைக்கே ரூபாய் 105 ஆகிறது. இதுபோன்ற உயர்ந்த விலைகள் உள்ள பூச்சி மருந்துகளை சப்சிடி ரேட்டிலே அரசாங்கம் விவசாயிகளுக்குக் கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, அரசாங்கத்திலே அப்படிக் கொடுப்பதற்கான எந்தவிதத் திட்டமும் இல்லை. இன்ன பூச்சிக்கு இன்ன மருந்து வேண்டுமென்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. பி.எச்.சி. என்ற மருந்துதான் எந்த இடத்தில் வேண்டுமானாலும் பயன்படுத்தப்படக்கூடிய விலைகுறைந்த பூச்சி மருந்து ஆகும்.

திரு. கே. எ. வகாப்: தேவையான பூச்சி மருந்து இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது இருக்கும் வறட்சி காரணமாகக்கூட அப்படியிருக்கலாம். தேவையானபொழுது கிடைப்பதில்லை. நான் இதைப்பற்றி முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். அங்கே அதிகாரிகளைக் கேட்டால் அரசாங்கம் அவ்வளவுதான் இண்டென்ட் போட்டு அனுப்புகிறார்கள் என்று சொல்கிறார்கள். பாரசைட் அதிகமாக உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நான் முன்னமேயே சொன்னேன். தேவையான மருந்துகள் அல்லாதவற்றை கட்டாயப் படுத்தி விவசாயிகளுக்குத் தருவதாகத் தெரிந்தால் நடவடிக்கை எடுக்கலாம். தேவையற்ற மருந்துகளை அவர்கள் கொடுக்கவேண்டிய அவசியமில்லை.

### *Cultivation of grapes*

* 211 *Q*.—THIRU K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the total acreage under grape cultivation in the State;

(*b*) areas where they are grown in large numbers;

(*c*) the details of aid given to ryots cultivating grapes; and

(*d*) the varieties of grapes grown in the State?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: விவர அறிக்கை * ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

* 131–132-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, grape cultivation is going on on a big scale in Krishnagiri taluk of Dharmapuri district and its cultivation also was increasing in Hosur and Denkanikottah taluks and there is great scope for such cultivation there. Making use of that favourable conditions by giving more incentives, i.e., subsidy and fertilisers, will the Government take steps to make that area as a grape-centre and also arrange for a grape juice extract centre there? May I know from the Hon. Minister whether such a scheme is under preparation?

THE HON. THIRU SI. PA. ADITANAR: The question is about total acreage where grape is grown and the different varieties and its acreage; all these details are set out in the statement. I have no further particulars with me.

திரு. க. உரோ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, இந்த கிரேப் பழங்கள் பொதுவாக மலையடிவாரங்களிலேதான் பயிர் செய்யப்படுகிறது. நம்முடைய விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்—அவர்களுக்குத் தெரியுமென்று நினைக்கிறேன். நெல்லை மாவட்டத்திலே குற்றாலம் மலைச்சாரலிலேயும் மணிமுத்தாறுக்குப் பக்கத்திலே உள்ள மலைச்சாரலிலேயும் உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் முயற்சிகளை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே கொடுத்திருக்கிற பட்டியலில் நெல்லை மாவட்டம் சேர்ந்திருக்கிறது. ஒருவேளை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியாமல் இருக்கலாம். அவர் இருந்து வருகிற இடத்தில் பயிர் செய்யாமல் இருப்பதால் மலைச்சாரல்களிலே பயிரிடுவது தெரியாமல் இருக்கலாம். நெல்லை மாவட்டத்தில் பயிரிடுவது குறித்து விவர அறிக்கையில் இருக்கிறது.

திரு. தி. பொன்னுமலை: திராட்சைப் பழம், மதுரை, திண்டுக்கல், சேலம் போன்ற இடங்களிலே அதிகமாகப் பயிராகிறது. பன்னீர் திராட்சை தான் அதிகமாகப் பயிரிடப்படுகிறது. அது நன்றாக வருகிறது. ஆனால் அதைப் பயிர் செய்கிற விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கவில்லை. ஆகவே அதைப் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு அனுப்பி அவர்களுக்கு நிரந்தர மார்க்கெட்டை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: எதை வெளிநாடுகளுக்கு அனுப்பவேண்டுமென்று கேட்கிறீர்கள் என்று தெரியவில்லை.

[1975 மார்ச் 6

திரு. தி. பொன்னுமலை: திராட்சைப் பழத்தை.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: திராட்சைப் பழத்தைப் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு அனுப்பமுடியாது. அதிலிருந்து ஒயின் முதலிய பொருள்கள் தயார் செய்து அனுப்பமுடியும். அது என்னுடைய துறையில் இல்லை.

திரு. நா. வெ. குருசாமி: அனபி-இ-சாயி என்பது எந்த மாவட்டத்திலே பயிரிடப்படுகிறது என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இதிலே 5-வது எண்ணைக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது கூடியவரையில் எல்லா மாவட்டங்களிலும் முன்னோடி விவசாயிகளால் பயிரிடப்படுகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: திருச்சி மாவட்டத்திலே திராட்சை பயிரிடப்படுகிறது. ஆனால் இந்த விவர அறிக்கையில் அது இல்லையே என்ன காரணம்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: என்ன காரணம் என்று கேட்டுத்தான் சொல்லவேண்டும். கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் பெரிய அளவில் பயிராவது மாத்திரம் சொல்லப்பட்டிருக்கலாம். யாராவது அரை ஏக்கர், ஒரு ஏக்கர், 2 ஏக்கர் என்று பயிர் செய்தால் அது இங்கே சேர்க்கப்படாமல் இருக்கலாம்.

THIRU B. VENKATASWAMY: In Mysore State, there is a separate Horticulture Directorate. May I know from the Hon. Minister whether this Government is proposing to have a separate Directorate for Horticulture so that such good varieties as Thomson Seedless Grapes and Anabi-e-sahi may be grown? One acre of such grapes yields more than Rs. 30,000 to Rs. 40,000. May I know whether any such scheme is there?

THE HON. THIRU SI. PA. ADITANAR: The question, as I understand is whether there will be a separate Directorate for Horticulture, viz., whether a separate Director will be appointed for Horticulture. There is no such proposal now. But the Administrative Reforms Commission has suggested that horticulture may be dealt with separately.



1975 மார்ச் 6]

(முற்பகல் 9-30)

திரு. எஸ். நல்லசாமி: தலைவரவர்களே, திராட்சைப் பழத்தில் இந்த அனபி-இ-சாயி என்ற பழம் ஆந்திராவிலிருந்து அதிகமாக வருவதாகக் கேள்விப் படுகிறோம். அது தமிழகத்தின் மார்க்கெட்டைக் குறைக்கிறது. எனவே, அதை நிறுத்துவதற்கு அரசு வழி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இந்த அனபி-இ-சாயி அதிகமாகப் பயிரிடப்பட அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்து வருவதாக அச்சிட்ட அறிக்கையில் இருக்கிறது.

மாவட்டங்களில் குடிசைப்பகுதி மாற்றுப் பணிகள்.

* 212 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மாவட்டப் பகுதிகளில் குடிசைப்பகுதி மாற்றுப் பணிகளை வீட்டு வசதி வாரியம் ஏற்று நடத்தி வருகிறதா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) 1977 ஆம் ஆண்டு இறுதிக்குள் சென்னை நகரிலுள்ள குடிசைப் பகுதிகள் அனைத்தையும் மாற்றியமைக்க வேண்டும் என்ற அரசின் கொள்கைக்கேற்ப, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் தற்போது சென்னை நகரிலுள்ள குடிசைப் பகுதிகளை மட்டும் மாற்றியமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. வெளியூர்ப்பகுதிகளில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பணியை விரிவுபடுத்த கூடுதலான பணியாளர்களும், அதிகச் செலவும் ஏற்படுமாதலால் சென்னை நகரிலுள்ள எல்லா குடிசைப் பகுதிகளையும் மாற்றியமைத்த பின்னர், குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பணியை வெளியூர்ப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தலாம் என முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதுவரை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமே வெளியூர்ப் பகுதிகளில் குடிசைப்பகுதி மாற்றியமைக்கும் பணியை தொடர்ந்து நடத்திவரும்.

[1975 மார்ச் 6

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, கிராமப்பகுதிகளில் கிராம வீடுகள் திட்டத்தின் அடிப்படையில் 4,000 ரூபாய் கடன் கொடுக்கப்பட்டு வருகிறது. அந்த 4,000 ரூபாய் தற்சமயம் போதுமானது அல்ல. அதை உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, அது ஏற்கெனவே சென்ற ஆண்டு வரையில் 3,000 ரூபாய் வரையில்தான் கொடுக்கப்பட்டு வந்தது. அதற்குப் பிறகு 4,000 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு அந்த வீடுகளைக் கட்டுபவர்களே ஆயிரம் ரூபாயைத் தங்கள் உழைப்பின் மூலமாகப் போட்டு கட்டிக் கொள்ள வேண்டுமென்பதுதான் அந்தத் திட்டத்தின் கொள்கை. சென்ற ஆண்டு 77 லட்சம் ரூபாய் கொடுத்ததற்கு மாறாக இந்த ஆண்டு கிராமங்களில் அதிக வீடுகள் கட்டப்பட வேண்டுமென்பதற்காக $1\frac{1}{2}$ கோடி ரூபாயை அரசு ஒதுக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : சார், குடிசை மாற்று வாரியம் சென்னை நகரத்திலே உள்ள குடிசைகளை மட்டும் மாற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றும், மாவட்டங்களில் அந்தக் குடிசை மாற்று வாரியம் அந்த வேலைகளை எடுத்துக்கொண்டால் அதிக சிப்பந்திகளும், அதிகச் செலவும் ஆகும் என்று சொன்னார்கள். ஆனால் அதே வாதம் இந்த நகரத்திற்கும் பொருந்தாதா? ஒரு வீட்டு வசதி வாரியம் இருக்கும்பொழுது சென்னையிலே தனியாக குடிசை மாற்று வாரியம் எதற்காக இருக்கிறது?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, குடிசை மாற்றுத் திட்டம் என்பது, தனியாக சென்னை நகரத்திலே மட்டும் 1,202 குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. அவைகளைத் தனிப்பட்ட முறையில் எடுத்தால்தான் முடியும். சென்னையில் மற்ற வகுப்பினருக்கு, பொருளாதார ஏற்றத்தாழ்வு உள்ள சமுதாயத்தில் பல்வேறுபட்ட வீடுகளைக் கட்டித் தர வேண்டியவர்களாக இருக்கிறோம். எனவே சென்னையிலே உள்ளது மிகப்பெரிய பிரச்சினை. மற்ற நகரங்களில் அப்படிப்பட்ட பிரச்சினை இல்லை. ஆகவே, சென்னை நகரத்தில் தனியாக அதற்கென்று வாரியம் வைத்தால்தான் வேலைகள் வேகமாக நடைபெறும் என்பதற்காக கலைஞர் அவர்கள் அந்த வாரியத்தை உருவாக்கினார்கள்.



1975 மார்ச் 6]

திரு. கே. ரங்கநாதன் : தலைவரவர்களே, கோவையில் அம்மன் குளம், செங்காடு பகுதிகளில் இந்தக் குடிசை மாற்றும் பணி ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, கோவை நகரத்தில் பல பகுதிகளில் வேலை நடந்திருக்கிறது. அநேகமாக தமிழ் நாட்டிலுள்ள மாவட்டத் தலைநகரங்களை எடுத்துக்கொண்டால் கோவை மாவட்டத்தில்தான் குடிசை மாற்றுப் பணிகள் அதிகம் நடைபெற்றிருக்கிறது. பல்வேறு இடங்களில் அந்த வேலைகள் நடந்திருக்கின்றன என்பதையும், அதற்கென்று தனியாகக் கேள்வி போட்டால் அதற்கான பதிலைத் தருவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, சென்னை நகரத்திலே உள்ள குடிசைகளை மாற்றி நாம் கட்டிடங்களைக் கட்டிக்கொண்டிருக்கிறோம். ஆனால் புறநகர்ப் பகுதிகளாக இருக்கும் பல்லாவரம், அம்பத்தூர், திருவொற்றியூர் போன்ற செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த இடங்களில் இருப்பவர்கள் கொத்தவால்சாவடி, துறைமுகம் இன்னும் மற்ற பகுதிகளுக்கும் வருகிறார்கள். எனவே மற்ற மாவட்டங்களில் எடுக்கும்போது செங்கற்பட்டு மாவட்டத்திற்கு முன்னுரிமை வழங்கி மேற்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, தற்பொழுது மாவட்டத் தலைநகரங்களில் குடிசைகளை மாற்றும் பணிதான் நடக்கிறது. அதுகூட இந்தியாவிலே வேறு எந்த மாநிலமும் அப்படிப்பட்ட பணியில் ஈடுபடவில்லை. மாநிலத் தலைநகரங்களில்கூட அப்படிப்பட்ட பணிகள் மற்ற மாநிலங்களில் நடக்கவில்லை. நாம்தான் அப்படிப்பட்ட வேலைகள் நடக்க அதிகமான பணத்தை ஒதுக்குகிறோம். ஆனால் செங்கற்பட்டு மாவட்டத்திற்கு முன்னுரிமை வழங்குவது தற்பொழுதுள்ள சூழ்நிலையில் கடினம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, கிராமப் பகுதிகளில் குடிசைமாற்று வாரியம் செயல்படும் குறிப்பு தற்பொழுது இல்லை என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். அடுத்து, பேரூராட்சி மன்றப் பகுதிகளில் வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் வீடுகளைக் கட்ட, போளூரில் தனியார் துறையினர் நிலங்களைக் கொடுக்க ஒப்புக்கொண்டு, வருவாய்த் துறை நிர்ணயித்தும் கூட அங்கே வேலையை எடுக்க மறுக்கிறார்கள். அந்தத் துறையிலே எப்படி எடுப்பார்கள் என்ற விவரத்தை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, வீட்டு வசதி வாரியத்தின் மூலம் பல்வேறு வேலைகள் ஆங்காங்கு எடுக்கப்படுகின்றன. போளூர் வீடு கட்டும் சங்கத்தின் மூலம் நல்ல அளவிற்குப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே அந்த அளவில் வேலைகள் நடக்கின்றன. குறைந்த அளவில் 100 வீடுகளையாவது கட்ட முன் வந்தால் தாலுக்கா நகரங்களில் எடுப்பதற்கு வீட்டு வசதி வாரியம் தயாராக இருக்கிறது.

திரு. கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன்: தலைவரவர்களே, சென்னையைத் தவிர மற்ற இடங்களுக்கு 40 லட்சம் ரூபாய் மட்டும் ஒதுக்கினால் குடிசை மாற்றும் வேலைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. எனவே, அதிகமான தொகையை ஒதுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவகர்ளே, இந்த ஆண்டு 117.38 லட்சம் ரூபாய்க்கு 1,630 தனிக் குடியிருப்புகளைக் கட்ட வீட்டு வசதி வாரியத்தின் மூலம் குடிசைகளை மாற்றும் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்னாள் ராணுவத்தினர்களுக்குப் புதுவாழ்வு.

* 213 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் மாஜி ராணுவத்தினர் குடியமைப்பு திட்டத்தின் கீழ் கடைகள் கட்டி வாடகைக்கு விடும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இல்லை.

*Tamil Nadu Forest Plantation Corporation*

* 214 Q.—Thiru N. K. PALANISAMY:
Thiru B. VENKATASWAMY:

Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state:

(a) Whether the Tamil Nadu Forest Plantation Corporation, Limited, has been formed;

(b) if so, the members of the Board of Directors; and

(c) the functions of the Corporation?





மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே,—

(அ) ஆம்.

(இ) திரு. பி. கந்தசாமி, ஐ.ஏ.எஸ்., அரசுச் செயலாளர், காடுகள்—மீனளத் துறை—தலைவர்.

திரு. ஹர்பான்ஸ் சிங், ஐ.ஏ. எஸ்., அரசுச் சிறப்புச் செயலாளர், தொழில் துறை—இயக்குநர்.

திரு. கே. சொக்கலிங்கம், ஐ.ஏ.எஸ்., அரசுச் சிறப்புச் செயலாளர், வேளாண்மைத் துறை—இயக்குநர்.

திரு. கே. ஏ. போஜா ஷெட்டி, ஐ.எப்.எஸ்., வனத் துறைத் தலைவர்—இயக்குநர்.

திரு. கே. துரைராஜ், ஐ.எப்.எஸ்., வனப் பாதுகாவலர்—நிர்வாக இயக்குநர்.

(உ) தரிசுப் பகுதிகளில் காடு வளர்த்தல்,

காடுபடு பொருள்களை அடிப்படையாகக் கொண்ட

தொழிற்சாலைகளுக்கு உதவுதல்,

அரசுக்கு வருவாய் ஈட்டித் தருதல்.

Thiru B. VENKATASWAMY: Sir, may I know from the Hon. Minister whether such schemes have been implemented in our State and if so, which are the specified areas in the State?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, 13—6—1974 இல் வனத் துறைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. 75,870 ஹெக்டேர் பரப்பளவு அந்தக் கழகத்தினிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, தரிசு நிலங்களில் புதிதாகக் காடுகளை உற்பத்தி செய்வதற்காக இந்தக் குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதில் மகிழ்ச்சி. ஆனால் ஏற்கெனவே உள்ள காடுகளில் பெரும்பாலானவை அழிவுக்கு உட்பட்டு வருகின்றன. உதாரணமாக ரெவின்யூ ஃபாரஸ்ட் என்று இருக்கிறது, ரிசர்வ் ஃபாரஸ்ட் என்று இருக்கிறது. ரிசர்வ் ஃபாரஸ்டைக் காப்பாற்றுவதற்குப் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஆனால் ரெவின்யூ ஃபாரஸ்டைக் காப்பாற்றுவதற்கு காட்டுத் துறை அதற்கான

நடவடிக்கைகளை எடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இதை மாற்றும் வகையில் இந்தக் குழு எல்லாக் காடுகளையும் காப்பாற்ற, ரெவின்யூ ஃபாரஸ்ட் உள்ளிட்ட எல்லாக் காடுகளையும் காப்பாற்றும் தன்மையில் ரெஃபரன்ஸ் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, காடுபடு பொருள்களை அடிப்படையாகக் கொண்டு புதிதாக ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு உதவுதல் ஒரு முக்கியமான குறிக்கோள். குறிப்பாக நான்கு மாவட்டங்களில்தான் அமல் நடத்தப்பட்டு வருகிறது. தரிசுப் பகுதிகளில் முந்திரி, சவுக்கு, யூகலிப்டஸ் ஆகியவைகளைப் பயிரிடும் திட்டம் இருக்கிறது. வனத்துறை தனியாக இயங்கி வருகிறது. மலைப்பகுதிக்காக தனியாக இயங்கி வருகிறது. பொதுவாக காடுகள் அழிக்கப்படக் கூடாது என்பது நல்ல நோக்கம். எல்லோரும் அதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அதிகாரிகளுக்கும் நல்ல கவனம் இருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இந்த ஃபாரஸ்ட் ப்ளான்டேஷன் கார்ப்பரேஷனில் நமது மாநிலத்திலுள்ள அரசு இரப்பர் தோட்டங்களும் உட்படுமா? இல்லையென்றால் அரசு இரப்பர் தோட்டங்களுக்காகத் தனியாக கார்ப்பரேஷன் அமைக்கும் திட்டம் இருப்பதாகக் கூறப்படுகிறதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, தனியாக இரப்பர் கார்ப்பரேஷன் ஆரம்பிக்கப்படும் ஒரு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எம். தேவராசன்: இந்த பிளாண்டேஷன் பகுதிகளில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அந்த போர்டில் சட்ட மன்ற உறுப்பினர்களையும் இடம் பெறச் செய்தால் ஆலோசனைகள் கூற நலமாக இருக்குமாதலால் அதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன் வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பிரதிநிதியாக இருக்கிற மாவட்டம் இந்தக் குழுவில் சேர்க்கப்படவில்லை.



திரு. ஏ. ஆர். மாரிமுத்து: இந்தக் கார்ப்பரேஷன் அதிகார வரம்பிற்குள் இருக்கும் காட்டிலாகா நிலங்களில் தென்னையும் பயிரிட ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: முக்கியமாக நான் சொன்ன மூன்று பொருள்கள் பயிரிடப்படுகின்றன. தென்னை பயிரிடப்படக் கூடிய இடம் இருக்குமானால் நிச்சயமாகப் பரிசீலனை செய்து எடுத்துக் கொள்ளலாம்.

திரு. க. உரோ. எட்மண்ட்: ஃபாரஸ்ட் பிளான்டேஷன் கார்ப்பரேஷன் ஆரம்பித்த காரணத்தால் ஏற்கெனவே வனத் துறையில் பணியாற்றிய ஊழியர்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற அச்சம் இருந்ததே, அப்படி யாராவது பாதிக்கப்பட்டிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன். தலைவரவர்களே, பாதிக்கப்படவில்லை, சற்று அதிகமாகச் சலுகை பெற்றிருக்கிறார்கள்.

*Cashew Plantations.*

*215 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state the names of places in the forest areas in the State where cashew plantations have been raised in 1973-74?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அறந்தாங்கி, உடையார் பாளையம், மதுராந்தகம், திருவள்ளூர், செங்கற்பட்டு ஆகிய பகுதிகளில், 1,449 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி வளர்க்கப்படுகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: The very name coconut, i.e., the fruit of the south, indicates that the entire south is fit for cultivation of coconut. May I know from the Hon. Minister why the doubts whether this area is fit or that area is fit? May I know whether he will arrange to make an investigation and see that every area is cultivated with coconut?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது முந்திரி பற்றிய கேள்வி, தென்னை பற்றிய கேள்வி அல்ல.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: முந்திரிப் பயிர் விவசாயிகளுக்கு அரசாங்க உதவி செய்கிற செயற்குறிப்பு இருக்கிறதா? இல்லையென்றால் இனிமேலாவது பரிசீலிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இது விவசாயத் துறை அமைச்சரிடத்தில் கேட்க வேண்டிய கேள்வி. இது வனத் தோட்டக் கழகத்தின் மூலமாக முந்திரி பயிரிடப்படும் திட்டமாகும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நமது மாநிலத்தில் முந்திரிப் பருப்பு ஆலைகள் பல இருக்கின்றன. ரா மெட்டீரியல்ஸ் கிடைப்பதில் சிரமம் இருக்கிறது. அந்தச் சிரமத்தினைத் தீர்க்கும் வகையில் இந்தத் திட்டத்தை மாநில முழுவதும் விஸ்தரித்து முந்திரியை அதிகமாக உற்பத்தி செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : கிட்டத்தட்ட 20,000 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்படுகிறது. 11,000 ஹெக்டேர் பரப்பளவில் பலன் தந்து கொண்டிருக்கிறது. மேற்கொண்டு 10,000 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடும் திட்டம் இருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம் : முந்திரிப் பயிர் செங்கற்பட்டு மாவட்டத்தில் அதிகமாக இருக்கிறது. முந்திரிக் கொட்டைகளை எடுக்கும்போது அதிகாரிகள் ஏலம் விடுகிறார்கள். அப்படி ஏலம் விடும்போது வேறு யாராவது உடன் இருக்கிறார்களா? அதிகாரிகள் தவறு செய்கிறார்கள் என்ற புகார் அரசுக்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : புகார்களோ, குற்றச்சாட்டுகளோ வந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டியது நம்முடைய கடமை. குறிப்பிட்ட புகாரைச் சொன்னால் விசாரித்து தக்க விளக்கம் தர இயலும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : நம் நாட்டில் இருக்கும் முந்திரித் தோட்டங்களில் விளைவு மிகக் குறைவாக இருக்கும் காரணத்தால் அரசே காட்டு இலாகா தோட்டங்களில் மாடலாக முந்திரியைப் பயிரிட்டு அதிக அளவு பலன் பெறுவதற்கான வழிவகைகளைச் செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பூச்சி மருந்து அடித்தல், உரம் போடும் முறைகளைக் கையாளுதல் போன்றவற்றின் மூலம் கடந்த மூன்று நான்கு ஆண்டுகளாக எதிர்பார்த்த அளவுக்குப் பலன் கிடைத்து வருகிறது.

திரு. எம். ஏ. லத்தீப் : ரெவின்யூ ஃபாரஸ்டுகளை எல்லாம் வனத் துறையில் எடுத்து அந்த இடங்களில் முந்திரிப் பயிர்கள் வைக்க முயற்சி எடுக்கப்படுமா? எல்லா ரெவின்யூ ஃபாரஸ்டுகளையும் எடுத்து இத்தகைய திட்டங்களை நிறைவேற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : எல்லா ரெவின்யூ ஃபாரஸ்டுகளையும் நாம் உடனடியாக எடுத்து காடு வளர்க்கும் திட்டத்தைச் செய்ய வேண்டுமென்றால் நிதிப் பிரச்சினை வந்து



விடுகிறது. ஆண்டுத் திட்டங்கள் மூலமாக எவ்வளவு பணம் ஒதுக்க முடியும் என்பதைக் கணக்கில் கொண்டு அந்த அளவில் புதிய பகுதிகளை எடுத்துக்கொள்ள முடியும். ஒவ்வொரு ஆண்டும் நிதி வசதிக்கேற்ப ரெவின்யூ பாரஸ்டுகளை அப்போதைக்கப்போது எடுத்துக்கொள்ளலாம்.

### அருள்திரு சாரங்கபாணி கோயில் தேர்

* 216 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்குடந்தை திரு சாரங்கபாணி திருக்கோயில் திருத்தேரினைப் புதுப்பிக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அத்திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) திருக்குடந்தை அருள்மிகு திரு சாரங்கபாணி திருக்கோயில் திருத்தேரினை புதுப்பிக்க சுமார் ரூ. 3 லட்சம் செலவாகுமாதலால் இதற்கென ஒரு திருப்பணிக்குழு அமைக்கப்படவுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தத் தேரினைப் புதுப்பிக்கும் திட்டம் நீண்டகாலமாகப் பரிசீலனையில் இருக்கிறது. எப்போது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : நீண்டகாலப் பரிசீலனையில் இருப்பதாகத் தகவல் இல்லை. 1973-ம் ஆண்டில் நான் தஞ்சை மாவட்டத்தில் அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தபோது உள்ளூரில் இருக்கும் அந்தக் கோயிலைச் சேர்ந்தவர்கள் என்னிடத்தில் தெரிவித்தார்கள். உடனடியாக அதற்குப் பொதுப் பணித் துறை பொறியாளர்கள் மூலமாக மதிப்பீடு தயார் செய்திருக்கிறார்கள். போதுமான நிதிவசதி கோயிலுக்கு இல்லாத காரணத்தால் தனியாகக் குழு அமைக்கப்பட்டு அதனைச் செய்ய வேண்டுமென்று கருதி தேவையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள்.

[1975 மார்ச் 6

### ஆலயத் தேர்கள் விற்பனை

* 217 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலயங்கள் எவையேனும் தங்களிடம் உள்ள புராதன தேர்களை விற்பனை செய்ய முன்வந்ததா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இல்லை.

திரு. கு. இராசமாணிக்கம்: இக்கால நிலையை அனுசரித்து தேர் திருவிழாக்களுக்குச் செலவு செய்கிற பணத்தை கல்விக்காகச் செலவழிக்கத் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: கல்விக்கும் செலவிடுகிறோம். அதே நேரத்தில் இந்தத் தேவையையும் பூர்த்தி செய்கிற வகையில் இரண்டு காரியங்களையும் அறநிலையத் துறை மூலம் செய்கிறோம்.

### *Jersey Farm at Hosur.*

* Q.218.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:

(a) whether there is any proposal to start a pure Jersey Farm at Hosur Cattle Farm with the British Collaboration; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

THIRU B. VENKATASWAMY: I am given to understand that there is a collaboration to import pure jersey bulls from England to Hosur Cattle farm under the Dairy Development Corporation. May I know from the hon. Minister whether such a scheme is going to materialise soon?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த கால்நடை வல்லுநர் ஹோசூர் பகுதியைப் பார்வையிட்ட பிறகு ஃப்ரோசன் செமன் என்ற வகையில், உறை விந்து பிரிவிடம் கூடிய கால்நடை நிலையத்தைத் தொடங்கும் திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். விரைவில் அதனைத் தொடங்கவேண்டுமென்று



1975 மார்ச் 6]

பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு இந்திய அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது. அந்தப் பேச்சு வார்த்தை வெற்றிகரமாக முடியுமானால் நிச்சயமாகப் பலன் ஏற்பட்டு தொடங்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### கும்முடிப்பூண்டி, எல்லாபுரம் ஒன்றியங்களில் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

* 219 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலும், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலும் எந்தெந்த அரிசன காலனிகளில், வீட்டு மனைகளை ஆர்ஜிதம் செய்து குடிமனைப் பட்டாக்கள் வழங்கும் செயற்குறிப்புகள் ஆய்வில் உள்ளன?

(இ) அவற்றை நிறைவேற்றுவதில் ஏற்படும் காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: (அ) & (இ) ஓர் அறிக்கை @ சட்டப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன்: இந்த விவர அறிக்கையிலே உள்ள சில விவரங்களைப் பார்க்கும்போது சில ஊர்களிலே இந்த நில ஆர்ஜிதம் செய்கிற பிரச்சினை ஆண்டுக் கணக்கில் காலதாமதமாகிக் கொண்டிருக்கிறது என்றும் அதற்குக் காரணமாக, போதிய' நிதி கொடுக்க வேண்டுமென்றும், வட்டத்திற்கு ஒரு ஸ்பெஷல் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் நியமிக்கப்பட்டு இன்ஸ்பெக்ஷன் போன்றவற்றைச் செய்து முடிக்க வேண்டுமென்றும் இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன. இந்த இரண்டையும் நிறைவேற்றி விரைவாக இந்தப் பணியை முடித்துக் கொடுக்க அரசு தனி ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: தனி அதிகாரிகளைப் போட அரசு ஆலோசித்து வருகிறது. அடுத்த ஆண்டிலிருந்து தீவிரமாகச் செயல்படும்.

@ 132–134 ம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1975 மார்ச் 6

### வடபெரும்பாக்கத்திற்கு நீர் வழங்கும் திட்டம்

* 220 வினா—திரு. மா. வே நாராயணசாமி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் ஒன்றியத்தைச் சார்ந்த வடபெரும்பாக்கம் கிராமம் அரிசன மக்களுக்கு நலத்துறை வாயிலாக குடிநீர் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: (அ) & (இ) மாதவரம் ஒன்றியத்தைச் சார்ந்த வடபெரும்பாக்கம் கிராமம் அரிசன மக்களுக்கு நலத்துறை மூலமாக குடிநீர் வழங்க செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தேவையான நடவடிக்கை எடுத்து வருகிறார்.

### *B. T. Assisiants*

* Q. 201.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state whether the Government propose to allow the B.T. Assistants in Government Schools who have not studied Tamil in Part II in the Degree Courses to appear for Part II Tamil in degree Examinations as private teacher candidates?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அரசுப் பள்ளிகளில் உள்ள பட்டதாரி ஆசிரியர்கள் பல்கலைக் கழக விதிமுறைகளைப் பொறுத்து பட்டப் படிப்பில் மொழிப் பகுதியில் தேர்வு எழுத வேண்டுமென்றும் இது குறித்து ஆய்வு செய்யுமாறும் சென்னை, மதுரை பல்கலைக் கழகங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, இப்படி அவர்களுக்கு விதிவைக்காத காரணத்தினால் தனியாக அவர்கள் பரிட்சை எழுதுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்படுமா? இந்த ஆண்டிலாவது, ஜூலையில் ஆரம்பிக்கக் கூடிய ஆண்டிலாவது வாய்ப்பு கொடுக்கப்படுமாவென்பதை அறிய விரும்புகிறேன்.



1975 மார்ச் 6]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அரசைப் பொறுத்து அப்படிப்பட்ட வாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் தான் இருக்கிறது. இதைத் தான் பல்கலைக் கழகங்களுக்கு அரசு பரிவுரை செய்திருக்கிறது. இந்த ஆண்டிலேயே செய்யவேண்டுமென்ற முயற்சியை அரசு மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

### *Teachers Council*

* Q. 202.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism with reference to question No. 583 answered on the floor of the Assembly on 31-3-1973 be pleased to state the present stage of the proposal for the formation of Teachers Council for teachers in Elementary Schools?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆசிரியர்களுக்காக மன்றம் ஒன்று அமைத்திடுவது தேவையில்லை என அரசு கருதுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, இந்த கோரிக்கையை நீண்ட நெடுங்காலமாக இந்த ஆசிரியர் கூட்டணி கேட்டுக் கொண்டு வருகிறார்களே, இதைப் பற்றி மறு பரிசீலனை செய்வதற்கு அரசுக்கு ஆலோசனை உண்டாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இதை அரசு பல தடவை ஆராய்ந்து பார்த்தது. பொதுவாக டீச்சர்ஸ் கவுன்சில் ஒன்று, இண்டியன் மெடிகல் கவுன்சில், பார் கவுன்சில் அடிப்படையில் வைக்கலாம் என்று ஆராய்ந்து பார்த்ததில் தேவையில்லை என்று முடிவு செய்யப்பட்டது. அந்த இரண்டு துறைகளுக்கும் அப்படிப்பட்ட கவுன்சில்கள் தேவைப்படுகின்றன. தொழில் துறையில் தவறுசெய்யும் டாக்டர்கள் மீதும், வக்கீல்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கைகளை அந்தந்த கவுன்சில்கள் எடுக்கின்றன. அந்தந்த தொழில்களின் மதிப்பு கெடாமலும் அவைகள் பார்த்துக் கொள்கின்றன. அப்படிப்பட்ட பார் கவுன்சில் போன்று மெடிகல் கவுன்சில் போன்று ஆசிரியர்களுக்கு அவசியமில்லை. ஏனென்றால் ஆசிரியர்களுக்கு விதிமுறைகள் போன்று பல்வேறு வகைகளை ஏற்பாடு செய்திருக்கிறோம். அவர்களைக் கண்காணிப்பதற்கு அதிகாரிகள், துறைகள் இருக்கின்றன.

அது மட்டுமல்லாமல் அவர்களுக்கு மேலும் கட்டுப்பாடுகள் கொண்டு வராமல் ஆசிரியர்கள் கடமை உணர்ச்சி வளர வளர அந்தத் தொழில் துறை வளரவேண்டுமென்று, கருதுகிறோம். இத்தகைய கட்டுப்பாடுகள் இல்லாமல் ஆசிரியர்கள் தங்கள் கடமை களைச் செய்யவேண்டும். அப்படிச் செய்கிறபோது தவறுகள் ஏற்பட்டால் அவர்களைத் திருத்துவதற்கு இப்போதே விதி முறைகள் இருக்கின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இப்போது மாணவர், ஆசிரியர் பிரச்சினை பல பள்ளிகளில் இருக்கின்றன. இந்தப் பிரச்சினை களுக்கு தீர்வு காண்கிற முறையிலே ஆசிரியர்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன. இந்தப் பிரச்சினைகளை அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறுகிற அவசியம் ஏற்படுகிறது. ஆகவே இந்த ஆசிரியர் கவுன்சில் அமைப்பது நலமாக இருக்கும் என்பதை அரசு உணருமா? அப்படி உணர்ந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன் வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அந்தந்த பள்ளிகளில் ஏற்படுகிற பிரச்சினைகளைத் தீர்க்க தனிக் குழு அமைக்கலாம் என்று அரசு தெரிவித்து இருக்கிறது. முக்கியமாக பாபுலர் டீச்சர்ஸ் என்ற அளவிற்கு மாணவர்களிடத்தில் செல்வாக்கு படைத்த ஆசிரியர்கள், பெற்றோர் பிரதிநிதிகள், மாணவர் பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்ட குழு அமைத்து அந்தந்த கல்வி நிலையங்களில் உள்ள தகராறுகளைத் தீர்க்கலாம். அது நல்ல யோசனை. பார் கவுன்சில் மாதிரி, மெடிகல் கவுன்சில் மாதிரி அமைக்கவேண்டுமென்பது தான் தேவையில்லை என்றேன்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இப்படி ஆசிரியர் கவுன்சில் என்று அமைக்கவில்லையென்றாலும் கூட ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் அடங்கிய குழுவை அமைத்தால் பள்ளியில் மாணவர் களிடையே ஏற்படுகிற குழப்பத் தன்மைகளைப் பரிசீலனை செய்து ஆசிரியர், பெற்றோர் குழுவே சீரமைக்க வழியாக இருக்குமே, அப்படிப்பட்ட குழுக்களை அமைக்க அரசு முன் வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஆசிரியர்கள், பெற்றோர்கள் சங்கம் என்று பெரும்பாலான பள்ளி களில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் பல பள்ளிகளில்



ஏற்படுத்த வேண்டுமென்ற நிலை இருக்கிறது. மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் கூட ஆசிரியர்கள் பெற்றோர்கள் சங்கம் ஆண்டுக்கு ஆண்டு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. கிட்டத் தட்ட 12 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆசிரியர் பெற்றோர் சங்கங்கள் இருக்கின்றன. 32 ஆயிரம் பள்ளிகளில் ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கைகள் உள்ளன. அண்மையில் அகில இந்திய அளவிலே ஆசிரியர்கள் பெற்றோர்கள் சங்க மாநாடு சென்னையில் நான்கு நாட்கள் நடைபெற்றது. இப்படிப்பட்ட தன்மையில் ஆசிரியர்கள் கவுன்சில் தேவையில்லை என்பது அரசின் கருத்து. பள்ளிக்குப் பள்ளி இப்படிப்பட்ட சங்கங்களை நிறுவவேண்டுமென்று, அப்படி நிறுவு வதற்கு குழு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## கிளை நூலகங்கள்

* 203 வினா—திரு. வி. ஆலடி அருணா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு மாவட்ட நூலக ஆணைக்குழுவின் கீழ் 1966–67ல் செயல்பட்ட கிளை நூலகங்கள் எத்தனை? 1974–75ல் உள்ள கிளை நூலகங்கள் எத்தனை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: 1966–67ல் செயல்பட்ட கிளை நூலகங்கள் மற்றும் 1974–75ல் உள்ள கிளை நூலகங்கள் மாவட்ட நூலக ஆணைக்குழு வாரியாக விவரம் பின் வருமாறு:—

| வ. எண். | மாவட்ட நூலக ஆணைக்குழு | 1966–67ல் செயல்பட்ட கிளை நூலகங்கள் | 1974–75ல் உள்ள கிளை நூலகங்கள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | செங்கற்பட்டு ... ... ... | 109 | 117 |
| 2. | கோயம்புத்தூர் ... ... ... | 195 | 192 |
| 3. | தருமபுரி ... ... ... ... | ... | 35 |
| 4. | சென்னை ... ... ... ... | 105 | 120 |
| 5. | மதுரை ... ... ... ... | 154 | 159 |
| 6. | நீலகிரி ... ... ... ... | 31 | 35 |
| 7. | வடஆற்காடு ... ... ... ... | 83 | 88 |

| வ. எண் | மாவட்ட நூலக ஆணைக்குழு | 1966–67ல் செயல்பட்ட கிளை நூலகங்கள். | 1974–75ல் உள்ள கிளை நூலகங்கள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 8. | இராமனுதபுரம் ... ... ... | 177 | 177 |
| 9. | சேலம் ... ... ... ... | 103 | 79 |
| 10. | தென்னுற்காடு ... ... ... | 107 | 113 |
| 11. | தஞ்சாவூர் ... ... ... ... | 96 | 107 |
| 12. | திருச்சிராப்பள்ளி ... ... ... | 102 | 107 |
| 13. | திருநெல்வேலி ... ... ... | 104 | 125 |

திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இந்த நூலக வளர்ச்சிக்காக அமைக்கப்பட்ட சுப்பராயன் கமிட்டியின் அறிக்கை இன்னும் சர்க்காருக்கு சமர்ப்பிக்கப்படாத காரணத்தினுல் நூலக வளர்ச்சி தடைப்பட்டிருக்கிறது என்பதை அரசு உணருகிறதா? அந்த அறிக்கை விரைவிலே கிடைப்பதற்கும் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கும் அரசு முயற்சி எடுக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நூலகங்களைப் பற்றி பரிசீலிப்பதற்காக அமைக்கப்பட்ட குழு தன் அறிக்கையை அரசினிடத்திலே ஒப்படைத்திருக்கிறது. கல்வித் துறை அதைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறது. விரைவிலே அது பற்றி நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, as a Member of the Estimates Committee, I had occasions to visit Branch Libraries and Central Libraries including that in the Thanjavur district. The common complaint is inadequate funds. They say that the Government should give more funds, or take over the libraries and run them. So, may I know from the Hon. Minister for Education and Tourism whether, in the interest of the libraries, the Government will take over the libraries and run them efficiently?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஏற்கெனவே நிதி வசதி குறைவாக இருப்பதன் காரணமாக 3 காசு செஸ், 3 காசு மானியமாக நூலகங்களுக்கு அளித்து வந்தோம்.



3 காசு செஸ் என்பதை 5 காசு அளவிற்கு உயர்த்தியிருக்கிறோம். நாம் 10 காசு அளவிற்குத் தருகிறோம். இதனுல் ஓரளவு நிதி வசதி மேம்பாடு அடைந்திருக்கிறது. ஏற்கெனவே நிதி வசதிக் குறைவு இருந்ததன் காரணமாக அது நிர்வாகச் செலவுக்குத்தான் பயன் பட்டது. அப்போது புதிய நூல்கள் வாங்க கஷ்டப்பட்டார்கள். இப்போது நிதியைக் கூடுதலாக ஆக்கியிருப்பதன் காரணமாக நூல்களை வாங்க வசதி ஏற்படும். இருந்தாலும் நிதி உதவி போதாதுதான். மேலும் எந்த வகையிலே உயர்த்தலாம் என்பதை அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. சொ. காவேரிமணியம்: தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் நிதிப் பற்ருக்குறையைப் பற்றிச் சொன்ஞர்கள். பொதுவாக மாவட்ட நூலகங்கள் லைப்ரரி செஸ் மூலமாக நடக்கிறது. செஸ் சரியாக ஒழுங்காக வந்து சேருவதில்லை. செஸ் ஒன்றியங்களிலேயும் மாநகராட்சியிலேயும் தங்கி விடுகிறது. இவைகள் சரியாக வசூலாவதற்கு, இப்போதுள்ள மாவட்ட குழு போய் வசூல் பண்ணக்கூடிய முறையை மாற்றி, நிதி நிலை அறிக்கையிலேயே கல்வி மானியத்தில் குறிப்பிட்ட தொகையை ஒதுக்குவது நலமாக இருக்கும். ஆகவே, அரசு அதைச் செய்ய முன் வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட முடிவை அரசு இப்போது ஏற்கவில்லை. ஆனுல் இப்படிப்பட்ட செஸ்ஸையெல்லாம் வசூல் பண்ணவேண்டுமென்பதற்கான முறையீடுகளை வருவாய்த் துறைக்கும் மற்ற இலாகாக்களுக்கும் சொல்லியிருக்கிறோம். இந்த செஸ்ஸை எப்படியேனும் வசூலித்துத் தர வேண்டுமென்று கூறியிருக்கிறோம். இப்போது இருக்கிற நிதி வசதி குறைவாக இருக்கிறது என்பதை உணர்கிறோம். நிதி வசதியை மேலும் எந்த வகையில் பெருக்கலாம் என்று அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இப்போது சென்னை லைப்ரரீஸ் அதாரிட்டீஸ் ஆக்ட் என்று நடைமுறை மாநிலத்தில் இந்த சட்டத்தைக் கன்னியாகுமரியில் இருக்கிறது. ஆனுல் இந்த சட்டத்தைக் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அமல் படுத்தவில்லை. இதனுல் அரசிடமிருந்து கிடைக்கிற மானியம் அந்த மாவட்ட நூலகங்களுக்குக் கிடைக்காமல் போகிறது. ஒரு வேளை இந்தச் சட்டத்தை அந்தப் பகுதிக்கு எக்ஸ்டண்டு பண்ணி அமுல்படுத்துவதற்கு உடனடியாக வாய்ப்பு

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1975 மார்ச் 6

இல்லையென்றாலும் கூட மானியத்தையாவது அந்த மாவட்டத்தில் இருக்கிற நூலகங்களுக்கு கொடுக்கிற வகையில் அரசு ஆவன செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த நூலகங்களைப் பற்றி அமைக்கப்பட்ட குழுவிடம் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பற்றி ஆராயச் சொன்னோம். இது பற்றி ஆராய்ந்து அவர்கள் அறிக்கை தந்திருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிந்ததற்குப் பிறகு அமுல்படுத்தப்படும். மற்ற மாவட்டங்களுக்கு ஒத்த நிலையில் கன்னியாகுமரி மாவட்டத்தைக் கொண்டு வர இருக்கிற இடர்பாடுகளை எப்படிக் களையலாம் என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி ஆராய்ந்து முடிவுக்கு வந்த பிறகு, அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10-00)

## (2) 1975–76-ம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்

திருமதி சத்தியவாணிமுத்து : சட்டப் பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்துள்ள 1975–76-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்தைக் கூற விரும்புகிறேன்.

கவர்னர் பேருரை ஒரு மனு போடும் உரை என்று நான் கூறினேன். மத்திய அரசுக்கு, அவர்கள் கொடுத்தால்தான் நாங்கள் செய்ய முடியும் என்கிற அளவுக்கு பெடிஷன் போடுவதைப்போல், பல திட்டங்களுக்குப் பணம் வேண்டுமென்று கேட்ட உரையாக இருந்தது. ஆனால் முதலமைச்சர் அவர்கள் உரையோ, எல்லாவித கோளாறுகளுக்கும் மத்திய அரசுதான் காரணம் என்று பழி போடும் உரையாக இருக்கிறது. நான் குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், அவரது உரையிலிருந்தே சொல்ல முடியும். "அறிஞர்



1975 மார்ச் 6] [திருமதி சத்தியவாணிமுத்து]

அண்ணா அவர்கள் இந்த அவையில் பன்முறை எடுத்துக் காட்டியது போல, விலைவாசியைக் கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரங்கள் அனைத்தும் மத்திய அரசிடம் குவிந்திருக்க, விலை உயர்வுகளின் காரணமாக எழும் குமுறல்களுக்கு பொறுப்பேற்க வேண்டிய நிலை பெரும்பாலும் மாநில அரசுகளுக்கே ஏற்பட்டு விடுகிறது" என்று மத்திய அரசின் மீது பழி போட்டிருக்கிறார். "கடந்த 15 மாதங்களாக தேசிய வளர்ச்சிக்குழு கூட்டம் நடத்தவில்லை, அப்படி கூட்டாததால்தான் மாநில அரசுகள் ஒன்றுகூடி பேசுகிற வாய்ப்பைக் கெடுத்து இருக்கிறார்கள்" என்று மத்திய அரசைக் குறை கூறியிருக்கிறார்கள். "மத்திய அரசு தனது வரவு–செலவுத் திட்டங்களில், பெருத்ததுண்டு விழுவதைத் தவிர்க்க முடியாமல் இருக்கும்போது, மாநில அரசுகள் தத்தம் வரவு–செலவுகளை சரிக்கட்ட வேண்டும் என்றும், பற்றாக்குறை ஏதும் ஏற்பட விடலாகாது என்றும், அறிவுறுத்துவதும், அச்சுறுத்துவதும் முரண்பாடானதாகும்" என்று மத்திய அரசைக் குறை கூறியிருக்கிறார்.

அதேபோல், மாநிலங்களின் கடன்களைப் பற்றிக் கூறும்போது, "மத்திய அரசு தனது பற்றாக்குறையை ஈடு செய்ய முயற்சி செய்வது சரியல்ல" என்று கூறுகிறார். இப்படி 6–7 இடங்களில் மத்திய அரசின் போக்கு சரியாக இல்லை, எனவேதான் மாநில அரசு, தான் நினைப்பது போல் மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்ய முடியவில்லை என்று எடுக்கிறபோதே மத்திய அரசின் மீது குறை போட்டு, முடிக்கும்போது எனவேதான், மாநில சுயாட்சி வேண்டுமென்று நாங்கள் கேட்கிறோம். மாநில சுயாட்சி இல்லாததால்தான் இத்தகைய குறைகளை நாங்கள் செய்கிறோம் என்கிற அளவுக்கு எடுத்துச் செல்லியிருக்கிறார்கள். அடுத்து, அவர்கள் எதிர்க்கட்சியாக வரப்போகிற காரணத்தால்தான், மறுபடியும் மக்களைச் சந்திப்பதற்கு ஒரு உணர்வு மிக்க "சுலோகன்", மக்கள் மத்தியில் சொல்வதற்கு தேவை என்று கருதித்தான், மாநில சுயாட்சி கோஷத்தை இன்றைக்கு வற்புறுத்தி வருகிறார்கள் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாநில சுயாட்சி பற்றி அண்ணா அவர்கள் எந்த அளவுக்குக் கூறியிருக்கிறார்கள் என்பதைப் பற்றி நான் அதிகமாக இங்கே பேச விரும்பவில்லை. அண்ணா அவர்களுக்கு மக்கள்தான் முக்கியமே தவிர தத்துவம் முக்கியம் அல்ல. அவர் எத்தகைய பிடிவாதமான கொள்கையைக் கொண்டிருந்தவர்களாக இருந்தபோதிலும்,

நாட்டின் நலனுக்காக, மக்களின் நலனுக்காக அவர் விட்டுக் கொடுத்துப் போய் இருக்கிறார் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். "தனி ஒரு மனிதனாக இருந்து, பைத்தியம் பிடித்துப் போய் தெருத் திண்ணையில் படுத்து இருந்தாலும், திராவிட நாடு கேட்டே தீருவேன்" என்று தன்னுடைய உயிர் மூச்சுக் கொள்கையாக திராவிட நாடு கொள்கையை வைத்து இருந்தார்கள். அதையே, அவர்கள் இந்த நாட்டின் மீது எதிரிகள் படை எடுக்கிறார்கள் என்று அறிந்தபோது, எதிரிக்கு நம்முடைய பிரிவினை மனப்பான்மையைக் காட்டக்கூடாது, நாடுதான் முக்கியம், இந்தியா இருந்தால்தான், அதிலிருந்து திராவிட நாடு நாம் பிரித்துக் கேட்க முடியும், எனவே இந்தியா முதலில், பிறகு திராவிடம், தமிழகம், மக்கள் என்ற அளவுக்கு, அந்த திராவிட நாடு தத்துவத்தையே அவர்கள் ஒத்திப் போடுகிற அளவுக்கு முடிவு எடுத்தார்கள். எனவே, அண்ணா அவர்கள் இப்போது இருந்து இருந்தால் அவர்கள் மாநில சுயாட்சிக் கொள்கையைக் கூட மாற்றி இருக்கக்கூடும்.

அண்ணா அவர்கள் கருத்தை மேற்கோள் காட்டுகிற முதலமைச்சர் அவர்கள் பேச்சில் கூட "மாநில சுயாட்சி தர தயக்கம் காட்டுவார்களேயானால் அளவுக்கு மீறிய அதிகாரங்களைத் தாங்கித் தாங்கி பாதுகாப்புப் போன்ற பெரிய விஷயங்களில் சோடை போய்விடுவார்களோ என்பதுதான் எங்கள் சந்தேகம்" என்று சொல்லியிருக்கிறார். இந்திய நாட்டைப் பாதுகாக்க மத்திய அரசுக்கு வலுவு குறைந்துவிடுமோ அதிக அதிகாரங்கள் இருப்பதால், இந்திய நாட்டைப் பாதுகாக்க மத்திய அரசுக்கு வலுவு குன்றி விடுமோ என்ற அச்சத்தால்தான் நாடு எங்கோ போய்விடுமோ என்ற அச்சத்தால்தான் அப்படிக் கூறிய அண்ணா இன்று இருந்து இருப்பாரானால், இந்திய அரசு பங்களா தேஷ் சண்டையின்போது எடுத்த நடவடிக்கைகளைப் பார்த்த பின்னர், பாகிஸ்தான்—இந்தியா சண்டையின்போது எடுத்த நடவடிக்கைகளைப் பார்த்த பின்னர் நிச்சயமாக இந்திய அரசு சரியான பாதுகாப்பைத் தருகிறது என்று நினைத்து தனது கொள்கையை மாற்றி இருக்கக் கூடும். நான் இதைப் பற்றி அதிகமாகக் கூற விரும்பவில்லை.

அண்ணா அண்ணா என்று சொல்கிற ஆளும் கட்சியைக் கேட்கிறேன், அண்ணாவின் பெயரைச் சொல்லி திசை திருப்ப வேண்டாம். மாநில சுயாட்சி என்று அவர்கள் குறிப்பிடும்போது, அண்ணா அவர்கள் கூறிய திராவிட நாட்டைச் சேர்த்துத்தானா அல்லது வெறும் தமிழகத்திற்கு மாத்திரம்தானா என்பதைத் தெரிவிக்க



வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாநிலம்—தமிழ் மாநிலம் தான். அப்போது திராவிட நாடு என்ன ஆனது? இனத்தால் ஒன்றுபட்டு, மொழியால் வேறுபட்டு வாழ்கிற அனைவருக்கும் சேர்த்துத்தான் திராவிட நாடு கேட்டோம். நாடு இப்போது கேட்கவில்லை என்று சொன்னால், அதைக் கேட்கவேண்டிய காரணங்கள் இன்றைக்கும் இருக்கிறது ; நீறு பூத்த நெருப்பு என்று ஒப்புக் கொள்ள முடியும். எனவே அண்ணா அவர்கள் இறுதி வரையில் திராவிடம் என்ற வாதத்தைத்தான் இனமோ, மொழியோ இல்லாத அளவுக்கு நான்கு மொழி பேசும் அனைவருக்கும் ஒன்றாகச் சேர்த்து, தென்னாடு தனியாக வேண்டும், திராவிட நாடு வேண்டும் என்று பேசிக் கொண்டிருந்தார். இப்போது தமிழ் நாட்டிற்கு மட்டும் மாநில சுயாட்சி என்று சொல்வார்களானால், அதை மட்டும் வைத்துக் கொண்டு கேட்பார்களானால், ஆளும் கட்சியினர் இன்றைக்கு திராவிடம் என்ற பெயரை மாற்றி "திராவிட முன்னேற்றக் கழகம்" என்பதை மாற்றி . . .

திரு. இராம அரங்கண்ணல்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார், தலைவர் அவர்களே, அறிஞர் அண்ணா அவர்கள் சாகிற வரையில் திராவிட நாடு கேட்டார், எனவே தான் மாநில சுயாட்சி கேட்டார் என்று அம்மையார் அவர்கள் தவறான விளக்கத்தைத் தந்து கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் குழு கூட்டத்திலேயே திராவிட நாடு என்ற கோரிக்கையை விட்டு விட்டோம் என்று அவர்கள் உள்பட எல்லோரும் சேர்த்து தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறோம். அதற்குப் பிறகு நம்முடைய தமிழ் மாநிலத்தைப் பொறுத்தவரையில் அதிக அதிகாரங்கள் அதிக உரிமைகள் வேண்டுமென்பதற்காக அண்ணா அவர்கள் மாநில சுயாட்சி கோரிக்கையை விரிவாகவும் உரிமையோடும் எழுப்பிக்கொண்டு இருந்தார்கள் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திருமதி சத்தியவாணிமுத்து: அது உண்மையாக இருக்குமானால், அவர்கள் தமிழர்கள் முன்னேற்றக் கழகம் என்று கழகத்தின் பெயரை மாற்றி இருக்க வேண்டும். ஆனாலும், திராவிடம், திராவிடம் என்றே சொல்லிக் கொண்டு வருகிறார்கள். எனவே, அதை ஏன் மாற்றவில்லை? மாற்றாததற்குக் காரணம், இன்னமும் அவர்களுக்கு அந்தக் கொள்கையில் உண்மையான தெளிவு இல்லை. மக்கள் மத்தியில் இவர்கள் செய்யும் தவறுகளை மூடி மறைக்க, மத்திய அரசின் மீது

எதிர்ப்புக் காட்ட, மக்களின் இதயத்தைத் தொட நல்ல சுலோகன் தேவை என்று கருதித்தான் மாநில சுயாட்சி என்று கேட்கிறார்கள். அதைச் சொல்வதற்கு இப்போது நல்ல வாய்ப்பு இருக்கிறது, எனவே, கூறுகிறார்கள்.

திராவிடம் என்ற சொல்லுக்கு இன்று இனவெறி உணர்ச்சி இருக்கிறது. மொழி வெறி இருக்கிறது. அதன் காரணமாக நாட்டிலே எத்தகைய சண்டைகள் இன்றைக்கு இருக்கின்றன? எத்தனை ஜாதிச் சண்டைகள் நாட்டிலே இருக்கின்றன? அமைச்சர்களே ஜாதியைப் பற்றிப் பேசிக் கொண்டு இருக்கிறார்கள். இவைகளை யெல்லாம் எண்ணிப் பார்க்கிற நேரத்தில் அண்ணாவின் கொள்கை என்ன ஆனது என்று கேட்க விரும்புகிறேன்.

நேற்றைய தினம் கூட மாண்புமிகு அமைச்சர் இராமச்சந்திரன் அவர்கள் "இல்லஸ்டிரேட் வீக்லியிலிருந்து சிலவற்றைப் படித்தார்கள். அதில் ஜாதி ஒழிப்பு என்ற கொள்கையை, திட்டத்தைத்தான் வைத்து இருப்பதாக அண்ணா அவர்கள் சொன்னதாகக் கூறினார்கள்.

ஜாதியை ஒழிக்கிற அளவுக்கு இன்று இருக்கும் அரசுக்கு தீவிரமான கொள்கை இருக்கிறது என்று சொன்னால், நான் ஆதாரப்பூர்வமாகச் சொல்ல முடியும், இல்லையென்று. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உண்மையிலேயே நன்மை செய்ய இந்த அரசு அக்கறை கொண்டிருக்கிறது என்று சொன்னால், இல்லை என்று என்னால் ஆதாரபூர்வமாகச் சொல்ல முடியும்.

மாநில சுயாட்சி இந்த அரசு கேட்கிறபோது தாழ்த்தப்பட்ட சமுதாயம் போன்ற சிறுபான்மை சமுதாய மக்கள் உண்மையிலேயே அஞ்சுகிறோம். இருக்கிற அதிகாரத்தை வைத்துக் கொண்டே, அரசியல் சட்டங்கள் எத்தனை உரிமைகளை தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் தந்து இருந்தபோதிலும், மிகத் துணிச்சலாக அந்தச் சட்டங்களை மீறி நடைபோடும் ஒரு அரசு—மாநில அரசு இருக்கிறபோது, அதைத் தட்டிக் கேட்க வலுவான, மத்திய அரசு, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பாதுகாப்பை, நியாயத்தை, தீர்ப்பை வழங்கக்கூடிய நிலையில் ஒரு மத்திய அரசு தேவை. அது இல்லை என்றால், சாதாரண மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை. தாழ்த்தப்பட்ட மக்களிடையே உள்ள தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டுமென்று அரசியல் சட்டம் 17-வது விதியில் இருக்கிறது. டைரக்டிவ் பிரின்சிபிள் 46-படி தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனியாக நிதி ஒதுக்கி, பல சலுகைகளைத் தர





வேண்டுமென்று அரசியல் சட்டம் கூறியிருக்கிறது. இவைகளையெல்லாம் செய்யவில்லை என்றால், ஜனாதிபதி தலையிட்டு இந்த அரசைக் கலைத்து விடலாம் என்று மிகக் கடுமையாக அரசியல் சட்டத்தின் 339(2) பிரிவு கூறுகிறது. இத்தனை அரசியல் சட்டப் பாதுகாப்பு இருந்தும் கூட, ஒரு மாநில அரசு, சாதாரண ஏழை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்ற கொள்கையை உடைய ஒரு மாநில அரசு, அதைச் செய்யத் தவறுகிறது என்றால் அதைத் தட்டிக் கேட்கும் அதிகாரம் ஒரு வலுவான மத்திய அரசுக்கு இல்லாமல், அனைத்து அதிகாரமும் மாநில அரசுக்கே உண்டு என்றால், சாதாரண ஏழை எளிய சிறுபான்மை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எந்த விதமான பாதுகாப்பும் இல்லாமல் போய்விடும்.

எனவேதான், அண்ணாவே அதை விரும்பவில்லை . அண்ணா கோரிய சுய ஆட்சி அதுவல்ல. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பின் தங்கிய மக்களுக்கு, சிறுபான்மை மக்களுக்கு, அண்ணா உயிரோடு இருந்து, நடைமுறைகளைப் பார்த்து, அந்த முழு சுயாட்சி மூலம் அவர்களுக்கு எல்லாம் பாதுகாப்பு இல்லை என்பதைக் கண்டாரானால், அந்த மாநில சுயாட்சித் திட்டத்தையும், திராவிட நாடு திட்டத்தைக் கைவிட்டது போல் கை விட்டு விடுவார்.

மாநில சுயாட்சி என்ற கூக்குரல் எதிர்கட்சியாக இருப்பவர்களுக்குத்தான் எப்போதும் தேவை. ஆளுகிற கட்சியினர் அந்தக் கோரிக்கையைப் பயன்படுத்துகிறார்கள் என்றால், தாங்கள் செய்கின்ற தவறுகளை மறைக்கும் கவசமாக அதைப் பயன்படுத்துகிறார்கள் என்றுதான் பொருள். மாநில அரசுக்கு அதிகாரங்கள் தேவை என்றால், எந்த எந்த அதிகாரங்களை அவர்கள் கேட்கிறார்கள் என்பதை அவர்கள் எதிர்கட்சியினருக்கு விளக்க வேண்டும். எந்த எந்த அதிகாரங்கள் இல்லாததினால் எந்த எந்தக் காரியங்கள் செய்ய முடியவில்லை என்பதையும் அவர்கள் விளக்க வேண்டும்.

1975–76 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் செலவினங்கள் ரூ. 537.5 கோடியாக அமையும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில், ஏறத்தாழ, ரூ. 211.15 கோடி ரூபாய் மத்திய அரசு அளிக்கிறது. ரூ. 143 கோடி பிளான் ஸ்கீமுக்கும், ரூ. 41.15 கோடி மத்திய அரசின் உதவியாகவும், வாரியங்கள் மற்ற வளர்ச்சிப் பணிகளுக்காக ரூ. 27 கோடியாகவும் மத்திய அரசு கொடுக்கிறது என்றால் மாநில அரசு வெறும் ரூ. 326 கோடிதான் செலவழிக்கிறது என்று பொருள்.

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன் :</u> அம்மையார் அவர்கள், தலை கீழாக மாற்றிச் சொல்கிறார்கள். மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ள தொகை, இது வரையில் அளிக்கப்பட்டிருக்கும் ரூ. 41 கோடியைச் சேர்த்துத்தான். ரூ. 143 கோடிக்கு மேற்பட்டு அல்ல. ரூ. 143 கோடிக்கு உட்பட்டுத்தான்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> திட்டத்திற்கு ஒப்புதல் தருவது என்பதற்கும், பணம் ஒதுக்குவது என்பதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. ஒப்புதல் அளித்த ரூ. 143 கோடி மத்திய அரசு உதவி ரூ. 41 கோடி இரண்டையும் சேர்த்து மத்திய சர்க்கார் கூடுதல் தொகை அளித்திருப்பது போல் மாண்புமிகு உறுப்பினர் கற்பனை செய்து கொண்டு பேசுவது சரியல்ல. ஏனென்றால், அப்படிச் சொன்னால், மற்ற மாநிலங்கள் எல்லாம் மத்திய சர்க்காரை அணுகி தமிழ்நாட்டிற்கு மாத்திரம் ரூ. 143 கோடி அளித்துள்ளீர்களே எங்களுக்கும் ஏன் தரவில்லை என்று கேட்க ஆரம்பித்து விடுவார்கள். மத்திய சர்க்காருக்கு ரொம்ப தர்மசங்கடமாகப் போய் விடும்.

<u>திருமதி சத்தியவாணிமுத்து :</u> மத்திய அரசின் உதவியாக இது வரையில் உறுதி அளிக்கப்பட்டிருப்பது ரூ. 41.15 கோடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது . . .

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> தலைவர் அவர்களே, ரொம்பச் சிரமப்படுகிறேன். நாம் கேட்ட 163 கோடி ரூபாய் திட்டத்திற்கு மாறாக, 143 கோடி ரூபாய் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் உதவியாக இதுவரையில் உறுதி அளிக்கப்பட்டிருப்பதுதான் ரூ. 41.15 கோடி.

<u>திருமதி சத்தியவாணிமுத்து :</u> அதைத்தான் நானும் சொல்ல வருகிறேன். நீங்கள் கேட்கிற திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்க ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டோர் நலனுக்கு, திட்டச் செலவில் மாநில அரசின் நிதி ஒதுக்கம் ரூ. 3.97 கோடி என்று இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எவ்வளவு, பின் தங்கிய மக்களுக்கு எவ்வளவு என்று பிரித்துப் போட்டிருக்க வேண்டும். பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கு 64 லட்சம் ரூபாய் என்றுதான் போட்டிருக்கிறது. பின்தங்கிய மக்கள் என்றால், "டீ நோட்டிடைடு ட்ரைப்ஸ்" மாதிரி யார் யாருக்கு எவ்வளவு ரூபாய்



ஒதுக்கீடு என்று போடப்பட்டிருக்க வேண்டும். பிற்படுத்தப்பட்டோர் நலனுக்குக் கட்டாயமாக உதவி அளிக்க வேண்டுமென்று மத்திய அரசின் கட்டாயத்தின் பேரில் தான் இந்தத் தொகையை யாவது ஒதுக்கியுள்ளீர்கள் என்று கூறுகிறேன். அப்படி இல்லையெனில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்தத் தொகையைக் கூட ஒதுக்க மாட்டீர்கள் . . .

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> நிதி நிலை அறிக்கையின் 20 ஆவது பக்கத்தில், பிரித்தே போட்டிருக்கிறேன். உறுப்பினர் அவர்கள் அதைச் சரியாகப் படிக்கவில்லை. இன்னொன்று. மத்திய அரசு கட்டாயப்படுத்தி நாங்கள் எதையும் செய்யவில்லை. மாநில அரசே இந்தத் திட்டங்களைப் போட்டிருக்கிறது.

<u>திருமதி சத்தியவாணிமுத்து :</u> திட்டம், திட்டத்தில் சேராதவை என்றால் என்ன, அதை விளக்க வேண்டும் . . .

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> திட்டம் என்றால் என்ன என்பதை எல்லா உறுப்பினர்களும் தெரிந்து கொண்டிருக்கிறார்கள், அமைச்சராக இருந்த உறுப்பினரைத் தவிர.

<u>திருமதி சத்தியவாணிமுத்து :</u> அந்த விளக்கத்தைத்தான் நான், திரும்பத் திரும்ப கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதிகாரிகளைக் கேட்டதில் அவர்கள் கூறியது எல்லாம், " திட்டத்தில் சேராத இனம் என்றால், ஏற்கெனவேயே மாநில அரசு நடத்திக் கொண்டிருக்கிற திட்டங்களுக்கு இந்த ஆண்டும் நிதி ஒதுக்கீடு செய்வது" என்று தான் குறிப்பிடுகிறார்கள். அவர்கள் இந்த விளக்கத்தினால், என்னையும் குழப்பியிருக்கிறார்கள். மற்ற உறுப்பினர்களும் அந்த மாதிரியே தெளிவற்ற நிலையில் இருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தலைவர் அவர்களே, எனக்கும் இந்த அரசுக்கும் ஏற்பட்ட தகராறே இந்தக் குழப்பத்தினால் வந்தது தான். இந்த அமைச்சரவையிலேயே அந்தக் குழப்பம் உண்டு. இதற்காகத் தான் நான் மறுபடியும் மறுபடியும் கேட்கிறேன். பிளான், நான்-பிளான் இந்த இரண்டிற்கும் விரிவான விளக்கங்கள் தேவை. எந்த அதிகாரியைக் கேட்டாலும் அவர்கள் குழப்பிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதை அதிகாரிகள் அவ்வப்போது தனக்கேற்ற வகையில் குழப்பிக் கொண்டே இருப்பார்கள்; இப்போதும் குழப்பிக் கொண்டே இருக்கிறார்கள். ஆக, இதை நான் வற்புறுத்துவதற்குக் காரணம். "மத்திய

[திருமதி சத்தியவாணிமுத்து] [1975 மார்ச் 6

அரசு கொடுக்க வில்லை, 163 கோடி கேட்டோம்; 143 கோடிதான் ஒப்புக்கொண்டார்கள்; அதுவும் பணமாக இல்லை; திட்டங்களுக்காக ஒப்புக்கொள்ளப்பட்டது" என்று சொல்கிறார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். 163 கேட்டதில் 143-க்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

மத்திய அரசு சில திட்டங்களுக்காக ஒப்புதல் தருகிறது. அதைத்தான் நான் சொல்கிறேன். இந்திய அரசு ஒப்புதல் தந்தது 3.97 கோடி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு. அது கிட்டத்தட்ட 4 கோடி. பணம் கேட்பதைப் பற்றி நான் குறை சொல்லவில்லை. மத்திய அரசுக்கு அக்கறை இருப்பதால் தான் இதையாவது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கியிருக்கிறீர்கள். இந்த அக்கறை மத்திய அரசுக்கு இல்லை என்றால் இங்கே நீங்கள் திட்டத்தில் சேராத செலவு என்றும், திட்டத்தில் சேரும் செலவு என்றும் ஒதுக்கியிருக்க மாட்டீர்கள்.

பிற்பட்டோர் நல இலாகா தொடங்கி எத்தனை ஆண்டு ஆகிறது? தாழ்த்தப்பட்டோர் நல இலாக்கா தொடங்கி எத்தனை ஆண்டாகிறது? இந்தக் காலத்திலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்ன என்ன செய்திருக்கிறீர்கள்? பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு என்னென்ன செய்திருக்கிறீர்கள்? இந்தக் குறிப்பிலே கூட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மொத்தத்தில் 6.41 கோடி, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 5.17 கோடி என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கணக்கைப் பார்க்கும்போதே நீங்கள் தாழ்த்தப்பட்ட மக்கள்மீது எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறீர்கள் என்பதைத் தெரிந்துகொள்ளலாம். மத்திய அரசு வற்புறுத்தும்போதே இந்த வேறுபாடு காட்டப்படுகிறது. மத்திய அரசு வற்புறுத்தவில்லை என்றால் இந்தத் தொகை கூட ஒதுக்க மாட்டீர்கள் என்பது என்னுடைய வாதம். இதுதான் என்னுடைய வாதமே அல்லாமல் மத்திய அரசு பணம் கொடுக்கிறது. மாநில அரசு கொடுக்கவில்லை என்பதல்ல.

மத்திய அரசு ஒன்று இருந்து வற்புறுத்துவதால் தான் திட்டச் செலவு, திட்டம் அல்லாத செலவு என்ற வகையில் மொத்தமாக கிட்டத்தட்ட 10 கோடி ரூபாய் என்று ஒதுக்கியிருக்கிறீர்கள். இல்லை என்றால் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒன்றும் செய்யமாட்டீர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மத்திய அரசு சொல்லாமலேயே ஒரு லட்சம் வீடுகள் அரிசனங்களுக்கு இலவசமாகக் கட்டித்தரப்படுகிறது.



1975 மார்ச் 6]

திரு. கே. டி. கே. தங்கமணி: திட்டங்கள் பற்றிய விவரங்கள்
வருவதால் நானும் அதுபற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.
இந்தத் திட்டங்கள் பற்றி விவாதிக்க ஒரு "டீம்" வந்ததே. அந்த
டீம் கொடுத்த ஆலோசனைகள்—

The interesting feature of the recommendations of the team is that it has proposed outlays higher than those asked for by State Government on certain major heads of expenditure.

என்று கூறப்பட்டிருக்கிறது. இங்கு நாம் இந்தத் திட்டத்தில்
இவ்வளவு செலவழிக்க வேண்டுமென்று வருகிறது.

"agriculture and allied services"

என்ற வகைக்கு குறைந்த தொகை நிச்சயம்
செய்திருக்கிறது, மத்திய சர்க்கார் டீம் 8 கோடி அதிகமாகச் செல
வழிக்க வேண்டுமென்று சொன்னார்களே, அதனுடைய அர்த்தம்
என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வேறு.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம். தலைவரவர்களே, மத்திய
அரசு ஒன்று இருப்பதால்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சலுகை
கள் வழங்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். மத்திய அரசு என்று
ஒன்று ஜனநாயக முறையில் ஏற்படுவதற்கு முன்னால் "மெட்ராஸ்
பிரசிடென்சி" என்று இருந்த காலத்திலிருந்தே தாழ்த்தப்பட்ட
மக்களுக்கு சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அப்போதி
லிருந்தே இந்த இலாக்கா தொடர்ந்து நடந்து வந்திருக்கிறது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி சத்தியவாணிமுத்து: நல்ல வேளையாக இந்த கழக அரசு
வந்து, அதிலிருந்தே தொடர்ந்து கொடுத்து வருகிறோம் என்று
சொல்லாமல் விட்டார்கள். ஏற்கெனவே இருந்த அரசாங்கம் . .

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: நான் கழக அரசு அல்லது
மற்ற அரசு என்று சொல்லவில்லை. மத்திய அரசு இருக்கிற காரணத்
தால்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சலுகைகள் அளிப்பதாகச்
சொன்னார்கள். என்னுடைய வாதம், மத்திய அரசு என்று நமக்குத்
தெரியாத காலத்திலிருந்தே, சென்னை மாகாணம் என்று இருந்த
போதே ஜாதிப் பெயரைக் கூட இதே சட்ட மன்றத்தில் மாற்றி
"ஆதித் திராவிடர்" என்று பெயர் கொடுத்தது இதே சட்ட
மன்றம்தான். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட சலுகை
கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன என்பதுதான்.

திருமதி சத்தியவாணிமுத்து : கழக ஆட்சி வருவதற்கு முன்னல் இருந்த காங்கிரஸ்காரர்கள் காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அதிகமாகச் சலுகைகள் செய்தார்கள். ஆனல் இந்த அரசு அந்த அளவுக்குச் செய்யவில்லை. அவர் ஒரு பழைய காங்கிரஸ்காரர். அது எல்லோருக்கும் தெரியும். அதனல் மத்திய அரசு வருவதற்கு முன் பிருந்தே செய்து வருகிருர்கள் என்று சொல்கிருர்.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : தலைவரவர்களே, சமீபத்தில் கடலூரில் நடைபெற்ற தாழ்த்தப்பட்டோர் கருத்தரங்கில் கூட காந்தியடிகள் இந்த சமுதாயத்தினருக்கு ஏராளமான சலுகைகளைப் பெற்றுத் தந்திருக்கிருர்கள் ; அம்பேத்கார் அவர்களும் அதற்கு பெரு முயற்சி செய்திருக்கிருர்கள் என்று சொன்னதை அம்மையார் அவர்கள் கோபித்துக் கொண்டார்கள். அன்று அப்படிச் சொன்னவர்கள், இன்றைக்கு மாற்றிக் கொண்டிருக்கிருர்கள். இது சமயத்திற்கு சமயம் மாறும்போல் இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எல்லோரும் சலுகைகள் செய்திருக்கிருர்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகளை விட அதிகமாக இனிமேல் எந்த அரசு வருவதாக இருந்தாலும், இந்த இந்திய துணைக்கண்டத்திலே இருக்கிற யார் வந்தாலும் செய்ய முடியாது (கரவொலி). காரணம், டாக்டர் அம்பேத்கார் கொள்கையை அப்படியே செயல்படுத்தி வருவது, அவருடைய கொள்கைப்படியே வளர்ந்து வருகிறது இந்தச் சர்க்கார் என்பது அம்மைக்குத் தெரியும். ஆகவே, இதை விட பொறுப்புள்ள அரசாங்கம் இனி வராது ; தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இதைவிட எந்தச் சர்க்காரும் அதிகம் செய்ய முடியாது ; செய்யவும் மாட்டார்கள் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி சத்தியவாணிமுத்து : பாவம். அம்பேத்கார் கொள்கை என்ன, காந்தியடிகள் கொள்கை என்ன என்று தெரியாமல் இரண்டையும் குழப்பிக் கொண்டிருக்கிருர் அமைச்சர். அம்பேத்கார் வர்ணசிரம கொள்கையை ஒப்புக்கொள்ளாதவர், காந்தியடிகள் வர்ணசிரம கொள்கையை ஒப்புக் கொண்டார். அதனல் தன்னுடைய இறுதி மூச்சு உள்ள வரையில் டாக்டர் அம்பேத்கார் காந்தியடிகளை எதிர்த்தார். அமைச்சர் அவர்கள் காங்கிரஸ் கட்சியிலிருந்து, அந்தக் கட்சியில் ஈடுபாடு கொண்டிருந்ததால் காந்தியடிகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அவருக்காகப் பரிந்து பேசுகிருர். காந்தியாரும் நல்லது செய்திருக்கிருர். இல்லை என்று நான் சொல்லவில்லை. காந்தியடிகள் பற்றி நான் குறை சொல்லவில்லை. ஆனல் காந்தியடிகள்





கொள்கை வேறு, டாக்டர் அம்பேத்கார் கொள்கை வேறு. அம்பேத்காரின் கொள்கை தந்தை பெரியார் கொள்கை. தந்தை பெரியார் கொள்கைதான் பேரறிஞர் அண்ணவின் கொள்கை. பெரியார் அவர்கள் வகுத்துக் கொண்ட கொள்கை டாக்டர் அம்பேத்கார் கொள்கையே தவிர காந்தியார் கொள்கை அல்ல. இரண்டுக்கும் வேறுபாடு இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி, வேறு விளக்கங்கள் கூறுவது என்ற முறையிலே இருக்கு மானல் அது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொல்லிவிட்டால், அது நிகழ்ச்சிக் குறிப்பில் ஏருது, பத்திரிகைகளிலும் வெளியிடப்பட மாட்டாது.

Thirumathi T. N. ANANDANAYAKI : That is a very strong action. It is up to you to give your ruling but it is an established parliamentary procedure for members to raise points of order. We have that right. Like that you have the right to give a ruling whether it is point of order or not. But it cannot be said that the papers should not publish it or anything like that. It is our privilege to raise points of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பக் கூடாது என்று சொல்லவில்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி, வேறு எதையாவது உறுப்பினர் சொல்கிருர்கள். அது கூடாது என்று சொல்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். மகாத்மா காந்தியடிகள் தீண்டாமையை ஒழிப்பதற்கு செய்த சேவையைப் பற்றி குறைத்து மதிப்பிடுகிருர்களா? அல்லது அரிசனங்களுக்கு காந்தியடிகள் எதுவும் செய்யவில்லை என்று மறுக்கிருர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திருமதி சத்தியவாணிமுத்து : காந்தியார், செய்த சேவைகளை நான் குறைத்து மதிப்பிடவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்.

[1975 மார்ச் 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கிளாரிபிகேஷன் என்றால் அவர்கள் இடம் கொடுத்தால்தான் நீங்கள் கேட்க முடியும். இப்படி அடிக்கடி விவாதத்தில் குறுக்கிடுவது சரியல்ல.

திரு. ஜே. ஜேம்ஸ்: பலர் விளக்கம் கேட்டார்கள். நானும் ஒரே ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். அம்மையார் அவர்கள் நீண்டநாட்களாக காந்தியடிகளைப்பற்றி இழிவாகப் பேசியிருக்கிறார்கள். அவர்கள் அமைச்சராக இருக்கிற வரையில் மத்திய அரசைப்பற்றியும் மத்திய அமைச்சர்களைப் பற்றியும் இழிவாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இப்போது மட்டும் மத்திய அரசிடம் அவர்களுக்கு அதிக யோகம் வர காரணம் என்ன? இப்போதாவது காந்தியடிகளைப் பற்றி இழிவாகப் பேசியதை திருத்திக் கொள்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திருமதி சத்தியவாணிமுத்து: மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் இவ்வளவு வக்காலத்து வாங்குவார் என்று நான் நினைக்கவில்லை. காந்தியடிகள் பற்றி இந்த மன்றத்திலும் இப்போது நான் இழிவாகப் பேசவில்லை; வெளியேயும் பேசவில்லை. வெளியே நான் என்ன பேசினேன் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இந்த மன்றத்தில் நான் காந்தியடிகளைப் பற்றி இழிவாகப் பேசவே இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: இப்போது கூட அம்மையார் அவர்கள் சொன்னார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக காந்தியடிகள் ஒன்றும் செய்யவில்லை என்று சொன்னார்கள். அம்பேத்கார்தான் செய்தார் (குறுக்கீடுகள்) என்று சொன்னார்கள்.

திருமதி சத்தியவாணிமுத்து: நான் அப்படிச் சொல்லவில்லை நான் பேசிய பேச்சை வேண்டுமானால் எடுத்துப் பாருங்கள்.

[முற்பகல் 10-30]

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, இந்த விவாதம் போகின்ற போக்கைப் பார்த்தால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மகாத்மா காந்தியிடத்தில் இருக்கக்கூடிய அன்பு, பாசம், மரியாதை, மத்திய அரசாங்கத்தினிடமும், மாநில அரசிடமும் இருக்கக்கூடிய அன்பும் பற்றும் ஏழை மக்கள் முன்னேற வழி உண்டு என்ற நம்பிக்கையும் இழந்து விடுவார்கள் போல் தெரிகிறது. ஆகவே, இத்துடன் இந்த விவாதத்தை நிறுத்திக் கொண்டு அம்மையார் அவர்கள் மற்ற விஷயங்களுக்குச் சென்றால் நன்றாக இருக்கும்.



1975 மார்ச் 6]

திரு. கே. டி. கே. தங்கமணி: மகாத்மா காந்தியடிகள் ஹரிசனங்களுக்கு என்ன செய்தார் என்பது சரித்திரத்தில் தெரியும். மகாத்மாஜி வர்ணாசிரம தர்மத்தில் நம்பிக்கையுள்ளவர். அம்பேத்காருக்கு வர்ணாசிரம தர்மத்தில் நம்பிக்கை கிடையாது, என்கிற பாகுபாட்டைப் பார்க்கிறோம் என்று தான் சொன்னார்கள். அப்படிச் சொல்வதற்கு அம்மையார் அவர்களுக்கு உரிமை இருக்கிறது.

திரு. பெ. சீனிவாசன்: அவுட் ஆப் இக்னரன்ஸ் கேட்கிறோம். மகாத்மா காந்தியார் சாதிகளை ஒழிக்க வேண்டும் என்று சொன்னாரா? சாதிகளை வைத்துக் கொண்டு அரிசனங்கள் மட்டும் முன்னேறுவதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும் என்று சொன்னாரா? அவர் சாதிகளை ஒழிக்க வேண்டும் என்று சொல்லவில்லை என்று பிராங் மூர்ரே சொல்லியிருக்கிறார்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இன்னும் அடிப்படையே புரிந்து கொள்ளவில்லை. தன்னுடைய பிள்ளை, ராஜகோபாலாச்சாரியார் மகளை மணந்து கொள்வதற்கு அனுமதித்தார் என்கிற போது அவர் சாதிகளுக்கு மதிப்பு கொடுத்தார் என்று சொல்ல முடியுமா? (தி. பெ. சீனிவாசன்: ராஜகோபாலாச்சாரியார் பெண்ணை மணந்து கொண்டாரே தவிர சேரியில் போய் பெண்ணை எடுக்கவில்லை.)

திரு. எஸ். வடிவேல்: ராஜகோபாலாச்சாரியார் என்ன தாழ்த்தப்பட்டவரா? மகாத்மா காந்தி அரிசனங்களுக்கு ஒன்றும் செய்யவில்லை என்று நாங்கள் சொல்லவில்லை. அவர் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஹரிஜன் என்று பெயர் கொடுத்தார். பெரியார் அவர்கள் தாழ்த்தப்பட்டவர் என்றே சொன்னார். இந்தக் கொள்கை வேறுபாட்டைத்தான் அம்மையார் அவர்கள் சொல்கிறார்கள். வேறு ஒன்றும் இல்லை.

திருமதி சத்தியவாணிமுத்து: தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இருக்கிற சட்ட உரிமைகளின் அடிப்படையில் தான் இந்த அரசு அவர்களுக்கு இன்னும் பலவற்றைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்கிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை.

இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவ மக்கள் இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் கிறிஸ்தவ மதத்திற்கு மாறிவிட்ட காரணத்தினாலேயே இவர்கள் பெயர் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில்

[திருமதி சத்தியவாணிமுத்து] [1975 மார்ச் 6

இன்றைக்குச் சேர்க்கப்படவில்லை. மதம் மாறியது ஏதோ ஒரு நல்ல நோக்கத்தோடு இருக்கலாம். பொருளாதாரத்தில் பழைய நிலையிலேயே இருக்கிறார்கள். தனியாகச் சேரியிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டவர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப் படுகிற சலுகைகள் அளிக்கப்பட வேண்டும் என்று நமது மாநில அரசு மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய பிறந்த நாட்களுக்குப் புதுப்புதுத் திட்டங்களாக அறிவித்து வருகிறார்கள். அதிக நேரம் கிடைக்காத காரணத்தினால் ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ளுகிறேன். மனிதர்களுடைய மலத்தை மனிதர்களே எடுக்கின்ற கேவலமான இழிதொழிலை அறவே மாற்ற அங்கங்கே செப்டிக் டாங்க் கக்கூஸ்களைக் கட்ட வேண்டும் என்கிற ஒரு முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டு, அதற்காக ஏறத்தாழ 16 லட்சம் ரூபாய் செலவாகும் என்று சுகாதார இலாகாவும் சமூக நல இலாகாவும் எடுத்துச் சொல்லியும் கடந்த ஆண்டு கூட ரூபாய் ஒரு லட்சம், 1½ லட்சம் ஒதுக்கினார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை. ஏன் 16 லட்ச ரூபாயை ஒதுக்கி, 25 ஆயிரம் தொழிலாளர்களுக்கு மேல் ஈடுபட்டு வருகிற அந்தக் கேவலமான முறையை மாற்றியமைக்கக் கூடாது? இதைச் செய்ய வேண்டும் என்று நான் பல முறை வற்புறுத்தி இருக்கிறேன். முதல்வர் அவர்கள் தம்முடைய உரையில் யார் யாருடைய வாழ்வையோ புனரமைப்பதற்காக பாடுபடுவதாகச் சொல்கிறார்களே, இந்தத் தொழிலாளர்களுடைய வாழ்வைப் புனரமைப்பதற்கு ஏன் அக்கறை காட்டவில்லை? இவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்கிற காரணத்தினாலா? எனவே, இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பெரும் பாதுகாப்பு அளிப்பதற்காக வகுக்கப்பட்ட தீண்டாமை ஒழிப்புச் சட்டம் நடைமுறையில் நிறைவேற்றப்படவில்லை. நாகர்கோவிலில் உள்ள போலீஸ் அதிகாரி ஒருவர் இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களை சாதிப் பெயரைச் சொல்லித் திட்டியிருக்கிறார் என்கிற குற்றச்சாட்டை இந்த மன்றத்திலே கூறியிருக்கிறேன். இன்றைக்கும் இப்படிப்பட்ட காரியங்களில் அதிகாரிகள் ஈடுபடுகிறார்கள். ஆகவே, சாதி ஒழிப்புச் சட்டம் இருக்கிறது என்பதனால் பயன் இல்லை. அதைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.



1975 மார்ச் 6] [திருமதி சத்தியவாணிமுத்து]

பிறந்த நாள் விழாவில் தொழுநோய் பிச்சைக்காரர்கள் மறுவாழ்விற்காக முதலமைச்சர் நிதி வசூலித்தார்கள். அவரது வீட்டிலேயே உண்டியல் வைத்து பணம் திரட்டினார்கள். கட்சிக்காரர்கள் வசூலித்தார்கள். அப்போது நானும் இருந்தேன். சரியான கணக்கு எனக்கே தெரியாது. எந்தக் கணக்காக இருந்தாலும் ஒழுங்கான முறையில் கணக்கு வைத்து வசூலாகிற நிதியை அந்தத் திட்டத்திற்குச் செலவிட வேண்டும். ஏழை எளிய ஜனங்களின் பெயரைச் சொல்லி வசூலிக்கிற பணத்திற்கு ஒழுங்காகக் கணக்கு காட்ட வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படி வசூலிக்கப்பட்ட பணம் நிதிநிலை அறிக்கையில் கொடுக்கப்படுகிறது. நிதி இலாகா மூலமாகத்தான் நிர்வகிக்கப்படுகிறது.

திருமதி சத்தியவாணிமுத்து: எனக்கும் அது தெரியும். தாங்களே கூறியிருக்கிறீர்கள். மத்திய சர்க்கார் சொல்வது வெறும் ஏட்டளவில் இருக்கிறது; செயலில் இருக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள். அதையே தான் நானும் உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் சொல்வது எல்லாம் வெறும் ஏட்டளவில் இல்லாமல் உண்மையான பணமாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அனுப்பப்படுகிற பணம் செக்கானாலும் பணமானாலும் நிதி இலாகாவினர் பெற்றுக் கொண்டு, அதற்கான இரசீதைக் கொடுத்து வருகிறார்கள். அதைத்தான் நான் சொன்னேன். இவர் என்னமோ ஏடு, நாடு என்று சொன்னால் எனக்கு ஒன்றும் புரியவில்லை.

திருமதி சத்தியவாணிமுத்து: அமைச்சராக அப்போது நான் இருந்தேன். எனக்கே தகவல் கொடுக்கப்படவில்லை. அதற்காகச் சொல்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நல்ல காலம் அந்தப் பொறுப்பு உங்களிடம் கொடுக்கப்படவில்லை.

திருமதி சத்தியவாணிமுத்து: அதற்காக இப்போது இருக்கிற அமைச்சர் கையில் ஒப்படைத்து இருப்பதற்கு நன்றி.

எனவே, இப்படிப்பட்ட காரியங்களில் கொள்கைகளை மறந்துவிட்டார்கள். தீண்டாமை ஒழிக்கப்படவில்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்படுகிற பணம் அந்த மக்களுக்கே ஒதுக்கப்பட

வில்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கு உள்ள சட்டப் பாதுகாப்பையும் இந்த அரசு மீறுகிறது. இந்தத் திட்டங்கள் ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். இவர்கள் அண்ணாவின் பெயரைத் தவறான முறையில் பயன்படுத்தி, தவறான செயல்களுக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்று கூறிக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

திரு. எஸ். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த மன்றத்தில் வைத்துள்ள நிதி நிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய மன்ற உறுப்பினர் சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் இந்த ஆட்சி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மைகள் செய்யவில்லை என்றும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு—பின்தங்கிய மக்களுக்கு இந்த ஆட்சி சலுகைகளை அளித்து வருகிறது என்றும் கூறினார்கள். பின்தங்கிய மக்களை இந்த அரசு முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்கிறது. அது தவறு என்கிற அவரது உள்ளக்கிடக்கையை அவர்கள் வெளியிட்டதற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திருமதி சத்தியவாணிமுத்து: நான் பின்தங்கிய மக்களுக்கு உதவி செய்வதை உள்ளத்தால் விரும்பவில்லை என்ற அடிப்படையில் பேசுகிறார். அது மிகவும் தவறு. அமைச்சர் அவர்கள் உரையில் இருந்து கொடுத்து இருக்கிற புள்ளிவிவரங்களை வைத்துச் சொல்கிறேன். இருக்கிற வேறுபாட்டை நீங்களே எடுத்துப் பாருங்கள்.

திரு. எஸ். ஆறுமுகம்: உங்களுக்குத் தமிழக முதல்வர் மீது ஏற்பட்ட கோபம், பிற்பட்ட சமுதாய மக்களுக்கும் திட்டமிட்டுக் காரியம் ஆற்றுகிறாரே என்பது தான். இது தான் நீங்கள் இந்தக் கட்சியிலிருந்து வெளியே சென்றதற்குக் காரணம் என்பதை நான் அறிவேன். மறுத்துப் பேசி பயன் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய முதலமைச்சரவர்கள், தன்னுடைய வீட்டிலே கலப்புத் திருமணம் செய்தார். இதைக் கூட, மத்திய அரசு சொல்லித்தான் செய்தாரா என்பதை அவர்கள் விளக்கவேண்டும். அதே போல், தாழ்த்தப்பட்டவர் அறங்காவலராக நியமிக்க வேண்டுமென்று தமிழக அரசு திட்டம் தீட்டி நடைமுறைப்படுத்தி வருவது மத்திய அரசு சொல்லித்தான் இந்த ஆட்சி செய்கிறதா என்பதைத் தெரிவிக்க வேண்டும். அதேபோல், அரிசனங்கள் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட வேண்டும் மென்பதற்கான சட்டத்தைத் தீட்டி, இன்றைக்கு மத்திய அரசு அனுமதிக்காகக் காத்துக் கொண்டிருக்கிறதே அதையும் மத்திய அரசாங்கம் ஏன் செய்யவில்லை, என்ன பதில் சொல்கிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



ஒருவேளை மத்திய அரசாங்கக் கட்டுப்பாட்டில் மாநில அரசு இருக்கக்கூடிய காரணத்தாலே, தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்கிறார்கள், செய்யப்படுகிறது என்று சொல்கிறார்கள். அப்படி அவர்களுடைய வாதத்தை ஒத்துக் கொண்டால், அவர்களை இந்த மந்திரி சபையிலே அனுமதித்தது கூட, மத்திய அரசாங்கம் சொல்லித்தானா? அவர்களது பேச்சைக் கேட்டுத்தான், அமைச்சரவையிலே சேர்த்துக் கொண்டாரா கலைஞர்? அல்லது மத்திய அரசாங்க ஆலோசனை பேரிலேதான் அவரை மந்திரி சபையிலிருந்து நீக்கினாரா என்பதற்கெல்லாம் அம்மையார் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். ஆகவே, ஒரு குழப்பமான நிலையிலிருந்து கொண்டு ஒரு கட்சியை ஆரம்பித்து விட்டு, எங்கே இருக்கிறோம் என்பதே தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிற நிலையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகப் பாடுபட்டு வருகிற . . .

திருமதி சத்தியவாணிமுத்து: புள்ளி விவரங்களை வைத்து, கொள்கையை வைத்து, திட்டங்களை வைத்து, சரியான பாராளுமன்ற முறைப்படி என் கருத்துக்களை இங்கே தெரிவித்திருக்கிறேன். காழ்ப்புணர்ச்சி எனக்கிருப்பதைப் போல், அவருக்கும் இருக்கலாம். அவர் பேசுவதைப் போல் நானும் பேசலாம். அதை மேடையிலே வைத்துக்கொள்ள வேண்டும். இங்கே பேசக் கூடாது. யாருக்குத் தடுமாற்றம் இருக்கிறது என்பது 1976-லே தெரியப் போகிறது இப்பொழுது என்ன இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஏதோ புள்ளி விவரத்தை வைத்து வாதாடினேன், வெற்றி பெற்றேன் என்று சொன்னார்கள். சொன்ன புள்ளி விவரம் அனைத்தும் தவறானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆறுமுகம்: இந்த நிதிநிலை அறிக்கையில், இன்றைக்கும் மத்திய அரசாங்கம் அதிகாரங்களை அதிகமாகக் குவித்து வைத்திருக்கிற காரணத்தாலே, மாநில அரசு எந்த அளவுக்குத் தொழில் துறை

காக நிலத்தைக் கொடுத்துவிட்டு வெளியேறிய மக்களுக்கு, தகுந்த அளவு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறது. கொள்கை அளவில் அதனை ஒத்துக்கொள்கிறோம் என்று திட்ட அதிகாரிகளும், மத்திய அரசாங்கமும் கூறிவிட்டு, அந்தப் பகுதியிலே யுள்ளவர்கள் வேலைக்கு அமர்த்தப்படாமல், வெளியிலே இருக்கிறவர்கள், வேறு மாநிலங்களிலே இருக்கிறவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். அந்தப் பகுதி மக்கள் பஞ்சையாய், பராரியாய், இன்றைக்குக் குடிசையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பெரிய திட்டம் என்று சொல்லிவிட்டு, தமிழ்நாட்டில் ஆரம்பித்துவிட்டு, தமிழர்களுக்கு வேலையில்லை, வேறு மாநிலத்திலேயுள்ளவர்களுக்குத் தான் வேலையென்ற அளவுக்குத் தஸ்தூர் கம்பெனியும், இரும்பாலை இலாகாவும் இன்றைக்கு வேறு மாநில ஆட்களை, பணியாட்களை நியமித்துக் கொண்டிருக்கின்றன என்றால், அதற்கு மாநில அரசு ஒத்துக்கொள்ள வேண்டுமா? அதை மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

ஆகவே, இன்றைக்கு இந்தப் பகுதியிலே வெளியேற்றப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு தரவேண்டுமென்பதற்காக, ஒரு குடும்பத்திற்கு 50 சென்ட் நிலம், வீடு கட்டிக் கொள்ளத் தரவேண்டுமென்று கேட்டோம். அதற்கும், முடியாது என்று சொல்லி, மத்திய அரசு மறுத்துவிட்டது. நமது முதலமைச்சரவர்கள் ஒரு குடும்பத்திற்கு 50 சென்ட் நிலம் என்று நம்முடைய மாநில நிதியிலிருந்து, நிலத்தை அர்ஜிதம் செய்து அவர்களுக்குக் குடியிருப்பு வசதிகூட செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, மாநில அரசு மக்களுடைய கஷ்டத்திலே, முன்னேற்றத்திலே அக்கறை கொண்ட அரசாகவும், மத்திய அரசு இன்றைக்கு நாட்டினுடைய பொருளாதாரத்தை தன்னுடைய கையிலே வைத்துக்கொண்டு சீரான பொருளாதாரத்தை உருவாக்க முடியாத சூழ்நிலையிலேயும் இருந்து கொண்டிருக்கிறது.

1975–76-ஆம் ஆண்டில் திட்டச் செலவிற்காக சேலம் இரும்பாலைத் திட்டத்திற்காக 20 கோடி ரூபாய் கேட்டார்கள். ஆனால் அதற்கு மத்திய அரசாங்கம் 3 கோடி ரூபாய்தான் தந்திருக்கிறார்கள். 3 கோடி ரூபாய் வைத்துக்கொண்டு அங்கே அமர்த்தப்பட்டிருக்கிற பணியாளர்களுக்குச் சம்பளம்தான் தரமுடியுமே தவிர, திட்டப் பணிகளுக்கு என்று எந்தவிதப் பணமும் செலவிடமுடியாத சூழ்நிலை இருக்கிறது. மத்திய அரசாங்கம் சேலம் இரும்பாலைத் திட்டத்தை எங்கோ கொண்டுபோய் போட்டுவிட்டார்கள். ஆகவே, மாநில அரசாங்கம் அந்தத் திட்டம் உண்டா இல்லையா என்பதையும்



1980-ஆம் ஆண்டிலே உற்பத்தி தொடங்கும் என்று சொன்னார்களே, உற்பத்தி தொடங்குமா இல்லையா என்பதையும் அவர்களிடம் நாம் கேட்போம். அதற்கு அவர்கள் பதில் சொல்லாவிட்டால் அந்தத் திட்டத்தை நாமே ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்று அறிவிப்புச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு தமிழ் நாட்டிலே உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, ஏழை எளிய மக்களுக்காக ஒரு சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்குவதற்காக ஒரு க்ஷேமநல சர்க்கார் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலே அமைந்திருக்கிறது, அதைத் தமிழ் நாட்டு மக்கள் பயன்படுத்திக் கொள்வார்கள், பயன்படுத்திக் கொள்ளாமல் விடமாட்டோம் என்று கூறி இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று ஆதரித்து முடிக்கிறேன். வணக்கம்.

<u>திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தப் பேரவையில் சமர்ப்பித்துள்ள நிதிநிலை அறிக்கையைப் பற்றி என்னுடையவும் என்னுடைய கட்சியினுடையவும் கருத்துக்களை சிறிது நேரம் சொல்ல விரும்புகிறேன்.

நான் சொல்லத் தொடங்குவதற்கு முன்பு நான் தலைவரின் சார்பில் கேட்டுக்கொள்வது, இங்கே நடந்த விவாதத்தில் நான் சிற்சில இடங்களைத் தொடவேண்டி வரும், நான் தொடாமலேயே இருக்க வேண்டுமென்றுதான் விரும்புவது என்னுடைய வழக்கம். என்றாலும் சில இடங்களில் தொடவேண்டிய சந்தர்ப்பத்தை சிலர் பேச்சு என்னைத் தூண்டிவிட்டிருக்கிறது என்பதை அவர்கள் உணர வேண்டும். குறிப்பாக, என் அன்பிற்குரிய சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் நன்றாக உணர வேண்டும். என்னுடைய பேச்சில் அதை நான் தொடத்தான் போகிறேன். இங்கே பேசும்போது எல்லாம் நான் இங்கே அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன். உனக்கு அண்ணாவைப் பற்றி என்ன தெரியும்? உனக்கு அண்ணாவைப் பற்றி என்ன தெரியும் என்று கேட்கும் அன்பர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். எனக்கு நாட்டுப் பழமொழிதான் ஞாபகத்திற்கு வருகிறது. "ஏண்டி பாட்டி மஞ்சள் குளிக்கிறே" என்று கேட்டதற்கு "பழைய ஞாபகண்டா பேராண்டி" என்று சொன்னாளாம். அண்ணாவை இந்தப் பேரவையில் உள்ளவர்கள் அறிவதற்கு முன்பு நான் அறிந்தவன் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். நான் அறிவேன். நீங்கள் யாராவது சொல்லுங்கள் . . .

[திரு. எஸ். ஆறுமுகம்] [1975 மார்ச் 6

யில் அல்லது முன்னேற்றமான திட்டங்களைத் தீட்டுவதில் பின்தங்கி யிருக்கிறது என்பதை, கொள்கை வடிவிலே தந்திருக்கிறார்கள். நிதி நிலை அறிக்கை என்பது ஆளுங் கட்சியினுடைய கொள்கை விளக்கம் தான். அதைத்தான் நம்முடைய முதல்வர் அவர்கள் இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். உதாரணத்திற்காக ஒன்றை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சேலத்திலே இரும்பாலை ஏற்படுத்துவதற்காக 1938-லிருந்து நாமும் கேட்டு, மத்திய அரசும் பரிசீலனை செய்து, அதற்காக 1962-லே தஸ்தூர் கம்பெனியிடத்திலே இந்த இரும்பாலை அமைப் பதற்கானத் திட்டத்தைத் தயாரிக்கச் சொன்னார்கள். திட்ட அறிக்கையையும் தயார் செய்தார்கள், தஸ்தூர் கம்பெனியினர் மத்திய அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க, மாநில அரசு நில ஆர்ஜிதம் செய்யவேண்டுமென்று மாநில அரசைக் கேட்டுக் கொண்டார்கள். அந்த ஆலோசனையையும் கேட்டுக்கொண்டு 1962-லிருந்து நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 1964-ல் ஏறத்தாழ 24,000 ஏக்கர் நிலங்களுக்கு 4(1) நோட்டிஃபி கேஷன் செய்தார்கள், இரும்பாலைத் திட்டத்திற்குத் தேவையாக இருக்கிறதென்று. அந்த 24,000 ஏக்கர் நிலங்களும் வீரபாண்டி தொகுதியிலே உள்ளடங்கிய பகுதியாகும். ஆனால், நோட்டிஃபி கேஷன் செய்து, அந்தத் திட்டம் உருவாவதற்கு 1967-ல் நாம்—நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் நாட்டினுடைய முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு கூட அந்தத் திட்டம் இங்கே நமக்குக் கிடைக்கவில்லை. அதற்குப் பின்னாலே நம் மாநிலத்திலே ஒரு ஆட்சி வந்தாலும் கூட, அதை நிறைவேற்று வதற்கான அதிகாரம் நம்மிடத்திலே இல்லாத காரணத்தாலே, எழுச்சி நாளைக் கொண்டாடி, அந்த எழுச்சி நாள்மூலம், இன்றைக்குச் சேலம் இரும்பாலையை நாம் பெற்றோம். இரும்பாலையைப் பெற்றோமே தவிர, இன்றைக்குள்ள சூழ்நிலையை நாம் பார்க்க வேண்டும். 1970-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14-ஆம் நாள் நமது பிரதமரை அழைத்து கால்கோள் செய்தார்கள். திட்ட விழா நடத்தினார்கள். ஆனால், அன்று திட்ட விழாவை அவசரமாக நடத்தக்கூடிய காலத்தில், உடனடியாக 50 ஏக்கர் நிலம் தேவை என்று கேட்டார்கள். அந்தப் பகுதி மக்கள் பணம் கூட வாங்காமல் ஒரு பெரிய திட்டம் வர வேண்டும், மாநில அரசாங்கம் அல்லது திராவிட முன்னேற்றக் கழகம் போராடிப் பெற்ற பெரிய திட்டமாகும் இது. ஆகவே, தாராளமாக நிலத்தைத் தரலாம் என்று நாம், 50 ஏக்கர் நிலத்தை, உடனடியாகப் பணம் கூட



1975 மார்ச் 6] [திரு. எஸ். ஆறுமுகம்]

வாங்காமல் இரண்டே நாளில் அங்கே குடியிருந்தவர்களைக் காலி செய்து, ஒப்படைத்தோம். அந்தப் பகுதியிலுள்ள விவசாய நிலங் களுக்கு இன்றைக்குள்ள மதிப்பு நஞ்சை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 10,000, புஞ்சை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 5,000 அளவுக்கு விற்கப்படுகிறது. ஆனால், நாங்கள் அந்த நிலங்களைக் குறைந்த விலைக்குத் தந்தோம். புஞ்சையை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,500 என்றும், நஞ்சையை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,750 என்றும் மதிப்பீடு செய்து சர்க்கார் தர வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கும் ஒத்துக் கொண்டு நிலத்தை ஒப்படைத் தோம்.

இந்தத் திட்டத்திற்காக மாநில அரசாங்கம் 4,000 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டார்கள். மாநில அரசாங்கம் எடுக்கிற நடவடிக்கையை மிக வேகமாக நடை முறைப்படுத்த வேண்டும், நம்முடைய திட்டம் வேகமாக நடைபெற வேண்டுமென்பதற்காக அதிகாரிகள் பம்பரம் போல் சுழன்று பணி யாற்றி 4,000 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதப்படுத்திக் கொடுத்தோம். அந்தப் பகுதியிலே குடியிருந்த 1,000 குடும்பங்களை வெளியேற்றி விட்டோம். இன்றைக்குத் திட்டப் பணிகள் நடக்கின்றதா என்றால் இல்லை. அங்கு திட்டமே துவங்கப்படாத சூழ்நிலையிருக்கிறது. இன்றைக்கு 4,000 ஏக்கர் நிலப்பரப்பை எடுத்துக்கொண்டு, தஸ்தூர் கம்பெனியிடத்திலே டெல்லி சர்க்கார் ஒப்படைத்திருக்கிறது. இந்தத் திட்டம் வேகமாகத் துவங்கப்பட வேண்டும் என்றால், நாட்டிற்குப் பயன்பட வேண்டுமென்றால், மாநில அரசாங்கத்திற்கு அதிலே பங்கு வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சரவர்களும் கேட்டார்கள். ஆனால், மாநில அரசுக்குப் பங்கு தரமுடியாது, மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டிலேதான் இருக்கும் என்று மத்திய அரசு சொல்லியது.

மாநில அரசுக்குப் பங்கு இல்லையென்று சொல்லிய மத்திய அரசு, திட்டத்தை ஒழுங்காக அமுல் நடத்தினார்களா என்றால், இல்லை. அதற்கு மாறாக என்ன நடக்கிறதென்றால், இன்றைக்கு அந்தப் பகுதி யிலே, தஸ்தூர் கம்பெனியிலே அந்தத் திட்டத்தை நடத்துவதற்கு திட்டப் பணிகளை ஒப்படைத்திருக்கிறார்கள். இரும்பாலை இலாகாவும் தனியாகச் செயல்படுகிறது. 4,000 ஏக்கர் நிலத்தை ஒப்படைத்து, வெளியேற்றப்பட்ட ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த அந்த மக்களுக்கு அந்தத் திட்டத்தில் வேலை வாய்ப்பு வேண்டுமென்று நானும் கேட்டிருக்கிறேன், நம்முடைய மாநில அரசாங்கமும். எந்த அதிகாரிகளை எடுத்தாலும், அந்தப் பகுதியிலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு, திட்டத்திற்கு நிலம் கொடுத்த மக்களுக்கு, திட்டத்திற்

திரு. கே. டி. கே. தங்கமணி : இது ஏதோ வெளியே பேசுவதற்கு நன்றாக இருக்கலாம். சட்ட மன்றத்திலே அதுவும் உலகத்திலே உள்ள பெண்களுக்கு மரியாதை கொடுக்கக்கூடிய நேரத்திலே பெண்களைப்பற்றிக் கொச்சைப்படுத்தி விஷயங்களைச் சொல்ல வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மஞ்சள் குளிப்பது கொச்சைப்படுத்துகிற வார்த்தை அல்ல.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : ஏதாவது அவர் சொல்ல வேண்டும் அதற்காகச் சொல்கிறார், மஞ்சள் என்ற வார்த்தை மங்கள மான வார்த்தை அதைச் சொன்னேன். மஞ்சளைப் பூசுவது இந்த நாட்டிலே மங்களகரமான காரியம். அதைக்கூடச் சொல்லக் கூடாதா? ஏதாவது சொல்லவேண்டுமென்பதற்காகச் சொல்கிறார். சொல்லட்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஏதாவது சொல்வதற்காகச் சொல்வதாகச் சொல்கிறார், ஏதாவது சொல்வதற்காகவா நாங்கள் இங்கே உட்கார்ந்திருக்கிறோம். அப்படிச் சொன்னால் நீங்கள் தடுத்து நிறுத்துவீர்கள். ஆகவே அவர்கள் அம்மாதிரியான பதப் பிரயோகங்களை உபயோகப்படுத்தக் கூடாது என்பதைத் தாழ்மை யுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : உபயோகப்படுத்தும்படி அவர் தூண்டி விடக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அவரை நான் அறிவேன் என்று சொன்னேன். சிலர் சொன்னார்கள் வயதால் என்று, வயதால் மட்டுமல்ல பொதுவாழ்க்கையிலும் அறிவேன். இன்னும் பச்சையாகக் கூடச் சொல்லலாம். என்னை மன்னிக்க வேண்டும். பச்சையப்பன் கல்லூரியில் மாணவனாக இருந்தார். அதற்கு முன்பிருந்தே எனக்கு அவருடன் தொடர்பு இருந்தது. அவரை அப்போதே நான் அறிவேன். அவர் உள்ளமும் எனக்குத் தெரியும். அவர் என்ன மனப்போக்கு படைத்தவர் என்பதும் எனக்குத் தெரியும், எப்படிப்பட்ட எண்ணம் உடையவர், எப்படிப்பட்ட உணர்ச்சியுடையவர் என்பது எல்லாம் எனக்குத் தெரியும், நான் நன்றாக அறிவேன். இங்கே அவரைப்பற்றிப் பேசும் போது சிலருக்கு சலிப்பு வந்தது. நான் பால்கனியிலே உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன். என்ன எதற்கெடுத்தாலும் அண்ணா என்று சொல்கிறார்களே என்று சொல்கிறார்கள். சில விஷயங்களைப்



பேசுகிறபோது எல்லாம் அந்தப் பெருமகனாரின் ஞாபகம் வருகிறது. அப்போது பெயரைச் சொல்லத்தான் வேண்டும். இந்த மாநில அரசு ஒன்றும் செய்யவில்லை என்று சொன்ன சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் கூட அண்ணா பெயரை எடுக்கத்தான் வேண்டி யிருக்கிறது . . .

திருமதி சத்தியவாணிமுத்து : மாண்புமிகு முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் இந்த சர்க்கார் செய்யவில்லை என்று சொன்னதாகக் கூறு கிறார். அவர் ஆளுங்கட்சிக்கு ஜால்ரா தட்டட்டும், நான் வக்காலத்து வாங்கவில்லை, அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அவர் அண்ணா வோடு நெருங்கிப் பழகியவர் என்று சொல்கிறார், சொல்லட்டும். நான் பேசியதைப் பொறுமையோடு கேட்டிருந்தால் இப்படிச் சொல்லியிருக்க மாட்டார். மத்திய அரசாங்கம் சட்டப்படி செய்ய வேண்டுமென்று சொன்னதை இந்த அரசு செய்யாமல் தவறுகிறது என்பதைச் சொன்னேன், அன்றும் சொன்னேன், இப்போதும் சொல் கிறேன், எப்போதும் கூறுவேன், இந்த அரசு செய்ய வேண்டிய அளவிற்கு செய்யவில்லை. மத்திய அரசு குறித்தபடி செய்யவில்லை. ஒதுக்கீடு செய்யவில்லை, அது இல்லை என்று அவர் சொல்லட்டும்.

திரு எஸ். ஆறுமுகம் : ஜால்ரா என்று சொல்கிறார்களே, அது முறையா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர்கள் கட்சித் தலைவர் என்ன சொல்கிறார் என்று கேட்டுக் கொண்டு முடிவு செய்யலாம்,

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : அந்த அம்மையார் சொன்னதிலே ஒன்றும் தப்பில்லை. அவர் சொல்லும் தாழ்த்தப்பட்ட இனம் கைகட்டிக் கொண்டு தெருவிலே நுழைய முடியாதபடி இருந்த நேரத்திலே அதற்கு விமோசனம் செய்கிற முறையிலே அந்தத் தோழர்களுக்கு அப்போது கைகொடுத்தேனே அதை ஜால்ரா என்று சொல்கிறார்கள், வரவேற்கிறேன். அவர்கள் குளத்திலே குளிக்கக் கூடாது என்று சொன்ன நேரத்திலே குளத்திலே அவர்களைக் குளிக்கச் செய்து அவர்களுக்கு உற்சாகத்தை உண்டாக்கினேனே அதை ஜால்ரா என்று சொன்னால் அதை நான் வரவேற்கிறேன். ஜால்ரா என்பது சாதாரணமானது என்று நினைத்து கே.டி.கே. அவர்கள் பதில் சொல்லாமல் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவர் பதில் சொல்லவில்லை. என்னவென்றால் அவர் பக்கம் சேர்ந்திருக்கிறார் அவர்.

[1975 மார்ச் 6

டாக்டர் எச். வி. ஹாண்டே : மதிப்பிற்குரிய திருப்பூர் மொய்தீன் அவர்கள், நான் தேர்தலுக்கு நின்றால் நான் நிச்சயமாக வெற்றி பெற மாட்டேன் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் நிச்சயமாகச் சொல்கிறேன், நான் தேர்தலிலே வெற்றிபெற்று பிறகு அவர்களிடத்திலே ஆசீர்வாதம் வாங்கத்தான் போகிறேன், அதில் சந்தேகமில்லை. ஏனென்றால், அவர்களிடத்தில் அன்பும் மரியாதையும் எனக்கு இருக்கிறது.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : அது உலக அதிசயத்தில் ஒன்று.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நீங்கள் ஆசீர்வாதம் கொடுப்பது உலக அதிசயத்தில் ஒன்றாக இருக்கும் என்று நினைக்கிறீர்களா? உங்களுடைய மனதைக் கவர்ந்து ஆசீர்வாதம் வாங்குவேன். எனவே, அது உலக அதிசயத்தில் ஒன்றாக இருக்காது.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : என்னுடைய ஆசீர்வாதத்தைச் சொல்லவில்லை. நீங்கள் தேர்ந்தெடுக்கப்படுவதுதான் அதிசயம் என்று சொல்கிறேன். உங்களுடைய எண்ணம் என்னவென்றால், அதை நான் புரிந்து கொள்கிறேன். அடுத்த தேர்தலில் வெற்றி பெற்று வந்து மந்திரிசபை அமைத்து, தானும் அதிலே உட்கார்ந்து, எதிர்க் கட்சியிலே உட்கார்ந்திருப்பவர்களைப் பார்த்து "என்ன" என்று கேட்கும் நிலை வராது என்று நினைக்கிறேன். நிச்சயமாகத் தமிழ் நாட்டில் அந்த நிலை வராது. ஏனென்றால் சூழ்நிலை மாறுவதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். மாறத்தான் செய்கிறது. மாற்றம் என்பது தெளிவாகப் புரிகிறது. சந்தர்ப்ப வாதம் நிற்காது. கொஞ்ச நாட்களுக்கு முன்பு இதே இடத்திலே உட்கார்ந்து கொண்டு பெரு மதிப்பிற்குரிய ஹாண்டே அவர்கள் இராஜாஜியின் ஆசீர்வாதத்தைப் பெற்று வந்திருக்கிறேன் என்று சொன்னார்கள். அந்தப் பெருமகன் இப்பொழுது சொல்கிறார், எளியவனாகிய என்னுடைய ஆசீர்வாதத்தைப் பெறப் போகிறேன் என்று. நல்ல வேளை, வயது கடந்தவன் என்ற ஒரேயொரு காரணத்திற்காக என்னுடைய ஆசீர்வாதத்தைப் பெறுகிறேன் என்று சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். எனவே, ஒரு மூலையில் நின்று ஆசீர்வாதம் பெற்று வருவேன் என்று சொல்லாமல் இருந்தார்களே . . .



1975 மார்ச் 6]

டாக்டர் எச். வி. ஹாண்டே : அவர்கள் பெரியவர், வயதில் மூத்தவர். அவர்கள்தான் இந்த சப்ஜெக்டை எடுத்தார்கள். அதற்காக ஏன் வருத்தப்பட வேண்டும்? எளியவர் என்று அல்ல, வயதிலே என்னைவிட அதிகமானவர்தானே?

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : வயது அதிகம் என்பது ஒன்றுதான். அறிவு இருக்கிறது உங்களுக்கு. நான் அதைத்தான் கூர்ந்து பார்க்கிறேன். படிப்பு இல்லாதவன் பிறரிடமிருந்து தெரிந்து கொள்வதிலே அக்கறை உள்ளவனாக இருப்பான். ஆனால் படித்தவர்களுக்கு அலட்சியம் அதிகம். எல்லாமே தங்களுக்குத் தெரிந்தது போல் இருக்கும். இந்த பட்ஜெட்தான் கடைசி பட்ஜெட் என்று நீங்கள் சொல்லவில்லையா? தீர்க்கமாக யோசித்தா சொன்னீர்கள், அல்லது முடிவு தெரிந்தா சொன்னீர்கள்? ஏதோ படித்துப் பார்த்தோம், அடித்துப் பார்க்கலாம் என்று சொன்னீர்கள். ஆனால் நான் அப்படிச் சொல்லவில்லை. உங்களுடைய கணிப்பை வைத்துக்கொண்டு பிறகு நான் சிந்திக்க ஆரம்பித்தேன், என்னுடைய அரசியல் அனுபவத்தைக் கொண்டு. எத்தனை பேர் இப்படி எண்ணினார்கள்? நான் அவர்களுடைய பெயர்களைச் சொல்ல விரும்பவில்லை. அவர்கள் எப்படியெல்லாம் தோற்றார்கள் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியும். அந்தப் படியில் நீங்களும் செல்லக்கூடாது. தேர்தல் வரும்பொழுது பார்த்துக் கொள்ளலாம், எப்படி நடக்கிறது என்று. அம்மையார் அவர்களும் சொன்னார்கள், 1966-இல் பார்த்துக் கொள்ளலாம் என்று (குறுக்கீடு). மன்னிக்கவும். 1976-இல் பார்த்துக் கொள்ளலாம் என்று. திருத்திக் கொடுத்ததற்காக நன்றி. பார்க்கலாமே, என்ன தான் நடக்கப் போகிறது என்று.

மத்திய அரசாங்கம்தான் இந்தத் தமிழ் நாட்டினுடைய தாழ்த்தப்பட்டவர்களுடைய கைகட்டிய கரத்தை, வாய் மூடியிருந்த கரத்தை, பாதையிலே நடக்க முடியாமல் கைகட்டியிருந்த தன்மையை, இப்படியெல்லாம் இருந்த கரத்தை மத்திய அரசாங்கம்தான் அவிழ்த்துவிட்டதா? அதுதான் அவர்களை இன்றைக்கு உல்லாசமாக நடக்க வைத்திருக்கிறதா? அல்லது மாகாண சர்க்காரா என்பதை போர்க்களத்திலே சொல்வோம். கொஞ்சமாவது சிந்திக்க வேண்டாமா?

மத்திய அரசாங்கத்தின் துணையிருந்தால்தான் அரிசனங்கள் காப்பாற்றப் படுவார்களா? இந்த அரிசனங்கள் மத்திய அரசாங்கத்தின் துணைமீதுதான் காப்பாற்றப்பட்டார்களா? நான்காவது

ஜாதி என்று கருதப்பட்டு, நான்காவது ஜாதியின் பெயரால் அரசியல் நிர்மாணிக்கப்பட்டு ஆட்சி நடத்தப்பட்டது இந்த ஒரு ஆட்சிதான். உங்களில் பலரின் உயர்விற்குக் காரணமாக அமைந்திருந்தது. பல நிலைகளுக்குக் காரணமாக அமைந்திருந்தது. நன்றி உள்ளத்தோடு சொல்ல வேண்டுமானால் இவர்களை வேண்டுமானால் நீங்கள் குறை சொல்லுங்கள், ஆனால் இந்தப் பாரம்பர்யத்திற்கு, தாழ்த்தப்பட்ட சமூகம், அதாவது ஒதுக்கப்பட்ட சமூகம் என்றென்றைக்கும் நன்றி காட்டக் கடமைப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் மனதில் கொள்ளுங்கள்.

இன்னொன்று, இந்த மாகாண சுயாட்சி என்ற பேச்சு. அதைப் பற்றிக் கூறும்பொழுது கூட, நம்முடைய அன்புச் சகோதரர் மாரிமுத்து அவர்கள்,—காங்கிரஸ் கட்சியின் தலைவர் அவர்கள்—சொன்னார்கள். மாநில சுயாட்சி என்ன, சர்வரோக நிவாரணியா என்று கேட்டார்கள். அதுதான் பத்திரிகையிலே கொட்டையெழுத்திலே வந்திருக்கிறது, சர்வரோக நிவாரணியா என்று. எந்தத் துறையிலேயும் ஒரே மருந்து சர்வரோக நிவாரணியாக ஆவது இல்லை. அப்படியொரு மருந்து இல்லை. எனக்கு டயாபிடீஸ் இருக்கிறது, ப்ளட் பிரஷ்ஷர் இருக்கிறது, ஹார்ட் அட்டாக் இருக்கிறது, இன்னும் பல கோளாறுகள் இருக்கின்றன. இவைகளுக்காக 9 மாத்திரைகள் போட்டுக் கொண்டிருக்கிறேன், தனித்தனியாகத்தான் போட்டுக் கொண்டிருக்கிறேன். ஹாண்டேயைக் கேளுங்கள், ஒரு மாத்திரையிலே தீருமா என்று. சர்வரோக நிவாரணி என்பது என்ன? தூக்க மாத்திரை வேண்டுமானால் இரண்டு மாத்திரை போட்டுக் கொள்ளலாம், அதுகூட சர்வரோக நிவாரணி என்று சொல்ல முடியாது, இந்த லோகத்திலிருந்து போகிற நிவாரணி. இப்படி எதையாவது சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய எண்ண உணர்ச்சிகள் மாகாணத்திற்கு உரிமை வேண்டுமென்பதுதான் அது. இந்த உரிமையைக் கேட்பது எங்கெங்கேயோ கொண்டுபோய் விட்டுவிடும், இது ஏதோ ஒரு கோணத்தில் கொண்டுபோய் விட்டுவிடும், இது எதையோ செய்து விடும், இது பிரிவினைக்கு வித்திட்டுவிடும் என்றெல்லாம் சொல்வது பொருந்தாது. நாம் கேட்பது, நாங்கள் செய்வதற்கு உரிமை கொடுங்கள், அதுதான் மாநில சுயாட்சி என்று நினைக்கிறேன். நான் அறிந்த வரையில். நாங்கள் செய்யும் சில காரியங்களில் நீங்கள் தலையிடாதீர்கள், எங்களுக்கு உரிமை கொடுங்கள்.





இந்த செகரடேரியட் உள்ள பகுதியில் புல்லை வெட்ட வேண்டு மென்றாலும், செடியை வெட்ட வேண்டுமென்றாலும் மத்திய சர்க்காருடைய அனுமதியை வாங்க வேண்டுமென்றால் அது மானங் கெட்ட நிலைமை அல்லவா?

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : ஒரு தவறான கருத்து பொதுமக்களிடத் தில் ஏற்படும் என்பதற்காகச் சொல்கிறேன். செகரடேரியட் இருக்கும் இடம் மத்திய சர்க்காருக்குச் சொந்தமான சொத்து. எப்படி மதிப்பிற்குரிய திருப்பூர் மொய்தீனுக்குச் சொந்தமான வீட்டில் இன்னொருவர் பிரவேசித்தால் பர்மிஷன் வாங்க வேண்டுமோ, அந்த முறையில் மத்திய சர்க்காருக்குச் சொந்தமான இடத்தில் இவர்கள் வாடகைக்கு இருந்து கொண்டிருக்கும்போது அந்த இடத் தில் ஏதாவது செய்ய வேண்டுமானால் அவர்களுடைய அனுமதியைப் பெற்றுத்தான் ஆகவேண்டும். உங்களுடைய இடத்தில் இருந்தால் அந்த அனுமதி தேவையில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படி இவைகளை எல்லாம் சொத்தாக வைத்திருக்கக்கூடாது என்பதுதான் எங்களுடைய வாதம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அப்படியானால் மிலிட்டரி போன்ற வற்றுக்கு மத்திய சர்க்காருக்கு இங்கு இடமே கொடுக்கக் கூடாது என்று சொல்லுகிறார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இராணுவ தளங்கள் வைத்திருக்க இடம் வைத்துக் கொண்டிருக்கட்டும். இதை நமக்கு வாடகைக்குக் கொடுத்திருந்தாலும் அல்லது வேறு வகையிலே கொடுத்திருந்தாலும் திருப்பூர் மொய்தீன் அவர்களுடைய வாதம் எல்லாம் "இங்கிருக்கிற புல் பூண்டுகள், கள்ளி காளான்களை அகற்ற இந்த அரசு மத்திய சர்க்காரிடத்தில் அனுமதி வாங்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது" என்பதுதான். அந்த நிலை இருந்தது. மத்திய சர்க்கார் பாதுகாப்பு துணை மந்திரி திரு. கிருஷ்ணா அவர்களை அழைத்து வந்து இடத்தைக் காட்டி அதற்குப் பிறகு கடிதம் எழுதி அனுமதி பெற்று புல் பூண்டுகள், செடிகளை அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

திருமதி த. ந. அனந்தநயாகி: இது அவர்களுடைய சொத்து, உங்களுக்கு வேண்டுமானால் உங்களுடைய புறம்போக்கில் செகரடேரியட் கட்டடத்தைக் கட்டிக் கொள்ளுங்கள். அப்படி நீங்கள் உங்களுடைய காரியாலயங்களை உங்களுடைய இடத்திலே கட்டிக் கொண்டால் நீங்களே புல் பூண்டுகள் எல்லாவற்றையும் அகற்றிக் கொள்ளலாம். உங்களுடைய இடத்தில் முனிசிபாலிடி வந்துவிட்டால் அவர்களுக்கு எல்லாவற்றையும் கொடுத்து விடுவீர்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வாடகைக்கு ஒரு வீட்டில் குடியிருப்பதாக வைத்துக் கொண்டால் கூட கட்டடத்தை இடித்து விட்டு புதுப்பிக்க வேண்டுமென்றால் உரிமையாளரிடத்தில் அனுமதி பெற வேண்டும்; ஓட்டை மாற்ற வேண்டுமென்றால் கூட உரிமையாளரிடத்தில் அனுமதி பெற வேண்டும். அங்கே அழுக்குப் படிந்திருந்தால் அதை அகற்ற உரிமையாளரிடத்தில் அனுமதி கேட்க வேண்டுமென்பது போல், இங்கு இருக்கும் புல் பூண்டுகளை அகற்ற மத்திய சர்க்காரிடத்தில் அனுமதி கேட்க வேண்டுமென்று சொல்லுவது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இங்கிருக்கும் மாநிலத்தைச் சேர்ந்த ஒரு துறையின் பகுதி இன்னொரு துறையில் தலையிட உரிமை இல்லை. அந்தத் துறை தலையிட முடியாது. அந்தத் துறை அனுமதி இல்லாமல் செய்யக் கூடாது. இப்படி எல்லா அரசாங்கத்திலும் எல்லா மட்டங்களிலும் இலாகா இலாகாவாக இருக்கின்ற சில முறைகள் இருக்கின்றன.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்: (குறுக்கீடு) வம்பு இழுக்க வேண்டாமென்றால் நீங்கள் அந்த வகையில் நடந்து கொண்டிருக்க வேண்டும். . நீங்கள் என்ன பட்ஜெட்டிலேயேவா பேசினீர்கள்? நீங்கள் வடக்கு நோக்கிப் போனீர்கள்; நான் தெற்கு நோக்கிப் போகிறேன். சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் பட்ஜெட்டைப் பற்றியா பேசினார்கள்? நீங்கள் பட்ஜெட்டைத் தொடவே இல்லையே. ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லையே. நானாவது அதிலிருந்து படித்து விளக்கம் சொல்லுகிறேன். நீங்கள் அதுகூடச் சொல்லவில்லையே. அரிசனங்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று அவர்கள் சொல்ல வேண்டும் . . .



திருமதி சத்தியவாணிமுத்து: முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்காதீர்கள். நான் பட்ஜட்டைப் பற்றித்தான் பேசினேன். நீங்கள்தான் வேறு எங்கோ போகிறீர்கள்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்: நானும் அதைத்தான் பேசினேன். இதோ கையில் வைத்திருக்கிறேன். இப்போது நான் படித்துக் காட்டியது பட்ஜட்டா அல்லது சத்தியவாணிமுத்து அறிக்கையா, பட்ஜட்டைத்தான் படித்துக் காட்டினேன்.

பேசும்போது அப்படித்தான் வரும். எந்தெந்தக் கோணத்தில் திருப்பி விடப்படுகிறதோ அந்தந்தக் கோணத்தில்தான் பேச்சு போய் முடியும்.

மாநில சுயாட்சி பூதமல்ல. உரிமை. அதைக் கேட்பதில் தவறு இல்லை. முதலமைச்சர் அவர்கள் இங்குதான் குறிப்பிட்டார்கள் என்று நினைக்கிறேன்—அதற்காக காஷ்மீரச் சிங்கம் ஷேக் அப்துல்லா போல் 12 வருஷம் (குறுக்கீடு)—23 வருஷம் சிறையில் வேண்டுமானாலும் இருக்கிறேன் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

திரு. கே. என். குமாரசாமி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். ஷேக் அப்துல்லா காஷ்மீரத்திற்கு என்ன கேட்டார் என்று புரிந்து கொள்ள வேண்டும். அவர் சுதந்திர காஷ்மீர் கேட்டது போல் இப்போது தமிழ் நாட்டுக்கு சுதந்திரத் தமிழ்நாடு கேட்கிறார்களா? சுதந்திர காஷ்மீர் கேட்டதற்காகத்தான் அவர் 23 வருஷங்கள் சிறையில் இருந்தார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாநில சுயாட்சி கேட்டால் அப்படி சிறைக்குப் போகவேண்டாம் என்று மத்திய சர்க்கார் சார்பில் நீங்கள் உத்தரவாதம் அளிக்கிறீர்களா?

திரு. கே. என். குமாரசாமி: மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்பதில் கருத்து வேறுபாடு கிடையாது. எந்தெந்த அதிகாரங்கள் மாநிலத்திற்கு, பொருளாதாரத் துறையில் எப்படிச் செயல்பட வேண்டுமென்பதெல்லாம் நிர்ணயிக்கப்பட்டு அதற்கான உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதிலே தடையில்லை. அதற்காக யாரும் சிறைக்குப் போக வேண்டிய அவசியமில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எந்தெந்த அதிகாரங்கள் என்று முன்பு பேசியவர்கள் எல்லாம் கூடக் குறிப்பிட்டார்கள். எந்தெந்த அதிகாரங்கள் வேண்டுமென்று தெளிவாக மாநில சுயாட்சித் தீர்மானம் இந்த அவையில் நிறைவேற்றப்பட்டபோதே

கொடுத்திருக்கிறேன். என்னென்ன அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். பொத்தாம் பொதுவாகக் கேட்கவில்லை. இன்னின்ன அதிகாரங்கள் வேண்டுமென்று தெளிவாகக் கேட்டிருக்கிறோம். இன்னின்ன அதிகாரங்கள் தர முடியும், தர இயலாது என்ற பொறுப்பை ஏற்க வேண்டியவர்கள் மத்திய அரசில் உள்ளவர்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அந்த விளக்கத்தில் கூடத் தெளிவில்லை. சட்டசபையில் மாநில சுயாட்சியைப் பற்றித் தீர்மானம் கொண்டு வந்த நேரத்தில் மத்திய சர்க்கார் பாதுகாப்பு, நோட்டு அச்சடிப்பு, வெளிநாட்டு விவகாரம், உள்நாட்டு விவகாரம் போன்ற நான்கை மட்டும் வைத்துக் கொண்டு மீதியைக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இன்றைக்கு வாசித்திருக்கிற பட்ஜட் உரையில் "பாதுகாப்பைத் தவிர மற்ற எல்லாவற்றையும் தர வேண்டும்" என்று சொல்லுகிறார்கள். உங்களுக்கே தெளிவு இல்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அண்ணாவின் பேச்சில் உள்ளதைத்தான் குறிப்பிட்டிருக்கிறேன். அண்ணாவின் பேச்சில் அமைந்திருக்கும் வாசகம் "பாதுகாப்பு தவிர மற்றவற்றைப் பற்றிச் சிந்திப்போம்" என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுதான் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். அரசியல் சட்டத்திற்குட்பட்டு ஆட்சிக்கு வந்திருப்பவர்கள் அந்த அதிகாரத்தை வைத்துக் கொண்டு அதற்கு எதிரான விவாதங்களைச் சபையில் விவாதித்துக் கொண்டிருப்பது முறைதானா? சட்டபூர்வமானதுதானா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 1935-ம் ஆண்டு வெள்ளைக்காரன் சட்டத்தை எதிர்த்த பெரியவர்கள் இந்திய நாட்டு நலனுக்காக அதை ஏற்றுக் கொண்டு பொறுப்புக்கு வந்தார்கள். இது அந்த காங்கிரஸ் தேசிய பாரம்பரியத்தோடு இணைந்திருந்த திரு. சுரேந்திரன் போன்றவர்கள் அறியாதது அல்ல.

திரு. எம். சுரேந்திரன்: அன்று மக்கள் பிரதிநிதியாக இருந்து பணியாற்றவில்லை. பாராளுமன்றம், சட்டமன்றம் இருக்கவில்லை. அரசியல் சட்டம் வகுக்கப்பட்டு அதற்கு உட்பட்டு ஆட்சிக்கு





வந்தவர்கள் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு இப்போது அதிகாரங்கள் இல்லையென்று இங்கே பேச உரிமையுண்டா என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அன்றைக்கு இந்திய விடுதலைப் போராட்ட இயக்கமான காங்கிரஸ் கட்சி தீர்மானம் போட்டது. வெள்ளைக்காரன் வகுத்த அரசியல் சட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமா, இல்லையா, ஆட்சி மன்றத்திற்குச் செல்லுவதா கூடாதா என்ற வாதங்கள் நடந்து இறுதியாக "சட்டத்தை ஏற்று ஆட்சிமன்றங்களுக்குச் செல்லுவது, ஆனால் அந்தச் சட்டத்தை எதிர்ப்பது" என்ற முடிவோடு ஆட்சிமன்றத்திற்குச் சென்றார்கள். சட்டத்தை வெளியே கொளுத்தினார்கள்; உள்ளே சட்டத்தை எதிர்த்துப் பேசினார்கள்.

திரு. எம். சுரேந்திரன்: கட்சிக்குள்ளே அன்று முடிவு எடுத்துக் கொண்டார்கள். எப்படி தங்களுடைய லட்சியத்தை அடைய வேண்டுமென்பதுதான் அங்கே நடந்த விவாதம். இங்கே தங்களுடைய லட்சியத்தை நிலைநாட்ட அதிகாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். வெளியே ஒன்றும் சொல்லாமல் இங்கே தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி மாநில சுயாட்சி என்ற கருத்தை விவாதிக்கிறார்கள் என்பதுதான் பிரச்சினை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 1971-ம் ஆண்டு நண்பர் சுரேந்திரன் அவர்கள் எங்களோடு கூட்டுச் சேர்ந்து ஆதரவு பெற்று நின்றார். அப்போதே எங்களுடைய தேர்தல் பிரகடனத்தில் மாநில சுயாட்சி பற்றித் திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறோம். அதைப் படித்துப் பார்க்காமல் ஏன் கூட்டுச் சேர்ந்தார்?

திரு. எம். சுரேந்திரன்: அவர்களிடமிருந்து பிரிந்து வந்தவர்களே அண்ணா தி.மு.க. அந்தமாதிரிக் கருத்தைச் சொல்லவில்லை என்பது பற்றி இரண்டு நாட்களாக இங்கே விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. இதிலே "நான் பொறுப்பேற்றுக் கொள்ளுகிறேன்; அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்ளுகிறார்கள்" என்று இப்படி விவாதம் நடந்து கொண்டிருப்பதே போதுமானது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆரம்பித்த விவாதத்தை விட்டு விட்டு யாருடைய துணையையோ சுரேந்திரன் திடீரென்று நாடுகிறார். அவர் சொன்னது அரசியல் சட்டத்தை ஏற்றுக்

கொண்டு விட்டு அரசியல் சட்டத்தை எதிர்த்துப் பேசலாமா என்பது. அரசியல் சட்டம் நாடாளுமன்ற உறுப்பினர்களால் விவாதிக்கப்பட்டு இதுவரை 30 முறை திருத்தப்பட்டிருக்கிறது. மேலும் திருத்த வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அந்த உரிமை இருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: அரசியல் சட்டத்தைத் திருத்துவது வேறு, மாநில சட்டமன்றத்தில் அரசியல் சட்டத்திற்கு எதிராகப் பேசிக் கொண்டிருப்பது வேறு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அரசியல் சட்டத்திற்கு எதிராகப் பேசவில்லை. அரசியல் சட்டம், மாநில சுயாட்சித் தன்மை மாநிலங்களுக்குக் கிடைக்கும் அளவு திருத்தப்பட வேண்டு மென்று தான் பேசுகிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, சென்ற காலத்தைப் பற்றிச் சொல்கிறபோது ரிகார்டுகளில் சரியாக வர வேண்டுமென்பது என்னுடைய கருத்து. 1935-ம் வருஷம் ஏற்பட்ட சட்டத்தின்படி தேர்தலில் பங்கு எடுப்பதா இல்லையா என்பது பற்றி முதலில் காங்கிரஸ் கட்சியில் விவாதம் நடந்தது. பிறகு தேர்தலில் பங்கெடுத்தார்கள். இப்படி தீர்மானிக்கப்பட்டபோது மாநிலங் களுக்கு நடக்கக் கூடிய தேர்தல்களில் பங்கெடுத்துக் கொள்ளலாம், ஆனால் பெடரேஷனைப் பொறுத்த வரையில் நிராகரிக்கிறோம் என்று சொல்லி, மாநிலத்திலும்கூட கடைசியில் மந்திரி சபை அமைக்கிற நேரத்தில் கவர்னர் விசேஷ அதிகாரத்தைப் பயன் படுத்தக் கூடாது என்று சொல்லி அதை அன்றைக்கிருந்த பிரிட்டிஷ் சர்க்கார் ஏற்றுக் கொண்ட பிறகு ஆட்சியில் வந்தார்கள். கடைசியில் கவர்னர் தன் பிரத்தியேக அதிகாரத்தைப் பயன்படுத்திய சமயத்தில் அதை எதிர்த்து உத்திரப் பிரதேசத்திலும், பீஹாரிலும் இருக்கிறவர்கள் ராஜினாமா செய்தார்கள். இப்படி மந்திரிசபையி லிருந்து ராஜினாமா செய்து விட்டார்கள். இது சென்ற காலத்தில் நடந்தது.

இப்போது சட்டசபை நடந்து கொண்டிருக்கிற போது அந்த சட்டத்தை நாங்கள் உள்ளேயிருந்து எதிர்த்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்வது போல் அன்று இல்லை. அரசியல் சட்டத்தைப் பொறுத்த வரையில் அரசியல் பிரச்சினை வந்ததால் சொல்கிறேன்.



அரசியல் சட்டத்தின் அடிப்படையில் தான் சட்ட மன்றம் தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கிறது. மந்திரி சபை அமைந்திருக்கிறது. அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்பது வேறு. அந்த அரசியல் சட்டத்திற்கே விரோதமாக இங்கு நாம் அந்த அரசியல் சட்டத்தையே தூக்கியெறிந்து விட வேண்டுமென்று பேசலாமா, அந்த மாதிரியாகப் பேசுவதை தலைவரவர்களே, நீங்கள் தான் கவனித்துக் கொள்ளவேண்டும். அந்த அளவிற்கு . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் கூறிய விவரங்களுக்கு ஆதரவான வேறு பல தகவல்களை திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் தம்முடைய அதிகமான அனுபவத்தின் காரணமாக எடுத்துச் சொன்னார்கள், அதற்காக அவர்களுக்கு என் நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நான் கூறியதெல்லாம், இங்கே உட்கார்ந்து கொண்டு அரசியல் சட்டத்தை எதிர்ப்பது அல்ல, அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டு மென்று கோருவது தான். இப்படி அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று கோருவதற்கு சட்டமன்றத்தில் உள்ள நமக்கு உரிமை இருக்கிறது. அரசியல் சட்டத்தை ஒத்துக் கொண்டு விட்ட பிறகு, அதைப் பற்றிப் பேசலாமாவென்பது திரு. சுரேந்திரன் அவர் களின் கேள்வி, வெள்ளைக்காரர்களின் அரசியல் சட்டத்தை ஏற்றுக் கொண்டு, ஆட்சி மன்றத்திற்குச் சென்று அந்த அரசியல் சட்டம் கூடாது என்று விடுதலை வீரர்கள் போராடி இருக்கிறார்கள் என்ற தகவலை நான் தந்தேன்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, ஏற்கெனவே நடந்து முடிந்து விட்ட நிகழ்ச்சியை எடுத்துக் கொண்டு, சுதந்திரத்திற்குப் பின்னால் உள்ள இந்த நிகழ்ச்சிக்கு ஒப்பிடுவது சரிதானா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் முடியுங்கள். பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லி பெரிய பேச்சாக இருப்பது சரியல்ல.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, அரசியல் சட்டத்தில் மாநிலங்களுக்கு இன்னின்ன அதிகாரங்கள் தான் இருக்கின்றன, இன்னின்ன சட்டங்களைத் தான் செய்யலாம் என்று தெரிந்து கொண்டு அரசாங்கத்துக்கு வந்திருக்கிறார்கள். திரு. திருப்பூர் மொய்தீன் இது என்ன மானம் கெட்ட பிழைப்பு என்று கேட்டார்கள். அப்படி

யானால் வெளியே போகவேண்டியது தானே. வெளியே போய் அரசியல் சட்டத்திற்கு எதிராக கிளர்ச்சி பண்ணுவது தானே. அதை விட்டு விட்டு இங்கே உட்கார்ந்து கொண்டு . . .

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன்:</u> தலைவரவர்களே, இங்கே உட்கார்ந்து அரசியல் சட்டத்தைப் பற்றிப் பேசலாமாவென்று கேட்கிறார்கள். பாராளுமன்றத்திலே அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு பல நேரங்களில் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டு பேசப்படுகின்றன. பாராளுமன்றத்தில் பேசப்படுவது சட்ட மன்றங்களில் பேசப்படலாம். இன்னும் சொல்லப்போனால் அங்கே திருத்தங்களைக் கொண்டு வந்ததற்குப் பின்னால் இங்கே சட்ட மன்றங்களுக்கு ரெபரென்ஸ்-க்கு அனுப்பப்பட்டு இங்கேயும் பரிசீலிக்கப்பட்டு ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இப்படிப் பட்ட நிலைமை இருக்கிற போது அரசியல் சட்டத்தைத் திருத்தலாம் என்று சொல்வதில் சட்ட மறுப்பு இல்லை. அரசியல் சட்டத்தை திருத்த முடியுமா, முடியாதா என்பது வேறு விஷயம்.

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே:</u> தலைவரவர்களே, அரசியல் சட்டம் சம்பந்தமாக உள்ளதால் சொல்கிறேன். அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று யோசனை கூறுவதற்கு இந்த மன்ற உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு என்று சொல்லி இருக்கிறார்கள். அந்தக் கருத்தில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அரசியல் சட்டம் அங்கே திருத்தப்பட்டு, அரசியல் சட்டத்தில் எந்தெந்த ஷரத்துகள் திருத்தப்பட்டன என்று திருத்தப்பட்ட பிறகு ரேடிபிகேஷனுக்கு இங்கு வருகிறது. அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை, பேசவில்லை. முதலமைச்சரவர்கள் அரசியல் நிர்மாண சட்டத்தில் அதன் வரம்புக்குள்ளே மாநில சுயாட்சி வேண்டுமென்று அவர்கள் பேசுவதற்கு உரிமை உண்டு, வாய்ப்பு உண்டு. அதே போல அதை மறுத்துப் பேசுவதற்கு மற்றவர்களுக்கும் உரிமை இருக்கிறது. இதற்காக சிறைக்குச் செல்லத் தயாராக இருக்கிறேன் என்று இரண்டு நாட்களாக முதலமைச்சரவர்கள் சொல்வது தம்மை ஒரு தியாகி என்று ஆக்கிக் கொள்வதற்காகவா, அதற்காக வாய்ப்பைத் தேடிக் கொள்கிறார்களா என்ற அச்சம் பரவலாக இருக்கின்ற காரணத்தினால் இதற்கு ஒரு விளக்கத்தை அவர் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



(குறுக்கீடு)

அவருக்குப் பதில் சொல்வதற்கு கபாசிடி இருக்கிறது. அவர் நல்ல பதில் கொடுப்பார். இரண்டு நாட்களாக —for the past two days I am finding a different note, different accent in his speech— saying 'I am prepared to go to jail'. சிறை செல்லத் தயாராக இருக்கிறேன்,
ஷேக் அப்துல்லா மாதிரி போகத் தயாராக இருக்கிறேன் என்று தொடர்ந்து சொல்கிறார்கள். அப்படிச் சொல்லத் தேவையில்லை. —He is saying that only with the purpose of converting himself as a martyr—There is no necessity at all. . . . ஏனென்றால் அவர் அரசியல் சட்டத்திற்குள்ளேயே இருப்பார். அதில் எந்த வித சந்தேகமும் கவலையும் எனக்கு இல்லை. அவருக்கு நான் அண்ணன், தம்பி மாதிரி இதைச் சொல்கிறேன்.

<u>திருமதி சத்தியவாணிமுத்து:</u> தலைவரவர்களே, முதல்வர் அவர்கள் அண்மையிலே இரவு பகலாக உழைக்கிறார்கள். அவருக்கு நிச்சயம் ஓய்வு தேவை. இந்த சாக்கிலாவது சிறைக்குள்ளே போகலாமாவென்று நினைக்கிறார். காரணம் அவருக்குக் கட்சியிலே பெரிய தலைவலி, வெளியேயும் தலைவலி. ஆகவே 10 வருஷம் உள்ளே போய் இளைப்பாறலாம் என்று நினைக்கிறார் என்று நான் கருதுகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:</u> தலைவரவர்களே, எனக்கு தலைவலி போய் இரண்டு, மூன்று மாதமாகிறது. நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்கள் நான் ஷேக் அப்துல்லா அவர்கள் போல திடீரென்று சிறைக்குச் செல்லத் தயாராக இருக்கிறேன் என்று சொன்னதாகச் சொல்கிறார்கள். நான் திடீரென்று சொல்லவில்லை. நேற்றையதினம் திரு. மலைக்கண்ணன் அவர்கள் உரையாற்றுகிற போது குறிப்பிட்டார்கள்: "இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் மாநில சுயாட்சி கிடையாது என்று திட்டவட்டமாக அறிவித்து விட்டதாக ஏடுகளில் வந்திருக்கிறது. திட்டவட்டமாக அறிவித்ததாகக் கொள்ள முடியாது. 23 ஆண்டுகளுக்கு முன்பு ஷேக் அப்துல்லா அவர்களிடத்தில் திட்டவட்டமாகச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு அவருக்கே, அவர் கோரிய அளவில் இல்லாவிட்டாலும் மாநில சுயாட்சி கொடுத்து காஷ்மீரின் முதல்வராக, பிரதமராக இன்றைக்கு அவரை அமர்த்தி

இருக்கிறார்கள். ஆகவே, எதையும் திட்டவட்டமாகச் சொல்ல முடியாது" என்றார்கள். அப்போது நண்பர் திரு. மாரிமுத்து அவர்கள் அப்படியானால் ஷேக் அப்துல்லாவைப் போல முதலமைச்சரவர்களையும் 23 ஆண்டுகள் அல்லது 10 ஆண்டுகள் சிறைச்சாலைக்கு அனுப்பவேண்டுமென்று சொல்கிறீர்களாவென்று கேட்டார். அப்போது நான் அப்படி நிலைமை வந்தால் மாநில சுயாட்சி லட்சியத்தைப் பெறுவதற்காக ஷேக் அப்துல்லா போல சிறைச்சாலைக்குச் செல்லத் தயாராக இருக்கிறேன் என்று சொன்னேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவரவர்களே, அப்படி நிலைமை வர வாய்ப்பு கிடையாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுரேந்திரன் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி, அரசியல் அமைப்பு சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பற்றிப் பேசலாமா என்று கேட்டிருக்கிறார்கள். நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்திலே சாதாரண பொதுமக்களுக்கு அடிப்படை உரிமை, பேச்சுரிமை ஆர்டிகிள் 19-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு 194(1) என்ற இந்த ஆர்டிகிளில் பேச்சுரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. சாதாரண மக்களுக்கு கொடுக்கப்பட்ட பேச்சுரிமையின் ஆர்டிகிள் 19(1) (ஏ) பிரகாரம் சில வரைமுறைகள் உள்ளன. ஆனால் சட்டசபை உறுப்பினர்களுக்கு இருக்கிற பேச்சுரிமை எந்த வரைமுறைகளுக்கும் கட்டுப்படாது என்பது தான் அரசியல் அமைப்புச் சட்டத்தை நிர்ணயித்த பெரியவர்களின் கொள்கையாகும். அந்தக் கொள்கை ஏன் வந்தது என்றால், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எந்தவித அச்சுறுத்தலுக்கும், எந்தக் காரணங்களுக்கும் கட்டுப்பட்டு பயன்படுத்தக் கூடாது, அவர்கள் தங்களுடைய உரிமையை சுதந்திரமாகப் பயன்படுத்த வேண்டுமென்ற அந்த அடிப்படையில் ஆர்டிகிள் 194 என்று தனியாக அரசியல் அமைப்புச் சட்டத்திலே இருக்கிறது. இதைக் குறித்து ஏறக்குறைய 1965-ம் ஆண்டில் உத்திரப்பிரதேசத்தில் உள்ள சட்டமன்றத்தில் தகராறு வந்து அது சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்று சுப்ரீம் கோர்ட்டில் பரிசீலித்து "ஆர்டிகிள் 194-ல் கொடுத்திருப்பது சர்வ சுதந்திரம், அவர்கள் எதை வேண்டுமானாலும் பேசலாம், அவர்கள் மீது எந்த





வித நடவடிக்கையும் எடுக்க முடியாது" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே உறுப்பினர்கள் பேசுவதில் தவறு இல்லை என்று சொல்லிக் கொள்கிறேன். திரு. மொய்தீன் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்: தலைவரவர்களே, நான் பலஹீனமானவன். ஆகவே சில கருத்துக்களை வைத்து கொஞ்ச நேரம் பேசி விடலாம் என்று கருதித்தான் நான் பேசவே முன் வந்தேன். இடை இடையே குறுக்கீடும், அதனால் ஏற்படுகிற உணர்ச்சியும் எனக்கு தளர்ச்சியைக் கொடுத்து விட்டது என்பதனால் அதிக நேரத்தை நான் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை.

பொதுவாக நான் சொல்லி முடிப்பது என்னவென்றால் இந்த நிதி நிலை அறிக்கை மத்திய சர்க்காரைத் திருப்திப்படுத்தவோ அல்லது மாநிலத்தில் இந்த அரசுக்குள்ள எதிர்ப்பைத் திருப்திப்படுத்தவோ எண்ணம் கொண்டு உருவாக்கப்பட்டதல்ல. இந்த நிதி நிலை அறிக்கை இந்த நாட்டு மக்களுடைய இன்றைய சூழ்நிலையை வைத்து உருவாக்கப்பட்டது. இன்று எந்தெந்த நிலைகளில் மக்கள் துன்புற்றிருக்கிறார்கள், அதற்கு என்ன பரிகாரம் என்பதை மனதில் கொண்டு உருவாக்கப்பட்டது. அப்படி செய்யப்பட்ட ஒரு திட்டம், அதனால் ஏற்படுகிற விளைவு, அதற்கு மத்திய சர்க்காரால் ஏற்படுகிற இடர்கள் இவைகளையெல்லாம் மிகத் தெளிவாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதை நாம் நன்றாகப் பார்க்கலாம். எது

[முற்பகல் 11-30]

எப்படி இருந்தபோதிலும், யார் யார் எதைச்சொன்ன போதிலும், ஒரு ஜனநாயக நாடு என்று நாம் இதைச் சொல்லிக்கொண்டு இருக்கிறோம். ஜனநாயகப் பண்பாடு என்று பேசிக்கொண்டு இருக்கிறோம். பேசுவதற்கு உள்ள உரிமை இருக்கிறது என்று தலைவர் தீர்ப்பு அளித்து விட்டார். ஆதலால் பேசுவதில் தப்பு இல்லை, தவறு இல்லை. எண்ணுவதைச் சொல்லலாம். அந்த ஜனநாயகம் தான் நம்மை இந்தப் பாடு படுத்திக் கொண்டு இருக்கிறது. அந்த ஜனநாயகம் இல்லாத ஒரு வரம்பு முறை இருக்குமானால், நாம் இந்தத் தொல்லைக்கு ஆளாக வேண்டாம். 15 நாளைக்கு ஒரு பக்கம், 15 நாளைக்கு இன்னொரு பக்கம் என்று அவதிப்படவேண்டாம். இது தான் ஜனநாயகம் தந்த சலுகை. அதை அனுபவிக்கவேண்டும். இதில் ஏற்படும் கஷ்டங்களை எடுத்துச்சொல்கிறபோது, அது அரசியல் சட்டத்திற்கு மாறுபாடாக இருக்காது என்று சொன்னேன்.

[திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்] [1975 மார்ச் 6

இன்னொன்று நான் கூற விரும்புவது, லெவி முறை. இந்த லெவி முறையில் சர்க்கார் பின்பற்றுகிற முறை வரவேற்கத்தக்கது. ஒரே ஒரு திருத்தம் என்னுடையது என்னவென்றால் ஒரு ஏக்கர் அல்லது $\frac{1}{2}$ ஏக்கர் வைத்து இருப்பவர்களை பல ஏக்கர் வைத்து இருப்பவர்கள், இந்த லெவி கொள்முதலுக்காக முன்னே தள்ளி தாங்கள் பின்னே நின்று கொண்டு சில காரியங்களைச் செய்கிறார்கள். இந்த ஒரு ஏக்கர் $\frac{1}{2}$ ஏக்கர் வைத்திருப்பவர்களை முன் நிறுத்தி பல ஏக்கர் வைத்துள்ளவர்கள் பின்னால் நின்று, நாங்கள் லெவி அளக்க மாட்டோம், ஊருக்குள் நுழைய விட மாட்டோம் என்று சொல்லி அது போலீஸ் வரை சென்று விடுகிற நிலைமை ஏற்படுகிறது. அதற்குப் பிறகு அந்த நெல்லை அதிகமான விலைக்கு விற்று பெரிய நிலச்சுவான்தார்கள் கொள்ளை அடித்துக் கொண்டு போகிறார்கள். இதைத் தடுக்க, 1 ஏக்கர், $\frac{1}{2}$ ஏக்கர் வைத்துள்ளவர்களுக்கு இந்த லெவி முறையிலிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டும். (குறுக்கீடு) (2 ஏக்கர் 3 ஏக்கர் வைத்துள்ளவர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நண்பர்கள் கூறுகிறார்கள்). அப்படிச் செய்தால் இந்தப் பெரிய நிலச்சுவான்தார்கள் இது மாதிரி சிறிய விவசாயிகளை முன்னால் நிறுத்தி அவர்கள் கையில் தகாதவதை எடுத்துக் கொண்டு லெவி கேட்க வருபவர்களை தாக்கச் சொல்ல மாட்டார்கள். அம்மாதிரி தகவல்கள் எனக்கு வந்து இருக்கின்றன. ஆகவே, அந்தமாதிரியான அசம்பாவிதமான நிகழ்ச்சிகள் நடைபெறாமல் இருப்பதற்காக, 1 ஏக்கர், 2 ஏக்கர், 3 ஏக்கர் வைத்துள்ளவர்களுக்கு லெவி முறையிலிருந்து விதிவிலக்கு அளித்து, பெரிய நிலச்சுவான்தார்கள் அவர்களைப் பயன்படுத்தி கொள்ளை அடிக்கும் சந்தர்ப்பத்தைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பலவிஷயங்களைப் பேசவேண்டுமென்று என்னுடைய குறிப்பில் இருந்தாலும், பேசுவதற்கு உள்ள சூழ்நிலை இல்லை என்று. சக்தி எனக்கு இல்லை என்று கூறி இந்த நிதி நிலை அறிக்கையை நானும், என்னுடைய கட்சியும் இதை மனப்பூர்வமாக வரவேற்கிறோம் என்று கூறி, ஆதரிக்கிறேன்.

<u>திரு. எம். ஆர். கண்ணன்</u>: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1975–76-ம் ஆண்டு வரவு–செலவு திட்டத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே இந்த சட்டமன்றத்தில் எத்தனையோ பிரச்சினைகளைப் பற்றி எல்லாம் நாம் பேசி வருகிறோம். அப்படிப் பேசும்போது நம்முடைய கருத்துக்கு மாறுபட்டவர்கள்—அவர்களை எதிர்க்கட்சிக்



1975 மார்ச் 6] [திரு. எம். ஆர். கண்ணன்]

காரர்கள் என்று கூட அழைக்க வேண்டியது இல்லை—இந்த நிதி நிலை அறிக்கையில் என்ன குறை சொல்கிறார்கள் என்று பார்த்தால் ஒரு குறையும் எடுத்துச்சொல்லவில்லை. அவர்கள் சொல்வதற்கு இதிலே ஒன்றும் இல்லை. இந்த நிதி நிலை அறிக்கை எப்படி இருக்கவேண்டும், இதில் என்ன இருக்கிறது, இந்தப் பிரச்சினைகளை எந்த வகையில் சமாளிக்கலாம் என்று எடுத்துச்சொல்கிறார்களா என்றால் எடுத்துச் சொல்லவில்லை.

நமக்கு அடிப்படைத் தேவை உணவு. அதற்கு உரிய வேளாண்மைத் துறையில் இந்த அரசு எத்தகைய முயற்சிகளை எடுத்து இருக்கிறது இந்த 8 ஆண்டுகளில், என்னென்ன நல்ல பணிகளைச் செய்து இருக்கிறது என்பதை யாருமே எடுத்துச்சொல்லவில்லை. நாங்கள் வந்தால் இப்படிச் செய்வோம், நீங்கள் இப்படிச் செய்து இருக்கிறீர்கள், நாங்கள் வந்தால் இந்தப் பிரச்சினையை இப்படிச் சமாளிப்போம், நீங்கள் இப்படிச் சமாளித்து இருக்கிறீர்கள், என்று எடுத்துச்சொன்னால் நன்றாக இருக்கும். அப்படி யாராவது எடுத்துச் சொல்கிறார்களா என்றால், யாருமே எடுத்துச் சொல்லவில்லை.

இங்கே இருப்பவர்கள் எல்லாம் பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள் சொன்னது போல், ஏதோ இங்கே வந்து உட்கார்ந்து விடவேண்டும் என்பது தான் அவர்களுடைய எண்ணம். என்னுடைய நண்பர்களாக இருந்து, எங்களுடைய தோழர்களாக இருந்து, அந்தப் பக்கத்தில் இப்போது இருப்பவர்கள் பேசுகிறார்கள். அவர்கள் எப்படிப் பேசுகிறார்கள்? அவற்றைக் கேட்கிறபோது உண்மையிலேயே என்னைப் போன்றவர்களுக்கு வேதனையாக இருக்கிறது. நேற்று வரை இங்கே இருந்தவர்கள், இந்தக் கொள்கையை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டவர்கள். எந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டு மக்களின் ஆதரவைப் பெற்று இப்போது சட்டமன்ற உறுப்பினராக ஆகியிருப்பவர்கள் அதே கொள்கையை மறித்துப் பேசுகிறார்கள் என்றால், அவர்களுக்கு உண்மையிலேயே நல்ல எண்ணம், ஒரு நிலையான புத்தி இருக்கிறதா என்பது சந்தேகமாக இருக்கிறது. தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கு உண்மையிலேயே நம்பிக்கையுடையவர்களாக இருந்தால், அவர்கள் பதவியை இழந்து விட்டு, மீண்டும் திரும்ப தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருப்பார்களானால் அவர்கள் மனிதர்கள். ஆனால் அந்த நிலைமை மாறி இங்கே வந்து, நேற்று வரை அண்ணன் தம்பியாக இருந்து,

[திரு. எம். ஆர். கண்ணன்] [1975 மார்ச் 6

பல தியாகங்களைச் செய்து, அதன் மூலமாக திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பீடம் ஏறி, பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் கிட்டத்தட்ட 8 ஆண்டுகாலமாக—திரு. நாவலர் அவர்கள் சிறப்பாகச் சொல்வது போல, இந்த 8 ஆண்டுகாலத்தில் திராவிட முன்னேற்றக்கழகம் போட்டு நிறைவேற்றிய திட்டங்களையும், 20 ஆண்டுகாலம் காங்கிரஸ் கட்சி போட்டு நிறைவேற்றிய திட்டங்களையும், 200 ஆண்டுகாலம் வெள்ளையர்கள் போட்டு நிறைவேற்றிய திட்டங்களையும் ஒரு குழு போட்டு, ஒரு பண்பாளரைக் குழுத் தலைவராகப் போட்டுப் பார்த்தால், யார் அதிகம் செய்தார்கள் என்பது தெரியும்—பல நல்ல திட்டங்களை நாம் நிறைவேற்றி வந்து இருக்கிறோம்.

திருமதி சத்தியவாணிமுத்து: மாண்புமிகு உறுப்பினர் இப்போது ஆளுகிற கட்சியிலிருந்து, அதனுடைய கொள்கையை வைத்து தேர்தலில் வெற்றி பெற்றவர்கள், வெளியேறி இப்போது எதிர்க்கட்சியாக நின்று பேசுகிறார்கள் என்று கூறினார்கள். எந்தக் கொள்கையை மக்கள் மத்தியில் வைத்து தேர்தலில் வெற்றி பெற்றோமோ அந்தக் கொள்கையை விட்டு வேறு பக்கம் இந்த அரசு போகிறது என்று சுட்டிக்காட்டியதற்காக வெளியேற்றப் பட்டிருக்கிறேனே தவிர அந்தக் கொள்கைக்கு எப்போதும் நான் விரோதியாக இருக்கமாட்டேன். அந்தக் கொள்கைக்காகத்தான் பேசுகிறோம்.

திரு. எம். ஆர். கண்ணன்: அருள்கூர்ந்து அம்மையார் விளக்க வேண்டும், எந்தக் கட்சி, எந்தக் கொள்கை?

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்: கொள்கையின் மாற்றத்தால் அம்மையார் வெளியேற்றப்பட்டார்களா அல்லது அவர்களே வெளியேறினார்களா?

திருமதி சத்தியவாணிமுத்து: தாழ்த்தப்பட்ட மக்களுக்காக என்னென்ன செய்ய வேண்டுமென்று எதிர்க்கட்சியில் இருக்கும் போது பேசினோமோ, அதை எல்லாம் ஆளும் கட்சியாக வந்த பின்னாலே, அமைச்சராக இருக்கும்போது என்னால் செய்ய முடியவில்லை. நான் போடுகிற உத்தரவை அதிகாரிகள் மீறினார்கள். அதை எடுத்துக்காட்டியபோது நான் வெளியேற்றப்பட்டேன்.



1975 மார்ச் 6]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு அம்மையார் அவர்கள் அமைச்சர் பதவியிலிருந்து விலக்கப்படுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு அம்பேத்கார் கல்லூரி திறப்பு விழாவில் கலைஞர் ஆணையிட்டால் எந்தப் போராட்டத்திலும் குதிக்கத் தயாராக இருக்கிறேன் என்று குறிப்பிட்டார்கள். ஒரு வாரத்திற்குப் பிறகு எல்லாமே மாறிவிட்டது.

திருமதி சத்தியவாணிமுத்து: கட்சியிலிருந்தபோது உங்கள் உத்தரவை ஏற்றேன், போராட்டங்கள், தியாகங்கள் பல செய்தேன். என்னால் தாங்களும் முதலமைச்சராக வந்திர்கள். கட்சியில் இருந்தவரையிலும் உங்கள் ஆணைக்குக் கட்டுப்பட்டு இருந்தேன். ஆனால் நிலைமை மாறி, நான் போடுகிற உத்தரவை அதிகாரிகள் மீறுகிறார்கள் என்று அதிகாரபூர்வமாக ஃபைல்ஸ் கொடுத்துவிட்ட பின்னும் கூட அதிகாரிகள்தான் வேண்டுமென்று, என்னை புறக்கணித்திர்கள். உங்களுக்குக் கொள்கையை விட அதிகாரிகள் முக்கியமாகப் போய்விட்டது. இப்போது எம். ஆர். கண்ணன் பேசுகிறார்கள். தியாகத்திற்கு இன்று கட்சியில் மதிப்பு இல்லை. தியாகம் செய்தவர்களைவிட அதிகாரிகள் முக்கியமாகப் போய்விட்டதால் நான் வெளியேற்றப்பட்டேன்.

திரு. துரைமுருகன்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். என்னால் கலைஞர் முதலமைச்சர் ஆனார் என்று சொன்னார்கள். அம்மையாருக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது என்பது அவர் தூக்கி எறியப் பட்ட நேரத்தில் எத்தனை எம்.எல்.ஏ.க்கள் அவர் பக்கம் சேர்ந்தார்கள் என்பதிலிருந்து தெரியும். அந்த அளவுக்கு செல்வாக்கைப் பயன்படுத்தி இந்த நாட்டின் முதலமைச்சராக ஆனாரா என்பதும் இந்த நாட்டு மக்களுக்குத் தெரிந்து இருக்கும் என்று நினைக்கிறேன்.

திருமதி சத்தியவாணிமுத்து: நல்ல வேளையாக முக்கியமான கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த நெடுஞ்செழியன் அவர்கள் கருணாநிதியை எதிர்த்து, தான் முதலமைச்சராக விரும்பி போட்டியிட்டபோது அவர் வரக் கூடாது என்று அவரை எதிர்த்து கருணாநிதிக்கு என்னுடைய ஆதரவைத் தெரிவித்து, அவரை நான் முதலமைச்சராக ஆக்கினேன் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தவறான தகவல்களை உறுப்பினர் அவர்கள் இங்கே தருகிறார்கள். கட்சியைப் பற்றி இங்கே பேசிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமும் இல்லை. பொதுவான விஷயங்கள்தான் இங்கே பேச வேண்டும். பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள் என்னை எதிர்த்துப் போட்டி யிட்டார் என்று சொல்வது தவறு. அவர் போட்டியிடவே இல்லை. அவர் பெயர் பிரேரேபிக்கப்பட்டபோதுகூட, தான் போட்டியிட வில்லை என்பதை அவர்கள் அறிவித்து விட்டார்கள். ப்ரப்போஸ் பண்ணுவது, வழி மொழிவது என்பதெல்லாம் வெறும் முறைகள். "என்னாலேதான் அவர் பதவிக்கு வந்தார்" என்று கூறுவது தவறு.

(பல உறுப்பினர்கள் ஒரே சமயத்தில் பேச எழுந்தபோது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கட்சி விஷயத்திற்கு அதிகமாக இழுத்துக் கொண்டு போகாதீர்கள்.

திரு. எம். ஆர். கண்ணன்: கொள்கை அடிப்படையில் நின்று சட்ட மன்றத்திற்குப் போகிறோம். அதன் பிறகு கட்சி மாறி விடுகிறார்கள். கொள்கைகள் நிறைவேறுவதற்கு உண்மையிலேயே அவர்கள் இடையூறு செய்தவர்கள் ஆகிவிடுகிறார்கள். கட்சியை விட்டு வேறு கட்சிக் கொள்கைகளை ஏற்றுக்கொள்வதைவிட, எந்தக் கட்சியினால் பதவிக்கு வந்தார்களோ அந்தக் கட்சியிலிருந்து விலகும்போது அந்தக் கட்சியினால் கிடைத்த பதவியையும் துறந்து விட்டு மறுபடியும் தேர்தலுக்கு நின்று வரட்டுமே என்பதைத்தான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆலடி அருணா: அதைத்தான் நாங்களும் சொல்கிறோம். கொள்கைகளைக் கை விட்டுவிட்டவர்கள், பதவிகளை ராஜினாமா செய்து விட்டு, மக்களிடத்தில் வாக்கு பெற்று மறுபடியும் பதவிக்கு வரட்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தில் அந்தக் கட்சியின் கொள்கைகளில் நம்பிக்கை இல்லாதவர்கள் பல பேர் இருக்கிறார்கள் . . .

திரு. எம். ஆர். கண்ணன்: இந்தக் கருத்து அந்தக் கட்சியில் இருப்பவர்களின் சொந்த அனுபவத்திலிருந்து பேசப்படுகிறது என்று நினைக்கிறேன். திரு. ஹாண்டே அவர்கள் . . .



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கட்சியைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கவேண்டாம் என்று சொன்னேன். இப்போதும் அதை வலியுறுத்துகிறேன். கட்சி பற்றிய பேச்சுக்களை எல்லாம் தலைவர்களிடத்தில் விட்டு விடுங்கள். பட்ஜெட்டுக்கு வாருங்கள்.

திரு. எம். ஆர். கண்ணன்: என்னுடைய கருத்துக்களை பேசவே வாய்ப்பு கிடைக்காதா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வாய்ப்பு தாராளமாக உண்டு. அரசியல் சட்டத்திற்கு உட்பட்ட விஷயங்கள் எதையும் பேசலாம். ஆனால் கட்சியைப் பற்றிப் பேசும்போது அதற்கு சில வரைமுறைகள் இருக்கின்றன. அப்போதுதான் இந்தக் கட்டுப்பாடு வரும்.

திரு. எம். ஆர். கண்ணன்: வரம்பிற்குள்தான் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் கருத்து தெரிவிக்கும்போது, யாரையும் நேரடியாகக் குறை சொல்லிப் பேசுவது சரியில்லை என்றுதான் சொல்கிறேன்.

திரு. எம். ஆர். கண்ணன்: கலைஞருடைய தியாகம் சாதாரண மானதா? நாம் எல்லோரும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தபோது திரு. ஹாண்டே அவர்களை நாம் நம்முடைய ஜன்ம விரோதியாகக் கருதி வந்தோம். [ * * * ]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் [ * * ] என்ற வார்த்தையை பயன்படுத்தியுள்ளார். அது அன்பார்லிமெண்டரி வார்த்தை. எனவே அதைக் குறிப் பேட்டிலிருந்து நீக்கி விட உத்தரவிடுகிறேன்.

திரு. எம். ஆர். கண்ணன்: [ * ] என்ற வார்த்தை எவ்வாறு மரியாதையற்ற வார்த்தையாகும்? [ * * ] சரி, தலைவர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்தக் கட்சியிலே இருக்கும்போது கலைஞரை உயர்வாகப் பேசுவது,

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

[திரு. எம். ஆர். கண்ணன்] [1975 மார்ச் 6

அந்தக் கட்சிக்குப் போனதும் தாக்கிப்பேசுவது, இதெல்லாம் என்ன என்று எனக்குப் புரியவில்லை. கட்சியில் வித்தியாசங்கள் ஏற்பட்டால் மற்ற உறுப்பினர்களுக்கு விளக்கி தனக்கு ஆதரவு திரட்டுவது அல்லவா முறை. கலைஞர் மட்டும் என்ன, நாளைக்கு யாரும் முதல்வராக வரலாம். கட்சிக் கட்டுப்பாட்டிற்குள் அடங்கி செயல்படுவதுதான் அரசியல் கட்சிக்கு அழகு. எதற்கும் ஒரு பண்பாடு இருக்க வேண்டாமா? கொள்கை அடிப்படையில் சில வேறுபாடுகள் என்றால், கொள்கையையே விட்டுவிடுவதா? திரு. ஹாண்டே எங்களுக்கு விரோதிதான் என்றாலும், சுதந்திரா கட்சியில் இருந்த வரைக்கும் அவருக்கு மரியாதை இருந்தது. இப்போது அவருடைய யோக்கியதை எங்கேயோ போய்விட்டது. [ * * * ]

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, [ * ] என்று உறுப்பினர்களைக் குறிப்பிடுவது பார்லிமென்டரியல்ல.

திரு. எம். ஆர். கண்ணன்: நான் உங்கள் கட்சியைக் குறிப்பிடவில்லை.

திரு. முனு ஆதி: திரு. எம். ஆர். கண்ணன் அவர்கள் ஆரம்பத்தி லிருந்தே, எங்களை நிதான புத்தியற்றவர்கள் [ * ] என்றெல்லாம் பேசியிருக்கிறார்கள். இப்படிப் பேசுவது அவருடைய தரத்தைத்தான் குறிக்கிறது.

திரு. எம். ஆர். கண்ணன்: கட்சி மாற வேண்டியது. உடனேயே, முன்பு இருந்த கட்சியின் தலைவர்களை எல்லாம் தூற்ற வேண்டியது. இதுவே பிழைப்பாகப் போய்விட்டது. நமக்கு என்று ஒரு கொள்கை இருந்தால் மற்றவர்களைப் பற்றி இப்படி எல்லாம் பேச வராது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுக்குக் கொடுத்த 15 நிமிஷம் முடிந்துவிட்டது. இப்போது திரு. கார்த்திசனைப் பேச அழைக்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1975 மார்ச் 6]

திரு. வீ. கார்த்திசன்: தலைவர் அவர்களே, 1975–76-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை வரவேற்று ஒரு சில வார்த்தைகளைப் பேச விரும்புகிறேன்.

நல்ல பல திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. குடி நீர் வசதி, தொழில் முன்னேற்றம், விவசாயம் இவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பது கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 15 ஆயிரம் வீடுகள் வீதம் கட்ட வேண்டுமென்று திட்டம் தீட்டி தற்போது 15 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் வறட்சியைப் போக்குவதற்கான நல்ல பல பணிகள் நடந்து வருகின்றன. தொழு நோய் பிச்சைக்காரர்களுக்குப் புது வாழ்வு அளிப்பது, கண்ணொளி வழங்கும் முகாம்களைப் பரவலாக அமைப்பது, கை ரிக்ஷாக்களை நீக்கிவிட்டு சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்குவது, உடல் ஊனமுற்றோர்க்கு நல்ல வாழ்வு தருவது ஆகிய அரிய திட்டங்கள் தீட்டப்பட்டு, அவைகள் ஒழுங்கான முறையில் செயல்பட்டு வருகின்றன. இத் திட்டங்களை எல்லாம் எண்ணிப்பார்க்கும்போது, நமது அரசு ஏழை எளிய மக்கள்மீது நல்ல எண்ணம் வைத்துக்கொண்டிருக்கிறது என்பதை கண்கூடாக அறிகிறோம்.

மேலும் நமது அரசு விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் விவசாயக் கிணறுகளை ஆழப்படுத்தல், புதிய கிணறுகளைத் தோண்டுதல் போன்ற பணிகளுக்கு நல்ல பல திட்டங்களை வழங்கியிருக்கிறது.

நம்முடைய கிராமப்பகுதிகளில் இப்போது விவசாயக் கிணறுகளுக்குப் பணம் ஒதுக்கவில்லை என்று ஒரு புகார் இருந்துகொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் இரண்டு கிணறுகளுக்கிடையே உள்ள தூரம் இத்தனை அடி இருக்க வேண்டுமென்று ஒரு விதியை வைத்திருக்கிறார்கள். அதனால் கிராம விவசாயக் கிணறுகளுக்கு அரசாங்கத்தின் உதவி கிடைக்கவில்லை. நான் முதலமைச்சர் அவர்களிடம்கூட இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். அவர்கள் அந்த விதியை தளர்த்தி, விவசாயக் கிணறுகளை ஆழப்படுத்தவும், புதிய கிணறுகளை வெட்டவும் பணம் ஒதுக்கித் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை அவர்கள் நிச்சயமாகச் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

[திரு. வீ. கார்த்தீசன்] [1975 மார்ச் 6]

மேலும் எங்களுடைய பகுதி பெரும்பாலும் கடற்கரை பகுதியாக இருக்கிறது. கடற்கரையிலிருந்து 6 மைல் தூரத்திற்கு புதிய விவசாயக் கிணறுகள் தோண்டுவதற்கு பணம் ஒதுக்கப்படவில்லை கடந்த இரண்டாண்டுகளாக. கடற்கரை பகுதியாக இருந்தாலும் விவசாயத்திற்கு ஏற்ற அளவில் தண்ணீர் தாராளமாகக் கிடைக்கிறது. ஆகையால் கடற்கரைப் பகுதிகளுக்கும் விவசாயக் கிணறுகள் தோண்டுவதற்கு பணம் ஒதுக்குவதில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கம் இந்த இக்கட்டான நேரத்திலும் கிட்டத்தட்ட 14 மணி நேரம் வரையில் இரவு-பகல் என்று விவசாயக் காரியங்களுக்கு மின்சாரம் வழங்கிவருகிறது. மேலும் இந்த நிலை நீடிக்க வேண்டும். அப்படி நீடித்தால்தான் கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் கஷ்டம்—தண்ணீர் தட்டுப்பாடு கஷ்டம்—நீங்கி விவசாய உற்பத்தி பெருகும்.

மேலும் சில இடங்களில் மின்சார இணைப்பு கேட்கும்போது, ட்ரான்ஸ்பார்மர்கள் இல்லை; கண்டக்டர்ஸ் இல்லை; இதர சாமான்கள் இல்லை என்று சொல்கிறார்கள். எப்படியாவது விவசாய உற்பத்தி பெருக வேண்டும் என்பதுதான் அனைவருடைய எண்ணமும். ஆகவே, உடனடியாக விவசாயக் காரியங்களுக்காவது, இப்போதுபட்ட சாமான்கள் இல்லை என்று சொல்லாமல் எங்கிருந்தாவது அவைகளை வாங்கிக்கொடுத்து, மின்சார இணைப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கிராமப்புறங்களில் உணவுப் பங்கீடு முறை மிகவும் குறைவாக இருக்கிறது. பட்டணங்களில் அரிசி, மைதா, சீனி, கோதுமை போன்ற உணவுப் பொருட்கள் ஒழுங்காக வழங்கப்படுகின்றன. ஆனால் கிராமப்புறங்களில் மாதத்திற்கு 4 கிலோ கோதுமை மட்டும் கொடுக்கிறார்கள். கிராமப்புறங்களில் இருப்பவர்கள் ஏழை எளிய மக்கள், பெரும்பாலும் விவசாயிகள். ஆகவே, அவர்களுக்கெல்லாம் அரிசி, கோதுமை மற்ற பொருட்கள் ஒழுங்காக கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய இராதாபுரம் தொகுதியைப் பற்றிய சில பிரச்சினைகளைக் கூற விரும்புகிறேன். அங்கு நம்பியாறு திட்டம் இருக்கிறது. நாங்குனேரி வட்டத்தில் மிகவும் வறண்ட



1975 மார்ச் 6] [திரு. வீ. கார்த்தீசன்]

பகுதி எங்களுடைய பகுதி. ஆகவே, அங்கு நம்பியாறு திட்டம் அல்லது அதை ஒரு அணைத் திட்டமாக எடுத்து, அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பச்சையாறு, குடமுருட்டி திட்டங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு பணம் ஒதுக்கப்பட்டு, வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஆனால் வேலை மெதுவாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த வேலைகளை துரிதப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல அங்கே இருக்கிற பெரிய குளங்களை மராமத்து செய்து, மடை, கால் சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திருநெல்வேலி மாவட்டத்தில் பழவூர் என்ற இடத்தில் அரிசனங்கள் அதிகமாக இருக்கிறார்கள். அங்கு மருத்துவ மனை வசதி இல்லை. அங்குள்ள மக்கள் மருத்துவ வசதி பெற வேண்டுமானால் சுமார் 10 மைல் தூரம் போக வேண்டும். ஆகையால் அங்கே ஒரு மருத்துவமனையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல அங்கே இருக்கிற உயர்நிலைப் பள்ளிக்கு ஆஸ்டல் இல்லை. அரிசன மாணவர்கள் அதிகமாக இருப்பதால், அங்கே ஒரு ஆஸ்டல் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதிக்கு மாண்புமிகு முன்னாள் வருவாய்த் துறை அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள் கடந்த மாதம் சுற்றுப்பயணம் செய்தார்கள். அங்குள்ள வறட்சி நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டார்கள். எங்கள் மாவட்டத்தில் வடக்கன்குளம் பகுதியில் குடிநீருக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஒரு "காலன்" தண்ணீர் வேண்டுமானால் 10 பைசா கொடுக்க வேண்டும். அங்கே குடிநீர் கஷ்டத்தைப் போக்குவதற்காக குடிநீர் வடிகால் வாரியம் மூலம் $7\frac{1}{2}$ லட்சம் ரூபாய் சாங்ஷனில் ஒரு திட்டம் நிறைவேற்றப்படுவதாக அறிகிறேன். விரைவிலே இத்திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இப்போது புதிய சாலைகள் போடப்படுகின்றன. அதை வரவேற்கிறேன். அதே நேரத்தில் ஆங்காங்கிருக்கிற பழைய சாலைகள் பழுதடைந்து கிடக்கின்றன. புதிய சாலைகள் போடும் போது, பழுதடைந்த அந்த பழைய சாலைகளையும் புதுப்பிக்க நிதி உதவி செய்ய வேண்டும். பழுதடைந்த சாலைகள் சரிசெய்யப்பட்டால்தான் போக்குவரத்திற்கும், பஸ்கள் போவதற்கும் வசதி ஏற்படும். ஆகவே, அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் குடிநீர் வசதி இல்லாத கிராமங்களில் எல்லாம் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் "போரிங்" போட்டு, தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் கிராம மக்களின் தேவை பூர்த்தியாகும்.

எங்கள் பகுதி கடற்கரை பகுதியாக இருப்பதால், ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப் போக ரோடு வசதியே இல்லை. அதனால் குடத்தாழை போன்ற பகுதிகளுக்கு உடனடியாக இணைப்புச் சாலைகள் போட வேண்டும். இணைப்புச் சாலைகள் போட்டால் தான் மீனவர்கள் பிடிக்கும் மீன்களை ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு எடுத்துச்செல்ல முடியும். ஆகவே எங்கள் பகுதியிலுள்ள கடற்கரை ஊர்களுக்கு உடனடியாக இணைப்புச் சாலைகள் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் காரிவயல், குண்டல் கடற்கரை கிராமங்களுக்கு இணைப்புச் சாலை போட்டு, மீனவர்களுக்கு சலுகைகள் செய்ய வேண்டும். அதோடு அரிசனங்களுக்கு நல்லமுறையில் வீடுகள் கட்டித்தர வேண்டுமென்று கேட்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. நா. வெ. குருசாமி: தலைவரவர்களே, 1975–76 ஆ ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல முற்படுகிறேன்.

இன்றைக்கு தமிழ் நாட்டிலே வேலையில்லாப் பிரச்சினை, உணவுப் பிரச்சினை, குடிதண்ணீர் பிரச்சினை, கால்நடைகளுக்கு தீவனம் இல்லாதப் பிரச்சினை போன்ற பல்வேறு பிரச்சி





அதிகமாகிக்கொண்டே போகின்றன. இவைகளுக்கெல்லாம் நாம் ஒரு நிரந்தரமான பரிகாரத்தைக் காண்பதற்கு, இந்தக் கஷ்டங்களை எல்லாம் போக்குவதற்கு இங்கே நடைபெறும் விவாதங்கள் அமையாமல் கடந்த இரண்டு நாட்களாக மாநில சுயாட்சி பற்றியும், அதற்கான விளக்கங்கள் பற்றியும் யார் கேட்பது, யார் எடுப்பது என்பதுபோன்ற பிரச்சினைகள் பற்றியே நடைபெற்ற விவாதம் அமைந்திருந்தது.

இன்று நாட்டிலே மக்கள் படும் பாட்டை எடுத்துச்சொல்லி முடியவில்லை. விலைவாசி உயர்வு, உணவு கிடைக்காத கஷ்டம், குடி தண்ணீர் கஷ்டம் இப்படி பல்வேறு வகைகளில் மக்கள் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் கஷ்டங்களைப் போக்குவதற்கு மாநில அரசோ அல்லது மத்திய அரசோ அதிகக் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை.

குறிப்பாக, தமிழ்நாட்டில் 6 கோடி ரூபாய்க்கு வரி போடப் பட்டிருக்கிறது. இந்த வரி ஏழை மக்களை பாதிக்காது என்று சொல்லப்படுகிறது. ஆனால் இந்த வரிகள் மூலம் காப்பி, சிக்கரி, தேயிலை, எண்ணெய், பிண்ணாக்கு, போன்ற பொருட்கள் விலை யேறும். ஏனென்றால் அந்தப் பொருட்களின்மீதுதான் அரசாங்கம் வரி போட்டிருக்கிறது. அந்தப் பொருட்கள் எல்லாம் ஏழை மக்கள் அன்றாடம் உபயோகப்படுத்தும் பொருட்கள்தான். இன்றைக்கு இருக்கின்ற உணவுப் பிரச்சினையினால் ஏழை மக்கள் எல்லாம் அதிக மாக உபயோகிப்பது காப்பி, போன்ற பானங்களைத்தான். இப்போது ஒரு கப் காப்பி 40 பைசா, 50 பைசா விலையாகிறது. இந்த வரியினால் 60 பைசா கூட வந்துவிடும். ஆகவே, இந்த வரிகளை குறைக்க நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

படித்து வேலையில்லாமல் இருக்கும் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பளிப்பது பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் எதுவும் குறிப்பிட வில்லை. படித்துப் பட்டம் பெற்றுவிட்டு மாவட்ட வேலை வாய்ப்புத் தேடித்தரும் அலுவலகத்தில் பதிந்து 5, 6 ஆண்டு களானாலும் வேலை கிடைக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக் கிறார்கள். ஏதாவது சில வேலைகள் வந்தாலும் ஆளும் கட்சிக் காரர்களைச் சேர்ந்தவர்களுக்குத் தான் அந்த வேலைகள் கிடைக்

கின்றன. எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கோ அல்லது ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கோ அந்த வேலைகள் கிடைப்பதில்லை. ஆகவே, இப்போது இருக்கின்ற இந்த முறைகேடுகளை மாற்றி, ஏழை பட்டதாரி மாணவர்களுக்கெல்லாம் வேலைகள் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாண்டு 2,000 ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆசிரியர்கள் நியமனம் செய்வதில் பல தவறுகள் நடைபெறுகின்றன. லஞ்சமும் ஊழலும் நடந்து கொண்டே வருகிறது. ஒரு ஆசிரியர் வேலை கிடைக்க வேண்டுமென்றால் 2,000, 3,000, 5,000 ரூபாய் லஞ்சம் கொடுத்தால்தான் கிடைக்கும். இதை கடந்த மூன்று ஆண்டுகளாக கூறிக்கொண்டு வருகிறேன். இந்த முறையை மாற்றுங்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவோ அல்லது சி.இ.ஓ. மூலமாகவோ ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும் முறைகளைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: ஆசிரியர் வேலை கிடைப்பதற்கு 2,000, 3,000 ரூபாய் லஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆசிரியர்கள் என்றால், பல்வேறு ஸ்தாபனங்களில் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள். எந்த ஸ்தாபனத்தில் இப்படி லஞ்சம் வாங்கிக்கொண்டு ஆசிரியர் வேலை கொடுக்கிறார்கள் என்று விளக்கமாகச் சொன்னால் அதை அரசாங்கம் கவனித்து, உரிய நடவடிக்கை எடுக்கும்.

திரு. நா. வெ. குருசாமி: ஊராட்சி ஒன்றியங்களில் நியமனம் செய்யப்படும் ஆசிரியர் பதவிகளுக்கு லஞ்சம் கொடுக்கவேண்டியிருக்கிறது.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: ஊராட்சி ஒன்றியங்களில் மக்கள் பிரதிநிதிகள் தலைவர்களாக இருக்கிறார்கள். பல்வேறு உறுப்பினர்கள். பஞ்சாயத்துத் தலைவர்கள் இருக்கிறார்கள். ஜனநாயக மரபின்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட அந்த நிர்வாகத்தில் இடம்பெறலாம். அவர்களே கூட இப்படிப்பட்டத் தவறுகள்





நடைபெறாமல் பார்த்துக்கொள்ளலாம். அரசாங்கம் அதில் எந்த அளவுக்கு தலையிடலாம் என்பது அவர்களுக்குத் தெரியும். அரசாங்கம் அல்லது அரசாங்க சார்பில் நடைபெறும் கல்வி ஸ்தாபனங்களில் இத்தகைய தவறுகள் நடப்பதாகத் தெரிந்தால், அதை அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தால், நிச்சயம் அதுபற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

[நண்பகல் 12-00]

திரு. நா. வெ. குருசாமி: மக்களுடைய பிரதிநிதிகளே தான், சட்டமன்ற உறுப்பினர்களே தான் வாங்குகிறார்கள் . . .

திரு. கு. காமாட்சி: சட்டமன்றத்தில் உள்ளவர்கள் வாங்குகிறார்கள் என்றால், அது எல்லோருக்குமே இழுக்கு, குறிப்பிட்டு யார் வாங்குகிறார் என்று சொல்ல வேண்டும்.

திரு. கோ. சிவபெருமாள்: சட்டமன்றத்தில் உள்ள எம்.எல்.ஏ.க்கள் அத்தனை பேரும் உங்களைச் சார்ந்தவர்கள். எந்த யூனியனில் யார் வாங்குகிறார் என்று சொல்ல வேண்டும். அதைச் சொல்ல தைரியமில்லாமல் பொதுவாக, பொதுவாக என்று சொல்வானேன்?

திரு. நா. வெ. குருசாமி: சென்ற நிதி நிலை அறிக்கையிலேயே ஒன்றியத் தலைவர்கள் வாங்குகிறார்கள் என்று தெரிவித்திருக்கிறேன். அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: ஒன்றியத்தில் இருப்பவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், அவர்கள் தவறு செய்கிறார்கள் என்றால் கண்டுபிடிப்பது யார் என்று உறுதியாகச் சொல்லுங்கள்.

திரு. முனு ஆதி: துணைத் தலைவர் அவர்களே, யார் தவறு செய்தாலும் அதைக் கண்டுபிடிப்பது அரசாங்கத்தின் பொறுப்பு இல்லையா? போலீஸ் துறையின் பொறுப்பு இல்லையா? அது யூனியன் சம்பந்தப்பட்டது. என் இலாக்கா சம்பந்தப்பட்டது அல்ல; அரசாங்கப் பள்ளிகள் சம்பந்தப்பட்டது அல்ல என்று அமைச்சர் பொறுப்பைத் தட்டிக் கழிப்பது சரிதானா?

<u>மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்</u>: ஒன்றியத்தில் நடக்கிறது என்று சொன்னார்கள். அங்கே 40-க்கும், 50-க்கும் மேற்பட்ட பெரும் தலைவர்கள் இருக்கிறார்கள். யார் இப்படி லஞ்சம் வாங்குகிறார் என்று குறிப்பிட்டுச் சொன்னால் புலன் ஆய்வுத் துறையின் மூலம் அவர் ஒன்றியத் தலைவராக இருக்கட்டும், சட்டமன்ற அல்லது பாராளுமன்ற உறுப்பினராகவே இருக்கட்டும், நடவடிக்கை எடுக்கப்படும்.

<u>திரு. நா. வெ. குருசாமி</u>: தலைவர் அவர்களே, நான் பல முறை இந்த மன்றத்திலேயே ஊராட்சி ஒன்றிய ஆணையர் லஞ்சம் வாங்கினார் என்று, இன்ன பெயர் என்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். ஆனால், இது வரையிலும் அதன் பேரில் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. குறிப்பாக இதற்கு முன்பு இருந்த ஆணையர் ஒரு மூட்டை சிமெண்டுக்கு 2 ரூபாய் லஞ்சம் வாங்குகிறார் என்று குறிப்பிட்டிருக்கிறேன். இங்கு நடந்த பேச்சை வைத்து அங்கு இருக்கிற காவல் நிலையத்திற்கு டெலிபோன் பண்ணிக் கேட்கிற போது மூட்டைக்கு 2 ரூபாய் லஞ்சம் கொடுத்ததாக எந்தவிதமான ரிப்போர்ட்டும் எங்களுக்கு வரவில்லை என்கிறார்கள். இதைப் போய் யார் ரிப்போர்ட் செய்வார்கள்? நீங்கள் சி.ஐ.டி.களைப் போட்டு விசாரித்தீர்களா? நாங்கள் எங்களுக்குத் தெரிந்த தகவல்களைக் கொடுக்கிறோம். எங்களிடம் சொல்லக்கூடிய செய்திகளைச் சொல்கிறோம். இதற்கு ஆதாரம் இருக்கிறதா, கொடுக்கும்போது போட்டோ பிடித்திருக்கிறீர்களா என்று கேட்டால் அப்படிக் கொடுத்தா நிரூபிக்க முடியும்? பொது மக்கள் சொல்வதை நாங்கள் இங்கே வந்து சொல்கிறபோது அதன் மீது அரசு கண்ணும் கருத்துமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, வறட்சிப் பணிகள் கட்சிக் கண்ணோட்டத்தோடு நடைபெறக் கூடாது என்று தலைவர் திரு. காமராஜ் அவர்கள் கூறி வந்தார்கள். கடந்த இரண்டு நாட்களுக்கு முன் வந்த செய்தி என்ன? இராமநாதபுரம் மாவட்டத்தில் நரிக்குடி பஞ்சாயத்து மக்கள் காங்கிரசுக்கு ஓட்டளித்தார்கள் என்ற காரணத்தினால் அந்தப் பகுதியில் வறட்சி நிவாரணப் பணிகள் நடைபெறாமல் இருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. இது உண்மையா? உண்மை என்றால் இது



சரியான கண்ணோட்டம் அல்ல. அந்தப் பகுதியிலும் வறட்சி நிவாரணப் பணிகள் நடைபெற தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களைப் பொறுத்தவரை கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பும் இல்லை. நெய்து வைத்திருக்கக்கூடிய துணிகளும் விற்பனைக்குப் போக முடியாத நிலைமை ஏற்பட்டுக்கொண்டு இருக்கிறது. அந்தத் துறைக்கு அதிகமான பணத்தை ஒதுக்கி, கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்து, கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்த்தால் போடப்பட்டிருக்கிற வரிகள் ஏற்கெனவே மிக அதிகமான வரியால் பாதிக்கப்பட்டிருக்கிற மக்களை மேலும் பாதிக்கக்கூடியதாகத்தான் இருக்கின்றன. இவற்றைக் குறைப்பதற்கு முன்வர வேண்டும்.

உணவு வழங்கு துறையைப் பொறுத்தவரையில் ஓரிடத்திற்கு, ஓரிடம் வித்தியாசம் காட்டுகிறார்கள். ஒரு கிராம மக்களுக்கு 15 நாட்களுக்கு 2 கிலோ அரிசி என்கிறார்கள். இன்னொரு இடத்தில் வாரத்திற்கு நான்கு கிலோ என்கிறார்கள். இது போன்ற வித்தியாசத்தை ஒழிக்க வேண்டும்.

சென்னை நகரில் ஒருவர் உணவுப் பங்கீட்டுக் கார்டை வாங்க ஆறு மாதம் நடக்க வேண்டிய அவல நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதிகாரிகள் ஒரு டோக்கனைக் கொடுத்துவிட்டு நாளை வா என்கிறார்கள். மறுநாள் போனால் "இன்று போய் நாளை வா" என்ற பல்லவியைப் பாடிக்கொண்டிருக்கிறார்கள். உடனடியாக உணவுப் பங்கீட்டுக் கார்டுகளை வழங்க எந்தவிதமான முயற்சியும் நடைபெறவில்லை என்று குற்றம் சாட்டுகிறேன். இந்தக் குறையை நீக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்து, மதுரையில் உள்ள திருமலைநாயக்கர் மகாலை ஒரு அரும்பொருள் கலைக்கூடமாக ஏற்படுத்தப் போவதாக நிதி நிலை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. திருமலைநாயக்கர் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட கல்லூரிக்கு அந்த இடத்தை ஒதுக்கிக் கொடுத்து அந்த மகாலில் அந்தக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : திருமலை நாயக்கர் மகாலே மிகுந்த வேலைப்பாடுகளுடன் கூடியதாய் ஒரு கலைக் கண்காட்சிக்குரிய இடமாகவே அமைந்திருக்கிறது. அதை மேலும் அழகு படுத்தி மக்கள் வந்து பார்த்து மகிழும் அரும்பொருள் கலைக்கூடமாக மாற்றுவது சிறந்ததா, அல்லது வேறு எந்த இடத்திலும் கட்டிக்கொள்ளக்கூடிய கல்லூரிக் கட்டிடமாக மாற்றி விடுவதா என்பதை அங்கத்தினர் அவர்கள் சொல்ல வேண்டும்.

திரு. நா. வெ. குருசாமி : அந்தக் கட்டிடம் அழகு நிறைந்த கட்டிடம் தான். ஆனால், இன்றுள்ள நிலைமையில் கல்லூரியைக் கட்ட கல்லூரி ஸ்தாபனத்திற்குப் போதுமான நிதி வசதி கிடைக்கவில்லை. ஆகவே இந்த இடத்திலேயே கல்லூரியை ஏற்படுத்துவது வசதியாக இருக்குமென்று நான் நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

திரு. நா. வெ. குருசாமி : பாசன வசதியை எடுத்துக்கொண்டால் 20.2 கோடியில் 8 திட்டங்கள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. ஆயினும் ஐந்து லட்சம், பத்து லட்சத்திற்குள் செலவாகக்கூடிய பல கண்மாய்கள் பல ஆண்டுகாலமாக கவனிக்கப்படாமல் இருக்கின்றன. அந்தத் திட்டங்களை இப்போது எடுத்துக்கொண்டால் பல பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கவும் சந்தர்ப்பம் உண்டு. அந்தக் கண்மாய்களும் செப்பனிடப்படக் கூடிய வாய்ப்பு ஏற்படும். என்னுடைய தொகுதியில் லட்சுமிபட்டி கண்மாய், தெப்பம்பட்டி கண்மாய், பாளக்கொம்பு கண்மாய், போன்றவற்றை இந்த ஆண்டே எடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. நாம் சட்டமன்றத்தில் சொல்கிறோமே தவிர போய்க் கேட்டால் ஒயர் இல்லை ; மீட்டர் இல்லை என்று எதையோ சொல்லி கனெக்ஷன் கொடுப்பதில்லை. ஆகவே, இந்த நேரத்தில் அதிக பணத்தை ஒதுக்கி விவசாயிகளுக்கு சர்வீஸ் கனெக்ஷன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





மருத்துவ வசதிகளைப் பொறுத்து இந்த அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். ஜனவரி 1 ஆம் தேதி முதல் ஒன்றிய மருந்தகத்தை அரசு மருந்தகமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி செலுத்திக்கொள்கிறேன். சரியான மருந்துகள் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அங்கு ஒரு பெண் டாக்டரை நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக என்னுடைய பகுதி வரிசைநாட்டு மலைப்பகுதி. அங்கு ஒரு மருத்துவ மனையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்பு ஏற்பட்ட வறட்சி பற்றியும், வெள்ளம் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்போது பல வேலைகள் சரிவரச் செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டை கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இப்போது நடைபெறுகிற வறட்சிப் பணிகள் சிறப்பாக நடைபெற ஆங்காங்கு சர்வ கட்சி குழுக்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மைத் துறையை எடுத்துக்கொண்டால் கிணறுகள் வெட்டுவதாகக் கூறியிருக்கிறார்கள். எல்.எம். பாங்க் மூலமாக அடிக்கிணறுகளுக்கு லோன் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால், ஆண்டிப்பட்டி, பெரியகுளம், தேனீ ஆகிய மூன்று பகுதிகளில் இருந்து மட்டும் 680 மனுக்கள் கொடுக்கப்பட்டன. நஞ்சைக்கு நூறு மீட்டர், புஞ்சைக்கு 150 மீட்டர் என்ற அளவை வைத்து பரிசீலித்து 192 மனுக்களை ஏற்றார்கள். இப்போது ஒரு சட்டம் போட்டிருக்கிறார்கள். நஞ்சைக்கு 425 அடி, புஞ்சைக்கு 790 அடி என்கிற அளவை வைத்துப் பார்க்கிறபோது விவசாயிகள் யாரும் கடன் பெறவில்லை. ஒரு கிணற்றுக்கும் இன்னொரு கிணற்றுக்கும் இடையே இவ்வளவு தூரம் இருக்க வேண்டுமென்ற அடி அளவைத் தளர்த்தி விவசாயிகளுக்கு லோன் கிடைக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது)

திரு. எம். எஸ். கே. சத்தியேந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் கொடுத்துள்ள நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்துவதன் மூலமாகவும், வறட்சிப் பகுதியில் ஏற்பட்டிருக்கிற நிலைமையைக் கருத்தில் கொண்டு வரி வஜா போன்ற காரியங்கள் மூலமாக இந்த அரசுக்கு

[திரு. எம். எஸ். கே. சத்தியயேந்திரன்] [1975 மார்ச் 6

ஏற்பட்டிருக்கிற 70 கோடி நஷ்டத்தை ஏற்றுக்கொண்ட முதல்வர் அறிவிக்கிற நிதி நிலை அறிக்கையில் அதிகமாக வரிகளைப் போடக் கூடும் என்றே நாங்கள் எல்லாம் எதிர்பார்த்தோம். ஆனால் எங்களுடைய கணிப்புக்கு மாறாக வரி எதுவும் இல்லாத ஒரு நிதி நிலை அறிக்கையைக் கொடுத்திருப்பதன் காரணமாக தமிழக மக்களது எண்ணத்தில், அவர்களது மதிப்பில் மிக உயர்ந்திருக்கிறார்கள் என்ற நிலைமையைச் சொல்லாமல் இருக்க முடியாது.

இதே நேரத்தில் மத்திய அரசில் இருந்து நம்முடைய மாநிலத்திற்கு சரியான அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இந்தக் கடுமையான வறட்சியான நேரத்தில்—உத்தரப் பிரதேசத்திலும், பீகார் பிரதேசத்திலும் வறட்சி என்று சொன்னால் 90 கோடி ரூபாயைத் தூக்கிக் கொடுக்கின்ற மத்திய அரசு—தமிழக அரசு கேட்கிறபோது 6 கோடியைக் கொடுக்கத் தயங்குகிறது ஏன் என்பதைத் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த நேரத்தில்தான் எதிர்க்கட்சி நண்பர்களை ஒத்துழைப்புத் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். எதிர்க் கட்சிகளில் இருக்கிறவர்கள் இந்த நேரத்தில் ஆளுங்கட்சி அரசின் மீது குறைகளைச் சொல்லாமல் மத்திய அரசிடம் இருந்து அதிகமான அளவு நிதி உதவியைப் பெற அரசோடு சேர்ந்து ஒத்துழைக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய முதல்வர் அவர்கள் ஒவ்வொரு நிதி நிலை அறிக்கையிலும் பல நல்ல திட்டங்களை நமக்கு வைத்து வந்திருக்கிறார்கள். நம்முடைய தமிழகத்தில் தான் இந்தியாவில் வேறு எந்தப் பகுதியிலும் இல்லாத நல்ல திட்டங்களைப் பார்க்க முடியும். பார்வை இழந்தவர்களுக்கு கண்ணொளி வழங்குகிற திட்டம், தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு இல்லங்களைக் கட்டித் தந்திருக்கிற திட்டம், மனிதனை மனிதன் வைத்து இழுப்பதை அறவே ஒழிக்க வேண்டுமென்ற மனிதாபிமான அடிப்படையில் கை ரிக்‌ஷாக்களை ஒழித்து—சைக்கிள் ரிக்‌ஷா வாங்கி அளித்திருக்கிற திட்டம், குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக குடிசைவாழ் மக்களை பல மாடிக் கட்டிடங்கள் கட்டி குடியமர்த்தியிருக்கிற திட்டம், வடிகால் வாரியத்தின் மூலமாக குடிதண்ணீரே கிடைக்காத பகுதிகளில் எல்லாம் குடிநீர் வழங்க அமைத்து வருகின்ற சிறப்பான திட்டங்கள், நிலமற்ற



1975 மார்ச் 6] [திரு. எம். எஸ். கே. சத்தியேந்திரன்]

ஏழைகளுக்கு மனைப்பட்டா வழங்கி, வீடுகள் கட்டிக்கொள்ள உதவி செய்கிற திட்டம் போன்ற நல்ல திட்டங்களை எல்லாம் நமது மாநிலத்தில்தான் பார்க்கலாம்.

இன்னும் அனாதைகளுக்கு அரசே பாதுகாப்பு அளிக்கும் வகையிலும் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார்கள். கையை இழந்தவர்கள், காலை இழந்தவர்கள் வாழ்விலே அனாதைகளாக ஆக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்கு அவர்களுக்கு பயிற்சி அளித்து சொந்தமாக வாழ்வதற்கான திட்டத்தை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் அரசுத் துறையில் பணியாற்றுகிறவர்கள் இறந்துவிட்டால் அவர்கள் குடும்பம் என்ன ஆகுமோ என்று இருந்த நிலைமையை மாற்றி, அவர்களது குடும்பத்திற்குப் பாதுகாப்பை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். இந்தி போராட்ட வீரர்களுக்கும்—இன்னும் காங்கிரஸ் காலத்திலே விடுபட்ட—சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கும் நமது முதல்வர் அவர்கள் தான் உதவி செய்ய முன்வந்தார்கள். இந்த நிதி ஆண்டில் கடற்கரை ஓரங்களில் வாழ்கிற மீனவர்களுக்கு இல்லங்கள் கட்டித் தரவும், கைத்தறி நெசவாளர்கள் பாதுகாப்பின்றி தவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக அவர்களுக்கு ஒரு பாதுகாப்புத் திட்டத்தையும் ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். அதற்காக நம்முடைய முதல்வர் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பொதுவாக மீனவர்களுக்குப் பல நன்மைகளை நாம் செய்திருந்தாலும், புதியதாக ஏற்பட்டிருக்கிற கார்ப்பரேஷன் மூலமாகவும் தமிழகத்திலுள்ள மீனவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வகை செய்ய வேண்டும். இன்றைக்கு அவர்களது தொழில் எப்படி நடை பெறுகிறது என்று பார்க்கவேண்டும். இப்போது படகு கட்டுகிற காரியத்தைத்தான் செய்துகொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இந்தத் துறையின் மூலமாக படகு கட்டுவதற்கு என்ன செலவானதோ அதைவிட இப்போது இரண்டு மடங்கு அதிகமாக ஆகிறது. இதை அரசு கருத்தில் கொண்டு அதன் நிர்வாகத்தை விரிவுபடுத்த வேண்டும். மத்திய அரசாங்கத்தில் இருந்தும், வங்கிகளில் இருந்தும் அதிகமான நிதி உதவியைப் பெற்று மீனவர்கள் பிடித்து வருகிற மீன்களை எல்லாம் வாங்கி அரசே ஏற்றுமதி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். இன்றைக்கு ஒரு சில தனி நபர்களை

[திரு. எம். எஸ். கே. சத்தியேந்திரன்] [1975 மார்ச் 6

நம்பித்தான் மீனவர்கள் வாழவேண்டிய நிலை இருக்கிறது. இதை இந்த அரசு மாற்றியாகவேண்டும். அவர்கள் பிடிக்கிற மீன்களை இந்தக் கார்ப்பரேஷன் மூலமாக அரசே கொள்முதல் செய்து வெளி நாடுகளுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யவேண்டும்.

குளங்களைத் தூர்வாருகின்ற திட்டத்தில் இராமநாதபுரம் கண்மாயை தூர்வார நமது முதல்வர் அவர்கள் அங்கு வந்திருந்த போது உடனடியாக உத்தரவிட்டார்கள். அதற்காக நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். பல நூறாண்டுகளாகத் தூர் வாரப்படாமல் கிடந்த அந்தக் கண்மாய் இந்த ஆண்டு தூர்வாரப் படுகிறது. இது அந்தப் பகுதிக்கு மிகப் பெரிய வரப்பிரசாதமாகும்.

எந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டாலும் ஊழல், ஊழல் என்கிற எதிர்க்கட்சிக்காரரர்கள் இந்தக் கண்மாய் வேலை எப்படி நடந்து வருகிறது என்பதை வந்து பார்க்கவேண்டும். அந்தக் கண்மாய்ப் பகுதியில் உள்ள நான்கு பஞ்சாயத்துத் தலைவர்களையும் கூட்டி, விவசாயப் பெருமக்கள்—கோட்டாட்சித் தலைவர் ஆகிய எல்லோரும் கூடி—யார் யார் மனுக்கள் போட்டிருக்கிறார்களோ அந்த மனுக்களைப் பரிசீலித்து பஞ்சாயத்துத் தலைவர்கள் யாரைச் சிபாரிசு செய்கிறார்களோ அவர்களைக்கொண்டு அந்த வேலை நடந் திருக்கிறது. பஞ்சாயத்துத் தலைவர்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந் தவர்கள் அல்ல. அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் 2 பேர்—ஒருவர் தனிப்பட்ட சுயேச்சை—ஒருவர் ஸ்தாபன காங்கிரசைச் சேர்ந்தவர்—இப்படி நடக்கும்போது எங்கே ஊழல், ஊழல் என்று சொல்வதற்கு இடமிருக்கிறது என்று யோசிக்கவேண்டும். இன்னும் சத்திரக்கோட்டைக் கண்மாயை செப்பனிட வேண்டும்.

தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும் பிற்படுத்தப்பட்ட மாணவர் களுக்கும் ஸ்காலர்ஷிப் பணம் கொடுக்கிறார்கள். பணம் கொடுப் பதில் வித்தியாசம் இருக்கிற நிலைமையை நான் அரசுக்கு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அதிகமான தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிதி உதவி கொடுப்பதைப் பற்றி எந்தவிதமான ஆட்சேபணையும் நிச்சயமாக இருக்கமுடியாது. ஆனால், கொடுக் கின்ற தொகை இருவருக்கும் சமமாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1975 மார்ச் 6] [திரு. எம். எஸ். கே. சத்தியேந்திரன்]

மது விலக்குக் குற்றவாளிகளைக் கோர்ட்டிலே போட்டு, நடவடிக்கை எடுப்பதைவிட, மொபைல் கோர்ட்டு மூலமாக, தண்டனை கொடுக்கின்ற நடவடிக்கையை எடுத்தால், இந்த அரசுக்கு அதிக வருவாய் கிடைக்கும் என்று நான் இந்த நேரத்திலே தெரி வித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏழைகளுக்கு, விவசாயிகளுக்கு, அரசு எடுக்கின்ற வறட்சிப் பணி நடவடிக்கைகளிலே நன்மை கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், நடுத்தர மக்களுக்கு எந்தவித வருமானமும் இல்லாத காரணத்தால், அவர்களுக்குத் தக்காவிக் கடன் கொடுத்து, வறட்சிப் பகுதியிலே யுள்ள மக்களுக்கு வாழ்க்கையை நிரந்தரமாக ஆக்கித்தர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிழக்கு இராமநாதபுரம் பகுதியிலே சிமெண்ட் தொழிற்சாலை யொன்றை அரசுத் துறையிலே ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் பகுதியிலே ஏழைகளுக்குக் கொடுக்கப்படுகின்ற குடும்பக் கார்டுகள் பலருக்கு வழங்கப்படாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்கா விட்டால், அங்குள்ள மக்கள் மிகுந்த வேதனைக்கு ஆளாவார்கள் என்று சொல்லிக்கொண்டு, குடும்பக் கார்டுகளை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலேயிருக்கிற பஞ்சாயத்துத் தலைவர்களைக் கேட்டு, இந்தக் குறைகளைக் களைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சியான நேரத்தில், இராமநாதபுரம் பகுதியில், எலெக்டிரி சிட்டி டிபார்ட்மெண்ட் அதிகமான டெப்பாசிட் கட்ட வேண்டு மென்று கேட்டிருக்கிறார்கள். வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி களில், எலெக்டிரிசிட்டி டெப்பாசிட் அதிகமாக வாங்குவதை ஒத்திப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க, குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளோடு தொடர்புகொண்டு, அந்தப் பகுதியிலேயிருக்கிற பஞ்சாயத்துத் தலைவர்களையும், ஒன்றியப் பெருந்தலைவர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் கலந்துகொண்டு, தீர்க்கவேண்டு

[திரு. எம். எஸ். கே. சத்தியேந்திரன்] [1975 மார்ச் 6

மென்று கேட்டு, இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று, எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்த துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. ஜே. ஜேம்ஸ்: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசின் கடைசி நிதி நிலை அறிக்கையை இந்த மன்றத்தில் வைத்திருக்கிறார்கள். அந்த நிதி நிலை அறிக்கையின் மீது என் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கு. காமாட்சி: திராவிட முன்னேற்றக் கழக கடைசி அறிக்கை என்று சொல்கிறாரே . . .

திரு. ஜே. ஜேம்ஸ்: திராவிட முன்னேற்றக் கழக அரசின் கடைசி நிதி நிலை அறிக்கையென்று சொன்னேன்.

இந்த நிதி நிலை அறிக்கையை இந்த மன்றத்தில் வைக்கும்போது, நாட்டிலிருக்கிற சூழ்நிலையைப் பார்க்கும்போது, பயங்கரமாகத் தோன்றுகிறது. அதிலும் குறிப்பாக, நிதி நிலை அறிக்கையில் இருக்கிற விளக்கங்களைப் பார்த்தால், வருங்காலம் இதைவிடப் பயங்கரமாக இருக்கும் என்ற ஐயப்பாடு தோன்றக் கூடிய வகையில் சென்ற சில மாதங்கள் வரையிலும் தன்னிறைவு பெற்று செழிப்பாகத் திகழ்ந்த தமிழ்நாடு இன்று தீப்பொறி பறக்கின்ற அளவுக்கு வறட்சி மிகுந்த நாடாகக் காட்சியளிக்கின்றது என்று சொன்னால் அதற்கு முழுப் பொறுப்பையும் இந்த அரசுதான் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இன்றையதினம் நாட்டில் உணவுப் பஞ்சம் எந்த அளவுக்கு இருக்கிறது? விலைவாசி ஏற்றம் எந்த அளவுக்கு இருக்கிறது? குடி தண்ணீர்ப் பஞ்சம் எந்த அளவுக்கு இருக்கிறது? இதுபோன்ற பிரச்சினைகள் எல்லாம் இன்று நாட்டை வாட்டிவிட்டது என்பதைப் பார்க்கும்போது, இந்த நிதி நிலை அறிக்கையிலாவது இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்போம் என்ற முறையில் ஏதாவது கூறி இருக்கிறார்களா என்று பார்த்தால், நிச்சயமாக அது வருத்தத்தை அளிக்கக்கூடியதாகத்தான் இருக்கிறது.



1975 மார்ச் 6] [திரு. ஜே. ஜேம்ஸ்]

ஆக, இந்த நிதி நிலை அறிக்கைமீது கருத்துக்களைக் கூறுவதற்கு முன்பாக, 1974–75-வது ஆண்டு திருத்திய மதிப்பீட்டுக் கணக்கைப் பார்த்தால் சில விரும்பத்தகாத முறைகேடுகள் இங்கு காணப்படு கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1974–75-ம் ஆண்டு மதிப்பீட்டைக் கழிந்த மார்ச் மாதம் இந்த மன்றத்தில் முதலமைச்சர் வைத்தபொழுது ரூ. 2.56 கோடி துண்டு விழும் என்ற அளவில் அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். ஆனால், இன்றையதினம் திருத்திய மதிப்பீட்டில் ஏறத்தாழ ரூ. 15.83 கோடி துண்டு விழுவதாகவும், அதற்குரிய காரணங்களைக் கூறும் பொழுது, மத்திய அரசு தரும் உதவி எதிர்பார்த்ததை விடக் குறைந்துவிட்ட காரணத்தாலும், வறட்சிப் பகுதிகளில் வரி விலக்கு அளித்ததாலும், வறட்சி நிவாரணப் பணிகளுக்கு ரூ. 12 கோடி ஒதுக்கியதன் காரணமாகவும், அரசு ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணம் தந்து, பின் கூடுதல் அகவிலைப்படி தந்ததற்காக ஏறத் தாழ ரூ. 24 கோடி ஒதுக்கியதன் காரணமாகவும், இன்னும் பல்வேறு காரணங்களாலும், இன்றையதினம், ரூ. 2.56 கோடி ரூ. 15.83 ஆக உயர்ந்து விட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இந்தக் கணக்கைப் பார்த்தால், வறட்சி நிவாரணத்திற்காகவும், அரசு ஊழி யர்களுக்கு டி.ஏ. தந்ததற்காகவும், இரண்டையும் சேர்த்துப் பார்த் தாலும் கூட ரூ. 36 கோடி வருகிறது. மற்றைய 5 இடம் களுக்கும் நிச்சயமாக குறைந்த ரூ. 50 கோடியாவது செலவாகும் என்றால் பற்றுக்குறை ரூ. 15-83-க்குப் பதிலாக 50 கோடி பற்றுக்குறை யாவது ஏற்பட்டிருக்கும். அதற்கு மாறாக இப்பொழுது ரூ. 15-83 கோடி என்று சொன்னால், அதற்குக் கூறியிருக்கிற காரணங்கள் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்று நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு இன்னொரு விளக்கத்தை நான் கூற விரும்புகிறேன். கடந்த ஆண்டு இந்த நிதி நிலை அறிக்கையை வைக்கும்போது, விற்பனை வரி மூலமாக எவ்வளவு வரும் என்று எதிர்பார்க்கப் பட்டதோ, அதைவிட ரூ. 40 கோடி அதிகமாக வரவு காணப்படு கின்றது, இந்தத் திருத்திய மதிப்பீட்டில். ஆக, இவ்வளவு முரண் பாடான கணக்குகளை, நிதிநிலை அறிக்கையில் காணும்போது, அந்த இலாகா சரியாகச் செயல்படவில்லை, சரியான கணக்குகளை இந்த அரசு அவையில் வைக்கவில்லையென்ற குற்றச்சாட்டையும் நான் கூற விரும்புகிறேன்.

அடுத்ததாக, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற 1967-ம் ஆண்டில் நிதி நிலை ரூ. 194 கோடியாக இருந்தது. இன்றையதினம், 1975–76-ம் ஆண்டு, ரூ. 501 கோடியாக உயர்ந்திருக்கிறது. இந்த 9 ஆண்டுக் காலத்தில் ரூ. 307 கோடி அதிகரித்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க இயலாது. இந்த ரூ. 307 கோடி எங்கிருந்து வரவாக வந்தது என்பதைப் பார்க்கும் போது, நிச்சயமாக இந்த அரசு பல்வேறு வரிகளை மக்கள் மீது சுமத்தியதுதான் இந்த அளவு வரவாகக் காண்பிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அவர்கள் கொடுத்த வாக்குறுதியான, வரியைக் குறைத்து, வசதியைப் பெருக்குவோம் என்று கூறியதை, நடைமுறையில் கொண்டு வரவில்லை. வரியைக் குறைப்பதற்குப் பதில், பல மடங்காகக் கூட்டி, மக்கள் வசதியை கூட்டவில்லை. இப்பொழுது சுமத்தியிருக்கிற வரிகள் அத்தனையும் ஏழை—எளியவர்கள் மீதுதான் விழுகிறதே தவிர, வசதியுள்ளவர்கள் மீதல்ல என்பதையும் நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்போது, ரூ. 26 கோடி பற்றாக்குறையாக இருக்கிறது. இந்த ரூ. 26 கோடியைச் சரிக்கட்டுவதற்கு வரிகளை விதித்திருக்கிறார்கள், அதன் வாயிலாக ரூ. 6 கோடி வருமானம் வரும் என்று கூறுகிறார்கள். இந்த வரி விதிப்பு எந்தத் திசையை நோக்கிச் செல்கிறதென்றால், காபி, தேயிலை, எண்ணெய், பருத்தி, பருப்பு போன்ற சாதாரண ஏழை மக்கள் உபயோகிக்கின்ற அத்தியாவசியப் பண்டங்கள் மீது சுமத்தப்படுகிறது. நிச்சயமாக இதன் பலன் விலைவாசியை அதிகரிக்கப் போகிறது; ஏழை மக்கள் அதிகமாகப் பாதிக்கப்படவிருக்கிறார்கள் என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆக, இந்த அரசு ஏழை எளிய மக்களுக்காக இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கவில்லை.

மத்திய அரசு நிதிநிலை அறிக்கையைப் பார்த்தால், தேயிலை, பீடி போன்று ஏழை எளியவர்கள், சாதாரணமாக உபயோகிக்கின்ற பொருள்களின் மீதுதான் அவர்களும் வரியை சுமத்தியிருக்கிறார்கள். ஆகவே, வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற ஏழை மக்கள், குறிப்பாக, ஏழைத் தொழிலாளர்கள், சாதாரணமாக இடையில் ஒரு முழம் துண்டைக் கட்டிக் கொண்டு, ஒரு நாளைக்கு மூன்று முறை ஒரே பீடியை உபயோகித்து, ஒரு கப் சாயாவில் காலத்தைக் கழித்துக்





கொண்டிருக்கிற ஏழைகளுடைய வயிற்றில்தான் இந்த இரண்டு அரசுகளும் அடித்திருக்கின்றன என்று சொன்னால் அது மிகையாகாது என்பதை நான் நிச்சயமாக இந்த நேரத்தில் கூற விரும்புகிறேன். அதற்காக, இரு அரசுகளையும் வன்மையாகக் கண்டிக்க விரும்புகிறேன்.

[பிற்பகல் 12-30]

இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கை சமதர்மக் கொள்கை என்று சொல்லப்படுகிறது. அதை நிறைவேற்றுகிற முறையில் வரிவிதிப்பு இருக்கிறதா என்றால் இல்லை. சமதர்மக் கொள்கை என்று சொன்னால் "டாப் தி ரிச், பேட் தி பூவர்" [Top the rich and Pat the Poor] என்று முன்னாள் முதலமைச்சர் அண்ணாதுரை அவர்கள்கூட இந்த மாமன்றத்திலே கூறியிருக்கிறார்கள், அது மட்டுமல்ல, எந்தச் சமதர்ம அரசாக இருந்தாலும் சொல்கிற கடைப்பிடிக்கிற கொள்கையாகும். ஆனால் இந்த அரசு ஏழை எளியவர்கள்மீது வரியை விதித்திருக்கிறது. ஆனால் பணக்காரர்கள், வசதி படைத்தவர்கள் நிச்சயமாக இந்த அரசினால் நன்றாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சாட்ட விரும்புகிறேன்.

மத்திய அரசாங்கம் ஏதோ கறுப்புப்பணத்தை வேட்டையாடப் போவதாகச் சொல்லியது. ஆனால் இன்று அந்த முயற்சி நின்று விட்டது. இந்த அரசாங்கம் அர்பன் லேண்ட் சீலிங் கொண்டுவரப் போவதாகச் சொன்னார்கள். அன்றைய தினம் சினிமா தொழிலை நாட்டுடைமையாக்கப் போவதாகச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். தேர்தல் அறிக்கையில்கூட கூறினார்கள். ஆனால் அந்த முயற்சியிலே இந்த அரசாங்கம் ஈடுபடவில்லை. அப்படி அந்த முயற்சிகளிலே ஈடுபட்டிருந்தால் இப்படி வரிவிதிக்கவேண்டியிராது. அந்த முயற்சியில் அரசாங்கம் ஈடுபடாததற்குக் காரணம் அதுவும் ஒரு திட்டமிட்ட செயல் என்பதைத் தெரிவித்து கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் 1975 ஆம் ஆண்டு நெருங்கிக் கொண்டிருக்கிறது. தேர்தலுக்குப் பணம் தேவைப்படுகிறது. கம்பெனி முதலாளிகளை வரி விதிப்பிலிருந்து பாதுகாத்தால்தான் அவர்களிடமிருந்து தேர்தலுக்குப் பணம் வாங்க வசதியாக இருக்கும் என்ற முறையிலேதான் இருக்கிறார்கள். ஆகவே இந்த நிதி நிலை அறிக்கை தி.மு.க. தேர்தல் நிதி வசூலுக்கு வகை செய்யும் நிதி நிலை அறிக்கை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1975 மார்ச் 6

தி.மு.க. அரசு தனது கையில் ஒப்படைக்கப்படுகின்ற பணம் சரியான முறையிலே ஏழை எளியவர்களுக்குச் செலவழிக்கப்படவில்லையென்ற குற்றச்சாட்டைச் சுமத்த விரும்புகிறேன். ஏழை மக்களுக்காகப் பயனுள்ள வகையில் பணச் செலவு செய்யவில்லையென்றாலும் நிர்வாகத்திலே திறமையாக நடக்கவில்லையென்றாலும் தேசம் நன்மை அடையாது. கழிந்த ஆண்டு ஆடிட் கணக்கைப் பார்த்தால் எத்தனையோ மோசடிகள் எவ்வளவோ ரூபாய் பாழ் படுத்தப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க முடியும்.

கழிந்த ஆண்டு அரசாங்கப் பணம் வவுச்சர் இல்லாமல் செலவிடப்பட்ட தொகை 17 கோடியே 33 லட்சம் ரூபாய். சாங்ஷன் இல்லாமல் செலவு செய்யப்பட்டது 86 லட்சம் ரூபாய். வசூலாகாத அட்வான்ஸ் தொகை 50 லட்சம் ரூபாய். தள்ளுபடி செய்தது 33 லட்சம் ரூபாய், இப்படிப் பல கோடி ரூபாய்கள் ஒவ்வொரு ஆண்டும் அரசாங்கத்தால் ஏழை எளியவர்களுக்காகச் செலவு செய்யவேண்டிய பணம் மோசடி செய்யப்பட்டு மக்கள் பயன் அடையாத முறையிலே செலவு செய்யப்படுகிறது. நிச்சயமாக ஏழை எளிய மக்களுக்காக ஒதுக்கப்படுகிற பணம் விரயமாக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. கு. காமாட்சி தலைமை)

பல்வேறு திட்டங்களுக்காக என்று கோடிக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்குகிறோம் நிதி நிலை அறிக்கையில். ஆனால் எந்த அளவுக்குச் செலவழிக்கப்படுகின்றது என்பதைப் பார்த்தால் கடந்த ஆண்டு பொதுப் பணித் துறைக்கு 11 கோடி ரூபாய் ஒதுக்கினோம், ஆனால் செலவு செய்தது 125 ரூபாய்தான், 11 கோடி ரூபாயும் மீதம் வந்திருக்கிறது. அதுபோல் தொழில் துறையில் 15 கோடி ரூபாய் ஒதுக்கினோம். அதிலே 5 கோடி மீதம் வந்துவிட்டது. பாசனத் துறைக்கு 12 கோடி ரூபாய் ஒதுக்கினோம், 1 கோடி ரூபாய் மீதம் வந்துவிட்டது. ஆகவே நாம் ஒதுக்குகின்ற பணம் அரசால் சரியாகச் செலவு செய்யப்படவில்லை மிச்சப்படுத்துகிறார்கள், சரியாகச் செலவு செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விளம்பரத்திற்காகப் பொதுப்பணம் எப்படி விரயம் ஆக்கப்படுகிறது என்பதைப் பார்க்கவேண்டும். அரிசன் ஹவுஸிங் அண்ட் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் என்ற ஒரு நிறுவனம் நிறுவப்பட்டு இருக்கிறது. அதன் நோக்கம் என்ன



V2ll,31.'N75
2,N75.6431

1975 மார்ச் 6] [திரு. ஜே. ஜேம்ஸ்]

வென்றால் பல ஆண்டுகளில் 2 லட்சம் வீடுகள் கட்டி அரிசன மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்பது திட்டம். இந்த ஆண்டு பத்தாயிரம் வீடுகள் ஏழைகளுக்குக் கட்டிக்கொடுக்க வேண்டு மென்று திட்டம். அதற்காக எவ்வளவு விளம்பரங்கள்? ஒவ்வொரு நாளும் 100 வீடுகள் திறப்பு விழா என்று நடத்தினால் எல்லா பத்திரிகைகளிலேயும் விளம்பரப் படுத்தப்படுகிறது. மத்திய அமைச்சரை விட்டு அல்லது முதலமைச்சரை விட்டுத் திறக்கச் சொல்லி விளம்பரங்கள் செய்யப்படுகின்றன என்று சொன்னால் . . .

திரு. நா. வீராசாமி: மத்திய அமைச்சர்கள் கலந்துகொண்ட காரணத்தால் விளம்பரம் செய்தது தவறு என்று சொல்ல முடியுமா? அது ஒரு விழா, நல்ல விழா, எல்லா [illegible] விளம்பரம் வந்திருக்கிறது, "நவ சக்தி"க்குக் [illegible] அந்த விளம்பரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த மக்கள் [illegible] பயன்பெறுகிறார்கள் என்ற செய்தி எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது, அந்த விளம்பரம் "நவ சக்தி"க்கும் கொடுக்கப்பட்டிருக்கிறதே, ஏன் குறை கூறுகிறார்கள் என்று தெரியவில்லை.

61690

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: தலைவர் அவர்களே, அரிசன மக்களுக்காகக் கட்டப்படுகிற வீடுகளை மத்திய அமைச்சர்கள் திற[illegible] பதற்குக் காரணம் மத்திய அரசின் நிதி [illegible] அமைச்சர் உதவி நமக்கு மிகமிகத் தேவைப்படுகிறது [illegible]வுத் துறை அமைச்சர் உதவித் தேவைப்படுகிறது, அதைப்போன்றே வீட்டு வசதித் துறை அமைச்சர் உதவித் தேவைப்படுகிறது—காரணம் நாம் அவர்களுக்குக் கட்டிக்கொடுக்கிற வீடுகள் கட்டுவதற்குப் பணம் மாநில அரசினுடைய நிதியிலிருந்து ஒதுக்கப்படுவது அல்ல, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடனாக வாங்கி நாம் கட்டிக் கொடுக்கிறோம். ஆகவே, அவர்களுடைய தயவு நமக்குத் தேவைப் படுகிறது. அவர்கள் இங்கே வந்து திறக்கிறபோது அவர்களுக்குப் பணம் கொடுக்கிறோம், வேலை நடக்கிறது மேலும் பணம் கொடுப்போம் என்ற திருப்தியுடன் செல்லக்கூடிய நிலைமை ஏற்படு கிறது. மேலும் கொடுக்க வேண்டுமென்ற இதய சுத்தியோடு அவர்கள் செய்கிறார்கள். ஆகவே அதைக் குறை சொல்ல வேண்டா மென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1975 மார்ச் 6

திரு. ஜே. ஜேம்ஸ் : "நவ சக்தி"க்குக் கொடுக்கவில்லையென்றோ அல்லது வேறு ஏதோ பத்திரிகைகளுக்குக் கொடுத்துவிட்டார்கள் என்றோ நான் குறைபடவில்லை. இது ஒரு நல்ல திட்டம், பத்திரிகையிலே ஒருதடவை செய்தால் நல்லது. ஆனால் 10-ம் தேதி 100 வீடுகள் திறக்கப்பட்டன. அதற்கு அத்தனை பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு 16 ஆம் தேதி 100 வீடுகள் திறக்கப்பட்டன, அப்போதும் அத்தனை பத்திரிகைகளிலும் விளம்பரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு தேதியிலே இன்னொரு 100 வீடுகள் திறக்கப்படுகின்றன. அப்போதும் அத்தனை பத்திரிகைகளிலும் விளம்பரங்கள் கொடுக்கப்படுகின்றன. இதற்கெல்லாம் எவ்வளவு செலவாகிறது? அரிசன மக்களுக்காக ஒதுக்கப்படுகிற பணம் யாருடைய சொந்தப் பணமும் அல்ல. ஏழை எளியவர்களுக்காக ஒதுக்கப்படுகிற அரசு பணம் விரயம் செய்யப்படுகிறது என்று குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். இதற்கு என்ன தேவை? அமைச்சர் அவர்கள் கூறிய கருத்தை நான் ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : இப்படி விளம்பரம் செய்யப்படுவதால் இந்திய உபகண்டத்திலே உள்ள அத்தனை மாநிலங்களிலே உள்ள அரசுகளும் இந்தச் சேவை எந்த எந்த வகையிலே செய்யப்படுகிறது, நம்முடைய மாநிலம் அரிசன மக்களுக்காக எப்படி ஈடுபடுகிறது என்பதை உணரக்கூடிய முறையிலே காந்தியடிகள் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் சொன்ன வழியில் இதய சுத்தியோடு அவர்கள் முன்னேறுவதற்கான நல்ல திட்டங்களை மற்ற மாநிலங்களும் செய்ய வேண்டுமென்ற முறையிலேதான் செய்யப்பட்டது. அதைப் பெரிய செலவாக எடுத்துக்கொள்ள முடியாது. ஒரு பெரிய சமுதாயம், அவர்கள் நல்ல முறையிலே முன்னேற வேண்டும், அதற்கு எல்லா மாநிலங்களும் செய்ய வேண்டுமென்ற நல்ல கருத்திலேதான் அப்படிச் செய்யப்படுகிறதே தவிர வேறல்ல.

திரு. ஜே. ஜேம்ஸ் : சமூக நலத் திட்டங்கள் பல செய்யப்படுகின்றன. அது வரவேற்கத்தக்க அம்சம். எனக்கு இருக்கிற வருத்தமெல்லாம் என்ன என்றால் ஆரம்பத்தில் முதியோர் பென்ஷன் திட்டம் கொடுத்தார்கள், இப்போது அது என்ன ஆயிற்று எங்கே போயிற்று என்றே தெரியவில்லை. அது கைவிடப்பட்டதாக அறிகிறேன். அதேபோன்றுதான் ஒவ்வொரு திட்டமும். ஒரு



1975 மார்ச் 6] [திரு. ஜே. ஜேம்ஸ்]

திட்டத்தை ஆரம்பித்தால் அந்தத் திட்டத்தை மாநில அளவில் முடித்துவிட்டு அடுத்தத் திட்டத்திற்குப் போவதில்லை. பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு வட மாவட்டங்களிலே ஆரம்பிக்கப்பட்டு நிறுத்தப்பட்டுவிட்டது. அதைப்போன்று ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டம் வட பகுதியிலே உள்ள மாவட்டங்களிலே அமலாக்கப்பட்டுவிட்டது; மற்ற மாவட்டங்களிலே விடப்பட்டுவிட்டது. இந்த ஆண்டு அனாதைகளுக்காக ஒரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அதுவும் இங்கேதான் செயல்படுகிறது. இப்படி ஆரம்பிக்கப்படுகிற எந்த ஒரு திட்டமும் மாநில அளவில் செயல்படுத்தப்படுவதில்லை, அப்படிச் செயல்படுத்தாமல் அடுத்த திட்டத்தை ஆரம்பித்தால் சரியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : தலைவரவர்களே, இந்தத் தொழுநோய்ப் பிச்சைக்காரர் விடுதிகள் 15 மாவட்டங்களில் 10 மாவட்டங்களில் திறந்தாகிவிட்டன. 5 மாவட்டங்களிலே இடம் பார்த்து தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எப்பொழுதுமே திட்டம் என்றால், மகாத்மா காந்தி அவர்கள் காலத்திலேகூட கள்ளுக்கடைகள் மூட வேண்டுமென்ற திட்டம் தமிழ்நாட்டில் சேலத்தில்தான் ஆரம்பித்தோம். அதனால் ஏற்படும் அனுபவங்களைப் பார்த்து அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்துவது என்பது என்றைக்கும் இருக்கும் வழக்கமாகும். அந்த வழக்கத்தின் அடிப்படையில்தான் இது நடக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : அடுத்தபடியாக, அரசின் சிக்கன நடவடிக்கை. நாட்டிலேயுள்ள பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்காக சிக்கன நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்வதாகச் சொல்லி அந்த அடிப்படையில் புதிதாக நியமனங்கள் செய்யக் கூடாது என்று இந்த அரசு ஆணை பிறப்பித்தது. ஆசிரியர்களைக்கூட நியமிக்க வேண்டாமென்று ஆணை பிறப்பித்தது. ஆனால் இன்றைக்கு எல்லா நிலைகளிலும், எல்லா முறைகளிலே சிக்கனம் கடைப்பிடிக்கப்படுகிறதா என்று பார்த்தால் கிடையாது. ஆசிரியர்களைக் கூட நியமிக்க வேண்டாமென்று ஆணை பிறப்பித்திருந்தது. ஆசிரியர்கள் நியமிக்கப்படாமல் இருந்தால் பள்ளிகளில் என்ன ஏற்படும்? மாணவர்களுக்குச் சரியான முறையில் பயிற்சி கொடுக்க வழியில்லாமல் ஆங்காங்கே பள்ளிக்கூடங்களில் கஷ்டம் ஏற்படுகிறது. அது போல மற்ற இலாக்காக்களிலும் தேவைப்படும் நிர்வாகிகள் இல்லை என்றால் நிச்சயமாக நிர்வாகத்தைச் சரியாகச் செய்ய வழியில்லாமல்

இருக்கும். ஆனால் சிக்கனத்திற்காக இவைகளையெல்லாம் செய்கிறோம் என்றாலும் அந்த அளவிற்குச் சிக்கனத்தை எல்லாத் துறைகளிலேயும், எல்லா முறைகளிலேயும் கடைபிடித்தால் நாம் அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆனால் இந்த அரசு கடந்த இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால் முப்பெரும் விழா என்ற பெயரில் மாநிலம் முழுவதும் எந்த அளவில் நடத்தினார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நாட்டிலே இன்றைக்கு மின்சாரப் பற்றாக்குறை எந்த அளவிற்கு இருக்கிறது? 60 சத விகிதம் வரை வெட்டு ஏற்பட்டிருக்கிறது. இனிமேல் 80 சத விகிதம்கூட வெட்டு இருக்கும் என்ற சூழ்நிலை இருக்கும்பொழுது அந்த முப்பெரும் விழா மாநிலம் முழுவதும் கொண்டாடப்பட்டு எந்த அளவிற்கு மின்சாரம் விரயம் செய்யப்பட்டது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். ஏறக்குறைய 15 லட்சம் ரூபாய் மதிப்புள்ள மின்சாரத்தை முப்பெரும் விழாவிற்காகச் செலவிட்டிருப்பதாக நான் அறிகிறேன். நான் கூறுவதெல்லாம் மின்சாரப் பற்றாக்குறை இந்த அளவில் இருக்கும் பொழுது மின்சாரத்தை நாம் இவற்றிற்கெல்லாம் விரயம் செய்ய வேண்டுமா என்பதை அரசாங்கம் உணர வேண்டும். அதுமட்டுமல்ல, இந்த முப்பெரும் விழா நடத்துவதற்கு மாநிலம் முழுவதும் எந்த அளவிற்கு எந்த முறையில் பணம் வசூலிக்கப்பட்டது என்பதை அரசு உணர வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களில், அதுமட்டுமல்ல, உணவு தானியம் விநியோகம் செய்யும் கூட்டுறவுச் சங்கங்களில்கூட 100 ரூபாய், 200 ரூபாய் என்று கட்டாயமாக வசூலிக்கப்பட்டது. உணவு தானியம் விநியோகம் செய்யும் இம்மாதிரி இடங்களில் நன்கொடைகளைப் பெற்றுக்கொண்டால் அவர்கள் . . .

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, ஒரு தவறான தகவலை அவைக்குத் தருகிறார்கள். கட்டாயப்படுத்தி எங்கெங்கேயோயிருந்து விளம்பரம் வாங்கியதாகச் சொன்னார்கள். 15 லட்சம், 20 லட்சம் அரசாங்கமே செலவு செய்தது என்பதுபோலவும் கூறுகிறார்கள். முன்னேற்றக் கழகம் ஒரு விழாவைக் கொண்டாடியது. அதற்காக மின்சாரம் தேவைப்பட்டது. அதற்காக அரசிடம் எழுதி முன்னேற்றக் கழகம் கேட்டது. அதற்கான பணத்தை முன்னேற்றக் கழகம் கொடுத்தது. அப்படி முன்னேற்றக் கழகம் பணம் செலுத்தித்தான் மின்சாரம் பெற்றதே தவிர பணம் செலுத்தாமல் பெறவில்லை. அவர்கள் சொல்வதுபோல் 15 லட்சம், 20 லட்சம் அல்ல, வேண்டுமானால் நாளைக்குச் சரியான தகவலைக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அவர்கள்கூடக் கொண்டாடினார்கள், காமராஜர் பிறந்தநாள் விழாக் கொண்டாடினார்கள். எனவே, இப்படி தமிழகத்தில் மட்டுமல்ல, உலகம் முழுவதுமே விழாக்கள் கொண்டாடப்படுவது புதிது அல்ல. அப்படித்தான் முன்னேற்றக் கழகமும் தன்னுடைய வெள்ளிவிழாவைக் கொண்டாடியது. எனவே, தவறான தகவலைச் சொல்ல வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.



திரு. ஜே. ஜேம்ஸ்: முப்பெரும் விழா கொண்டாடியதை நான் குறை சொல்லவில்லை. ஆனால் அதற்காக மின்சாரம் விரயம் செய்யப்பட்டதைத்தான் குற்றச்சாட்டாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். பணங்கூட முறையாக வசூலிக்கப்படவில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். உணவு தானிய டெப்போக்களில் இம்மாதிரி நன்கொடைகளை வசூலிப்பதால் என்ன விளைவுகள் ஏற்படுகின்றன என்பதைப் பார்க்க வேண்டும். அவர்கள் விநியோகம் செய்யும் உணவு தானியங்களை ஏழைகளுக்குக் கொடுக்கும்பொழுது, அவர்கள் நன்கொடை கொடுத்தார்களே அதை ஈடு செய்வதற்காக அதைப்போல பல மடங்கு லாபம் அடையும் வகையில் விற்று, ஏழைகளின் வயிற்றில் அடித்து விநியோகம் செய்கிறார்கள். ஆகவே, இந்த முறைகள் விரும்பத் தக்கவை அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், இந்த முப்பெரும் விழாவை திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தியது என்று மாண்புமிகு நண்பர் வீராசாமி அவர்கள் கூறினார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் மதுரையிலே நடந்த ஒரு நிகழ்ச்சியைக் கூறுகிறேன். மதுரையில் அந்தப் பாலத்தில் "டெகொரேஷன்" நடந்தது. அதை நடத்தியவர்கள் அந்த வழியிலே டிராஃபிக்கை குளோஸ் செய்துவிட்டு, டி.ஐ.ஜி.யே. ரோட்டிலே வந்து நின்று அவருடைய மேற்பார்வையில் காரியங்கள் நடந்தன. இதுதேவைதானா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

அது மட்டுமல்லாமல், மதுரையில் நடந்த விழாவில் மதுரை மேலமாசி வீதியில் முதலமைச்சரவர்கள் கலந்துகொண்ட கூட்டம் நடைபெற்றது. அந்த இடம் ப்ரொஹிபிட்டட் ஏரியா; அந்த புரொஹிபிட்டட் ஏரியாவில் கூட்டம் நடந்தது. ஒரு மாநில முதல்வர் பங்குகொள்ளும் கூட்டம் முறையான இடத்தில் நடைபெற

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1975 மார்ச் 6

வேண்டும். ஒருவேளை முதலமைச்சரவர்களுக்குத் தகவல் இல்லாமல் இருந்திருக்கலாம். இருந்தாலும்கூட அவற்றை நடத்தியவர்கள் பொறுப்பாகச் செய்திருக்க வேண்டும் என்று சொல்லி அந்தக் குற்றச்சாட்டைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்காகப் பல ஊர்களில் ஊர்வலங்கள் நடந்தன. அதில் அரசாங்க சிப்பந்திகள் அதிகமாகப் பங்கெடுத்துக் கொண்டு, அரசாங்க வாகனங்கள், அரசாங்க வேன்கள், அரசாங்க வண்டிகள் அனைத்தும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. குறிப்பாக ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன், பேசின் பிரிட்ஜ் பவர் ஹவுசில் உள்ள வேன்களையும், டிரக்குகளையும், ஜெயிண்டுகளையும் பயன்படுத்தியிருக்கிறார்கள் . . .

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். பொதுவாக இந்த மன்றத்தில் ஒரு மரபைக் கடைபிடிக்கிறோம். சில விதிமுறைகள் இருக்கின்றன. எந்தக் குற்றச் சாட்டைக் கூறினாலும் ஆதாரத்துடன்தான் கூற வேண்டும். அதிகாரிகள் கலந்து கொண்டார்கள், அரசாங்க சிப்பந்திகள் கலந்து கொண்டார்கள், வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன என்று பொத்தாம்பொதுவிலே சொல்வது முறையல்ல. எந்த அதிகாரி கலந்து கொண்டார்? எந்த வாகனம் பயன்படுத்தப்பட்டது? எந்த ஊர்வலத்தில் அப்படி நடந்தது? என்று முறையாகச் சொல்ல வேண்டும். நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில் காமராஜர் பிறந்த நாள் விழாவில் அரசாங்க வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன என்று "போட்டோ" எடுத்து, இந்த எண் என்று சொன்னோம். அப்படிச் சொல்வதை விட்டுவிட்டு பொதுவாகச் சொல்வது நல்லதல்ல.

திரு. ஆலடி அருணா: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். ஒரு விவகாரத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் கூறினார்கள். மின்சார இலாக்காவைப் பற்றிக் கூறினார்கள். இங்கே மின்சார அமைச்சர்கூட இருக்கிறார்கள். எனவே சம்பந்தப்பட்ட அமைச்சர் இங்கே இருக்கிறார், ஆனால் . . . (குறுக்கீடு) இவரே ரூலிங் கொடுத்துவிடுவார் போல் இருக்கிறது. நான் சபாநாயகரைக் கேட்கிறேன். இங்கே ஒரு சபாநாயகர் இருக்கிறாரோ என்று எனக்குச் சந்தேகமாக இருக்கிறது.



1975 மார்ச் 6]

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, (மணியடிக்கப்பட்டது) இன்னும் 5 நிமிடங்களில் முடித்து விடுகிறேன். இந்த முப்பெரும் விழா மாநிலமெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதற்காக மாண்புமிகு அமைச்சர்களெல்லாம் ஆங்காங்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்றார்கள். ஆனால் இதற்கான நிகழ்ச்சி நிரலை யார் தயாரித்தளிக்க வேண்டும்? நிச்சயமாக வீராசாமி அவர்கள் கூறுவதைப்போல் திராவிட முன்னேற்றக் கழகம்தான் அதை நடத்தியது என்றால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரோ அல்லது வட்டச் செயலாளரோ நிகழ்ச்சி நிரலைத் தயாரித்திருக்க வேண்டும். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்டச் செயலாளர் நிகழ்ச்சி நிரலைத் தயாரித்து, அமைச்சர்களுடைய கெஜட்டெட் பி.ஏ. வழியாக சர்க்குலேஷன் செய்யப்பட்டிருக்கிறது. அதைக்கூடப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் அந்த நிகழ்ச்சிகள், அந்த புரொகிராம்கூட எதிர்க்கட்சிகளுக்கும் அனுப்பப்பட வேண்டுமா?

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் கூறுகின்ற கருத்தை ஆளுங்கட்சித் தரப்பிலே மறுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கழகக் கூட்டங்களில் அமைச்சர்கள் கலந்துகொள்ளும் நேரத்தில் அரசாங்கப் படி வாங்குவதில்லை. கழகத்தின் சார்பிலேயே வழங்குவதற்கு வழிவகை செய்திருக்கிறோம். ஒரு விழாவிலே கலந்துகொண்டு கழகக் கூட்டத்திலேயும் கலந்துகொண்டால் அரசாங்கப் படி வாங்குவதில்லை என்பதை ஜேம்ஸ் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, நண்பர் திரு. ஆறுமுகம் அவர்களுக்கு நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்திற்குச் சுற்றுப் பயணம் வந்தார்கள். அந்த நிகழ்ச்சி நிரலை தலைவரவர்களின் அனுமதியோடு நான் படிக்கிறேன்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1975 மார்ச் 6

சு.ப. எண் 58/74

தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் அவர்களின் சுற்றுப்பயணத் திட்டம் :—

30—12—74 & 31—12—74 குமரி மாவட்டச் செயலாளர் திரு. திரவியம் அவர்கள் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகள்.

ஜி. கே. பக்கிரிசாமி,
அரசிதழ் பதிவுபெற்ற நேர்முக உதவியாளர்.

என்று இருக்கிறது.

இதுதான் எனக்குக் கிடைத்தது. இதில் வேறு ஒன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தத் தொகுதியில் அமைச்சர் அவர்கள் சுற்றுப் பயணம் செய்கிறார்கள் என்று அறிவிப்பதுதானே தவிர, வேறு ஒன்றும் இல்லை. அதிலே தவறு ஒன்றுமில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : அதையும் நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். தொகுதியில் அமைச்சர் சுற்றுப்பயணம் வரும்போது அதற்கு நிகழ்ச்சி நிரல் தயார் செய்வது திராவிட முன்னேற்றக் கழக மாவட்டச் செயலாளரா அல்லது அமைச்சரின் செயலாளரா?

திரு. சி. ஆறுமுகம் : மாவட்டச் செயலாளர் சுற்றுப்பயண நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்வது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டு இணைந்துக் கொள்ளப்படுகிறதே தவிர இதிலே வேறு பிரச்சினை இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. நா. வீராசாமி : அமைச்சர் அவர்கள் சுற்றுப் பயணம் செய்ய வேண்டுமென்றால் நாங்கள் எழுதி பி.ஏ.-க்களிடத்தில் கொடுத்துவிடுகிறோம். பி.ஏ.க்கள் அதற்காகத்தான் இருக்கிறார்கள். ஏற்கெனவே, ஜோதி வெங்கடாசலம் அவர்கள் அமைச்சராக இருந்திருக்கிறார்கள். அவர்களாவது எழுந்து நிலைமையை விளக்கலாம்.



1975 மார்ச் 6]

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்திற்கு வந்து நேசமணி பாலத்திற்குக் கல்நாட்டு விழா நடத்தினார்கள். அதற்குப் பிறகு அந்தத் திட்டம் என்ன வாயிற்று என்றே தெரியவில்லை. இன்றையதினம் இந்த நிதி நிலை அறிக்கையிலும் இடம் பெற்றதாகத் தெரியவில்லை. அந்தப் பணியைத் துரிதமாக நடத்தி முடித்துக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இது போன்று அணைக்கரை பாலம், குழித்துறை ஆற்றில் திக்குறிச்சிப் பாலம், மூலாற்றுமுகத்தில் ஒரு பாலம், அருமனையில் மாறப்பாடி பாலம், சாமியார் மடம் சமீபம் பாம்பூர் ஓடையில் இருக்கும் பாலத்தை விஸ்தரிப்பது. அருவிக்கரையில் மாத்தூர் குமரக்குடியை இணைக்கும் பாலம், போன்ற பாலங்களையும் அமைத்துத் தர வேண்டும். கன்னியாகுமரி ஜில்லாவில் ஒரு ரப்பர் ஃபாக்டரி அமைக்க வேண்டும்.

இப்போது அரசு ஏழைகளுக்குப் பட்டா வழங்கும் திட்டத்தில் பல சீர்கேடுகள் இருக்கின்றன. அதிகாரிகள், ஒரு ஏக்கர் நிலம் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்றால் நிலத்தின் பெறுமானம் ஐயாயிரம் ரூபாயாக இருந்தால் பாதித் தொகையை அதிகாரிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இந்த அளவு அந்த இலாகாவில் ஊழல் நடைபெறுகிறது. இந்த நிகழ்ச்சி கல்குளம் வட்டத்தில் நடைபெறுகிறது. மக்கள் அரசுக்கு மனு செய்திருக்கின்றனர். இதனால் ஏழைகளுக்குப் பலன் ஏற்பட முடியாத நிலை ஏற்படுகிறது, இந்தக் குறிப்பிட்ட நிகழ்ச்சியின் மீது விஜிலென்ஸ் மூலம் நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

சேலம் உருக்காலைத் திட்டத்தில் எப்படி மத்திய அரசு மாநில அரசைப் புறக்கணித்துக் கொண்டிருக்கிறதோ அதே போன்றுதான் திருநெல்வேலி–கன்னியாகுமரி–திருவனந்தபுரம் ரயில் பாதை போடும் திட்டம் ஆமை வேகத்தில் போய்க் கொண்டிருக்கிறது. ஒருவேளை காங்கிரஸ், ஸ்தாபன காங்கிரஸ் தொடர்பு முறிக்கப்பட்டு விட்ட காரணத்தாலோ என்னவோ அது கைவிடப்பட்டுவிடுமோ என்ற ஐயப்பாடு இருக்கிறது. இந்த அரசு மத்திய அரசிடம் கூறி அந்தத் திட்டத்தைத் துரிதப்படுத்த வேண்டும். அதற்காக நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் நிலம் ஆர்ஜிதம் செய்தும் இதுவரை நிலச் சொந்தக்காரர்களுக்கு காம்பன்சேஷன் கொடுக்கப்படவில்லை.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1975 மார்ச் 6

இந்திப் போராட்ட தியாகிகளுக்கெல்லாம் உதவி அளித்தது போல் கன்னியாகுமரி ஜில்லாவில் மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு அளிக்கப்படவில்லை. அதிலே இறந்த நான்கு பேருக்கு இதுவரை எந்தவித பண உதவியும் கொடுக்கவில்லை. அதைக் கொடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

குலசேகரம் மருத்துவ மனையை 50 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாக விஸ்தரிக்கவேண்டும். வறட்சி நிவாரணப் பணித் திட்டத்தில் சேர்த்தாவது திருப்பரப்பு வலது கால்வாயை, சிதறல், வெள்ளாங்கோடு பஞ்சாயத்துக்களுக்கும் விஸ்தரிக்கவேண்டும். இது பற்றி 17—2—75-ல் கூடிய டி.டி.சி.யில் தீர்மானம் கூட நிறை யாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆலடி அருணா : பாயின்ட் ஆப் ஆர்டர் சார் . . .

(மணி அடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டருக்கு எல்லாம் ஒன்றும் இல்லை.

திரு. ஆலடி அருணா : பிரச்சினையைப் பேச விடமாட்டேன் என்கிறீர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகுத் தேவர் . . .

திரு. ஆலடி அருணா : கொஞ்சம் கூட நியாயம் கிடையாதா?

I have a right to raise a point of order. You are denying me that right . வேண்டுமென்றே மறுக்கிறீர்கள். சொல்லுவதற்கே வாய்ப்பு இல்லை என்றால் எப்படி?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : I am not allowing you. திரு. அழகுத் தேவர்...நீங்கள் பேசுங்கள்.

(திரு. அழகுத் தேவர் பேச எழுந்தவுடன் திரு. ஆலடி அருணாவும் நின்று கொண்டு பேசிக் கொண்டே இருந்தார்.)



1975 மார்ச் 6]

திரு. எஸ். அழகுத் தேவர் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையில் நல்ல முறையில் பல திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள். வறட்சிப் பணிகளைப் பொறுத்து நல்ல முறையில் பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். நல்ல பல அம்சங்கள் இதிலே இருக்கின்றன.

திரு. ஆலடி அருணா : பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று கேட்காமலே தாங்கள் அனுமதி மறுப்பது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடைசியாகச் சொல்லலாம்.

திரு. ஆலடி அருணா : இவர் பேசி முடித்தவுடன் கூற சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகுத் தேவர்—நீங்கள் பேசுங்கள்.

திரு. எஸ். அழகுத் தேவர் : இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை வறட்சி நிவாரணப் பணி நடந்து கொண்டிருக்கிறது. பொதுவாக இராமநாதபுரம் மாவட்டம் பின்தங்கிய பகுதி. எவ்வளவோ பணம் செலவழிக்கப்பட்டும் அந்த மாவட்ட மக்களுக்கு நல்லது செய்ய முடியாத சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது.

அழகர் கோயில் அணைக்கட்டுத் திட்டம் வேண்டுமென்று நீண்ட காலமாகக் கேட்டு வந்தும் நிறைவேற்றப்படாத நிலையே இருந்து கொண்டிருக்கிறது. எஞ்சினியர்கள் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிகிறது. சர்வே எல்லாம் முடிந்து விட்டதாகச் சொல்லுகிறார்கள். அதனை விரைவில் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை பல காரியங்கள் செய்யப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன. குடிதண்ணீர் வசதி இல்லை, ரோடு வசதி இல்லை. சிவகாசியிலிருந்து புதுப்பட்டிவரை ரோடு நன்றாக இருக்கிறது. அதற்குப் பிறகு ரோடு மிக மோசமாக இருக்கிறது. அந்த ரோடு வழியாகத்தான் விவசாயிகள் விளை பொருள்களை எடுத்துச் செல்ல வேண்டும். ஆகவே, 11 மைல் தூரம் அந்த ரோட்டை நல்ல முறையில் போட்டுத் தர ஆவன செய்ய வேண்டும்.

[திரு. எஸ். அழகுத் தேவர்] [1975 மார்ச் 6

(பிற்பகல் 1-00)

ஆகவே, அந்த ரோடுகளைச் செப்பனிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அந்த ஏரியாவில் இன்னும் சில கிராமங் களுக்குக் கார்டு முறையில் அரிசி விநியோகம் செய்யப்படாமல் இருக் கிறதென்று தெரிகிறது. அப்படிப்பட்ட கிராமப் பகுதிகளுக்கு அரிசி விநியோகத்தையும், நவ தானிய விநியோகத்தையும் விஸ்தரித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வறட்சியைப் பொறுத்தவரை நமது நாட்டில் என்று மில்லாத அளவில் வறட்சி இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே குடிநீர் வசதி, கிராமப் பகுதிகளுக்கு ரோடு வசதி போன்ற இவைகளை எல்லாம் நல்ல முறையில் அமைத் துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதியில் அருஷ்ணு நதி ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த ஸ்தலத்தில் பாலம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சில கிராமங்களுக்கு இன்னும் இணைப்புச் சாலைகள் போடாமல் இருக்கிற நிலை இருந்துகொண்டிருக்கிறது. இவைகளையும் பஞ்ச நிவாரண வேலையில் சேர்த்துக்கொண்டு சாலைகளைச் செப்பனிட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தச் சந்தர்ப்பத்தைத் தந்த தங்களுக்கு நன்றியைக் கூறி விடைபெறுகிறேன்.

திரு. சி. இராமநாதன்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, 1975–76-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது கலந்து கொண்டு உரையாற்றுகிற வாய்ப்பை நல்கியமைக்காக முதலாவது என் நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிற அறந்தாங்கி தொகுதி தஞ்சை மாவட்டத்திலிருந்து பிரிந்து இன்றைய தினம் புதிதாக அமைந்திருக்கிற புதுக்கோட்டை மாவட்டத்தில் இணைக்கப்பட்டிருக் கிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் இணைக்கப்பட்ட முதலாவது ஆண்டிலேயே நாங்கள் கண்டிராத அளவிற்கு பஞ்சத்தை எதிர் நோக்குகிற பரிதாப நிலை ஏற்பட்டிருக்கிறது. வழக்கம்போல பல சோதனைகளுக்கிடையே சாதனைகளைச் செய்து இன்றையதினம் திறமை பெற்றிருக்கிற தமிழக அரசு கிட்டத்தட்ட 57 கோடி ரூபாயை இந்த ஆண்டிலும் வருகிற ஆண்டிலும் ஒதுக்கித் தந்து அதிலே ஒரு கோடி ரூபாய்க்கு மேல் வறட்சிப் பகுதியான புதுக் கோட்டை மாவட்டத்திற்கு ஒதுக்கித் தந்திருப்பதன் மூலம் நீர்ப்



1975 மார்ச் 6] [திரு. சி. இராமநாதன்]

பாசன ஏரிகள் தூர் வாரப்பட்டும் கால்வாய்கள் பராமரிக்கப்பட்டும், குடிநீர் இல்லாத இடங்களில் இன்றையதினம் கிணறுகள் ஆழப் படுத்தப்பட்டும் குடிநீர் வாரியத்தின் மூலம் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டும் குடிநீர்ப் பிரச்சினைத் தீர்க்கப்பட்டிருக்கிறது.

இன்றையதினம் இப்படிப்பட்ட செயல்கள் செய்யப்பட்டு வறட்சியை எதிர்த்துப் போராடி வெற்றி கண்டிருக்கிறது. இதைத் தமிழக அரசு செய்திருக்கிற சாதனையாக நாம் கருதவேண்டும். பொதுவாக புதுக்கோட்டை மாவட்டம், நான் சார்ந்திருக்கிற அறந்தாங்கி தொகுதியினுடைய ஒரு பகுதியைத் தவிர்த்து மற்ற பகுதிகளெல்லாம் மழை நீரை நம்பி வாழ்கிற பகுதிகளாகும். அதிலே இருக்கிற கிணற்றுப் பாசனத்தை நம்பி வாழ்கிற பகுதிகள் மழை இல்லாத காரணத்திஞல் இன்றையதினம் ஏரிகளில் நீர் வறண்டு போனதோடல்லாது கிணறுகளில் நீர் வறண்டு பாசனம் செய்ய முடியாத அளவிற்குத் துர்பாக்கியமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நில நீர் ஆய்வுக்குழு ஆய்வுரைப்படி புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆயிரம் அடிக்குக் கீழே 500 அடிக்குக் கீழே ஆழ் குழாய்க் கிணறு களை அமைப்பதன் மூலம் விவசாயிகள் நல்ல பலனைப் பெற முடியும் என்ற நிலை உருவாகியிருக்கிறது.

அறந்தாங்கி வட்டத்தில் இருக்கிற ஏம்பல், மணமேல்குடி, கரூர், ஆவணத்தாங்கோட்டை போன்ற பகுதிகளில் அமைக்கப்பட்ட ஆழ் குழாய்க் கிணறுகள் "ஆர்டிசான் ஊற்றுக் கிணறுகள்" ஆக வருகின்ற நிலைமையைப் பார்க்கிரும். தனிப்பட்ட நபர்கள் ஆழ் குழாய்க் கிணறுகளை அமைக்க வேண்டுமாஞல் கிட்டத்தட்ட 50 ஆயிரம் ரூபாய் 60 ஆயிரம் ரூபாய் செலவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அப்படி செலவு செய்தாலும் கூட, நேற்றையதினம் இங்கே பேசிய காங்கிரஸ் கட்சி சட்ட மன்றத் தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள் குறிப்பிட்டதைப்போல அது ஜி.ஐ. பைப்புகளாக இருந்தாலும், இரும்பு பைப்புகளாக இருந்தாலும், போடப்படுகிற பைப்புகளெல்லாம் சீக்கிரத்தில் கெட்டுப்போகிற காரணத்திஞல் தனிப்பட்ட நபர்கள் இவைகளை நம்பிப் போடுவதற்கு அஞ்ச வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அவர் குறிப்பிட்டதுபோல இந்த பைப்புகள் தண்ணீரால் கெடக் கூடாத அளவிற்கு தயாரிக்கப் பட வேண்டும். சில இடங்களில் பிளாஸ்டிக் பைப்புகளைப் பயன் படுத்துவதாக கேள்விப்படுகிரும். அது பிளாஸ்டிக் பைப்புகளாக இருந்தாலும், அல்லது ஜி.ஐ. பைப்புகளாக இருந்தாலும், அல்லது இரும்பு பைப்புகளாக இருந்தாலும் அல்லது சிமெண்டில் செய்யப்

பட்ட பைப்புகளாக இருந்தாலும் எந்த அளவிற்கு விவசாயிகள் அதிகத் தொல்லையின்றி இப்படிப்பட்ட குழாய்க் கிணறுகளை அமைக்க முடியும் என்பதைப் பற்றி துரிதமாக ஆராய வேண்டும்.

இன்றையதினம் இருக்கிற நிலைமையில் தண்ணீரால் கெடாமல் இருப்பதற்கு ஜி.ஐ. பைப்புகளாக இருந்தாலும், இரும்பு பைப்பு களாக இருந்தாலும் அவைகளுக்கு ஒரு தனிப்பட்ட வர்ணம் பூச வேண்டுமென்று சொல்கிறார்கள். அத்தகைய வர்ணம் பூசுவதற்கு, வெள்ளி பூசுவது போன்ற செலவாகும் என்று கூறுகிறார்கள். இந்த நிலைமையை மாற்றி அமைத்துக் குழாய்க் கிணறுகளை அமைப்பவர் களுக்கு எளிதாக இலகுவான வகையில் குழாய்களை அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று நம்முடைய அரசு சிறு குடியானவர்கள் நீர் ஏற்று சங்கங்கள் என்று கிராமங்கள்தோறும் உருவாக்கியிருக் கிறது. சிறு குடியானவர்களை ஒன்று திரட்டி குடியானவர்களுக்கு இது போன்ற குழாய்க் கிணறுகளை அமைத்துத் தர வேண்டுமென்ற திட்டத்தை சில இடங்களில் நிறைவேற்றியிருக்கிறது. இதைத் துரிதப்படுத்தி, இன்னும் இல்லாத இடங்களிலே சங்கங்களை நிறுவியும், ஏற்கெனவே அமைக்கப்பட்ட சங்கங்கள் செயல்பட உதவியும் இந்தத் திட்டத்தை துரிதப்படுத்தி நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று புதுக்கோட்டை மாவட்டம் காட்டுப் பகுதி நிறைந்த பகுதியாகும். இன்றையதினம் அந்த மாட்டத்தில் இருக்கிற காட்டிலாகாவிற்குச் சொந்தமான இடங்களில் யூகலிப்ட்ஸ், முந்திரி போன்ற மரங்களைப் பயிரிடுகின்றனர். அந்த மரங்களிலிருந்து கிடைக்கிற வருவாய் என்ன என்பதை விட, இது போன்று வன இலாகாவிற்குச் சொந்தமான இடங்களை அண்ணா பண்ணை போல 100 ஏக்கர் 200 ஏக்கர் உள்ள பண்ணைகளை அரசு நிர்வகித்து ஆழ் குழாய்க் கிணறுகளை அங்கே ஏற்படுத்தினால் நிச்சயமாக நம்முடைய பொருளாதார திட்டத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு பேருதவியாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன். அதே போன்று அறந்தாங்கி தொகுதியில் விவசாய இலாகாவின் மூலம் பரவாக்கோட்டை, கரிசைக்கோட்டை, திருநாடு ஆகிய பகுதி களில் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு இன்னும் மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. இதைத் துரிதப்படுத்தினால் பல நூறு ஏக்கர்





நிலங்கள் இன்றையதினம் பயன் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

என்னுடைய தொகுதியில் இருக்கிற பகுதிகள் கல்லணைக் கால்வாய் மூலம் பாசனம் பெறுகின்றன. என் தொகுதி கடைக்கோடி பகுதியாக இருக்கிறது. இந்தக் காரணத்தினால் காவிரி நீர் வருவதற்குக் கால தாமதம் ஏற்படுகிறது. அப்படி வருகின்ற நீரும் முறையாக வந்து சேருவதற்கு சில இடர்பாடுகள் இருக்கின்றன. அறந்தாங்கியில் ஓடுகிற மருதாங்குடி ஆறு தண்ணீர் கிழேயும், கால்வாய் தண்ணீர் மேலேயும் போகக் கூடிய அளவிற்கு பாலம் கட்டியிருக்கிறார்கள். அந்த பாலத்தின் மூலம் தண்ணீர் போகிற போது மழை காலங்களில் வெள்ளத்திலிருந்து கரைகளைப் பாதுகாப்பதற்கு இரண்டு மதகுகளை அமைத்திருக்கிறார்கள். வறட்சியின் கொடுமையை அனுபவித்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலும் அங்கேயிருக்கிற சில அதிகாரிகள் இரண்டு, மூன்று தடவை அவைகளைத் திறந்து விட்டு விட்ட காரணத் தினால், ஒரு குறிப்பிட்ட ஏரி பாசனம் பெற வேண்டுமென்பதற்காகச் செய்த சிறு தவறினால், அறந்தாங்கி தாலுகாவில் இருக்கிற கடைக் கோடிப் பகுதிகள் கிட்டத்தட்ட 10, 12 கிராமங்கள் இன்றையதினம் சாவியாக போகக் கூடிய அளவிற்குப் பெரும்பாலான நிலங்கள் பட்டுப் போய்விட்டன. இது போன்ற தவறுகள் இனிமேலும் நடை பெறாமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய தொகுதியில் இருக்கிற வெள்ளையாற்றின் குறுக்கே கீரனூர், வீரமங்கலம் பகுதிகளில் அணைக்கட்டுகளையும், பாம்பாற்றின் குறுக்கே திருப்பின்னவாசலில் அணைக்கட்டையும் கட்டித் தர வேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன். கட்டியிருக்கிற அணைக் கட்டுகளின் உயர் மட்டப் பகுதிகளுக்குத் தண்ணீர் நேரடியாகக் கொடுப்பதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டு, பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றி கூறி முடிக் கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன்: பேரவைத் தலைவரவர்களே, இந்த மன்றத்தில் 1975–76 ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை வைக்கப் பட்டிருப்பதின் மீது என்னுடைய கருத்துக்களை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இங்கே வைக்கப்பட்டிருக்கும் அறிக்கை வரலாறு காணாத அளவுக்கு ஏற்பட்டு இருக்கும் வறட்சி நிலையைப் போக்க வழிவகை செய்யும் வகையில் நல்ல திட்டங்களைக் கொண்டுள்ளதாக இருக்கும்

[திரு. துரை கோவிந்தராசன்] [1975 மார்ச் 6

என்று எதிர்பார்த்தேன். ஆனால் அத்தகைய திட்டங்கள் எதுவும் காணவில்லை என்பதற்காக உள்ளபடியே நாம் வேதனை அடைகிறோம்.

கடலில் இருக்கும் நீரைத் தூய்மைப்படுத்தி குடிநீர் ஆக்குவதற்காக கண்டுபிடிப்புகள், தற்போதுள்ள இந்த நேரத்தில், இந்த நாட்டில் தண்ணீர் இல்லாமல் வறண்டு கிடக்கிற பகுதி மக்களுக்கு கடல் நீரைக்கொண்டு குடிநீர் தருவதற்கு, ஏதாவது திட்டங்கள் அறிவிக்கப்பட்டு இருக்கிறதா என்றால், உள்ளபடியே அப்படிப்பட்ட திட்டங்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

நீர் வளங்களைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் மழையாலும், காவிரியாலும் கிடைக்கப் பெறும் தண்ணீரில் 50 சத விகிதம் தண்ணீர் கடலை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. அதைச் சிறுகச் சிறுக ஆங்காங்கே அணைகளைக் கட்டி சேமித்து வைக்கிற திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், எந்த விதமான திட்டங்களும் இல்லை.

அப்படியே சில நல்ல திட்டங்கள் இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிறது என்றாலும், அது கடலில் புகுந்து முத்து எடுப்பதற்கு பதிலாக நத்தை எடுத்தார்கள் என்று சொல்வார்களே அது போல், அந்தத் திட்டங்களில் மக்களுக்கு நன்மை இருந்தாலும், அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் குறைகள் இருக்கின்றன என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

பாசன வசதி அடிப்படையில் ரூ. 20.2 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் புதுக்கோட்டை மாவட்டம் குறித்து நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாகவும், சிறப்பாகவும் அங்கே அமைச்சர் பெருமக்கள் வந்து ஆடம்பர விழாக்கள் நடத்தி, அதன் மூலம் பல திட்டங்களைத் தொடங்கி வைத்தார்கள். ஆனால் அந்தத் திட்டங்கள் எதுவும் செயல்முறைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. இதைப் பார்க்கிற நேரத்தில், ஒரு பழைய பழமொழி நினைவுக்கு வருகிறது. "இருங்காளூர் கணக்கன் இருந்தும் கெடுத்தான் செத்தும் கெடுத்தான்" என்று சொல்வார்கள். அதைப்போல், என்னுடைய தொகுதி கந்தர்வக்கோட்டை தஞ்சை மாவட்டத்தில் இருந்த போதும் சரி, இப்போது புதிதாக புதுக்கோட்டை மாவட்டத்தில் சேர்ந்த பிற்கும் சரி, எந்தவிதமான முன்னேற்றத்தையும் அடையவில்லை.



1975 மார்ச் 6] [திரு. துரை கோவிந்தராசன்]

குறிப்பாக கல்வியை எடுத்துக்கொண்டால், இந்த ஆண்டு வருகிற திட்டத்தில் 5 உயர்நிலைப் பள்ளிகளை ஏறத்தாழ 14 லட்ச ரூபாய் செலவில் பொதுக் கல்வியுடன் தொழிற் கல்வி, வணிகக் கல்வி என பல்வகைப் பயிற்சி அளிக்கும் உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றும் திட்டம் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அதே நேரத்தில் என்னுடைய தொகுதியான ஈச்சங்கோட்டையில் உள்ள பள்ளி, இருக்கும் இடம் மாட்டுத் தொழுகை போன்று இருக்கிறது என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன்.

சிறு பாசன திட்டங்களைப் பொறுத்தவரையில் பல்வேறு திட்டங்கள் போடப்பட்டு இருக்கின்றன. கடலென விரிந்து கிடக்கும் அத்தனைப் பகுதிக்கும் அந்தத் திட்டங்கள் பயன் அளிக்கிற வகையில் இல்லாமல், பூம்புகாரைச் சுற்றிச் சுற்றி குளம் கட்டுவதும், கலைகளை வளர்க்கிறோம் என்று சொல்லி 101 அடியில் தேர் எழுப்பு வதற்கும் அசையாத தேராக இருந்த திருவாரூர் தேரை அசைய வைப்பதற்கும், மகாபலிபுரத்தில் இருக்கும் தேரை பூம்புகாருக்கு கொண்டு செல்வதும் ஆகிய அப்படிப்பட்ட பணிகளுக்குத்தான் இந்த நிதி நிலை அறிக்கையில் இடம் வந்து இருக்கிறது என்று மெத்தப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் கண்ணன் அவர்கள் சொன்னார்கள். கட்சி மாறி இருப்பவர்களைப் பற்றிச் சொன்னார்கள். அவர்களுக்கு நான் மெத்தப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். தி.மு.க. உறுப்பினர் அத்தனை பேரும் குற்றவாளிகள் என்று சொல்லவில்லை. நல்லவர்களும் இருக்கிறார்கள். அதிலே இருக்கிற 1–2 குற்றவாளிகள் கட்சியைக் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறிக்கொள்கிறேன்.

அதோடு, 1944-ம் ஆண்டில் பெரியாரால் துவக்கப்பட்ட திராவிடர் கழகத்திலிருந்து தன்னை விடுத்துக்கொண்டு, 1949-ல் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இயக்கத்தை ஆரம்பித்து, இந்த நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய ஆட்சி பீடம் ஏறியது. ஆனால் அதை கட்சி மாறி வந்தவர்கள் என்று எடுத்துக்கொள்ளவில்லை. அதே முறையில் இதையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சி நிலைமையை பற்றி எடுத்துக்கொண்டால், இன்றைக்கு இராமநாதபுரம் மாவட்டத்திலும், புதுக்கோட்டை மாவட்டத்திலும் அதிகமான அளவுக்கு வறட்சி நிலை இருக்கிறது. அங்கேயுள்ள

[திரு. துரை கோவிந்தராசன்] [1975 மார்ச் 6

மக்கள் படியரிசி 7 ரூ. கொடுத்து வாங்கிச் சாப்பிட முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு நாளைக்கு ரூ. 3 சம்பளம் கொடுக்கவேண்டுமென்ற திட்டத்தை அமலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக இங்கே வேளாண்மைத் துறையைப் பற்றிப் பேசப்பட்டது. ஆடுதுரை 31, பூசா 33 போன்ற புதிய ரக நெல்லை வேளாண்மைப் பல்கலைக் கழகம் கண்டுபிடித்துள்ளது. அது வரவேற்கத்தக்கதொன்றாகும். தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஆளும் கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப் பேற்ற நேரத்தில் 35 லட்சம் டன் தான் இந்த மாநிலத்தின் உணவு உற்பத்தியாக இருந்தது. அன்றைக்கு அண்ணா அவர்கள் கோவையிலும், சென்னையிலும் ஒரு ரூபாய்க்கு ஒரு படியரிசித் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால் இன்றைக்கு பல்வேறு முறைகளில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கியும்கூட, 12 வயது முதல் ஆரம்பித்து 60–70 என்று கூட பார்க்காமல் குடும்பக் கட்டுப்பாடு செய்தபின்பும், பல நிலங்களில் முப்போக சாகுபடி முறை கொண்டு வந்தபின்பும், இந்த நாட்டில் விலைவாசி குறையவில்லை, அரிசித் தட்டுப்பாடு நீங்கவில்லை என்று சொன்னால், இதற்குக் காரணம் இந்த அரசிடம் திட்டவட்டமான கொள்கையில்லை என்பது தான் பொருளாகும்.

இதையெல்லாம் பார்க்கிற நேரத்தில், ஊழல் ஊழல் என்று சொன்னால், கோபம் வருகிறது. நான் ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். முப்பெரும் விழா என்று சொன்னால் அதற்காக திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் கோபப்பட வேண்டியது இல்லை. நான் சொல்லும் முப்பெரும் விழா தஞ்சையில் நடைபெற்றுள்ளது. அந்த முப்பெரும் விழா கூட்டுறவு மத்திய வங்கி நடத்தியது. அவர்கள் மத்திய வங்கி ஊழியர்களை நிரந்தரமாக்கியதற்கும், நிரந்தரமாக்கிய ஊழியர்களுக்கு பதவி உயர்வு கொடுத்ததற்கும், கூட்டுறவு நாணய சங்கங்களில் விறுவிறுப்பாக வசூல் செய்ததற்கும் அவர்களுக்குப் பரிசு கொடுப்பதற்கும் என்று முப்பெரும் விழா நடத்தியிருக்கிறார்கள். அதற்குச் செலவு செய்வதற்காக ரூ. 50,000 எடுத்து இருப்பதாகத் தெரிகிறது. அந்த 50,000 ரூபாயில் வாழை கட்டுவதற்கு மட்டும் 943 ரூ. செலவு செய்து இருக்கிறார்கள். நாம் கூட்டுறவு நாட்டுயர்வு என்று சொல்லிக்



1975 மார்ச் 6] [திரு. துரை கோவிந்தராசன்]

கொண்டிருக்கிறோம். ஆனால் கூட்டுறவு சங்கத்தினர் இப்படி வாழை மரம் கட்டுவதற்கு மட்டும் செலவு செய்திருப்பது நல்லதா என்பது என்னுடைய கேள்வியாகும்.

சாலை அமைப்பைப் பற்றி ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். பல்வேறு சாலைகள் அமைப்பதற்கு இங்கே திட்டம் போடப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் ஏரிகளையும் தூர் எடுக்க வேண்டும். ஒரு ஏரியின் அளவு 100 ஏக்கர் என்று இருந்தால் அதில் 20 ஏக்கர் தூர் எடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால் கிட்டத்தட்ட 70 ஏக்கர் பரப்பளவில் என்க்ரோச்மென்ட் இருப்பதால் அவர்கள் நாங்கள் அனுபவித்துக்கொண்டு வருகிறோம், அதனால் அந்த இடத்தை விட்டு நகரமாட்டோம் என்று சொல்கிறார்கள். அதனால் நாம் திட்டமிட்டபடி செயல்பட முடியவில்லை. அதைச் செய்வதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தலைவரவர்களே, இந்த நேரத்தில் நான் உங்களை ஒன்று கேட்டுக்கொள்கிறேன். எனக்குத் தாங்கள் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். சிலர் "ரிவால்வர்" போன்றவைகள் வைத்துக் கொள்ள அனுமதி பெற்று இருக்கிறார்கள். நான் இந்த மன்றத்திற்கு வருவதற்கு 3 அடி கம்பாவது வைத்துக்கொள்ள அனுமதி தர வேண்டும் . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: கம்பு எடுத்து வருவதற்கு என்ன ஆபத்து இருக்கிறது, அதைப் பேரவைத் தலைவரிடத்தில் முன்பே கூறியிருக்க வேண்டும்.

<u>திரு. துரை கோவிந்தராசன்</u>: அதற்கு பின்னால் வருகிறேன் கொஞ்சம் பொறுங்கள்.

<u>திரு. கு. காமாட்சி</u>: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். யார் யாரோ ரிவால்வர் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள்? ஆகவே, எனக்கு 3 அடி கம்பு வேண்டுமென்று சொல்கிறார்? யார் யார் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று சொன்னால், இந்த மன்றத்தில் மற்ற உறுப்பினர்களும் பாதுகாப்பாக வருவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதற்காகக் கேட்கிறேன்.

<u>திரு. துரை கோவிந்தராசன்</u>: யார் என்று நான் சொல்லவில்லை. யார், யாரோ, லைசென்ஸ் உள்ளவர்கள் துப்பாக்கியை வைத்திருக்கிறார்கள். சட்ட மன்ற உறுப்பினர்கள் விடுதியில் பல பேர் கத்தியைக் கொண்டு வந்து காட்டி மிரட்டியிருக்கிறார்கள்.

[1975 மார்ச் 6

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றதாக உறுப்பினர் அவர்கள் இதுவரை கூறவில்லையே என்னுடைய கவனத்திற்குக் முன்னுடியே கொண்டு வந்திருக்கலாம். விவாதத்தில் பேசும்போது திடீரென்று எங்களுக்குப் பாதுகாப்பு கொடுங்கள் என்றெல்லாம் பேசுவது முறையல்ல. உறுப்பினர்கள் இந்த மாதிரி நிகழ்ச்சிகளைக் கண்டால் உடனடியாக எனக்குத் தெரிவிக்கலாம். எந்தப் புகார்களுக்கும் அவ்வப்போது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் : அன்று திரு. வெங்கா அவர்களைக் கத்தியால் குத்தியபோது அந்தச் சம்பவத்தை நான் பார்த்தேன். உடனே, குத்தியவர்களை விரட்டிப்பிடிக்க அவர்கள் பின்னுல் ஓடினேன். அப்படி முயன்றதிற்காக என் அறைக்கு வந்து என்னிடத்தில் கத்தியைக் காட்டி இருக்கிறுர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிப்பட்ட சம்பவம் நிகழ்ந்தது என்ருல், உறுப்பினர் அவர்கள் இந்த நிகழ்ச்சியை முன்னுடியே என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கலாமே. அப்படித் தகவல் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. துரை கோவிந்தராசன் : நான் என்ன கூற வருகிறேன் என்ருல், சட்ட மன்றத்திலே முதல்வர் அவர்கள், "நான் ஒரு சில தினங்களாகவே கோழையாக இருப்பதாகக் காட்டிக் கொண்டு வந்துவிட்டேன். இனியும், ஆட்சியைக் காப்பாற்றுவதற்காக கோழையாகக் காட்டிக் கொள்ள விரும்பவில்லை" என்ருர். அன்று மாலையே இந்த சம்பவம் நடைபெற்றிருக்கிறது. அந்த டாக்சி நம். டி.என்.பி. 3927. அதில் 5, 6 பேர் இருந்தனர். குத்தியபிறகு, கோட்டையை நோக்கி அந்த டாக்சி வந்தது . . .

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : உறுப்பினர் இப்படிப் பேசும்போது, உட்பொருள் தோன்றும்படி பேசுகிருர் என்று ஆகிவிடும். அந்தக் கருத்தில் உறுப்பினர் பேசியதாக நான் நினைக்கவில்லை. நாங்கள் கோழைகளாக இருக்க மாட்டோம் என்ருல், கத்தியைப் பயன்படுத்துவோம் என்று பொருள் அல்ல. கத்தியைப் பயன்படுத்துவதுதான் வீரம் என்பது உறுப்பினருக்குத் தெரிந்த வீரம். அது வீரமல்ல. அதுவும் ஒருவகைக் கோழைத்தனம்.



1975 மார்ச் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசியல் நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசலாம். வெளியில் நடைபெற்ற சம்பவங்களைப் பற்றி சட்டசபையில் பேசுவது முறையல்ல. எனினும், உறுப்பினருக்கு ஏதாவது அச்சுறுத்தல் கடிதமோ, வேறு எந்த மிரட்டல்களோ ஏற்பட்டாலும் அவற்றை உடனடியாக என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் தக்க நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் : மக்கள் பிரதிநிதிகளுக்கு உயிருக்குப் பாதுகாப்பு இல்லை என்பதைத் தான் நான் கூற வருகிறேன். தவறு செய்கிறவர்கள் உடனடியாகக் கண்டுபிடிக்கப் பட வேண்டும். பட்டப்பகலில் 11 மணிக்கு சம்பவம் நடைபெறுகிறது. சட்ட மன்ற விடுதியில் போலீஸ் பாதுகாப்பு இருக்கிறது. தலைசிறந்த போலீஸ் தமிழகத்தில் இருக்கிறது. உடனுக்குடன் தகவல் தெரிவிக்கும் வயர்லெஸ் இருக்கிறது. இவ்வளவு இருந்தும் அந்த டாக்சி டிரைவர்தான் பிடிக்கப்பட்டிருக்கிருர். இன்னமும் மற்றவர்கள் பிடிபடவில்லை. இந்த நிலையைத் தான் அவை முன் வைக்க விரும்புகிறேன்.

கடைசியாக, தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையின் மீது ஒரே ஒரு வார்த்தையைக் குறிப்பிட்டு முடித்துக் கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் 1,500 கிணறுகள் தோண்டப்படப் போவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 50 அடி தோண்டி பயன் இல்லை. நிச்சயமாகப் பலன் கிடைக்காது. அதிக ஆழத்தில் தோண்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* * * *

திரு. என். மருதாசலம் : இந்த நிதி நிலை அறிக்கையின் பேரில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

வறட்சித் துயர் தனிப்புப் பணிகளுக்காக திட்டத்திற்கு அப்பால் மேலும் 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதாகக் காணப்படுகிறது. இதனுல் வேலை வாய்ப்புகள் ஏற்படுகிறது என்ருலும், நியாயமான கூலியோடு நிவாரணம் அளிக்கக்கூடிய வகையில் சாப்பிடுவதற்கு கட்டுபடியாகக் கூடியதாக கூலி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[திரு. என். மருதாசலம்] [1975 மார்ச் 6

இந்த நெருக்கடி காலத்தில் ஏன் கோவில் கட்ட வேண்டும். அந்தத் தொகையைக் கொண்டு நல்ல வேறு பணிகளுக்கு செல விடலாம்.

அரிசனங்களுக்குக் கட்டப்பட்டுள்ள வீடுகளில், பிளஷ் அவுட்கள் சரியாக இல்லாமல் மலங்கள் எல்லாம் மேலே மிதக்கின்றன.

(பிற்பகல் 1-30)

வெளியே மலம் போக முடியவில்லை. அதைப்பற்றி எஞ்சினீயரிடம் சொல்லியிருக்கிறேன். கால்வாய் வெட்டி, வெளியே போகச் செய்து விடலாம் என்று எஞ்சினீயர் சொன்னார். கால்வாய் வெட்டினார்கள். இருந்தாலும் மலம் வெளியே போகவில்லை. துர் நாற்றம் அடிக்கிறது. அதனால் காலரா, ப்ளேக் போன்ற தொற்று நோய்கள் பரவ வாய்ப்பு ஏற்படும். மேலும் கால்வாய் வெட்டி, சுத்தப்படுத்தினால் தான் மலம் சரியாக வெளியே போக முடியும். உடனடியாக அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அரிசன மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் பணம் இப்போது கிடைப்பதில்லை. சாதாரண ஏழை எளிய மாணவர்கள் எல்லாம் படித்து வருகிறார்கள். அவர்களுக்கு இதுவரையில் ஸ்காலர்ஷிப் பணம் கிடைக்கவில்லை. அதோடு மாலைக் கல்லூரிகளில் படிக்கும் அரிசன மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் நிறுத்தப் பட்டிருக்கிறது. அதோடு அவர்கள் படிப்பும் நின்று விட்டது. தமிழக அரசு அந்த மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுப்பதாகச் சொன்னது. கொடுப்பதாக ஒப்புக்கொண்டும், இதுவரையில் கொடுக்கவில்லை. உடனடியாக எல்லா மாணவர்களுக்கும் ஸ்காலர்ஷிப் பணம் கொடுத்து, அவர்கள் தொடர்ந்து படிப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும்.

அடுத்து, மன்னார்குடியில் ஒரு தீ வைப்பு சம்பவம் நடந்திருக்கிறது. அதில் போலீசார் நடவடிக்கை எடுக்காததால் தீ வைப்பு சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் ரொம்பப் பாதுகாப்பாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்வா, சாவா என்ற நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக நடவடிக்கை எடுத்து, மன்னார்குடி தீ வைப்பு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1975 மார்ச் 6] [திரு. என். மருதாசலம்]

இன்றைக்கு தானியங்கள் விலை மூன்று விதமாக இருக்கிறது. தனியார்கள் அவர்கள் இஷ்டம்போல் ஒரு விலை வைத்து விற்கிறார்கள். கூட்டுறவு சொசைட்டிகளில் ஒரு விலை வைத்து விற்கிறார்கள். சூப்பர் மார்க்கெட்டுகளில் ஒரு விலை விற்கிறது. இப்படி மூன்று விதமான விலை இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. இவைகளை எல்லாம் மாற்றி, சீரமைத்து, ஒரே மாதிரியான விலையை அரசாங்கம் நிர்ணயம் செய்ய வேண்டும்.

இன்றைக்கு தானியம் விற்கும் தனியார்களுக்கு அதிகமான சலுகைகளை சர்க்கார் செய்து கொடுக்கிறது. அதனால் அவர்கள் இஷ்டம்போல் ஒரு விலையை வைத்து விற்கிறார்கள். தனியார் கடைகளிலே 100 மூட்டை, 200 மூட்டை, 300 மூட்டை, 500 மூட்டை பதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் அரசாங்கம் உடனடியாக பறிமுதல் செய்து கூட்டுறவு சொசைட்டிகள் மூலம் அல்லது அரசாங்கக் கடைகள் மூலம் விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

ஆக, இப்படிப்பட்ட நிலைமைகள் நாட்டிலே நிலவுமானால், இந்த முறைகள் உடனடியாக நீக்கப்படாவிட்டால் மக்கள் மத்தியிலே ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டு, பலவிதமான துன்பங்களுக்கு ஆளான மக்கள் அரசாங்கத்தின் மேல் பழி சுமத்த ஒரு வாய்ப்பு ஏற்பட்டுவிடும் என்று கூறி, என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9.00 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-34 மணியளவில் ஒத்திவைக்கப் பட்டது.

### 3. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

115. Notification issued in G.O. Ms. No. 796, Commercial Taxes and Religious Endowments, dated the 30th December 1974 in regard to appointment of Thiru G. P. Krishnan, Third Assistant Judge, City Civil Court, Madras to be the Judicial Member,

Sales Tax Appellate Tribunal (Additional Bench) Madurai, [*Laid* on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

116. Notification issued in G.O. Ms. No. 2650, Home, dated the 16th November 1974, in regard to amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

117. Notification issued in G.O. Ms. No. 2837, Rural Development and Local Administration, dated the 26th December 1973, in regard to declaration of the areas forming the Dharmapuri and Salem Panchayat Unions. [Laid on the table of the House under section 199(2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

118. Tamil Nadu Government's review and the Annual Report and Statement of Accounts of the Banana and Fruit Development Corporation, Limited for the year ended 31st March 1973. [*Laid* on the table of the House under section 619-A of the Indian Companies Act, 1956 (Central Act I of 1956).]

B. *Reports, Notifications and Other Papers.*

45. Errata issued in Memo. No. 105860/ME/74-7, Rural Development and Local Administration, dated the 19th March 1974 to Notification No. II(2)/RUL/1303 (W)/74, published at pages 37-40 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 16th February 1974.

@ 46. Annual Financial Statement (Budget) of the Government of Tamil Nadu — Summary of the Financial Position 1973-74 (Accounts) (English and Tamil).

@ 47. Detailed Industries Budget for the year 1975-76.

@ 48. Detailed Roads and Bridges Budget for the year 1975-76.

@ 49. Detailed Irrigation Budget for the year 1975-76.

@ 50. Detailed Agriculture Budget for the year 1975-76.

---

@ Despatched to Members on 5th March 1975.



## இணைப்பு I

[12-ஆம் பக்கத்தில் 209-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

4.—The requirements of annual plant protection chemicals are assessed after taking into consideration the following:—

1. Intensity of the incidence of common pests and diseases in different districts.

2. Area under different crops.

3. Consumption level of different insecticides in the past years.

4. Awareness of the farmers and their willingness to undertake the plant protection measures.

5. Popularity of the existing insecticides, their cost and their availability in the market.

6. Availability of new insecticides in the market and their effectiveness in controlling pests and diseases in comparison with the existing chemicals.

7. Prevalance of new pests and diseases and their intensity in each district.

8. New Programmes and Schemes introduced from time to time and their object, etc.

The annual requirements of pesticides are worked out in advance before the beginning of each financial year.

Open tenders are being called for every year by advertising in the leading dailies for the supply of the required quantity of the various pesticides, fungicides, etc., under rate contract. The tenders are approved, taking into account the lowest rate preference to small scale industries under price preference policy and quality of chemicals offered by each tenderer with reference to I.S.I. mark and the Departmental approval. Thus, the list of chemicals approved under rate contract is communicated, to all

the District Agricultural Officers and other Deputy Directors of Agriculture. All these formalities are completed positively before the commencement of the Agriculture season. From April onwards purchase will be made to meet the actual requirements of pesticides of each District Agricultural division depending upon the stock position immediate demand, prevalance or pest attack, etc. If any particular chemical is not approved under rate contract and if the same is found essential to control any particular pest the same will be purchased on adhoc basis duly getting Government's sanction, as and when necessary.

விடை—

கீழ்க்கண்டவற்றைக் கருத்தில் கொண்டபின்னர், பயிர்ப் பாதுகாப்பு இரசாயனப் பொருள்களின் ஆண்டு தேவைகள் மதிப்பிடப்படுகின்றன—

(1) வெவ்வேறு மாவட்டங்களில் சாதாரண பயிர்ப் பூச்சிகள், பயிர் நோய்கள் ஆகியவை எந்த அளவுக்குப் பரவியுள்ளன என்பது.

(2) வெவ்வேறு பயிர்களின்கீழ் உள்ள பரப்பு.

(3) கடந்த ஆண்டுகளில் வெவ்வேறு பூச்சி கொல்லி மருந்துகளைப் பயன்படுத்திய அளவு.

(4) உழவர்கள் பயிர் பாதுகாப்பு முறைகளை நன்கு அறிந்து வைத்திருத்தலும், பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ள அவர்கள் விருப்பங்கொண்டிருத்தலும்.

(5) தற்போதுள்ள பூச்சி கொல்லி மருந்துகள் பற்றி உழவர்கள் பிரபலமாக அறிந்துள்ளது. அவற்றின் விலை, அங்காடியில் அவை கிடைப்பது.

(6) அங்காடியில் பூச்சி கொல்லி புதிய மருந்துகள் கிடைப்பது, தற்போது கிடைக்கக்கூடிய பூச்சி கொல்லி மருந்துகளுடன் ஒப்பிடுகையில் பூச்சிகளையும் பயிர் நோய்களையும் கட்டுப்படுத்துவதில் அவற்றின் பலனளிக்கும் நன்மை.

(7) ஒவ்வொரு மாவட்டத்திலும் புதிய பயிர்ப்பூச்சிகள். பயிர் நோய் ஆகியவை எந்த அளவுக்குப் பரவியுள்ளன என்பது.

(8) அவ்வப்போது செயலுக்குக் கொண்டு வரப்படுகிற புதிய. திட்டங்கள் அவற்றின் நோக்கங்கள் முதலியன.



ஆண்டொன்றுக்குத் தேவைப்படும் பயிர்ப் பூச்சி கொல்லி மருந்துகளின் அளவு ஒவ்வொரு நிதி ஆண்டும் தொடங்குவதற்குப் பலகாலம் முன்னதாகவே கணக்கிடப்படுகின்றது.

ஒப்பந்த வீதத்தின்கீழ் பல்வேறு பயிர்ப் பூச்சிகொல்லி மருந்துகள், காளான் கொல்லி மருந்துகள் முதலியவற்றை வழங்குமாறு கேட்டு பிரபலமான நாளிதழ்களில் விளம்பரம் செய்வதன் மூலம் ஒவ்வோராண்டும் பகிரங்க ஒப்பந்தப்புள்ளிகள் கேட்கப்பட்டு வருகின்றன. மிகக் குறைந்த ஒப்பந்த வீதம், விலைச் சலுகையின்கீழ் சிறு தொழில்களுக்கு முன்னுரிமை, இந்திய தர நிர்ணய நிறுவனக் குறியீட்டினை ஒட்டி ஒவ்வொரு ஒப்பந்தக்காரரும் வழங்கும் இராசாயனப் பொருள்களின் தரம், துறையின் ஏற்பளிப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஏற்பளிக்கப்படுகின்றன. இவ்வாறு ஒப்பந்த வீதத்தின்கீழ் ஏற்பளிக்கப்பட்ட இராசாயனப் பொருள்களின் பட்டியல் மாவட்ட வேளாண்மை அதிகாரிகள் அனைவருக்கும், ஏனைய வேளாண்மைத் துணை இயக்குநர்களுக்கும் அனுப்பப்படுகிறது. வேளாண்மைப் பருவகாலம் தொடங்கு முன்னர் இந்த நடைமுறைகள் அனைத்தும் கண்டிப்பாக முடிக்கப்படுகின்றன. ஏப்ரலிலிருந்து, இருப்பு நிலைமை உடனடித் தேவை, பயிர்கள் பூச்சியால் பாதிக்கப்பட்ட நிலை முதலியவற்றைப் பொறுத்து, ஒவ்வொரு மாவட்ட வேளாண்மை கோட்டத்திற்கும் தேவைப்படும் அளவிற்கு பயிர்ப்பூச்சி கொல்லி மருந்துகள் வாங்கப்படும். ஒப்பந்த வீதத்தின்கீழ்க் குறிப்பிட்ட இராசாயனப் பொருள் எதற்கேனும் ஏற்ப்பளிக்க படாதிருந்து, குறிப்பிட்ட ஒரு பயிர்ப் பூச்சியைக் கொல்வதற்கு அது இன்றியமையாததாக இருப்பின், அவசியமேற்படும்போது அரசின் அனுமதியை முறையாகப் பெற்று தனிப்பட்ட அடிப்படையில் அது வாங்கப்படும்.

## இணைப்பு II

[12-ம் பக்கத்தில் 210-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

The list of firms are given below :—

1. M/s. The Tamil Nadu Agro Industries Corporation, Madras-32.
2. M/s. Bharat Pulverishing Mills, Madras-19.

3. M/s. Tudiyalur Co-operative Agriculture Services Limited, Tudiyalur, Coimbatore.

4. M/s. P.N.M. Company, Erode.

5. M/s. Vensons Agro Chemicals and Allied Chemicals, Coimbatore.

6. M/s. Venkateswara Agro Chemicals and Minerals, Madras-81.

7. M/s. Jayalakshmi Fertilizers, Madhavaram, Madras-50.

8. M/s. Bhuvaneswari Pulverising Mills (P) Limited Madras-17.

9. M/s. Sree Venkateswara Minerals (P) Limited, Madras-1

10. M/s. Tropical Agro System (P) Limited, Madras.

11. M/s. Ficides (India), Madras.

12. M/s. Mysore Insecticides Company (P) Limited, Madras-1.

13. M/s. Vorion Industries and Chemicals, Madras.

14. M/s. Banglore Pesticides, Madras.

15. M/s. Cermondal Indag Products, Madras-8.

16. M/s. Jayalakshmi Fertilisers, Tanuku (AP).

17. M/s. The Alkali and Chemicals Corporation of India Limited, Madras.

18. M/s. Rallis India Limited, Madras.

19. M/s. Imkemex India Limited, Madras.

20. M/s. E.I.D. Parry Limited, Madras.

21. M/s. Insecticides and Allied Chemicals, Madras.



22. M/s. Palava Chemicals, Madras-29.

23. M/s. Central Insecticides and Fertilisers.

24. M/s. Scientific Fertilisers Company (P) Limited, Coimbatore

25. M/s. Bayer India Limited, Madras.

26. M/s. Sandoz India Limited, Bombay.

27. M/s. Cynamid India Limited.

28. T. Stanes & Co. Coimbatore.

29. M/s. Harshadray (P) Limited, Bombay.

30. M/s. Standard Chemicals Company, Bombay.

31. Industrial Minerals and Chemical Company, Madras.

32. M/s. Bombay Chemicals, Bombay.

33. M/s. Union Carbide India Limited, Bangalore.

34. M/s. Paushak Limited, Baroda.

35. M/s. Gajalakshmi Enterprises.

36. M/s. Geo Industries and Insecticides (India) Private Limited, Madras.

37. M/s. Excel Industries, Bombay.

நிறுவனங்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

1. திருவாளர்கள் தமிழ்நாடு வேளாண்மை—தொழில் கழகம், சென்னை-32.

2. திருவாளர்கள் பாரத் பல்வரைஸிங் மில்ஸ், சென்னை-19.

3. திருவாளர்கள் துடியலூர் கூட்டுறவு வேளாண்மைப் பணி லிமிடெட், துடியலூர், கோயம்புத்தூர்.

[1975 மார்ச் 6

4. திருவாளர்கள் பி.என்.எம். கம்பெனி, ஈரோடு.

5. திருவாளர்கள் வென்சன்ஸ் அக்ரோ கெமிகல்ஸ் அண்டு அலைட் கெமிகல்ஸ், கோயம்புத்தூர்.

6. திருவாளர்கள் வெங்கடேஸ்வரா அக்ரோ கெமிகல்ஸ் அண்டு மினரல்ஸ், சென்னை-81.

7. திருவாளர்கள் ஜெயலக்ஷ்மி பெர்டிலைஸர்ஸ், மாதவரம், சென்னை-50.

8. திருவாளர்கள் புவனேஸ்வரி பல்வரைஸிங் மில்ஸ் (பி) லிமிடெட், சென்னை-17.

9. திருவாளர்கள் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மினரல்ஸ் (பி) லிமிடெட், சென்னை-1.

10. திருவாளர்கள் டிராபிகல் அக்ரோ ஸிஸ்டம் (பி) லிமிடெட், சென்னை.

11. திருவாளர்கள் ஃபிஸைட்ஸ் (இந்தியா), சென்னை.

12. திருவாளர்கள் மைசூர் இன்ஸெக்டிஸைட்ஸ் கம்பெனி (பி) லிமிடெட், சென்னை-1.

13. திருவாளர்கள் வோரியன் இன்டஸ்ட்ரீஸ்—கெமிகல்ஸ், சென்னை.

14. திருவாளர்கள் பெங்களூர் பெஸ்டிஸைட்ஸ், சென்னை.

15. திருவாளர்கள் கொரமாண்டல் இன்டாக் புரொடக்ட்ஸ், சென்னை.

16. திருவாளர்கள் ஜெயலக்ஷ்மி ஃபெர்டிலைஸர்ஸ், டனுகு, ஆந்திரப் பிரதேசம்.

17. திருவாளர்கள் தி ஆல்கலி அண்டு கெமிகல்ஸ் கார்ப்ப ரேஷன் ஆப் இந்தியா லிமிடெட், சென்னை.

18. திருவாளர்கள் ராலிஸ் இந்தியா லிமிடெட், சென்னை.

19. திருவாளர்கள் இம்கெமெக்ஸ் இந்தியா லிமிடெட், சென்னை.



1975 மார்ச் 6]

20. திருவாளர்கள் இ. ஐ. டி. பாரி லிமிடெட், சென்னை.

21. திருவாளர்கள் இன்ஸெக்டிஸைட்ஸ்-அலைட் கெமிகல்ஸ், சென்னை.

22. திருவாளர்கள் பலாவா கெமிகல்ஸ், சென்னை-29.

23. திருவாளர்கள் சென்ட்ரல் இன்ஸெக்டிஸைட்ஸ் அண்டு ஃபெர்டிலைசர்ஸ்.

24. திருவாளர்கள் ஸைன்டிஃபிக் ஃபெர்டிலைஸர்ஸ் கம்பெனி (பி) லிமிடெட், கோயம்புத்தூர்.

25. திருவாளர்கள் பேயர் இந்தியா லிமிடெட், சென்னை.

26. திருவாளர்கள் சாண்டோஸ் இந்தியா லிமிடெட், பம்பாய்.

27. திருவாளர்கள் ஸைனமிட் இந்தியா லிமிடெட்.

28. திருவாளர்கள் டிஸ்டேன்ஸ் அண்டு கம்பெனி, கோயம் புத்தூர்.

29. திருவாளர்கள் ஹர்ஷாசாத்ரே (பி) லிமிடெட், பம்பாய்.

30. திருவாளர்கள் ஸ்டாண்டர்டு கெமிகல்ஸ் கம்பெனி, பம்பாய்.

31. இன்டஸ்டிரியல் மினரல்ஸ் அண்டு கெமிகல்ஸ் கம்பெனி, சென்னை.

32. திருவாளர்கள் பாம்பே கெமிகல்ஸ், பம்பாய்.

33. திருவாளர்கள் யூனியன் கார்பைடு இந்தியா லிமிடெட், பெங்களூர்.

34. திருவாளர்கள் பௌஷக் லிமிடெட், பரோடா.

35. திருவாளர்கள் கஜலெக்ஷ்மி எண்டர்பிரைசஸ்.

36. திருவாளர்கள் ஜியோ இண்டஸ்ட்ரீஸ் அண்டு (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை.

37. திருவாளர்கள் எக்ஸெல் இண்டஸ்ட்ரீஸ், பம்பாய்.

[1975 மார்ச்

## இணைப்பு—III

[14-ம் பக்கத்தில் 211-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(a) 1,909 acres.

(b) (1) Madurai,

(2) Ramanathapuram,

(3) Tirunelveli,

(4) Kanyakumari,

(5) Coimbatore,

(6) Salem, and

(7) Dharmapuri.

(c) Good quality root cuttings are produced in th Government nurseries and distributed to the growers. Technica guidance is rendered by the Departmental staff to the cultivators.

(d) (1) Muskat (Panneer Draksha),

(2) Pacha Draksha,

(3) Bangalore Blue,

(4) Thompson seedless grapes, and

(5) Anabi-E-Sahi.

(அ) 1.909 ஏக்கர்.

(இ) (1) மதுரை.

(2) இராமநாதபுரம்.

(3) திருநெல்வேலி.

(4) கன்னியாகுமரி.

(5) கோயம்புத்தூர்.

(6) சேலம்.

(7) தர்மபுரி.



1975 மார்ச் 6]

(உ) நல்ல தரமான திராட்சைப் பதியன்கள் அரசு நாற்றங்கால்களில் தயார் செய்யப்பட்டு தேவைப்படும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. வேளாண்மைத் துறையினரால் திராட்சை சாகுபடி பற்றிய தொழில் நுணுக்கங்கள் பயிரிடுவோருக்கு வழங்கப்படுகிறது.

(எ) (1) பன்னீர் திராட்சை.

(2) பச்சை திராட்சை.

(3) பங்களூர் நீலம்.

(4) தாம்சன் விதையற்ற திராட்சை.

(5) அனுப்-இ-ஷாயி.

## இணைப்பு IV

[27-ம் பக்கத்தில் 219-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(அ) & (இ) கும்முடிப்பூண்டி, எல்லாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் அரிசன காலனிகளில் நில ஆர்ஜிதம் செய்யப்பட இருக்கும் விவரம் கீழே தரப்பட்டுள்ளது :

<u>கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம்—</u>

(1) புதூர் :—நில உரிமைபெறும் சட்டத்தின் பிரிவு 6 விளம்பர வரைவு அரசின் வாலாய ஆணை எண் 701, சமூக நலத் துறை, நாள் 10—5—74-ல் ஏற்கப்பட்டு, 5—6—74 தேதியில் தமிழ்நாடு அரசிதழ், பாகம் 2, பிரிவு 2, பக்கம் 29-ல் வெளியிடப்பட்டுள்ளது. சைதாப்பேட்டை அரிசன நல தனி தாசில்தாரிடமிருந்து நிலத்தின் முன் மதிப்பீட்டிற்கான அறிக்கை எதிர்பாக்கப்படுகிறது.

(2) பெரிய புலியூர் :—அவார்டு நிறைவேற்றப்படும் நிலையில் உள்ளது.

(3) பழைய கும்முடிப்பூண்டி :— நிலத்தின் முன் மதிப்பீடு அறிக்கையின் மீது காஞ்சிபுரம் மாவட்ட நல அலுவலர், ஆர்சிதம் செய்யப்படும் நிலத்தை பார்வையிட்டு அவரது அறிக்கை அனுப்புமாறு மாவட்ட ஆட்சியாளரால் கேட்கப்பட்டுள்ளார். அவரது அறிக்கை மாவட்ட ஆட்சியாளரால் எதிர்பார்க்கப்படுகிறது.

(4) இராக்கம்பாளையம் :—சைதாப்பேட்டை, அரிசன நலத் தனித் தாசில்தாரிடமிருந்து, நில உரிமை பெறும் மத்திய அரசு சட்டத்தின் (1894-ம் ஆண்டில் முதலாம் சட்டம்) பிரிவு 4(1) முன் மொழிவு வரைவு சமீபத்தில் மாவட்ட ஆட்சியாளருக்குக் கிடைத் துள்ளது. ஆர்சிதம் செய்ய தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலம் நஞ்சை நிலமாக இருப்பதால் காஞ்சிபுரம் மாவட்டம் நல அலுவலர் அந்த நிலத்தைப் பார்வையிட்டு அவரது அறிக்கை அனுப்புமாறு கேட்கப் பட்டுள்ளது. அவரது அறிக்கை கிடைக்கப்பெற்றதும் பிரிவு 4 (1) முன்மொழிவு வரைவு அரசுக்கு அனுப்பப்படும் என மாவட்ட ஆட்சியாளர் கூறியுள்ளார்.

(5) குருவி அகரம் :—நிலத்தின் முன் மதிப்பீட்டிற்கான அறிக்கை யின் மீது மாவட்ட ஆட்சியாளர் ஆர்சிதம் செய்ய தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள நிலத்தை பார்வையிட்டு ஓர் அறிக்கை அனுப்புமாறு மாவட்ட நல அலுவலரைக் கேட்டுள்ளார். அவரது அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

(6) செந்தில்பாக்கம் :—நில ஆர்சிதம் செய்ய எவ்வித செயற் குறிப்பும் இல்லை.

| | |
|---|---|
| பெரிய ஒபுலாபுரம் நத்தம், பெட்டிகுப்பம் புதிய கும்மிடிபூண்டி கீழ்மடலம் பேடு நெல்வாய் | நில ஆர்சிதம் செய்ய எவ்வித செயற் குறிப்பும் பரிசீலனையில் இல்லை. எனினும், சைதாப்பேட்டை அரிசன நல தனி தாசில்தார் அவற்றிற்கான முன்மொழிவு செயற்குறிப்புகளை அனுப்புமாறு பணிக்கப்பட்டுள்ளார். |

எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம்—

(1) நெய்வேலி :—அரிசன நல தனித் தாசில்தார், நிலத்திற்கான முன் மதிப்பீடு பட்டியலை அனுப்புமாறு பணிக்கப்பட்டுள்ளார். அவரது அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

(2) பூரிவாக்கம் :—திருவள்ளூர் அரிசன நல தனித் தாசில்தா ரிடமிருந்து கிடைக்கப்பெற்ற நிலத்தின் முன் மதிப்பீடு பட்டியல் சரியின்மையால் திருத்தி அனுப்புமாறு அவருக்கே அனுப்பப் பட்டுள்ளது. அவரது அறிக்கை எதிர்பாக்கப்படுகிறது.

(3) செஞ்சியகரம் :—தமிழ்நாடு குடியிருப்பு சட்டத்தின் கீழ் வீட்டுமனை பட்டாக்கள் வழங்குமாறு, திருவள்ளூர் கோட்டாட்சித் லைவர் பணிக்கப்பட்டுள்ளார்.



(4) மாம்பள்ளம் :—நில உரிமை பெறும் சட்டத்தின் பிரிவு 6 விளம்பர வரைவு திருவள்ளூர் அரிசன நல தனி தாசில்தாரிடமிருந்து எதிர்பாக்கப்படுகிறது.

| | |
|---|---|
| (5) செங்கரை<br>(6) கன்னிகைபேர் | தாரிடமிருந்து நிலத்தின் மதிப்பீடு திருவள்ளூர் அரிசன நல தனி தாசில் பட்டியல் எதிர்பார்க்கப்படுகிறது. |

(7) திருநிலை:—திருவள்ளூர் அரிசன நல தனி தாசில்தாரிட மிருந்து, நில உரிமை பெறும் சட்டத்தின் பிரிவு 6 விளம்பர வரைவு சமீபத்தில் கிடைத்துள்ளது. அது அரசுக்கு விரைவில் அனுப்பப் படும் என மாவட்ட ஆட்சியாளர் கூறியுள்ளார்.

(8) வச்சிவாக்கம் :—அவார்டு நிறைவேற்றப்படும் நிலையில் உள்ளது.

| | |
|---|---|
| (9) காசிரெட்டிப்பேட்டை<br>(10) ஆலப்பாக்கம் | திருவள்ளூர் அரிசன நல தனி தாசில்தாரிடமிருந்து நில உரிமை பெறும் சட்டத்தின் பிரிவு 6 விளம்பர வரைவு எதிர்பார்க்கப்படுகிறது. |

## தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை.

---

### வெள்ளிக்கிழமை, 1975 மார்ச் 7.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

### உள்ளாட்சி மன்றப் பள்ளிகளை ஏற்று நடத்தல்

* 221 **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1973-74-ம் ஆண்டு முதல் நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களுள், எத்தனை பள்ளிகளை (உயர் நிலைப் பள்ளி, ஆரம்ப உயர்நிலைப் பள்ளிகள்) அரசாங்கம் ஏற்று நடத்தி வருகிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** 1973-74-ஆம் ஆண்டில் 13 நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை அரசு ஏற்று நடத்துவது பற்றிய கருத்துரு அரசால் பரிசீலனை செய்யப்பட்டு நிதி நெருக்கடியின் காரணமாக தள்ளி வைக்கப்பட்டது. எனவே, அவ்வாண்டில் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் அரசால் எதும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஊராட்சி ஒன்றியங்கள் எதும் உயர்நிலைப் பள்ளிகள் நடத்துவதில்லை. நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் நடத்தும் ஆரம்பப் பள்ளிகளை அரசு ஏற்று நடத்துவது பற்றிய கருத்துரு அரசிடம் இல்லை.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, நகராட்சிகளுடைய நிதிநிலைமை சரியாக இல்லாத காரணத்தினால் அவர்களிடம் உள்ள உயர்நிலைப் பள்ளிகளை அவர்களால் சரியாக நடத்த முடியவில்லை. குறிப்பாக மாயூரம் நகராட்சியில் இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. கூறைநாடு நகராட்சிப்

பள்ளியை எடுத்துக்கொள்வது பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. மாயூரம் நகராட்சிப் பள்ளியை எடுத்துக்கொண்டால் நடு மண்டபம் இடிந்து விழுந்து கிடக்கிறது. அதைக் கட்டக்கூட நகராட்சியில் பணம் இல்லை. இந்த உயர்நிலைப் பள்ளியையாவது எடுத்துக்கொள்வதுபற்றி அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, கூறைநாடு நகராட்சி உயர்நிலைப் பள்ளியை எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற குறிப்பு இருக்கிறது. அதுபற்றி அரசு தக்க முடிவு எடுக்கும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தற்போது ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் இருக்கிற எல்லா ஆரம்பப் பள்ளிகளையும் எடுத்து ஒரு தனி நிர்வாகத்தின் கீழ் செயல்படச் செய்ய அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தனி நிர்வாகம் தேவையில்லை. ஏனென்றால் இப்போது பள்ளிக் கல்வி இயக்குநரின் கீழே துணை இயக்குநர் ஒருவர் உயர்நிலைப் பள்ளிகளின் நிர்வாகத்தையும், மற்றொரு துணை இயக்குநர் ஆரம்பப்பள்ளி நிர்வாகத்தையும் கவனித்து வருகிறார்கள். துவக்கப்பள்ளி 5-வது வகுப்போடு நின்றுவிடாது 6, 7, 8 சேர்ந்து துவக்க உயர்நிலை பள்ளியாகவும் அமைவதால் மாவட்ட கல்வி அதிகாரி, மாவட்ட முதன்மை கல்வி அதிகாரியும் அதை கவனித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

**திரு. சித. சிதம்பரம்:** காரைக்குடி நகராட்சி உயர்நிலைப் பள்ளியை அரசு எடுத்துக்கொண்டும் இன்னும் தலைமையாசிரியர் நியமிக்கப்படவில்லையே, உடனடியாக தலைமையாசிரியரை நியமிக்க ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றிய விவரம் குறிப்பில் இல்லை. தனிக்கேள்வி போட்டால் அறிந்து சொல்லப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அரசுத்துறை பள்ளிகளைப்போல உள்ளாட்சித்துறைப் பள்ளிகளின் தரம் இருப்பதில்லை என்று கூறப்படுகிறது. அதுவும் சென்னை கார்ப்பரேஷன் பள்ளியின்



தரம் மிகக் குறைவாக இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆகவே அனைத்துப் பள்ளிகளையும் அரசே நிர்வகிக்கின்ற முறையை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதுபோல எல்லாப் பள்ளிகளையும் அரசே எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற கருத்து இருக்கிறது. ஆயினும் உள்ளாட்சித் துறையினிடத்தில் உருப்படியாக இது ஒன்றுதான் இருக்கிறது. இதை எடுத்துக் கொள்ளக் கூடாது என்று ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் எல்லாம் அடிக்கடி மகாநாடுகளில் வற்புறுத்தி வருகிறார்கள். இந்த இருவேறு கருத்து இருப்பதனால் இப்போது அப்படிப்பட்ட யோசனை எதுவும் இல்லை.

**திரு. பூ. எட்டியப்பன்:** வாலாஜா முனிசிபாலிட்டி உயர்நிலைப் பள்ளியை அரசினர் எடுத்துக்கொண்டும் அங்குள்ள ஊழியர்களுக்கு பி.எப். லோன் வாங்குவதற்கு வழிமுறை இன்னும் வகுக்கப்படவில்லை என்று சொல்கிறார்களே. அதற்கு அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இதுபற்றிய நிலைமைகள் சரிப்பட்டு, பணிப்பதிவேடுகள் திரட்டுகின்ற நிலைமை பூர்த்தியானதும் இதுபோன்ற குறைகளை நீக்க உடனடியாக முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. கே. என். குமாரசாமி:** நகராட்சிப்பள்ளி, மாநகராட்சிப் பள்ளி, ஊராட்சிப் பள்ளி, அரசுப் பள்ளி என்று பல்வேறு பிரிவுகள் இருப்பதை ஒன்றாக்கி அரசாங்கப் பள்ளிகள் என்ற ஒரேயடிப்படையில் கொண்டுவந்து, கல்வியின் தரம் சீராக எங்கும் ஒரேயளவில் இருக்க அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நான் முன்பே சொன்னேன். இதுபற்றி இருவேறு கருத்துக்கள் இருக்கின்றன. எல்லாப் பள்ளிகளையும் அரசாங்கமே எடுத்துக்கொள்வது என்ற கருத்தும் இருக்கிறது. இதை எடுத்துவிட்டால் உள்ளாட்சி மன்றங்களுக்கு வேலையே இல்லை. எடுத்துக்கொள்ளக் கூடாது

என்ற கருத்தும் இருக்கிறது. ஆகவேதான் எந்த முடிவும் எடுக்கப்படவில்லையே தவிர, அரசாங்கத்தின் கீழ் கொண்டு வர வேண்டுமென்ற கருத்து இருக்கிறது.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் :** நகராட்சி, ஊராட்சி மன்றப் பள்ளிகளை அரசு உடனடியாக எடுத்துக் கொள்ளாவிட்டாலும், ஆங்காங்குள்ள தனியார் பள்ளிகளை நகராட்சிகளே எடுத்துக் கொள்வது என்ற முடிவையாவது செய்ய முடியுமா? தனியார் பள்ளிகளில்தான் ஊழல்கள் நடை பெறுகின்றன. ஆசிரியர்களுக்கு ஒழுங்காகச் சம்பளம் கொடுக்கப்படுவதில்லை. ஆகவே, தனியார் பள்ளிகளை உடனடியாக நகராட்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்க முடியுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எல்லாப் பள்ளி களிலும் ஊழல் நடைபெறுகின்றன என்று சொல்ல முடியாது. தனியார்ப் பள்ளி பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வந்திருக் கிறோம். ஊழல் நடைபெறுகிற பள்ளிகளை அரசாங்கமே ஒரு ஐந்தாண்டுகள் எடுத்துக் கொள்ளக்கூடிய வகையில் சட்டத்தைத் திருத்தி அமைத்திருக்கிறோம். இந்தச் சட்டப்படி குறைபாடுகள் இருந்தால் அவற்றைத் திருத்த முடியும். அதற்கும் மேல் குறை பாடுகள் இருந்தால் அரசாங்கமே அந்தக் குழுவைக் கலைத்து ஐந்தாண்டுகள் எடுத்துக் கொள்ள முடியும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பல பள்ளிகள் சரியாக நடை பெறவில்லை என்று டி.இ.ஓ. ரிபார்ட் செய்தும் அவற்றை அரசோ நகராட்சியோ எடுத்துக் கொள்ளாமல் இருக்கின்றனவே. உதாரணமாக சுந்தராம்பாள் பள்ளி போன்றதை அரசோ நகராட்சியோ உடனடியாக ஏற்று நடத்த ஏற்பாடு செய்ய முடியாதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மதுரையில் இருக்கிற பள்ளியைக் குறிப்பிட்டார்கள். இதுபோன்று ரிபார்ட் செய்யப்படுகிற பள்ளிகளைப் பொறுத்தவரையில்—நாம் முனிசிபாலிட்டீஸ் என்ற அடிப்படையில் மிக மோசமான நிலைமையில் இருக்கிற பள்ளிகளை எல்லாம் சேர்த்து படிப்படியாக ஆண்டுக்கு இவ்வளவு என்று எடுத்துக்கொண்டு வருகிறோம். தனியார் பள்ளி பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இப்படிப்பட்ட பள்ளிகளை எடுத்து நடத்த வழிகள் இருக்கின்றன.





**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவர் அவர்களே, தனியார் பள்ளி களில் நிதி வசூல் செய்கிறார்கள். அதற்குச் சரியாகக் கணக்குக் காட்டுவதில்லை. அதைச் சரியாகவும் செலவழிப்பதில்லை. ஆகவே, இதைக் கண்காணிக்க தனியாக ஒரு குழு அமைக்கின்ற குறிப்பு அரசினிடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்போதே முன்அனுமதி பெற்றுத்தான் நிதி வசூலிக்க வேண்டுமென்று இருக்கிறது. வசூலிக்கிற நிதிக்கு கணக்குக் காட்ட வேண்டு மென்று இருக்கிறது. இதை மீறி தவறுகள் நடக்கிறபோது யாராவது புகார் கொடுத்தால் அதுபற்றி விசாரிக்கலாம். யாரும் புகார் கொடுப்பதில்லை. இதற்காக தனிக் குழு அமைக்கவேண்டிய அவசியம் இல்லை. இப்போதுள்ள சட்ட திட்டங்களிலேயே பாதுகாப்பு இருந்து வருகிறது.

**திரு. என். டென்னிஸ் :** பல ஊராட்சி ஒன்றியங்களில் நடை பெறுகிற பள்ளிகள் மோசமாக இருக்கின்றன—கட்டிடங்கள் கட்டப்படாத நிலைமை இருக்கிறது. கல்வித்தரம் குறைவாக இருக்கிறது. ஆகவே, எல்லா நகராட்சிப் பள்ளிகளையும் அரசே ஏற்று நடத்த முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சிக் முனிசி பாலிட்டிஸ் என்று சொல்லக் கூடியவற்றில் இருந்து படிப்படியாக ஆண்டுக்காண்டு எடுத்து வருகிறோம் என்று சொன்னேன். 1972-73 இல் 10 உயர்நிலைப் பள்ளிகளை எடுத்திருக்கிறோம். 1974-75 இல் 9 உயர்நிலைப் பள்ளிகளை எடுத்திருக்கிறோம். மொத்தம் 126 க்கு மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகளை நகராட்சி மன்றங்கள் நடத்துகின்றன. அடுத்த ஆண்டில் கூட 5 உயர்நிலைப் பள்ளிகளை எடுத்துக்கொள்ள திட்டமிட்டிருக்கிறோம். இப்படி எங்கெங்கு சரியாக நடைபெற வசதி இல்லாமல் போய்விடுகிறதோ அவற்றை படிப்படியாக எடுத்து வருகிறோம்.

**புலவர் சி. பழனிச்சாமி :** தலைவர் அவர்களே, சில தனியார்ப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களை ஊராட்சி ஒன்றியங்கள் நடத்தும் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளும்போது அவர்களுடைய பழைய ஊழியக் காலத்தைக் கணக்கில் சேர்த்துக் கொள்ள மறுக்கிறார்கள். இப்படிப்பட்ட இடைஞ்சல் வராமல்

இருக்க அவர்களுடைய பழைய ஊழியக் காலத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று அரசு உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தனியார்ப் பள்ளிகளில் பணியாற்றினாலும், ஊராட்சிப் பள்ளிகளில் பணியாற்றினாலும் அந்தப் பணிக் காலமும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறது.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, மாயூரம் தொகுதியில் திருமங்கலத்தில் அரசினர் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் கட்ட பொதுமக்களுடைய பங்குத் தொகை அளிக்கப்பட்டு விட்டது. எனவே, அந்த ஊரில் அந்தக் கட்டிட வேலையைத் துவங்க அரசு ஆவன செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அந்தப் பள்ளி நிலைமை என்ன என்பதை, தனிக் கேள்வி போட்டால் விவரம் தெரிவிக்கப்படும்.

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவர் அவர்களே, ஊராட்சி, நகராட்சிப் பள்ளிகளில் படித்த மாணவர்களை அவர்கள் படித்த வகுப்பிற்கு மேல் வகுப்பில் அரசினர் பள்ளியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற சூழ்நிலை வரும்போது இவர்கள் தரம் குறைவாக இருக்கிறது என்ற காரணத்தினால் தரம் உயர 5-ஆவது, 8-ஆவது வகுப்புக்கான பரீட்சையை மாநில அளவில் பொதுப் பரீட்சையாக நடத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இதைப் பொறுத்தவரையில் மாநில அளவில் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைபோல் நடத்துவதனால் செலவு அதிகமாகும். நிதி தேவைப்படும். மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கும் சூழ்நிலை இல்லை. ஆகவே, மாநில அளவில் இல்லாமல் மாவட்ட அளவில் மட்டுமே 8-ஆவது வகுப்புக்கான பரீட்சையை நடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன்:** தலைவர் அவர்களே, தனியார்ப் பள்ளிகளை ஒழுங்காக நடத்துவதற்கு ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. நீதிமன்றத்தின் தடை காரணமாக அது செயல்படாத நிலையில் முடக்கப்பட்டிருக்கிறதா? மேட்டூரில் கரும்பலைக் கடல் நேரு உயர்நிலைப் பள்ளி சரியாக நடைபெறவில்லை என்று கூறப்பட்டும் அதன்மீது இச்சட்டப்படி ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அந்தப் பள்ளி பற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. தனியார்ப் பள்ளிப் பாதுகாப்புச் சட்டத்தை எதிர்த்து சில நிர்வாகத்தினர் மட்டும்தான் ரிட் மனு போட்டிருக்கிறார்கள். ரிட் போட்டிருக்கிற பள்ளிகளைப் பொறுத்த மட்டும் இந்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டாம் என்று ஹைகோர்ட் உத்திரவிட்டிருக்கிறது. நாட்டிலுள்ள எல்லாப் பள்ளிகளுக்கும் இது பொருந்தாது. இந்தப் பள்ளி நிர்வாகத்தினரும் ரிட்டுக்குப் போயிருந்தால் தலையிட முடியாது. ரிட்டுக்குப் போகாமல் இருந்தால் நாம் தலையிடலாம்.

**திரு. கு. காமாட்சி:** தலைவர் அவர்களே, இந்தப் பள்ளிகளை எடுத்துக்கொள்வதற்கு நிதி வசதி போதவில்லை என்று சொன்னார்கள். அரசு இப்போதே 70 சதவிகிதம், 80 சதவிகிதம் கிராண்ட்—டீச்சிங் கிராண்ட், பில்டிங் கிராண்ட், லைப்ரரி கிராண்ட் என்று இந்தப் பள்ளிகளுக்குக் கொடுக்கிறது. இந்த நிலையிலே எல்லாப் பள்ளிகளையும் ஏற்று நடத்துவதற்கு என்ன இடையூறு இருக்கிறது? பல பள்ளிகள் மழைக் காலங்களில் நடைபெற முடியாமல் இருக்கின்றன. அந்தப் பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுவதற்கென்று அரசு கட்டிட வாரியம் ஒன்றைத் துவங்குவதாக இருந்ததே, அதன் நிலைமை என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களினால் சில பல வசதிகள் ஏற்படுகின்றன. அவர்களுடைய முயற்சிகளின் காரணமாக ஆங்காங்கே இட வசதி, கட்டிட வசதிகள் ஏற்படுகின்றன. நாம் எட்டாயிரம் ரூபாய் தருகிறோம் என்றால், அவர்கள் 10 ஆயிரம் ரூபாய், 12 ஆயிரம் ரூபாய் வசூலித்து கட்டிடங்கள் கட்டித் தருகிறார்கள். நாம் 80 சதவிகிதம் தருகிறோம்; இப்போது அவர்கள் 20 சதவிகிதம் தருகிறார்கள். செஸ் வரியைப் போட்டு நாமும் தருகிறோம். அரசாங்கமே எல்லாவற்றையும் எடுத்துக் கொள்வது என்றால், அரசாங்கப் பணத்தில்தான் முழுவதும்

செலவழிக்க வேண்டி வரும். கட்டிட வேலையைப் பொறுத்த வரையில் நிதி உதவிக்கு எல்.ஐ.சி. யோடு ஆராய்ச்சி செய்யப் பட்டிருக்கிறது. அது இன்னும் முடிவு அடையவில்லை.

### மயிலாடும்பாறையில் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்

* 222 வினா—திரு. த. சோலையா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், மயிலாடும்பாறையில் உயர்நிலைப்பள்ளி கட்டுவதற்கு தனியார்க்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆம்.

### மாவட்டங்களில் தமிழ் ஆட்சிமொழி

* 223 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழை ஆட்சி மொழியாக்குதல் எந்த அளவுக்கு செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதை ஆய்வதற்கு மாவட்ட மட்டத்தில் சிறப்பு ஆய்வுப் பணியாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளனரா?

(இ) ஆமெனில், மாவட்ட வாரியாக எத்தனை சதவீதம் இம் முயற்சியில் வெற்றி ஏற்பட்டுள்ளது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) 1974 ஜனவரி முதல் ஏப்ரல் வரையுள்ள புள்ளிவிவர கணக்குப்படி தஞ்சை, வடாற்காடு மாவட்டங்களில் முறையே 98 சதவிகிதம், 83 சதவிகிதமும், கோவை, நீலகிரி, இராமநாதபுரம் மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் 60-க்கும், 78-க்கும் இடைப்பட்ட சதவிகித அளவில் இம்முயற்சியில் வெற்றி ஏற்பட்டுள்ளது.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டும் என்ற அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர், கோட்டாட்சித் தலைவர், வட்டாட்சித் தலைவர் ஆகிய





எல்லாக் கட்டங்களிலும் பொதுமக்களுக்குத் தமிழிலேயே கடிதப் போக்குவரத்து இருக்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப் படுமா? இம்மாதிரி தமிழில் சிறந்த முறையில் வரைவுகளை எழுதுகின்ற அதிகாரிகளுக்கு வேலை உயர்வு அளிப்பதில் முன் உரிமை தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்தப் பணிகள் சிறப்பாக நடைபெற ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதை நான்கு கட்டங்களில் செயல்படுத்த முயற்சி எடுக்கப் பட்டிருக்கிறது. கீழ் மட்டத்திலும், மேல் மட்டத்திலும் இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தமிழில் நல்ல முறையில் வரைவு எழுதுகிறவர்களுக்கு இரண்டு பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. சில இடங்களில் அதிகாரிகளை வைத்து ஆய்வாளர்களும், இயக்குனர்களும் தனி வகுப்புகள் நடத்தி அவர்களுக்கு உதவியாக இருக்கும் பொருட்டு வரைவு எழுதுவது எப்படி, செயற்குறிப்பு எழுதுவது எப்படி என்பதில் பயிற்சி கொடுத்து வருகிறார்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, this Government has introduced Tamil as official language and it is quite natural they are implementing it. But in certain border areas like Hosur, there are minority languages dominating and unless the officers use such languages, those people will not be able to understand the Government Schemes, etc. Therefore, in such areas, may I know from the Hon. Minister whether the Government would permit the use of minority languages for official purposes?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக்குறிப்பு எங்களிடத்தில் இல்லை. அப்படிப்பட்ட மொழி சிறுபான்மை மக்களுடைய எண்ணத்தைக் கருத்தில் கொண்டு, அந்தந்த இடங்களில் தெரிவிக்கப்படுகின்ற விவரங்களை தமிழோடு சேர்த்து அவரவர்கள் மொழியில் அனுப்பவும் முயற்சி செய்யலாம்.

[1975 மார்ச் 7

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, நீதி மன்றங்களில் சில வாக்குமூலங்கள்தான் தமிழில் எழுதப் படுகின்றன. தீர்ப்பு போன்றவைகளையும் தமிழிலேயே எழுது வதற்கு அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கீழ் மட்டங்களில் இருக்கின்ற நீதிமன்றங்களில் வாக்குமூலங்கள், தீர்ப்பு ஆகியவை தமிழில் கொடுக்கப்படுகிறது. நாளடைவில்தான் மேல் மட்டத்தில் இருக்கிற மன்றங்களுக்குக் கொண்டு வந்தாக வேண்டும். அதற்கு உதவியாக இன்றைக்கு தமிழிலேயே சட்டங்களை மொழிபெயர்த்துக் கொண்டு வருகிறார்கள்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, சிறப்பு ஆய்வாளர்களின் பணிகள் என்ன? அவர்கள் ஏதாவது அறிக்கை தந்திருக்கிறார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாவட்டங்களுக்கும் சென்று ஒரு நாள், ஒன்றரை நாள் தங்கி ஆய்வு செய்கிறார்கள். குறைபாடுகள் இருந்தால் சுட்டிக் காட்டுகிறார்கள். சிறந்த முறையில் எழுதப்பட்டு இருப் பதையும் பார்வையிட்டு அதைப் போல் மற்ற இடங்களிலும் பின் பற்ற நடவடிக்கை எடுத்துக் கொள்கிறார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பொதுவாக, தொழிலாளர்கள் லேபர் கமிஷனரிடத்திலே எழுதிக் கொடுக்கக் கூடிய கடிதங் களுக்குப் பதில்கள் ஆங்கிலத்திலே வந்து கொண்டிருக்கின்றன. தொழிலாளர்கள் நேரடியாகப் பாதிக்கப்படக் கூடியவைகளுக்குக் கூட ஆங்கிலத்திலே பதில்கள் வந்து கொண்டிருக்கின்றனவே. ஆகவே, அங்கே முழுமையும் தமிழிலே இருக்கின்ற வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்தத் துறையைப் பொறுத்தவரையிலே, தமிழிலே நடத்த வேண்டுமென்றுதான் எடுத்துச் சொல்லி வருகிறோம். குறிப்பாக, நிதித் துறையிலும், சட்டத் துறையிலும் இரண்டு துறையிலும் தான் முழுமையாகத் தமிழைக் கொண்டு வர முடியவில்லை. தொழிலாளர் துறையைப் பொறுத்தவரைக்கு மட்டுமல்லாமல் மற்றத் துறைகளுக்கும் தமிழிலே வருகின்ற கடிதங்களுக்கு தமிழிலேதான் பதில் எழுத வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன்.



1975 மார்ச் 7]

## Export of mango juice

* 224 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether a large quantity of mango juice is being exported from North Arcot district to foreign Countries in recent times; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு வழங்கல் விற்பனைச் சங்கத்தின் மூலம் இயங்கும் கூட்டுறவு பழச்சாறு பதனிடும் தொழிற்சாலை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்த மாம்பழச் சாறு, மாம்பழப் பாகு, மாம்பழத் துண்டுகள், அன்னாசிப் பழத் துண்டுகள் ஆகியவற்றின் விவரங்களாவது :—

| ஆண்டு | உற்பத்திப் பொருள். | அளவு. | ஏற்றுமதிசெய்யப் பட்ட நாடு | மதிப்பு |
|---|---|---|---|---|
| | | டன்-கிலோகிராம் | | ரூ. பை. |
| 1971-72 | மாம்பழச்சாறு | — | ரஷ்யா | 1,79,897·54 |
| 1972-73 | மாம்பழச்சாறு | 347 610 50 | ரஷ்யா | 8,37,013·3 |
| 1974-75 | மாம்பழப்பாகு | 4 — — | ஆஸ்திரேலியா | 19,047·53 |
| | மாம்பழச்சாறு | 1 632 — | அபுதாபி | 10,134·37 |
| | மாம்பழத்துண்டுகள் | 1 89 600 | அபுதாபி | 7,011·26 |
| | அன்னாசிப்பழத் துண்டுகள் | 28 184 — | போலந்து | 1,36,884·14 |
| | மாம்பழச்சாறு | 1 20 — | ஓமன் | 4,517·43 |

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, நம்முடைய வட ஆற்காடு மாவட்டத்தில் உற்பத்தியாகின்ற மாம்பழச் சாறு மற்றும் இதர பழவகைகளுக்கும் மேல்நாடுகளில் நல்ல கிராக்கி இருப்பதாக தெரிகிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை கூட்டுறவுத் துறையில் இதர மாவட்டங்களுக்குப் பரவலாக்க அரசாங்கம் ஏதாவது சிறப்புத் திட்டம் உருவாக்குமா என அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த மாவட்டத்திலேதான் இந்த வாய்ப்பு இருக்கிறது. அதையே அதிக அளவுக்கு உற்பத்தி செய்ய கப்பாசிட்டி இருக்கிறது. அதை இன்னும் அதிக அளவுக்கு உற்பத்தி செய்து மேல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முயற்சி எடுக்கப்படும்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, இந்த வட ஆற்காடு மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற மாம்பழச் சாறுக்கு வெளிநாட்டில் கிராக்கியிருந்தாலும், அந்தத் தொழிற்சாலைக்குத் தேவைப்படுகின்ற மாம்பழம் கிடைப்பதில்லை. அங்கு போதுமான அளவு மாம்பழம் உற்பத்தியாகவில்லை. எனவே, வட ஆற்காடு மாவட்டத்திலேயுள்ள விவசாயிகளுக்கு, மாம்பழப் பயிர் வைக்கின்றவர்களுக்கு, கூட்டுறவுத் துறையிலே பண உதவி செய்து, அவர்களை உற்சாகப்படுத்த அரசாங்கம் முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதற்கு விவசாயிகள் முன் வருவார்களானால், பரிசீலிக்கலாம்.

**திரு. கே. எ. வகாப் :** இந்தக் கூட்டுறவுத் தொழிற்சாலையிலே மாம்பழம் மட்டுமல்லாமல், மற்ற பழங்களும் பதப்படுத்தப்படு கின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் வீராசாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல், போதிய மாம்பழம் இல்லாத காரணத்தாலும், அத்துடன் அங்கு நிர்வாகம் சரியாக நடத்தப் படாத காரணத்தாலும், வேலைகள் சரியாக நடைபெறவில்லை யென்று சொல்லப்படுகிறது. ஆகவே, நிர்வாகத்தைச் சீர்திருத்தி, சரியாக நடத்த ஆவன செய்வதோடு மட்டுமல்லாமல், விவசாயி களுக்கு, இதனைப் பயிரிடுபவர்களுக்கு, ஏக்கருக்கு இவ்வளவு என்று அதற்கு மானியமாக வழங்க அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் ஏற்கனவே கூறியதைப் போல், கூட்டுறவு முறையிலே விவசாயிகள் முன்வருவார்களானால் கூட்டுறவுத் துறையிலே உதவி செய்யலாம்.





*Distribution of soaps through Civil Supplies Corporation*

* 225 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal to distribute groundnut oil, soaps, etc., to card holders through the stores opened by Civil Supplies Corporation ; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) கடலை எண்ணெய், தூய்மைப்படுத்தப்பட்ட கடலை எண்ணெய், குளியல் சோப்புகள், சலவைச் சோப்புகள் ஆகியவை வாணிக அடிப்படையிலும், அவை கிடைப்பதைப்பொறுத்தும், உணவுப் பொருள் வழங்கு கழகத்தின் சில்லறைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

*சிறுதொழில் வளர்ச்சிக்குக் கடன்கள்*

* 226 வினா—**திரு. கே. ரங்கநாதன் :** மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுதொழில் வளர்ச்சிக்காக 1972-73-ம் ஆண்டில் சினால் வழங்கப்பட்ட நிதி எவ்வளவு?

(இ) கோவை மாவட்டத்திற்கு மட்டும் வழங்கப்பட்ட நிதி எவ்வளவு?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) 1972-73 ஆம் ஆண்டில் தமிழ் நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகமும் தமிழ் நாடு தொழில் முதலீட்டு கழகமும் சிறுதொழில் களுக்கு வழங்கிய கடன்களின் விவரங்கள் அடங்கிய விவர அறிக்கை @ பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. ரங்கநாதன் :** தலைவரவர்களே, தற்சமயம் தொழில் வளர்ச்சிக்குக் கொடுக்கின்ற கடன்கள் நிறுத்திவைக்கப்பட்டிருக் கின்றன என்று சொல்கிறார்களே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

---

@ 258–263 ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1975 மார்ச் 7

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அது சரியான விவரமல்ல.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, இங்கே கொடுத்திருக்கின்ற விவர அறிக்கையில் தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடம் 1972-73-ம் ஆண்டு கடனுதவி கோரி, கன்னியாகுமரியிலிருந்து எந்த விண்ணப்பமும் வரவில்லை, எந்த உதவித்தொகையும், கடனும் வழங்கப்படவில்லையென்றிருக்கிறது. அங்கிருந்து விண்ணப்பங்கள் வரவில்லையா? விண்ணப்பங்கள் வராமலிருப்பதற்கு என்ன காரணம்? அந்த இலாகாவை நிர்வகிக்கின்ற அதிகாரிகள் ஒழுங்காக விளம்பரம் செய்யவில்லையென்பதுதான் இதற்குக் காரணமா என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** விண்ணப்பம் வரவில்லை என்ற குறிப்புதானிருக்கிறது. சிறு தொழில் அதிபர்கள் முன்வந்து கடன் கேட்கிறார்கள், வியாபாரிகள் முன்வருகிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில், அதிகாரிகளைப் பொறுத்தவரை முயற்சி எடுக்கப்பட்டுத்தான் வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி எடுத்து, விண்ணப்பம் வந்தால், அதற்கும் நடவடிக்கை எடுக்கலாம்

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகமும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகமும் கொடுத்துள்ள இந்தக் கடன் சம்பந்தப்பட்ட விவர அறிக்கையிலே ரொம்பப் பின்தங்கிய மாவட்டமான தர்மபுரியில் ஒரே ஒரு ஆளுக்கு, ரூ. 25,000 கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே உள்ளவர்கள் வேறு யாரும் மனுச் செய்யவில்லையா? அது தொழில் வளர்ச்சியிலே பின்தங்கிய மாவட்டமாக இருப்பதால், அங்கு தொழில்களை வளர்க்க வேண்டுமென்ற அந்த நோக்குடன் அரசு வேறு முயற்சி எடுக்கவில்லையா என அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** சிறு தொழில் நடத்துபவர்கள், அரசாங்கத்திற்கு அவர்களாக முன்வந்து, மனு செய்து கடன் பெறுகிறார்கள். தர்மபுரி மாவட்டத்திலே தொழில் வளம் பெருகவேண்டுமென்று, ஹோசூர் பகுதியிலே தொழில் துறை வளர்ச்சிக்குத் தனியாக முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன்:** தலைவர் அவர்களே, கடன்களைப் பெற்றுக்கொண்டவர்கள் அவ்வளவுபேரும் சிறுதொழில்களை ஆரம்பித்து, உற்பத்தியைத் தொடங்கிவிட்டார்களா? அல்லது உற்பத்தி தொடங்கிய தொழில்கள் எவ்வளவு? உற்பத்தி தொடங்காத தொழில்கள் எவ்வளவு? கடன் வாங்கி, உற்பத்தியைத் தொடங்காமலிருப்பதற்கான காரணம் என்ன என்பதை அறியலாமா?



1975 மார்ச் 7]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அந்த விவரங்கள் இதிலே இல்லை. தனிக் கேள்வி போட்டால் தரலாம்.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவரவர்களே, இந்தச் சிறு தொழில்களுக்கு வழங்கப்படுகின்ற நிதியைப் பெறுகின்றபொழுது, சில கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. இந்த நிபந்தனைகளைத் தளர்த்தினால் ஏராளமான பேர் சிறுதொழில்களிலே அனுகூலம் பெறுவார்கள், ஆதாயம் பெறுவார்கள். ஆகவே, நிபந்தனைகளைத் தளர்த்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தேவையான, அவசியமான நிபந்தனைகளுக்குட்பட்டுத்தான் பணம் கொடுக்கப்படுகிறது. இப்பொழுதிருக்கிற பிரச்னை பணம் போதவில்லையென்றுதான் வந்திருக்கிறதே தவிர, பணம் கிடைப்பதிலே கஷ்டம் இல்லை.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, சிறுதொழில்களுக்கு வாங்கிய கடனைக் கொண்டு உற்பத்தி செய்வதற்குள்ளாக பல இடைஞ்சல்கள் வந்துவிடுகின்றன. மின்சார வெட்டு வருகிறது, அதனாலே கொஞ்ச நாள் அந்தத் தொழில்கள் பாதிக்கப்படுகின்றன. ரா மெட்டீரியல்ஸ் இல்லாத காரணத்தாலே கொஞ்ச நாள் பாதிக்கப்படுகின்றன. அதனால், சிறுதொழில்களை கடனில் ஆரம்பித்து தொழில் நடத்தும்போது அந்தத் தொழிலில் கிடைக்கிற உற்பத்தி பாதிக்கப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறதே; ஆகவே, அதற்கு அரசாங்கம் நல்ல ஆலோசனை சொல்வதற்கும், அந்த உற்பத்தியை எடுத்து அரசாங்கமே விநியோகம் செய்வதற்கும் ஏற்பாட்டை செய்திருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** சிறுதொழில்களுக்கு ஏற்படுகிற கஷ்டங்களைப் பொறுத்து, அவ்வப்பொழுது பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல், மின்சாரப் பற்றாக்குறை,

மூலப்பொருள் பற்றுக்குறை எல்லாம் இருக்கின்றன. அவ்வப்பொழுது அரசாங்க கவனத்திற்கு கொண்டுவரப்படும்பொழுது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, சிறுதொழில்களுக்கு இப்பொழுது சிட்கோவின் மூலம் நல்லமுறையில் கடன் வழங்கப்படுகிறது. இருந்தாலும் மத்திய அரசாங்கம் அதற்கு 15 சதவிகிதம் மானியம் கொடுக்கிறது. பின்தங்கிய வட ஆற்காடு மாவட்டத்தின் ஒரு பகுதியிலேதான் இது இருக்கிறது. ஆகவே, மத்திய அரசாங்கம் அளிக்கும் 15 சதவிகிதம் மானியத்தை எல்லாப் பகுதிகளுக்கும் வாங்கித் தர அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பின்தங்கிய தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளுக்கு மத்திய அரசாங்கம் என்ன உதவி கொடுக்கிறதோ, அந்த உதவிகளெல்லாம் இப்பொழுது வழங்கப்பட்டு வருகின்றன.

## பருத்தி விதை எண்ணெய் ஆலை.

* 227 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு தொழில்–மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் பருத்தி விதை எண்ணெய் உற்பத்தி ஆலை துவங்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:**

(அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

(முற்பகல் 9.30)

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் பருத்தி அதிகமாக உற்பத்தியாகிறது. ஆகவே இந்த பருத்தி விதை எண்ணெய் ஆலையைத் துவங்குவதற்கு ஏற்கனவே ஒரு பரிசீலனை இருந்ததே, அது கைவிடப்பட்டு விட்டதா? அதை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா?



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பருத்திவிதை எண்ணெய் எடுக்கின்ற ஆலை இப்போது கோவையிலும் ராஜபாளையத்திலும் இருக்கின்றன. அதுவல்லாமல் 9 பேர்களுக்கு மத்திய அரசு அனுமதி கொடுத்திருக்கிறது. இன்னும் இரண்டு பேர்கள் கோரிக்கை மனு கொடுத்திருக்கிறார்கள். மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விவரம் என்னிடத்தில் இல்லை.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலே அதிகமான தொழில் வளர்ச்சி இல்லாமலும் அதிகமாக பருத்தி விளைவிக்கக்கூடியதுமான கோவில்பட்டி வட்டாரத்தில் அங்கேயுள்ள மார்க்கெட்டிங் சொஸைட்டி மூலமாக இந்த ஆலையை ஆரம்பிக்க ப்ரப்போஸல் இங்கிருந்து கேட்டதாகத் தகவல் இருக்கிறதே, இப்போது அங்கே இருக்கிற 'சீட்' களை எல்லாம் வேறு இடங்களுக்கு அனுப்பக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, கூட்டுறவுத் துறையிலே அங்கே இந்த ஆலையை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கூட்டுறவுத் துறையின் மூலமாக இதுபோன்ற கோரிக்கை வந்தால் பரிசீலிக்கப்படும்.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, பருத்தி விதை கால்நடைகளுக்கு முக்கியமான தீவனமாகக் கருதப்படுகிறது. இப்படி பருத்தி விதை எண்ணெய் ஆலைகளை விஸ்தரித்துக் கொண்டேபோனால் கால்நடைகளுக்கு தீவனப் பற்றுக்குறை ஏற்படுமல்லவா? ஆகவே அதைத் தடைசெய்யவேண்டும். அது மட்டுமல்ல, வெளி மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்து பருத்திக் கொட்டையை பர்ச்சேஸ் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அதையும் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கால்நடைகளுக்கு கஷ்டம் ஏற்படக்கூடாது என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து. அதையெல்லாம் பரிசீலித்துத்தான் அனுமதி கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை இனிமேல் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா:** ஹைப்ரீட் பருத்திக் கொட்டைதான் மாட்டுக்கு நல்லது என்று அக்ரிகல்சர் டிபார்ட்மெண்டால் சொல்லப்படுகிறது. ஆகவே அதனுடைய உற்

மத்தியை அதிகமாகச் செய்வதற்கு அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறதா? அதை உற்பத்தி செய்வதற்கு தடையில்லாமல் இருப்பதற்காவது அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தும் கவனத்தில் கொள்ளப்படும்.

### முத்திரைத்தாள்கள் விற்பனை.

*228 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் பொதுமக்களுக்குத் தேவைப்படும் கோர்ட்பீஸ் ஸ்டாம்புகள், காபி ஸ்டாம்புகள், N.J. ஸ்டாம்புகள் முதலியன கிடைப்பதில் உள்ள இடர்பாடுகளை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:**

(அ) ஆம்.

(இ) 1974-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திலேயே முத்திரைத் தாள்களின் தேவைப்பட்டியல்கள் நாசிக்கிலுள்ள முத்திரைத்தாள் துணைக் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அனுப்பப்பட்டிருந்தும், அவர் அத்தேவைப்பட்டியலில் கண்டவாறு உடனடியாக முத்திரைத் தாள்களை அனுப்பி வைக்கவில்லை; திருநெல்வேலி மாவட்டத்தில் முத்திரைத்தாள்கள் பற்றுக்குறை ஏற்பட்டதற்கு இதுவே முக்கிய காரணமாகும். இருப்பினும் பொது மக்களின் நலனைக் காக்கும் பொருட்டு ஏனைய மாவட்டங்களிலிருந்து திருநெல்வேலி மாவட்டத்திற்கு முத்திரைத் தாள்களை அனுப்பி வைக்க துறைக்குள்ளாக சில ஏற்பாடுகள் உடனடியாகச் செய்யப்பட்டன. இவ்வாறு உரிய காலத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கை ஓரளவிற்கு முத்திரைத்தாள் பற்றுக் குறையைத் தவிர்த்தது. நாசிக்கிலிருந்து முத்திரைத்தாள்கள் வழங்கப்படுவது தற்போது தொடங்கிவிட்டது. தற்போது பல் வேறு மதிப்புகளில் முத்திரைத்தாள்கள் மொத்தம் ரூபாய் 12.2 லட்சம் மதிப்பிற்கு திருநெல்வேலி மாவட்டக் கருவூலத்திற்கு வந்துள்ளன. அவை அம்மாவட்டத்திலுள்ள துணைக்கருவூலங்கள்





அனைத்திற்கும் வழங்கப்பட்டு வருகின்றன. திருநெல்வேலி மாவட்டத்தில் முத்திரைத்தாள்களின் இருப்பு நிலை தற்போது சீரடைந்துள்ளது. அம்மாவட்டத்தில் முத்திரைத்தாள்கள் கிடைக்கவில்லை என்ற புகார் எதுவும் இப்போது வரவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, இப்போது மேம்பாடு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் காப்பியிங் ஷீட்ஸ் கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறதே, அதைப்பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுத்து இருக்கிறதா? அந்த மாவட்டத்திலே மட்டுமல்லாமல் மற்ற மாவட்டங்களிலேயும் இப்படிப்பட்ட குறைபாடுகள் இருந்துகொண்டிருக்கின்றன. அவற்றை நிவர்த்திப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** நான்-ஜுடிஷியல் ஸ்டாம்ப் பேப்பர்களைப்பற்றிச் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதுவும் அங்கங்கே அனுப்பப்பட்டு வருகிறது. ரூபாய் 5,05,633.65 மதிப்பு அளவிற்கு அனுப்பப்படுகிறது.

**திரு. நா. வெ. குருசாமி:** இந்த முத்திரைத் தாள்கள் பற்றுக் குறை இருப்பதால் அதிக விலை கொடுத்து வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அரசு அதன்மீது நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா:** இந்த முத்திரைத்தாள்கள் பற்றுக் குறை, தட்டுப்பாடு வந்திருக்கும்போது ரிஜிஸ்தார் ஆபீஸ்களிலே அத்தாட்சிபெற்று ரொக்கம் கொடுத்து பெற்றுக்கொள்ளலாம் என்ற முறை இருந்தது. அந்த முறையைப் பின்பற்ற அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** அது பரிசீலிக்கப்படுகிறது. இப்போது பற்றுக்குறை காரணத்தால் மட்டுமல்ல, மற்றபடி அதுவும் ஏற்றுக்கொள்ளப்படும்.

**திரு. எம். சுரேந்திரன்:** முத்திரைத்தாள்கள் பற்றுக்குறை இருக்கிறபோதும் சரி, தாராளமாகக் கிடைக்கிறபோதும் சரி, சில இடங்களிலே விலை அதிகமாக விற்கப்படுகிறது. சில்லறைக் கடைக்காரர்கள், ஸ்டாம்ப் வெண்டர்களிடத்திலிருந்து வாங்கி அதிக விலைக்கு விற்கிறார்கள். அது சர்வசாதாரணமாக இருக்கிறது. அதற்குக் காரணம் முத்திரைத்தாள்கள் கிடைக்காத

தில்லை இருப்பதுதான். ஆகவே, அதிகமான விலையில்லாமல் பரவலாக எல்லா இடங்களிலும் இந்த முத்திரைத்தாள்கள் கிடைக்கக் கூடிய வழியை அரசாங்கம் செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்** : எந்த எந்த இடங்களில் போதுமான வெண்டர்கள் இல்லாததால் கிடைக்கவில்லையோ அப்படிப்பட்ட இடங்களுக்கு அதிகமானவர்களை நியமனம் செய்கிறோம். ஆகவே கிடைக்கவில்லை என்ற குறை தவிர்க்கப் படுகிறது. கடைகளிலே வாங்கக்கூடாது. ஒருக்கால் நில உச்ச வரம்புச் சட்டத்தின்போது வாங்கிவைத்ததாக இருக்கலாம், ஆனால் அவைகூட விலை போகவில்லை என்று தெரிகிறது.

**திரு. எம். முத்தையா** : நெல்லை மாவட்டத்தில் முத்திரைத் தாள்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஆனால் சிவகாசி யிலே தாராளமாகக் கிடைக்கிறது. அதிகவிலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. அதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்** : அரசாங்கத்திற்கு நாசிக் அச்சகத்திலிருந்து அச்சடிக்கப்பட்டு வருவதுதான். எல்லா மாவட்டங்களுக்கும் அது பரவலாகப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. ஆகவே, சிவகாசியிலே அதிகமான விலைக்கு விற்கப்படுவதாகச் சொல்லப்படுவது ஆச்சரியமாக இருக்கிறது. அரசாங்கத்தின் கவனத்திற்கு அதைக் கொண்டுவந்தால் நடவடிக்கை எடுக்கப் படும்.

**திரு. செ. அரங்கநாயகம்** : முத்திரைத் தாள்கள் வாங்கி விற்கப்படுவதை முறைப்படுத்த வேண்டும் என்று ஸ்டாம்ப் வெண்டர்கள் ஏதாவது கோரிக்கை மனு கொடுத்திருக்கிறார்களா? அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்** : அதுபற்றி என்னிடத்தில் குறிப்பு இல்லை. அதைப்பற்றி அறிந்து தேவைப்படும்போது சொல்கிறேன்.

**திரு. கு. காமாட்சி** : முத்திரைத்தாள்கள், ஸ்டாம்புகள் எல்லாம் கள்ள நோட்டு அச்சடிப்பதைப்போல் சில இடங்களில் கள்ளத்தன மாக அச்சடிக்கப்படுவதாக ஏதாவது தகவல் வந்திருக்கிறதா? அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?





**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்** : அப்படியொன்றும் இல்லை.

**திரு. கே. எ. வகாப்** : முத்திரைத்தாள்கள் கிடைப்பதில் உள்ள சிரமங்களைப் போக்குவதற்கு சப்-ரிஜிஸ்தார் ஆபீஸ்களிலேயே அரசாங்கமே வைத்து விற்கக்கூடிய ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்** : இப்போது எல்லா இடங்களிலும் சப்-ரிஜிஸ்தார் ஆபீஸ்கள் இல்லை. இருக்கிற இடங்களில் கவனிக்கப்படலாம். எல்லா இடங்களிலும் அப்படிக் கொடுப்பது என்பது கஷ்டமானதாகும்.

**திரு. பூ. எட்டியப்பன்** : தலைவர் அவர்களே, முத்திரைத்தாள்கள் கள்ளமார்க்கட்டிலே விற்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அதற்கு மூல காரணம் அந்த ஸ்டாம்ப்களை 2, 3 மாதங்களுக்கு முன்னாலேயே வாங்கி வைத்து பிற்காலத்தில் விற்கப்படுகிறது, அப்படி விற்கப்படுகிறபோது பெயர் எழுதாமல் வைத்துக்கொள் கிறார்கள். பிறகு கொடுக்கிறார்கள். இதனால் 5 ரூபாய்க்கு விற்க வேண்டிய ஸ்டாம்ப் பேப்பர் 10, 15 ரூபாய் என்று விற்கப்படுகிறது. இந்த ஸ்டாம்ப் பேப்பர்கள் சரியான முறையில் விற்கப்படுகிறதா என்று அதிகாரிகள் அடிக்கடி கண்காணித்து 2, 3 மாதங்களுக்குப் பிறகு வேறு ஒரு பெயருக்கு எழுதுவது கூடாது என்று தடை செய்ய அரசு உத்தரவிடுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்** : இப்போதே நல்ல முறையிலே கண்காணிக்கப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட புகார்கள் தெரிவிக்கப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்.

### தீ விபத்தில் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம்

* 229 **வினா—டாக்டர் எச். வி. ஹாண்டே** : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, தியாகராயநகரில் 12—11—1974 அன்று ஏற்பட்ட தீ விபத்தால் சேதமடைந்த பொருட்களின் மதிப்பு, உயிரிழந்தோர் எண்ணிக்கை ஆகியவைகள் எவ்வளவு?

(இ) இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணப் பணி மேற்கொள்ளப்பட்டதா?

[1975 மார்ச் 7

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :**

(அ) சென்னை தியாகராயநகரில் 12—11—1974 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் சேதமடைந்த பொருட்களின் மதிப்பு சுமார் ரூ. 38,000 என்று கணக்கிடப்பட்டுள்ளது. இவ்விபத்தில் 1 முதல் 13 வயதுக்கு உட்பட்ட மூன்று குழந்தைகள் உயிரிழந்தன.

(இ) இவ்விபத்தில் உயிரிழந்த குழந்தைகளின் தந்தைக்கு அரசு, "முதல் அமைச்சர் நிவாரண நிதி"யிலிருந்து ரூ. 2,000 வழங்கியுள்ளது. இதைத் தவிர, இத் தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 4,990 ரொக்க மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி அவர்களுக்கு உணவும் உறைவிடமும் வழங்கியது. குடிசை மாற்று வாரியம் தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடைகள் வழங்கியுள்ளது. மேலும், மேற்படி வாரியம் அவர்களுக்கு மாற்று வீடுகள் கட்ட முற்பட்டிருக்கிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, தீ விபத்தில் பொருளனைத்தையும் இழந்தவர்களுக்கு மொத்த மதிப்பில் நான்கில் ஒரு பங்கை இலவசமாகக் கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** கடனை இப்போது வழங்கப்படுகிறது, அப்படிக் கொடுப்பதற்கு இயலாது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 80 ரூபாய் மானியம் ஒரு வீட்டுக்கு என்ற முறையிலே கொடுக்கிறார்கள். இப்போது இருக்கிற விலைவாசியேற்றத்தின்படி பார்த்தால் அந்தத் தொகை ரொம்பவும் குறைவானது. ஆகவே, அதற்குத்தகுந்தபடி உயர்த்திக்கொடுப்பதற்கு குறைந்தது 250 ரூபாயாவது ஒரு வீட்டிற்குக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஏற்கனவே கொடுத்த 30 ரூபாய் துணிமணிகளுக்காக 10 ரூபாய் ஆகமொத்தம் 40 ரூபாய் என்று இருந்தது இப்போது 60, 20 என்று உயர்த்தப்பட்டு 80 ரூபாய் வழங்கப்படுகிறது. மேலும் உயர்த்துவதற்கு இப்போது இயலாது.

**திரு. வெ. ந. முத்தமிழ்ச் செல்வன் :** பேரவைத் தலைவரவர்களே, தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக ரொக்கச் சலுகை அரசு கொடுத்து விடுகிறது. ஆனால் வீடுகளைப் புதுப்பிப்பதற்காகக் கடன் விண்ணப்பங்களைக் கொடுத்தால் கிட்டத்தட்ட



1975 மார்ச் 7]

8 மாதங்கள், 10 மாதங்கள் ஆகின்றன. இதனால் தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் பெரிதும் சிரமப்படுகிறார்கள். எனவே அவர்களுக்கு உடனடியாகக் கடன் வழங்குவதற்கு அரசு விரைவான நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** பேரவைத் தலைவரவர்களே, கடன் கொடுத்தால் அது திரும்ப வாங்கப்பட வேண்டும். எனவே அவர்களுக்கு இருக்கும் திருப்பிக் கொடுக்கும் சக்தி முதலியவற்றைப் பரிசீலித்துத்தான் கடன் வழங்கப்படுகிறது. எனவே, அதுபற்றி உடனடியாகச் செய்ய இயலாது. ஆனால் பாதிக்கப்பட்டவர்களின் துயரைத் துடைப்பதற்காக அன்றோ அல்லது மறுநாளோ இந்த ரூபாய் இப்பொழுது துரிதமாக வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவரவர்களே, எரியும் வீடுகள் என்று பார்த்தால் பெரும்பாலும் ஏழை எளிய தாழ்த்தப்பட்டவர்களுடைய வீடுகளாகத்தான் இருக்கின்றன. உடனடியாக அவர்களுக்கு 80 ரூபாய் இனாமாகக் கொடுத்தாலும் மறுபடியும் அவர்கள் வீடுகள் கட்டிக் கொள்வதற்காக 2,500 ரூபாய் முன்பணம் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** பேரவைத் தலைவரவர்களே, கடன் கொடுத்தால் அதைத் திரும்ப வாங்குவதில் இருக்கின்ற சங்கடங்கள் அவர்களுக்குத் தெரியும். அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் இப்பொழுது அரசு ஒரு தொகையைக் கடனாகக் கொடுக்கிறது. எனவே, அப்படிப்பட்ட எரிகின்ற இடங்களில் அப்படிப்பட்ட முறையிலே வீடு கட்டிக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

## கிராம சேவக்குகள்.

* 230 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராம சேவக்குகளில் முதல் நிலை, இரண்டாம் நிலை என்ற பாகுபாட்டை நீக்கி அரசு உத்தரவு பிறப்பித்து உள்ளதா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** இல்லை.

[1975 மார்ச் 7

**திரு. என். இட்டப்பா:** தலைவரவர்களே, கிராமசேவக்குகள் எத்தனை கிராமங்களுக்கு ஒருவர் அல்லது எவ்வளவு மக்கள் தொகை பகுதிகளுக்கு ஒருவர் என்று நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும், இப்பொழுதுள்ள வளர்ந்துவரும் சூழ்நிலையில், அலுவல் பணிகள் வளர்ந்து வரும் சூழ்நிலையில் கிராம சேவக்குகளின் எண்ணிக்கையை மேலும் விரிவுபடுத்த அரசு ஆவன செய்ய முன்வருமா? கிராம சேவக்குகள் நகரத்தில் தங்காமல் கிராமங்களிலே தங்குவதற்கான வகை செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, கிராம சேவக்குகள் முதலிலே ஒரு பிளாக்கிற்கு 10 பேர் என்ற வீதத்தில் போடப்பட்டிருந்தார்கள். அதை மீண்டும் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தீவிர விவசாயத் திட்டத்தின் கீழ் ஒரு பிளாக்கிற்கு 20 பேர் என்ற விகிதத்தில் போட்டிருக்கிறார்கள். மற்றும் நெல்லை, திருச்சி, மதுரை, செங்கற்பட்டு, கோவை ஆகிய இடங்களில் விவசாய அபிவிருத்திக்காக 15 பேர் என்ற வீதத்தில் போட்டார்கள். மற்றபடி ஒவ்வொரு ஒன்றியத்திலும் 10 பேர் என்ற விகிதத்தில் இருக்கிறது. அவர்கள் எங்கே தங்குகிறார்கள் என்றால் அந்தந்த யூனியன்களின் எல்லைக்குள்ளே உள்ள இடங்களில்தான் தங்குகிறார்கள். அப்படி அவர்கள் தங்க வேண்டிய இடத்தில் தங்காமல் வேறு இடங்களில் தங்கினால் அது பற்றி அறிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவரவர்களே, கிராம சேவக்குகளுக்குப் பதவி உயர்வு அளிப்பதாகத் தெரிகிறது. எந்தெந்த துறைகளில் பதவி உயர்வு கொடுத்து நியமனம் செய்யப்படுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, இதிலே கேட்டிருப்பது இரண்டாவது நிலையிலேயிருந்து முதல் நிலைக்குப் போகிறார்களா என்று கேட்டிருக்கிறார்கள். முதலில் 3:7 என்று இருந்தது. அதை மாற்றி 1:1 என்று சர்க்கார் 4—4—1974-ல் உத்தரவு போட்டார்கள். ஐந்து ஆண்டுகளில் இந்த விகிதாசாரம் செயல்படுத்தப்பட வேண்டும் என்று போட்டிருந்த உத்தரவை மாற்றி 2 ஆண்டுகள் என்று ஆக்கி, 1974-75-ம் ஆண்டில் 450 பேர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டது. 1975-76-ல் மீதமுள்ள 427 பேர்களுக்கும் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது.



1975 மார்ச் 7]

**திரு. என். டென்னிஸ்:** தலைவரவர்களே, இரண்டாம் நிலையிலுள்ள கிராம சேவக்குகள் முதல் நிலைக்கு வருவதற்கு மிகவும் காலதாமதமாகிறது. பலர் கிராம சேவக்குகளாகவே ரிடையராகும் நிலையும் ஏற்படுகிறது. ஆகவே, இந்தக் காலதாமதத்தைத் தவிர்க்க, இதைத் துரிதப்படுத்துவதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, காலதாமதம் ஆகக்கூடாது என்பதற்காகத்தான் 1:1 என்று போட்டு, 5 ஆண்டுகளில் செயல்படுத்தப்பட வேண்டும் என்று போட்டிருந்ததை 2 ஆண்டுகள் என்று போட்டு பதவி உயர்வு சென்ற ஆண்டிலும் கொடுக்கப்பட்டது, இந்த ஆண்டிலே எல்லாம் அநேகமாக முடிந்து விடும்.

**திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவரவர்களே, கிராம சேவக்குகளுக்கு உண்மையாகவே என்ன வேலை? சட்டபூர்வமாக அவர்களை நியமிக்கும்பொழுது என்னென்ன வேலைகளுக்காக நியமிக்கப்படுகிறார்கள் என்பதற்கான குறிப்பு இருக்கிறதா? அப்படி என்றால் என்ன வேலைகள்? இன்றைக்கு அவர்களை கார்டுகள் கொடுப்பது, பூச்சி மருந்து தெளிப்பது போன்ற விவசாய சம்பந்தமான வேலைகளுக்குப் பயன்படுத்துகிறார்கள். அப்படியென்றால் அவர்களுக்கு விவசாய அறிவு பெறும் விதத்தில் ஒரு வருஷ டிரெயினிங் கொடுத்து அப்படிப்பட்டவர்களை நியமிக்க அரசு உத்தேசித்து இருக்கிறதா? இந்த கிராம சேவக்கு என்ற பெயர் இந்தியிலே இருக்கிறது, அதை தமிழிலே மாற்றியமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, கிராம சேவக்குகள் என்பதை மாற்றி கிராம நல ஊழியர் என்று வைத்திருக்கிறோம். கிராமம் என்பதுதான் தமிழாக்கப்படவில்லை. அதை மாற்றி ஊர் நல ஊழியர் என்று மாற்றிக்கொள்ளலாம். அவர்களது வேலைகளைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு பிளாக்கிலும் கூட்டுறவுத் துறை, வேளாண்மைத் துறை, குடும்பக் கட்டுப்பாடு போன்ற எந்த எந்தத் துறைகளிலே கிராம அபிவிருத்திப் பணிகளைச் செய்கிறோமோ அத்தனை துறைகளிலேயும் இந்தக் கிராம சேவக்குகள் பணி புரிகிறார்கள்.

[1975 மார்ச் 7

### மயிலாப்பூர் சித்திரக்குளம்

*231 விஞ.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மயிலாப்பூரிலுள்ள சித்திரக்குளம் பழுது பார்க்கப்படாமல் இருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இதைப் புதுப்பிக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** (அ) ஆம்.

(இ) சென்னை மயிலாப்பூரிலுள்ள சித்திரக்குளத்தை பழுது பார்க்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, சென்னை மயிலாப்பூரிலுள்ள இந்த சித்திரக்குளம் நீண்டகாலமாகப் பழுது பார்க்கப்படாமலும், புதுப்பிக்கப்படாமலும் இருக்கிறது. இதனுல் சுற்றுப்புற பக்கங்களுக்குச் சுகாதாரக் கேடு இருப்பதாகச் சொல்லப் படுகிறது. ஆகவே, இனிமேலாவது இதைப் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, இதைச் சுத்தம் செய்ய என்றுதான் 99 ஆண்டுகளுக்கு மாநகராட்சிக்குக் குத்தகைக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே சுற்றுச் சுகாதார முறையிலே வைத்துக்கொள்ள வேண்டிய ஒரு நிலையை மாநகராட்சி ஆண்டாண்டு தோறும் நிர்வகித்து வருகிருர்கள். ஆனல் குளத்திற்குள்ளே இருக்கும் படிக்கட்டுகளைப் பழுது பார்க்க சுமார் 66,000 ரூபாய்க்கான ஒரு திட்டத்தை அறநிலையத்துறைக்கு அனுப்பியிருக்கிறேம். அறநிலையத் துறையினர், இது மாநகராட்சியின் பொறுப்பிலே குத்தகைக்கு இருப்பதால் அறநிலையத்துறை செலவு செய்ய முடியாது என்பதால் இதை மாநகராட்சியிலிருந்து அறநிலையத்துறைக்கு மாற்ற வேண்டுமென்று கேட்டிருக்கிருர்கள். மாநகராட்சியும் அதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறது, அறநிலையத் துறையும் அதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, இது முடிந்தபிறகு உள்ளே படித்துறை கட்டுவது போன்ற ஏற்பாடுகள் இருக்கும். இப்பொழுது சுகாதார நிலைமைக்கு அவ்வளவு ஒன்றும் கேடாக இல்லாமல் மாநகராட்சி பார்த்துக் கொள்கிறது.



1975 மார்ச் 7]

### சிமெண்ட்டுக்கு மாற்றுப்பொருள்

*232 விஞ.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பொறுப்பிலுள்ள வேலைத் திட்டங்களுக்கு சிமெண்டிக்குப் பதிலாக வேறு பொருளை உபயோகிப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன் முடிவு யாது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) & (இ) சிமெண்டு பற்றாக்குறையின் காரணமாக, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், கட்டட வேலைகளில் முடிந்த வரைக்கும் சுண்ணாம்புக் கலவையை பயன்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் கட்டப்படும் வீடுகள், அண்ணா சாலையிலே வீட்டு வசதி வாரிய அலுவலகத்திற்கு முன்பாக ஒரு பெரிய கட்டடத்தை செங்கற்களுக்குப் பதிலாக [illegible] கற்களைப் பயன்படுத்திக் கட்டியிருக்கிறார்கள் என்பதையும், அதைப்போல் சிமெண்டிற்குப் பதிலாக வேறு எதையோ பயன்படுத்துகிறார்கள் என்பதையும் அறிகிறேன். இந்த செங்கற்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தும் கல் நல்ல முறையில் பயன்படுகிறதா? அந்தக் கற்கள் செங்கற்களைப்போல் நல்ல முறையில் உறுதியாக இருப்பதாகச் சொல்கிறார்களே, அது எந்த அளவிற்குப் பயன்படுகிறது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, போலந்து நாட்டின் ஒத்துழைப்போடு, செல்கிரீட் என்ற திட்டமெல்லாம் எண்ணூரிலே உருவாக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இதிலே செல்கிரீட் என்னும் தக்கைக்கல் உற்பத்தி செய்யப்பட்டு, சென்னை நகரத்திற்குள்ளே கட்டப்படும் வீடுகளுக்கு மட்டும் பயன்படுத்த ஏதுவாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் 30 மைல்களுக்கு மேற்பட்ட வெளியூர்களுக்கு எடுத்துச் செல்வதென்றால் லாரி செலவு, இரயில் செலவு முதலியவை அதிகமாகும். ஆகவே, சென்னை நகரத்திற்குள்ளே செல்கிரீட் கற்கள் பயன்படுத்தப்பட்டு வீடுகள் கட்டப்படுகின்றன என்பது உண்மைதான். சிமெண்டுக்குப் பதிலாக சுண்ணாம்புக் கலவையை

இப்பொழுது பல்வேறுயிடங்களில் உபயோகப்படுத்தி வருகிறோம். பொதுமக்கள் அதனை விரும்பியேற்றுக் கொள்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. பழனிவேலு :** தலைவரவர்களே, சிமெண்டுக்குப் பதிலாக சுண்ணாம்பு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் சுண்ணாம்பை நன்றாக அறைத்தால்தான் செங்கல்லில் பிடிப்பு ஏற்படும். அப்படியான முறைகள் இல்லாமல் எல்லா இடங்களில் நடக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, சுண்ணாம்பு அறைக்க இப்பொழுது சமீபத்தில் மின்சார இயந்திரங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அந்த மின்சார இயந்திரங்களை வாங்கி ஆங்காங்கே மின்சாரத்தின் மூலம் அந்த இயந்திரங்களை ஓட்டி அவ்வப்பொழுது அறைத்து அவ்வப்பொழுதே கட்டுகிறார்கள். கட்டிடங்கள் மிகவும் திருப்தியாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நன்கொடை

* **233 வினா.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக ஆதான் நிறுவனம் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்காக ஏதேனும் நன்கொடைப் பொருள்களை அண்மையில் வழங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) ஆம்.

(இ) சென்னை நகரிலுள்ள குடிசைப் பகுதிகளில் மருத்துவ சுகாதார சேவைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக உலக ஆதான் நிறுவனம் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு அண்மையில் ரூபாய் 3,04,721.81-யை நன்கொடையாக வழங்கியுள்ளது. இத்தொகையிலிருந்து ரூபாய் 2,15,143.80 செலவில் 5 நடமாடும் மருந்தக ஊர்திகள் ( Mobile dispensary vans) வாங்கப்பட்டு, மருத்துவ வசதி அளிப்பதற்குத் தேவையான சாதனங்களும் கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தை செயல்படுத்தும் வகையில் நான்கு ஊர்திகள் சென்னை மாநகராட்சி



யிடமும், எஞ்சிய ஒன்று புதுக்குடியிருப்பு நல்வாழ்வுப் பேரவை என்ற சமூக சேவை நிறுவனத்திடமும் குடிசைமாற்று வாரியத்தால் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**திரு. என். கிட்டப்பா :** தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு உலக ஆதான் நிறுவனம் வழங்கிய உதவியைப்போல் வேறு எந்த நிறுவனமாவது வழங்கியிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** அப்படி வேறு எந்த நிறுவனமும் உதவி செய்யவில்லை.

**திரு. எஸ். வடிவேல் :** குடிசைமாற்று வாரியத்தின் பணி சிறப்பாக நடைபெற மடாலயங்களில் இருந்து நிதி உதவி கோரப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால் இப்போதாவது கோர அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** இதுவரை மடாலயங்களில் இருந்து உதவி கோரப்படவில்லை. உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை பற்றி யோசிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வை. பாலசுந்தரம் :** குடிசை மாற்று வாரிய சுகாதாரப் பணிகளுக்காக ஏர்லின் இன்டர்நேஷனல் ஆர்கனைசேஷன் என்ற நிறுவனம் பண உதவி செய்வதாகச் சொல்லப்படுவது உண்மையா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** உலகத்தின் பல்வேறு நிறுவனங்கள் பல்வேறுபட்ட காரியங்களுக்கு உதவி செய்து வருகிறது. உதாரணமாக, பெல்ஜியம் நாட்டில் இருப்பவர்கள் இந்த நாட்டில் இருக்கும் குஷ்டரோகத்தைப் போக்க மருத்துவ மனைகளை உருவாக்கி வருகிறார்கள். நம்மைப் பொறுத்தவரை ஆதான் நிறுவனம் உதவி அளித்திருக்கிறது.

## திருச்சிற்றம்பலம் கோயில்

* **234 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதத்தில், திருச்சிற்றம்பலம் கோயிலில் உள்ள அம்மன் சிலை களவு போனது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) ஆம்.

(இ) சுமார் 1½ அடி உயரமுள்ள ஐம்பொன்னாலான அம்மன் சிலை 28—3—1974 அன்று இரவு களவு போனது. இதன் மதிப்பு சுமார் ரூ. 600. காவல் துறையினரால் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணையில் உள்ளது.

## *Tiruchendur and Tranquebar temples*

*235 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the steps taken to protect the temples at Tiruchendur and Tranqubar from sea erosion?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** கடல் அரிப்பை தடுக்கும் பொருட்டு திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலைச் சுற்றி ரூ. 3.50 லட்சம் செலவில் காப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது. தரங்கம்பாடியிலுள்ள அருள்மிகு மாசிலாமணிநாத சுவாமி திருக்கோயிலைப் பொறுத்த மட்டிலும் ஏற்கனவே அது அரிப்பினால் பாதிக்கப்பட்டிருப்பதாலும் கடல் நீர் ஏற்கனவே அதைச் சூழ்ந்து விட்டபடியாலும் தடுப்புச்சுவர் அமைத்து கோயிலைப் பாதுகாக்க இயலாது. எனவே அக்கோயிலை நகரின் பிறிதொரு இடத்திற்கு மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கிட்டப்பா:** தரங்கம்பாடி கடற்கரை ஓரமுள்ள கோயில் நீண்டகாலமாக கடலரிப்பினால் பாதிக்கப்பட்டு வருகிறது. பூம்புகாரை உருவாக்கியுள்ள அரசு பக்தர்களைப் பரவசப்படுத்தும் அளவுக்கு தரங்கம்பாடியில் இப்போது கோயில் இருக்கின்ற இடத்திலேயே ஆண்டவனைக் காப்பாற்ற நல்ல தடுப்புச் சுவர் உருவாக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தடுப்புச் சுவர் கட்டிக் காப்பாற்ற முடியாத அளவுக்கு கடலரிப்பு ஏற்பட்டு விட்டது. ஆகவே, வேறொரு இடத்தில் சுமார் இரண்டு லட்சம் ரூபாய் செலவில் கோயிலைக் கட்டுவதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.



**திரு. தொ. ப. சீனிவாசன்:** திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் கடலரிப்பினால் பாதிக்கப்படாமல் இருக்க தடுப்பு சுவர் கட்டியதாகச் சொன்னுர்கள். அதற்கு மத்திய அரசு, மாநில அரசு நிதி உதவி அளித்திருக்கிறதா? அல்லது கோயில் நிதியில் இருந்து முழுமையாகச் செலவழித்துக் கட்டப்பட்டதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** பொதுவாக கடலரிப்புகள் ஏற்படுகிற நேரத்தில் மத்திய அரசாங்கப் பொறுப்பில்தான் இது வரை அந்தக் காரியத்தைச் செய்து வந்திருக்கிறுர்கள். ஏற்கவேவே மத்திய அரசாங்கத்தை அணுகி உதவி கேட்டபோது அப்படிப்பட்ட உதவிகள் செய்ய இயலாது என்று தெரிவித்த பிறகு கோயில் நிதியிலிருந்து 3½ லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு தடுப்புச் சுவர் கட்டப்பட்டது.

**திரு. ஏ. எம். இராஜா:** தரங்கம்பாடியில் இருக்கும் ஆண்டவன் கோயில் கடலரிப்பினுல் பாதிக்கப்பட்டிருப்பதால் வேறு இடத்தில் 2 லட்சம் ரூபாய் செலவில் கோயிலைக் கட்ட முயற்சி இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினுர்கள். ஆண்டவன் சர்வ வல்லமை படைத்தவர் என்று சொல்லுகிறுர்கள். தன்னேயே காத்துக் கொள்ள முடியாத கையாலாகாத ஆண்டவனுக்கு இரண்டு லட்சம் ரூபாய் செலவழித்து . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கையாலாகாத ஆண்டவன் என்று சொல்ல வேண்டாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்த மன்றத்தில் நாத்திகக் கொள்கையைப் பரப்புகின்ற கேள்வியைக் கேட்க அனுமதிக்கக் கூடாது. ஆத்திகர்கள் மனத்தையெல்லாம் புண்படுத்தும் கேள்வி யாதலால் அதற்குத் தாங்கள் அனுமதி அளிக்கக்கூடாது. வேண்டுமானுல் வெளியே இதையெல்லாம் வைத்துக் கொள்ளட்டும். இதை அனுமதிக்காமல் இருப்பது சாலச் சிறந்ததாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** கடலரிப்பினுல் தன்னைக் காத்துக் கொள்ள முடியாத ஆண்டவன் என்று மதிப்பிற்குரிய ராஜா அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆண்டவன் சித்தம் கடலுக் கருகில் இருக்க முடியாது, ஊருக்குள்ளே இருக்கலாம் என்று நினைத்த காரணத்தால் கடலரிப்பு ஏற்பட்டு இருக்கலாம்.

[1975 மார்ச் 7

**திரு. ஏ. எம். இராஜா :** இந்த ஆண்டவனுக்கு 2 லட்சம் ரூபாய் செலவு செய்வதற்குப் பதிலாக நடமாடும் தெய்வங்களுக்கு இந்த நாட்டில் செய்ய வேண்டிய வேலைகள் ஏராளமாக இருப்பதால் அதற்கு இந்தத் தொகையைச் செலவழிக்க முயற்சி செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** நடமாடும் தெய்வங்களான மனிதர்களுக்கும் செலவு செய்கிறோம். அதே நேரத்தில் கோயில் மூலமாக வருகின்ற வருவாயைக் கொண்டு கோயிலைப் பாதுகாக்க வேண்டியது நம்முடைய கடமை என்ற வகையிலே அந்தக் காரியத்தையும் செய்கிறோம்.

**திரு. செ. அரங்கநாயகம் :** ஆண்டவனைக் காப்பாற்ற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். பத்திரிகைச் செய்திகளில் அரசைக் காப்பாற்ற வேண்டுமென்று வருண ஜெபம் செய்வதாகப் படிக்கிறேன். இப்போது யார் யாரைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** யார் யாரைக் காப்பாற்றுகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். உறுப்பினர் அவர்கள் உறுப்பினரைக் காப்பாற்ற வேண்டுமென்று இந்தக் கேள்வியைக் கேட்கிறார். ஒவ்வொருவரும் அவரவர்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறார்கள்.

**திரு. எஸ். வடிவேல் :** திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி பணக்கார சாமி; அங்கு கடலரிப்பினால் பாதிக்கப்படாமல் சுவர் கட்டியிருக்கிறார்கள். தரங்கம்பாடியில் கட்டவில்லை. ஆசாமியில் தான் ஏழை, பணக்காரன் என்றால், சாமியிலும் ஏழை சாமி, பணக்கார சாமி என்ற பாகுபாடா? தரங்கம்பாடியிலும் தடுப்புச் சுவர் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** சாமிக்குச் சுவர் எழுப்பவில்லை. கோயிலைக் காப்பாற்ற சுவர் எழுப்புகிறோம். தரங்கம்பாடியில் சுவர் எழுப்புகின்ற நிலைமை மாறி கடல் நீரில் மூழ்கி விடுகிற நிலைமை இருக்கும் காரணத்தால் வேறு இடத்திற்கு கோயிலை மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** ஆண்டவன் மீது நம்பிக்கையில்லாமல் இங்கே பேசிக் கொள்ளுகிறார்கள். அப்பேர்பட்டவர்கள் ரகசியமாக பல கோயில்களில் ஆண்டவனைத் தரிசிக்கிறார்கள். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது கேள்வியில் வராது.



1975 மார்ச் 7]

**திரு. எம். சுரேந்திரன் :** தரங்கம்பாடி கோயிலில் கடலரிப்பு ஏற்பட்டு விட்ட காரணத்தால் அதை வேறு இடத்திற்கு மாற்றுவதாகச் சொன்னார்கள். அப்படி மாற்றுவதற்கு தெய்வ அனுமதி பெறப்பட்டிருக்கிறதா? அல்லது மனித அனுமதியின் பேரில் செய்யப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தெய்வ நம்பிக்கையுள்ளவர்களிடத்தில் அனுமதி பெற்ற பிறகுதான் செய்யப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி ( * ) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்).

## 2. நடைமுறைக் கேள்விகள்.

**(அ) 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழில் தி.மு.க. உறுப்பினர் ஒருவரை அ.தி.மு.க. உறுப்பினர் என குறிப்பிடப்பட்டுள்ளது குறித்து.**

**திரு. நா. வீராசாமி :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். இன்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் 5-வது பக்கத்தில் ஒரு செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

"MLA wants to carry a stick"

"In the Assembly on Thursday, Mr. Durai Murugan (ADMK) asked the Speaker for permission to arm himself with a stick before coming to the Assembly" என்று போட்டிருக்கிறது. திரு. துரைமுருகன் அவர்கள் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர் இப்படிப்பட்ட தவறான காரியங்களைச் செய்ய மாட்டார். சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் ஒரு கட்சியிலிருந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். பத்திரிகைகளாகப் பார்த்து சிலரை இப்படி அனுப்பிக் கொண்டிருந்தால் அது கட்சிகளுக்கு ஆபத்து. சபாநாயகர் அவர்கள், பத்திரிகைகள் செய்திகளைப் போடும்போது முறையாகப் போட ஏற்பாடு செய்ய வேண்டும். திரு. துரைமுருகன் அவர்கள் தப்பித் தவறி தொகுதிக்குப் போனால் கழகத் தோழர்கள் கண்டனம் தெரிவிக்கக்கூடும். சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றித் தவறாக இப்படிச் செய்திகள்

வராமல் தாங்கள் தடுக்க வேண்டும். இதுபற்றித் தாங்கள் தீர்ப்புக் கூறவேண்டும்.

(முற்பகல் 10.00)

**திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, காலையிலே அந்த பத்திரிகையைச் சேர்ந்த திரு. ஸ்ரீனிவாசன் என்று நினைக்கிறேன், அவரே போன் செய்து, பத்திரிகையில் இப்படி உங்களைப் பற்றித் தவறாகச் செய்தி போட்டு விட்டோம், இது கம்போசிங்கில் வருகிற தகராறு. எங்களை அறியாமல் ஏற்பட்டு விடுகிறது, இதற்காக மன்னிப்பு கேட்டுக் கொள்வதோடு நாங்கள் இதற்கு திருத்தமும் போட்டு விடுகிறோம். இப்படி சில நேரங்களில் தவறுகள் தவிர்க்க முடியாமல் வந்து விடுகிறது என்று என்னிடத்தில் சொன்னார்கள். நான் அவரிடத்தில் சொன்னேன், சில நேரங்களில் உங்கள் பத்திரிகையில் என்ன, எல்லா பத்திரிகைகளிலுமே, உங்களுக்கு பெரிய ஆட்களைப் பற்றித் தான் ஞாபகம் வரும். சொன்னது வேறு யாரோ என்று இருந்தாலும் உங்கள் ஞாபகத்திற்கு என் பெயர் தான் வந்திருக்கிறது. அதனால் பரவாயில்லை. நாளைக்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து மறுப்பு அளிக்கவேண்டுமென்று நான் சொல்லியிருக்கிறேன்.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவரவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர், மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பி திரு. துரைமுருகன் நல்லவர், அவரெல்லாம் இந்த மாதிரி கட்சிகளிலெல்லாம் போய்ச் சேர்ந்ததாக வரக் கூடாது என்று சொன்னார்கள். அது அவருடைய பாயிண்ட் ஆஃப் ஆர்டர். அது உண்மை தான். ஏனென்றால் இந்தச் செய்தி வெளியே தெரியவேண்டும். திரு. துரை முருகனே எங்கள் கட்சிக்கு வந்தாலும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

**திரு. துரை முருகன் :** தலைவரவர்களே, * * * ஏ.டி.எம்.கே. பக்கம் திரும்பிப் பார்க்காது.

---

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த மாதிரி பேச்சுகளுக்கு நான் இடம் கொடுக்கிறது இல்லை.

**திரு. கோவை செழியன் :** இது மாதிரி எனக்குச் சொல்லத் தெரியாதா ?

(பல அங்கத்தினர்கள் எழுந்திருந்தார்கள்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அங்கத்தினர்கள் உட்கார வேண்டும். நான் திரு. வீராசாமி அவர்கள் எழுப்பிய பாயிண்ட் ஆஃப் ஆர்டருக்கு பதில் சொல்ல வேண்டும்.

**திரு. கோவை செழியன் :** தலைவரவர்களே, நம்முடைய திரு. துரை முருகன் அவர்கள் சொல்கிற நோக்கிலே நான் ஏ.டி.எம்.கே.விற்குப் போக மாட்டேன் என்று சொல்வதில் பொருள் இருக்கிறது. ஆனால் அதையொட்டி அவர் பேசியதை அவர் வாபஸ் பெற வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர் சொல்லிய வார்த்தை நிகழ்ச்சிக் குறிப்புகளில் ஏறாது.

**திரு. முனு ஆதி :** தலைவரவர்களே, அவர் சொன்னதை திரும்பப் பெறவேண்டும். அப்படி நானும் ஏதோ சொல்லி விட்டுப் போகிறேன். இதை அனுமதித்தால் நான் பேசும்போது கெட்ட வார்த்தையெல்லாம் பேசுவேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு உறுப்பினர் சபையில் அவ்வாறு பேசுகிறார் என்றால் அதை வாபஸ் வாங்க வைக்க முடியாது. ஆனால் நிகழ்ச்சிக் குறிப்புகளில் ஏறாது. இப்படிப்பட்ட வார்த்தைகளை பயன்படுத்தாமல் இருக்க வேண்டுமென்று நான் அங்கத்தினர்கள் எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன். நான் திரு. வீராசாமி எழுப்பிய பாயிண்ட் ஆஃப் ஆர்டருக்கு பதில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. முனு ஆதி :** தலைவரவர்களே, அவர் சொன்ன வார்த்தையை திரும்பப் பெறுகிறாரா இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது அவைக் குறிப்புகளில் ஏறாது. உறுப்பினர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறை இருக்கிறது. அதன்படி உறுப்பினர்கள் நடந்து கொள்ள வேண்டும்.

[1975 மார்ச் 7

**திரு. முனு ஆதி :** தலைவரவர்களே, அவர் சொன்னதை வாபஸ் பெறுகிறாரா இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் சபாநாயகருக்கு ஆணை இடக்கூடாது.

**திரு. முனு ஆதி :** நீங்கள் ஒரு பக்கமாக ஆணை இடுவது தான் தெரியுமே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வீராசாமி ஒரு பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பினார்கள். இன்று காலையில் நானே அந்த பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தேன். அந்த பத்திரிகையைப் படித்துக் கொண்டிருக்கும் நேரத்திலே அந்த பத்திரிகை நிறுவனத்திலிருந்து எனக்கு போன் வந்தது. மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் கூறியது போலவே அந்த பத்திரிகை நிருபர் அவர்கள், இப்படிப்பட்ட தவறு நடைபெற்றிருக்கிறது, நான் துரைமுருகன் அவர்களுக்குச் சொல்லலாம் என்று பார்த்தேன், அவர் இன்னும் உறங்கிக் கொண்டிருக்கிறார், என்றாலும் அவருக்கும் சொல்லிவிடுகிறேன். இப்படிப்பட்ட தவறு எப்படியோ நடந்து விட்டது, திருத்தம் போட்டு விடுகிறோம், அவையில் இதைப்பற்றி கருத்துக்கள் வருமானால் எங்களைக் காப்பாற்றவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். இப்படி இந்த நிகழ்ச்சியைப் பொறுத்து அவர்கள் பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொண்டிருக்கிறார்கள், அந்த பொறுப்புணர்ச்சியை பாராட்டவேண்டும். ஆக, விழிப்புணர்ச்சியோடு இருக்குமாறு பத்திரிகையாளர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

## (ஆ) அரசியல் சட்டத்தைப்பற்றி பேசுவது குறித்த பேரவைத் துணைத் தலைவரின் தீர்ப்பைத் திருத்துவது குறித்து.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, நேற்று அரசியல் சட்டத்தைப்பற்றி விவாதம் நடக்கிற போது அப்போது தலைமை வகித்த உதவி சபாநாயகர் அவர்கள் ஒரு தீர்ப்பு கொடுத்தார்கள். அந்தத் தீர்ப்பைப் பற்றி தாங்கள் புனராலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்வதற்குக் காரணம், அவர் தீர்ப்பைப் பார்த்தால் அது ஒரு பிளாங்கட் லிபர்ட்டி மாதிரி என்று அரசியல் சட்டத்தில் இருக்கக் கூடிய ஒரு பிரிவை எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய விதி முறைகளிலே கிட்டத்தட்ட 10, 12 இடங்களிலே



1975 மார்ச் 7] [திரு. கே. டி. கே. தங்கமணி]

அரசியல் சட்டத்தினுடைய பல ஆர்ட்டிகிள்கள் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. ரூல் 52-ல் ஆர்ட்டிகிள் 179, ரூல் 8-ல், ஆர்ட்டிகிள்ஸ் 176, 175 இன்னும் ரூல் 15-இலே ஆர்ட்டிகிள் 190-ம் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இன்னும் பல இடங்களில் விதிகளை விதிக்கின்ற நேரத்தில் அரசியல் சட்டத்தின் சில விஷயங்களுக்கு கட்டுப்பட்டிருக்கிறோம். அவருடைய ரூலிங் அதே நிலைமையில் இருக்குமானால் பொதுவாக எதையும் பேசலாம் என்ற நிலைமை ஏற்பட்டு விடும். எதையும் பேசலாமென்றால் கூடாது என்ற முறையில் தான் நம்முடைய விதிகளில்—ரூல்ஸில்கூட சிற்சில விஷயங்களில் இம்மாதிரி செய்ய வேண்டுமென்று போட்டிருக்கிறது. அவர் சொன்ன மாதிரி ரூலிங் இருக்குமானால் உறுப்பினர்கள் எதையும் பேசலாம் என்ற நிலைமை ஏற்பட்டு விடும். ஆகவே, இதைத் திருத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். நேற்றே இதை நான் ரெயிஸ் பண்ணவேண்டுமென்று நினைத்தேன். உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்ற முறையில் கொண்டு வந்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. தங்கமணி அவர்கள் எழுப்பிய பாயிண்ட் ஆஃப் ஆர்டருக்கு தீர்ப்பை பிறகு தெரிவிக்கிறேன்.

## 3. அறிவிப்பு.

### 1975-ஆம் ஆண்டு, இந்தியத் துறைமுகங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ் நாடு 1975-ஆம் ஆண்டு இந்தியத் துறைமுகங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 4. அரசினர் சட்ட முன்வடிவு.

### 1975-ஆம் ஆண்டு, இந்தியத் துறைமுகங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவரவர்களே 1975-ஆம் ஆண்டு, இந்தியத் துறைமுகங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, இச்சட்ட முன் வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

## (5) 1975-76-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சபாநாயகர் அவர்களே, இந்த சபைக்கு முன்னால் நிதி அமைச்சரவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த ஆண்டு நிதி நிலை பற்றியும், அடுத்த ஆண்டுக்கான ஆலோசனைகள் பற்றியும் கொடுத்திருக்கக் கூடிய பட்ஜெட்டைப் பற்றி என் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்வதற்கு முன் வருகிறேன்.

பொதுவாக, கவர்னர் உரையிலே தான் அரசாங்கத்தினுடைய கொள்கையானது எடுத்துச் சொல்லப்படும் என்று அறிந்திருக்கிறோம். ஆனால் இந்தத் தடவை கவர்னர் உரையைத் தயாரித்துக் துக் கொடுத்தவரும், பட்ஜெட்டைச் சமர்ப்பித்தவரும் ஒருவராக இருக்கிற காரணத்தினால் கவர்னர் மூலமாக தன் கருத்தைச் சொல்வதை விட நேராகச் சொல்லி விடலாம் என்ற முறையில் தான் முதலமைச்சரவர்கள் இங்கே இந்தக் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.

இந்த பட்ஜெட் உரையை எடுத்துக் கொண்டு பார்த்தால் எனக்கு ஒன்று படுகிறது; இதை நான் முதலிலேயே சொல்லி விடலாம் என்று நினைக்கிறேன். அதாவது, இன்றைக்கு ஜனங்களுக்கு முன்னால் இருக்கக் கூடிய பிரச்சனைகளைப் பற்றியெல்லாம் ஒதுக்கி விட்டு, வேறு விவரங்களைப் பற்றித் தான் அதிகமாக சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த இடத்தில் குறிப்பிட வேண்டியிருக்கிறது. It is a question of evading the issue பிரச்சனைகளைச் சந்திப்பதற்குப் பதிலாக ஒரு சுய திருப்தி உண்டாக்கக் கூடிய போக்கு இருக்கிறது. தொழிலாளர்களைப்பற்றியும், விவசாயத் தொழிலாளர்கள் பற்றி



யும், நிலச் சீர்திருத்தம் பற்றியும், உச்ச வரம்பு பற்றியும், மாணவர் கிளர்ச்சி பற்றியும் குறிப்பிடாதது ஏதோ அகஸ்மாத்தாக நிகழ்ந்ததல்ல என்று நான் கருதுகிறேன்.

அடுத்தாற்போல இரண்டு முக்கியமான பிரச்சனைகளை எழுப்பியிருக்கிறார்கள். அதற்கும் முதலிலேயே பதில் சொல்லி விட வேண்டுமென்று கருதுகிறேன். முதலாவதாக சொல்லி இருக்கக் கூடிய விஷயம், இந்த உலகம் பூராவிலுமே விலைவாசி உயர்ந்து இருக்கிறதென்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். உலகம் பூராவுமே விலைவாசி உயர்ந்திருக்கிறதென்று பாரதப் பிரதமர் அவர்கள் கூட நாடாளுமன்றத்தில் சொல்லி பின்னால் திருத்திக் கொண்டார்கள்.

இரண்டு உலகங்கள் உள்ளன. ஒன்று முதலாளித்துவ உலகம், இன்னொன்று சோஷலிச உலகம். சோஷலிச உலகத்திலே அத்தியாவசியப் பொருள்களின், தேவைப் பொருள்களின் விலை உயரவில்லை. கடந்த 14 ஆண்டு காலமாக அங்கே ஒரே விலைவாசிகள் இருக்கின்றன என்பதை நாடாளுமன்றத்திலே எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சரவர்கள் இன்றைக்குச் சோஷலிச பாதையில் போகிறேன் என்று சொல்லக் கூடியவர்கள். இப்படி சோஷலிச உலகத்திலே இம்மாதிரி விலைவாசி உயர்வெல்லாம் இல்லை என்பதைப் பற்றி தம் கருத்தைத் திருத்திக் கொள்ளவேண்டுமென்று நான் முதலில் கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, இன்னொரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். சம்பள உயர்வு ஏற்பட்டால் உடனடியாக விலைவாசி உயர்வு ஏற்படும் என்று அவருக்கே உரிய பாணியில் சொல்லியிருக்கிறார்கள். நீண்ட நெடுங்காலமாக முதலாளித்துவ பொருளாதாரவாதிகள் இதையே தான் சொல்லி வருகிறார்கள். ஆனால் இது உண்மையல்ல என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்லலாம் என்று நான் நினைக்கிறேன். இந்த நாட்டில், பல ஏகபோக முதலாளிகள் உருவாகி இருக்கிறார்கள். 1956-ம் வருஷத்தில் ஜவஹர்லால் நேரு அவர்கள் நியமித்த மஹலனோபிஸ் கமிட்டியானது, இந்த நாட்டில் 75 ஏகபோக குடும்பங்கள் இருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த 75 குடும்பங்களும் பல விதமான தொழில்களை கையில் வைத்துக்கொண்டு இருப்பதால் சாதாரணமாக பொருளாதாரம் பேசுவார்களே, "லா ஆப்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 மார்ச் 7

டிமாண்ட் அண்டு லா ஆப் சப்ளை"—விலைவாசி கூடுவதற்கு காரணம் கிடைப்பது குறைவது என்று சொல்வார்களே—அது ஆபரேட் ஆகாமல் இருக்கிறது. இதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

இப்போது நாட்டிலே உள்ள கரும்பாலைகளை எடுத்துக் கொள்ளுங்கள். தமிழ்நாட்டிலுள்ள 16 சர்க்கரை ஆலைகளில், 9 ஆலைகள் தனியாரிடம் இருக்கிறது. ஆரூரான் சர்க்கரை ஆலை டைரக்டர்கள் தியாகராஜ முதலியாரிடம் இருக்கிறது. சக்தி ஆலை பி.டி.பி.-க்குச் சொந்தமாக இருக்கிறது. கோட்டூரில் இருக்கிற சர்க்கரை ஆலை கோத்தாரிக்குச் சொந்தமாக இருக்கிறது. நெல்லிக்குப்பம், பேட்டைவாய்த்தலை, புகளூர் ஆகிய இடங்களில் உள்ள சர்க்கரை ஆலை பாரி கம்பெனியிடம் இருக்கிறது. மதுரையில் இருக்கும் சர்க்கரை ஆலை கருமுத்து தியாகராஜ செட்டியாரிடம் இருக்கிறது.

இந்த சர்க்கரையைப் பொறுத்தவரையில், கரும்பு விவசாயிக்கு கரும்பு ஒரு டன்னுக்கு ரூ. 85 குறைந்தது என்று அனுமதித்து இருக்கிறோம். மேக்சிமம் எவ்வளவு என்று நிச்சயமாக இல்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இந்த இரண்டு விஷயங்களைச் சொல்கிறார்கள். மத்திய சர்க்கார் அனுமதித்து இருப்பது அதிகப்படியாக ரூ. 100—ரூ. 105 என்று வைத்துக் கொள்ளுங்கள். 100 ரூ. என்றே வைத்துக்கொள்ளுங்கள். 100 ரூ. குறைந்தது அந்த விவசாயிக்கு ஒரு டன் கரும்புக்குக் கொடுத்தால், அதில் ஒரு குவிண்டால் சர்க்கரை உற்பத்தியாகிறது. உற்பத்திச் செலவு ரூ. 20–25 என்று வைத்துக்கொண்டாலும், சர்க்காரின் எக்சைஸ் வரி எல்லாம் சேர்த்து எவ்வளவு அதிகமாக வைத்துக் கொண்டாலும் ரூ. 200-க்கு மேல் போகாது. அப்படியானால் ஒரு குவிண்டால் சர்க்கரை ரூ. 200—ரூ. 205-க்கு விற்கலாம் என்ற நிலைமை வருகிறது. ஆனால் இப்போது என்ன விலைக்கு விற்கிறார்கள்? இதில் மத்திய அரசு தவறான ஒரு கருத்தை அனுசரித்துக்கொண்டிருக்கிறார்கள். 26—1—1975 தேதி மத்திய அரசு ஒரு உத்தரவைப் போட்டிருக்கிறார்கள். அது என்னவென்றால், இதுவரையில் 30 சதவிகிதம் வெளி மார்க்கெட்டில் விற்கலாம் என்று இருந்ததை 35 சதவிகிதம் என்று உயர்த்தி இருக்கிறார்கள். 35 சதவிகிதம் எந்த விலைக்கும் விற்கலாம் என்று உத்தரவு போட்டு இருக்கிறார்கள். அவர்கள்



1975 மார்ச் 7] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இப்போது ஒரு குவிண்டால் ரூ. 500-600-க்கு விற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டில் தேவைக்கு அதிகமாக சர்க்கரை உற்பத்தி செய்கிறோம். 150 கோடி ரூபாய் சர்க்கரை ஏற்றுமதி செய்த பின்னாலும், ஏன் ரூ. 500 கோடி அளவுக்கு சர்க்கரை ஏற்றுமதி செய்த பின்னாலும், நாம் குறைந்த விலைக்கு சர்க்கரை மக்களுக்குக் கொடுக்க முடியும் என்பதை நான் திட்டவட்டமாகக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த சர்க்கரை ஆலைகளை நாம் கன்ட்ரோல் செய்யும் பொறுப்பை எடுத்துக்கொண்டோமேயானால், இந்திய நாட்டிலுள்ள அத்தனை மக்களுக்கும் ரூ. 2.50 ஒரு கிலோ என்ற விலையில் கொடுக்க முடியும். ஆகவே, இன்று உள்ள விலைவாசி உயர்வுக்கும் சம்பள உயர்வுக்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது என்பதற்காகச் சொல்கிறேன்.

அது குறித்து, ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். பல விஷயங்கள் இந்த பட்ஜெட்டில் பேசப்பட்டு இருக்கிறது. என்னென்ன காரியங்கள் செய்யப்போகிறோம் என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையில் நான்கு சர்க்கரை ஆலைகள் ஆரம்பிக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இப்போது இருக்கும் சர்க்கரை ஆலைகளைத் தேசியமயமாக்குவதுபற்றி ஒரு கருத்தை இந்த பட்ஜெட்டில் சொல்லியிருக்கிறார்களா என்றால் இல்லை. அதற்கு மாறாக என்ன ஏற்பட்டு இருக்கிறது என்றால், தற்போது இருக்கும் சர்க்கரை ஆலைகளில் இருக்கும் கிரஷிங் கபாசிட்டியை இரண்டு மடங்காக உயர்த்த வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்து இருக்கிறார்கள். கோத்தாரி ஆலையில் தற்போது கபாசிட்டி 2,000 டன் என்றால், அதை 4,000 ஆக உயர்த்த இருக்கிறார்கள். சக்தி ஆலையில் கபாசிட்டி 1,500 டன் என்றால் அதை 4,000 ஆக உயர்த்த இருக்கிறார்கள். ஆரூரான் ஆலையின் கபாசிட்டி 1,750 என்றால் அதை 3,500 ஆக உயர்த்த இருக்கிறார்கள். இப்படித் தனியாருக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் நிலை இருந்து கொண்டு இருக்கிறது என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

சம்பள உயர்வு சம்பந்தமாக வருகிறபோது என்.ஜி.ஓ வினரைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தற்போது என்.ஜி.ஓ. வினருக்கு ரூ. 20 முதல் ரூ. 30 வரை உயர்வு கிடைக்கும் என்று சொல்கிறார்கள். அதற்குச் செலவு ரூ. 24 கோடி வருகிறது என்று சொல்கிறார்கள். நான் ரொம்பத் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன். தயவுசெய்து அந்த பானுவெல்ஸ் இலாகாவைக் கொஞ்சம்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 மார்ச் 7

நல்ல முறையில் செயல்படச் சொல்லுங்கள், ரூ. 10 கோடியானாலும் 12 கோடி ரூ. 20, 30 கோடியானாலும் அதற்கு ரூ. 24 கோடி என்றால், அது எந்தக் கணக்கோ எனக்குத் தெரியவில்லை. என்னுடைய வேண்டுகோள் எல்லாம், இந்த பைனான்ஸ் டிபார்ட்மென்டிற்கு ஒரு "காஸ்ட் அக்கௌன்டென்ட்" போடுங்கள். அப்போதுதான் அது ஒழுங்காகச் செயல்படும் என்று சொல்லிக்கொள்கிறேன். இல்லாது போனால், நாட்டிலே இருக்கிற வறட்சியின்போது ரூ. 30 கோடி வறட்சி நிவாரணத்திற்காக ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னால், அரசு ஊழியர்கள் சம்பள உயர்வுக்காக ரூ. 24 கோடி ஒதுக்கியிருக்கிறோம் என்றால், அது மக்கள் மத்தியில் ஒரு தவறான எண்ணத்தை உண்டு பண்ணும்.

ஆகவே, இந்த விவாதம் முடிகிற நேரத்திலாவது முறையாக, யார் யாருக்கு எவ்வளவு உயர்வு கொடுத்து இருக்கிறீர்கள்,—எல்லா என்.ஜி.ஓ. வினருக்கும் பெரிய அளவில் உயர்ந்ததாகத் தெரியவில்லை—எவ்வளவு பணம் இதற்காகத் தேவை என்று சொன்னால் நன்றாக இருக்கும். இது ஓரளவுக்குத் தவறான கருத்தை என்.ஜி.ஓ. வினரைப் பற்றி மக்கள் கொள்ளாதிருக்க உதவிபுரியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தாக, என்னுடைய ஒரு வேண்டுகோளாகத் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய சர்க்காரின் விகிதப்படி பஞ்சப்படி ஒப்புக்கொள்கிறோம் என்று சொல்லிவிட்டு, பேக்-பெனிபிட் கொடுக்காமல் இருக்கிறீர்கள். கேரளாவில் கூட 11 இன்ஸ்டால்மென்ட் ஒப்புக்கொண்டார்கள். ஆனால் பேக்-பெனிபிட் கொடுக்கவில்லை. அவர்களுக்கு பேக்-பெனிபிட் சலுகை கொடுப்பதற்குப் பதிலாக, Why don't you issue loan certificates? தமிழ்நாட்டில் இதைச் செய்தால் புதிதாக இருக்குமே. நாங்கள் சில ஆலோசனைகளை யோசித்துத்தான் சொல்கிறோம். கேரளாவில் கூட இதைச் செய்யவில்லை. நீங்கள் செய்யுங்கள். அதைச்செய்தால் ஓரளவிற்கு அவர்களுக்கு நன்மை ஏற்பட உதவியாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இன்றைக்கு கேரளாவில் 4 என்.ஜி.ஓ. சங்கங்கள் இருக்கின்றன. அந்த நான்கு ஸ்தாபனங்களையும் அழைத்து முதலமைச்சர் பேசுகிறார். 4—3—1975 அன்று சில ஸ்தாபனங்கள் சேர்ந்து இங்கே முதலமைச்சர் அவர்களோடு பேசவேண்டுமென்று விரும்பினார்கள். நீங்கள் பேசுவதற்கு என்ன இருக்கிறது



1975 மார்ச் 7] [திரு. கே. டி. கே. தங்கமணி]

மெமோரான்டம் கொடுத்தால் போதும் என்று அவர்களுக்குத் தகவல் சொல்கிறீர்கள். உட்கார்ந்து பேசினால் இன்று நிதி இலாகா கொடுத்து இருக்கும் தவறை நீக்கக்கூடிய முறையிலும், அவர்களுக்கு முறையாக எவ்வளவு கிடைக்க வேண்டுமென்றும், அதைக்கொடுத்தால் எவ்வளவு செலவாகும் என்பதையும் அவர்கள் ஒழுங்காக எடுத்துச் சொல்லியிருப்பார்கள். அதற்கு வாய்ப்பு இருந்து இருக்கும்.

இந்த நேரத்தில் இன்னொரு கருத்தையும் கூற விரும்புகிறேன். கூடலிங்கம் என்ற ஒரு என்.ஜி.ஓ. சங்கத்தின் தலைவர், அவர் மதுரையில் ரெவின்யூ இன்ஸ்பெக்டராக இருக்கிறார். 31—5—1975 அன்று அவர் ஓய்வுபெற இருக்கிறார். அவர் உண்ணாவிரதம் செய்தார் என்பதற்காக சஸ்பென்டு செய்து இருக்கிறீர்கள். இன்று வரை அவரை வேலைக்கு எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் அதே நேரத்தில், பைனான்ஸ் செகரட்டரி, ஒன்மேன் கமிஷன் தலைவர் சிவசுப்பிரமணியம் ஆகியோரின் எஃப்பிஜியை இரண்டு பேர் எரித்தார்கள், அவர்களை வேலைக்குத் திருப்பி எடுத்துக் கொண்டு இருக்கிறீர்கள். ஆனால் இன்னமும் கூடலிங்கம் அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளவில்லை. அந்த இரண்டு பேரை எடுத்துக் கொண்டது குற்றம் என்று சொல்லவில்லை. இவரை இன்னமும் வேலைக்கு எடுத்துக்கொள்ளவில்லையே என்பதுதான் வருத்தமாக இருக்கிறது. There is a certain political motivation என்பதை மட்டும் நான் இந்த இடத்தில் சொல்ல முடியும்.

இந்த பட்ஜெட்டுக்கு உள்ளே வருகிறபோது, இந்த பட்ஜெட் தயாரிப்பில் எத்தகைய கோளாறுகள் இருக்கின்றன என்பதற்கு ஒன்றிரண்டு விஷயங்களைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். முதலில், சேல்ஸ் டாக்ஸ் மூலமாக ரூ. 138 கோடி கிடைக்கும் என்று சொன்னீர்கள். ரிவைஸ்ட் எஸ்டிமேட் எவ்வளவு என்றால் ரூ. 174 கோடி. ரூ. 138 கோடி எங்கே, 174 கோடி எங்கே? 36 கோடி வரையிலும் அதிகமாக இன்றைக்கு உங்களுக்கு கிடைத்து இருக்கிறது. அதே மாதிரி ஸ்டாம்ப்ஸ் ரிஜிஸ்டிரேஷனில் ரூ. 23½ கோடி கிடைக்கும் என்று எதிர்பார்த்ததற்கு மாறாக ரூ. 28½ கோடி கிடைத்து இருக்கிறது. அதே மாதிரி டாக்ஸஸ் ஆன் வெஹிகில்ஸ் என்பதில் ரூ. 23¾ கோடி எதிர்பார்த்தீர்கள். ஆனால் ரூ. 33 கோடி கிடைத்து இருக்கிறது. இப்படியே பலவற்றைக் காட்டலாம். அதேமாதிரி செலவினங்களை எடுத்துக்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 மார்ச் 7

கொண்டால் போலீஸ் 24 கோடி ரூபாய் செலவு என்றால் ரூ. 26 கோடி திட்டத்தட்ட ஆகிறது. எஜுகேஷன் சம்பந்தமாக ரூ. 108 செலவு என்றால் கிட்டத்தட்ட ரூ. 112 கோடி ஆகிறது. இப்படியாக செலவினங்களை எடுத்துக்கொண்டாலும் சரி, வரவு இனங்களை எடுத்துக்கொண்டாலும் சரி, அது சரியான வகையில் செய்யப்படவில்லை. ஏதோ ஓரளவுக்கு வித்தியாசம் வரலாம். ஆனால், இந்த அளவுக்கு வரக்கூடாது.

டாக்டர் ஹான்ஸன் அவர்கள் தான் இதை ஏற்கனவே சொன்னார்கள் என்று நினைக்கிறேன். இவர்களுக்கு லாங்-டர்ம் பாலிசி கிடையாது. எந்தவிதமான இன்டஸ்ட்ரியல் டெவலப்மென்ட் கிடையாது. இங்கே காபிடல் எக்ஸ்பென்டிசரைப் பார்த்தால் காபிடல் எக்ஸ்பென்டிசரில் அவர்களுக்குக் கன்ஜெட்டம் கிடையாது. நான்-காபிடல் எக்ஸ்பென்டிசரில் எவ்வளவு செலவழிக்க வேண்டுமென்று இருந்தார்களோ அதிலே கிட்டத்தட்ட ரூ. 25 கோடி வரையிலும் குறைவாகச் செலவழித்து இருக்கிறார்கள். இப்படி நான் பல விவகாரங்களில் புகுந்து சொல்ல முடியும்.

'The entire preparation of the budget is defective and you have no perspective.' அந்த மாதிரியான முறையில் தயாரித்து இருக்கிறீர்கள்.

நேற்று, இங்கே ப்ளான், நான்-ப்ளான் பற்றிப் பேசினார்கள். இந்த ஆண்டு ஆரம்பத்திலேயே ஆரம்பித்திருக்க வேண்டிய 5-வது ஐந்தாண்டுத் திட்டம் இன்றைக்கும் உருவாகாமல் இருப்பது ஒரு குழப்பத்தைக் காட்டுகிறது. ஐந்தாண்டுத் திட்டம் குறுகிப் போய் இருக்கிறது என்று முதல்வர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். ப்ளான் உருவாகாமல் இருந்த நேரத்தில் ஆண்டுக்கு இவ்வளவுதான் திட்டத்திற்கு என்று ஒவ்வொரு மாநிலத்திலும் நிச்சயித்திருக்கிறார்கள். நாமும் நிச்சயித்திருக்கிறோம். மத்தியிலும் நிச்சயித்திருக்கிறார்கள். மத்திய அரசு நிச்சயித்திருக்கிற விவரத்தை நாம் தெரிந்து கொண்டிருந்தால் எது எதற்கு, எவ்வளவு தொகை வேண்டும் என்று நாம் தெரிந்து கொண்டிருந்திருக்க முடியும். நான் விவரத்திற்குப் போகவில்லை. நாம் ப்ளான் தயாரிப்பதிலே எந்த அளவிற்கு வந்திருக்கிறோம் என்றால், ஆங்காங்கே இருக்கும் விவசாயம், இரிகேஷனுக்கு எந்த அளவிற்குப் பணம் ஒதுக்க வேண்டுமோ



1975 மார்ச் 7] [திரு. கே. டி. கே. தங்கமணி]

அந்த அளவிற்கு ஒதுக்காமல் இருந்திருக்கிறோம். ஏனென்றால், மத்தியில், நாம் ஒதுக்கி உள்ளதொகைகளை விட அதிகமாக ஒதுக்கியுள்ளார்கள். இது எதைக் காட்டுகிறது என்றால் "It is not an insult. It is a reflection on the unplanned thinking of this Government' என்றுதான் நான் சொல்ல நினைக்கிறேன். இதற்கு மேலே உள்ளே போவதற்கு இந்த பட்ஜெட்டில் ஒன்றும் இல்லை. என்ன இருக்கிறது என்று தெரியவில்லை.

இதோடு, இரண்டு முக்கியமான விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். ஹான்ட் லூம் சம்பந்தமாக அவர்களுக்குப் பாது காப்புக் கொடுக்க வேண்டும் என்பதற்கான ஒரு நல்ல, சிறந்த மசோதா கொண்டு வரப்பட்டு அது பொறுக்குக் கமிட்டியில் இருக்கிறது. அதை நிறைவேற்றுவதற்கான காரியங்கள் இது வரையிலும் எதுவும் செய்யப்படவில்லை. பட்ஜெட்டில் அது பற்றி எதுவும் காணோம்.

அதே மாதிரி, நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் அளிக்க வேண்டும் என்பதற்காக ஒரு மசோதா கொண்டு வந்தோம். இதே மாதிரி கேரளாவிலே ஒரு மசோதா கொண்டு வரப்பட்டது. அதிலே நிலமற்றவர்களுக்கு நிலம் கொடுக்கும் பொறுப்பை அரசே ஏற்றுக் கொள்ளும் என்று கொண்டு வந்தார்கள். அந்த மசோதாவை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டு விட்டது. அங்கு நிலமற்றவர்களுக்கு நிலங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இங்கே நாம் போட்ட மசோதா திருப்பி அனுப்பப்பட்டுள்ளது அதன் பிறகு அது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. கேரளா அரசு மசோதா மாதிரி இங்கும் மசோதா தயார் செய்யப் பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம், நம்முடைய அரசாங்கம் ஒரு பெரிய " " Social Welfare Organisation " தொழுநோய் பிச்சைக்காரர்களுக்குப் புது வாழ்வு அளிப்பது, கண்ணொளி வழங்கும் முகாம்களைப் பரவலாக அமைப்பது, கை ரிக்ஷாக்களை நீக்கி விட்டு சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்குவது, உடல் ஊனமுற்றோர்க்கு நல்வாழ்வு தருவது, இவைகள் எல்லாம் சமூகப் பணிகள்தான். இவற்றை எல்லாம் சாதனைகள் என்பது எந்த அளவிற்கு ஏற்றுக் கொள்ள முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. தனிப்பட்டவர்கள் இவைகளை எல்லாம் செய்தால்,

இவைகள் அவர்கள் சாதித்த சாதனைகள் என்று போற்றலாம். ஆனால் ஒரு அரசாங்கம் தன்னுடைய கொள்கைகளை எந்த அளவிற்கு நிறைவேற்றியுள்ளது என்பது இவைகளை வைத்துக் கணக்கிடுவதற்கில்லை.

It must come only as incidental. These are not basic things.

அடுத்ததாக நான் போன ஆண்டு சொன்னது போல் இந்த ஆண்டிலும் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்த பட்ஜெட்டில் ஒன்றும் இல்லை என்று புகார் பாட வேண்டியிருக்கிறது.

அடுத்ததாக, போலீஸ் இலாகாவைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டில் தலைசிறந்த போலீஸ் இருக்கிறது. ஆனால், அங்கு கட்சிக்காரர்களின் தலையீடு இருக்கிறது. ஆகலால் அவர்கள் தங்களுடைய வேலையைச் சரிவர செய்ய முடியாமல் இருக்கிறார்கள். எதாவது செய்ய வேண்டுமென்றாலும், ஐ.ஜி. மட்டத்திலிருந்து நடக்கட்டும். அரசியல் வாதிகள் நேரிடையாகத் தலையிடக் கூடாது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் தலையீடுகள் மக்களுக்கு அதிகமான அச்சத்தை ஏற்படுத்தியிருக்கின்றன என்பதையும் கூற விரும்புகிறேன். உதாரணத்திற்கு, ஒன்றிரண்டு சொல்கிறேன்.

நம்முடைய வெங்கா, எம்.எல்.சி. அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார். இது ஒரு சாதாரணமான விஷயம் அல்ல. மதுரை பக்கத்தில் மக்கள் மிகவும் அரண்டு போயிருக்கிறார்கள். இதை ஒரு பெரிய சதியாகத்தான் மக்கள் கருதுகிறார்கள். இந்த சம்பவத்தைப் பற்றிய விவரங்கள், உடனடியாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி எந்தவிதமான விவரமும் இல்லை. ஏதோ ஒரு டாக்சி டிரைவரைப் பிடித்து வைத்திருக்கிறதாகச் சொல்கிறார்கள். இந்த முக்கியமான சம்பவத்தைப் பற்றி விசாரிக்க ஒரு ஸ்பெஷல் பிராஞ்ச் போலீஸ் போட்டு சம்பவத்தின் காரணத்தைக் கண்டுபிடிக்க முயலவில்லை.

இன்னொரு சம்பவமும் சொல்கிறேன். சேலம் மாவட்டத்தில் விக்கிரபாண்டியிலே இந்த சம்பவம் நடைபெற்றிருக்கிறது. இந்த சம்பவத்தில் இரண்டு பேர் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மோட்டார் சைக்கிளில் போகிறார்கள் சினிமா பார்த்துவிட்டு. அவர்களைச் சுட்டுக் கொன்று விடுகிறார்கள். அது மட்டுமல்ல,





சுட்டவர்களைப் பார்த்து விட்டார்களோ என்று நினைத்து, அவர்கள் கண்களையும் பிடுங்கியிருக்கிறார்கள். It is a gruesome murder இதுபற்றிய விவரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. அந்தப் பகுதி மக்கள் மிகவும் அரண்டு போயிருக்கிறார்கள். இந்த மாதிரி விஷயங்களைப்பற்றி மக்கள் மன்றத்தில் எடுத்துச் சொல்ல வேண்டும். அப்பா ஸ்தாபன காங்கிரஸ்காரர் என்றும் பையன் அண்ணா தி.மு.க. என்றும் சொல்கிறார்கள். அது எப்படியாவது இருக்கட்டும். மக்கள் சந்தேகப்படும் அளவிற்கு நடந்து கொள்ளாமல் இது பற்றித் தீர விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரையில் வாலாந்தூர் என்ற ஊரில் ஒரு சம்பவம் நடைபெற்றது. சப்-இன்ஸ்பெக்டர் சுட்டிருக்கிறார். 2 பேருக்குக் காயம். அதற்குப் பிறகும் அந்த சப்-இன்ஸ்பெக்டர் அங்கேயே இருக்கிறார். ஆனாலும் அவர்தான் இன்றைக்கு அங்கே கேஸ் நடத்திக்கொண்டிருக்கிறார். எனவே, சென்னையிலே வெங்கா கத்திகுத்து சம்பவம், விக்ரபாண்டியிலே (குறுக்கீடு: வீரபாண்டியிலே), வீரபாண்டியிலே, பிறகு வாலாந்தூரிலே இப்படிப் பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஒரு சிலதான் சொல்லியிருக்கிறேன். இதை எல்லாம் அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

அடுத்தாற்போல், இன்றைக்குத் தனியார் கல்லூரியைப் பொறுத்தவரையில் 700 பேராசிரியர்கள் இருக்கிறார்கள், அசிஸ்டன்ட் புரபசர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் இன்றைக்கு வேலைக்குப் பாதுகாப்பு இல்லை. சென்ற சட்டமன்றக் கூட்டத்திலே கல்வி அமைச்சர் பதில் சொல்கிற நேரத்தில் உண்மைதான், அண்டை மாநிலங்களில் இந்த மாதிரியான பேராசிரியர்களுக்கு வேலைக்குப் பாதுகாப்பு இருக்கிறது. அந்த மாதிரிச் சட்டம் இங்கேயும் கொண்டு வந்து விடுகிறோம் என்றார்கள். இதுவரை அப்படிப்பட்ட ஏற்பாடுகள் ஒன்றும் வரவில்லை.

வைஷ்ணவா கல்லூரியில் 4 பெண்கள் திடீரென்று வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் அடிப்படையில் எங்களுக்கு எல்லாம் உத்தியோகம் வேண்டுமென்று பேராசிரியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். சர்வ கட்சியினரும் கூட அதில் நியாயம் இருக்கிறது என்று கூறியிருக்கிறோம், இப்போது திரு. நூருல் உசேன் கூட பீகாரில், உ.பி.யில்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 மார்ச் 7

அவர்களுக்கு யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் அடிப்படையில் சம்பளம், பாதுகாப்பு கிடைத்திருக்கிறது. தமிழ் நாட்டைப்பற்றி ஒன்றும் தெரியவில்லையே என்று கூறியிருக்கிறார்கள். இது விஷயமாக என்ன செய்யப் போகிறோம், என்ன செய்திருக்கிறோம் என்பதை அரசாங்கம் விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

ஆசிரியர்களைப்பற்றிச் சொன்னதால் அடுத்தபடியாகக் கல்லூரி மாணவர்களைப்பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கல்லூரி மாணவர்கள் என்றால் 'லா காலேஜ்' மாணவர்களைப்பற்றிச் சொல்கிறேன். சென்ற மாதம் 28-ம் தேதி அந்த மாணவர்கள் எல்லாம் இங்கு வந்து போராட்டம் நடத்தினார்கள். அவர்கள் குறை என்னவென்றால், 'எங்களை எல்லாம் தமிழில் படிக்கச் சொன்னார்கள். தமிழில் போதுமான புத்தகங்கள் இல்லாவிட்டாலும் ஓரளவு சமாளித்து எப்படியோ படித்துவிட்டோம்; ஆனால் இப்போது தமிழில் பரீட்சை எழுத வாய்ப்பு இல்லை; தமிழில் படித்துவிட்டு ஆங்கிலத்தில் பரீட்சை எழுதச் சொன்னால் எப்படி; தமிழில் படித்தால் கன்செஷன் தருகிறோம் என்று சொன்னார்கள்; அதுவும் தரவில்லை' என்று சொல்கிறார்கள். அரசாங்கத்தின் வார்த்தைகளை நம்பித் தமிழில் படித்தோம்; இப்போது தமிழில் படித்த எங்களுக்கு பிற்கால வாழ்க்கைக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். அதற்கு விமோசனம் பிறக்க வேண்டும்.

அடுத்தபடியாக இருப்பது சி.எம்.சி. ஆஸ்பத்திரி. அடிக்கடி அதைப்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானங்கள்கூட கொடுத்து, இங்கே விவாதித்திருக்கிறோம். இப்போது பத்திரிகையில் பார்த்தால், டாக்டர்கள் ராஜினாமா செய்யப் போகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அது மட்டுமல்ல, 75 வருஷமாக நடந்து வந்த இந்த ஆஸ்பத்திரி வேறு மாநிலத்திற்கு மாற்றப்படப் போவதாகவும் சொல்லப்படுகிறது. அந்த ஆஸ்பத்திரி வேறு மாநிலத்திற்கும் போகக்கூடாது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, 1[illegible] தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொண்டால் டாக்டர்கள் [illegible] ராஜினாமா செய்வதாகச் சொல்கிறார்கள். அதுபற்றி



1975 மார்ச் 7]

**திரு. கே. டி. கே. தங்கமணி:**
It is not so simple, It has become so complicated.
ஆகவேதான் யோசிக்க வேண்டியிருக்கிறது. தொழிலாளர்கள் நன்மையில் நாங்கள் பெரிதும் அக்கறை கொண்டிருக்கிறோம் என்பதில் சந்தேகமில்லை. எங்களை அவர்களோடு பேசி, சமரசம் செய்யச் சொன்னால்கூட சில விஷயங்களைச் செய்து முடித்திருக்க முடியும். எங்களுக்குத் தெரிய வருவது என்னவென்றால், தொழிலாளர்களைச் சில குறிப்பிட்ட டாக்டர்கள் தூண்டிவிட்டு, வேடிக்கை பார்க்கிறார்கள் என்பது. ஆனால் அதை நாங்கள் நம்பவில்லை. அப்படிச் சொல்கிறார்கள். எப்படி இருந்தாலும் பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. அந்த ஆஸ்பத்திரி ஒழுங்காக நடக்க வேண்டும். இந்த மாநிலத்தை விட்டு வேறு எங்கும் போகக் கூடாது. அவர்களுக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டும். அதற்கான பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. சில நேரங்களில் ஒரு சிலரால் தவறுகள் வரலாம். 2, 3 பேர் வெறுமனே எதையாவது செய்துகொண்டு இருப்பார்கள்.
You should not allow som persons to take law into their own hands.
அவ்வளவுதான் நான் சொல்ல விரும்புகிறேன். அதன் விபரத்திற்குள்ளே செல்ல விரும்பவில்லை. எப்படியாவது இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும்.

அடுத்தபடியாக, திருவாவடுதுறை, திருப்பனந்தாள், திருவாடுதுறை, தர்மபுரம், நாங்குனேரி, குன்றக்குடி போன்ற மடங்களுக்கு கிட்டத்தட்ட 4½ லட்சம் ஏக்கர் நிலம் திருநெல்வேலி, திருச்சி, தஞ்சை போன்ற மாவட்டங்களில் இருக்கிறது. இந்த மடங்களுக்குச் சொந்தமான நிலத்தில் குத்தகை விவசாயம் செய்பவர்களுக்கு அந்த நிலத்தைப் பதிவு செய்து கொடுப்பதில் அரசாங்கம் ஏன் தயக்கம் காட்டுகிறது? அதில் என்ன தயக்கம் இருக்கிறது? பதிவு செய்து கொடுக்க வேண்டுமென்று நாங்கள் மட்டுமல்ல, பல கட்சிக்காரர்களும் சொல்லியிருக்கிறோம். அதைச் செய்வதற்கு நமக்கு அதிகாரம் இருக்கிறதா என்ற கேள்வி வரும். இருக்கிற அதிகாரத்தை வைத்துக்கொண்டுதான் கேரளத்தில் செய்திருக்கிறார்கள். கேரளத்தில் செய்வதைப்போலவே இங்கும் எல்லாவற்றையும் செய்ய வேண்டுமென்று நான் சொல்லவில்லை. சில குறிப்பிட்ட காரியங்களிலாவது செய்யலாம். கேரளத்தில் 4 இலட்சம் ஏக்கருக்கும் அதிகமாகத் தனியாருக்குச் சொந்தமாக இருந்த காடுகளை அரசு ஏற்று நடத்தியிருக்கிறது. சுப்ரீம் கோர்ட் அதை

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 மார்ச் 7

சரி என்று சொல்லியிருக்கிறது. ஆகவே, இருக்கிற அதிகாரங்களை வைத்துக்கொண்டு ஏன் இதைச் செய்யக்கூடாது? நான் இப்படி ஒன்றிரண்டு உதாரணங்களைச் சொல்லியிருக்கிறேன். இதைப் போல பல காரியங்கள் இருக்கின்றன.

இன்னொரு முக்கியமான விஷயம். பல தடவை அதைப்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானங்கள்கூட கொடுத்திருக்கிறார்கள். திருப்பித் திருப்பி இந்த மன்றத்திலே விவாதம் நடைபெற்றிருக்கிறது. அரிசனங்கள் என்று வரும்போது, எங்கள் கட்சி அரிசனங்கள் பிரச்னை என்று பார்க்காமல் அது இந்த நாட்டின் மானப் பிரச்னை என்ற முறையிலே பார்க்கிறது. சென்ற 10-ம் தேதி விஜயவாடாவில் எங்கள் கட்சியின் மாநாடு நடைபெற்றது. அதில் சில தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறோம்.

'Murder, terror, violence, intimidation, kidnapping, rape of Harijan women, arson and loot reported every day from all parts of the country.; some Harijans are harassed to leave villages. Even Harijan writers and artists have not been spared. Bhagavat Jadhav, a writer and a dramatist has been murdered...

பகவத்ஜாதவ் பெரும் வீரர்; அவரைக் கொன்றுவிட்டார்கள்.

'There is a new awakening and consciousness and they do not want to live any longer like slaves and surrender to the rural rich and vested interests. They are increasingly asserting and defending their rights.'

என்று தீர்மானம் போட்டு, என்னைப் போன்றவர்களுக்குச் சில கட்டளைகள் பிறப்பித்திருக்கிறார்கள்.

'The Congress calls upon all party units and members to intervene immediately whenever and wherever incidents of atrocities against Harijans take place and make it their foremost duty to rush to their defence ...'

என்று கட்டளை பிறப்பித்திருக்கிறார்கள். அதற்காகத்தான் நான் அரிசனங்களைப்பற்றி வந்தால், அவர்கள் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக அரசாங்கத்தை வற்புறுத்துகிறேன்.

கடந்த 26-ந் தேதி மன்னார்குடியில் நடைபெற்ற சம்பவம் அனைவருக்கும் தெரியும். அங்கே அரிசனங்கள் தாக்கப்பட்டார்கள். அதைப்பற்றிக் கேட்கவே, இவர்களுக்கு என்ன திமிர் என்று



1975 மார்ச் 7] [திரு. கே. டி. கே. தங்கமணி]

கேட்டு, அந்தக் கிராமத்தையே தீ வைத்துவிட்டார்கள். அதைப் பற்றி யாரும் கேட்பாரில்லை. பார்வர்டு பிளாக் கட்சியைச் சேர்ந்த கனம் அங்கத்தினர் அந்த அரிசனங்களுக்குப் பாதுகாப்பு இல்லை; அதைப்பற்றிப் பேசுவதற்கு இடம் இல்லை என்று சொல்லி வெளிநடப்புச் செய்தார்கள். இந்த நாட்டில் அரிசனங்கள் முன்னேற வேண்டுமென்றால் அரிசனங்களை இந்த நிலையில் வைத்திருப்பது சரியல்ல. வெளிநாடுகளுக்குப் போனால் எங்களைக் கேட்கிறார்கள். உங்கள் ஊரில் பக்கத்திலேயே ஒரு அரிசனக் காலனி இருக்கிறதாமே என்று கேட்கிறார்கள். அதைக் கேட்டு, வெட்கித் தலைகுனிய வேண்டியிருக்கிறது. அரசியல் சட்டத்தில் அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. 'அன்டச்சபிளிட்டி' 'பனிஷ்' செய்யப்பட வேண்டுமென்று இருக்கிறது. டிரக்டிவ் பிரின்சிப்பிள்ஸ் இருக்கிறது; சட்டம் இருக்கிறது. ஆனால் அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை.

இல்லஸ்ட்ரேட் வீக்லியில் படித்தேன். தமிழ்நாட்டு போலீஸ் அதிகாரிகள் கேஸ் நடத்த வேண்டுமென்று ஆரம்பித்தால் இந்த நாட்டில் இருக்கிற பாதி பேரை கைது செய்யலாம் என்று போட்டிருக்கிறார்கள். நான் இவைகளைக் குறிப்பிடுவதற்குக் காரணம், அரிசனங்களைப் பொறுத்தவரையில், அரசாங்கம் இன்றைக்கு எடுத்துச் செய்யக்கூடிய நடவடிக்கைகள் போதாது; அதை மீண்டும் மீண்டும் ரொம்ப வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.

அதேமாதிரி இன்னொரு முக்கியமான விஷயம். அது முஸ்லீம்களைப் பற்றியது. முஸ்லீம்கள் சொல்கிறார்கள் என்பதற்காக நான் சொல்லவில்லை. அவர்களைப்பற்றி எங்கள் கட்சிக்கு ஒரு குறிப்பிட்ட கண்ணோட்டம் உண்டு. அதன் அடிப்படையில் சொல்கிறேன். கேரளாவில் கூட்டாட்சி நடக்கும்போது முஸ்லீம் இனத்தவருக்குப் பொறுப்புகள் எதுவும் கொடுக்கப்படாமல் இருந்தது. அதன் பின்னால் எங்கள் கட்சியைச் சேர்ந்த அச்சுத மேனன் அவர்கள் முதலமைச்சராக வந்தபின்னால் 'ஹோம் போர்ட்போலியோவை' ஒரு முஸ்லீம் உறுப்பினருக்குக் கொடுத்தார்கள். அகில இந்திய ரீதியில் முஸ்லீம்களுக்கு நாங்கள் முதலிடம் கொடுக்கிறோம்.

இன்றைக்கு மத்தியிலே இருக்கக்கூடிய பலருக்கு ஜனசங்க கருத்துத்தான் இருக்கிறது. முஸ்லீம்களை ஒடுக்கவேண்டுமென்று நினைக்கிறவர்கள் அங்கே இருக்கிறார்கள். 'உருது மொழி

நீண்டகாலமாக அரசாங்க மொழியாக இருந்தது. அதை கைவிட்டுவிட்டார்கள். உருது மொழியை மீண்டும் அரசாங்க மொழியாகக் கொண்டுவர வேண்டும்.

‘Steps to ensure adequate recruitment of Muslims for jobs in Government and public sector especially in Police; prevent discrimination in private sector. Protection and promotion of Urdu as an important language in Uttar Pradesh, Madhya Pradesh, Rajasthan and Delhi...’

அந்த வகையில் அரசியல் சட்டத்தை மாற்ற வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். முஸ்லீம்கள் மைனாரிட்டி சமுதாயமாக இருப்பதால் அவர்கள் உரிய முறையிலே பாதுகாக்கப்படவில்லை; இன்றைக்கு நாட்டிலே ஒதுக்கப்படுகிற நிலைமை இருப்பதால் இப்படிப்பட்ட சிக்கல்கள் இருக்கின்றன என்று நாங்கள் சொல்கிறோம்.

அடுத்ததாக, பாரம்பரியம்பற்றி இங்கே சொல்லப்பட்டது. அதிலே எங்களுக்கு உடன்பாடு உண்டு. திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்டதைப்பற்றிச் சொன்னார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் தமிழ் மண்ணுக்கு விதை போட்டவர்கள் பலர் இருக்கிறார்கள். நான் பல தடவை ஒரு விஷயத்தைச் சொல்லியிருக்கிறேன். நான் அதைச் சொல்லும் போது அமைச்சர் என்.வி.என். ஒருவர்தான் சரி என்று தலையாட்டுவார். எங்கள் கட்சியைச் சேர்ந்த சிங்காரவேலைப்பற்றி சிலருக்குத் தெரிந்திருக்கும் (குறுக்கீடு—எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்). எல்லோருக்கும் தெரியும் என்றால் ரொம்ப சந்தோஷம்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** அவர்களின் தகவலுக்காகச் சொல்கிறேன். ஜீவானந்தம் அவர்களையும் நாங்கள் மறக்க மாட்டோம்; எங்கள் தலைவர் அண்ணா அவர்களால் பகுத்தறிவு வாதி என்று பாராட்டப்பட்ட சிங்காரவேல் அவர்களையும் மறக்க மாட்டோம்; அவர் பிறந்த மீனவர் சமுதாயத்தையும் மறக்க மாட்டோம்.

*** மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் திரு. சிங்காரவேலைப் பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு யாருக்குத் தெரியும்



என்ற முறையிலே கேட்கிறார்கள். நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்வேன். அவர்களுடைய அன்பைப் பெற்று, அவர்களுடைய அரவணைப்பையும் பெற்று அவர்கள் உடன் நெருங்கிப் பழகியிருக்கிறேன். சின்னஞ் சிறு வயதிலேயே 32-ம் ஆண்டிலே அவர்களோடு இணைந்து, பழகி அவர்களுடைய வீட்டில் உணவு உண்ணுகின்ற வாய்ப்பையும் பெற்றிருக்கிறேன். இந்த மாநிலத்தில் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி அவர்கள் 1937-ம் ஆண்டு அரசு பொறுப்பை எற்றபோது, முதன் முதலாக நடைபெற்ற விளக்கப் பொதுக் கூட்டத்தில் கூட இராஜகோபாலாச்சாரி அவர்கள் வைதீகத்திற்குத் தலைவர், வர்ணாசிரமத்திற்குத் தலைவர், முதலமைச்சராக வந்துள்ளார் என்றும் இனி இந்த நாட்டில் ஏழை எளிய மக்களுக்கு வாழ்வு கிடைக்காது’ என்றும், முரசறைந்து பறைசாற்றியபோது உடனிருந்து குரல் கொடுத்த தங்கங்கள், சிங்கக்குட்டிகள் நாங்கள் இங்கே இருக்கிறோம் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அவர் 1932-ஐச் சொல்கிறார். நான் அதற்கு முன்னால் பேசுகிறேன். 1924 ஆம் வருடத்தில் கான்பூர் சதி வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்டவர்களில் ஒருவர் சிங்காரவேலு. அவர் கைது செய்யப்படவில்லை. காரணம் இங்கே ஆஸ்பத்திரியில் இருந்தார். அவர் உயிரைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக வெள்ளைக்கார டாக்டர் எத்தனையோ முயற்சிகளை எடுத்துக்கொண்டார். டாங்கே உள்பட பலருக்கு நான்காண்டுகள் தண்டனை வழங்கப்பட்டது. இவர் பேரில் கேஸ் தொடரவேண்டுமென்று என்னிடத்திலேயே வற்புறுத்தினார்கள். கம்யூனிஸ்டுக் கட்சி ஆரம்பித்து ஐம்பது ஆண்டுகள் ஆகிவிட்டது.

**திரு. இராம அரங்கண்ணல்:** 1924 இல் இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி இருந்ததா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** 1925 டிசம்பர் மாதம் 26 ஆம் தேதி இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியின் மகாநாடு கான்பூரில் நடந்தது. தொழிலாளிக்குத் தொழிலாளியாக இருந்த—பகுத்தறிவுவாதிகளுக்குப் பகுத்தறிவு வாதியாக இருந்த சிங்காரவேலு அவர்கள் தான் அன்றைக்குத் தலைவராக இருந்தார் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள முடியும். 1932 இல் நாஸ்திகர் மகாநாட்டிற்கும் அவர் தலைமை வகித்தார். அன்றைக்கு நானும்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 மார்ச் 7

வந்தேன். 18-வது நாஸ்திகர் என்ற முறையில் நானும் கையெழுத்துப் போட்டிருக்கிறேன். திரு. சிங்காரவேலுவை நாங்கள் மறக்கவில்லை என்று சொல்லலாம். ஆனால் எந்த அளவுக்கு நினைவுகொண்டு அவரது கருத்து அடிப்படையில் செயல்படுகிறோம் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவர் சுதந்திரப் போராட்டத்தில் முன் நின்றவர். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்—சென்னையில் காங்கிரஸ் மகாநாடு நடந்துகொண்டிருந்தபோது விவசாயிகளைக் கூட்டிவந்து போட்ட தீர்மானத்தையே மாற்றச் செய்த மாவீரன்.

அவருக்குத் துணையாக இருந்த சர்க்கரைச் செட்டியார்—தொழிலாளி வர்க்கத்திற்கே சர்க்கரையாக இருந்தவர்—தமிழ் மொழியில் அரசியலைப்பற்றிப் பேச முடியாது என்ற காலத்தில் நல்ல தமிழில் அரசியலைப்பற்றியும் பேச முடியும் என்று பேசி வழிகாட்டி திரு.வி.க.—தாம் சம்பாதித்த சொத்துக்களை எல்லாம் ஊழியர்களுக்கே கொடுக்கிறேன் என்று கொடுத்த எஸ். சீனிவாச ஐயங்கார்— சட்டமன்றத்தில் சிங்கமென முழங்கிய சத்தியமூர்த்தி—பிராமணராகப் பிறந்தாலும் ஹரிஜனங்களோடு ஒன்றாகவே இருந்து—அவர் இறந்தவுடன் அத்தனைபேர்களும் கண்ணீர்விட்டு அழ மறைந்த மதுரை வைத்தியநாதய்யர்—தமிழ் நாட்டிலே தேசிய இயக்கத்தை வளர்த்த வைக்கம்வீரர்—இவர்களை எல்லாம் வரிசையாக நினைவுகொள்கிறபோது நமது உள்ளங்களில் வேறு எதற்குமே இடம் கொடுக்க முடியாது என்று சொல்கிறேன். அப்படிப்பட்ட தேசியப் பாரம்பரை உருவாக்கிய மண் இது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றைக்கு ஸ்டேட் அடானமியைப்பற்றிச் சொல்கிறீர்கள் என்றால்—அதைச் சொல்கிறவர்கள் யார் என்பதைப் பார்ப்பதும் முக்கியம்தான். என்மேல் குறை பட்டுக்கொண்டு பிரயோசனமில்லை. திராவிட முன்னேற்றக் கழக மகாநாடு திருப்பரங்குன்றத்தில் நடைபெற்றபோது பழங்கானந்தத்தில் போட்டிருந்த போஸ்டர்கள் எல்லாம் என்ன? "வங்கம் வழிகாட்டிய பின்னும் தங்கத் தமிழகம் இந்தியக் கூட்டாட்சியில் அங்கம் வகிப்பதா?"—இதுதான் போஸ்டர் வாசகம்.



1975 மார்ச் 7] [திரு. கே. டி. கே. தங்கமணி]

காஷ்மீரத்தைப்பற்றிச் சொல்லலாம். அதன் நிலைமை என்ன என்பதைப்பற்றி நாடாளுமன்றத்திலேயே விவாதம் எந்த அளவுக்கு வந்திருக்கிறது, அதன் தன்மை என்ன என்பதை அறிவோம். ஜனசங்கம் சொல்கிறது என்றால்—அவர்கள் முன்பு காஷ்மீர் பஃபர் ஸ்டேட்டாக இருக்கவேண்டும்—இந்தியப் பேரரசின் கீழ் சலுகைகளுடன் வந்திருப்பதை எதிர்த்தே வோட்டளித்தவர்கள்—அது ஒரு மதவாதக் கட்சி—இந்தியாவை இந்துமதம்தான் ஆளவேண்டுமென்ற கட்சி—இதன் கொள்கை இந்தியா பூராவும் பரவவேண்டுமென்று திரு. ஜெயப்பிரகாஷ நாராயணன் சொல்கிறார் என்றால் இது ஒரு சிக்கலான பிரச்சினை — காஷ்மீர்ப்பற்றிப் பல காலமாக தகராறு இருந்து வருகிறது. நம்மைத் தாக்கவேண்டுமென்று பாகிஸ்தான் காத்து இருக்கிறது. இதற்கு ஆயுதங்களை வேறு அள்ளி அள்ளி வழங்கி வருகிறது அமெரிக்க ஏகாதிபத்தியம்—இந்து மகா கடலில் தனித் தளத்தையே அமைத்துக்கொண்டிருக்கிற பகை நிலை இந்த நிலையில் [illegible]

"I believe equally in unity. Without a strong Centre there would be no united country. What freedom would the States then share? State autonomy should be inseparable from national strength.

Without a strong Centre, how can the States hold together? If each State looks to its own interests, how will the weaker States be helped? All our States are independent. The Centre is the thread which binds them together ..."

என்ற இந்த கருத்து இருக்கிறதே இந்தக் கருத்தைப் பிரதமர் சொல்கிறார் என்றால் இந்தக் கருத்து அரசியல் சட்டத்தை உருவாக்கும்போது ஏற்பட்ட கருத்து. அரசியல் சட்டம் அந்தரத்தில் இருந்து வருவதில்லை.

It is reflection on the Social Economic conditions prevailing at a particular time in the Countrv.

என்று அந்த நிலைமையில் இருக்கிறது. தேசிய விடுதலை இயக்கம்—அந்த விடுதலை இயக்கத்தின் முக்கியமான நோக்கம் வயது வந்தவர்களுக்கு ஓட்டுரிமை—அது கொடுக்கப்பட்டிருக்கிறது. சாதியின் பேரால், மதத்தின்பேரால் பாகுபாடு கூடாது என்பது—இந்த உரிமையும் வழங்கப்பட்டிருக்கிறது. பொருளாதார முன்னேற்றம் ஏற்படவேண்டும் என்பது—அதில்தான் சில தடுமாற்றங்கள் வந்தன. நமது அரசியல் சட்டத்திலேயே அதைப்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 மார்ச் 7

பற்றித் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நான் அதற்குள் போக விரும்பவில்லை. அரசியல் சட்டத்தைப்படித்த வழக்கறிஞர்கள் பலர் இங்கே இருக்கிறார்கள். அரசியல் சட்டத்திலேயே சில திருத்தங்களை நாடாளுமன்றத்திலே ஏற்படுத்தலாம் என்று இருக்கிறது. சில திருத்தங்களுக்கு மெஜாரிட்டி ஸ்டேட்ஸ் அப்ரூவல் வேண்டுமென்று இருக்கிறது. இதில் தேக்கநிலை கூடாது என்பதுதான் முக்கியம். பார்லிமெண்டில் 24, 25 அரசியல் சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்தார்கள். அந்த அடிப்படையில் ஒவ்வொரு மாநிலமும் சட்டமியற்றிக் கொள்ளலாம். நீங்கள் ஏன் சட்டமியற்றிக் கொள்ளவில்லை? ராஜ்யத்திலுள்ள நிலங்களை எல்லாம் நாட்டுடைமையாக்கலாம். ஒரு ரூபாய் நஷ்ட ஈடு கொடுத்தால்போதும். நீங்கள் என்ன செய்தீர்கள்? சர்க்கரை ஆலை நிலங்களை எடுத்துக்கொள்கிறீர்கள். 20 லட்சம் நஷ்ட ஈடு கொடுக்கிறீர்கள். அவர்கள் இருபது, இருபத்தைந்து லட்சம் போதாது நாலரைக் கோடி வேண்டுமென்று கோர்ட்டுக்குப் போகிறார்கள்? கோர்ட்டுக்குப் போகாமல் தடுக்கவே நமக்கு அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

அடுத்து குறிப்பிட்டு ஒன்று இரண்டு விஷயங்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். உதாரணமாக, இப்போது 300 பேர் இருக்கக் கூடிய லெப்ரசி ஹோம் இன்ருகுரேஷன் பங்ஷன் போது டிரா பண்ணின பணத்தில் 11 ஆயிரம் ரூபாயை உடனடியாகத் திருப்பிக் கட்டவில்லை என்று ஆடிட் ரிப்போர்ட்டில் கண்டுபிடித்துக் கூறியிருக்கிறார்கள். கேட்டால் திருப்பிக் கொடுத்து விடுகிறேன் என்கிறார். அவர் என்னமோ அவர் குடும்பத்துச் சொத்தாக நினைக்கிறார். ஜெயில் டிப்பார்ட்மெண்டிலிருந்து சில பேரைக் கொண்டு வந்து அங்கு போடுவதற்கு அவர்களைப் போட வேண்டாம் என்கிறார். கேட்டால் அவர்கள் இவரது வேலைகளைக் கண்காணிக்கிறார்கள் என்கிறார். அதனால் அந்த இலாக்காவிலிருந்து வேண்டாம் என்கிறார். இதுபோன்ற நிலையில் அதைக் குடும்பத்துச் சொத்து போல் வைத்து இருப்பது சரி அல்ல. நான் எந்தத் தனிப்பட்டவரைப் பற்றியும் சொல்லவில்லை. (குறுக்கீடு) ஷ்பெஷல் ஆபீசர் வைத்தியநாதன். செக்ரட்டரி [illegible]. அது உண்மை தானா என்று விசாரித்துப் பாருங்கள்.



[1975 மார்ச் 7 [திரு. கே. டி. கே. தங்கமணி]

வறட்சிப் பகுதிகளைப் பார்ப்பதற்கு திரு. ஏ. பி. ஷிண்டே அவர்கள் வந்திருந்தார்கள். இந்தியப் பிரதமர் சென்னை வந்திருந்தபோது அந்த இடத்திற்குச் சென்று ஏன் பார்க்கவில்லை என்று கேட்கிறார்கள். பார்லிமெண்டுக் கூட்டம் நடக்கிறபோது தினசரி பிரதமர் வந்து விடுவார். நமது முதலமைச்சர் அவர்களும் அப்படித்தான் செய்கிறார். இது தான் நல்லது. பார்லிமெண்டு நடக்கும்போது அவர் வந்ததனால்—இங்கெல்லாம் போய் பார்க்க வேண்டுமென்றால் 2 நாள் ஆகும், போக வேண்டுமென்று சொன்னால்—முடியாது.

திரு. ஷிண்டே அவர்கள் வந்திருந்தார்கள். அவர் எப்படிப் பட்டவர் என்பது பலருக்கும் தெரியும். சிறு விவசாயியாக ஆடு மாடு மேய்த்துக் கொண்டிருந்தவர். இந்தப் பகுதியில் உள்ள கால்நடைகளை அடிமாட்டுக்கு ஓட்டிப் போகிறார்கள் என்று சொன்னபோது அவர் கண்ணீர் விட்டார்.

Why don't you have a permanent machinery for drought relief work.

என்று அவரே சொல்கிறார். புதுக்கோட்டை பூராவும் வறட்சிப் பிரதேசம் என்று சொல்லியிருக்கிறார். அப்படி இருக்கிறபோது இப்படிப்பட்ட ஒரு நிரந்தர அமைப்பை ஏற்படுத்தினால் என்ன? இது போல இப்போது நடைபெறுகின்ற வறட்சி நிவாரண வேலை திருப்தி அல்ல என்று சொல்லியிருக்கிறார். நாம் 7½ கோடி செலவழிக்கிறோம் என்றால் ஜில்லா அதிகாரிகள் தங்களை ஜில்லா அதிகாரிகள் என்று நினைத்துக்கொள்ளாமல் அங்கே போய் இருந்து, அந்தப் பணிகளைப் பார்வையிட வேண்டும்.

இதற்கு நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்கலாம். எங்கள் கட்சி மகாநாட்டில் வறட்சி நிவாரணப் பணிக்காக ஒதுக்கப்படுகிற பணத்தைத் திட்ட முதலீடாகக் கருதக்கூடாது என்று தீர்மானமே போட்டிருக்கிறோம். வறட்சி நிவாரணத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் தனியாகவே நிதி ஒதுக்கப்படவேண்டும். எந்த மாநிலத்தில் வறட்சியோ வெள்ளமோ உதவி செய்வதற்காக என்று சொல்லியிருக்கிறோம். 166 கோடிக்கு மத்திய அரசு இதற்காக ஒதுக்கி இருக்கிறார்கள். 'நீங்கள் முயற்சி செய்தால் இதில் பெருமளவு உதவியைப் பெற முடியும்.

Let us get the bulk for Tamil Nadu

வறட்சி நிவாரணத்திற்காக நாம் பணத்தை ஒதுக்கிச் செலவு செய்கிறபோது இதில் தங்கள் சொந்த லாபத்தை நினைக்கிறவர்களைப்பற்றி என்ன சொல்வது? மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற காலத்தில் தங்களுடைய சொந்த லாபத்தைக் கருதுகிறவர்கள் யாரோ அவர்கள் தான் சமுதாயத்திற்கு விரோதிகள். இதில் சொந்தக் கமிஷனை அடைகிறவர்கள் மனிதர்களே அல்ல. மனிதப் பதர்கள். லெப்பர்ஸ்களைவிடக் கேவலமானவர்கள்.

இப்பொழுது நாம் செய்துகொண்டு வரக்கூடிய பணி சரியானது அல்ல. ஏற்கனவே அழகர்சாமி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். பீகார், ஒரிஸ்ஸா போன்ற சில பகுதிகளில் இருக்கக்கூடிய விவசாயிகள் அனைவருக்கும் பச்சைக் கார்டு, சிவப்புக் கார்டு என்று கொடுத்து, இலவசமாகவே உணவு கொடுக்கிறார்கள் என்று சொன்னார்.

தமிழ்நாட்டு மக்களைப்பற்றி நான் சொல்லியிருக்கிறேன்.

‘ There is a great struggle to survive ’.

தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்று துடித்துக்கொண்டிருக்கிற மக்களுக்கு நீதி வழங்கக்கூடியது யார்? அரசுதான் நீதி வழங்க வேண்டும். நிதி, நீதி ஆகிய இரண்டையும் வழங்குகிறபோது தவறுதல்கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். முக்கியமான ஒரு பிரச்சினை, விருத்தாசலம் வட்டம் எமனேரி (வெலிங்டன்) நீர்த்தேக்கத்தின் கீழுள்ள சிறுமுளை பெருமுளை, புலிவயம், புதுக்குளம், வையங்குடி மற்றும் சுமார் 220 கிராமங்களைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளிகளுக்கு மங்களூர் சட்டமன்ற தொகுதிக்குள் நடக்கும் கிருஷ்ணாபுரம் வேலைவாய்ப்பு முன்னோடித் திட்டப்படி (PIREP) நூற்றுக்கணக்கானோர் வாழ்கிறார்கள். இந்தத் திட்டத்தைக் கைவிடப் போகிறார்கள். இது முடிந்து விட்டது என்றாலும், இவர்களை மற்றொரு திட்டத்தோடு இணைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

உணவு தானிய மொத்த வியாபாரத்தை அரசே ஏற்று நடத்தினால் என்ன? சாமர்த்தியமாக உணவு அமைச்சர் பதில் சொல்லி விடுவார், “மத்திய சர்க்காரினாலேயே முடியவில்லை” என்று மத்திய அரசு என்கிறபோது பெரிய இடம். நம்முடையது காம் பேக்ட் ஏரியா. இன்றைக்கு உணவு தானிய மொத்த வியாபாரம் தனியார் கையில் இருக்கிறது. அரிசியாக இருந்தாலும், கோதுமையாக இருந்தாலும், நவதானியமாக இருந்தாலும் மொத்த உணவு



தானிய வியாபாரம் அரசிடமே இருக்க வேண்டும். சில பேரிடத்திலிருந்து இதற்கு எதிர்ப்பு வரும். அதை எதிர்த்துத்தான் இது போன்ற காரியங்களைச் செய்ய வேண்டும். அரசாங்கத்தின் கொள்முதல் என்ன என்பது நமக்குத் தெரியும். ஏஜெண்டுகள் மூலமாகத்தான் நடக்கிறது. இது சரியல்ல.

கொள்முதல் என்கிறபோது 2 ஏக்கர், 3 ஏக்கர் வைத்து இருக்ககூடிய கம்யூனிஸ்டு தோழர்கள் லெவிக்கு ஒழுங்காகக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு 15 ரூபாய் போனஸ் கொடுக்கப்படவில்லை.

சேலம் ஜில்லா ஆத்தூர் மிகப் பின்தங்கிய பகுதி, அது மிக மோசமான நிலையில் இருக்கிறது. அங்கே மலையாறு ராமனாயக்கன் பாளையம் திட்டம், பைத்தூர் நீர்த்தேக்கத் திட்டம், ரெட்டி அணை சேனல் கல்பகனூர் திட்டம் ஆகிய திட்டங்களை உடனடியாக எடுத்து நிறைவேற்றிக் கொடுத்தால் மிக உதவியாக இருக்கும். பல வருஷங்களாகச் சட்டமன்ற உறுப்பினர்களும் சொல்லி வருகிறார்கள். இதை அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒரு வார்த்தை, ஹரிஜனங்களைப் பற்றிச் சொன்னதனால் சொல்கிறேன், உயர் ஜாதிக்காரர்கள் என்றால் சில நேரம் கொஞ்சம் சூடு வந்து விடுகிறது. தமிழ் இலக்கியத்திலேயே தன்னைப் புலைச்சி மகன் என்று இழித்த காரணத்தினால் ஆபுத்திரன் சினமுற்றுச் சொன்னதாக இருக்கிறது.

ஆபுத்திரன் பின் அமர்நகை செய்து
மாமறை மாக்கள் வருங்குலம் கேண்மோ
முதுமறை முதல்வன் முன்னர்த் தோன்றிய
கடவுட் கணிகை காதலஞ் சிறுவர்
அருமறை முதல்வர் அந்தணர் இருவரும்
புரிநூல் மார்பீர் பொய்யுரை யாமோ
சாலிக்குண்டோ தவறென உரைத்து
நான்மறை மாக்களை நகுவனன் நிற்ப

என்று தாயை அவமானப்படுத்தியதன் காரணமாக ஆபுத்திரன் கூறினார், என ஆயிரம் வருஷங்களுக்கு முன்னாலேயே தமிழ் இலக்கியத்தில் வந்திருக்கிறது . . . . . அடிக்கடி இந்த இலக்கியத்தை நான் படிப்பதனால் இதைச் சொல்கிறேன். குத்தூசி

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 மார்ச் 7

குருசாமி அவர்கள்கூட என்னிடம் சொல்வார்கள், நீங்கள் பேசுகின்ற பல இடங்களிலும், நீங்கள் போகின்ற பல இடங்களிலும் இதைச் சொல்ல வேண்டுமென்று.

**திரு. இராம. அரங்கண்ணல்:** அந்தப் பாட்டிற்கு விளக்கத்தையும் சொல்லுங்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** விளக்கம் இதுதான். ஆபுத்திரனை பார்த்து, உன்னுடைய தாய் சாலி கற்பிழந்தவள் என்ற முறையில் சில பிராமணர்கள் ஏசியபோது, அவன் கோபமுற்று, உங்கள் சாதி என்ன என்பது தெரியாதா? பிராமணர்களுடைய மூதாதையர்களான வசிஷ்டர், அகஸ்தியர் ஆகியோருடைய பிறப்பு எப்படியென்றால், அவர்களெல்லாம் பிரம்ம புத்திரர்கள், பிரம்மாவினுடைய திருமகள் திலோத்தமை. பிரம்மாவுக்கும் திலோத்தமைக்கும் பிறந்த குழந்தைகள் தான் வசிஷ்டரும், அகஸ்தியரும். தந்தையே மகளை மணந்து கொண்ட சாதி உங்களுடையது என்று ஆபுத்திரன் சொன்னதாக இலக்கியத்தில் இருக்கிறது. என்னுடைய தாயாரை அப்படி அவமானப்படுத்தியவுடன்தான் எனக்குக் கோபம் வந்தது என்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதே தமிழிலக்கியத்திலே நான் சொல்கிறேன், இந்தியாவினுடைய ஒற்றுமையைப் பற்றி என்ன சொல்கிறார்கள். சாலி தவறு செய்துவிட்டாள், வாரணாசியில் பிறந்த சாலி தவறு செய்துவிட்டாள். தவறுக்குப் பிராயச்சித்தம் செய்ய கன்னியாகுமரிக்கு வருகிறாள். வருகிற வழியில் காவிரிக்கரையில் குழந்தை பிறக்கிறது. அன்றைக்குக் கூட, கலாச்சார ரீதியிலே இந்திய ஒற்றுமையைக் காப்பாற்ற வேண்டுமென்று இப்படி அமைந்திருக்கிறது. அந்த இலக்கியத்தில் எல்லாம் குறிப்பிட்டதைப்போல, ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, நாம் வாதாடி, வெற்றி அடைந்தபிறகும், இன்றைக்கு நாட்டிற்கு ஆபத்து இருக்கிற காலத்திலே, இப்பொழுது அதை கவனிக்க வேண்டியது ரொம்ப அவசியம்.

(முற்பகல் 11.00)

இன்றைக்கு, ஜெயப்பிரகாஷ் போராட்டம் ரொம்பத் தெளிவாக வந்தாகிவிட்டது. தனிப்பட்ட அவருக்காகச் சில கூட்டங்களைச் சேர்க்கிறார்கள். தனிப்பட்டவர்கள் பிரச்னையல்ல.



1975 மார்ச் 7] [திரு. கே. டி. கே. தங்கமணி]

கொஞ்சம், கொஞ்சமாக, படிப்படியாக, தேசியத் தலைவர்கள் எல்லாம், நாட்டு மக்கள் எல்லாம், கஷ்டப்பட்டு வாங்கிக் கொடுத்த கான்ஸ்டிட்யூஷன் இருக்கிறதே, அதிலே ஜனநாயகம் வந்திருக்கிறது. கம்யூனிஸ்ட்டுக்கு வந்திருக்கிற கஷ்டமெல்லாம்,

We have to protect this democracy. We are not entirely satisfied with this democracy. But when there is a serious threat even to this democracy we have to protect it.

Now what is this agitation against democracy? There is an attempt to reverse the process.

கொஞ்சம் கொஞ்சமாக முன்னுக்கு வந்ததை, பூராவும் பின்னே இழுத்துச் செல்கின்ற போக்காக வந்திருக்கிறது. இந்த இயக்கத்தோடு டெல்லியிலே நடந்த ஊர்வலத்திலே, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் செல்கிறார்கள் என்றால், அரசாங்கமும் அதற்குப் பதில் சொல்லவேண்டும், முறையாகச் சொல்லவேண்டும். மார்க்சிஸ்டு கட்சியினர் ஊர்வலத்தில் போவதாகத்தான் இருந்தது. எப்படியாவது. . . .

**திரு. இராம. அரங்கண்ணல்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஊர்வலத்தில் போகவில்லையென்று சொல்வதற்குக் காரணம் என்ன?

THIRU K. T. K. TANGAMANI: Anti-Congressism does not pay. In other places also there have been counter-revolutionary movement.

அதற்கு உதாரணம் வேண்டுமென்றால் சொல்கிறேன். டில்லியிலே இதுமாதிரி கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி நடந்துகொண்டிருந்தபொழுது ஒரு ஜெயப்பிரகாஷ் தோன்றினார். அவரே பேசினார், புனிதம், அன்பு, சத்தியம் என்று. அவர் ஒரு மதவாதி. புனிதம், அன்பு, சத்தியம் என்று ஒரு மதவாதி பேசினால் புரிந்து கொள்ள முடியும். ஆனால் புனிதம், அன்பு, சத்தியம் என்று ஒரு அரசியல்வாதி பேசினால் அது ஏமாற்று வேலை. இங்கு பேசுவது யார்? பலவிதமான அதிருப்தியாளர்கள் சேர்ந்துகொண்டு, எப்படியாவது இந்த ஜனநாயகத்தை உடைக்கவேண்டுமென்ற இந்தப் போக்கு, இந்த நாட்டுக்கு மிகப் பெரிய அபாயம். இது எங்கோ வந்த அபாயம் அல்ல. பீகாருக்கு மட்டும் வந்ததல்ல. டெல்லியிலே பிடித்திருக்கிற அபாயம், தமிழ் நாட்டுக்கு

வரத்தான் செய்யும். அது இந்த நாட்டினுடைய ஒற்றுமையை சீர்குலைப்பதற்கும் ஓரளவுக்கு இருக்கக்கூடிய ஜனநாயகத்தைச் சீர்குலைக்கக் கூடியதாகவும் இருக்கிறது . . .

THIRU L. GANESAN : If Jayaprakash Narayan's movement is counter revolution, do you mean to say that there is any other revolution that is taking place in India?

THIRU K. T. K. TANGAMANI : The revolution that is to take place should be a silent revolution. Even if such a revolution is to take place, it has to be done by the have-nots. But this revolution is not by have-nots ; it is by haves.

அங்கே உட்கார்ந்திருக்கிற ஆள் யார்? ஜெயப்பிரகாஷ் பின்னலே இருக்கிற ஆள் யார்? இதே சென்னை நகரத்திலே 10 நாளைக்கு முன்பு—முதலமைச்சர் இதைப்பற்றி விசாரிக்க வேண்டும்—கோயங்கா எல்லா பத்திரிகை ஆசிரியர்களையும் அழைத்து, ஜெயப்பிரகாஷுக்குச் சரியான பப்ளிசிட்டி கொடுக்க வேண்டும் என்று சொல்லவில்லையா? கோயங்கா யார்? அவர் ஏகபோக முதலாளி என்பது மாத்திரமல்ல, ஜனசங்கக் கட்சியைச் சேர்ந்தவர். ஜனசங்கக் கட்சியைச் சேர்ந்த அவர், அக்கட்சியின் சார்பில் தேர்தலில் நிற்கத் தைரியம் இல்லாமல், சுயேச்சையாக, மத்திய பிரதேசத்திலே நின்று, இன்றைக்குப் பார்லிமெண்டுக்கு வந்திருக்கிறார். அவர் மேல் எவ்வளவு பெரிய குற்றச்சாட்டுகள் வந்திருக்கின்றன? அப்பேர்ப்பட்டவர், ஜெயப்பிரகாஷ் பின்னலே நிற்கிறார். இந்திரா காந்தி பிடிக்கவில்லை, மத்திய சர்க்கார் பிடிக்கவில்லையென்பதற்காக, ஜன சங்கத்தோடு போய் சேருவதா? . . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பகுதிக்குப் பகுதி மாநிலத்திற்கு மாநிலம் நிலைமை மாறுகிறது. இங்கே, கோயங்கா ஆலோசனை அளித்ததாக சொன்னார்கள். விவசாய போராட்டத்திற்காக, மன்றாடியார் வீட்டில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ஆலோசனை நடத்தினார்கள். (குறுக்கீடு)

திரு. கே. டி. கே. தங்கமணி: அது இன்றைக்குச் சொல்வது அல்ல, பல காலமாகச் சொல்லி வருவது. நான் உங்களிடத்திலே சொன்னது தான். தொழிலாளிகளுக்கும் விவசாயிகளுக்கும்





விரோதமாக இந்த அரசு போய்விட்டது. அன்றைக்கு விவசாயிகளுடைய போராட்டத்தில் 17 பேர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: விவரங்களை ஆராய விரும்பவில்லை. அது ஒரு விவாதமாகிவிடும். கோயங்கா வீட்டில் போராட்டம் நடத்துவதற்கு ஆலோசனை நடத்தலாமா என்பது கே. டி. கே. தங்கமணி அவர்களுடைய கேள்வி. நிலைமைக்கேற்ப, பகுதிக்கேற்ப, நிலைமைகள் மாறலாம். மன்றாடியார் வீட்டில், விவசாயிகள் போராட்டம் நடத்த ஆலோசனை நடந்தபொழுது, கம்யூனிஸ்ட் தலைவர்கள் கலந்து கொண்டார்களா இல்லையா?

திரு. கே. டி. கே. தங்கமணி: அந்தப் போராட்ட நேரத்தில் இவர்கள் இருந்திருந்தால், இவர்களும் கலந்து கொண்டிருப்பார்கள். 17 பேர்களைச் சுட்டுக் கொன்றார்கள் என்பதால்தான் அந்த ஆலோசனை நடத்த ஆரம்பித்தோம்.

சர்க்கரைத் தொழிற்சாலைப் பிரச்னைகளில், முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்ட பொழுது, முதலாளிகள் இன்றைக்குப் புறக்கணித்து விட்டார்கள் அல்லவா? . . . .

திரு. க. சுப்பு: ஜன சங்கம், ஜெயப்பிரகாஷ்-ஓடு இணைந்திருக்கிறது என்று சொல்கிறாரே. 1967-லே, ஜன சங்கத்தோடு சேர்ந்து கூட்டணி அமைத்து, ஆட்சி அமைத்தார்களே, இவர்கள். இன்றைக்கு ஜனசங்கம் பிற்போக்குக் கட்சி என்று சொல்கிற கம்யூனிஸ்ட் கட்சி, அன்றைக்கு அந்தப் பிற்போக்கு ஜனசங்கத்துடன் சேர்ந்து ஆட்சி வைத்ததே, அதற்கு என்ன காரணம் என்று சொல்வாரா?

திரு. கே. டி. கே. தங்கமணி: மாநில சுயாட்சியைப் பற்றி பேசுவதற்கு ஒரு மாஜி கம்யூனிஸ்ட் தேவை. கம்யூனிஸ்டுகளுடைய வாதத்தை எடுத்துப் பதில் சொல்வதற்கு ஒரு மாஜி கம்யூனிஸ்ட் தேவை என்ற நிலைமை வந்ததற்காகத்தான்—அது தான் எனக்கு ரொம்ப வருத்தமாக இருக்கிறது. 1967-ம் வருஷம் (குறுக்கீடு) இதை நீங்கள் . . . . .

**திரு. க. சுப்பு :** மாஜி கம்யூனிஸ்ட் என்று சொல்கிறார்கள். Once a communist, always a communist. Karl Marx patent தான் கம்யூனிஸ்ட் தத்துவம்; கம்யூனிஸ்ட்டுக்குத்தான், கம்யூனிஸ்ட் கட்சிக்குத்தான் சொந்தம் என்று சொல்கிறாரே, அது தவறு. இவர்கள் என்ன பேடன்ட் ரைட் எடுத்தார்களா? அதற்கு காரல் மார்க்ஸ் ஒன்றும் பேடன்ட் ரைட் வாங்கவில்லை. அது ஒரு உயர்ந்த தத்துவம். அதை அவர், மனித சமுதாயத்திற்காக வைத்துவிட்டுப் போனார். அதை ஒரு கூட்டுக்குள் அடைக்கப் பார்க்கிறார் இவர். யானையைப் பிடித்து ஒரு பானைக்குள் அடைப்பது போல், தோழர் கே.டி.கே. தங்கமணி அவர்கள் சொல்கிறார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றி வாதத்திற்கு வரவில்லை. Once a mortgage, always a mortgage. அப்படி இருக்கிற மாதிரி எனக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நண்பர் சுப்பு அவர்கள் கேட்டது, எங்கேயோ ஒரு மாநிலத்தில் ஜன சங்கத்தோடு கூட்டாட்சி அமைந்ததாகச் சொன்னாரே, அது எந்த மாநிலம் என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அது மட்டுமல்ல, இன்னும் கொஞ்சம் சொல்கிறேன். உத்திரப் பிரதேசத்தில் ஜனசங்கத்தோடு கூட்டு சேர்ந்திருந்தது. ஜனசங்க ஆதரவிலே எங்கள் ஆள் ஜெயித்தார். . . . .

**திரு. க. சுப்பு :** தேர்தலுக்கு முன்னாலேயே கூட்டு தேர்தலுக்காக ஏற்பட்ட கூட்டு அல்ல. காங்கிரசுக்கு எதிராக ஒரு ஆட்சி அமைக்க வேண்டுமென்ற கட்டத்திலே ஜனசங்கத்தோடு கூட்டு சேர்ந்தது. அப்பொழுது அது இனித்தது. இப்பொழுது ஜெயப்பிரகாஷோடு அவர்கள் சேர்ந்த பிறகு கசக்கிறதா?

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சில பேருக்கு இனிக்கலாம் சில நிலைமைகளிலே. இப்பொழுது ஜெயப்பிரகாஷ் எங்களுக்குக் கசக்கிறார், அதை நான் சொல்கிறேன். ஜனசங்கம், ஆட்சிக்கு



வர, நாங்கள் சொன்னபடி வந்தது. மினிமம் புரகிராமை நாங்கள் நிச்சயம் பண்ணினோம். அந்த புரகிராம வெளியானதிலே எனக்கெல்லாம பங்கு உண்டு.

**திரு. க. சுப்பு :** மினிமம் புரகிராம் என்பது எந்த கட்சியினால் கொடுக்கப்பட்டது? அதற்கு எப்பொழுது வடிவம் கொடுக்கப் பட்டது? என்ன மினிமம் புரகிராமை ஒப்புக்கொண்டது? இன்றைக்கு ஜனசங்கம் ஏன் போய்விட்டது? நீங்கள் கொடுத்திருந்தால், நீங்கள் மீறியதால் அல்லவா, அவர்கள் போய்விட்டார்கள். அன்றைக்குப் பேசி ஒப்புக்கொண்டதிலே யிருந்து மீறவில்லை ஜனசங்கம். ஆனால், தோழர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் விவரத்தை. . . . .

**திரு. கே. டி. கே. தங்கமணி :** நாங்கள் ஜனசங்கத்தோடுதான் சேருவோம் என்று நீங்கள் சொன்னால், எனக்கு எந்தவிதமான கவலையும் கிடையாது, வெறுப்பும் கிடையாது. ஜனசங்கத்தோடு தான் சேர்த்து வாழ்த்து வாங்குவோம், ஜனசங்கத்தோடு ஜெயப்பிரகாஷ் பேசுகிறார், அது நீண்ட இயக்கம் என்று நீங்களும் பேசுங்கள், எனக்கு அதைப்பற்றி கவலை கிடையாது. இப்பொழுது ஜனசங்க மாநாட்டிலே, ஜெயப்பிரகாஷ் பேசியிருக்கிறார். . . . . . .

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, நேற்றையமுன்தினம் ஜனசங்க மகாநாட்டில், ஜெயப்பிரகாஷ் பேசியது தமிழ் நாட்டுப் பத்திரிகையில் வந்திருக்கிறது—நான் ஜெயப்பிரகாஷுக்கு வக்காலத்து வாங்குவதாக யாரும் கருதத் தேவையில்லை. மாநாட்டிலே நான் கலந்து கொள்வதற்குக் காரணம், பீகார் இயக்கத்தை நாங்கள் ஆதரிக்கிறோம் என்று ஜனசங்கம் சொல்லியிருக்கிறது. அதற்கு நன்றி சொல்ல வந்திருக்கிறேன் என்று சொன்னார்களே தவிர, அதில் நான் சேர்ந்துவிட்டேன் என்று அல்ல. . . .

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அதே மாநாட்டில், கம்யூனிஸ்ட் கட்சியைச் சட்டவிரோதமான கட்சி என்று சொன்னார்களே, அதைப்பற்றி தங்கள் கருத்து என்ன?

திரு. கோவை செழியன்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பேசுகின்றவர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். எதிர்க் கட்சியில் பேசுகின்றவர், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். தோழர் சுப்பு அவர்கள் கேட்ட கேள்வி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஜனசங்கத்தோடு சேர்ந்து, ஆட்சிக்கு வர ஒத்துழைப்பு தந்தது. ஆகவே, இன்றைக்கு ஜெயப்பிரகாஷ் அதோடு சேருவதில் என்ன தவறு என்ற முறையிலே கேட்கிறார்கள். நான், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவன். எனக்குள்ள சந்தேகம் எல்லாம், ஜெயப்பிரகாஷ், ஜனசங்கம், ராஷ்டிரிய ஸ்வயம் சேவக் சங், ஆனந்த மார்க், பிஜு பட்நாயக் போன்றவர்களுடன் இயக்கம் நடத்துகிறார்கள். அந்த இயக்கத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, ஜனசங்கத்தோடும் ராஷ்ட்ரிய சுயம் சேவக் சங்கத்தோடும் ஜெயப்பிரகாசர் சேர்ந்திருக்கிறார் என்று சொல்கிறார்கள். ஜெயப்பிரகாசர் ஒரு இயக்கம் நடத்துகிறார், அந்த இயக்கத்திற்கு ஆதரவாக ஜனசங்கமும் மற்ற கட்சிகளும் சேர்ந்திருக்கின்றன. தீவிரமான கம்யூனிஸ்டுகள் என்று சொல்லக்கூடியவர்கள்கூட அவரை ஆதரிக்கிறார்கள். தூக்குமேடைக் கயிற்றில் தொங்கிக் கொண்டிருக்கிறவர்கள்கூட, அப்படிப்பட்ட கம்யூனிஸ்டுகள் கூட அவரை ஆதரிக்கிறார்கள். குறைந்த பட்சத் திட்டத்தை வைத்துக்கொண்டு சேர்ந்து கொள்கிறார்கள், இப்போது அவரைப் பின்பற்றுகிறார்கள்.

திரு. ஆலடி அருணா: அதையாவது உறுதியாகப் பின்பற்றினால் நல்லது.

திரு. கே. டி. கே. தங்கமணி: தி.மு.க. ஆளுங்கட்சியாக இருக்கிறவரையில் தண்ணீரில் போடப்பட்ட பாஸ்பரஸ் ஆட்சியிலிருந்து இறங்கிவிட்ட பிறகு கரையிலே போடப்பட்ட பாஸ்பரஸ் என்று 1973 ஆம் ஆண்டு முதலமைச்சர் அவர்கள்





நெல்லையிலே பேசியிருக்கிறார்கள். இப்போது ஆட்சியிலே இருப்பதால் அமைதியாக இருக்கிறோம், இல்லாவிட்டால் தப்பு வழியில் போவோம் என்றார்கள். இதை இன்னும் தொடர்ந்து சொல்கிறாரா என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. துரை முருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இந்த மாமன்றத்தில் கொண்டுவரப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையின்மீது அதனை வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் பல்வேறு நல்ல திட்டங்கள் இருப்பதை நாடு அறியும், நல்லவர்கள் அறிவார்கள். அதிலே சிலவற்றைப் பற்றி மட்டும் நான் இங்கே கோடிட்டுக் காட்ட விழைகிறேன். இந்தியாவிலேயே முதன்முதலாக மீனவர்கட்கு வீடு கட்டும் திட்டம், இந்தியாவிலேயே முதன்முதலாக கைத்தறி நெசவாளர்கட்கு சேமிப்புப் பாதுகாப்புத் திட்டம், திக்கற்ற இளம் சிறார்கட்கும் ஆதரவற்ற விதவைகளுக்கும் புதிய திட்டங்கள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சி நிறுவன ஊழியர்கள் ஆகிய 7 லட்சம் பேருக்கு 24.5 கோடி ரூபாய் அளவிற்கு அகவிலைப்படி உயர்வு, பதினொன்று லட்சம் செலவில் இரண்டாயிரம் ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இருபது இருபது மாணவர் இல்லங்கள், 30 லட்சம் செலவில் முதல் கட்டமாக 6,800 கிராமங்களில் சாலை வசதி, குடி-நீர் வசதி, திருமலைநாயக்கன் மகாலை அரும்பொருட் காட்சிக் கூடமாக்கல், காரைக்குடியில் தமிழ்தாய்க் கோவில், குடிநீர் வாரியத்தின் மூலமாக குடிநீர் வசதி, பஞ்ச நிவாரணத்திற்கான துரித நடவடிக்கைகள் இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை அடுக்கடுக்காகச் சொல்லிக்கொண்டு இருக்க முடியும். இவ்வளவு திட்டங்களையும் நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த நேரத்திலே போட்டு—எந்த நேரமென்றால் வானம் பொய்த்து வளம் குன்றியிருக்கிற நேரத்திலே, நிதிவசதிகள் குறைந்திருக்கிற நேரத்திலே இப்படிப்பட்ட பல சூழ்நிலைகளுக்கிடையே செம்மையான ஒரு நிதிநிலை அறிக்கையை அவர்கள் தயாரித்து அளித்திருக்கிறார்கள்.

[திரு. துரைமுருகன்] [1975 மார்ச்

எப்போதுமே மணல் நிலத்திலே ஒருவர் நடக்கிறபோது வழுக்கிவிழாமல் இருந்தால் அது அவருடைய கெட்டிக்காரத்தனம் என்று போற்றப்படாது. ஆனால், வழுக்கல் நிலத்திலே ஒருவர் வழுக்கிவிழாமல் நடக்கிறார் என்றால் அது அவருடைய திறமை என்று சொல்கிறோம். நான் முன்பே குறிப்பிட்டபடி வானம் பொய்த்து வளம் குன்றியிருக்கிற நேரத்திலே, நிதிவசதிகள் குறைந்திருக்கின்ற நேரத்திலே, அதிகாரங்கள் மத்திய சர்க்காரிடத்திலே குவிந்திருக்கின்ற நேரத்திலே, நாட்டு மக்களை இதயத்திலே வைத்து நல்ல பல திட்டங்களை அளித்திருக்கிற நம்முடைய முதல்வர் அவர்களை நான் பாராட்டுவது மட்டுமல்ல; நாடும் பாராட்டிக் கொண்டிருப்பதிலே யாருக்கும் ஐயமில்லை.

இந்த நிதிநிலை அறிக்கைமீது பேசியவர்கள் இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிற விஷயங்களைப் பற்றிப் பேசுவதைவிட மாநில சுயாட்சி பற்றிய கருத்துக்களையே அதிகமாகப் பேசினார்கள். அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையின் ஆரம்பத்திலேயும், இறுதியிலே இருக்கிற பக்கங்களிலேயும்--அவைகளைப் படித்துப் பார்த்தால்--மத்திய அரசு மாநிலங்களின் வளர்ச்சிக்கு எப்படித் தடையாக இருந்திருக்கிறது என்பதை முதல் பக்கத்திலேயும், நாம் இருக்கிற அதிகாரங்களை வைத்து சில திட்டங்களைப் போட்டு நாட்டுக்கு அறிவித்து விட்டோம், இன்னும் அதிகாரங்கள் இருக்குமானால் எவ்வளவு பெரிய சாதனைகளைச் செய்ய முடியும் என்று மாநில சுயாட்சிக் குரலை இந்த நிதிநிலை அறிக்கையின் இறுதியிலே எழுப்பியிருக்கிறார்கள். இருக்கின்ற அதிகாரங்களை வைத்து எல்லாம் செய்து இருக்கிறோம், அப்படி ஏதாவது செய்ய முடியாமல் போயிருக்குமானால் அதற்குக் காரணம் நம்மிடம் அதிகாரம் இல்லை, மத்திய அரசிடம் இருக்கிறது என்பதுதான்.

"நோய்நாடி நோய் முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்று வள்ளுவர் கூறியிருப்பதைப் போல் மத்திய சர்க்கார் அதிகாரங்கள் குவிந்து இருக்கக்கூடிய ஒரு சர்க்காராக இருப்பதுதான் காரணம் என்று சொல்லியிருக்கிறார்கள்.



1975 மார்ச் 7] [திரு. துரைமுருகன்]

மாநில சுயாட்சி பற்றி ஏற்கனவே இந்த மாமன்றத்திலே ஒரு விவாதம் நடந்திருக்கிறது. இப்போது நிதிநிலை அறிக்கையிலேயும் சரி, ஆளுநர் அவர்களுடைய உரைமீது நடந்த விவாதத்தின்போதும் சரி மாநில சுயாட்சி பற்றிதான் விவாதிக்கப்பட்டது. மாநில சுயாட்சி என்று சொன்னால் ஏதோ பூதாகாரமான விஷயம் அல்ல. நாம் ஏதோ இப்போதுதான் அதை விவாதித்துக் கொண்டிருக்கிறோம் என்ற தப்பான கணக்கை சிலர் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாநில சுயாட்சி என்பது காங்கிரஸ்காரர்களால் 1935 ஆம் ஆண்டிலேயே எழுப்பப்பட்டிருக்கிறது. இந்தியாவிற்கு வெறும் அதிகாரங்கள் போதாது, அதிகாரங்கள் நாட்டு மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்று அன்றைக்கே காங்கிரஸ் கட்சி பலமான கருத்தைக் கொண்டிருந்திருக்கிறது. ஒரு காலத்திலே வெள்ளைக்காரர்கள் அதிகாரங்களை தங்கள் கையிலேயே வைத்துக் கொண்டிருந்தார்கள். கீழே இருப்பவர்களை அடக்குவதற்காக, கீழே இருப்பவர்களுக்கு எதிர்ப்பாக அதிகாரங்களைத் தங்கள் கையிலே குவித்து வைத்துக் கொண்டிருந்தார்கள். அன்றைக்கே காங்கிரஸ்காரர்கள் அதை எதிர்த்தார்கள், கிளர்ச்சி செய்து அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்று கேட்டார்கள்.

1943 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 7, 8 தேதிகளில் பம்பாயில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சிக் கூட்டத்திலே வெள்ளையனே வெளியேறு என்ற தீர்மானத்தைப் போட்டார்கள். அந்தத் தீர்மானத்திலே "தற்காலிகமாக அமையவிருக்கிற அரசு மக்களில் பெரும்பாலோர் ஒத்துக்கொள்ளத் தக்க இந்தியப் பேரரசுக்கான அரசியல் சாசனத்தை உருவாக்கும். அதில் மாநிலங்களுக்கு அதிக அளவு சுயாட்சி அளிக்கின்ற கூட்டாட்சி முறைக்கு வழிபிறக்கும், மிச்சமுள்ள அதிகாரங்களும் மாநிலங்களுக்கே அளிக்கப்படும்" என்று சொல்லியிருக்கிறார்கள். 1946 ஆம் ஆண்டிலே இந்திய அரசியல் சட்டத்தை முன்மொழிந்து பேசிய, பிறகு இந்தியாவின் பிரதமராக வந்த நேரு அவர்கள் அந்த ஆப்ஜக்டிவ் ரெஸல்யூஷனை முன்மொழிந்து பேசுகிறபொழுது "மாநிலங்கள் தங்கள் தனித்தன்மைகளைப் பாதுகாத்தாக வேண்டும்., மிஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களுக்கே வந்தாக வேண்டும். அமெரிக்க ஐக்கிய நாடுகளைப்போல கூட்டாட்சி முறை இந்தியாவிலும் உருவாக வேண்டும். இந்தத்

தீர்மானம் கூந்திய மக்களுக்கு விடுத்த புனிதமான கருத்தோவியம், இது இந்திய உணர்விற்கு மாறுபட்டதல்ல" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

காங்கிரஸ் கட்சியின் 66-வது மகாநாட்டில் சஞ்சீவ ரெட்டி "அதிகாரப் பங்கீடு என்பது மாநிலங்களிலிருந்து உள்ளாட்சித் துறை அங்கங்களுக்கு மட்டும் செல்வதல்ல, மத்தியிலிருந்து மாநிலங்களுக்கு வருவதும் ஆகும்" என்று குறிப்பிட்டார்கள். ஆகவே, சுதந்திர போராட்ட காலத்திலேயே இந்த எண்ணம் அவர்களுக்குக் கிளம்பி இருக்கிறது. ஆனால் இன்றைக்கு வெள்ளைக்காரன் போய்விட்டபிறகு இவர்கள் ஆட்சியிலே அமர்ந்துவிட்டார்கள். வெள்ளைக்காரர்களின் அதே அதிகார எண்ணம் இவர்களையும் ஆட்டிப்படைக்கிறது என்பது தவிர வேறு என்னவாக இருக்க முடியும். அதைத்தான் இந்திராகாந்தி அவர்கள் ஒருமுறை மேற்கு வங்கத்தைப் பற்றிச் சொல்கிற போது "கம்யூனிஸ்டுகள் மத்தியிலே அதிகாரம் குவிந்திருக்கக் கூடாது என்று இன்றைக்குக் குரல் கொடுக்கலாம். ஆனால் அவர்களே மத்தியிலே ஆட்சிக் கட்டிலிலே அமருகிற வேளை வந்தால் மத்திய அரசு இன்னமும் வலிவானதாக இருக்க வேண்டுமென்றுதான் விரும்புவார்கள்" என்று சொன்னார்கள்.

இதிலேயிருந்து என்ன தெரிகிறதென்றால் யார் மத்தியிலே ஆட்சிபீடத்திலே உட்கார்ந்தாலும் அதிகாரத்தைக் குவித்துக் கையில் வைத்துக் கொள்வது தேவை என்று கருதுகிறார்கள். ஆனால் அது தேவையில்லை என்று அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்று அன்றைக்கே காங்கிரஸ்காரர்கள் கேட்டார்கள். அன்றைக்குக் கேட்டவர்கள் ஆட்சியிலே அமர்ந்துவிட்டார்கள். அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கக்கூடாது என்று இன்றைக்குப் பேசுகிறார்கள். அதைப் பகிர்ந்தளிக்கக்கூடாது, குவிந்து இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். வெளியூர்க்காரன் தவறு செய்தால் அது ஆபத்தானது, ஆனால் உள்ளூர்க்காரன் தவறு செய்தால் ஊர்கூட்டி விரும்பத்தக்கது என்ற வகையிலே அவர்கள் நிலைமை இன்றைக்கு இருக்கிறது. வேறு என்னவாக இருக்க முடியும்? யார் தடுத்தாலும், எத்தனை எதிர்ப்புக் காட்டினாலும் என்ன பூச்சாண்டி காட்டினாலும் மாநில சுயாட்சி வரும். அதிகாரங்களை மாநிலங்களுக்குத் தர முடியாது என்





சொல்கிற பிரதமர் இந்திராகாந்தியல்ல, ஆண்டவனே பிரதமராக வந்தாலும் அதைக் கொடுக்காமல் இருக்க முடியாது என்பதை இந்த மாமன்றத்திலே நான் தெளிவாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இன்றைக்கு காஷ்மீரில் வெளிச்சம் காட்டப்பட்டிருக்கிறது, பச்சைக் கொடி காட்டப்பட்டிருக்கிறது, காஷ்மீரில் அப்படிக் காட்டியிருக்கிறார்கள். காஷ்மீரம் என்றால் அது தனிப் பிரச்சினை, அதைப்பற்றிப் பேசக்கூடாது என்று சொல்கிறார்கள் சிலர். திரு. தங்கமணி அவர்களும் அதற்காக வக்காலத்து வாங்கிப் பேசினார்கள், அதை வரவேற்கிறேன். ஆனால் ஒன்றை மட்டும் நான் சொல்கிறேன், காஷ்மீருக்கு ஏன் தனி அதிகாரம், தனி அந்தஸ்து என்று கேட்டால் எனக்குத் தெரிந்தவரையில் காஷ்மீர் வட பகுதியிலே இருக்கிறது, பக்கத்திலே பாகிஸ்தான் இருக்கிறது. பாகிஸ்தான் அந்நிய நாடு, பகை நாடு. அப்படிப் பட்ட பாகிஸ்தானிலேயிருந்து அந்நியர்கள் உள்ளே நுழைந்து விடலாம், காஷ்மீர் எல்லைப் பகுதியிலே அமைந்திருக்கிற காரணத்தினால் அதற்குத் தனி அந்தஸ்து தரப்படுகிறது என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட தனி அந்தஸ்து கொடுக்கப்பட வேண்டுமென்றுதான் ஷேக் அப்துல்லா அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னால் சொன்னார்கள். ஆனால் அன்றைக்கு, ஷேக் அப்துல்லா அப்படிக் கேட்கக் கூடாது என்று சொல்லி அவரைச் சிறைச்சாலையில் அடைத்தார்கள். ஆனால் இன்றைக்குக் காலம் கனிந்தது, தன்னுடைய தந்தையார் செய்த தவறை இன்றைக்கு அவருடைய திருமகளார் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் உணர்ந்து அதே ஷேக் அப்துல்லாவை அழைத்து, காஷ்மீரத்தின் பிரதம அமைச்சராக உட்கார வைத்திருப்பதை நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது.

நேற்றையதினம் ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள்கூட பெரிய மகஜரைக் கொடுக்கும்பொழுது மாநிலங்களுக்கு அதிகாரங்கள் தேவை என்ற ஷரத்தைச் சேர்த்திருக்கிறார்கள். ஆகவே, பல்வேறு மாநிலங்களிலும் இன்றைக்கு இந்தக் கொள்கை பரவி விட்டது. ஆகவே, இதைத் தடுக்க முடியாது. காஷ்மீரத்திற்குக் கொடுத்திருக்கும் உரிமைகளை சென்னைக்கோ,

[திரு. துரைமுருகன்] [1975 மார்ச் 7

வேறு மற்ற மாநிலங்களுக்கோ ஒப்பிட்டுப் பேசக்கூடாது என்று இந்திராகாந்தி அம்மையார் அவர்களும் சொல்கிருர்கள், அவரோடு கூட்டு சேர்ந்திருப்பவர்களும் சொல்கிருர்கள். நான் அவர்களைக் கேட்பதெல்லாம், இன்றைக்குத் தரைப்படை ஒன்றைத்தான் காஷ்மீரத்தில் அமைக்க முடியும். நம்முடைய தரைப்படைதான் பாகிஸ்தானுக்குப் போக முடியும், அதைபோல் பாகிஸ்தானின் தரைப்படைதான் இங்கே வர முடியும். அதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், வருடத்தில் 6 மாதங்கள் மேகமூட்டமான சூழ்நிலை இருக்கும் பகுதி அது. எனவே விமானத் தாக்குதல் நடத்துவதென்பது அரிது. எனவே, தரைப்படை ஒன்றுக்காக மட்டும் தான் தனி அந்தஸ்து கொடுக்கிறோம். நான் அதையே திருப்பிக் கேட்கிறேன், இன்றைக்கு வல்லரசுகள் இந்து மா கடலில் தளம் அமைக்கிருர்கள். அப்படி இந்து மா சமுத்திரத்தில் தளம் அமைத்த பிறகு, படைகளைக் குவித்த பிறகு, அவைகள் தரைப்படை மூலமாகவும், கப்பற்படை மூலமாகவும், விமானப் படை மூலமாகவும் இந்தியத் துணைக் கண்டத்திற்குள் வர முடியும். அப்படி வரும் பகுதி தென்னுடாகத்தான் இருக்கிறது, இல்லையா? எப்படி காஷ்மீர் தரைப்படையை எதிர்நோக்கும் பகுதி என்று அதற்குத் தனி அந்தஸ்து கொடுக்கப்படுகிறது என்ற விளக்கத்தைச் சொல்லும் இதே இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் வருங்காலத்தில் பிரதமராக இருந்தாலும், அல்லது வேறு யார் வந்தாலும் ஒருநாளைக்கு டெல்லி பாராளுமன்றத்திலே அறிவிப்பார்கள், ஏன் தமிழ்நாட்டிற்குத் தனி அந்தஸ்து தெரியுமா, பக்கத்திலே இந்து மாக்கடல் இருக்கிறது, வல்லரசுகளின் ஆதிக்கம் இருக்கிறது, எந்த நேரத்திலேயும் கப்பல் மூலமாகவோ, விமானம் மூலமாகவோ தாக்கலாம். எனவே நாட்டுப் பாதுகாப்பை முன்னிட்டு தமிழ்நாட்டிற்கு சுயாட்சி கொடுக்கிறோம், மாநில சுயாட்சி கொடுக்கிறோம் என்று அறிவிக்கத்தான் போகிருர்கள்.

இன்றைக்கு நாம் பார்க்கிறோம். காஷ்மீரில் விடுதலை அடைந்த பிறகு போடப்பட்டிருக்கும் சட்டங்கள் காஷ்மீரில் இங்கே செல்லாது. அதுமட்டுமல்ல கவர்னரை நியமிக்கும் அதிகாரம் அவர்களுக்கு உண்டு, ஹைகோர்ட் சொல்லிவிட்டால் பிறகு சுப்ரீம் கோர்ட்டிற்கு வர முடியாது, ஹைகோர்ட்டோடு முடி



1975 மார்ச் 7] [திரு. துரைமுருகன்]

விட்டது. நிதி வசதிகளைப் பெருக்குவதற்காக தனிக் குழுக்களைப் போட அவர்களுக்கு வசதியிருக்கிறது. இவ்வளவுக்கும் மேலாக அந்த இடத்திலே வசீர்-இ-ஆசம் என்று வைத்திருக்கிருர்கள், பிரதமர் என்று பெயர். There cannot be two oasars in a tent ஒரு கூடாரத்தில் இரண்டு சீஸர்கள் இருக்க முடியாது. அப்படியிருக்க முடியும் என்ருல் எப்படி முடியும்? ஆகவே, இந்தியா ஒரு கூட்டாட்சி நாடு என்ருல் அந்த நாட்டிலே ஒரு பிரதம மந்திரிதான் இருக்க முடியும், ஆனல் இன்றைக்கு அங்கே கொண்டுவந்து ஒரு பிரதம அமைச்சரைப் போட்டிருக்கிருர்கள். காஷ்மீரத்திலே ஷேக் அப்துல்லாதான் வசீர்-இ-ஆசம் என்று இந்த மாமன்றத்திலே, I declare in this august Assembly that Dr. Kalaignar si the Wazir-E-Azam of this Sta- தமிழ் நாட்டினுடைய பிரதம அமைச்சராக இருக்கிருர் என்பு இந்த மன்றத்திற்கு அறிவித்து நிதிநிலை அறிக்கையை வரவே முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. அபுசாலி:** அவைத் தலைவரவர்களே, டாக்ட கலைஞர் அவர்கள் அளித்திருக்கின்ற 1975-76 ஆம் ஆண்டு நிதிநி அறிக்கையை என்னுடைய கட்சியின் சார்பாக ஆதரித் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்த்தால் நாடு எப்ப இருக்கிறது என்பதை மனதில் வைத்து, ஏழை எளியவர்களுக் வரிகளை மீண்டும் போட்டால் அந்த ஏழை மக்கள் தாங் வார்களா என்ற எண்ணத்தை மனதில் வைத்து இந்த நிதிநி அறிக்கையை நமது டாக்டர் அவர்கள் வெளியிட்டிருக்கிருர்க என்பதை யாரும் மறக்க முடியாது. ஆனல் இதை எல்லா கட்சியினரும் வரவேற்கிருர்களே தவிர அதை யாரும் எதிர்க் வில்லை. குறிப்பாக, இந்த அறிக்கையின் மூலம் மீனவர்களுக்கு அளித்திருக்கும் சலுகையை நாம் மறக்க முடியாது. அதற்கு காரணம், என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் மீனவர்கள் அதிகமாக, சுமார் 25,000 பேர்களுக்குமேல் அந்த தொகுதியைச் சார்ந்தவர்கள் என்பதை நினைத்து நான் என்னுடைய தொகுதியின் சார்பில், என்னுடைய தொகுதி மக்களின் சார்பில் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எம். ஏ. அபுசாலி] [1975 மார்ச் 7

அடுத்து, இந்த லெவி முறையைப் பொறுத்தவரையில் சிதம்பரம் தாலுக்காவில் கொஞ்சம் கெடுபிடியாக வசூல் செய்கிறார்கள். ஒரு ஏக்கரிலிருந்து மூன்று ஏக்கர் வரையில் உள்ளவர்களுக்கு இந்த லெவி முறையைத் தளர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம், இந்த லெவி முறையைக் கையாள்வதால் பரிதாபகரமான ஒரு நிலையை நான் தாலுக்கா ஆபீஸ்களில் பார்க்க வேண்டியிருக்கிறது. நான் நேரில் சென்ற பொழுது பார்த்தேன். அந்த தாலுக்காவைச் சேர்ந்தவர்கள் அதிகாரிகளாக சென்னையிலே இருக்கக்கூடும். சென்னையிலே உள்ளவர்களுக்கு மற்றக் கிராமங்களில் நிலம் இருக்கலாம். அவர்கள் பர்மிட் வாங்க வேண்டுமென்றால் அவர்கள் தாலுக்கா அதிகாரியை அணுகும் நேரத்தில் அவர்கள் பர்மிட் கொடுக்க மறுக்கிறார்கள். காரணம், 2, 3 ஏக்கர் நிலம் உள்ளவர்கள் கிளீயரன்ஸ் வாங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். கிளீயரன்ஸ் வாங்க வேண்டுமென்றால் போட்ட லெவி பூராவையும் கொடுத்தால் தான் கிளீயரன்ஸ் கொடுக்க முடியும் என்று சொல்வார்கள். எனவே, இப்படி 3 ஏக்கர் வரையில் நிலம் உள்ளவர்களுக்கு அந்த லெவி முறையை விட்டு கொடுத்து, அதே நேரத்தில் நிலம் அதிகமாக உள்ளவர்களிடமிருந்து கடுமையாக வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

லெவி முறையே கூடாது என்று சொல்லவில்லை. சிதம்பரம் தாலுக்காவைப் பொறுத்தவரையில், தென்னார்க்காடு ஜில்லாவைப் பொறுத்தவரையில் ஏரி இருக்கிறது என்ற ஒரே காரணத்தை மனதில் வைத்து அந்த லெவியைக் கடுமையாக வசூலிக்கிறார்கள். ஆனால் நிச்சயமாக உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன், அங்கேயுள்ள அதிகாரிகள் அத்தனை பேர்களின்மீதும் நான் குறை சொல்லவில்லை, அவர்களைக் கேட்டால், சட்டம் போடுவது நீங்கள் தானே, நீங்கள் சட்டமன்றத்தில் சட்டம் போட்டுவிட்டு, இங்கே வந்து லெவி போடக்கூடாது என்று சொன்னால் எப்படி என்று என்னிடத்தில் சொல்கிறார்கள். ஓரளவு படித்தவர்களெல்லாம் வெளியூர்களுக்குத்தான் சென்றிருப்பார்கள். அவர்களுக்குள்ள நிலத்திற்குரிய லெவியைப் போடாவிட்டால் அவர்களுக்கு நெல் வருவதற்கு வசதியிருக்காது. அவர்களுக்குப் போதுமான சம்பளமும் இருக்காது. நான் பல அதிகாரிகளைச் சந்தித்துப் பேசும்பொழுதெல்லாம், எங்களுக்குச் சம்பளம் குறைவு



1975 மார்ச் 7] [திரு. எம். ஏ. அபுசாலி]

ஆனால் ஊரிலிருந்து அரிசி வரும் என்று சொல்வதைக் கேட்டிருக்கிறேன். அத்தனை அதிகாரிகளும் விவசாயம் செய்வதில்லை, அவர்கள் குத்தகைக்கு விட்டிருப்பார்கள். ஒரு ஏக்கர் என்றால் அதில் 20 கலம் அல்லது 25 கலம்தான் கிடைக்கும் என்று நினைக்கிறேன். எனவே, அந்த அடிப்படையில் அவர்களுக்கு அந்த விதிவிலக்கை அவசியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதில் இன்னொரு மாற்றமும் தேவை என்று கருதுகிறேன். அவர்கள் இருப்பிடத்திற்குக் கொண்டு செல்ல வேண்டுமென்றால் தாசில்தாரின் ஒப்புதல் வேண்டுமென்று சொல்கிறார்கள் எப்பொழுது ஒப்புதல் வாங்குவது, எப்பொழுது அரிசியை எடுத்துச் செல்வது என்று தெரியவில்லை. ஆகவே, மணியக்காரர் சர்டிபிகேட் இருந்தால் போதும் என்று வைத்துவிடலாம். அப்படியின்றி தாசில்தாரிடம் வாங்க வேண்டுமென்றால் ரெவின்யூ டிபார்ட்மெண்டில் வாங்குவது என்றால் அது சாதாரண சமாசாரமாக இருக்க முடியாது.

இந்த லெவி முறையை கோவாப்பரேட்டிவ் முறை மூலமாக வாங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். கோவாப்பரேட்டிவ் முறை மூலம் வாங்குவது அவ்வளவு முறை அல்ல. காரணம் அந்தந்த ஊரிலே உள்ள வியாபாரிகளுக்கு அந்த லைசென்சை வழங்கினால் அவர்கள் 10 மூட்டை, 5 மூட்டை இருந்தால்கூட அவர்களுக்கு அந்த இலாபம் கிடைக்கும் என்று எண்ணி அந்த லெவியைச் செய்வார்கள். கோவாப்பரேட்டிவில் உண்மையாக நடக்கும் என்றாலும் 10 மூட்டை, 5 மூட்டை என்றால் அந்த பிரசிடெண்ட் பிடிப்பதில்லை. நான் கோவாப்பரேட்டிவிற்குக்

(முற்பகல் 11-30)

கொடுக்க வேண்டாமென்று சொல்லவில்லை. எனக்கும் லைசென்ஸ் கொடுத்தார்கள். இரண்டு மாதத்தில் 30,000 மூட்டை வாங்கினேன். கோவாப்பரேட்டிவ் மூலமாக 5,000 மூட்டைதான் வாங்கினார்கள். ஒரு மூட்டைக்கு எட்டணா கமிஷன். 15,000 ரூபாய் லாபம் வந்தது. செலவு போக ஏழு, எட்டாயிரம் ரூபாய் கிடைத்தது. தனிப்பட்ட வியாபாரிகள் 10 மூட்டை ஒரு இடத்தில் இருந்தால் கூட வாங்கக் கூடிய சூழ்நிலை இருந்தது. கோவாப்பரேட்டிவில் இருப்பவர்களுக்கு அதிலே அக்கறை இருக்காது.

[திரு. எம். ஏ. அபுசாலி] [1975 மார்ச் 7

இப்போது நெல்லுக்கு 58 ரூபாய் என்று விலை நிர்ணயித்திருக்கிறார்கள். இன்று லேபர், உரம் போடுவது மற்றச் செலவுகளை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டால் 60 கிலோ மூட்டைக்கு 80 ரூபாய் என்று நிர்ணயித்தால் தான் விவசாயிகள் பயன் அடைய முடியும். எதிர்க்கட்சித் தோழர்கள் எல்லாம் இதை ஏற்றுக் கொள்ளுவார்கள் என்று நினைக்கிறேன். ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலம் உள்ளவர்களிடமிருந்தெல்லாம் வீட்டிற்கு நெல் எடுத்துப் போகும் வழியிலேயே பிடித்து நிறுத்தி வாங்குகிறார்கள். இந்த நிலைமையில் இனிமேல் வரக்கூடிய காலத்தில் மழை பெய்தால் கூட நெல் பயிரிட முன்வரமாட்டார்கள். இப்போது கிராமங்களிலிருந்து சென்னைக்கோ, கோவைக்கோ அரிசி கொண்டு போக முடியாது. சிதம்பரத்தில் படி அரிசி 3½ ரூபாய் விற்கிறது, சென்னையில் 7 ரூபாய் விற்கிறது. சென்னையிலுள்ளவர்களுக்கு சிதம்பரத்தில் நிலம் இருந்தால் அந்த நெல்லை, அரிசியை அங்கிருந்து சென்னைக்குக் கொண்டு செல்ல அதிகாரிகள் அனுமதி கொடுத்தால் சென்னையிலுள்ள பற்றாக்குறை ஓரளவு குறையும்.

தமிழ்நாட்டிலேயே பொதுவாக முஸ்லிம்கள்தான் தாழ்த்தப்பட்ட மக்களாக இருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது. அம்மையார் அவர்கள் எந்தவிதமான சலுகையும் அரிசனங்களுக்குச் செய்யவில்லை என்று சொன்னார்கள். இன்று அரிசனங்களுக்கு இருக்கக்கூடிய வாய்ப்புக்களை பார்க்கும்போது நான்கூட அந்தக் குலத்தில் பிறந்திருந்தால் நல்ல சலுகைகளைப் பெற முடியும் என்று தோன்றுகிறது. எங்களுக்கு அதிக வேலை வாய்ப்பு தர சலுகை தரவேண்டும்.

மாண்புமிகு அமைச்சர் அன்பழகன் அவர்களிடம் கூறும்போது 'நீங்கள் அரிசனா? அவர்களுக்குத்தான் 101 மார்க் என்று வைத்திருக்கிறோம்' என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு அவர்களுக்குச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது.

இன்று தமிழக முதல்வரை எல்லோரும் பாராட்டுகிறார்கள். நான் ஒருவிதத்தில் குறை சொல்ல விரும்புகிறேன். அவர்கள் முதல்வர் பொறுப்பேற்ற பிறகு தமிழகத்தைப் பொறுத்தவரை அரிசனங்களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகை அளவுக்கு வேறு யாருக்குமே கிடையாது. எந்த மதத்தினருக்கும் கிடையாது.



1975 மார்ச் 7] [திரு. எம். ஏ. அபுசாலி]

ஆகவே, முஸ்லிம்களுக்கும் தாழ்த்தப்பட்ட சமுதாயம் என்ற முறையில் அந்த ஒரு வாய்ப்பைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் தலைவர்கள் நீண்ட நேரம் பேச வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். நீங்கள் உங்கள் நேரத்தை அதிகப்படுத்திக் கொண்டு போனால், உங்கள் தலைவர்களுடைய நேரத்தைத்தான் குறைக்க வேண்டும்.

**திரு. எம். ஏ. அபுசாலி:** அண்ணாமலை யூனிவர்சிடிக்கு கடலோர மீனவர்கள் வந்து படிக்க வருகிறார்கள். அவர்கள் 25 மைல் சுற்றி வரவேண்டியிருக்கிறது. ஆகவே, பறங்கிப்பேட்டை-பொன்னந்தட்டு பாலத்தை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையைப் பற்றி வெளியிலே பாராட்டுகிறார்கள். சட்டமன்றத்திலே எதிர்க்கட்சியினர் குறை கூறுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதற்கு உரிமை இருக்கிறது. குறை இருந்தால் அதனை நிறைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, முதல்வர் அவர்களுக்கு ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கூறி, இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரித்து, முடித்துக் கொள்ளுகிறேன்.

***திரு. முனு ஆதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு முதலமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையின்மீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

கடந்த ஆறு ஆண்டு காலமாக முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்து வருகிறார்கள். ஆனால் இந்த ஆண்டு அவர்கள் செய்திருக்கிற புதுமை—அவர்கள் செய்திருக்கும் தவறுகளை மறைக்கவும், இருக்கிற ஊழல்களை மறைக்கவும் மாநில சுயாட்சி என்ற போர்வையைப் போர்த்துக்கொண்டு நிறைய விளக்கங்களைத் தந்து மக்களைத் திசை திருப்பி வருகிறார்கள். மாநில சுயாட்சி என்பதற்கான உட்பொருளை இதுவரை தெளிவாக மக்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லவில்லை. நாங்கள் இங்கே கேட்கும்போது அதிக அதிகாரங்கள் என்று

சொல்லுகிறார்கள். அவர்களுக்குள்ளாகப் பேசிக் கொள்ளும்போது 'தனியாகப் பிரிந்தாக வேண்டும், இந்திரா காந்திக்குத் தொல்லை தந்தாக வேண்டும்' என்று பேசிக் கொள்ளுகிறார்கள்.'

மாநிலத்திற்கு அதிக அதிகாரம் தேவை என்பதிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால் இன்று இவர்கள் இருக்கின்ற அதிகாரங்களை வைத்துக் கொண்டே எவ்வளவு துஷ்பிரயோகம் செய்கிறார்கள், ஃபேவரிடிசம்—சலுகைகள் செய்கிறார்கள் என்பதைப் பார்க்கிற போது மக்கள் மட்டுமல்ல, பொதுவாழ்வில் இருப்பவர்கள் வெட்கி, நாணித் தலைகுனிய வேண்டியிருக்கிறது.

* * * *

MR. DEPUTY SPEAKER :

திரு. முனு ஆதி அவர்கள் சொல்லியவைகள் அவை மரபிற்கு மீறியவைகள் என்று அவைகளை நீக்கிவிட்டு, முனு ஆதி அவர்களை குற்றச்சாட்டைக் குறித்து மீண்டும் சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. முனு ஆதி :** * * *

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :** * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :**

* நடவடிக்கைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விட்டேன். தாங்கள் மறுபடியும் இப்படி சொல்லி அவைக் குறிப்பில் ஏற்றுவது சரியல்ல. * * *

**திரு. முனு ஆதி :** அடுத்து, பேரறிஞர் அண்ணா அவர்களின் சொல்லும் செயலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை என்று இங்கே முழக்கம் இட்டார்கள். அண்ணா அவர்கள் பொறுப்பேற்றபோது, ரூ. 500-க்கு மேல் சம்பளம் வாங்க மாட்டோம் என்று சொன்னார்கள். இப்போது விலைவாசி ஏறிவிட்டது அதனால் ரூ. 1,500-ஆக இருக்கட்டும். பரவாயில்லை. அதிலே பயணப்படி ரூ. 500, 600 என்று இந்த வறட்சி நேரத்தில்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





வாங்கிக்கொண்டு இருப்பது சரிதானா? நியாயமா? அண்ணா அவர்கள் அம்பாசிடர் கார் தவிர வேறு காரில் போகக்கூடாது என்று சொன்னார்கள். இன்றைக்கு ரக வாரியாக கார், ரக வாரியாக அமைச்சர்களுக்குக் கார். அதிலே அவர்கள் போகிறார்கள். இந்தக் குறைபாட்டை தயவு செய்து தப்பாக எடுத்துக் கொள்ளக்கூடாது. மக்கள் பேசிக் கொள்கிறார்கள். அதை உங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த நாட்டு வரிப்பணத்தை விரயம் செய்வது நான் உங்கள் கடமையா?

**திரு. தி. பொன்னுமலை :** தலைவரவர்களே, சென்ற சட்ட மன்ற. . . .

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மந்திரிகள் சம்பளம் வாங்குவதாகச் சொன்னார்கள். மந்திரிகள் பணியாற்றிக்கொண்டு சம்பளம் வாங்குகிறார்கள். சட்டசபைக்கு வராமலேயே, கையெழுத்து மட்டும் போட்டு விட்டு உங்களுடைய கட்சியின் தலைவர் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார் என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. முனு ஆதி :** எங்களுடைய கட்சித் தலைவர் தான் உங்களுக்கு எல்லாம் சம்பளம் கொடுத்து சாப்பாடு போட்டார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** பல பேருக்குச் சம்பளம் கொடுத்ததாகச் சொல்கிறார்கள். சத்யா ஸ்டுடியோ தொழிலாளிக்கு சம்பளம் கொடுக்காததால், அவர்கள் ரோடில் செத்து விழுந்ததை நாம் பார்த்தோம்.

**திரு. கா. காளிமுத்து :** சட்டசபைக்கு வராமலேயே கையெழுத்துப் போட்டுவிட்டு சம்பளம் வாங்குவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு முன் உதாரணமே இருக்கிறது. அமைச்சருக்கும் தெரியும் * * *

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** புலவர் கோவிந்தன் அவர்கள், சட்டசபை செத்துவிட்டது என்று சொல்லிவிட்டு, வெளியே கையெழுத்துப்போட்டு விட்டு சம்பளம் வாங்கிக் கொண்டு போகவில்லை. உங்கள் தலைவர் தான் போய்க் கொண்டிருக்கிறார்கள். *

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1975 மார்ச் 7

(Shame Shame down A.D.M.K. benches)

THIRU DURAI MURUGAN : How can they say ' shame '?

MR. DEPUTY SPEAKER : They have got a right to say so.

* * * *

**திரு. ஆலடி அருணா :** அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் முனு ஆதி அவர்கள் பேசும் போது, அமைச்சர்கள் சம்பளம் வாங்குவது, பயணப்படி வாங்குவது பற்றிக் குறிப்பிடும் போது ஒரு குற்றச்சாட்டு சொன்னார்கள். அந்தக் குற்றச்சாட்டு என்னவென்றால், மற்ற மாவட்டங்களுக்கு, பிற மாநிலங்களுக்குச் செல்கிற நேரத்தில் அங்கேயுள்ள பெரிய முதலாளிகளின் காரைப் பயன்படுத்தி விட்டு, அவர்கள் செலவில் பயணம் செய்து விட்டு, இங்கே வந்து படி வாங்குவது சரிதானா என்று சொன்னார்களே தவிர வேறு ஒன்றும் குற்றச்சாட்டு சொல்லவில்லை.

(திரு. தி. பொன்னுமலை எழுந்தார்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் விளக்கம் கொடுத்து விட்டார், போதும், திரு. முனு ஆதி பேசுங்கள்.

**திரு. தி. பொன்னுமலை :** சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரூ. 350 சம்பளம் என்று இருந்ததை ரூ. 450 ஆக ஆக்க வேண்டுமென்று திரு. முனுஆதி அவர்கள் தான் சொன்னார்கள். சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பை எடுத்துப் பார்த்தால் தெரியும்.

**திரு. முனு ஆதி :** தவறாகச் சொல்கிறார். மனிதனுக்கு ஒரு சாண் வயிறுதான். முதலமைச்சர் ஆனாலும் சரி. வேறு யாராக இருந்தாலும் சரி. நான் முதலமைச்சர் அவர்களைப் பார்த்து நியாயம் கேட்டேன். அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். முனு ஆதி கஷ்டப்படுகிறார் என்று ஒப்புக் கொண்டார். நான் அயோக்கியத்தனம் எதுவும் செய்யவில்லை. நான் அதிகரிக்க வேண்டுமென்று கேட்டதன் நோக்கம் குறிப்பில் இருக்கிறது. எடுத்துப் பார்த்தால் தெரியும்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1975 மார்ச் 7]

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிப்புத்தூர் என்ற ஊரில் 10 லட்ச ரூபாய்க்கு காட்டிலாகா மரம் திருடு போய் இருக்கிறது. இது ஃபாரஸ்டரின் உதவியோடு நடந்திருக்கிறது. நிர்வாகத்தில் இருக்கும் ஊழலை நான் சொல்கிறேன். சம்பந்தப் பட்ட ஃபாரஸ்டரை டி.எப்.ஓ. அவர்கள் மாற்றி, அவர்கள் மேல் நடவடிக்கையும் எடுத்து இருக்கிறார்கள். ஆனால் இங்கேயிருந்து அமைச்சர் மாண்புமிகு ஓ. பி. இராமன் பி.ஏ. போன் செய்கிறார். சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு அந்த ஃபாரஸ்டர் பெயர் நாகலிங்கம். அவரை மறுபடியும் அங்கே போட்டு இருக்கிறார்கள். இப்போது 10 லட்சம் திருடு போய் இருக்கிறது. யார் வீட்டுப் பணம்? இப்படி தவறு செய்த அதிகாரிமேல் நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக அவரை அதே இடத்தில் மறுபடியும் போட்டால் எப்படி?

மற்றொன்றையும் சொல்ல விரும்புகிறேன். மேலும் அதிக அதிகாரங்கள் வேண்டும், மாநில சுயாட்சி வேண்டுமென்று கேட்கிறீர்கள் * *

(நண்பகல் 12-00)

**திரு. முனு ஆதி :** குரோம்பேட்டையில் குரோம் நகரில் உள்ள பேக்டரியில் 750, 800 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். பத்மஸ்ரீ நாகப்ப செட்டியார் அவர்கள் செய்கின்ற கொடுமைகளை அமைச்சருக்கும் முதலமைச்சருக்கும் தந்தி மூலம் தகவல் அனுப்பியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. பி.எஃப்., ஈ.எஸ்.ஐ., கம்பல்சரி டிபாசிட் பணங்கள் சம்பந்தப்பட்ட இலாகாவிற்குப் போய் சேரவில்லை. அவரே அந்தப் பணத்தைக் கையாண்டிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் என்னிடத்தில் எந்தக் குற்றச்சாட்டையும் சொல்லவில்லை. திடீரென்று இங்கு வந்து குற்றச்சாட்டைச் சொல்கிறார். என்னிடம் சொல்லியிருந்தால் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை உடனே எடுத்திருப்பேன்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** பி. எஃப், கம்பல்சரி டிபாசிட் எல்லாம் மத்திய சர்க்கார் அதிகாரிகள் சம்பந்தப் பட்டது. அந்தப் பணங்கள் அங்கே வரவில்லை என்று அவர்கள் எங்களுக்குத் தகவல் கொடுத்திருந்தார்களானால் நாங்கள் உடனே நடவடிக்கை எடுக்க வசதியாக இருந்திருக்கும். தனி கமிட்டி கூட்டத்தில் இது பற்றி எல்லாம் விரிவாகப் பேசியிருக்கலாமே.

**திரு. முனு ஆதி:** பி.எஃப்., கம்பல்சரி டிபாசிட் எல்லாம் எங்கே போக வேண்டும்? 11—2—1975 அன்று மனு கொடுத்திருக்கிறார்கள். அமைச்சர் இராசாராம் அவர்கள், எனக்குத் தகவல் வரவில்லை என்கிறார். நான், நேரில் வரவில்லை என்றால் என்ன, அவர்களுக்குத் தகவல் கிடைத்தவுடன் நடவடிக்கை எடுக்கலாம் அல்லவா? என்று கேட்க விரும்புகிறேன். பாக்டரி இன்ஸ்பெக்டர் அங்கே போனால் அவருக்கு வேண்டிய பாக்கெட் எல்லாம் கிடைக்கிறது. அவர் தொழிலாளர்கள் நலன் பற்றிக் கருதுவதே யில்லை. இதுவரையில் பாக்டரி இன்ஸ்பெக்டர் அங்கே. . .

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அந்தத் தொழிற்சங்கத் தலைவர் யார்? அவருடைய பிரதிநிதிகள் ஈ.எஸ்.ஐ. கமிட்டியில் இடம் பெற்றிருக்கிறார்களா? அப்படிச் சொல்லியிருந்தால் நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்க முடியும். விஷயம் தெரியாத நிலையில் ஒரு அரசாங்கம் என்ன செய்ய முடியும்?

**திரு. முனு ஆதி:** மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பற்றிய விஷயம் அல்ல. தொழிலாளர் நல அமைச்சர் சம்பந்தப் பட்டது. இந்தப் பிரச்னை.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** உறுப்பினர் சொன்ன ஷூ, பாக், இங்கு வந்து சேரவில்லை. பாக்டரி இன்ஸ்பெக்டர் மீது குற்றச்சாட்டு இருந்தால் அதுபற்றி எங்களிடம் தெரிவிக்கப் பட்டிருந்தால் நாங்கள் நடவடிக்கை எடுத்திருப்போம்.

**திரு. முனு ஆதி:** தொழிலாளர் நல அமைச்சர் மேல் நான் குற்றம் சாட்டவில்லை. அவர் மீது அன்பும் மதிப்பும் உண்டு. ஆனால் உங்கள் இலாகாவில் வேலை செய்கிற அதிகாரி தவறு செய்கிறார் என்கிறேன். முறையாக சம்பளம் கொடுப்பதில்லை. பொங்கல் அட்வான்ஸ் கேட்டால் பொங்கல் கழிந்து 20 நாள்



கழித்துத் தருகிறார்கள். கேட்டால் 'நீ என்ன செய்து கொள்ள வேண்டுமோ செய்து கொள்', "அமைச்சர் என் கையில்" என்கிறார்.

நான் பெரிய குற்றச்சாட்டுகள்—அதாவது பாலிசி சேஞ்ச்—குற்றச்சாட்டுகளையா சொல்கிறேன். தொழிலாளருக்கான நல்வாழ்வுக்குரிய விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை என்றுதான் கூறுகிறேன். எங்களுக்குப் பாதுகாப்பில்லை (குறுக்கீடு) எங்கள் உயிருக்குப் பாதுகாப்பு இருக்கிறதா? (குறுக்கீடு).

உங்கள் கட்சியில் நேற்று வரையில் இருந்த வெங்கா அவர்கள் எங்கள் கட்சிக்கு வந்த உடனே தாக்கப்பட்டிருக்கிறார். இது வரையிலே அந்தக் கத்திக் குத்துச் சம்பவத்தை நீங்கள் யாராவது கண்டித்தீர்களா? நாளைக்கு எங்களுக்குப் பாதுகாப்பு தருவீர்களா?

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்:** உறுப்பினர் அவர்களுக்கு அவர் விரும்பினால் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்படும்.

**திரு. முனு ஆதி:** எப்போது பாதுகாப்பு வேண்டும் என்று எங்களுக்கு எப்படித் தெரியும்? ஜோசியம் தெரியுமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஜோசியம் பார்க்கச் சொல்லவில்லை. உரிய பாதுகாப்பு கிடைக்கும் என்று சொன்னேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** நாட்டிலே சில இடங்களில் தவறான காரியங்கள் நடந்து விடுகின்றன. மத்திய அமைச்சர் எல். என். மிச்ரா அவர்கள் ஒரு நிகழ்ச்சிக்குச் சென்ற இடத்தில் அவருடைய உயிருக்கு ஆபத்து வந்திருக்கிறது. அமைச்சர் களுக்கும் எந்த இடத்திலும் ஆபத்து ஏற்படலாம். எந்த எந்த இடத்தில் பாதுகாப்பு தேவையோ அங்கு எல்லாம் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுத் தான் இருக்கின்றன. பாதுகாப்பு இல்லாத இடத்திலும் உறுப்பினர் பாதுகாப்பு கேட்டால், அவருக்குப் பாதுகாப்பு கொடுக்கப்படும்.

**திரு. முனு ஆதி:** நேற்று நம்முடைய கட்சியில் இருந்தவர் இன்று வேறு கட்சிக்குப் போய் விட்டவுடன் தாக்கப்பட்டிருக்கிறாரே என்று நினைத்து அதற்காக கண்டன அறிவிப்பாவது

கொடுத்தார்களா என்றுதான் கேட்கிறேன். யாராவது, ஒருவராவது அந்தக் கட்சியிலே இருப்பவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டாமா?

**திரு. நா. வீராசாமி:** வெங்கா அவர்கள் குத்தப்பட்ட உடனேயே முதலமைச்சர் அவர்கள் மேலவையில் வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள். நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவையில் வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்கள் தேவை என்று இந்த மாமன்றத்திலே பல முறை சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அமைச்சரவை மீது குற்றம் காண்கின்ற உறுப்பினர் அவர்கள், இந்த அமைச்சரவையிலே இருக்கிற மன்னை நாராயணசாமி அவர்கள் ஒரு பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்கிற நேரத்தில், ஒருவர், மண்டை உடைபட்டது.

MR. DEPUTY SPEAKER: It is entirely another matter.

**திரு. முனு ஆதி:** அதுவும் தவறுதான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வீராசாமி, சொல்ல வேண்டியதை சீக்கிரம் சொல்லுங்கள்.

(பல உறுப்பினர்கள் ஒரே சமயத்தில் பேச எழுந்தனர்).

**திரு. நா. வீராசாமி:** இது ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர். முனு ஆதி அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி ஏதாவது தவறான வார்த்தைகளைச் சொல்லி அது மாலை நேரத்தில் பத்திரிகைகளில் வர வேண்டுமென்று திட்டமிட்டுப் பேசியிருக்கிறார்கள் *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பாயின்ட்டுக்கு வாங்க என்றால் என்னென்னமோ பேசுகிறீர்களே?

**திரு. முனு ஆதி:** (திரு. நா. வீராசாமியைப் பார்த்து) நீங்கள், மட்டும் பத்திரிகைகளில் உள்ள சமாசாரத்தைப் பற்றிப் பேசாமல் வீட்டில் நடக்கிற நிகழ்ச்சியைப் பற்றிப் பேசுகிறீர்களா?

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





(திரு. சுரேந்திரன் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சுரேந்திரன், நீங்கள் உட்காருங்கள்.

(திரு. நா. வீராசாமி எழுந்தார்)

எல்லா உறுப்பினர்களும் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி பிறகு எதை எதையோ பேசுகிறார்கள். எதைச் சொல்வதானாலும் சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

**திரு. நா. வீராசாமி:** என்னுடைய பாயின்ட் ஆப் ஆர்டர் என்னவென்றால், உறுப்பினர் சட்டமன்றத்தில் பேசும்போது ஆதாரத்தோடு குற்றச்சாட்டுகளை வைத்துப் பேச வேண்டும். இதுபற்றி 1964-ல் இந்த சட்டமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பில். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்தத் தீர்ப்பு எல்லாம் எனக்குத் தெரியும். நீங்கள் பாயின்ட் ஆப் ஆர்டருக்கு வாருங்கள்.

THIRU R. PONNAPPA NADAR: Is the hon. member giving a ruling?

(இன்னும் சில உறுப்பினர்கள் எழுந்தார்கள்.)

**திரு. ஆலடி அருணா:** இன்னொரு ஸ்பீக்கர் இங்கே இருக்கிறாரா என்று எனக்குச் சந்தேகமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் வீராசாமி அவர்கள் ஒழுங்குப் பிரச்னை கிளப்பியிருக்கிறார்கள். ஆதாரம் அற்ற முறையில் மன்றத்தில் பேசுவது சபை மரபிற்கு அழகு அல்ல என்று சொல்லியிருக்கிறார். திரு. முனு ஆதி அவர்கள் கூறிய கடுமையான குற்றச்சாட்டுகளை அவைக் குறிப்பிலே முற்பகுதியிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன் * * * * என்று குற்றச்சாட்டை "ஆதாரம் அற்ற முறையிலே

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

சொல்லப்பட்டது" என்று இங்கே அமைச்சர் அவர்கள் மறுத்து இருக்கும் காரணத்தால் அந்தக் கடுமையான குற்றச்சாட்டை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

**திரு. முனு ஆதி :** தலைவரவர்களே, இன்னும் இரண்டு நிமிடங்கள் கொடுங்கள். அதற்குள் முடித்து விடுகிறேன். என்னுடைய நேரத்தில் பெரும்பகுதி குறுக்கீடுகளில் போய் விட்டது. இன்னும் பல சொல்ல வேண்டியிருக்கிறது. இருந்தாலும் ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

முதலமைச்சருடைய வாதங்களில் கருத்து வேறுபாடு இருந்தாலும், அவர் அளிக்கின்ற மதிப்பில், சேவையில் தவறு சொல்லவில்லை. ஆனால், தமிழ்நாட்டில் இருக்கிற கிசிங்கர் தவறு செய்கிறார். அவரால்தான் குழப்பமே ஏற்படுகிறது. அந்த கிசிங்கர் விஷயத்தில் முதலமைச்சர் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஏனென்றால், கிசிங்கர் வந்துதான் நிக்சன் போய் விட்டார். ஆனால், கிசிங்கர் இருக்கிறார். அதைப்போல இந்த கிசிங்கரால் நீங்கள் போய்விடக் கூடாது. நீங்கள் முதலமைச்சராக நீண்டநாள் இருக்க வேண்டும்; கிசிங்கர் இருக்கக்கூடாது. (பலத்த ஆரவாரம்.)

நீங்கள் நீண்டநாள் இருக்க வேண்டுமென்று சொன்னால் ஆட்சியில் இருக்க வேண்டுமென்று சொல்லவில்லை; உங்களுடைய சேவை நாட்டுக்கு வேண்டும். அதற்காகத்தான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** முதலிலே அவருடைய மனதில் உள்ளதைச் சொன்னார். இப்போது அவர் சார்ந்திருக்கிற கட்சியின் காரணமாக அதை மறைத்துச் சொல்கிறார். அவர்கள் முதலமைச்சராகவும் நீண்ட நாள் இருப்பார்கள், நாட்டுக்குச் சேவையும் செய்வார்கள்; இரண்டும் செய்வார்கள்.

**திரு. முனு ஆதி :** நீண்ட நாள் ஆட்சியில் இருக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை; வேகத்தில் அப்படிச் சொல்லியிருந்தாலும் கூட அது தவறு. (சிரிப்பு.) என்னுடைய எண்ணம் முதலமைச்சர் நீடித்து வாழ வேண்டும்; நாட்டுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதுதான்.





**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அவர்கள் கிசிங்கர் என்று சொன்னதை யாரும் தவறாக எண்ணிடத் தேவையில்லை. ஏனென்றால், அவர்தான் இன்று உலகிலே பெரிய சமாதான தூதர் என்று சொல்லப்படுகிறார்.

Thiru B. VENKATASWAMY : Mr. Deputy Speaker, Sir, I thank you for giving me an opportunity to offer a few remarks on the Budget for 1975-76 presented by the Hon. Chief Minister.

The Budget disappoints the ordinary citizens of Tamil Nadu. Though the D.M.K. party has given large promises during the election, the Government's performance is poor afterwards till today. So, people have become disgusted because the promises have not been kept up.

I now come to price rise in respect of essential commodities and also foodgrains. Even though the prices are very high the producer is also not happy because he is not getting a fair price for his produce.

There is unemployment problem in almost all parts of Tamil Nadu. Government must do something regarding the unemployment problem. We do not find any concrete plan to give more employment opportunities to those who are suffering from unemployment.

The Hon. Chief Minister has mentioned about the National Development Council. It has not met for the past 3 or 4 years. Really we regret very much for the same. Nowadays nobody is worried about the economic situation in the country, but they are worried about keeping themselves in office. The economic situation has not been discussed. I do not know how we are going to face the problems in India because of the economic crisis. The economist is telling that the prices have been increasing and people are suffering.

As regards socialism, I do not find in the Budget any concrete plan or scheme or any socialistic measure to reduce the social inequalities.

[Thiru B. Venkataswamy] [1975 March 7

Regarding drought relief, I can say that drought relief is not handled properly by the State and the Centre. The drought relief must be on a war-footing. Otherwise really people will be suffering a lot.

I do not know whether the Government have estimated the loss due to drought conditions in Tamil Nadu. I think the loss will be nearly Rs. 5 or 6 crores due to acute drought this year. In the drought-affected areas the foodgrains supply is very little and drinking water-supply is not adequate. Cattle are being sold away at cheaper prices and no fodder is supplied to the cattle. Cattle are sold away at lower rates.

I come to understand from the President of the Agricultural Association that they have procured some straw from the rich pattadars and from those who are generous in the State and that they have collected straw from Andhra Pradesh also. It seems that a representation has been made to the Hon. Revenue Minister by Mr. Krishnaswami Gounder. He has been supplied straw by generous ryots in Andhra Pradesh and it has to be transported to our State for distribution in the scarcity areas. May I request the Hon. Minister for Revenue to provide some facilities to export the straw and distribute it to the poor classes in the State. I hope the Hon. Minister will consider this request and see that some concession is given to transport straw from Andhra Pradesh and it is distributed to the poor classes.

They want some pressing machines also for transport of the straw because we can transport only one ton of straw if it is loose. If you press it in a machine, we can transport 4 tonnes of straw in one lorry load. So, in this matter I hope the Hon. Chief Minister will take some special steps because if our cattle wealth is lost, we cannot build it. So, we must save the existing cattle by supplying straw. Straw from other States should be supplied through the Government machinery or with Government support to the agriculturists.

I think permanent drought relief should be taken up by this Government. Deep wells through rigs should be dug. Allotment of funds for drought relief is very little, when compared to



1975 மார்ச் 7] [Thiru B. Venkataswamy]

other States. One member from the ruling party was saying that the Centre showed partiality. In this regard nobody should show partiality towards people who are in distress. We are now giving only temporary relief.

I can quote one example in this connection. One creature wants to purchase a woollen rug because it feels that the night is very cold. But in the morning after the sun light it forgets to purchase the woollen rug because of the warmth of the sun. Drought relief works are like that and they are temporary. We are doing something to the people, but afterwards there is no follow-up to improve the standard of living of the people in the drought-affected areas. After little rain we cannot say that there is no drought in the State and people are very happy.

Drought relief works should give permanent advantage to the people. I want the Government to take this matter very seriously. I suggest that a permanent drought relief Minister should be posted in the Ministry. Otherwise, it is highly impossible to attend to drought relief works properly. There are so many Ministers.

People are dying because of drought. Who is responsible for this? All the Ministers are telling that all of them are responsible. But you must fix the responsibility on a Minister and see that he looks after only purely drought relief works in the drought-affected areas. After this drought also we can utilise that Minister to look after the drought-affected areas. Permanent drought relief works can also be entrusted to that Minister, so that people will be very happy. A Minister is having so many portfolios and he cannot look after these drought relief works also. So, I suggest very strongly to the Government to see that a permanent drought relief Minister is posted in the Cabinet. It will be a very good thing for them also, that is, the ruling party to say that they have posted a special Minister for emergency to attend to the drought relief works.

Regarding procurement, it is going on in many places but there is harassment of the ryots by the officials. The procurement price is low. But the price of fertilisers has doubled. Agricultural wages

have also doubled. Even the transport charges have doubled. But what is the increased price that the Government are paying to the ryots? Rs. 5 or Rs. 10. Such being the case, how can you expect the farmers to part with their grains? Even then they are parting with their foodgrains.

There is the Civil Supplies Corporation which is selling the paddy procured from the farmers at double the rate. You can see the fun. As pointed out by Thiru Thangamani, the price paid for sugarcane is only Rs. 100 per tonne. The cost of sugar production including excise duty would come to only Rs. 150 per bag. But the selling rate in the open market is Rs. 450. This shows that the actual sugarcane growers are deprived of their legitimate profit. It has been stated that some rich agriculturists are making a lot of profit. But what about the co-operative sector which is also making a lot of profit. Does it give more money to the ryots? So, the price of sugarcane should be increased and then only they would come forward to grow more sugarcane.

Regarding the spiralling of prices of essential commodities, even the Government officials are not bothered about the increase in their salaries but they want the Government to control the prices. I do not know what concrete steps have been taken by the Government to bring down the prices.

Coming to irrigation projects, I thank the Hon. Minister for Public Works for executing the Doddahalla Project which has been pending for a long time. In this connection, I want to refer to what I have stated in the course of the discussion on the Governor's Address to solve the water problem. A Krishna-Godavari-Couvery Water Board should be formed. Otherwise, there is no salvation for our food requirements in the State and in the country. In this connection, I want to point out that the Karnataka Government which is getting 500 square feet of water from the Krishna, are not utilising it but they are fighting with us by saying that they want Cauvery water for the Kabini Dam and other dams under construction. But actually we are suffering from scarcity of water for agricultural operations. So, I suggest that all the rivers should come under the National Water Board. I would even go to the extent of saying that there should be a Ganga-Cauvery link. Othwise, there is no salvation for the courtry.





Regarding production of electricity, there is no concrete plan mentioned in this Budget. Even in the M.L.A.'s Hostel, we are having frequent failure of electricity and that shows the shortage of electricity. No mention has been made about the execution of the Hogenakkal Hydro-Electric Project which has got great power potential. This project should be implemented by the Government.

As regards industries, I thank this Ministry for setting up an industrial complex at Hosur. We are going to have very good industries in our district. But where is the guarantee that electricity would be supplied to those industries. If it is not made available, our industrialists would go to the Karnataka State where electricity is available in abundance. Regarding acquisition of lands, I requested the then Minister for Revenue, Thiru Sadiq Pasha, that they should pay more for such lands. They are paying only Rs. 2,000 or 3,000 per acre. But in other places they are paying Rs. 10,000 per acre. So I request the present Minister also to pay substantial amount to those ryots who part with their lands. Also they are paying only Rs. 70 or 80 to the workers engaged in the industries established there. I request the Government to fix minimum wages for them.

Also no mention has been about the setting up of small-scale and cottage industries in our district. Small farmers can set up industries like oil-expeller industry. Every house or village should have two or three cottage industries. Otherwise the living standard of our people could not be improved.

Coming to education, no mention has been made about job-oriented education. Now, we are facing so many problems like unemployment problem owing to the present educational system. Even from the primary standards job oriented education should be introduced.

So far as the Medical Department is concerned, the rural medical service is not sufficient. I am given to understand that more mobile vans are functioning in other districts. In our constituency there is only one Mobile Medical van and it is very useful to the people. I request that more such vans should be introduced in our districts.

Coming to loans to backward classes, trade loans are given to the persons belonging to the Scheduled Castes and Tribes but they are not given to the persons belonging to the backward classes. I request that they also should be given such loans.

As regards roads, compared to other districts, the allotment made to the Dharmapuri district is low. We have got a Master Plan for the district, especially for Hosur and Denkanikotta which are hilly areas. Recently, we went to that area and we saw elephants roaming there and that is because there is no road there and the people there will have to walk facing the risk from such animals.

Regarding transport, the present number of buses is insufficient. The private sector is not coming forward to run buses because of the nationalisation policy of the Government. Now buses are crowded like anything and recently in our district there was a bus accident and a person died because of the overcrowding of that bus. So, the Government should see that more buses are introduced there so that people can travel safely.

As regards water supply, there is inadequate supply of water everywhere. The Water and Drainage Board has taken some very good and excellent steps to provide water. But only a sum of Rs. 2 crores has been allotted to the Board. The Government should increase the allotment to the Board because the primary thing is water. I am given to understand that the Secretary of the concerned Department has gone to other States to procure rigs and I hope with these rigs, drinking water would be supplied to the scarcity areas by pumping out the ground water.

(பிற்பகல் 12-30)

Regarding Harijan Housing Corporation, it is doing excellent work and they are building more houses. We want more houses to be constructed in rural areas.

Regarding State Autonomy, I want to offer a few remarks. We also want more powers for the States; that is what Swatantra Party wants. But at the same time, while asking for more powers for State, we oppose State autonomy.

Regarding Jayaprakash movement, Mr. Tangamani was speaking about it in the morning. I want to state that everywhere there is unrest and people want food, clothing and shelter. Mrs. Indira



Gandhi said 'Garibi Hatao' but everywhere we find people suffering. People are frustrated and if out of frustration they raise a hue and cry against the Government, there is no harm. Mr. Jayaprakash is a good leader. Next to Gandhi, he is respected by one and all and his movement against the soaring prices, false promises of the Ruling Party to the poor classes which had never been fulfilled, that movement has to be supported. It is a very good movement. I am glad the ruling party here has also joined in the mammoth procession in Delhi yesterday, led by Jayaprakash. Everywhere we find people frustrated because of soaring prices and what they want is proper food and clothing. They do not have them now. So Mr. Jayaprakashji's movement will succeed and the present corruption, I hope, will soon be removed. Thank you.

***திரு. கே. ரங்கநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்கள் இந்த மாமன்றத்தில் வைத்துள்ள 1975-76-ம் ஆண்டுக்கான பட்ஜட்டை வரவேற்று ஒரு சில கருத்துக்களை நான் கூற விழைகின்றேன்.

மீனவர்களுக்கு வீடு கட்டும் திட்டம், கைத்தறி நெசவாளர்களுக்குச் சேமிப்புப் பாதுகாப்புத் திட்டம் போன்றவைகளை இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் நமது மாநிலத்தில் முதல்வர் அவர்கள் தந்து இருக்கிறார்கள்.

அதேபோல் திக்கற்ற இளஞ்சிறார்களுக்கும் ஆதரவற்ற விதவைகளுக்குமாக புதிய திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள்.

அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சி நிறுவன ஊழியர்கள் ஆகிய 7 லட்சம் பேர்கள் பயன்படக்கூடிய திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள்.

மின்துறையை எடுத்துக்கொண்டால், 110 மெகாவாட் திறன் கொண்ட மற்றொரு பிரிவை அமைக்கும் திட்டத்தையும் உருவாக்கியிருக்கிறார்கள்.

14 லட்சம் செலவில் 2,000 ஆசிரியர்களைக் கூடுதலாக நியமிக்கும் திட்டத்தையும் உருவாக்கியிருக்கிறார்கள்.

இப்படி நாட்டுக்குத் தேவையான பல திட்டங்களையெல்லாம் உருவாக்கியிருக்கிறார்கள். மக்கள் இந்தப் பட்ஜெட்டை வரப்பிரசாதமாக வரவேற்பார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. கே. ரங்கநாதன்] [1975 மார்ச் 7

கோவை நகரில் தனியார் பஸ்கள் நடத்தப்பட்டன. சி. வி. கே., டி. பி. டி., டி. என். டி., எச். எம். எச். எஸ். ஆர். டி. எஸ்., அசோகன், வி. ஆர். டி. ஆகிய இந்த பஸ் கம்பெனிகளை இரண்டு வருடங்களுக்கு முன்பு மூடி விட்டார்கள். அதனால் 300 பேர் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இந்த பஸ் கம்பெனிகளின் வழித் தடங்களில் சேரன் போக்குவரத்து வண்டி ஓடிக் கொண்டிருக்கிறது. அதில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு தரும்படி கேட்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு அதில் வேலை வாய்ப்பு அளிக்கும்படி நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் கோவையில் உள்ள டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் பஞ்சாலைகள் நல்ல முறையில் நடந்துகொண்டிருக்கிற நேரத்தில் மத்திய அரசு எடுத்திருக்கிறது. அதை மீண்டும் மத்திய அரசிடமிருந்து தமிழக அரசு எடுத்துக்கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாலையிலிருந்து நின்று விட்ட தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய கிராஜுவட்டி, பி.எப். பணம் தரப்படவில்லை. அதைத் தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கோவை நகரம் மிகவும் மக்கள் தொகை கொண்டது. அங்கே ஒரே ஒரு மருத்துவமனைதான் இருக்கிறது. அந்த மருத்துவ மனைக்கு இடவசதி போதவில்லை. ஆகவே, வடகோவையில் ஒரு மருத்துவ மனை கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பாப்பாநாய்க்கன்பாளையம், கணபதி, கிருஷ்ணராயபுரம், சங்கனூர் ஆகிய இடங்களில் பள்ளம் இருக்கிறது. மழை வந்து விட்டால் நடக்க முடிவதில்லை. ஆகவே, இவ்விடங்களில் மேம்பாலம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி டாடாபேட், அம்மன்குளம், சங்கனூர் பள்ளம், சாஸ்திரி நகர் ஆகிய இடங்களில் உள்ள மக்களுக்கு வீட்டு மனை பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அவிநாசி ரோடில் ஒரு சிறிய பாலம் இருக்கிறது. மழைக் காலத்தில் தண்ணீர் வந்துவிட்டால் வீடுகளில் புகுந்து விடுகிறது. போக முடிவதில்லை. ஆகவே, பாலத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1975 மார்ச் 7] [திரு. கே. ரங்கநாதன்]

அடுத்து, கோவை நகருக்கு நாள் ஒன்றுக்கு 30 லட்சம் காலன் தண்ணீர் தருவதற்கு 1.71 கோடி ரூபாய் செலவிட திட்டமொன்று உருவாக்கி இருப்பதற்கு கோவை நகராட்சி சார்பில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு கோவை மாவட்டத்தில் உள்ள மில் தொழிலாளர்கள் போனஸ் கிடைக்காமையால் மிகுந்த கொந்தளிப் போடு இருந்த நேரத்தில், நம்முடைய முதல்வர் அவர்களும் தொழிலாளர் அமைச்சர் அவர்களும் வந்து, ஒரு நாள் முழுவதும் அமர்ந்து, அந்தப் பிரச்சினையை நல்ல முறையில் முடித்துத் தந்தமைக்காக தொழிலாளர்கள் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் நிதி நிலை அறிக்கையைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்றால், மக்கள் பாதிக்கப்படக்கூடிய அளவுக்கு எந்தவிதமான வரியும் இல்லை. ஆனால், மத்திய அரசாங்கத்தின் வரிகள்தான் அதிகமாக இருக்கின்றன.

1969-70-ல் எக்சைஸ் வரி 1,500 கோடி ரூபாயாக இருந்தது. அதை இப்போது 1975-76-ல் 3,500 கோடி ரூபாயாக உயர்த்தியிருக் கிறார்கள்.

அதே போல் 1969-70-ல் சர்க்கரைக்கு 100 கோடி ரூபாய் வரி யாக இருந்தது. இப்போது அதை 300 கோடி ரூபாயாக உயர்த்தி யிருக்கிறார்கள்.

புகையிலை மீது 1969-70-ல் 200 கோடி ரூபாய் வரியாக இருந்தது. 1975-76-ல் 400 கோடிக்கு மேல் வரியாக உயர்த்தியிருக்கிறார்கள்.

டீசல் ஆயில் மீது 1969-70-ல் மொத்தம் 240 கோடி ரூபாய் வரி யாக இருந்தது. 1975-76-ல் 340 கோடி ரூபாயாக வரி உயர்த்தி யிருக்கிறார்கள்.

மண்ணெண்ணெய் 1969-70-ல் 90 கோடி ரூபாய் வரியாக இருந்தது. 1975-76-ல் 190 கோடிக்கு வரி உயர்த்தியிருக்கிறார்கள்.

மோட்டார் ஸ்பிரிட் 1969-70-ல் 100 கோடி ரூபாய் வரியாக இருந்ததை, 1975-76-ல் 400 கோடி ரூபாய்க்கு வரி உயர்த்தியிருக் கிறார்கள்.

[திரு. கே. ரங்கநாதன்] [1975 மார்ச் 7

பெட்ரோலியத்திலிருந்து கிடைக்கும் வேறு பொருள்கள் மீது 1969-70-ல் 40 கோடி ரூபாய் வரியாக இருந்தது. 1975-76-ல் ஏறக்குறைய 150 கோடிக்கு உயர்த்தியிருக்கிறார்கள்.

அயர்ன் அண்டு ஸ்டீல் மீது 1969-70-ல் 60 கோடி ரூபாய் வரியாக இருந்தது. அதை 1975-76-ல் 150 கோடி ரூபாய் வரியாக உயர்த்தியிருக்கிறார்கள்.

அதே போல், பருத்தி நூல் துணிகள் மீது 1969-70-ல் 75 கோடி ரூபாய் வரியாக இருந்ததை 1975-76-ல் 150 கோடி ரூபாய்க்கு வரி உயர்த்தியிருக்கிறார்கள்.

ரேயான், மற்றும் செயற்கை நூல் துணிகள் மீது 1969-70-ல் 80 கோடி ரூபாய் வரியாக இருந்தது. அதை இப்போது 1975-76-ல் 200 கோடி ரூபாய்க்கு உயர்த்தியிருக்கிறார்கள்.

டயர், டியூப் மீது 1969-70-ல் 40 கோடிக்கு மேல் வரியாக இருந்தது. 1975-76-ல் 140 கோடி ரூபாய்க்கு வரி உயர்த்தியிருக்கிறார்கள்.

1969-70-ல் சிமெண்டுக்கு 40 கோடிக்கு மேல் வரி இருந்ததையும் 1975-76-ல் 100 கோடி ரூபாய்க்கு உயர்த்தியிருக்கிறார்கள்.

மோட்டார் வாகனங்கள் மீது 1969-70-ல் 20 கோடி ரூபாய் வரியாக இருந்தது. அதை 1975-76-ல் 70 கோடி ரூபாய்க்கு உயர்த்தியிருக்கிறார்கள்.

அதே போல் அலுமினியத்தை டன் ஒன்றுக்கு 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். காப்பரை எடுத்துக் கொண்டால் 3,500 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். காப்பர், அலுமினியம் ஆகிய இரண்டுமே தொழிற்சாலைகளுக்குப் பயன்படுகின்றன. விவசாயிகள் உபயோகிக்கக்கூடிய மோட்டார்களைத் தயாரிப்பதற்கு இவை தேவைப்படுகின்றன. அத்தகைய மோட்டார்களைத் தயாரிப்பவர்களும் இந்த விலை உயர்வை விவசாயப் பெருங்குடி மக்கள் மீதுதான் சுமத்தப் போகிறார்கள். மத்திய அரசாங்கத்தின் வரிக் கொள்கையால் தொழிற்சாலைகளுக்கு கேடு விளைகின்ற நிலை தான் ஏற்படுகிறது.



1975 மார்ச் 7] [திரு. கே. ரங்கநாதன்]

தமிழகத்தில் இருக்கின்ற நிலவள வங்கிகள் மூலமாக மோட்டார் பம்பு செட்டுகள் வாங்குவதற்குக் கடன் கொடுக்கிறபோது ஐ.எஸ்.ஐ. மார்க் உள்ள மோட்டார்களை வாங்கினால்தான் கடன் கொடுக்கப்படும் என்கிறார்கள். ஐ.எஸ்.ஐ. மார்க் உள்ள மோட்டார்களை வாங்க வேண்டும் என்று சொன்னால் குறைந்தது 50 ஆயிரம் ரூபாய் செலவாகும். அதுவும் ஐ.எஸ்.ஐ. மார்க் உள்ள மோட்டார்களை வாங்க வேண்டும் என்று சொன்னால், 3, 4 கம்பெனிகளில் தான் வாங்க முடியும். அது போன்று இல்லாமல், மோட்டார்களை உற்பத்தி செய்கின்ற சிறு சிறு கம்பெனிகளிடமிருந்து வாங்கிக் கொள்வதற்காக இந்த விதியைத் தளர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் இங்கே முதல்வர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். மாநில சுயாட்சிக்காக 10 ஆண்டுக் காலம், 20 ஆண்டுக்காலம் நாங்கள் சிறை செல்லத் தயார் என்று சொன்னார்கள். அவரை 10 ஆண்டுக்காலம், 20 ஆண்டுக் காலம் சிறைச்சாலையிலே வைத்து வேடிக்கைப் பார்க்க நாங்கள் எல்லாம் கோழைகள் அல்ல, தமிழகத்து மக்கள் கோழைகள் அல்ல என்று கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. இ. எஸ். தியாகராசன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அளித்துள்ள 1975-76-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து, தமிழரசுக் கழகத்தின் கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த அறிக்கையிலே முக்கியமான கருத்தாக உள்ளது மாநில சுயாட்சி என்பதாகும். இதை எங்கள் தலைவர் ம. பொ. சி. அவர்கள் விளக்கமாகப் பலமுறை கூறியுள்ளதால், அதைப்பற்றி அதிகம் விளக்க வேண்டியதில்லை யென்றே கருதுகிறேன்.

அடுத்தபடியாக, இன்றையதினம் டாக்டர் முதல்வர் அவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையிலே தமிழ் வளர்ச்சிக்காக ரூ. 70 இலட்சம் ஒதுக்கி இருப்பது உண்மையிலே மகிழ்ச்சி கொள்ள வேண்டிய ஒன்றாகும். திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றுக் கொண்டபிறகு தமிழ் வளர்ச்சி நல்ல முறையிலே நடைபெறுகிறது என்பதை நாம் மறந்து விடக் கூடாது. அதே நேரத்திலே, தமிழ் வளர்ச்சிக்காக ஒரு வாரியத்தை அமைத்து

தமிழ் வளர்ச்சி பெற நல்ல வாய்ப்பிருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் வறட்சியைப் போக்குவதற்காக, நமது அரசு ரூ. 57 கோடி செலவிடவும், அதற்காக மத்திய அரசிடமிருந்து ரூ. 30 கோடி பெறுவதற்காக தக்க முயற்சி எடுத்துக் கொண்டதற்காகவும் நம்முடைய அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ரூ. 30 கோடி வருவதோடு மட்டுமல்லாமல், மேலும் அதிகமான பணத்தை வாங்கி வறட்சிப் பணி நடவடிக்கைகளைத் தீவிரமாய் எடுக்க வேண்டுமாய்த் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மையிலே உணவு நெருக்கடியைப் போக்கப் பல நல்ல முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருவதற்காக டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமங்களிலே, இன்றையதினம் நீர்ப்பற்றுக்குறையின் காரணமாக, இருந்த பயிர்கள் எல்லாம் கருகி விட்டதன் காரணமாக, கிராமத்திலேயுள்ள ஏழை எளியவர்களுக்கு உணவு தானியங்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி, அவர்களுக்கிருக்கிற நெருக்கடியை போக்க கிராமங்களிலே உணவுதானியம் கொடுக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏழை நெசவாளர்கள் வாழ்கின்ற பகுதியிலேயெல்லாம் உணவு தானியங்களுக்கு நெருக்கடி இருக்கிறது. அதைப் போக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிணறு தோண்டுவதற்கு, நில வள வங்கிகளிடமிருந்து கடன் வாங்குவதிலே உள்ள பல சிக்கலான நிலைமைகளை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். 450 அடிக்கு மத்தியிலே கிணறு தோண்டவோ, அல்லது ஆழப்படுத்தவோ கூடாது என்று ரிசர்வ் பேங்க் கட்டளையின் விளைவால், விவசாயிகள் ரொம்பவும் துன்பப் படுகிறார்கள். எனவே, அதைப் போக்க





நமது அரசு, மத்திய அரசோடு பேசி, எடுத்துச் சொல்லி, அந்தக் கட்டுப்பாட்டை நீக்க ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே டாக்டர் முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய திருத்தணி தொகுதியிலே சிறு பாசனத் திட்டங்கள் பலவற்றை ஆழப்படுத்த வேண்டியிருக்கிறது. அதற்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த இரண்டுமூன்று ஆண்டுகளாக, என்னுடைய தொகுதியிலே முக்கியமான அகலக்கோடா, தெர்க்கோடா என்ற இரண்டு புதிய ஏரிகளைப் போட வேண்டுமென்று நான் கூறி வந்திருக்கிறேன். நமது அரசு கருணை கூர்ந்து இந்த ஆண்டாவது அவற்றை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எனது திருத்தணி பகுதி ஆந்திராவோடு சேர்ந்திருந்த பொழுது ஜமீன் ஏரிகள் சீரமைக்கப்படாமலிருந்து வருகின்றன. அவைகளைச் சீரமைக்கும் வகையிலே, இவ்வாண்டு திட்டத்திலே, சில ஏரிகளையாவது எடுத்துக்கொண்டு சீரமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

விசையேற்றங்களுக்கு, விவசாயிகளுக்கு மின் இணைப்பு தரும்பொழுது, 5, 6 கம்பங்களில்லாத காரணத்தால், இடையிலேயுள்ள தூரத்தைக் கணக்கில் எடுத்து, சர்வீஸ் தராமலிருப்பதால் ஓராண்டுக் காலம், இரண்டாண்டுக்காலம், என்று ஆண்டுக் கணக்காகக் கூட தாமதம் ஏற்படுகிறது. அதற்குத் தக்க நடவடிக்கையை எடுத்து, விவசாயிகளுக்காவது, விதிவிலக்கு அளித்து, இலாப நஷ்டம் பார்க்காமல், மின் இணைப்பு அளிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டிலே, தொழில் வளர்ச்சி உண்மையிலேயே மிகப் பாராட்டுக்குரிய வகையிலே இருந்து வருகிறது. அந்த வளர்ச்சிக்காக மேலும் ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, திருத்தணி வட்டத்திலே நல்லதொரு தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருத்தணியிலே கூட்டுறவு சர்க்கரை ஆலை வேண்டுமென்று பல்லாண்டு காலமாக கேட்டு வருகிறோம். அதையும் இந்த ஆண்டே தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. இ. எஸ். தியாகராசன்] [1075 மார்ச் 7

கல்வி வளர்ச்சிக்காகப் பெரும் பணத்தைத் தமிழக அரசு ஒதுக்கியிருக்கிறது. அதற்காகத் தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எங்களுடைய திருத்தணிக் கலைக் கல்லூரிக்குப் புதிய கட்டிடம் வேண்டுமென்று முன்னாலே கேட்டதை இந்த நேரத்திலே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அத்துடன், அக்கல்லூரியில், பட்டப் படிப்பு வகுப்பைத் துவக்க வேண்டுமென்று முன்பு கேட்டதையும் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆயிரக்கணக்கான மக்கள் முருகனைத் தரிசிக்க திருத்தணிக்கு வருகிறார்கள். அந்த பக்தர்கள், அங்கு, ரெயில்வே மேம்பாலம் ஒன்று இல்லாததால், மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அங்கு ஒரு ரெயில்வே மேம்பாலம் கட்ட அரசு முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர் பாதுகாப்புத் திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்திருப்பது எந்த மாநிலமும் செய்யாத அருமையான திட்டம். அந்தத் திட்டத்தை வரவேற்பதோடு மட்டுமல்லாமல், அதன்மூலம் நெசவாளர்கள் பயன் அடைவார்கள் என்பதையும் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், இன்றையதினம் ஏழை நெசவாளர்களுக்கு ஒரு வாரியம் உண்டுபண்ணி, அந்த வாரியத்தின் மூலமாக, நெசவாளர்களுக்கு வேண்டிய நூலைக் கொள்முதல் செய்து, நெசவாளர்களுக்கு அளிப்பார்களானால், இன்றையதினம் நெசவாளர்கள் படுகின்ற பெரும் துன்பத்தை நீக்க நல்ல உதவியாக இருக்கும் என்று இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே குடிநீர் வசதியில்லாமல் பல கிராமங்கள் அவதிப்படுகின்றன. பெதட்டூர்பேட்டை என்ற பகுதிக்கு எப்படியும் குடிநீர் வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

*** திருமதி த. ந. அனந்தநாயகி :** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, இந்த வரவு-செலவுத் திட்டத்திலே ஒருசில கருத்துக்களை நான் வைக்க ஆசைப்படுகிறேன்.



1975 மார்ச் 7] [திருமதி த. ந. அனந்தநாயகி]

இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் படித்துப் பார்க்கும் பொழுது, முதலிலே சில பக்கங்களிலே பஞ்சப் பாட்டுப் பாடுகிறார்கள். அப்புறம் சில பக்கங்களிலே, கெஞ்சத் துவங்கிவிட்டார்கள். கடைசி சில பக்கங்களிலே மிஞ்சப் பார்க்கிறார்கள். இத்தனையையும் தாராளிட்டால் என்ன நடக்கும் என்று மிரட்டிப் பார்க்கிறார்கள். தற்பொழுது நாட்டில் உள்ள பிரச்னை என்ன? மக்களுடைய பிரச்னை என்ன? அவைகளைத் தீர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? என்ன திட்டம் தீட்டி இருக்கிறோம்? என்பதைப்பற்றி, ஒரு வரிகூட காணவில்லை என்பதைத்தான் நான் மிக்க வருத்தத்தோடு சொல்ல ஆசைப்படுகிறேன்.

மாநில சுயாட்சி என்ற கோஷத்தை ஏற்படுத்தி, 1976 தேர்தலுக்குக் கையிலே எது கிடைக்கும் என்று பார்த்து எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். 1967-71-லே, 3 படி அரிசி போடுவோம் என்று சொல்லி வந்த உங்கள் ஆட்சியின் 9 ஆண்டுக்கால சாதனையிலே, இன்றைக்கு 3 பிடி அரிசிக்குத் தெருத்தெருவாக அலைந்து கொண்டிருக்கிறார்கள், மக்கள். குடிக்கத் தண்ணீர் இல்லாமல் அலைந்து கொண்டிருக்கிறார்கள். வேலை வாய்ப்பு கிடைக்காமல், படித்தவர்கள், பட்டதாரிகள், வீதிவீதியாகத் திரிந்து கொண்டிருக்கிறார்கள். நெசவாளர்கள் நசிந்துகொண்டிருக்கிறார்கள். தொழிலாளி வேலையில்லாமல், ஒன்று லே ஆஃப், அல்லது, லாக் அவுட், அல்லது ஸ்டிரைக் என்ற முறையில் இருந்து கொண்டிருக்கிறான். உணவுதானியங்கள் கிடையாது, மின்சாரம் கிடையாது, இப்படி எல்லாம் பற்றாக்குறை.

இப்படிப்பட்ட உங்களுடைய 9 ஆண்டுக்கால சாதனையிலே, தேர்தலை எப்படி சமாளிப்பது என்ற காரணத்தாலேதான், எப்படியாவது எதையாவது பிடிக்கவேண்டுமென்று, இதைப் பிடித்திருக்கிறீர்கள். முன்னாலே, இந்தச் சட்டசபையிலே, எங்கள் கனம் முதலமைச்சரவர்கள் முஜிபர் ரகுமான் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது திடீர் திடீரென்று ஷேக் அப்துல்லா என்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். அரசியல்பற்றிய ஆழ்ந்த கருத்துக்களற்ற முறையில் பேசிக்கொண்டிருக்கிறார்கள். உங்களுக்குக் குல்லா மாட்டிக் கொள்ள வேண்டுமென்று ஆசையிருந்தால்—ஆசைப்பட்டால், நான் வாங்கிக் கொடுக்கிறேன், மாட்டிக் கொள்ளுங்கள்.

[திரு. இ. எஸ். தியாகராசன்] [1975 மார்ச் 7

கல்வி வளர்ச்சிக்காகப் பெரும் பணத்தைத் தமிழக அரசு ஒதுக்கியிருக்கிறது. அதற்காகத் தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எங்களுடைய திருத்தணிக் கலைக் கல்லூரிக்குப் புதிய கட்டிடம் வேண்டுமென்று முன்னாலே கேட்டதை இந்த நேரத்திலே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அத்துடன், அக்கல்லூரியில், பட்டப் படிப்பு வகுப்பைத் துவக்க வேண்டுமென்று முன்பு கேட்டதையும் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆயிரக்கணக்கான மக்கள் முருகனைத் தரிசிக்க திருத்தணிக்கு வருகிறார்கள். அந்த பக்தர்கள், அங்கு, ரெயில்வே மேம்பாலம் ஒன்று இல்லாததால், மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அங்கு ஒரு ரெயில்வே மேம்பாலம் கட்ட அரசு முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர் பாதுகாப்புத் திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்திருப்பது எந்த மாநிலமும் செய்யாத அருமையான திட்டம். அந்தத் திட்டத்தை வரவேற்பதோடு மட்டுமல்லாமல், அதன்மூலம் நெசவாளர்கள் பயன் அடைவார்கள் என்பதையும் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், இன்றையதினம் ஏழை நெசவாளர்களுக்கு ஒரு வாரியம் உண்டுபண்ணி, அந்த வாரியத்தின் மூலமாக, நெசவாளர்களுக்கு வேண்டிய நூலைக் கொள்முதல் செய்து, நெசவாளர்களுக்கு அளிப்பார்களானால், இன்றையதினம் நெசவாளர்கள் படுகின்ற பெரும் துன்பத்தை நீக்க நல்ல உதவியாக இருக்கும் என்று இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே குடிநீர் வசதியில்லாமல் பல கிராமங்கள் அவதிப்படுகின்றன. பெதட்டூர்பேட்டை என்ற பகுதிக்கு எப்படியும் குடிநீர் வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, இந்த வரவு-செலவுத் திட்டத்திலே ஒருசில கருத்துக்களை நான் வைக்க ஆசைப்படுகிறேன்.



1975 மார்ச் 7] [திருமதி த. ந. அனந்தநாயகி]

இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் படித்துப் பார்க்கும் பொழுது, முதலிலே சில பக்கங்களிலே பஞ்சப் பாட்டுப் பாடுகிறார்கள். அப்புறம் சில பக்கங்களிலே, கெஞ்சத் துவங்கிவிட்டார்கள். கடைசி சில பக்கங்களிலே மிஞ்சப் பார்க்கிறார்கள். இத்தனையையும் தாராவிட்டால் என்ன நடக்கும் என்று மிரட்டிப் பார்க்கிறார்கள். தற்பொழுது நாட்டில் உள்ள பிரச்னை என்ன? மக்களுடைய பிரச்னை என்ன? அவைகளைத் தீர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? என்ன திட்டம் தீட்டி இருக்கிறோம்? என்பதைப்பற்றி, ஒரு வரிகூட காணவில்லை என்பதைத்தான் நான் மிக்க வருத்தத்தோடு சொல்ல ஆசைப்படுகிறேன்.

மாநில சுயாட்சி என்ற கோஷத்தை ஏற்படுத்தி, 1976 தேர்தலுக்குக் கையிலே எது கிடைக்கும் என்று பார்த்து எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். 1967-71-லே, 3 படி அரிசி போடுவோம் என்று சொல்லி வந்த உங்கள் ஆட்சியின் 9 ஆண்டுக்கால சாதனையிலே, இன்றைக்கு 3 பிடி அரிசிக்குத் தெருத்தெருவாக அலைந்து கொண்டிருக்கிறார்கள், மக்கள். குடிக்கத் தண்ணீர் இல்லாமல் அலைந்து கொண்டிருக்கிறார்கள். வேலை வாய்ப்பு கிடைக்காமல், படித்தவர்கள், பட்டதாரிகள், வீதிவீதியாகத் திரிந்து கொண்டிருக்கிறார்கள். நெசவாளர்கள் நசிந்துகொண்டிருக்கிறார்கள். தொழிலாளி வேலையில்லாமல், ஒன்று லே ஆஃப், அல்லது, லாக் அவுட், அல்லது ஸ்டிரைக் என்ற முறையில் இருந்து கொண்டிருக்கிறான். உணவுதானியங்கள் கிடையாது, மின்சாரம் கிடையாது, இப்படி எல்லாம் பற்றாக்குறை.

இப்படிப்பட்ட உங்களுடைய 9 ஆண்டுக்கால சாதனையிலே, தேர்தலை எப்படி சமாளிப்பது என்ற காரணத்தாலேதான், எப்படியாவது எதையாவது பிடிக்கவேண்டுமென்று, இதைப் பிடித்திருக்கிறீர்கள். முன்னாலே, இந்தச் சட்டசபையிலே, எங்கள் கனம் முதலமைச்சரவர்கள் முஜிபர் ரகுமான் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது திடீர் திடீரென்று ஷேக் அப்துல்லா என்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். அரசியல்பற்றிய ஆழ்ந்த கருத்துக்களற்ற முறையில் பேசிக்கொண்டிருக்கிறார்கள். உங்களுக்குக் குல்லா மாட்டிக் கொள்ள வேண்டுமென்று ஆசையிருந்தால்—ஆசைப்பட்டால், நான் வாங்கிக் கொடுக்கிறேன், மாட்டிக் கொள்ளுங்கள்.

[1975 மார்ச் 7

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** குல்லாவிலே ஆசையிருந்தால், வாங்கித் தருகிறேன், போட்டுக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். அவர்கள் பலபேருக்குக் குல்லா போடுவார்கள் என்று எங்களுக்குத் தெரியும். மாநில சுயாட்சித் தேவையென்று சொல்கின்ற எங்களுக்குக் குல்லா போடுவது எவ்வளவு சாதாரணமாக இருக்கிறதோ, அவ்வளவு சாதாரணமாக ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்கள் கொள்கையைச் சொல்கிறார்கள்.

**திரு. கே. எ. வகாப் :** அம்மையார் அவர்கள் குல்லா போடுவது பற்றிச் சொல்கிறார்கள், குல்லா போடுவது என்றால் குறைவாக நினைக்கிறார? அது மிகவும் கௌரவமானது, பண்புள்ளது என்பதைத் தெரிந்திருப்பார்கள் என்று நம்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நான் அப்படிச் சொல்லவில்லை. அமைச்சர்தான் குறைவாகச் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தங்களுக்குத் தாங்களே குல்லாப் போட்டுக் கொள்வது பெருமை, ஆனால் அடுத்தவருக்குப் போடுவது நல்லதல்ல.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** உங்களுக்கு நீங்களே போட்டுக் கொள்ளுங்கள் என்று தான் சொன்னேன், குல்லா வேண்டுமானால் நான் யாரிடமாவது வாங்கித் தருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** குல்லா வேண்டுமானால் வாங்கித் தருகிறேன் என்று சொன்னார்கள். யாரிடம் வாங்கித் தரப்போகிறார்கள்? வாங்கித்தந்தால் இப்போதேகூட போட்டுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பக்கத்திலே இருக்கிற முஸ்லீம் லீக் உறுப்பினர்களிடம் வாங்கித் தருகிறேன், நன்கொடையாக வாங்கித் தருகிறேன். வேண்டுமானால் போட்டுக் கொள்ளுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** வாங்கிக் கொடுத்தால் போட்டுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஏனென்றால் இப்போது குல்லாவுக்குத்தான் பெருமை.



1975 மார்ச் 7]

**திருமதி த. ந. அனந்தநாயகி :** முஜ்பீர் ரஹ்மான், முஜ்பீர் ரஹ்மான் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள், இப்போது ஷேக் அப்துல்லா, ஷேக் அப்துல்லா என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த இரண்டு நாட்களாகப் பத்திரிகைகளிலே பார்த்தால் சிறைசெல்லத் தயாராக இருப்பதாக—ஏதோ தியாகம் இவருக்காகக் காத்துக்கொண்டிருப்பது மாதிரி—சிறைச்சாலைக்குப் போகத் தயாராக இருப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். சட்டசபையிலே வந்தால் இல்லை, இல்லை அரசியல் சட்டத்திற்குட்பட்டுத்தான் நான் நடப்பேன், முதலமைச்சர் என்ற பதவிக்குட்பட்டுத்தான் இருக்கிறேன், என்று சொல்கிறார்கள், வெளியிலே அந்தமாதிரிச் சொல்கிறார்கள். இப்படி இடத்திற்கு இடம் மாறி மாறி ஒரு பொறுப்புள்ள கனம் முதலமைச்சர் பேசுவாரானால்...

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இடத்திற்கு இடம் மாறி மாறிப் பேசுகிறேன் என்று சொன்னதால் நான் விளக்கம்தர வேண்டியவனாக இருக்கிறேன். மாநிலசுயாட்சி வேண்டுமென்று இந்த அவையிலே தீர்மானம் போடப்பட்டது. அந்தத் தீர்மானத்தை பெரும்பாலானவர்கள் ஆதரித்தார்கள், அந்தத் தீர்மானம் இங்கே நிறைவேற்றப்பட்டது. ஆகவே, மாநில சுயாட்சி வெளியிலே மட்டும் கேட்டுவிட்டு சட்டசபையில் கேட்கவில்லை என்று சொல்வது தவறானது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அரசியல் சட்டம் பிடிக்கவில்லை, அதை எதிர்க்கிறோம், அது தேவையில்லை என்று சொல்லி அதற்காக சிறைசெல்வேன் என்று சொன்னால் முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்துவிடுங்கள். பதவியிலே உட்கார்ந்து கொண்டே . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** திரு. மலைக்கண்ணன் அவர்கள் இங்கே பேசியபோது திரு. எ. ஆர். மாரிமுத்து அவர்கள்—உங்கள் தலைவர், துணைத் தலைவர் எப்படிப்பட்ட வேறுபாடு இருக்கிறதோ எனக்குத் தெரியாது—இடைமறித்துக் கேட்டார்கள், அப்படியானால் முதல்மைச்சர் ஷேக் அப்துல்லா போல் சிறைசெல்ல வேண்டுமா என்று. நான் சொன்னேன், ஒரு லட்சியத்தை அடைவதற்காக சிறைசெல்லத் தயாராக இருக்கிறேன் என்று சொன்னேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அப்படியானல் பதவி எதற்கு? பதவியை தூக்கியெறிந்துவிட்டு வாருங்கள் போராடுவோம் . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** வாருங்கள் போராடு வோம் என்று சொல்கிருர்கள். அம்மையார் அவர்கள் கூட வருகிறேன் என்று சொன்னதற்காக நன்றி.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பதவியை விட்டு வாருங்கள் போராட வருகிறேம். பதவியைத் தூக்கி எறியுங்கள். பதவியில் இருந்துகொண்டு இல்லை இல்லை அப்படிச் சொல்லவில்லை, வழி மறித்துச் சொன்னேன், இடைமறித்துச் சொன்னேன் என்று எதற்காகச் சொல்லவேண்டும்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் எதற்காக பேசினேன் என்ற சந்தர்ப்பத்தை விளக்குவது நல்லது என்பதற் காகத்தான் சொன்னேன். மாநில சுயாட்சியை அடைவதற்காக பதவியைத் தூக்கியெறிந்துவிட்டு சிறைக்குச் செல்வதற்கு தி.மு.க. தலைவர்களும் தொண்டர்களும் தயாராக இருக்கிருர்கள். (கரவொலி.)

**திருமதி த. ந. அனந்தநாயகி :** என்ன சுயாட்சி கேட்கிறீர்கள் அது தெரியவில்லை. சிறை போகிறேன் என்று சொல்வது வோட் வாங்குவதற்காகத்தான் பேசுவது. ஐந்து நாட்களாக சட்ட சபையில் விவாதித்தோம். கவர்னர் வேண்டாமென்று சொல் னீர்கள். பாண்டிச்சேரியிலே அது எவ்வளவு அவசியம் என்று சுட்டிக் காட்டினேம். மேலவை வேண்டாம் என்று சொன்னீர்கள். மேலவை வேண்டாமென்று நீங்களே தீர்மானம் போட்டு நிறை வேற்றி மத்திய அரசாங்கத்திற்கு அனுப்புங்கள், அது நிறை வேற்றுகிறதா இல்லையா என்று பார்ப்போம். உங்களிடம் இருக்கிற அதிகாரங்களை வைத்து என்ன செய்கிறீர்கள்? சொத்து பத்து இல்லாத தாண்டவராயனுக்குப் பெர்மிட் கொடுத்தீர்கள், மத்திய அரசாங்கமாக அதைச் செய்யச் சொன்னது? ஆயிரக்கணக்கான மூட்டை நெல் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு விட்டது என்று சொன்ன அப்துல் சலாம் என்பவருக்கு காண்ட்ராக்ட் கொடுத்தீர்கள். மத்திய சர்க்காரா கொடுக்கச் சொன்னது? வழக் காடிக்கொண்டிருக்கிற பாரஸ்ட் ஆபீஸரை திரும்பவும் அங்கேயே போட்டு கொள்ளை அடிக்கக்கூடிய நிலைமையை மத்திய சர்க்கார் செய்யச்சொன்னது?



**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** நான் இல்லாதபோது அப்படியொரு பிரச்னை எழுப்பப்பட்டதாகக் கேள்விப்பட்டேன். எந்த அதிகாரியையும் மாற்றியவரை திரும்பவும் அங்கேயே போட வில்லை. இல்லாத ஒன்றைத் திருப்பித் திருப்பிச் சொல்வது சரியல்ல. மாற்றியவரை அங்கேயே திருப்பிப் போடவில்லை. அவர்கள் அதை இல்லையென்று சொன்னல், நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தஞ்சை மாவட்டத்திலிருந்து லாரி லாரியாக நெல், அரிசி கடத்தப்பட்டதே அதை மத்திய சர்க்கார் சொல்லிக்கொடுத்தார்களா? இப்படி இருக்கிற அதிகாரத் தையே துஷ்பிரயோகம் செய்துகொண்டிருக்கிறீர்கள் நீங்கள். ஒரு கிலோ அரிசி 6 ரூபாய், 7 ரூபாய்க்கு வாங்க வேண்டியிருக் கிறது. மத்திய அரசாங்கமா அப்படிச் செய்யவேண்டுமென்று சொன்னது? எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்கார் அதிகாரத்தை வைத்து இருக்கிறது என்று சொல்வதை நினைக்கும்போது சிரிப்புத்தான் வருகிறது. உண்மையிலேயே பிரச்னைகளைப் புரிந்து கொண்டு அவற்றைத் தீர்க்காமல் கேலிக்குரிய நிலைமையிலே இருக் கிறது உங்கள் சர்க்கார். நீங்கள் சொன்னீர்கள், 423 கோடி வரும் என்று, இன்றைக்கு 18 கோடி ரூபாய் அதிகமாக வந்து இருக் கிறது. செலவு வரவுக்கு மேலே செய்திருக்கிருர்கள். வரவுக்கு மேலே செலவு செய்துவிட்டு இன்றைக்கு 1975-76-ஆம் ஆண்டில் துண்டு விழும் என்று வரிகளைப்போடக் கூடிய சூழ்நிலையில் கொண்டுவந்து விட்டீர்கள் . . . . .

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இந்தப் பேச்சைப் பேசு கின்ற அம்மையார் அவர்கள் இந்த மாநிலத்தின் பட்ஜெட்டைப் பொறுத்தவரையில் அப்படிப் பேசலாம், உரிமை இருக்கிறது. இதைவிட பெரிய பட்ஜெட் டெல்லியில் வைத்திருக்கிருர்களே, அங்கே என்ன வாழ்கிறது என்று சொல்லிவிட்டு இதைப்பற்றிப் பேசினல் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** மத்திய சர்க்காரைப்பற்றிச் சொல்கிறீர்கள், ஒன் வரியே இல்லாமல் நீங்கள் பட்ஜெட் கொண்டு [illegible]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இந்தியா முழுமைக்கும் ஒட்டு மொத்தமாக பொருளாதாரக் கொள்கையே உருவாக்குகிற, மாற்றுகிற, திருத்துகிற எல்லா வாய்ப்புக்களும் அம்மையார் கட்சி ஆளுகின்ற கட்சியாக இருக்கிற மத்திய சர்க்காருக்குத்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பக்கத்திலே இருக்கிற கர்நாடக மாநிலத்தில் வரியே போடாமல் பட்ஜெட் கொண்டு வந்திருக்கிறார்களே, நீங்களும் கொண்டுவருவதுதானே.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அங்கே மதுவிலக்குக் கொண்டுவரப்படவில்லை, இங்கே மதுவிலக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. மதுவிலக்கு மற்ற கட்சிகள் ஏற்றுக்கொண்டாலும் அம்மையார் அவர்கள் ஒத்துக்கொள்கிறார்களா என்பது தெரியவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** மதுவிலக்கு இருந்தால் வரி போடுவது மதுவிலக்கு இல்லையென்றால் வரிப்போடாமல் இருப்பது என்பதுதான் உங்கள் கொள்கையா.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மத்திய அரசாங்கம் ரிசர்வ் வங்கியிலிருந்து நமக்குத் தரப்படுகிற ஓவர்டிராப்ட் வசதியை வேறு மாநிலங்களில் உள்ள அரசாங்கங்களுக்கு சலுகைகளைக் கொடுத்திருப்பதைப்போல் நம்முடைய அரசுக்குத் தரவில்லை. ஆகவே, அந்த ஓவர்டிராப்டை சரிக்கட்டக்கூடிய முறையில்தான் மதுவிலக்குத் தள்ளிவைக்கப்பட்டது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கர்நாடக அரசு வரியே போடவில்லை என்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். 6 கோடி ரூபாய்க்குப் போடவில்லை. 14 கோடிக்குப் போட்டிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** எதோ ஒரு மாநிலம், வரிப் போடாமலே பட்ஜெட் கொண்டுவந்திருக்கிறது. பெயர் வேண்டுமானால் மாறியிருக்கலாம், என்னுடைய டைரியிலே குறித்துவைத்திருக்கிறேன். கொஞ்ச நேரத்தில் வேண்டுமானால் பார்த்துச் சொல்கிறேன்.





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அம்மையாருக்கு நானே துணைபுரிகிறேன் அது கர்நாடாக அரசு அல்ல, ஆந்திர அரசு.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பெயர் மாறிப்போனால் அதற்கு ஒரு பெரிய பேச்சா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்தியா முழுவதையும் ஆண்டுகொண்டு இருக்கிற கட்சியைச் சார்ந்த அம்மையார் ஒரு மாநிலத்தின் பெயரை மறந்துவிடலாமா ?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இந்தியா முழுவதையும் ஆளுகிற போது நான் அதை ஞாபகத்தில் வைத்துக்கொள்கிறேன். இப்போது உங்கள் மத்தியில் அல்லவா உழன்றுகொண்டிருக்கிறேன். மக்களை அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள், மாடுகளும் அவதிப் படவேண்டும் என்று நினைத்து பிண்ணாக்குக்கு வரிப் போட்டிருக்கிறீர்கள். சப்ஸ்டாண்டர்ட் குவாலிட்டிக்கு. பாலும் விலையேறிவிட்டது. இதிலே பிண்ணாக்குக்கு வேறு வரிப்போட்டு விட்டீர்கள். காபிக்கு வரி, டீக்கு வரி, எண்ணைக்கு வரி, பிண்ணாக்குக்கு வரி, தீக்குச்சிக்கு வரி இப்படி எல்லாம் ஏழை எளியவர்கள் தலைகளை உருட்டக்கூடிய முறையிலே வரிப்போட்டிருக்கிறீர்கள். கேட்கலாம் சென்ட்ரல் கவர்ன்மெண்ட்டும்தானே வரிப்போட்டிருக்கிறது காப்பிக்கு என்று. நான் ஒரு பழமொழியைச் சொல்கிறேன். சர்வதேசப் பெண்கள் ஆண்டாக இந்த ஆண்டு இருந்தாலும்கூட சொல்கிறேன்.

மூத்தாளும் இளையாளும் தீட்சிதர் காலை முறித்தாளாம். (சிரிப்பு.)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** திரு. கே. டி. கே. அவர்கள் சொல்வார்கள், பெண்கள் ஆண்டு இது அப்படிப் பேசக் கூடாது என்று. அம்மையார் முன்னாலே மாமியார் மருமகள்பற்றி ஒரு பழமொழி சொன்னார்கள். அதிலே ஒருவர் நல்லவராகவும் ஒருவர் கெட்டவராகவும் இருந்தார். ஆனால் மூத்தாளும் இளையாளும் தீட்சிதர் காலை முறித்தாளாம் என்பதில் இரண்டு பேருமே கெட்டவர்களாக இருக்கிறார்கள். (சிரிப்பு)

**திருமதி த. ந. அனந்தநாயகி :** மத்திய அரசாங்கம் காபிக்கு வரிபோடுகிறார்கள் என்றால் நீங்களும் போடவேண்டுமா ?

[1975 மார்ச் 7

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அம்மையார் அவர்கள் சொன்ன பழமொழிப்படி அதிலே மூத்தாளாக இருப்பது டெல்லி அரசு, அதில் சம்பந்தப்பட்டவர்கள் அம்மையார் அவர்கள்.

(பிற்பகல் 1.00)

**திருமதி த. ந. அனந்தநாயகி :** எது சம்பந்தப்பட்டால் என்ன? உங்கள் ஆட்சியில் மக்கள் அவதிப்படுவதைத்தான் சொல்கிறேன். காபி, டீ குடிக்க வேண்டுமென்றால்கூட 40 பைசா ஆகிறது. அதனால் காபி, டீ கூட ஏழைகளால் குடிக்க முடியவில்லை. பருப்பு விலை என்ன, எண்ணெய் விலை என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் குறுக்கிடுவதாகக் கருத வேண்டாம். விவாதம் கொஞ்சம் சுவையாகப் போகட்டுமே என்ற ஆசையோடு கேட்கிறேன். ஏனென்றால் காலையிலிருந்து விவாதம் சூடாக இருக்கிறது. இளையாளும் மூத்தாளும் தீட்சிதர் காலை முறித்தார்களாம் என்று கூறினார்கள். அந்தக் கதையையும் கொஞ்சம் சொன்னால் ரசிப்பதற்கு நன்றாக இருக்கும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கதையெல்லாம் சொல்வதற்கு சட்டசபைக்கு வரவில்லை. வேண்டுமானால் வெளியே போய்க் கேளுங்கள். யாராவது பாட்டி சொல்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அம்மையார் அவர்கள் அன்றைக்கு கதை சொன்னார்களே, அதைப்போல இன்றைக்கும் சொன்னால் நன்றாக இருக்கும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அதைப் போய் பாட்டியிடம் கேட்டுக் கொள்ளுங்கள். அதற்காக இங்கே சட்டசபையின் நேரத்தை வீணாக்க வேண்டாம்.

**திரு. துரை முருகன் :** பாட்டியிடம் கேளுங்கள். பாட்டியிடம் கேளுங்கள் என்று சொல்கிறார்கள், இவர்கள் என்ன பாட்டியில்லாமல் குமரியா?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** மேலவையில் திரு. தீட்சிதர் ஒரு உறுப்பினராக இருக்கிறார். எனவே, எந்தமாதிரியான குழப்பத்தையும் இம்மாதிரி சொல்லித் தூண்ட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1975 மார்ச் 7]

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பெண்களை எந்த முறையிலேயும் அவமானப்படுத்தவேண்டாமென்று மீண்டும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அதைப் பெண் அங்கத்தினரே சொன்னால் அவமானம் இல்லை. ஆண் அங்கத்தினர்கள் சொன்னால் தான் அவமானம். ஏனென்றால் மார்ச் மாதம் வந்தால் போதும் மக்கள் அவதிப்பட ஆரம்பித்து விடுகிறார்கள். எங்கெங்கே வரி விழுமோ, அதைத் தாங்க முடியுமா என்று பயப்படுகிறார்கள். இங்கே நிதி வசதி இருக்கும்பொழுது வரியில்லாமலே நீங்கள் செய்ய முடியாதா? மீண்டும் ஏன் எவ்வளவோ வரிகளைச் சுமத்தித் தொல்லைப் படுத்துகிறீர்கள்? மத்திய அரசாங்கம் போடுகிறது என்றால் நீங்களும் வரி போட வேண்டுமா? ஏதாவது ஒப்பந்தம் இருக்கிறதா அப்படி? மத்திய அரசாங்கத்தைப்போல் வரி போட மாட்டோம் என்று சொல்லிக்கொண்டுதானே வந்தீர்கள், அப்படிச் சொல்லிக்கொண்டுதானே ஆட்சிக்கு வந்தீர்கள். அப்படிச் சொல்லிக்கொண்டு வந்த நீங்கள் இன்றைக்கு எக்கச்சக்கமாக வரியை ஏற்றியிருக்கிறீர்களே. கேட்டால், மத்திய அரசாங்கம் போட்டது, நாங்களும் போட்டோம் என்று சொல்கிறீர்கள். இதற்காக ஆட்சி மாறவேண்டிய அவசியமில்லையே.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அவர்கள் சொல்வதைப் பார்த்தால், மத்திய அரசும் போட்டது, நாங்களும் போட்டோம் என்று வீம்புக்காக நாங்கள் போட்டதைப்போல் சொல்வது மாதிரி இருக்கிறது. திட்டக் குழுவில் 171 கோடிக்குத் திட்டம் இருக்கிறது என்று சொன்னோம். ஆனால் அவர்கள் 143 கோடிக்குத்தான் ஒத்துக்கொண்டார்கள். இதற்குப் பிறகு வேண்டுமானால் நீங்கள் வரியாக வாங்குங்கள் என்று சொன்னார்கள். இன்னும் சொல்லப்போனால் ரூரல் ஏரியாவில் போட வேண்டுமென்று கட்டாயப் படுத்தினார்கள். முடிந்தவரையில் விவசாயிகளுக்கு நேரடி வரியில்லாத முறையில் இப்படிப் போடப்பட்டிருக்கிறது. வரிபோட்டால்தான் திட்டத்திற்கு ஒத்துக் கொள்கிறார்கள். அப்படி மத்திய அரசு சொல்லும்பொழுது என்ன செய்வது?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பக்கத்திலே உள்ள ஆந்திரா அப்படிக் கேட்கவில்லையே? அவர்கள் வரி போடவில்லையே.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அவர்கள் போட்டிருக்கும் திட்டம் மத்திய அரசாங்கத்தின் அளவிலே, அந்த அளவிலே ஒத்துப் போகிறது. நாங்கள் அதிகம் கேட்பதாக நினைக்கிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நீங்கள் அனுவசியமாகக் கேட்டால் என்ன செய்வது? கொடுத்த பணத்தையே ஒழுங்காகச் செலவழிக்கவில்லையே.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, கேபிடல் எக்ஸ்பெண்டிச்சர் என்பது குறிப்பிட்ட தேதிக்குள் செலவாகாது. அதைத் தொடர்ந்து செலவழிக்க வேண்டியிருக்கும், எத்தனையோ இடையூறுகள் இருக்கும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இடையூறு இருக்கிறது என்றால் நீங்கள் வரவு-செலவுத் திட்டத்தை ஒழுங்காகப் போடவில்லை என்பதைத்தான் காட்டுகிறது.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, ஒரு கட்டிடம் கட்டுவது என்றால் 74 மார்ச்சில் தொடங்கி 75 மார்ச்சில் முடியாது. அந்தக் கட்டிடம் முடிவதற்கு இடையூறுகள் இருந்தால் அதைக் கட்டி முடிப்பதற்கு நாளாகத்தான் செய்யும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பட்ஜெட் தயாரித்தவர்களுக்கு கேபிடல் எக்ஸ்பெண்டிச்சர் இவ்வளவு வேண்டுமென்று தெரியவில்லையா? 56 கோடியில் 24 கோடி செலவழிக்க முடியாது என்பது பட்ஜெட் தயாரித்தவர்களுக்குத் தெரியாதா என்று அறிய விரும்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, (மணியடிக்கப் பட்டது) என்னுடைய நேரத்தைக் குறைக்காதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கையைக் காட்டிப் பேசும்பொழுது இங்கே பார்த்துப் பேசுங்கள். அங்கே காட்டிப் பேசினால் விவகாரம் வந்துவிடப் போகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** 56 கோடி கேபிடல் எக்ஸ்பென்டிச்சருக்காக ஒதுக்கியிருக்கிறீர்கள். அதில் 32 கோடி ரூபாயைத் தான் செலவு செய்திருக்கிறீர்கள். 24 கோடியை செலவு செய்ய



முடியாமல் இருப்பதற்கு என்ன தடை வந்தது? அதை எதிர்நோக்க முடியவில்லையா? வரவு-செலவு என்றால் என்ன செலவாகுமோ அதைத்தான் கேட்க வேண்டும். வேண்டுமானால் ஒரு 5 சதவிகிதம், 7 சதவிகிதம் வித்தியாசம் இருக்கலாம். ஆனால் உங்களுடைய ஆட்சியில் பாதிக்குமேலே பணம் பாழாக்கப்படுகிறது. கொடுப்பதற்கு நியாயம் இல்லை என்று சொல்லும் அளவில் உங்களுடைய வரவு-செலவு இருக்கிறது என்றால் எதற்காகப் புது வரி போடுகிறீர்கள். அரியர்ஸ் ஆஃப் டாக்ஸ் 26 கோடிக்கு இருக்கிறது. அதை வசூலித்தீர்களா?

அடுத்து இந்த எலாஸ்டிசிடி ஆஃப் டாக்ஸ். திரு. தங்கமணி அவர்கள் பேசும்பொழுதுகூடச் சுட்டிக்காட்டினார்கள். விற்பனை வரியை நீங்கள் வரவு-செலவுத் திட்டத்தில் 138 கோடிதான் போட்டிருக்கிறீர்கள், ஆனால் வந்ததோ 174 கோடியாக இருக்கிறது. இப்படி 36 கோடி ரூபாய் அதிகம் வந்திருக்கிறது அதிலேயிருந்து இந்த 6 கோடியைச் சமாளிக்க முடியாதா? ஆனால் உங்கள் எண்ணம் எப்படியிருக்கிறது என்றால் முடிந்தவரையில் வரி போட வேண்டும், முடிந்தவரையில் பாழாக்க வேண்டும். அந்த எண்ணத்தில்தான் ஆட்சி நடத்துகிறீர்கள். ஒழுங்காக செலவழிக்க வேண்டுமென்ற எண்ணம் உங்களுக்கு இருக்கிறதா என்று அச்சமாக இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கிருக்கும் புதுவரிகளைப் பார்த்தால், முத்திரைத்தாள், பத்திரப் பதிவு இவற்றில் போடுகிறீர்கள். நேற்று முன்தினம் ஹைகோர்ட்டில் ஒரு ரூலிங் வந்தது. இங்கே பத்திரப் பதிவுக்காகப் போட்டிருக்கும் வரி மிகவும் அதிகமான வரி என்று சுப்ரீம் கோர்ட் வரையில் போய் இங்கே அனுப்பப் பட்டது. ஆனால் நீங்கள் என்ன செய்கிறீர்கள். நீங்கள் போட்டிருக்கும் வரி மிகக் கடுமையான வரி என்று நீதிமன்றத்தின் விசாரணை முடிந்து வரும் வரையில் மீண்டும் அதிலே வரி போடுவோம், அதன் மூலம் விரயம் செய்வோம் என்று செய்வதுபோல் செய்கிறீர்கள். ஒதுக்கப்படும் பணத்தையே ஒழுங்காகச் செலவு செய்யாமல்,

Family Planning, Housing, Labour, Social Security, Soil and Water Conservation.

போன்று இன்னும் பல இனங்களில் ஒதுக்கிய பணத்தையே ஒழுங்காகச் செலவு செய்யவில்லை. மைனர் இர்ரிகேஷனுக்கு

624 இலட்சம் ஒதுக்கியிருந்தும் அதில் ஒருசில இலட்சங்களையே செலவழித்திருக்கிறீர்கள். இப்படி கொடுத்த பணத்தையே ஒழுங்காகச் செலவழிக்கத் தெரியாத உங்களுக்கு மாநில சுயாட்சி வேறு தேவையா? என்று கேட்க ஆசைப்படுகிறேன். உங்களுடைய அதிகாரத்தில் உள்ளதைச் செய்வதே நீதிமன்றம் வரை போய் தீர்ப்பாக வந்திருக்கிறது. ஜஸ்டிஸ் இஸ்மாயில் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சாதாரண வில்லேஜ் ஹெட்மென் வேலை சம்பந்தமாகவே துஷ்பிரயோகம் இருக்கிறது என்று. நியாயாதிபதியாலேயே இப்படிப்பட்ட ஸ்டிரிக்சர்ஸ் வருகிறது. என்றால், உங்களுக்கு மேலும் அதிகாரங்கள் ஏன் தேவை? (மணியடிக்கப்பட்டது) இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துக் கொள்கிறேன்.

ஒன்றைப்பற்றி மட்டும் வரவு-செலவுத் திட்டத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலமைச்சரவர்களைச் சந்தித்துச் சொன்னேன், இந்த ஆண்டு சர்வதேச பெண்கள் ஆண்டு, எனவே, விதவைகளுக்கு அதிக ஆதரவு காட்ட வேண்டுமென்று சொன்னேன். அந்த வார்த்தையை ஏற்றுக்கொண்டு அதைப்பற்றி இதில் சேர்த்திருப்பதற்கு உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், திட்டம் போடுவது பெரிதல்ல. அதை நல்லமுறையில் அமலாக்க வேண்டும். விதவை என்றால் அவர்களைக் காப்பாற்றுவதற்கு தாய் தகப்பன் இருக்கக்கூடாது, அண்ணன் தம்பி இருக்கக்கூடாது என்றெல்லாம் சொல்லக்கூடாது. அண்ணன், தம்பி வீட்டிலேபோயிருக்கும் விதவைப் பெண்களை அவர்கள் வேலைக்காரியாகத்தான், வீட்டிற்குப் பாரமாகத்தான் கருதுகிறார்கள். அவர்களுக்குச் சோறு போட வேண்டுமென்று கருதுவதில்லை. ஆகவே, விதவை என்று சொல்லும்பொழுது சம்பாதித்துப்போட பிள்ளை இல்லாமலிருந்தால் அல்லது இறந்த கணவனுக்குச் சொத்துக்கள் இல்லாமல் இருந்திருந்தால் அவர்களுக்கு அண்ணன் தம்பிகள் இருந்தாலும்கூட கட்டாயம் உதவிப்பணம் தரப்பட வேண்டும். இன்றைக்கு சமூக நலத் திட்டம் என்று புதுப்புது விளம்பரம் கொடுக்கிறீர்கள். ஆனால் ஏற்கனவே இருக்கும் சமூக நலத திட்டங்களைப் பாதியிலேயே விட்டுவிடுகிறீர்கள். முதியோர் பென்ஷனை எடுத்துக் கொண்டால் ஒரு ஆள் செத்தால்தான் அடுத்த ஆளுக்கு பென்ஷன் என்று கலெக்டர் சொல்கிறார். எந்த முதியோரைப் போய்ச் சாகடிப்பது? (மணியடிக்கப்பட்டது) எவ்வளவு குறுக்கீடுகள் வந்தன, ஆகவே, இன்னும் கொஞ்சம்





நேரம் கொடுக்க வேண்டும். இன்றைக்கு இருக்கும் சமூக நலத் திட்டங்களையே நீங்கள் முழுமையாக நிறைவேற்றவில்லை. பென்ஷனர்ஸ் டி.ஏ. பாதி கொடுங்கள் என்று கேட்டால் 5 ரூபாய் தான் கொடுத்திருக்கிறீர்கள். ஏற்கனவே உள்ள சமூகப் பிரச்னைகளைத் தீர்த்துவிட்டு பிறகு புதிய பிரச்னைகளுக்கு வரவேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஏற்கனவே உள்ள சமூக நலத் திட்டங்களை நிறைவேற்றாமல் இருக்கும்பொழுது தாங்களே என்னைச் சந்தித்து விதவைகளுக்காக திட்டம் தயாரிக்க வேண்டுமென்று ஏன் கேட்டுக்கொண்டீர்கள்?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இது சர்வதேச பெண்கள் ஆண்டு என்பதற்காகக் கேட்டேனே தவிர விளம்பரத்திற்காகக் கேட்கவில்லை. பெண்களுக்காக இதை அமல் நடத்த வேண்டுமென்ற நல்லெண்ணத்திலேதான் சொன்னேன். அந்த நல்லெண்ணத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் ஏற்கனவே இருக்கும் சமூக நலத் திட்டங்களை முழுதும் நிறைவேற்றவில்லை. என்.ஜீ.ஓ.-க்கள் பிரச்னைகளை ஒழுங்காகத் தீர்க்க முடியவில்லை, ஆசிரியர்கள் பிரச்னைகளைத் தீர்க்க முடியவில்லை, பென்ஷன்தாரர்களின் பிரச்னைகளைத் தீர்க்க முடியவில்லை, முதியோர் பென்ஷன் எல்லோருக்கும் கொடுக்கப்படுவதில்லை. இப்படிப்பட்ட பிரச்னைகளைத் திறமையாக, சரியாகத் தீர்த்தபிறகு புதிதாகச் சில திட்டங்களைத் துவங்கினால் அதை நல்லெண்ணம் என்று சொல்லலாம். ஆனால் விளம்பரத்திற்காக சமூக நலத் திட்டம் என்று ஆரம்பித்திருக்கிறீர்களே தவிர, அது அமல் நடத்தப்பட வேண்டுமென்று ஆரம்பிக்கவில்லை என்ற குற்றச்சாட்டைக் கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. தொ. ப. சீனிவாசன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் 1975-76-ம் ஆண்டுக்காக அளித்துள்ள நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்தை இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை தமிழகத்தின் வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது. ஆளுந்தரப்பிலிருந்து உளமார மனமாரப் பாராட்டுவதோடு நாட்டுமக்கள் ஒவ்வொருவரும் உளமார, மனமாரப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

(திரு. கு. காமாட்சி—தலைமை)

[திரு. தொ. ப. சீனிவாசன்] [1975 மார்ச் 7

மத்திய அரசு வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றி அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் குறிப்பிட்ட காரணத்தால் ஆணித்தரமாக நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நாட்டு மக்களுக்கு இரண்டு அரசாங்கங்களைச் சந்திக்கிறோம் என்ற உணர்வு இருந்து கொண்டிருக்கிறது. அம்மையார் அவர்கள் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் தமிழ்நாட்டு மக்களை ஆண்டு கொண்டிருக்கிறார்கள். அவர்கள்தான் தமிழ்நாட்டு வரவு-செலவுத் திட்டத்தைத் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் மொத்தமான பொருளாதாரத்தை நிர்ணயிக்கக்கூடிய அளவுக்கு அரசியலமைப்புச் சட்டம் அமைக்கப்படவில்லை. தமிழகத்திலிருந்து சென்ற மத்திய நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்கள் அதிக அளவில் வரியைப் போட்டு நாட்டு மக்களின் வெறுப்பை சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தின் நிதிநிலை அறிக்கையில் டாக்டர் கலைஞர் அவர்கள் கோடிட்டுக் காண்பித்திருக்கிறார்கள். தமிழ்நாட்டு மக்களின் வாங்கும் சக்தி குறைந்திருக்கிறது என்று வேதனையோடு குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிடுகிறபோது மிகுந்த உற்சாகத்தோடு சொன்னார்கள் -- "இதுதான் அவர்களுடைய கடைசி பட்ஜெட்" என்று சொன்னார்கள். அண்ணா அவர்கள் 1967-ல் ஆட்சிப் பொறுப் பேற்றபோது சொன்னார்கள்—அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப் பேற்றபோது அனைவரும் அவர்களைப் பாராட்டியபோது அண்ணா அவர்கள் "நான் வேதனைப்படுகிறேன்" என்று சொன்னார்கள். "நாட்டுமக்கள், ஏழை எளிய மக்கள் எவ்வளவோ எதிர்பார்த்து என்னிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள். அதிகாரம் இல்லாத அரசிலே ஏழை எளிய மக்களுக்கு எப்படி நன்மை செய்யப் போகிறேன்" என்று வேதனைப்பட்டார்கள். அண்ணா அவர்கள் பிரிந்த பிறகு பல தலைவர்கள் அழுதார்கள், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் "எங்கள் இதய தெய்வமே, உங்களுடைய இதயத்தைத் தாருங்கள்" என்று கேட்டுப் பெற்றார்கள். அந்த இதயந்தான் இன்று நீங்கள் எவ்வளவு தாக்கினாலும், யார் சொன்னாலும் பொறுத்துக் கொள்ளுகிறது. "எதையும் தாங்கும் இதயத்தைப் பெற்று" அண்ணாவின் உருவில் இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள்.



1975 மார்ச் 7] [திரு. தொ. ப. சீனிவாசன்]

இந்த நிதிநிலை அறிக்கையைப் படிக்கும்போது வரிசையாக ஏழை எளிய மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய திட்டங்களாகவே சொல்லிக் கொண்டு வந்தார்கள். அப்போது ஒவ்வொரு உறுப்பினர் முகத்திலும் மகிழ்ச்சியை பார்த்தேன். குறிப்பாகவும் சிறப்பாகவும் திரு. பொன்னப்ப நாடார் மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டு வந்தார்கள். எவ்வளவு கோடிக்கு வரியோ என்று இறுதியில் பார்க்கும்போது ஆறு கோடி ரூபாய் அளவுக்குதான் வரி போட்டிருக்கிறார்கள். அரை பர்சன்ட், கால் பர்சன்ட் என்று தான் உயர்த்தியிருக்கிறார்கள்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் இதுதான் கடைசி நிதிநிலை அறிக்கை என்றார்கள். தலைவர்கள் அனுமதியோடு சொல்லுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்பார்கள் என்று இந்த இயக்கத்தில் சேரவும் இல்லை, தியாகத்தை செய்யவும் இல்லை. அடுத்து வந்தாலும் வராவிட்டாலும் தமிழ் மக்கள் அளிக்கும் வரிப்பணம் தமிழ் மக்களுக்கே செலவழிக்கப்பட வேண்டும். எங்கோ கொள்ளை போவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். அந்த அதிகாரத்தைப் பெற சிறை செல்லவும் தயார் என்று டாக்டர் கலைஞர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அப்போது தமிழ் உணர்வு உள்ள தமிழ் மக்கள் அனைவரும் கட்சிப் பாகுபாடின்றி சிறை செல்லத் தயார் என்று சரித்திரம் படைக்க இருக்கிறார்கள்.

இந்த அரசு செய்து வருகிற அற்புதமான சாதனைகளை எல்லாம் மறைக்க ஊழல் ஊழல் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இறைவன் செய்ய மறந்ததைக்கூட எங்கள் தலைவர் அவர்கள் செய்து வருகிறார்கள். திக்கற்ற ஏழைகளுக்கு, பிச்சைக்காரர்களுக்கு, தொழு நோய் படைத்தவர்களுக்கு, விதவைகளுக்கு உதவக்கூடிய திட்டங்களை எல்லாம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு வீட்டில் ஒருவனுக்குத் தொழு நோய் வந்து விட்டால் அந்த வீட்டில் யாரும் அவனை அணுகுவார்களா? அவர்களை நடுத்தெருவில் விட்டு விடுகிறார்கள். அவர்களை முருகன் காப்பாற்றுவாரா? அல்லாஹ் காப்பாற்றுவாரா? இந்த நாட்டை ஆளுகின்ற தலைவர், எங்கள் இதய தெய்வம் டாக்டர் கலைஞர் அதற்கான திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறார்கள்.

[திரு. தொ. ப. சீனிவாசன்] [1975 மார்ச் 7

அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வீட்டு வசதி வாரியத்தை அமைத்திருக்கிறார்கள். நான் பின்தங்கிய மீனவ இனத்தைச் சேர்ந்தவன். என்னுடைய தொகுதியிலும் அரிசனங்களுக்கு வீடு கட்டி வருகிறார்கள். ஏழு ஆண்டுக் காலத்தில் மூலை முடுக்கில் இருக்கிற ஒவ்வொரு அரிசனுக்கும் வீடு இருக்க வேண்டுமென்ற முறையில் திட்டம் தீட்டி படிப்படியாகச் செய்து வருகிறார்கள். என்னுடைய தொகுதியில் 7 ஊர்களில் ஊருக்கு 50 வீடுகள் வீதம் வேலை நடைபெற்று வருகிறது. அரிசனங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். கடற்கரை ஓரத்தில் மீனவர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் புயலுக்கு ஆளாகிறார்கள். இந்தத் திட்டத்தில் அவர்களுக்கும் வீடுகள் கட்டித் தருகிறார்கள். இதைப் பாராட்ட வேண்டாமா?

கைத்தறி நெசவாளர்களுக்காக ஒரு கட்சி நிதி வசூலித்தது இன்று சிரிப்பாய்ச் சிரித்துக் கொண்டிருக்கிறது. வெளிப்படையாகவே சொல்லுகிறேன். எ.டி.எம்.கே. வசூலித்தார்கள். கணக்குக் காண்பிக்கவில்லை. ஊர் சிரிக்கிறது. அதே சமயத்தில் டாக்டர் கலைஞர் அவர்கள் கைத்தறி நெசவாளர்களுக்காக திட்டத்தை தீட்டித் தந்திருக்கிறார்கள். இந்த நாட்டில் பெருந்தலைவர்களில் ஒருவராக இருக்கும் திரு. ஜகஜீவன்ராம் "தமிழ்நாட்டைப் பின்பற்றுங்கள், டாக்டர் கலைஞர் திட்டத்தைப் பின்பற்றுங்கள்" என்று தன்னுடைய பதவியே போனாலும் பரவாயில்லை, இந்திரா காந்தி என்னைத் தூக்கி எறிந்தாலும் பரவாயில்லை என்று கூறியிருக்கிறார்.

என்னுடைய தொகுதியிலிருந்து பல கோரிக்கைகளை வைத்தோம். அவ்வளவையும் நிறைவேற்றியிருக்கிறார்கள். போளூரில் தண்ணீர் இல்லை என்றோம். 15 லட்சம் ரூபாய்க்குத் திரு. கந்தப்பன் அவர்கள் திட்டம் தீட்டி தண்ணீர் அளித்திருக்கிறார்கள். களம்பூரில் தண்ணீருக்கு ரேஷன் கார்டே கொடுத்தார்கள். அங்கு சென்ற மாதம் 15 லட்சம் ரூபாயில் தண்ணீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. செண்பகத் தோப்பு அணைக்கட்டு பற்றி 1959-ம் ஆண்டிலிருந்து சொல்லப்பட்டு வருகிறது. காங்கிரஸ் அரசாங்கம் புறக்கணித்துக் கொண்டேயிருந்தது. இன்று நிதிநிலை அறிக்கையில் 2 கோடி 50 லட்சம் ரூபாய் செலவில் அந்த அணைக்கட்டுத் திட்டம் நிறைவேற்றப்படும்



1975 மார்ச் 7] [திரு. தொ. ப. சீனிவாசன்]

என்று தெரிவித்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் இருக்கும் அவ்வளவு பேரும், எம்.ஜி.ஆர். கட்சிக்காரர்கள் தவிர, மனதார டாக்டர் கலைஞர் அவர்களை அதற்காகப் பாராட்டுகிறார்கள்.

வறட்சி காரணமாக எங்கள் பகுதியில் விவசாயிகளிடமிருந்து எந்த வரியும் வாங்குவதில்லை. எந்த அரசு இதுவரை அப்படிச் செய்தது? உணவுக் கொள்முதலைப் பற்றிச் சொன்னார்கள். அரசாங்கம் விவசாயிகளுக்குச் செய்கிற நன்மைகள் காரணமாக உணவுக் கொள்முதல் எங்கள் மாவட்டத்தில் நல்ல முறையில் நடைபெற்று வருவதை உணவு அமைச்சர் அவர்கள் நேரிலேயே பார்த்தார்கள். (மணி அடிக்கப்பட்டது). அந்த அளவுக்கு அரசு பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறது. ஏழை மக்களுக்காக, மீனவ மக்களுக்காக, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நல்ல பல காரியங்களை நிறைவேற்றி வரும் இந்த ஆட்சி இருந்தாலும் இல்லாவிட்டாலும், இந்த இயக்கம் நீண்ட நெடுங்காலம் இந்த நாட்டு மக்களிடத்திலே நிலைத்து நிற்கும், ஆட்சியைப்பற்றி கவலை இல்லை என்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* THIRU K. S. KOTHANDARAIAMH : Mr. Chairman, Sir, I request you to give me some more time, or, I may be permitted to make my speech tomorrow......

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரு. காமாட்சி): உங்களுக்கு எவ்வளவு நேரம் வேண்டும். 1-30-க்குள் முடித்து விடுங்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Mr. Chairman, Sir, I thank you very much for giving me an opportunity to say a few words on the Budget proposals presented to this House by the Hon. Chief Minister in his capacity as Finance Minister on the first of this month.

I went through the whole speech. It is a very well thought out, purposeful and comprehensive Budget and I can say that it has been prepared after a long and good thinking. It is not my idea only. Some of the important newspapers which have got All India circulation, world circulation—they also have got some good point to say about this Budget. For example with the permission of

[திரு. கே. எஸ். கோதண்டராமையா] [1975 மார்ச் 7

the Chair, I want to read a few lines from the Economic Times of India, dated 5th March 1975. It gives a good account of this Budget. It says:

"The Tamil Nadu Budget for 1975-76 with an overall deficit of Rs. 26.6 crores stands out as an attempt to make the best of a bad situation. Faced with mounting pressure from all sides—drought relief and frequent escalation in the wage bills of Government servants—the Chief Minister Mr. Karunanidhi had to take into account the hard realities of the situation."

In the circumstances, he was not able to present a Budget without deficit. But what is the deficit? Only a small amount. But with regard to other things, the Government have given so many benefits to the people.

One of the important things is to help destitute women and orphans. We know that in the past Raja Ram Mohan Roy and Eswar Chander Vidhya Sagar, K. Veeresalingam Pantulu and others worked for the improvement of the widows. But after a long time it is a matter of great satisfaction that our Government have come to help the destitute widows and also the orphans.

More over, the Government have given some more facilities in the shape of Co-operative Handloom Weavers' Savings Scheme, a slight increase in D.A. for State Government employees, aided school teachers and local board teachers, city compensatory allowance extended to Tiruchirappalli and Salem, honorarium of Rs. 7 to Village Officers, remitting of pension by money order extended to the entire State, etc. All these are good things aimed to help the people.

With regard to taxation, a marginal tax has been levied on certain things of daily consumption. But I am very sorry to say that the Central Government also have done the same thing. The Central Government have levied taxes on petrol, sugar, tea, cosmetics, cement, furnace oil, packaging papers, tobacco and cigarettes. Here also the State Government have levied some tax on tea, coffee and other things. What I say is, after all the Government are going to get only Rs. 6 crores by way of taxation. This is a very psychological period. People are suffering from drought. Therefore, I request the Hon. Chief Minister to see that exemption of tax is given at least in respect of some of these things.



1975 மார்ச் 7] [Thiru K. S. Kothandaramiah]

He can take away the taxation on tea and coffee because only poor people are drinking the same. Rice costs Rs. 7 or 8 a measure. People are not able to get good rice or a good food or even simple meals. So, the Chief Minister can take away the tax on coffee, tea and other things. I request him to consider this seriously.

Because the time is short, I now come to the subject of Dharmapuri district. Now the Government have sanctioned the Doddahalla scheme in Denkenikottah Taluk. I wish to point out that when the Hon. Chief Minister was the Public Works Minister in 1968 it was he who sanctioned the scheme. I am very glad that the scheme has now been taken up and I think the same will be implemented soon. The Kelavarapallihalla Dam should also be sanctioned, as investigation in respect of the same is already over.

Similarly investigation has been completed in respect of Vempalli Dam and that scheme should be sanctioned soon.

As regards Kuppamma Cheruvu Dam which is under construction, it should be completed before the rainy season.

The Kelavarapallihalla Dam will irrigate about 5,000 acres and the Vempalli Dam about 1,700 acres.

With regard to drought relief in Dharmapuri district, I have already stated when I talked during discussion on Governor's Address that the entire Dharmapuri district should be declared as drought affected area. Now only 50% of the district has been declared and Government have said that they are going to introduce Intensive Agricultural Area Schemes. Without declaring the entire district as drought area and without giving proper help and also adequate finance, how are they going to introduce these schemes there? So, I request that the entire area should be declared as drought area.

With regard to water facilities in Dharmapuri district, I wish to point out that the Dharmapuri district has got a claim over the Cauvery waters. Now I am going to suggest a new thing. We must get water for Tiruchirapalli district and Thanjavur district. We must get water for those districts which are called the gran-

[Thiru K. S. Kothandaramiah] [1975 மார்ச் 7

aries of the State. We are fighting to get adequate water. I agree that you must fight for it and get adequate water. But I have to point out that Dharmapuri district has got a natural and ancient claim for the riparian rights of Cauvery waters. Because Cauvery enters Dharmapuri district through Denkanikottah taluk. Cauvery enters Denkanikottah taluk in the west and flows there for about 25 miles and then it enters the Dharmapuri taluk and flows there for about 15 miles. With regard to the claim of water for Dharmapuri district, I will just quote a few lines from a report called 'A Report on an Employment-Oriented Techno-Economic Survey of Dharmapuri District" prepared by the Indian Institute of Public Opinion, New Delhi. They have prepared a report and submitted to the Government of India, for kind consideration. The Report says:

"It is possible that diversion of water from the Cauvery for irrigation in Dharmapuri district (particularly in the dry areas of Denkanikottah and Palacode taluks and Pennagaram Block) may to some extent affect supplies to those districts in Tamil Nadu which are dependent on Cauvery water lower down. However, it would seem to be possible to devise channels within the Cauvery catchment areas in the district which could, without affecting the area currently irrigated, provide some significant relief to this drought-prone area. If the water table could be raised in this taluk with a Cauvery canal from the proposed Hogenakkal reservoir, protection could be provided with underground wells supporting canal irrigation of a moderate volume. Techniques of water management have in recent years markedly improved, and we believe it is possible by an appropriate control of all Cauvery basin waters in Tamil Nadu to add some additional area in Dharmapuri district without reducing the area irrigated anywhere else in the State."

So, without deteriment to the areas in Thanjavur and Tiruchirappalli districts, I request the Government to press for more waters for Dharmapuri district because we have got a right and a need. The Cauvery river enters the district first Moreover we are getting a lot of industries in Dharmapuri district especially in Hosur taluk. We want plenty of water for drinking and Industries. Further, we have got a cattle farm and a silk farm there. So, we





1975 மார்ச் 7] [Thiru K. S. Kothandaramiah]

want more water and water can be brought from the Cauvery. For example, the Government of Mysore have brought water from Cauvery to Bangalore City. Bangalore City has got smaller population than Madras City. In the 1924 agreement or any agreement, there is no provision to give water to Bangalore City. From the Cauvery they have taken water to Bangalore City to meet the water problem there. We can also take like that; we can also claim water from Cauvery like that because we are suffering more and more. After all, we are human beings; it is a human aspect. They want water and we also want water. The population of Bangalore City is only 24 lakhs and the population of Madras City is more than that. Therefore, we can press the Central Government to give some more water from the Cauvery, so that the industries that are going to be located at Hosur can be helped. There is also a cattle farm and a silk farm there. Also drought affected areas can be improved. Therefore, I request the Hon. Chief Minister to include this in the discussions also because hither to Dharmapuri was a small neglected area in the Salem district. So, nobody cared for Dharmapuri. But the present Government have given a lot of help to Dharmapuri district. They have given so much money and also a number of schemes to Dharmapuri District. I, therefore, request the Government to see that some more water from Cauvery is given to Dharmapuri district.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

Then, coming to drought affected areas, the Government are now spending a lot of money to give relief. But the main difficulty is, the drought relief works are entrusted to the Officers. Officers are not able to meet the people. There is some difficulty there. People also do not meet the Officers. They are afraid of the Officers and Officers also are not meeting the people. So, they cannot understand each other. Therefore, I say, please entrust some of the works also to M.L.As. and M.Ps. I suggested to the Revenue Board Member in the beginning itself to appoint a committee consisting of the Sub-Collector or Collector as Chairman with some local M.L.As. and Chairmen of Panchayat Unions, so that they can prepare the schemes properly and implement the same properly.

[Thiru K. S. Kothandaramiah] [1975 மார்ச் 7

We can explain the schemes to the people and people also can give their views or ideas to us. I think this suggestion can be considered by the Government and some works can be done for the benefit of people.

*(பிற்பகல் 1-30)*

With regard to drinking water, we have got scarcity of water in some parts of the State and we may get rain in the month of April. Before we get rain, I think, wells should be dug for the supply of drinking water at least for a group of villages. I hope that this Government will see that the drought relief schemes are properly implemented in the drought-affected areas so that the people will be benefited by them.

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:*** *பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்று, நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.*

*பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணியளவில் ஒத்திவைக்கப் பட்டது.*

### 6. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders*

119. Notification issued in G.O. Ms. No. 2637, Home, dated the 14th November 1974, in regard to an amendment to Rule 140-AA of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939)].

120. Notification issued in G.O. Ms. No. 2380, Home, dated the 5th October 1974, in regard to an amendment to rule 168-A of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

121. Notification issued in G.O. Ms. No. 2611, Rural Development and Local Administration, doted the 12th December 1974 in regard to an amenment to the Tamil Nadu Municipal Services Rules, 1970. [Laid on the table of the House under section 304(d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920)].



*1975 மார்ச் 7]*

122. Notification issued in G.O. Ms. No. 2908, Home, dated the 8th November 1973, in regard to certain amendments to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10(3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).

123. Notification issued in G.O. Ms. No. 2232, Ruarl Development and Local Administration, dated the 16th October 1974, in regard to variation in the list of open spaces and parks in the area within the jurisdiction of Thanjavur Municipality approved and published at page 601 of Part II—Section 3 of the Tamil Nadu Government Gazette, dated the 21st July 1965. (Laid on the table of the House under section 14(3) of the Tamil Nadu Parks, Play-fields and Open-spaces (Preservation and Regulation) Act, 1959. (Tamil Nadu Act 26 of 1959)).

### B. *Reports, Notifications and Other Papers*

**Nil**

# இணைப்பு.

[14-ம் பக்கத்தில் உள்ள 226-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

1972–73-ஆம் ஆண்டில் சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் கீழ்க் காணும் திட்டங்களின்கீழ் சிறு தொழிலதிபர்களுக்கு வழங்கிய நிதியுதவி :

1. இயந்திரங்களைத் தவணை முறையில் வாங்குதல். 2. பணிக்கொட்டகைகளைத் தவணைக் கொள்முதல் முறையில் வாங்குதல். 3. கடன் திட்டம்.

| இயந்திரங்களைத் தவணைக் கொள்முதல் முறையில் வாங்குதல். | | | பணிக்கொட்டகைகளைத் தவணைக் கொள்முதல் முறையில் வாங்குதல். (கட்சிக்காரரது நிலம்.) | | | கடன் திட்டம். | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மாவட்டங்கள். | அனுமதி அளிக்கப்பட்ட விண்ணப்பங்கள். | | மாவட்டம். | அனுமதி அளிக்கப்பட்ட விண்ணப்பங்கள். | | மாவட்டம். | அனுமதி அளிக்கப்பட்ட விண்ணப்பங்கள். | |
| | நேர்வுகளின் எண்ணிக்கை. | மதிப்பு ரூ. லட்சத்தில். | | எண்ணிக்கையும். | தொகையும் ரூ. லட்சத்தில். | | நேர்வுகளின் எண்ணிக்கை. | மதிப்பு ரூ. லட்சத்தில். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| சென்னை | 230 | 108·39 | சென்னை | 20 | 14·82 | சென்னை | 71 | 7·97 |
| செங்கற்பட்டு | 9 | 6·49 | திருச்சிராப்பள்ளி | 2 | 1·68 | செங்கற்பட்டு | 11 | 1·49 |
| வட ஆற்காடு | 7 | 1·02 | மதுரை | 3 | 1·83 | வட ஆற்காடு | 23 | 1.43 |
| தென் ஆற்காடு | 10 | 2·83 | சேலம் | 5 | 3·98 | தென் ஆற்காடு | 15 | 0·60 |
| சேலம் | 26 | 9·05 | கோயம்புத்தூர் * | 3 | 1·40 | சேலம் | 13 | 2·67 |
| கோயம்புத்தூர் * | 36 | 11·39 | இராமநாதபுரம் | 3 | 2·22 | கோயம்புத்தூர் * | 26 | 5·23 |
| தருமபுரி | 8 | 1·37 | தருமபுரி | 3 | 1·96 | தருமபுரி | .. | .. |
| நீலகிரி | 1 | 0·13 | வட ஆற்காடு | 2 | 0·50 | நீலகிரி | 1 | 0·64 |
| திருச்சிராப்பள்ளி | 13 | 5·14 | தென் ஆற்காடு | 3 | 1·98 | திருச்சிராப்பள்ளி | 19 | 3·07 |
| தஞ்சாவூர் | 16 | 15·20 | திருநெல்வேலி | .. | .. | தஞ்சாவூர் | 44 | 4·84 |
| மதுரை | 17 | 6·31 | தஞ்சாவூர் | 1 | 0·61 | மதுரை | 60 | 3 28 |
| இராமநாதபுரம் | 21 | 8·42 | | | | இராமநாதபுரம் | 49 | 2·23 |
| திருநெல்வேலி | 5 | 2·91 | | 45 | 30·98 | திருநெல்வேலி | 36 | 2·08 |
| கன்னியாகுமரி | 2 | 0·34 | | | | கன்னியாகுமரி | 19 | 1·10 |
| | 401 | 1,68·99 | | | | | 386 | 36·83 |



தனியார் துறையில் தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் அளித்த கடனுதவி.

| மாவட்டங்கள். | அனுமதிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கையும். | தொகையும். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூ. லட்சத்தில்.) |
| அம்பத்தூர் | 63 | 43·77 |
| ராணிப்பேட்டை | .. | .. |
| குறிச்சி (கோயம்புத்தூர்) | 25 | 15·14 |
| திருச்சிராப்பள்ளி | — | — |
| | 88 | 58.91 |

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 1972–73-ல் (9 திங்கள் கால அளவில்) சிறு தொழில் பிரிவுகளுக்கு மாவட்ட வாரியாக வழங்கிய கடனுதவி (மொத்தம்) 1972–73 (9 திங்கள்).

| மாவட்டம். (1) | விண்ணப்பங்களின் எண்ணிக்கை. (2) | தொகை. (3) (ரூ. லட்சத்தில்.) |
|---|---|---|
| சென்னை | 32 | 38·86 |
| செங்கற்பட்டு | 16 | 17·23 |
| வட ஆற்காடு | 2 | 2·90 |
| தென் ஆற்காடு | 5 | 9·50 |
| சேலம் | 7 | 5·35 |
| தர்மபுரி | 1 | 0·25 |
| கோயம்புத்தூர் * | 10 | 8·28 |
| நீலகிரி | 1 | 1 00 |
| திருச்சிராப்பள்ளி | 2 | 1·24 |
| தஞ்சாவூர் | 3 | 1·63 |
| ராமநாதபுரம் | 7 | 5·20 |
| மதுரை | 3 | 3·90 |
| திருநெல்வேலி | 4 | 2·35 |
| கன்னியாகுமரி | .. | .. |
| | 93 | 97·69 |

| | (ரூ. லட்சத்தில்.) |
|---|---|
| தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகமும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகமும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் மட்டும் சிறு தொழில் அதிபர்களுக்கு அளித்துள்ள கடனுதவி. | 41·44 |



Financial assistance rendered to Small-Scale Industralists by the Small Industries Development Corporation during 1972–73 under the following schemes:—

(1) Hire-purchase of machinery ;
(2) Hire purchase of worksheds ; and
(3) Loan Scheme.

| Districts. | Hire-purchase of machinery. Applications sanctioned. No. of cases. | Hire-purchase of machinery. Applications sanctioned. (Value in lakhs.) | Hire-purchase of worksheds. District. | Hire-purchase of worksheds. (Party's own land) No. of applications sanctioned and amount. (Rs. in lakhs.) | | Loan Scheme. District. | Loan Scheme. Applications sanctioned. No. of cases. | Loan Scheme. Applications sanctioned. Value in lakhs. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| **Madras** | 230 | 198·39 | Madras | 20 | 14·82 | Madras | 71 | 7·97 |
| **Chingleput** | 9 | 6·49 | Tiruchirappalli | 2 | 1·68 | Chingleput | 11 | 1·49 |
| **North Arcot** | 7 | 1·02 | Madurai | 3 | 1,83 | North Arcot | 23 | 1·33 |
| **South Arcot** | 10 | 2·83 | Salem | 5 | 3·98 | South Arcot | 15 | 0·60 |
| **Salem** | 26 | 9·05 | *Coimbatore | 3 | 1·40 | Salem | 13 | 2·67 |
| ***Coimbatore** | 36 | 11·39 | Ramanatha-puram. | 3 | 2·22 | *Coimbatore | 25 | 5·23 |
| **Dharmapuri** | 8 | 1·37 | | | | Dharmapuri | ... | .. |
| **Niligiris** | 1 | 0·13 | Dharmapuri | 3 | 1·96 | Nilgiris | 1 | 0·64 |
| **Tiruchirappalli** | 13 | 5·14 | North Arcot | 2 | 0·50 | Tiruchirappalli | 19 | 3·07 |
| **Thanjavur** | 16 | 5·20 | South Arcot | 3 | 1·98 | Thanjavur | 44 | 4·84 |
| **Madurai** | 17 | 6·31 | Tirunelveli | .. | .. | Madurai | 60 | 3·28 |

| District. | Hire-purchase of machinery. Applications sanctioned. No. of cases. | (Value in lakhs.) | District. | Hire-purchase of worksheds. (Party's ou. land) No. of applications sanctioned and amount. (Rs. in lakhs). | | District. | Loan Scheme. Applications sanctioned. No. of cases. | Value in lakhs. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| Ramanathapuram | 21 | 8·42 | Thanjavur | 1 | 0·61 | Ramanatha-puram. | 49 | 2·23 |
| Tirunelveli | 5 | 2·91 | | | | Tirunelveli | 36 | 2.08 |
| Kanyakumari | 2 | 0·34 | | | | Kanyakumari | 19 | 1·10 |
| Total .. | 401 | 168·99 | | 45 | 30·98 | | 386 | 36·83 |

Small Industries Development Corporation's loan assistance for the setting up of Industrial Estates in the Privete Sector :

| District. | Number of applications sanctioned and amount. | (RS. IN LAKHS.) |
|---|---|---|
| Ambattur .. .. .. .. .. .. .. | 63 | 43·77 |
| Ranipet .. .. .. .. .. .. .. | | .. |
| Kurichi (*Coimbatore*)* .. .. .. .. .. .. | 25 | 15·14 |
| Tiruchirappalli .. .. .. .. .. .. .. | Nil. | Nil. |
| | 88 | 58·91 |



District-wise loan assistance sanctioned (Gross) to Small-Scale Units during 1972–73 (9 months) by the **Tamil Nadu Industrial Investment Corporation** :

| *District.* | 1972–73 (9 months.) Number of applications. | Amount. (RS. IN LAKHS.) |
|---|---|---|
| **Madras** .. .. .. .. .. .. .. | 32 | 38·86 |
| **Chingleput** .. .. .. .. .. .. .. | 16 | 17·23 |
| **North Arcot** .. .. .. .. .. .. .. | 2 | 2·90 |
| **South Arcot** .. .. .. .. .. .. .. | 5 | 9·50 |
| **Salem** .. .. .. .. .. .. .. | 7 | 5·35 |
| **Dharmapuri** .. .. .. .. .. .. .. | 1 | 0·25 |
| **Coimbatore*** .. .. .. .. .. .. .. | 10 | 8·28 |
| **Niligiris** .. .. .. .. .. .. .. | 1 | 1·00 |
| **Tiruchirappalli** .. .. .. .. .. .. .. | 2 | 1·24 |
| **Thanjavur** .. .. .. .. .. .. .. | 3 | 1·63 |
| **Ramanathapuram** .. .. .. .. .. .. | 7 | 5·20 |
| **Madurai** .. .. .. .. .. .. .. | 3 | 3·90 |
| **Tirunelveli** .. .. .. .. .. .. .. | 4 | 2·35 |
| **Kanyakumari** .. .. .. .. .. .. .. | .. | .. |
| | 93 | 97·69 |

*The loan assistance rendered by the Small Industries Development Corporation and the Tamil Nadu Industrial Investment Corporation to the Small-Scale-Industrialists in the Coimbatore district alone. (RS. IN LAKHS.) 41·44

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

---

**சனிக்கிழமை, 1975 மார்ச் 8.**

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. நா. கணபதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

*Funds for Education*

* 236 *Q.*—N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) Whether the Government have set up a Committee at the State level for re-employment and effective use of the resources allocated for education: and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :**

(அ) ஆம்.

(ஆ) டாக்டர் மால்கம் ஆதிசேஷையா தலைமையில் 16—1—73 அன்று இது குறித்து ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. கல்விச் செயலர், நிதி இணைச் செயலர், பள்ளிக் கல்வி இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்குநர், அரசுத் தேர்வு ஆணையாளர், திரு. ஜி. ஆர். தாமோதரன் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினராவர். இக்குழு பள்ளிக் கல்விக்கும், கல்லூரிக் கல்விக்கும் ஆகும் (திட்டமல்லாத மற்றும் திட்ட) செலவினங்களை ஆராய்ச்சி செய்யும். இப்பொழுது இருக்கும் நிதி வசதிகளை வைத்துக்கொண்டே சிக்கனத்துடனும் திறனுடனும் கல்வித் துறையில் இம் மாநிலம் அடையக் கருதியுள்ள திட்ட இலக்குகளை அடைவதற்கான வழி வகைகளைப் பரிந்துரை செய்யும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, இந்தக் குழு அமைக்கப்பட்டதன் முக்கிய நோக்கம் என்ன? தற்போது ஏதாவது அறிக்கை அனுப்பியிருக்கிறார்களா?

[1975 மார்ச் 8

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, குழு அமைக்கப்பட்டதன் நோக்கத்தைத்தான் குறிப்பிட்டேன். பள்ளிக் கல்விக்கும் கல்லூரிக் கல்விக்கும் ஆகும் செலவினங்களை ஆராய்ச்சி செய்யும்; இப்பொழுது இருக்கும் நிதி வசதிகளை வைத்துக்கொண்டே சிக்கனத்துடனும் திறனுடனும் கல்வித் துறையில் இம்மாநிலம் அடையக் கருதியுள்ள திட்ட இலக்குகளை அடைவதற்கான வழிவகைகளை ஆராயும்படியாக அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

கல்வி பற்றிய திட்டக் குழுவிலே டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா இரண்டு ஆண்டுக் காலம் பணியாற்றி முழு விவரங்களைத் தெரிந்திருப்பதன் காரணமாக, கல்வியை இன்னும் சீர்பட, சிறப்புறச் செய்ய அவர்களுடைய சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது நோக்கம். குழு இப்பொழுதுதான் அமைக்கப்பட்டிருக்கிறது. நான்கைந்து திங்களுக்குள் அவர்கள் அறிக்கை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் திருச்சியில் நடந்த கருத்தரங்கில் (செமினார்), கல்வி முறை ரொம்ப மோசமான நிலையில் இருக்கிறது, பொதுவாக சர்க்கார் பணம் எல்லாம் விணாக்கப்படுகிறது என்று தெரிவித்திருக்கிறார். அந்தக் கருத்தையே அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறாரா? அல்லது அதே கருத்தோடுதான் இந்தக் குழுவிலும் அமர்ந்திருக்கிறாரா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அதுபற்றி நாம் எதுவும் கூறுவதற்கில்லை. பொதுவாகவே, இருவேறு கருத்துக்கள் உண்டு. இதை இன்னும் சீர்பட, செம்மைப்பட நடத்தலாம் என்ற அளவுக்குக் கருத்துக்கள் இருக்கின்றன. டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் கல்வித் திட்டக் குழுவின் தலைவராக இருந்து, இரண்டு ஆண்டுக் காலமாக எல்லாத் துறைகளைப்பற்றியும் தெளிவாக அறிந்திருப்பதன் காரணமாகவும், அவர்கள் ஒரு சிறந்த பொருளாதார வல்லுநராக இருப்பதன் காரணமாகவும், அதுமட்டுமல்லாமல், யுனெஸ்கோவுடன் இருபதாண்டுக் காலம் தொடர்பு வைத்திருந்ததன் காரணமாகவும் அவரை நியமித்திருக்கிறோம். ஆனால், அவர்களுடைய அறிக்கை முழுவதையும் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலை ஏற்படாது. அவர்களுடைய அறிக்கையைப்



1975 மார்ச் 8]

பரிசீலித்து தக்கவற்றை ஏற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு அரசுக்கு இருக்கிறது. ஆகவேதான் வல்லுநர்கள் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, நம்முடைய கல்வித் திட்டத்தில் தொழிற்கல்விக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று பல்லாண்டுக் காலமாகவே நிபுணர்கள் பலர் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். இப்பொழுது மத்திய சர்க்காருடைய ஆதரவில் நடைபெறும் சென்ட்ரல் ஸ்கூலில் வருகிற ஆண்டிலிருந்து தொழிற் கல்வியைக் கட்டாயமாக்குவதாக அவர்கள் தீர்மானித்து இருக்கிறார்கள். ஏன் நம்முடைய அரசும் தொழிற்கல்வியைக் கட்டாயமாக்கும் திட்டத்தை உடனடியாகத் தீட்டக் கூடாது? இதுபோன்று கமிட்டிகளைப் போட்டு தாமதப்படுத்துவதற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இந்தக் குழுவின் நோக்கமே, செலவினத்தைச் சீர்படுத்தி, செம்மைப்படுத்தி எப்படி சரியாக்கலாம் என்பதை ஆராய்வது தான். உறுப்பினர் கூறுவது போன்று காம்ப்ரஹென்ஸிவ் ஸ்கூல் என்ற வகையில் 10-11 வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் தொழிற்கல்வி பயிலுவதற்கான முறையில் இப்பொழுது முயற்சிகள் இருக்கின்றன. சென்ற கல்வியாண்டில் 19 உயர்நிலைப் பள்ளிகளில் இந்த முறை புகுத்தப்பட்டிருக்கிறது. வருகிற கல்வி ஆண்டில் எந்த, எந்த இடங்களில் வசதி வாய்ப்பு இருக்கிறதோ அங்கு வேளாண்மைக் கல்வி, தொழிற்கல்வி போன்று சொல்லிக்கொடுப்பதற்கான வழிவகைகளை ஆராயும்படியாகக் கூறியிருக்கிறோம். எந்த எந்த உயர்நிலைப்பள்ளியைச் சுற்றி என்ன என்ன தொழில்கள் இருக்கின்றனவோ அவற்றையொட்டி மாணவர்கள் தொடர்புகொள்வதற்கு வசதியாக அந்த அந்த உயர்நிலைப்பள்ளிகளில் உரிய கல்வியை அளிக்கலாம். விக்கிரவாண்டிக்குப் பக்கத்தில் ஒரு பெரிய 'கேர்' நிறுவனம் 15 இலட்ச ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்ட ஒரு ஓர்க்ஷாப் இருக்கிறது. அந்த ஓர்க்ஷாப்பில் மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்கும் வகையில் விக்கிரவாண்டி உயர்நிலைப்பள்ளி காம்ப்ரஹென்ஸிவ் ஸ்கூலாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த எண்ணத்தின் அடிப்படையில்தான் வரும் ஆண்டிலும் திட்டங்கள் தீட்ட இந்த அரசு எண்ணியிருக்கிறது.

[1975 மார்ச் 8

**திரு. கு. காமாட்சி :** தலைவர் அவர்களே, இப்பொழுது சென்ட்ரல் ஸ்கூலில் ஸ்கூல் எஜுகேஷன், அதற்குப் பிறகு காலேஜ் எஜுகேஷன் என்று இரண்டு முறையை மட்டும் வைத்து, இடையிலே யிருக்கும் பி.யு.சி. யை எடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறதே அதே முறையை மற்ற பள்ளிகளிலும் கொண்டு வருவது குறித்து இந்தக் குழு ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர் களே, இந்தக் குழு அதைப்பற்றி ஆராயாது. அதற்கென்று தனிக் குழு நியமித்திருக்கிறோம். அகில இந்திய அடிப்படை யிலே வேறுபல மாநிலங்களிலுள்ள நிலைமையையொட்டி வரத் தக்க அளவிலும், கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் எல்லோரும் ஒருமனதாக ஏற்றுக்கொண்ட வகையிலும் 10 பிளஸ் 2 பிளஸ் 3 என்ற முறையைத்தான் எல்லோரும் பயன்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. அதைப்பற்றி ஆராய் வதற்குத்தான் தனிக் குழுவொன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

THIRU N. DENNIS : For the effective use of the resources allotted for education, may I know from the Hon. Minister whether there are proposals under consideration of Government to appoint a separate Director for Elementary Education?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அதை நான் அடிக்கடி இங்கே எடுத்துச்சொல்லியிருக்கிறேன். துவக்கப் பள்ளிகள், உயர்துவக்கப் பள்ளிகள், உயர்நிலைக் கல்வி ஆகியவை ஒன்றுக்கொன்று இணைந்து இருப்பதன் காரணமாக, அவற்றைக் கண்காணிக்கின்ற பொறுப்பு மாவட்டக் கல்வி அதிகாரி, மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி ஆகியவர்களுக்கு இருக்கிறது. தனியாகப் பிரிப்பது என்ற வகையில் வரும்போது, உயர்துவக்கக் கல்வியைத் தனியாகப் பிரிக்கவேண்டும். அப்படி யானால், 9—10—11 வகுப்புகளை உயர்நிலைப்பள்ளிக்கென்று தனியாக ஆக்கினால்தான், அந்த நிலைமைகள் வரும். ஏனென்றால் துவக்கப் பள்ளி என்னும்போது, ஐந்து வகுப்புகள் வரை வருகின்றன. உயர் துவக்கப்பள்ளி என்னும்போது 8-வது வகுப்பு வரை வருகிறது. என்றாலும், உயர்நிலைப்பள்ளியோடு 6, 7, 8 வகுப்பு களையும் சேர்த்திருக்கிறோம். இரண்டையும் சேர்த்திருப்பதன் காரணமாக நாம் ஒரே இயக்குநரின் கீழ் வைக்கவேண்டியிருக் கிறது. என்றாலுங்கூட இணை இயக்குநர்கள் இரண்டு பேர்களில் ஒருவர் உயர்நிலைப்பள்ளிகள் முழுவதையும் கவனித்துக்கொள்ள



1975 மார்ச் 8]

வேண்டும் என்றும், ஒருவர் துவக்கப்பள்ளிகள் முழுவதையும் கவனித்துக்கொள்ள வேண்டும் என்றும், இதில் தொடர்பு ஏற்படுத்துகிற அளவுக்கு கோ-ஆர்டினேஷன், கோவாப்பரேஷன் **என்ற அளவுக்கு** இயக்குநர் பார்த்துக்கொள்ள வேண்டும் **என்ற** முறை இப்பொழுது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, பல உயர்நிலைப்பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை 3,000, 4,000 என்று பெருகிக் கொண்டுபோவதால் திறமையான நிர்வாகம், தரமான நிர்வாகம் அமைய முடியாமல் இருக்கின்றன. ஆகவே, பள்ளிகளை 'பைஃபர்கேட்' செய்து, பிரித்து நடத்தக்கூடிய கோரிக்கை வரக்கூடும். அதற்காக எண்டௌமெண்ட் கட்ட வேண்டியது அவசியம்தானா என்பதையும் குழு ஆராய்ந்திருக் கிறதா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது மூலக் கேள் விக்குத் தொடர்புடையதல்ல.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, கல்விக்காக எவ்வளவோ பணம் செலவழித்தாலும், பயின்று வரும் மாணவர்கள் வெறும் க்ளார்க் உத்தியோகம் பார்க்கும் அளவில் தான் இருக்கிறார்களே தவிர, எதிர்காலத்தில் தொழில் நடத்தவோ, தொழிற்சாலைகள் அமைக்கவோ போதுமான தொழிற்பயிற்சி அளிக்கப்படுவதில்லை. ஆகவே, தொழிலில் அக்கறை செலுத்தும் வண்ணம் எஸ்.எஸ்.எல்.சி. யிலேயே தொழில் ஆராய்ச்சியில் ஈடு படுகிற வகுப்பை தனியாக அமைத்து, அவர்களைச் செயல்பட வைக்கும் நிலை அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்த நோக்கத்தின் அடிப்படையில்தான் அவர்கள் இப்பொழுது 10 ப்ளஸ் 2 ப்ளஸ் 3 என்று பிரிக்க வேண்டுமென்று வரும்பொழுது, 11 வகுப்புகளில் சொல்லிக்கொடுக்கும் சிலபசை பத்து வகுப்புகளிலேயே சொல்லிக்கொடுக்கும் ஏற்பாடு செய்து, அதற்குப் பிறகு இரண்டு ஆண்டுக் காலம் இப்படித் தொழில் துறையில் போவதற்கும், ஒரு சிலர் கல்லூரிக்குப் போகவேண்டு மென்று கருதினால், அதற்கு வகை செய்யும். இப்படி இரண்டாகப் பிரித்து, யார் யார் தனியாகத் தொழிலுக்குப் போகவேண்டும் என்று விரும்புகிறார்களோ அவர்களுக்கு விரிவான வாய்ப்பு

ஏற்படுத்த இரண்டு ஆண்டு காலத்தை பயன்படுத்தலாம் என்பது நோக்கம். பத்து ப்ளஸ் 2 ப்ளஸ் 3 குறித்து அமைக்கப்பட்டிருக்கிற குழு ஆராய்ந்து வருகிறது. அவர்கள் ஆராய்ந்து அறிக்கை வந்த பிறகு தக்க முடிவை அரசு மேற்கொள்ளும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Education and Tourism whether this Committee now appointed has been given ample scope and full freedom to make recommendations as they like or whether any restrictions have been imposed that only within the amount that is sanctioned they should plan their schemes?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே இப்போது இருக்கிற நிதி வசதியில் நாம் இந்த ஆண்டு 118 கோடி ரூபாய் கல்விக்காக ஒதுக்கியிருக்கிறோம் என்றால் அதை எப்படி பயன்படுத்தலாம் என்பதுபற்றி ஆராய்வதுதான் இந்தக் குழுவின் வேலையாக இருக்கும்பொருட்டு, குழு அமைக்கப்பட்டிருக்கின்றது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இப்போது ஆரம்பக் கல்வியில் குறிப்பாக கிராமப்புறங்களில் 'ட்ராப் அவுட்' அதிகமாக இருக்கிறது. அதைக் குறைப்பதற்கு 8-வது வகுப்பு வரையில் கட்டாய இலவச வகுப்பு நடத்த என்ன செலவாகும் என்பதைப்பற்றி ஆராய இந்தக் குழுவுக்கு 'டர்ம்ஸ் ஆஃப் ரெபரன்ஸ்' கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதை ஒரு கொள்கையாக வைத்து ஆராயவேண்டுமென்று நாம் கருத்து தெரிவிக்கவில்லை. அதைப்பற்றி ஆராய்ந்து குழு எடுத்துச் சொல்லுமானால் அரசு அதை ஏற்றுக்கொள்ளும். அந்த வகையில்தான் இப்போது அரசு இருக்கிறது. இப்போதே ஏராளமாக பணம் செலவு செய்தபோதிலும் 6-வது வகுப்புக்கு வருகிறபோது நூற்றுக்கு 51 பேர்கள் நின்றுவிடுகிறார்கள்; 49 பேர்கள்தான் வருகிறார்கள். நின்று விடுகிறவர்கள் எண்ணிக்கையை குறைக்க வேண்டுமென்ற நோக்கத்தில்தான் மதிய உணவுத் திட்டம், மூன்றாவது வகுப்பு வரையில் இலவசமாக புத்தகங்கள், சிலேட்டுகள் போன்ற பொருட்களை வாங்கிக் கொடுக்கும் திட்டம் ஆகியவைகளை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம். மேலும் என்ன செய்யலாம் என்பது பற்றி இந்தக் குழு ஆராய்ந்து கருத்து தெரிவிக்குமானால் அரசாங்கம் அதை ஏற்று உரிய நடவடிக்கை எடுக்கும்.



## வெள்ளகோயில் அரசு உயர்நிலைப் பள்ளி

* 237 வினா—**திரு. மு. பழனிசாமி :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம், வெள்ளகோவில் அரசு உயர்நிலைப் பள்ளியில் 1973-74-ம் கல்வி ஆண்டில், மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட ஸ்பெஷல் பீஸ் பணத்துக்கு ரசீது கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கு என்ன காரணம்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :**

(அ) ஆம்.

(இ) கோவை மாவட்டத்தில் 1971-ம் ஆண்டிற்குப் பிறகு அரசினர் (கழக) உயர்நிலைப்பள்ளிகளுக்கு எழுது பொருள் அச்சுத்துறை இயக்குநரால் ரசீது புத்தகங்கள் விநியோகிக்க இயலவில்லை, ஆகையால் கோவை மாவட்டம் வெள்ளக்கோவில் அரசினர் (கழக) உயர்நிலைப்பள்ளியில் 1973-74-ம் ஆண்டில் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட தனிக் கட்டணத்திற்கு ரசீது கொடுக்கப்படவில்லை. ஆனால் வசூலிக்கப்பட்ட தொகை முழுவதும் அவ்வப்போது உரிய நிதியில் சேர்க்கப்பட்டுள்ளது. அதுபற்றி மாவட்ட கல்வி அதிகாரியும், மாவட்ட முதன்மை கல்வி அதிகாரியும் ஆராய்ந்து அறிக்கை தந்திருக்கிறார்கள்.

## சங்ககிரி மலையிலுள்ள கோட்டை

* 238 வினா—**திரு. வ. முத்து :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், சங்ககிரி மலை மீதுள்ள திப்பு சுல்தான் கோட்டையை புதுப்பித்து மக்கள் பார்த்துச் செல்லும் இடமாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. வ. முத்து :** தலைவரவர்களே, இந்த திப்புசுல்தான் கோட்டையைப் புதிப்பித்தால் ஏராளமான மக்கள் வந்து பார்த்துச்சொல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, சுற்றுலா வாரியத்தின் மூலமாக அதைப் புதுப்பித்து, ஒரு சிறப்பிடமாக ஆக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, சேலம் மாவட்டம் சங்ககிரி மலையில் இருக்கிற திப்புசுல்தான் கோட்டை மத்திய தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அந்தக் கோட்டையைப் புதுப்பிக்கவோ அல்லது வேறு ஏதாவது செய்யவேண்டுமோ என்றாலும் மத்திய அரசுதான் செய்ய வேண்டியிருக்கிறது. ஏராளமான மக்கள் அந்தக் கோட்டையைப் பார்க்க வருகிறார்கள் அல்லது வருவார்கள் என்ற குறிப்பு கிடைத்தால் அதற்கேற்றவாறு வருகின்றவர்களுக்கு என்னென்ன வசதிகள் செய்ய வேண்டும் என்பதைப்பற்றி சுற்றுலாத் துறை ஆராயும். அது பற்றிய செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, மேட்டூர் அணையில் தண்ணீர் வற்றிவிட்டதால் அங்கே புதிதாக ஒரு கோட்டை—திப்புசுல்தான் கோட்டை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதை மக்கள் பெருவாரியாக சென்று பார்த்து வருவதாக பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன. இன்னும் சில கோயில்களும் அங்கே காணப்படுவதாகச் சொல்கிறார்கள். பண்டைக்கால புகழ் வாய்ந்த கோயில்களும், பழைய திப்புசுல்தான் கோட்டையும் அங்கே காணப்படுகின்ற வாய்ப்பைப் பயன்படுத்தி அந்த இடத்தை ஒரு சுற்றுலா சிறப்பிடமாக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அந்தப் பாழான கோட்டையும், கோயில்களையும் புதுப்பித்து, சுற்றுலா சிறப்பிடமாக மாற்ற வேண்டுமென்றால் மேட்டூர் அணையை வேறு எங்காவது மாற்ற வேண்டியிருக்கும். மேட்டூர் அணையும் இருக்க வேண்டும், அதில் தண்ணீரும் தேங்க வேண்டுமென்றால், இப்படியே விட்டுவிட வேண்டும். அணையில் தண்ணீர் தேங்கும்போது அவை மீண்டும் மூழ்கிப் போகும். மேட்டூர் அணை அமைக்கப்படும்போதே அந்த வட்டாரத்தில் இருந்த சில பல கோயில்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டிருக்கின்றன ; சில பல கிராமங்கள் கூட மாற்றப்பட்டிருக்கின்றன. ஆக, மறு



படியும் தண்ணீர் வந்தால் அவைகள் எல்லாம் மூழ்கிவிடும். ஆகவே கோட்டையைப் புதுப்பிப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**திரு. கு. காமாட்சி :** தலைவரவர்களே, மேட்டூரில் இந்த மாதிரியான ஒரு வாய்ப்பு கிடைப்பது மிக அரிது. ஆகவே, அமைச்சரவர்கள் தயவுசெய்து அந்த இடத்திற்கு சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்துச்சென்று காண்பிக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு சேர்ந்து, எந்த நேரத்தில் எந்த பகுதிக்குப் போகவேண்டுமென்று விரும்பினாலும் அதற்கு ஏற்பாடு செய்ய அரசு தயாராக இருக்கிறது. ஆனால் திப்புசுல்தான் கோட்டையைத்தான் பார்க்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. அதைவிட பெரிய கோட்டைகள் எல்லாம் இருக்கின்றன. தண்ணீர் வற்றிவிட்டதால் மூழ்கி இருந்த ஒரு சில பகுதிகள் தெரிகின்றன. இன்றைக்கு வெளிவந்த காலை பத்திரிகைகளில்தான் அந்த செய்தியை நான் பார்த்தேன். தண்ணீர் வந்தால் மீண்டும் அவை மூழ்கிவிடும். ஒரு சில பகுதிகள்தான் தென்படுகின்றன ; அதனால் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அதைக் காண்பிக்க வேண்டுமென்ற அவசியம் ஏற்படவில்லை.

**திரு. தி. பொன்னுமலை :** தலைவரவர்களே, சங்ககிரி கோட்டையை பார்க்க மக்கள் அதிகமாக வருகிறார்கள், போகிறார்கள் என்ற தகவல் வந்தால் அதை புதுப்பிப்பது பற்றி யோசிக்கலாம் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். சங்ககிரி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ள இந்த கேள்வியை வைத்து, அந்தக் கோட்டையை புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, சங்ககிரி மலைக் கோட்டை மத்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சி துறையிடம் இருக்கிறது. அதை ஒரு சுற்றுலா சிறப்பிடமாக ஆக்க வேண்டுமென்றால் தினம் எவ்வளவு பேர் வருகிறார்கள் என்பதைப்பார்த்துதான் யோசனை செய்ய வேண்டும். செய்யப்படுகின்ற செலவுகளுக்கு ஏற்ற வகையில் 'ரிட்டர்ன்' கிடைக்க வேண்டும். அது அல்லாமல் வேறு எவ்வளவு முக்கிய

மான காரியங்களோ செய்யப்பட வேண்டியிருக்கும்போது, அங்கே கொண்டுபோய் பணத்தைப்போடுவது சரியல்ல. ஆகவேதான் அதுபற்றிய செயற்குறிப்பு அரசிடம் இல்லை என்று ஏற்கெனவே சொன்னேன்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, இந்தக் கோட்டை மத்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையிடம் இருப்பதாகச் சொன்னார்கள். இந்தக் கோட்டையைப் புதுப்பிப்பதற்கான குறிப்பு எதையாவது நம்முடைய அரசு மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறதா? இல்லை என்றால் இனி மேலாவது இந்த திப்புசுல்தான் கோட்டையை புதுப்பிக்க அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதுபற்றிய எண்ணம் அரசுக்கு இல்லை. காரணம் அதைவிட முக்கியமாகச் செய்யப்பட வேண்டிய வேறு சில பல காரியங்கள் இருக்கின்றன. தஞ்சை கோயில், கங்கைகொண்ட சோழபுரம் கோயில், வேலூர் கோட்டை இவைகளைத்தான் மாநில அரசின் கட்டுப்பாட்டில் விட வேண்டுமென்று திரும்பத் திரும்ப எழுதிக் கொண்டிருக்கிறோம். அவர்கள் முடியாது, முடியாது என்று எழுதிக் கொண்டிருக்கிறார்கள். சிறு சிறு இடங்களை எல்லாம் மத்திய அரசின் பராமரிப்பில் விட்டுவிடுவதுதான் நல்லது. ஆகவே, அதைக் கேட்க வேண்டியதில்லை. ஏதாவது செய்ய வேண்டுமென்று நாம் நினைத்தால் கேட்கலாம். இப்போது மகாபலிபுரம் மத்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையிடம் இருந்தாலும் ஏராளமான மக்கள் அங்கு வந்து செல்வதால் அவர்களுக்கு வேண்டிய சில பல வசதிகளை நாம் செய்து கொடுக்கிறோம். அதைப்போல திப்புசுல்தான் கோட்டையும் வந்தால் சுற்றுலா சிறப்பிடமாக முயற்சி செய்யலாம்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, திப்புசுல்தான் போன்ற மாவீரர்கள் ஆண்டு, அவர்கள் தொடர்பான கட்டடங்களை எல்லாம் நாம் பேணிப் பாதுகாத்து வருகிறோம். திப்புசுல்தான் முதல் சுதந்திர இயக்க மாவீரன். மாவீரர்களை நினைவூட்டும் வகையில் கட்டபொம்மன், மற்றவர்கள் கோட்டைகளைப் புதுப்பித்து, அந்த பாரம்பரியத்தை நிலைநிறுத்த முயற்சி செய்கிறோம். அந்த அடிப்படையில் சுதந்திர இயக்கத்தின் முதல் மாவீரன் திப்புசுல்தான் கோட்டைகள், அவர் வாழ்ந்த இடங்கள் இவைகளை



நம்முடைய அரசு எடுத்து, தன்னுடைய கண்காணிப்பில் வைத்து பராமரித்து வர நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மத்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையும், மாநில அரசும் பல முக்கியமான கோட்டைகளை புதுப்பித்து வருகிறார்கள். அவை தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக இருக்க வேண்டும். கிருஷ்ணகிரி கோட்டை, செஞ்சிக் கோட்டை கூட திப்புசுல்தான் கோட்டைகள் என்றுதான் சொல்கிறார்கள். அவைகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

சுற்றுலா வளர்ச்சி செய்ய வேண்டுமென்று கேள்வி. அதற்கு பெருமளவில் மக்கள் வந்து செல்கிறார்களா, அங்கே தங்குகிறார்களா என்பதைப் பார்த்து, அதற்கு ஏற்ற முறையில் என்னென்ன வசதிகளைச் செய்ய வேண்டுமென்று ஆராய்ந்துதான் செய்ய வேண்டும். ஸ்னாக்பார் ஏற்படுத்த வேண்டுமா, சிறிய ஓட்டல் ஏற்படுத்த வேண்டுமா, அல்லது பெரிய ஓட்டல் ஏற்படுத்த வேண்டுமா, பாதைகள் எப்படி அமைக்கப்பட வேண்டும், தங்கும் விடுதிகள் எந்த அடிப்படையில் அமைய வேண்டும் என்பவைகளைப் பார்த்து—பயணிகளின் எண்ணிக்கையை பார்த்துதான் சுற்றுலா வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்ய முடியும்.

Thiru K. S. KOTHANDARAMIAH : Apart from the Tippu Sultan palace there, Sangagiri hills was a historical place in the ancient Kongu Kingdom. The District Gazeteer, Salem, gives a lot of information about it. May I know from the Hon. Minister whether he will make arrangements to gather historical facts that can be had from that hills and publish?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இப்போது கூட 'டிஸ்டிரிக்ட் கெசட்டியர்' எல்லாம் மீண்டும் புதுப்பித்து வெளியிட முயற்சி செய்து வருகிறார்கள். 4, 5 மாவட்ட கெசட்டியர் மீண்டும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சிறந்த செய்திகள் எல்லாம் அதில் வந்திருக்கின்றன. அதை மீண்டும் புதுப்பிக்க அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இந்த திப்புசுல்தான் கோட்டையை வைத்து, அவர்கள் எவ்வளவு எளிய வாழ்க்கை நடத்தினார்கள் என்பதை கர்நாடக அரசாங்கம் பயணிகளுக்கு

விளக்கிச் சொல்கிறார்கள். அதைப்போல நம்முடைய தமிழ் நாட்டிலும் அவர்களுடைய கோட்டைகளில் ஏதையாவது ஒன்றை புதுப்பித்து அங்கே அவர்களுடைய வாழ்க்கையை விளக்கிச் சொல்ல சுற்றுலா வளர்ச்சித் துறையின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற கருத்து சீரிய கருத்து. அதைப்பற்றி நாம் ஆராயலாம். எந்தக் கோட்டை அதுபோன்ற சின்னத்தை ஏற்படுத்துவதற்கு ஏடுப்பாக இருக்கும் என்பதை ஆராய்ந்து அந்த முயற்சியில் ஈடுபடலாம். ஆனால் இன்றைக்கு நம்மிடம் இருப்பது எல்லாம் இடிந்துபோன சிலபல கோட்டைகள். சிலபல மண்டபங்கள், சிலபல இடங்கள்தான் இருக்கின்றன. எந்த இடத்தை எடுத்தாலும் புதியதாக அமைக்கப்படுகிற சித்திரங்கள், சிற்பங்கள், பதுமைகள் மூலமாகத்தான் அந்த வரலாற்றை எடுத்து விளக்க வேண்டியதாக இருக்கும். அதற்கு எந்த இடத்தை பயன்படுத்தலாம் என்பதை ஆராயலாம்.

**திரு. கோ. இளங்கோவன் :** அமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்தில் தஞ்சை கோவில், வேலூர், கோவில், இதுபோன்ற கோட்டைகளை மத்திய சர்க்கார் மாநில அரசின் பொறுப்பில் கொடுக்கவேண்டும் என்றார்கள். அப்படி தஞ்சை கோவிலை கொடுக்காத காரணத்தினால்தான் ராஜராஜன் சிலையைச் செய்து கோவிலுக்கு வெளியே வைத்திருக்கிறார்கள். நாள்தோறும் நூற்றுக்கணக்கானவர்கள் வந்து அதனைக் கண்டுகளிக்கிறார்கள். அதற்கு மேல் கீற்றுக்கொட்டகைதான் இருக்கிறது. அங்கே நல்லதொரு மண்டபத்தை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரம் குறிப்புகளில் இல்லை.

**திரு. தொ. ப. சீனிவாசன் :** தலைவர் அவர்களே, வேலூர் கோட்டையில் உள்ள ஆலயத்தில் பூஜைகள் நடக்கவேண்டுமென்று வடாற்காடு ஆஸ்திகர்கள் போராட்டம் நடத்திக்கொண்டிருந்தார்களே, முன்பு அதற்கு அனுமதி அளிக்க மத்திய அரசு மறுத்து விட்டது என்றாலும், அதனை திரும்ப மறுபரிசீலனை செய்யும்படியாக மத்திய அரசை நமது மாநில அரசு வற்புறுத்துமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ள மத்திய அரசு இணங்கவில்லை.



**திரு. கே. எ. வகாப் :** திப்புசுல்தான் தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை முதலாவதாக எதிர்த்து நின்ற சுதந்திர போராட்ட வீரர் என்ற சிறப்பு பேசப்பட்டது. மேட்டூர் அணையில் தண்ணீர் குறைந்திருப்பதனால் திப்புசுல்தான் கோட்டை கூட வெளியில் தெரிவதாகச் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் சங்ககிரி கோட்டைக்கு வாருங்கள்.

**திரு. கே. எ. வகாப் :** சங்ககிரிக்கோட்டையைப்போல வந்தவாசியிலும் ஒரு கோட்டை இருக்கிறது. இந்தக் கோட்டைகள் எல்லாம் பாதுகாப்பில் இருப்பதாகச் சொல்கிறார்கள். யார் பாதுகாப்பில் இருக்கிறது? வந்தவாசி கோட்டையில் இருந்து ஒவ்வொரு கல்லாக வீடுகள் கட்ட எடுத்துக்கொண்டுதான் போகிறார்கள். அப்படியின்றி அதனை நல்ல பாதுகாப்பில் வைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலில் கூறியதுபோல மத்திய தொல்பொருள் ஆராய்ச்சித்துறையின் பாதுகாப்பில் சில கோட்டை கொத்தளங்கள் இருக்கின்றன. மாநில அரசும் சில கோட்டை கொத்தளங்களைப் பாதுகாத்து வருகிறார்கள். வந்தவாசி கோட்டைபற்றிய தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதன் விவரங்களைச் சொல்லலாம்.

**திரு. தோப்பூர் திருவேங்கடம் :** மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறபோது திப்புசுல்தான் வரலாற்றை விளக்குகின்ற முறையில் ஏதாவது ஒரு கோட்டையைத் தேர்ந்தெடுத்து அதற்கான சின்னங்களை அமைக்கலாம் என்றார்கள். வேலூரில் திப்புசுல்தான் வாரிசுகள் இருக்கிறார்கள். ஆகவே, வேலூரில் ஒரு நினைவு மண்டபம் எழுப்ப முன்வருவார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலில் கூறியபடி அது ஆராயப்படவேண்டிய ஒன்று. திப்புசுல்தான் மகன்களை வேலூர் கோட்டையில் சிறைவைத்ததாகவும் வரலாறு இருக்கிறது. எந்த இடத்தில் நினைவுச் சின்னம் ஏற்படுத்துவது நல்லதாக இருக்கும் என்பதுதான் ஆராயப்பட்டு முடிவு செய்ய வேண்டிய ஒன்று என்று தெரிவித்தேன்.

**திரு. சி. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, சங்ககிரி திப்புசுல்தான் கோட்டை மத்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சி துறையின் பாதுகாப்பில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சேலம் மாவட்ட மக்கள் அந்தப் பழங்காலக் கோட்டையை ஆயிரக்கணக்கில் சென்று பார்த்து வருகிறார்கள். நமது மாநில அரசே மத்திய அரசுக்கு எழுதி அந்தக் கோட்டையை உடனடியாக பழுது பார்க்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அங்கத்தினரே சென்று பார்வையிட்டு வந்தாரா என்கிற ஐயப்பாடு இருக்கிறது. அந்தக் கோட்டையில் ஒன்றும் இல்லை. அது எந்த அளவுக்கு மக்களைக் கவர்கின்ற நிலையில் உள்ளது என்பதையே ஆராயவேண்டும்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** நமது தமிழக அரசு பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் கோட்டையைக் கட்டியதுபோல திப்புசுல்தான் நினைவாகவும் தமிழகத்தில் ஒரு இடத்தில் நினைவுச் சின்னம் அமைக்க ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதைத்தான் முதலில் குறிப்பிட்டேன். எந்த இடத்தில் அமைப்பது சீரியதாக இருக்கும் என்பதுதான் ஆராயப்படவேண்டும்.

**திரு. எம். சுரேந்திரன் :** கோட்டையில் கோவில்கள், சர்ச்சுகள், மசூதிகள் போன்றவற்றை நினைவுச்சின்னங்களாக வைத்திருக்க வேண்டியது அவசியம் இல்லையெனத் தெரிகிறது. இருந்தாலும் கோட்டையில் வாழ்ந்தவர்கள் எப்படி வாழ்ந்தார்கள், என்பதை நினைவில் கொள்ளவேண்டியது அவசியம்—கோட்டைவிடுகின்றவர்கள் இருக்கிறார்கள். கோட்டைவிட்டவர்கள் இருக்கிறார்கள். இதை நினைவில் கொள்ளத்தக்க வகையில் சின்னங்கள் அமைக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** வரலாற்றுச் சிறப்புடைய பல்வேறு இடங்களைப் பாதுகாக்கவேண்டியதாக இருக்கிறது. ஒவ்வொரு கோட்டை கொத்தளத்திற்கும் வரலாற்றுப் பின்னணி இருக்கிறது. திருமலை நாயக்கர் மகாலை எடுத்துக் கொண்டால் அதுவே சிறப்புமிக்க இடமாக இருப்பதனால் அதைக் கலைக்கூடமாக மாற்றி அமைக்க மூன்று நான்கு லட்சம் ரூபாய்களை ஒதுக்கி அதைச் செப்பனிட்டு அழகுபடுத்த



நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இந்தவகையில்தான் மற்ற மற்ற கோட்டை கொத்தளங்களையும் ஆராய்ந்து என்ன என்ன இடத்தில் எப்படிப்பட்ட பணிகளைச் செய்ய முடியும், பழம்பெரும் வரலாற்றை நினைவுகொள்வதற்கு என்பதுதான் ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

(முற்பகல் 9-30)

*Rural Electrification Projects*

* 239 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether any loans have been obtained from the Rural Electrification Corporation, during January 1974 for the execution of three additional rural electrification projects in Tamil Nadu; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜெ. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) கிராம மின் வசதிக் கழகம், 1974 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் கீழ்க்கண்ட மூன்று திட்டங்களுக்கு ரூ. 57.65 லட்சம் கடனுதவி வழங்கியுள்ளது. முதல் தவணைக்கடனும் கொடுக்கப்பட்டுவிட்டது—

(1) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இளையாங்குடி வளர்ச்சி வட்டாரத்திட்டம் (ஒருங்கிணைந்தத் திட்டம்) ; இத்திட்டம், மின்சாரத்தை மேலும் விரிவு படுத்தும் நோக்கமுடையதாகும்.

(2) தற்போதைய மின் வழங்கல் நிலைமைகளை நிலைப்படுத்துவதற்கான வேப்பூர்-பெண்ணாடம் மின்சக்தி மேம்பாட்டுத் திட்டம்.

(3) தற்போதைய மின் வழங்கல் நிலைமைகளை நிலைப்படுத்தும் நோக்குடன் அமைந்துள்ள கோயம்புத்தூர் மாவட்டம் சுல்தான்பேட்டை மின்சக்தி மேம்பாட்டுத்திட்டம்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, 1974-75-ம் ஆண்டு 30 ஆயிரம் பம்பு செட்டுகளுக்குக் கனெக்ஷன் தரப்போவதாகவும், 1975-76-ல் 60 ஆயிரம் பம்பு செட்டுகளுக்குக் கனெக்ஷன் தரப் போவதாகவும் சொன்னார்கள். 1974-75 முடியப் போகிறது. எத்தனை ஆயிரம் பம்பு செட்டுகளுக்குக் கனெக்ஷன் கொடுக்கப் பட்டது? பல இடங்களில் கனெக்ஷன் கேட்டால், கம்பி இல்லை என்றும், மீட்டர் போர்டு இல்லை என்றும் சொல்லப்படுகிறது. இதைப் போக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? இப் போது சர்வீசுக்கு அதிக டிப்பாசிட் கட்ட வேண்டும் என்று நோட்டீஸ் வருகிறது. 10 நாட்களுக்குள் கட்டவில்லை என்றால் சர்வீசைத் துண்டித்து விடுவதாகக் கூறுகிறார்கள். அமைச்சர் அது பற்றிச் சொல்லலாம். ஆனால், அங்குள்ளவர்களுக்கு உத்திரவு போயிற்று என்று தெரியவில்லை. ஆகவே, உடனடியாக டெபாசிட் கட்ட வேண்டும் என்ற உத்தரவை ரத்து செய்வதற்கு அரசு உத்திரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்ட மூலக்கேள்விக்குத் தொடர்பு இல்லாத கேள்வியாக இருக்கிறது. தற்போது அது பிரச்சினையாக இருப் பதால் அதைப் பற்றி பதில் சொல்கிறேன். முதலாவதாக இந்த ஆண்டு 30 ஆயிரம் பம்பு செட்டுகளுக்குச் சர்வீஸ் கனெக்ஷன் கொடுப்பதாகவும், அடுத்த ஆண்டு 60 ஆயிரம் பம்பு செட்டு களுக்குச் சர்வீஸ் கனெக்ஷன் கொடுக்கப் போவதாகவும் திட்டம். சொல்லியது போல் பம்பு செட்டுகளுக்கு சர்வீஸ் கனெக்ஷன் கொடுக்க முயற்சி எடுக்கிறபோது அலுமினியம் கம்பி போதவில்லை. மத்திய சர்க்காரைக் கேட்டிருக்கிறோம். விவசாயத் துறை மூல மாகவும் வற்புறுத்தியிருக்கிறோம். முடிவான பதில் வரவில்லை. மாநில அளவில் இருக்கக்கூடியதை வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

அடுத்து, எதிர்பார்ப்பது போல அதிகமான கிணறுகளுக்குப் பம்பு செட்டுகளுக்குக் கனெக்ஷன் கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதிகமாக டிப்பாசிட்டுப் பணம் கட்ட வேண்டும் என்றும், உடனடியாகக் கட்ட வேண்டும் என்றும், இல்லையென்றால் டி[illegible] கனெக்ஷன் செய்யப்படும் என்றும் மின் உபயோகிப்பவர்களுக்[illegible] நோட்டீஸ் வந்திருப்பதாகச் சொன்னார்கள். அது போல் சப்[illegible] துண்டிக்கப்படக்கூடாது என்று 28-ம் தேதியன்று முதலமை[illegible] ரோடு கலந்து ஒரு உத்தரவு அன்றே போடப்பட்டிருக்கி[illegible]





அது 3-ம் தேதிக்குள் எல்லா எஸ்.ஈ. க்களுக்கும் போய்ச் சேர்ந்து விட்டது என்பதை நானே பார்த்துவிட்டேன். அங்கத்தினர்கள் கூறிய இந்த யோசனையால் மின்சார வாரியத்திற்கு வர வேண்டிய 7 கோடி ரூபாய் வருமானம் ஒண்ணே முக்கால் கோடியாகக் குறைந்து போய் விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

**திரு. கே. ரங்கநாதன்:** இந்தத் திட்டங்கள் எப்போது முடி வடையும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இதற்கான முதல் தவணை இப்போது தான் வந்திருக்கிறது. இந்த அடிப்படையில் இந்தத் திட்டம் முடிவடைவதற்கு 2, 3 ஆண்டுகள் ஆகும்.

### *Graphite deposits*

°240 *Q.*—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether any experiment has been conducted by the Government in recent times to convert graphite into diamond: and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

### *Export of Aluminium cables*

°241 *Q.*—THIRU G. R. EDMUND: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether a large quantity of Aluminium cables have been airlifted from the Aluminium Industries in this State in February-March 1974; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) இம் மாநிலத் திலிருந்து அலுமினிய கம்பிச் சுருள்களை விமானங்களில் ஏற்றிச் சென்றதுபற்றி அரசிடம் தகவல் எதுவுமில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. க. உரொ. எட்மண்ட் : இப்படி ஏதாவது நடைபெற்று இருக்கிறதா என்பதைப் பற்றி விசாரணை செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறதா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நமது மாநிலத்தில் அலுமினியம் கேபிள் தயாரிக்கின்ற நிறுவனங்கள் நான்கு இருக்கின்றன. அவை மால்கோ கம்பெனி, கோயம்புத்தூர், ஒமேகா இன்ஸ்லேட்டெட், கேபில்ஸ், மதராஸ், மதராஸ் ஒயர் புராடெக்ட்ஸ், மதராஸ், பிரேம் ராஜ் அண்டு கண்பத் ராஜ் கம்பெனி, மதராஸ் ஆகிய இந்தக் கம்பெனிகளை விசாரித்தோம். விமானம் மூலம் வெளிநாட்டிற்கு அலுமினியக் கம்பிச் சுருள்களை அனுப்பியதாகத் தகவல் இல்லை என்று தெரிவித்தார்கள்.

திரு. கே. ஏ. வகாப் : மால்கோ போன்ற பெரிய அலுமினியக் கேபிள் உற்பத்தி செய்யும் கம்பெனிகள் மத்திய அரசாங்கத்தின் அனுமதியைப்பெற்று நேரிடையாக மற்ற மாநிலத்திலிருந்து விமானத்தில் அனுப்பியிருக்கிறார்களா? நம்முடைய மாநிலத்தில் பற்றுக்குறை இருக்கும்போது இது போல் வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு எப்படி அனுமதிக்கலாம்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த நான்கு நிறுவனங்களிலும் விசாரித்தோம். மத்திய சர்க்கார் அல்லது மாநில சர்க்காரின் அனுமதி பெற்று வெளிநாட்டிற்கு விமானத்தில் ஏதும் அனுப்பவில்லை என்று தகவல் தந்திருக்கிறார்கள். மற்ற மாநிலங்களைப் பற்றித் தெரியாது.

## நகராட்சி மன்றங்கள் மலர்கள் வெளியிடுதல்.

* 242 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகராட்சி மன்றங்கள் நடத்தும் கண்காட்சிகளை ஒட்டி வெளியிடும் மலருக்கென நன்கொடை வசூலிப்பதையோ, விளம்பரத் தொகை பெறுவதையோ கட்டுப்படுத்தி நகரசபைகளுக்கு அரசு உத்தரவு ஏதேனும் அனுப்பியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?



மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) அரசாணை (நிலை) எண். 1773, ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை, தேதி 31—7—74-ன் நகல் @ அவைமுன் வைக்கப் பெற்றுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, நகராட்சி மன்றங்கள் அரசின் அனுமதியைப் பெற்று சில காரியங்களுக்காகப் பொது மக்களிடம் நன்கொடை வசூலிக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாயூரம் நகராட்சியில் ஒரு நிதி திரட்டப்பட்டது. அரசாங்கத்தின் அனுமதியைப் பெறவில்லை. சரியான முறையிலும் கணக்குகள் வைக்கப்படவில்லை என்பது நம்பகமாகத் தெரிகிறது. இதைப் பற்றி விசாரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இதைப் பரிசீலிக்க அரசு ஆவன செய்யும்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, குழுக்களை அமைத்து அரசின் ஒப்புதலைப் பெற்று அதன் மூலம் நிதி வசூலிக்க உத்திரவிட்டிருப்பதாகச் சொன்னார்கள். இதனால் பல தகராறுகள் நடைபெறுகின்றன. நகராட்சி மன்றங்களில் இருக்கக்கூடிய அலுவலர்களைக் கொண்டே வசூலிக்க அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இந்த நிதி வசூலிக்க குழுக்கள் போட வேண்டும் என்ற நிலைமை இல்லை. அவர்களே குழுக்கள் போட்டுக் கொள்கிறார்கள். தவறுகள் வந்து விடக் கூடாது என்றுதான் இதுபோன்ற குழுக்களை அமைத்துக் கொண்டு நிதி வசூலிக்க முற்படுமுன் அரசாங்கத்தின் அனுமதியைப் பெற வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறோம்.

திரு. கே. என். குமாரசாமி : சில நகர மன்றங்கள் மலர்கள் வெளியிடுவது போன்றவற்றுக்கு நிதி வசூலிக்க அரசாங்க முன் அனுமதியைப் பெற வேண்டும் என்று பல குறைபாடுகள்

@ 393–394 பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

வருகின்றன. வியாபாரத்திற்காக மலர் வெளியிடலாம். நகராட்சி மன்றப் பணிகளை விளக்குவதற்காக இது போல் மலர் வெளியிட நிதி வசூல் செய்வதைத் தடுப்பதற்குச் சர்க்கார் முன் வருமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நிதி வசூல் செய்வதில் குறைபாடுகள் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்று தான் 31—7—74-ல் அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றுச் செய்ய வேண்டும் என்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, not only Municipal Councils but also some of the Government Departments like the Revenue Department, publish souvenirs frequently. May I know whether this order applies to Government Departments also?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** வேறு தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. கே. ஏ. வகாப்:** சில நகராட்சி மன்றங்கள் சில நல்ல காரியங்களுக்காகத்தான்—விழாக்களுக்காகத்தான் இதுபோல் நிதி வசூல் செய்ய முற்படுகிறார்கள். அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றுத்தான் செய்ய வேண்டும் என்றால், விழாவே முடிந்துவிடும். தவறுகள் செய்கிற நகராட்சி மன்றங்களுக்கு வேண்டுமானால் இந்த உத்தரவைப் பொருந்தும்படியாகச் செய்து மற்றவற்றிற்கு விலக்கு அளிக்க முற்படுவார்களா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** இந்தக் கருத்திலே மாண்புமிகு உறுப்பினர்களிடையே வேறுபாடு இருப்பதைக் காண்கிறேன். ஒருவர் ஊழல் நடக்கிறது என்கிறார். இன்னொருவர் தடையே செய்ய வேண்டும் என்கிறார். இவர் அனுமதிக்க வேண்டும் என்கிறார். கொஞ்ச கால தாமதமானாலும் ஊழல் எதுவும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகத்தான் இந்த உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

**திரு. அ. தேவேந்திரன்:** தலைவரவர்களே, மாயூரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் நானும், மாயூரம் நகராட்சியிலே உறுப்பினர்களாகத் தொடர்ந்து இருக்கிறோம். எங்களுடைய நகராட்சியில், அரசாங்கம் நிதி வசூலிக்கக் கூடாது என்று வெளியிட்டுள்ள ஆணையை மீறி, எல்லா அரசாங்க அதிகாரிகளும் சேர்ந்து நிதி வசூலித்திருக்கிறார்கள். எனவே, அரசாங்க ஆணையை மீறியதற்காக, அவர்கள்பேரில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நான், முன்னதாகவே சொன்னேன், நடவடிக்கை என்று சொன்னால், எப்படி விசாரித்துச் செய்ய வேண்டுமோ, அப்படிச் செய்யவேண்டும்.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அளித்திருக்கிற அறிக்கையில் பண்ருட்டி நகரமன்றத் தலைவர் தந்திருக்கிற கடிதத்தேதியெல்லாம் கூடக் கொடுத்திருக்கிறார்கள், இதுபோல், மாயூரத்தில் நடைபெற்ற நிதி வசூலுக்கு அரசாங்கம் மூலமாக அனுமதி அளிக்கப்பட்ட விவரத்தினை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தனிக் கேள்வி போட்டால் அதை அறிவிக்க இயலும்.

**திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை:** தேர்தல் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் அமைப்பை இப்படிச் சிறு சிறு காரியங்களுக்கெல்லாம் கட்டுப்படுத்துவது நியாயம்தானா என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நியாயமாக நடந்தால், இப்படி கட்டுப்படுத்த வேண்டிய அவசியமில்லை. நியாயம் தவறியிருக்கிறது என்று உறுப்பினர்களே கருதுவதாக இருப்பதால், அதனைக் கட்டுப்படுத்த வேண்டியது சர்க்காருடைய கடமை.

**திரு. என். டென்னிஸ்:** இப்பொழுது அமவுண்ட் எவ்வளவு கலெக்ட் செய்யலாம் என்றில்லாமல் இருக்கிறது. எவ்வளவு அமவுண்ட் கலெக்ட் செய்யலாம் என்று லிமிட் கொடுக்கப்படாமலிருக்கிறது. எக்ஸஸ் அமவுண்ட் கலெக்ட் பண்ணப்பட்டால், அது எவற்றிற்குச் செலவிடப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, இது நகராட்சி மன்றத்தினுடைய கணக்கிலே சேராது. தனிக் கணக்காகப் பணம் வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். இது வரையிலே, இதற்கு எந்தவித வரைமுறையும் இல்லை. இப்பொழுதுதான், இதற்கு வரைமுறையைத் துவக்கி இருக்கிறோம். இன்னும், அதிகமாகக் கட்டுப்படுத்த, எக்சிபிஷன் நடத்த

இவ்வளவு வசூல் செய்யலாம், மலர் போட இவ்வளவு செய்யலாம், மற்ற காரியங்களுக்கு எப்படி வசூல் செய்யலாம் என்று முடிவெடுத்து, பிறகு அதையே கூடச் சட்டமாகக் கொண்டு வரலாம்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** * * *

MR. DEPUTY SPEAKER : That question is disallowed, Sir.

THIRU A. SUBRAMANIAM : Is it expunged?

MR. DEPUTY SPEAKER : When it is disallowed, it means it is expunged.

*Bridge across South Pennar*

* 243 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the proposal to construct a bridge across the South Pennar flowing between Sulagiri and Uddanapalli in Hosur taluk has been finalised; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :**

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : The South Pennar river is running in the middle of Sulagiri block. Six panchayats are on the other side of the river and they are not able to go to Sulagiri; even though the distance is only 6 to 7 miles, because of the river they have to go to Hosur and then go there; thus they have to cover 26 plus 26 miles. All investigations were made to have a causeway there and I hear even cement pipes have been brought to that place. May I know from the Hon. Minister whether he will personally inspect the site and recommend the construction of causeway there.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல், அவசியமாகப் போட வேண்டிய பாலம் என்று கருதி ஐந்தாண்டுத் திட்டத்திலே

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. என்றாலும், திடீரென்று அவற்றின் செலவினங்கள் அதிகமாகிவிட்ட காரணத்தாலே ரூ. 6 இலட்சத்திற்கு மேல் செலவாகும். அதனால், வேறு எந்தத் திட்டத்தையும் எடுத்துக் கொள்ள முடியவில்லை. 'அதர் ரோட்ஸ்' என்கின்ற தலைப்பின் கீழேதான் எடுத்துக்கொள்ள முடிகிறது. அதற்கான பண ஒதுக்கீடு இல்லாத காரணத்தாலே, அதை மீண்டும் எடுப்பதற்கான முயற்சியைச் செய்யலாம்.

THIRU B. VENKATASWAMI : It is an important road. The people are suffering a lot. When allotment is made under the Fifth Plan, first priority may be given to this road and work taken up?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** பணம் அதிகமாகக் கிடைத்தவுடனே அதற்கான அனுமதியைக் கொடுக்க முடியும்.

**உய்யக்கொண்டான் கால்வாயின் குறுக்கே பாலம்.**

* 244 வினா—திரு. கு. காமாட்சி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவெறும்பூர் தொகுதி மணிகண்டம் ஒன்றியம், நாச்சிகுறிச்சி ஊராட்சியைச் சேர்ந்த இனியனூருக்கு அருகில் உய்யக்கொண்டான் கால்வாயின் குறுக்கே பாலம் ஒன்று கட்டும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** இல்லை.

**திரு. கு. காமாட்சி :** தலைவரவர்களே, இதுவும் திரு. கோதண்டராமையா சொன்னதைப் போலத்தான். ஒரு பக்கத்திலே பெரிய கிராமம் இருக்கிறது. இன்னொரு பக்கத்திலே இன்னொரு கிராமம் இருக்கிறது. இவை இரண்டுக்கும் மத்தியிலே உய்யக்கொண்டான் கால்வாயிருக்கிறது. ஆகவே, மக்கள் சுற்றிக் கொண்டுதான் போகவேண்டும், ஐந்தாண்டுத் திட்டத்திலாவது, இத்திட்டம் பரிசீலனை செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** கனம் உறுப்பினர் அவர்கள் சொல்கிற கஷ்டம் எல்லாம் நேரிடையாகவே எனக்குத் தெரியும். இருந்தாலும், நிதிநிலை சரியாக இல்லாத காரணத்தாலே, இந்த ஆண்டு அதைச் செய்வதற்கில்லை.

## *New Housing Scheme*

* 245 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether it is a fact that a new housing scheme has been launched in recent times by the Tamil Nadu Housing Board; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :**

(அ) ஆம்.

(இ) 1972-ல் "ஒரு நாளைக்கு ஒரு ரூபாயில் வீடு, வீட்டு மனை பெறும் திட்டம்" என்ற ஒரு புதிய திட்டமும், 1973-ல் "மலிவு வீட்டு திட்டம்" என்ற மற்றொரு திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்கள் குறைந்த வருமானமுள்ள ஆசிரியர்கள், தொழிலாளர்கள் மற்றும் அரசு ஊழியர்களிடையே மிகுந்த வரவேற்பினை பெற்றுள்ளன.

**திரு. தி. பொன்னுமலை :** தலைவரவர்களே, கிராமப் பகுதிகளிலே அரிசனங்களைவிட, பின்தங்கிய மக்கள் ஏராளமாக வாழ்கிறார்கள். அரிசனங்களுக்கு இனமாக வீட்டு நிலங்களை வாங்கித் தருவதைப் போல், வீடு கட்டித் தருவதைப் போல், பின்தங்கிய வகுப்பினருக்கும் நமது அரசாங்கம் வீட்டு நிலம் கொடுத்து, வீடு கட்டித் தர ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையிலே, வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்படுகிற வீடுகளைப் பற்றிய பிரச்னை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது முதல்வர் அவர்கள் முடிவெடுக்க வேண்டிய பிரச்னை. தற்பொழுது பின் தங்கியவர்களுக்கு வீடு கட்டித் தர, அப்படிப்பட்ட திட்டம் எதும் இல்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, இந்த வீட்டு வசதி வாரிய வீடுகளிலே, ஏறத்தாழ 75 சதவிகிதம், மேல் வகுப்பினர்களுக்கும், நடுத்தர வகுப்பினர்களுக்கும் அதிக வருவாய்க்காரர்களுக்கும் செலவிடப்படுகிறது என்று சொல்லப்படுகிறதே, அதற்கு மாறாக, 75 சதவிகிதத்தை, லோ இன்கம் குரூப்புக்குச் செலவிடும்படி, ரீ ஓரியன்ட் செய்யப்படுமா என்று கேட்கிறேன்.





**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** எக்கனாமிக்கலி வீக்கர் செக்ஷனுக்கும், பொருளாதாரத்தில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் நிரம்ப வீடுகள் கட்டப்படுகின்றன. அடுத்த கேள்வியிலே அதற்கான விடைகள் எல்லாம் வருகின்றன.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, வீட்டு வசதி வாரியம் மூலமாக, புதிய வீட்டு வசதி திட்டம் துவக்கியிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டம் நகரங்களிலே தான் ஏற்பாடு செய்யப்படுகிறது. கிராமப் பகுதியிலே, அமுல் படுத்துவதில்லை. ஆகவே, அங்கு, இந்த மாதிரி—வீடுகளைக் கட்ட வசதியில்லாதவர்களுக்கு, ரூ. 5,000, ரூ. 10,000-லே வீடுகளை அரசாங்கமே கட்டிக் கொடுத்து, மாதத் தவணைக்குப் பதிலாக, வருஷத் தவணைகளிலே கடனைத் திரும்பப் பெற, அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, கிராமப் புறங்களிலே, ஏற்கனவே வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டிக் கொடுக்கப்படுகிறது. வீட்டு வசதி வாரியம் ரூ. 4,000 கடன் கொடுத்து, அவர்கள் ரூ. 1,000 போட்டு, 5 சென்ட் அல்லது 3 சென்ட் நிலத்தில் விடு கட்டுகின்ற திட்டம் இருக்கிறது. அத் திட்டத்தில், ஏராளமான கிராமங்களிலேயுள்ள மக்கள் வீடுகளைக் கட்டிக் கொள்கிறார்கள். சென்ற ஆண்டு ரூ. 75 இலட்சம் அதற்கு ஒதுக்கப்பட்டது. அதற்கு முந்திய ஆண்டு ரூ. 10 இலட்சம் அதற்கு ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு ரூ. 1½ கோடியாக அது உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவரவர்களே, சென்னை மாநகரத்தில் எக்கனாமிக்கலி வீக்கர் செக்ஷன்ஸ், பொருளாதாரத்தில் பிற்பட்டவர்களுக்காக வீடுகள் கட்டுகின்ற திட்டம் அண்மையில் ஏதேனும் உண்டா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, நான், ஏற்கனவே கூட அப்படிப்பட்ட ஒரு கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். சென்னையிலே, இப்பொழுது 600 வீடுகள் கலைஞர் கருணாநிதி நகரில் கட்டப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

[1975 மார்ச் 8

**திரு. பூ. எட்டியப்பன்:** இந்த வீட்டு வசதி வாரியத்தின் ரூ. 1 திட்டத்தில் சேர இதுவரை எத்தனை மனுக்கள் வந்திருக்கின்றன? எத்தனை பரிசீலிக்கப்பட்டு, நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, இந்த ரூ. 1 திட்டத்தில் வீடு வேண்டுமென்று, சென்னையிலே 735 விண்ணப்பங்கள்; செங்கல்பட்டிலே 3 விண்ணப்பங்கள்; வட ஆற்காட்டில் 46 விண்ணப்பங்கள்; தென்னாற்காட்டில் 1 விண்ணப்பம்; திருச்சியில் 187 விண்ணப்பங்கள்; சேலத்தில் 74 விண்ணப்பங்கள்; மதுரையில் 117 விண்ணப்பங்கள்; கன்னியாகுமரியில் 2 விண்ணப்பங்கள்; கோயம்புத்தூரில் 269 விண்ணப்பங்கள்; நீலகிரியில் 5 விண்ணப்பங்கள்; தர்மபுரியில் 1 விண்ணப்பம்; தஞ்சாவூரில் 1 விண்ணப்பம் ஆக, 1,439 விண்ணப்பங்கள் சிண்டிகேட் பாங்கின் சார்பிலே வசூலிக்கப்பட்டு, அவர்கள் இந்தத் திட்டத்திற்காக ரூ. 1 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். அதோடு, இந்தத் திட்டம் சிண்டிகேட் பாங்கியிலே முடிந்து, தற்பொழுது இண்டியன் வங்கி இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். மருதாசலம்:** தலைவரவர்களே, கோவையிலே, 200 விண்ணப்பங்களுக்கு மேல் வந்திருக்கின்றன என்று சொன்னார்கள். அவர்கள் விண்ணப்பம் போட்டு 1 வருஷம், 2 வருஷம் ஆகிறது. வீட்டு வசதி வாரியத்திலிருந்து இன்னும் இடம் கொடுக்கப்படவில்லை. ஆகவே, அந்தப் பகுதியிலே கட்டிக் கொடுக்கின்ற வீடுகளையாவது, அரிசனங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று, அங்கேயிருக்கிற இன்ஜினீயர்களுக்கு உத்தரவிடுவார்களா அமைச்சர் அவர்கள் என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, ஒரு ரூபாயில் வீடு என்ற அடிப்படையிலே எப்படி பணம் கட்டியிருக்கிறார்கள் என்றால், நாளொன்றுக்கு ரூ. 1 வீதம் 5 ஆண்டுகள் கட்ட வேண்டும். அப்படிக் கட்டினால் ரூ. 1,800-க்கு மேல் வரும். அந்த பணத்திற்கு ஏறக்குறைய ரூ. 200 வட்டி கிடைக்கும். அந்த ரூ. 2,000-க்கு மேல், ரூ. 8,000 கடனைத் தரப்பட்டு, ரூ. 10,000-லே வீடு கட்டித் தரப்படுகிறது. அந்தப் பணத்தை, 10 ஆண்டுகளிலே, மீண்டும் சிண்டிகேட் பாங்குக்குத் திருப்பித் தரவேண்டுமென்பது திட்டம். அந்தத் திட்டத்தின் அடிப்படையிலேதான் வீடுகள் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன்.



1975 மார்ச் 8]

**திரு. ஆ. கு. சுப்பையா:** ரூபாய்க்கு ஒரு வீடு கட்டும் திட்டம் நகரப்புறங்களிலே மட்டும் இருக்கிறதா? அல்லது கிராமப்புறங்களிலேயும் கட்டிக் கொடுக்கப்படுகிறதா? அதைப்பற்றிய விவரங்களை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இந்தத் திட்டம் தாலுகா தலைநகரங்கள் வரையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. என். குமாரசாமி:** சார், ரூபாய்க்கு வீடு கட்டும் திட்டத்தின் அடிப்படையிலே 8,000 ரூபாய் கடன் பெறுகிறோம், அந்தக் கடனை எத்தனையாண்டுகளில் திருப்பிக் கட்டவேண்டும். எவ்வளவு பேர்களுக்குக் கட்டிக்கொடுப்பார்கள்? அதிகமாகத் தொழிலாளர்கள், ஆசிரியர்கள் இருக்கக்கூடிய ஒவ்வொரு பகுதியிலும் இப்படிப்பட்ட வசதியைச் செய்துகொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே ஆண்டு வருமானம் 4,500 க்கு குறைந்த வருமானம் உள்ளவர்களுக்குத்தான் அனுமதிக்கப்படுகிறது, குறைந்த வருமானம் உள்ளவர்கள் இந்தத் திட்டத்தின் பலனை அனுபவிக்க வேண்டுமென்ற முறையில் இந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்திலே நிறையப் பேர்கள் பயன்பெறுகிறார்கள். சிண்டிகேட் பேங்க் 1,439 பேர்களை ஏற்றுக்கொண்டது. இந்தத் திட்டத்தில் சேருகிறவர்கள் 5 ஆண்டுகளில் 1,800 ரூபாய் சேமிக்கிறார்கள். அதற்கு 5 ஆண்டுகளுக்கு வட்டி 200 ரூபாய் ஆக மொத்தம் அதில் 2,000 ரூபாய் வருகிறது, இதிலே இருக்கிற முக்கியத்துவம் என்னவென்றால் நிலத்தினுடைய விலை அன்றாடம் ஏறிக்கொண்டே போகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். நிலத்தினுடைய விலையைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தத் திட்டம் உதவிபுரிகிறது. அது மட்டுமல்ல, சாதாரண மக்கள் பயன்பெறுகிறார்கள், அவர்கள் சேமிக்கத் தொடங்குகிறார்கள், வங்கிகளுக்கும் போகத் தொடங்குகிறார்கள், அவர்களுடைய சேமிப்புப் பணத்திற்கு வட்டி கிடைக்கிறது, அவர்களுக்கு வீடு கிடைக்கிறது. கட்டப்பட்ட பிறகு அந்த வீட்டில் அவர்கள்போய் குடியிருக்கிறார்கள். 15 ஆண்டுகளில் அந்த வீட்டில் இருந்துகொண்டே வாடகைபோன்று பணத்தைத் திருப்பிச் செலுத்துகிறார்கள். அந்த வகையிலே சிண்டிகேட் பேங்க் 8 ஆயிரம் ரூபாய் கடனைத் தருகிறார்கள்.

[1975 மார்ச் 8

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** புதிய வீட்டு வசதித்திட்டத்தின் கீழ் உள்ள விதிமுறைகள், நிபந்தனைகள் யாவை என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, இதற்காக சிண்டிகேட் பேங்கிலே கடன் பெறுகிறோம், இண்டியன் பேங்கிலேயும் கொடுக்கிறார்கள். சிண்டிகேட் பேங்கும், இண்டியன் பேங்கும் அந்த அந்த வீடுகளிலேயே சென்று வசூலித்துக் கொள்கிறார்கள். தொழிலாளர்கள் வங்கிகளுக்குக்கூட போக வேண்டிய நிலைமை இல்லை. நான் இந்தத் திட்டத்தைத் தீட்டினேன். உலகத்திலேயே—வீட்டு வசதி பற்றிய மாநாட்டிற்கு இந்தத் திட்டத்தை அனுப்பியபோது—உள்ளவர்கள் எல்லாம் இதைப் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** இந்தத் திட்டத்தின் கீழ் எத்தனை வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இந்தத் திட்டத்திற்காக பணம் சேகரித்துக் கொண்டிருக்கிறோம். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு வீடு கட்டிக் கொடுக்கிறோம். இப்போது நிலத்தை ஆர்ஜிதம் செய்கிறோம். சில பேர்கள் நிலத்தை வாங்குகிறார்கள். சில பேர்கள் வீடுகள் வேண்டுமென்கிறார்கள், வீடுகள் வேண்டுமென்பவர்களுக்கு வீடுகளைக் கட்டித் தருகிறோம். நிலம் வேண்டுமென்பவர்களுக்கு நிலத்தை வாங்கிக் கொடுக்கிறோம்.

**திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்:** ரூபாய்க்கு வீடு கட்டும் திட்டத்தில் எவ்வளவு பணம் கட்டிய பிறகு வீடு கட்ட ஆரம்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** ஐந்து ஆண்டுகளுக்கு சேமிக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் கட்டப்படும். கட்டிய பிறகு போய் அவர்கள் குடியிருக்கலாம்.

**திரு. ஏ. எம். இராஜா:** உலகத்திலேயே பல நாடுகளால் பாராட்டப்படக்கூடிய திட்டம் மிக நல்ல திட்டம் என்பது எல்லாம் இருந்தும்கூட இதுவரையிலே 1,400 பேர்கள்தானே இதிலே சேர்ந்திருக்கிறார்கள், என்ன காரணம், திட்டத்தில் குறைபாடா? அல்லது திட்டத்தின் நோக்கம் மக்களுக்குச் சரியாகத் தெரிவிக்கப்படவில்லையா? குறைந்தது 1 லட்சம் பேர்களாவது சேர்ந்திருக்கவேண்டுமே, ஏன் சேரவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?



1975 மார்ச் 8]

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இந்தத் திட்டத்தின் அடிப்படையைப்பற்றி நானே எடுத்துச்சொல்லிக் கொண்டிருக்கிறேன். வந்தவரையில் செய்துகொண்டு இருக்கிறோம். சிண்டிகேட் பேங்க் 1 கோடி ரூபாய் வரையில் கடன்தர முன்வந்திருக்கிறார்கள். அவர்களிடம் இந்தத் திட்டத்தை ஒப்படைத்தோம். அவர்கள் இவ்வளவு பேர்கள் சேர்த்தால் போதும் என்று நிறுத்திக்கொண்டார்கள். இண்டியன் பேங்க் இதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். வீடு கட்டும் வேலை எவ்வளவு வேகமாக நடக்கும் என்பது திரு. ஏ. எம். ராஜா அவர்களுக்குத் தெரியும். மக்களிடம் சேமிக்கும் எண்ணம் எந்த அளவிற்கு இருக்கிறது என்பதும் அவர்களுக்குத் தெரியும். சேமிக்கும் எண்ணம் வளர்ந்தால்தான் இப்படிப்பட்ட திட்டங்கள் வெற்றிபெற முடியும். அடிக்கடி மன்றங்களிலும் நிகழ்ச்சிகளிலும் இதைப்பற்றி எடுத்துச்சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

THIRU B. VENKATASWAMY: Sir, according to the statement of the Hon. Minister, in Dharmapuri district, there has been only one application. I think that is only due to lack of publicity for the scheme. May I know whether proper publicity would be given through Panchayat Unions or other agencies?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே எடுத்துச் சொன்னதைப்போல் தர்மபுரி மாவட்டத்தில் சேர்ந்து இருக்கிறார்கள். தர்மபுரியிலே குறைந்த வருவாய் உள்ளவர்கள் இதிலே சேர முன்வந்திருக்கிறார்கள். அந்த வகையிலே தர்மபுரி மாவட்டமும் இந்தத் திட்டத்தில் சேர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. தோப்பூர் திருவேங்கடம்:** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது கிராமப்புறங்களிலே 5 செண்ட் நிலமாவது வீடு கட்டுவதற்கு இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியிலே ஒரு கிராமத்திலே 5 செண்ட் நிலம் இருந்தால்தான் கிராமப்புறங்களிலே வீடுகட்டிக்கொடுக்க முடியும் என்று கடுமையான நிபந்தனையைப் போட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட விதிகளைத் தளர்த்தினால் கிராமப்புறங்களிலுள்ள மக்கள் அதிகமான பேர்கள் கடன்களைப்பெற முன்வருவார்கள். 5 செண்ட் நிலம் என்பதை 2 செண்ட் நிலம் அல்லது வீடுகட்டுவதற்குப்போதுமான அளவுள்ள நிலம் இருந்தால்கூட கடன் கொடுக்கப்படும் என்று மாற்றினால் நல்லது. அதைச் செய்வார்களா? இந்தத் திட்டத்திற்கு ஊராட்சி ஒன்றியங்களின்

[1975 மார்ச் 8

மூலமாக அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னால்தான் கிராமங்களிலுள்ள மக்களுக்கு இந்தத் திட்டம் இருக்கிறது என்பதாவது தெரியும். ஆகவே அதையெல்லாம் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** 3 சென்ட் நிலம் இருந்தால் போதும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாம் பட்டா போட்டுக் கொடுப்பதுதான் 5 செண்ட் என்ற அளவிற்குக் கொடுக்கிறோம். அந்த நிலத்திலே கட்ட அவர்கள் முன்வந்தால்கூட கட்டமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன்:** ஒரு ரூபாய்க்கு ஒரு வீடு என்பது நல்ல அழகான கோஷமாக இருக்கிறது, ஒரு ரூபாய்க்கு ஒரு வீடு என்பது ஒரு ஸ்லோகன். ஒரு ரூபாய் தினம் கொடுக்கவேண்டு மென்ற திட்டத்தைத்தான் சொல்கிறேன். ஒரு பகுதியிலே 100 பேர்கள் இருக்கிறார்கள் என்றால் அந்தப் பகுதியிலே இருக்கிற வர்கள் எல்லோருக்கும் கட்டிக் கொடுக்க வாய்ப்பு இருக்கிறதா? அப்படி வாய்ப்பிருந்தால் 1,400 பேர்கள்தான் வந்திருப்பார்கள் என்று சொல்லமுடியாது. அதிகமாக வந்திருப்பார்களே? ஜனங்கள் ஏன் முன்வரவில்லை? ஒவ்வொரு பகுதியிலும் அப்படி செய்து கொடுக்க வாய்ப்பு இருக்கிறதா? எதனால் அதிகமான மக்கள் முன்வரவில்லை? ஒரு ரூபாய்க்கு பேங்குக்கு மக்கள் அலைந்துகொண்டிருக்கக்கூடிய கஷ்டம் ஏதாவது இருக்கிறதா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வி போடுங்கள். ஸ்பீச் வேண்டாம்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** எங்கே 100 பேர்கள் சேர்ந் தாலும் கட்டமுடியும். பேங்க் தொல்லையெல்லாம் கிடையாது. இதை யார் ஏற்பாடு செய்தாலும் வரவேற்கத் தயாராக இருக் கிறோம்.

**திரு. கே. எ. வகாப்:** ரூபாய்க்கு ஒரு வீடு என்ற திட்டம் கவர்ச்சியாகத்தான் இருக்கிறது. 5 ஆண்டுகளுக்குப் பிறகுதான் நிலமே கிடைக்கிறது, அதற்குப் பிறகுதான் வீடு கட்டப்பட வேண்டும். 5 ஆண்டுகளுக்குப் பிறகுதான் கட்டமுடியும் என்றால் தகப்பன் போட்டால் மகனுக்குத்தான் கிடைக்கும் என்ற நிலைமை தான் இருக்கிறது, அதனால் காலதாமதம் ஆகிறதா? இதனைப் பற்றி ரேடியோ போன்றவற்றில் பிரச்சாரம் செய்தால் மக்கள் அதிகமாக இதைப்புரிந்துகொள்ளவும் அதிகமாகச் சேருவதற்கும் வாய்ப்பு இருக்கும். அதை செய்வதற்கு அரசு முன்வருமா?



1975 மார்ச் 8]

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** நிலத்தை இப்போதே ஆர்ஜிதம் செய்கிறோம், வீடுகட்டித்தருவதுதான் 5 ஆண்டுகளுக்குப் பிறகு. அதற்குப் பணம் இரண்டாயிரம் தேவை. அது ஐந்தாண்டுகளில் சேமிக்கப்படுகிறது, பேங்கிலிருந்து 8,000 கடனாக வாங்கப்படுகிறது, அதனால்தான் காலதாமதம் ஆகிறது. இன்னும் கேட்டால் ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு, ஆசிரியர்களுக்குத் தான் இது சிறந்த திட்டமாக அமைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*Adult schools in slum areas*

* 246 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether adult schools are being run in areas where slums are housed in Madras City; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) சென்னை மாநகரிலுள்ள தாண்டவராயப்பிள்ளை சத்திரம், கல்லறைச்சாலை, டாக்டர் சந்தோஷம் நகர், அப்பாசாமி முதலித் தெரு (சேத்துப்பட்டு), சீனிவாசபுரம், கோட்டூர்புரம், பிருந்தாவனம் முதலிய இடங்களிலுள்ள குடிசைப் பகுதிகளில் வாழும் முதியோர்களுக்கான பள்ளிகளை நாள்தோறும் புதுக் குடியிருப்பு நல்வாழ்வுப் பேரவை நடத்தி வருகிறது.

*Eradication of snails in sheep*

* 247 *Q.*—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state—

(*a*) whether there is any proposal to start a programme for the eradication of snails in the sheep at Hosur and Denkanikottah taluks; and

(*b*) if so, when it will be implemented?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (அ) & (இ) இல்லை.

(முற்பகல் 10-00)

THIRU B. VENKATASWAMY: Due to water stagnation and drinking of bad water the sheep are getting snails and so many sheep are dying. May I know from the Hon. Minister whether eradication of snails in the sheep will be taken up in Dharmapuri district, especially because lot of sheep are dying there?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, மழைக் காலத்திலே ஹோசூர் பகுதியிலே நத்தையின் மூலமாக ஆடுகளுக்கு வியாதி பரவுகிறது. இப்பொழுது மழை இல்லாத நிலையில் இதுபோன்ற நிலை அங்கே இருப்பதாகத் தகவல் இல்லை. அப்படிப்பட்ட தகவல் இருக்குமானால் அமல் படுத்தலாம்.

*New hotel at Mudumalai*

*248 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state—

(*a*) whether it is a fact that the Government propose to lease out lands in Mudumalai Sanctuary to private parties to run 'Tree-top' hotels; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (அ) & (இ) இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், இப்பொழுது முதுமலையிலே யானைகள், இன்னும் மற்ற மிருகங்களைப் பார்ப்பதற்காக அடிக்கடி மக்கள் செல்கிறார்கள். இப்பொழுது உதகையில்தான் இம்மாதிரியான வசதி இருக்கிறதே தவிர, முதுமலைக்குப் போகின்றவர்களுக்கு அந்த ஏரியாவிலே அதிகாரிகள் தங்குவதற்கான இடம் வைத்திருக்கிறார்களே தவிர, மற்றவர்களும் தங்குவதற்கான இட வசதிக்கான ஏற்பாட்டைச் செய்ய அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, தனியார் அந்த இடத்திலே விடுதி கட்ட வேண்டுமென்று விண்ணப்பித்தார்கள். மூன்று மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள்—கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த 3 செயலாளர்களும்—இந்தச் சரணாலயங்களை விஸ்தரிப்பதையொட்டிப் பேசிய அந்தக் கூட்டத்தில் தனியார்களுக்கு இம்மாதிரி



அனுமதி கொடுப்பது நல்லதல்ல என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்கு சுற்றுலாத் துறையின் மூலமாக இட வசதிக்கான ஒரு நிலையைப் பரிசீலிக்கச் சொல்லலாம்.

**திரு. எம். தேவராசன்:** தலைவரவர்களே, முதுமலை வன விலங்குகளைப் பார்ப்பதற்காக இப்பொழுது ஆண்டுதோறும் நிறைய பயணிகள் வருகிறார்கள். ஆனால் அங்கே ரெஸ்ட் ஹவுஸ்கள் போதுமானவையாக இல்லை. 'செல்வின் லாட்ஜ்'க்கு ரிசர்வேஷன் செய்ய வேண்டுமானால்கூட சென்னையிலேயிருந்து தான் செய்ய வேண்டியிருக்கிறது. அதை அங்கேயே ரிசர்வ் செய்வதற்கான ஏற்பாடுகளையும் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, அங்கே செல்கின்றவர்களுக்கு அரசாங்கம் ஓரளவுதான் வசதியைச் செய்யலாம். அதை ஒரு ஊரைப் போன்று ஆக்க முடியாது. கட்டிடங்கள் குறைவாக இருந்தால்தான் வன விலங்குகளின் சஞ்சாரம் இருக்க முடியும். சாதாரணமாக அத்தியாவசியமான தேவைகளான தங்குதல், உணவு அருந்துதல் போன்றவற்றிற்கு வசதிகள் செய்யப்பட வேண்டுமென்பது அவசியம்தான். அதற்காக அரசுத் துறையின் மூலமாகவாவது, சுற்றுலாத்துறை மூலமாகவாவது ஏதாவது மேலும் செய்ய முடியுமா என்று பார்க்கலாம்.

**திரு. கு. அ. பொம்மன்:** தலைவரவர்களே, இந்தமாதிரி மரத்தின் மீது ஹோட்டல் கட்டுவது என்ற ஒரு குறிப்பு ஏற்கனவே வனத்துறையிடம் இருந்ததே, அது கைவிடப்பட்டு விட்டதா? இப்பொழுது அமைச்சரவர்களின் பதிலில் சுற்றுலாத்துறை மூலமாகச் செய்வதுபற்றி ஆலோசிக்கலாம் என்று சொன்னார்கள். அதை வனத்துறை மூலமாகச் செய்வதே ரொம்ப இலாபமாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே, அதற்கான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, வனத்துறை மூலமாகச் செய்வது இலாபம் இல்லை என்பதற்காகத்தான் சுற்றுலாத் துறை மூலம் எடுத்தால் வங்கிகளிலிருந்து பணம் பெற்று இலகுவாகச் செய்ய முடியும். சுற்றுலாத்துறையினர்

கூட ஆலோசனை கேட்டார்கள், அதைப்பற்றி அவர்களிடத்தில் இடம் வேண்டுமென்றால் பரிசீலித்து தருவதாக பேச்சளவில் ஒத்துக்கொண்டேன். அதுபற்றித் திட்டவட்டமான பரிசீலனை வந்த பிறகு முடிவு செய்யலாம்.

## வலையர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்

*249 வினா—**திரு. த. சோனையா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள வலையர் வகுப்பினை அரிசன மக்கள் பட்டியலில் சேர்க்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :** இல்லை.

**திரு. தொ. ப. சீனிவாசன் :** * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்தக் கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் சம்பந்தமில்லை. இந்தக் கேள்வியை நான் அனுமதிக்கவில்லை.

## கோணப்பராயன்குளம் கிராமத்தில் சாலை வசதி

*250 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளித்தலை வட்டம், கோணப்பராயன்குளம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சுடுகாட்டுப்பாதை அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :** தலைவரவர்களே, குளித்தலை வட்டம் ரெங்கநாதபுரத்தில் சிற்றூரான கோணப்பராயன்குளம் கிராமத்தில் குடியிருக்கும் அரிசன மக்களுக்கு சுடுகாட்டுக்கு செல்ல பாதை அமைப்பதற்காக 7 சென்ட் நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கான பிரிவு 6 விளம்பல் வரைவு அரசினால்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





ஏற்கப்பட்டு 1974-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்பட்டுள்ளது. நிலச் சொந்தக்காரர் உயர்நீதி மன்றத்தில் நீதிப் பேராணை மனுதாக்கல் செய்துள்ளார். மேற்கொண்டு நில ஆர்ஜித நடவடிக்கைகளை நிறுத்திவைக்குமாறு உயர்நீதி மன்றம் ஆணை பிறப்பித்துள்ளது. இப்பொருள் உயர்நீதி மன்றத்தின் விசாரணையில் உள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, உயர்நீதி மன்றத்தில் அரசாங்கத்தின் சார்பாக ஏதாவது எதிர் மனுத் தாக்கல் செய்யப்பட்டதா? அப்படியென்றால் அதன் விவரம் அறியலாமா?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :** தலைவரவர்களே, நிலச் சொந்தக்காரர் உயர்நீதி மன்றத்தில் நீதிப் பேராணை மனு (டபிள்யூ. பி. 3726/74) மனுதாக்கல் செய்துள்ளார். மேற்கொண்டு நில ஆர்ஜித நடவடிக்கைகளை நிறுத்திவைக்கும்படி உயர்நீதி மன்றம் ஆணை பிறப்பித்துள்ளது. எதிர் ஆணை உறுதிப் பத்திரம் (Draft Counter Affidavit) மாவட்ட ஆட்சியாளரின் கூர்ந்த ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் எதிர் ஆணை உறுதிப்பத்திரம் தாக்கல் செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக்குறிக்கும்.)

## 2. நடைமுறைக் கேள்வி.

பொதுப்பணித்துறை அமைச்சர் அளித்த அறிக்கை குறித்து. .

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேசுவதற்கே டைம் இருக்காது, எனவே பாயிண்ட் ஆஃப் ஆர்டர்களையெல்லாம் குறைத்துக் கொள்ளுங்கள்.

[1975 மார்ச் 8

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு இங்கே பொதுப் பணித்துறை அமைச்சரவர்கள் தந்த ஒரு விளக்க அறிக்கை பற்றிய பிரச்னை வந்தபொழுது ரூல் 82-ஏ-யின்படி அந்த விவர அறிக்கை தரப்பட்டதாக இங்கே திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டது. ஆனல் இப்பொழுது 3 ஆம் தேதிய 'ப்ரீஃப் ரிகார்டில்'

"Under Rule 82 of the Tamil Nadu Legislative Assembly Rules, the Hon. Minister for "Public Works" made a statement . . . . ."

என்று இருக்கிறது. அன்று சொன்னது, ரூல் 82-லே செய்யப்பட்டது என்று திரும்பத் திரும்ப சொல்லிய நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள், இல்லை, ரூல் 82-ஏ-யின்படிதான் அந்த ஸ்டேட்மெண்ட் வழங்கப்பட்டது என்று திரும்பத் திரும்பச் சொன்னர்கள். இதுதான் சரியான ரெக்கார்ட், இந்த ரெக்கார்டில் ரூல் 82 என்று இருக்கிறது. எப்படி அன்றைக்கு 82-ஏ என்று திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதுபற்றிப் பார்த்து பிறகு முடிவு சொல்கிறேன்.

### 3. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு நில ஆக்கிரமிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, "தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு நில ஆக்கிரமிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை" அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.



1975 மார்ச் 8]

### (ஆ) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு கடன்பட்ட விவசாயிகள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, "தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, கடன்பட்ட விவசாயிகள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவை" அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

### 4. 1975-76-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்றைக்கு 16 உறுப்பினர்கள் பேசவிருப்பதால், பேசுகின்ற உறுப்பினர்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திரு. லத்தீப் அவர்கள் 20 நிமிடங்களில் தங்கள் பேச்சை முடித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டு, அவரைப் பேச அழைக்கின்றேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற 1975-76 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை ஆதரிக்கும் வகையில் ஒரு சில கருத்துக்களை இங்கே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பொதுவாக, கடந்த நான்கைந்து நாட்களாக இந்த மன்றத்திலே நடந்த விவாதங்களை நான் மிகவும் உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டு வந்தேன். இதிலே பேசியவர்கள், குறிப்பாக என்னுடைய பக்கத்திலே உட்கார்ந்துகொண்டிருக்கின்ற நண்பர்

கள், இது மக்களுக்கு வளத்தையும், நல்வாழ்வையும் அளிக்கக் கூடிய ஒரு நிதிநிலை அறிக்கையாக இல்லை என்பதாகச் சுட்டிக் காட்டினார்கள்.

நம்முடைய மாண்புமிகு அம்மையார் அவர்கள் நேற்றுப் பேசும்பொழுது ஒரு உண்மையை ஒப்புக்கொண்டு பேசினார்கள். மத்திய நிதிநிலை அறிக்கையிலே இன்றைக்கு அபரிமிதமான வரிகளை நாம் போட்டிருக்கிறோம். அதே நேரத்தில் மாநில அரசும் சுமார் 6 கோடி ரூபாய்க்கு அதிகமான வரிகளை விதிக்கும் வகையில் இந்த நிதிநிலை அறிக்கையை ஏன் சமர்ப்பிக்க வேண்டு மென்று கேட்டிருக்கிறார்கள். இதுவொரு விசித்திரமான வாதமாக இருக்கிறது. சுமார் 280 கோடி ரூபாய்க்கு புதிய வரிகளை மத்திய நிதியமைச்சரவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையின்வாயிலாக மக்கள் மீது சுமத்தியிருக்கிறார்கள். வாழ்க்கையிலே எந்தப் பொருளுக்குத்தான் வரி இல்லை என்று தேடிப்பார்க்கும் நிலையிலே இன்றைக்கு வரிகளை உயர்த்தியிருக் கிறோம். எல்லாத் துறைகளிலேயும் குறிப்பாக 'இன்டைரக்ட் டாக்ஸ்', மறைமுக வரிகளைப் போட்டிருப்பதால் ஏழை எளிய மக்கள் இன்றைக்குப் பெரிதும் பாதிக்கப்படும் வகையில் எல்லாப் பொருட்களின்மீதும் நாம் வரிகளைப் போட்டிருக்கிறோம். மக்கள் தங்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ இன்றைக்கு வரிகளைச் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

மத்திய நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற நிதிநிலை அறிக்கையினையும், நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் நிதிநிலை அறிக்கையினையும் பார்க்கும்போது சீரான நிதிநிலை அறிக்கை எது, மக்களுடைய வாழ்வுக்கு வளத்தைக் கொடுக்கக்கூடிய நிதிநிலை அறிக்கை எது என்று பாரபட்சமின்றி ஆராய்வோமானால் நிச்சயமாக அதை ஒத்துப் பார்க்கும்போது நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித் திருக்கும் நிதிநிலை அறிக்கை மிகச் சிறப்பான அறிக்கை என்பதை யாரும் மறுத்துவிட முடியாது.

நேற்றையதினம் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் மாநில நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இந்த நிதி நிலை அறிக்கை நிதிநிலை அறிக்கையே அல்ல; இங்கே இயங்கு



கின்ற சர்க்கார் ஒரு சர்க்காரா அல்லது வெல்ஃபேர் ஆர்கனி சேஷனா என்று குறிப்பிட்டார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் குறிக்கப்பட்டிருக்கின்ற விவரங்களைப் பார்த்தால் தொழு நோயாளிகளின் பிணியினை நீக்குகின்ற திட்டங்கள், ஊனம் உற்றோருக்கான திட்டங்கள், விதவைகளுக்கான திட்டங்கள், சைக்கிள்-ரிக்ஷாக்காரர்களுக்கான திட்டங்கள், இப்படி சமூக நல சங்கங்கள் செய்கின்ற காரியங்களைத்தான் இந்தச் சர்க்கார் செய்து கொண்டிருக்கிறதே தவிர, நிதிநிலை அறிக்கையில் என்னென்ன இருக்க வேண்டுமோ அவை இல்லாத நிதிநிலை அறிக்கையாக அமைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டினார்கள். எனக்குக்கூட ஆச்சரியமாக இருந்தது கேட்கும் போது.

தொழு நோயாளிகளை விட்டு விட்டு, ஏழைகளை விட்டு விட்டு, விதவைகளை விட்டு விட்டு, அகதிகளை விட்டு விட்டு, தொழிலாளர்களை விட்டு விட்டு, எந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக பட்ஜெட் சமர்ப்பிக்க வேண்டுமென்று அவர்கள் விளக்கியிருப்பார்களேயானால் நிச்சயமாக நாம் அதிலே இருந்து பயன் பெற்றிருக்க முடியும். அவ்வாறு அவர்கள் விளக்கவில்லை.

பட்ஜெட் என்றால் வரிகளைப் போடவும் உயர்த்தவும் பயன்படுத்தக்கூடிய ஒன்று என்ற நிலை நாட்டிலே உருவாகி அந்த அளவுக்கு பட்ஜெட் அறிக்கை துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது என்பதை நாம் மத்திய நிதிநிலை அறிக்கையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

'கம்பேரட்டிவ்லி' நம்முடைய நிதிநிலை அறிக்கையைப் பார்ப்போமானால் இந்த நிதிநிலை அறிக்கையிலே பண வீக்கத்தைத் தடுக்கவும், விலைவாசி ஏற்றத்தைத் தடுக்கவும், சமுதாயத்தில் உள்ள கீழ்த்தர மக்களின் நிலையை உயர்த்தவும், சமுதாயத்தில் இருக்கும் சமூக, பொருளாதாரக் குறைபாடுகளைப் போக்கவும், அந்தக் குறைபாடுகளை நீக்கி நிறைவுகளைப் பெறுவதற்கும், சமுதாயத்தில் இருக்கும் சமூக அநீதிகளைப் போக்குவதற்கும், நிதிநிலை, நீதி நிர்வாகங்களைச் செப்பனிடுவதற்கும் இன்றைக்கு நல்ல பல திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையில் காண்கிறோம் என்பதை நிச்சயமாக நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றைக்கு இருக்கும் பொருளாதாரச் சிக்கலைப் பற்றிக் கூறும்போது மிகச் சிறப்பாகத் தம்முடைய அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள் :

“ உலகெங்கும் விலைவாசி உயர்வு கடுமையாக இருந்த போதிலும், ஏழ்மைமிக்க இந்திய நாட்டுக்கு அதனைச் சமாளிக்கும் சக்தி இன்னும் முழுமையாக ஏற்படவில்லை. நிலையற்ற தன்மையில் பணத்தின் மதிப்பு ஊசலாடும்போது வருமானத்தின் உண்மை மதிப்பு ஒளியிழந்து விடுகிறது ”

என்று இன்றைக்கு இருக்கும் உண்மை நிலையை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

இந்த நிலைமைகள் ஏன் உருவாகின்றன என்பதைத்தான் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு எந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்டாலும் மத்தியில் இருப்பவர்கள்தான் நிதிநிலையை வகுக்கிறார்கள், திட்டங்களைத் தீட்டுகிறார்கள். அவர்கள் எப்படி பொருளாதாரக் கொள்கையை வகுக்கிறார்களோ அந்த அடிப்படையில்தான் ஒவ்வொரு மாநிலத்தின் பொருளாதாரமும் திசை திருப்பி விடப்படுகிறது என்பது உண்மையாகும். மத்திய அரசு சமர்ப்பித்திருக்கும் நிதிநிலை அறிக்கையின் காரணமாக பணத்தின் மதிப்பு மிகவும் குறையவும் விலைவாசி ஏற்றங்கள் அதிகமாகவும் ஆன நிலைமை உருவாகி இருக்கிறது என்பதை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

அந்த அடிப்படையில் பார்க்கும்போது இந்த நிதிநிலை அறிக்கையில் மிக முக்கியமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிக முக்கியமாகக் குறிப்பிட்டிருப்பது—மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் இல்லாமல் மத்திய அரசே குவித்து வைத்துக் கொண்டிருக்கிறது ; சிக்கல்களுக்கு மூலக்காரணம் அதுதான் என்பதை மிக விரிவாக நிதியமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையின் வாயிலாக விவாதித்திருக்கிறார்கள். பல்வேறு உறுப்பினர்கள் கடந்த நாலைந்து தினங்களாக விரிவாக விவாதித்திருக்கிறார்கள். நான்கூட இதைப் பற்றி விரிவாக விவாதிக்க வேண்டுமென்று யோசனை செய்தேன். இன்றைக்குப் பார்க்கும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பாகவும், குறிப்பாகவும், விரிவாகவும் பேசியிருக்கின்ற காரணத்தால் நான் ஒன்றை மட்டும் அதுபற்றிக் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.





மாநிலங்களுடைய அதிகாரங்கள் குறைந்து விட்டதன் காரணந்தான் மாநிலங்களின் பொருளாதாரச் சிக்கல்களுக்குக் காரணம் என்பதை யாரும் மறந்து விட முடியாது. இதற்கு மாற்றுத் திட்டம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும். அந்த அதிக அதிகாரம் வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்கிறார்கள். ஆனால் நம்முடைய அருமை நண்பர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் அந்த அதிகாரங்கள் கூடாது என்ற வாதத்தை எடுத்து வைக்கிறார்கள். நாம் யாரிடத்திலிருந்து அந்த அதிகாரத்தைப் பெற வேண்டுமென்று நினைக்கிறோமோ அவர்களே அந்த அதிகாரம் கொடுக்கப்பட வேண்டுமென்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். யார் ஸ்டேட் அடானமியைக் கொடுக்க வேண்டுமோ அந்தப் பிரதம அமைச்சர் அவர்களே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்ல ஆசைப்படுகிறேன். அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லுகிறார்கள்—

“ Mrs. Gandhi said that at present all the States find it useful to put the blame on someone else ”?

என்று சொல்லியிருக்கிறார்கள்.

‘ ஆல் தி ஸ்டேட்ஸ் ’ என்றால் என்ன அர்த்தம் ? தமிழ் மாநிலம் மட்டுமல்ல ; இந்தியாவில் இருக்கின்ற அத்தனை மாநிலங்களுக்கும் அவர்கள் இன்றைக்குச் சந்தித்துக் கொண்டிருக்கும் பொருளாதாரச் சிக்கல்களுக்குக் காரணம், அஸ்ஸாமிலும், உத்திரப்பிரதேசத்திலும், பீகாரிலும், அரியானாவிலும், இமாசல பிரதேசத்திலும்—அந்த மாநிலங்கள் எல்லாம் இந்திரா காங்கிரஸ் ஆண்டு கொண்டிருக்கும் மாநிலம்—பொருளாதாரச் சிக்கல்களுக்குக் காரணம் மத்திய அரசுதான் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இன்றைக்குத் திட்டங்களை வகுக்கும் அதிகாரத்தையோ, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய வழிவகைகளையோ, நிதி நிர்வாகங்களை செம்மையாக நடத்தவோ, நாட்டில் தொழில் வளர்ச்சி அதிகமாகப் பெருகுவதற்கான உரிமங்களைக் கொடுக்கக் கூடிய அதிகாரங்களை மாநில அரசுகளே பெற்றால்தான் நாட்டிலே இருக்கின்ற பொருளாதாரச் சிக்கலைத் தீர்க்க முடியும். இந்தச் சிக்கல்களுக்குக் காரணம் மாநிலங்கள் அல்ல, மத்திய அரசு தான் என்று எல்லா மாநிலங்களும் சொல்லுகின்றன என்று பிரதம அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1975 மார்ச் 8

இன்றைக்கு அதைப்பற்றி டாக்டர் கலைஞர் அவர்கள் மட்டுந்தான் சொல்லுகிறார்கள் என்பதல்ல. எல்லா மாநிலங்களிலும் இருக்கும் முதலமைச்சர்களும் இதைத்தான் சொல்லுகிறார்கள். அதை டாக்டர் கலைஞர் சொல்லுகிறார்; அதை பன்சிலால் சொல்லுகிறார்; சின்ஹா சொல்லுகிறார், பகுகுணா சொல்லுகிறார், சேதி சொல்லுகிறார், வெங்கல்ராவ் சொல்லுகிறார், தேவராஜ் அர்ஸ் சொல்லுகிறார் என்ற நிலைமை நாட்டில் உருவாகியிருப்பது மாத்திரமல்ல, பிரதம அமைச்சர் அவர்களே அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்:

"She has declared that all the States found it convenient to put the blame on someone else—all the States irrespective of the fact whether they are being ruled by the Congress Party or the non-Congress Party. The Prime Minister of India has declared that there is a situation which has compelled all the Chief Ministers of the States in the Indian Union to say that in the present set-up of the Government and in the present set-up of the Constitution, the States cannot function without financial autonomy and administrative autonomy. Therefore, unless and until financial autonomy and administrative autonomy and the State autonomy are incorporated as part and parcel of the Constitution of India and made into a reality, there cannot be any salvation for economic prosperity and there cannot be any social advancement and there cannot be any solution for all the economic, political and administrative lapses that we are now facing in this country".

என்று பிரதம அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் 'டிபென்ட்' செய்து பேச வேண்டிய அவசியம் என்ன?

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, எனக்குப் பாதுகாப்பு வேண்டும். பக்கத்தில் இருக்கிற உறுப்பினர் அவர்கள் கை, காலை ஆட்டுவதனால் எனக்கு கஷ்டமாக இருக்கிறது. பிரதமர் அவர்கள் சொல்கிறார் என்று, இல்லாத கேஸுக்கு கோர்ட்டில் வாதாடுகிற மாதிரி அவர்கள் வாதாடுகிறார்கள். பிரதமர் அவர்கள் மாநிலங்கள் செய்கிற தவறுகளை மத்திய அரசின் மீது சாட்டுவதற்கு இப்படிப் பேசுகிறார்கள் என்று சொல்கிறார். நம்முடைய முதலமைச்சரவர்கள் தம்முடைய தவறுகளை மறைப்பதற்கு



1975 மார்ச் 8] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

மத்திய அரசு மீது பழி போடுகிறார் என்பதை அவர் ஒப்புக் கொள்கிறார். தோழமைக் கட்சியாக இருப்பதால் எப்படி வெளிப்படையாக ஒப்புக்கொள்வது என்று இப்படி சுற்றி வளைத்துப் பேசுகிறார்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, with your permission...

MR. DEPUTY SPEAKER: Is it a point of order or is it a point of explanation? The hon. Member, Thiru A. Subramaniam, is going to speak next and he will give explanation. I am not going to allow the hon. Member to make a speech.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, it is against .....

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவரவர்களே, என்னுடைய வாதம் எல்லாம் மாநில அரசுகள் மத்திய அரசின் மீது குற்றங்களைச் சொல்லிவிட்டு தப்பித்து விடுகிறார்கள் என்பதை . . .

THIRU K. M. SUBRAMANIAM: Sir, on a point of order. No Member of this House has got the right to speak about everything. He spoke about every autonomy, except legislative autonomy. Does he mean legislative autonomy also?

THIRU M. A. LATHEEF: Sir, legislative autonomy is already there in the Constitution so far as the State Legislatures are concerned. The only thing that I want is that in the interest of the economic and administrative advancement of the State which is a constituent unit of the Indian Union, the scope and extent of power that are now kept with the Indian Union should be transferred to the State Government so that the State may be economically viable and its industrial base may be sound and the evils that stand in the way of its economy would be removed by the State Government itself without seeking the help of the Central Government. That is the position.

MR. DEPUTY SPEAKER: The hon. Member has got five more minutes.

THIRU M. A. LATHEEF: Sir, hon. Members are just trying to divert me and that is the difficulty.

தலைவரவர்களே, ஆகையினாலே தான் நான் சொல்கிறேன். இன்றைக்கு குறைகளை மாநில அரசுகள் மத்திய அரசுமீது போடுகிறது என்று சொல்கிற பிரதமர் அவர்கள், இந்த மாநில

[திரு. எம். ஏ. லத்தீப்] [1975 மார்ச் 8

சுயாட்சியை வேகமாக, வெளிப்படையாக கேட்கக் கூடிய தைரியம் படைத்த தமிழக அரசுமீது அவர்கள் சொல்லியிருப்பார்களானால் அதில் அர்த்தம் இருக்கிறது. பிரதமர் அவர்கள் எல்லா மாநிலங்களும் என்று சொல்கிறார்கள். இன்று மத்திய அரசின் மீது குறை சொல்கிற நிலைமை எல்லா மாநில அரசுகளுக்கும் ஏற்பட்டிருக்கிறதென்றால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரம் குறைவு என்பதை உணர்ந்த அவர்கள் இன்றைய மத்திய ஆட்சியின் மீது குற்றங்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகையினாலேதான் மாநில சுயாட்சி என்பது அதிக அதிகாரங்களைக் கேட்பதாக இருந்தாலும், மாநில சுயாட்சி என்ற பெயரால் சொல்வதாக இருந்தாலும் அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற நிலைமை நாட்டில் உருவாகியிருக்கிறது. பிரதமர் அவர்கள் இதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே படித்துக் காட்டினேன்.

அது மட்டுமல்ல, தலைவர்களே, பிரதமர் அவர்கள் மேலும் சொல்கிறார்கள் :

" She believed in diversity and decentralisation."

இந்த நாட்டில் இருக்கிற அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இந்த நாட்டினுடைய நிலைமைகள் பொறுத்தவரை, மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டிருக்கிற நிலைமை இருக்கிறது என்பதிலே எனக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆகையினால் அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்படவேண்டுமென்பதிலே எனக்கு நம்பிக்கை இருக்கிறது, என்று பிரதமர் அவர்கள் சொல்கிறார்கள். அதே நேரத்தில் இன்னும் சொல்கிறார்கள் :

" Individuals, groups and States should be able to develop their personalities and local initiatives and talent should be encouraged "

இந்த நாட்டில் இருக்கிற தனிப்பட்ட நபர்களும், குறிப்பிட்ட சாரார்களும் இந்த இந்திய சமஷ்டியில் இருக்கிற மாநிலங்களும் தங்களுடைய தனித்தன்மையை உணர்த்துகிற வகையிலும் தங்களுடைய திறமைகளைப் பாதுகாத்து அவைகளை நாட்டுக்குப் பயன்படுத்தும் வகையில் அவைகளை மேலும் மேலும் உயர்த்துகிற வகையில் செயல்படவேண்டுமென்பதில் பூரணமாக நம்பிக்கை கொண்டிருக்கிறேன் என்கிறார்.



1975 மார்ச் 8]

Thiru K. M. SUBRAMANIAM : Panchayat Raj...

Thiru M. A. LATHEEF : I am sorry that the hon. Member can imagine only about Panchayat. His imagination can extend only up to Panchayat but my imagination as well as the imagination of the Chief Minister and the Council of Ministers and the Members who believe in the State Autonomy extend not only to Panchayat but also to the State and the Nation. In order to ensure national unity and solidarity, we will work for the attainment of the State Autonomy. This is our birthright and whether it is to-day or tomorrow or the day after, we will see that the State, which is a constituent unit of the Indian Union will get State autonomy irrespective of the position that is now taken up by the Party to which Thiru Subramaniam belongs or the leader of his Party. That is my contention.

ஆகையினாலே அவர்கள் சொல்கிறார்கள். இங்கே சொல்லும்போது இன்னும் சொல்கிறார்கள்.

" I believe equally in unity. Without a strong Centre, there would be no united country. With what freedom, would the States then share? The State autonomy should be inseparable from the national strength . . . ."

அவர்கள் நேஷனல் ஸ்ரென்ங்த் என்று சொல்கிறார்கள். நாட்டினுடைய ஒற்றுமையோடு பிரிக்கப்படாத நிலையில் இருப்பது தான் ஸ்டேட் ஆடானமி என்று சொல்கிறார்கள்.

The word " State Autonomy "—she has accepted.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவரவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் பத்திரிகையில் எல்லோரும் படித்ததை, படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மாறான பொருள் சொல்கிறார்கள். இப்போதிருக்கிற அரசியல் சட்டம் போதிய அதிகாரங்களை மாநிலங்களுக்குக் கொடுத்திருக்கிறது. அதைக் கொண்டு மாநிலங்கள் வளர்ச்சியுறுவதற்கு முயற்சிக்க வேண்டுமென்று பிரதமர் அவர்கள் சொல்லிய கருத்தை, அதற்கு அவர்கள் மாநில சுயாட்சியை ஏற்றுக் கொண்ட மாதிரி உறுப்பினர் அவர்கள் அர்த்தம் பண்ணிக்கொண்டு, தவறான கருத்தை உண்டாக்க முயற்சிக்கிறார்கள். பிரதமர் அவர்கள் தெளிவாக,

[திரு. எ. ஆர். மாரிமுத்து] [1975 மார்ச் 8

இன்றைக்கிருக்கிற அரசியல் சட்டத்திலேயே போதிய சுய அதிகாரம் மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த சுயாட்சியை கொண்டே மாநிலங்கள் வேண்டிய வளர்ச்சியைப் பெற முடியும் என்பது பிரதமர் அவர்களின் கருத்து.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவரவர்களே, பிரதமர் கருத்து என்னவென்பதை நான் தெளிவாக்குகிறேன். ஆனால் திரு. மாரிமுத்து அவர்கள் பிரதமரின் பேச்சுக்கு இது தான் கருத்து என்று அவர் ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். அவருக்கு தெளிவாக்க வேண்டுமானால் பிரதமர் அவர்கள் தான் சொல்ல வேண்டும். ஆனால் பிரதமர் அவர்கள் தெளிவாகச் சொல்கிறார்கள். ஸ்டேட் ஆடானமியை அவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். ஸ்டேட் ஆடானமியில் தேச ஒற்றுமை காப்பாற்றப்படவேண்டுமென்பதை அவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டுமென்பதை அவர்கள் ஒப்புக் கொள் கிறார்கள். ஒப்புக் கொள்கிற தத்துவத்தை அதிகார பூர்வமாக சட்டத்தின் அடிப்படையில் செய்ய முடியவில்லை என்ற நிலைமை இன்றைக்கு இருந்தாலும் அவர்கள் ஒன்றைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு இல்லாவிட்டாலும் நாளைக்கு ஸ்டேட் ஆடானமியை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டு மென்பதை பிரதமர் அவர்கள் இன்றைக்குச் சொல்லியிருக்கும் நிலைமையில் இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சிலர் இந்த ஸ்டேட் ஆடானமி வராது என்று சொல்கிறார்கள் என்றால் எனக்கு அது ஆச்சரியமாக இருக்கிறது.

(முற்பகல் 10-30)

நாம் இன்றைக்கும் கேட்கிறோம். அன்று பேசிய உறுப்பினர் ஒருவர் சொன்னார். திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு மாநில சுயாட்சி கேட்கிறார்கள். நாங்கள் அதை எதிர்க்கிறோம். இன்று இருக்கும் அதிகாரத்தை வைத்துக்கொண்டே அவர்கள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கிறார்கள். நாளைக்கு மாநில சுயாட்சி வந்து விட்டால் உடனே என்ன செய்வார்களோ? அண்ணா அவர்கள் மாநில சுயாட்சியை ஏற்றுக் கொண்டார்கள் என்பது உண்மை. மாநில சுயாட்சி தேவை என்பது உண்மை தான். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கிறது அதனால் ஆதரிக்க மாட்டோம் என்று சொன்னார்கள். நான் அவர்களைத்



1975 மார்ச் 8] [திரு. எம். ஏ. லத்தீப்]

தெளிவாகக் கேட்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எட்மண்ட் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். மாநில சுயாட்சி என்பது திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக கேட்கப் படுகிறதா அல்லது தமிழக மாநிலத்திற்காகக் கேட்கப்படுகிறதா, நீங்கள் எந்த வகையில் புரிந்து கொண்டு இருக்கிறீர்கள்.

மாநில சுயாட்சி என்பது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அல்ல, தமிழ்நாட்டிற்குத்தான், இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களுக்கும் மாநில சுயாட்சி நாம் கேட்கிறோம் என்ற நிலைமை இருக்கிறபோது ஏன் அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடாது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாநில சுயாட்சி பெற்ற பிறகும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கும் என்ற உறுதிப்பாட்டின் அடிப்படையில்தான் அவர்கள் அதை எதிர்க்கிறார்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** அதைத்தான் நான் வாய்ப்பாக கவனித்துக் கொண்டு இருந்தேன். அவர்கள் தெளிவாக எதைச் சொல்கிறார்களோ அதைச் சொல்லட்டும். திராவிட முன்னேற்றக் கழகம் இங்கே பல்லாண்டு பல்லாண்டு இந்த மாநிலத்தில் ஆண்டு கொண்டு இருக்கும் என்பதை நம்முடைய நண்பர்கள் ஏற்றுக் கொண்டு இருக்கிறார்களா, அந்த அடிப்படையில் மாநில சுயாட்சியை எதிர்க்கிறார்களா, அதற்கு என்ன பதில் என்பதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை.

ஒன்றை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் மக்கள் சக்தி அதை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதனால்தான் மாநில சுயாட்சியை அவர்கள் எதிர்க்கிறார்கள். அது இல்லாவிட்டால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கப் போவது இல்லை. தமிழ்நாட்டிற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்ற நிலைமை உருவாகுமானால், தமிழ் நாட்டிற்கு அதிக அதிகாரங்கள் வந்து, இந்த நாட்டின் வளர்ச்சியை அதிகரிக்க முடியும். அதற்குக் குறுக்காக நீங்கள் இருக்கிறீர்கள் என்பது என்னுடைய குற்றச்சாட்டு. அதற்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டும். நீங்கள் என்ன பதில் சொன்னாலும் நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1975 மார்ச் 8

(சற்று நிறுத்தி, திரு. எட்மண்ட் அவர்களைப் பார்த்து) ஆகையால் அதற்குப் பதில் இல்லை. இதுதான் உங்களுடைய நிலைமை என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்கிறேன்.

(திரு. எட்மண்ட் எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் பேசுகிற போது அதற்குப் பதில் சொல்லுங்கள். இப்போது வேண்டாம்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவரவர்களே, அவர்கள் ரொம்ப அக்கறையோடு பேசுகிறார்கள். திங்கட்கிழமை வரையில் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள் போல் இருக்கிறது. (குறுக்கீடு) என்னுடைய பதிலை திங்கட்கிழமை சொல்கிறேன். அதுவரையில் பொறுமையாக இருக்க வேண்டுமென்று திரு. லத்தீப் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** திங்கட்கிழமை வரை நான் எடுத்துக் கொண்ட நிலை உண்மை. அதற்குப் பிறகு தங்கள் பதில் என்ன என்பதைப் பார்த்துக் கொள்ளலாம்.

நாம் இன்றைக்கு சில நிலைமைகளை உருவாக்கிச் சொன்னோம். நாங்கள் அதை நம்பிச் சொல்கிறோம். அதிக அதிகாரங்கள் மாநிலங்களுக்குத் தேவை என்பதை நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டும். அதில் உண்மை இருக்கிறது. அதை நான் உங்களைப் பார்த்துச் சொல்லவில்லை. நீங்கள் என்று சொன்னால், எல்லோரையும் பார்த்துச் சொல்கிறேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** அதிக அதிகாரங்கள் தேவை என்பதை ஒப்புக்கொள்ளாமல் இல்லை. ஏற்கனவே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் மாநில சுயாட்சி குறித்து ராஜமன்னார் அறிக்கைமீது பேசியிருக்கிறார்கள். நாங்களும் கூடுதல் அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இருக்கிறோம். ஆகவே, தவறான பிரச்சாரத்தை இந்த அவையில் ஒரு பொறுப்புள்ள உறுப்பினர் வைக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேரம் ஆகிவிட்டது; சீக்கிரம் முடியுங்கள்.



1975 மார்ச் 8]

**திரு. எம். ஏ. லத்தீப் :** முடித்துக் கொள்கிறேன். முன்பே பேசியிருக்கிறோம் என்று சொன்னார்கள். மகிழ்ச்சி. அதைத்தான் டாக்டர் கலைஞர் அவர்களும், மற்றவர்களும் எல்லா மாநில முதலமைச்சர்களும் கேட்கிறார்கள். ஆதலால், இதில் மக்களைத் திசை திருப்பி விடுகிற பிரச்னை உருவாக்கப்பட்டு இருக்கிறது என்று ஏன் சொல்ல வேண்டும்?

இந்த அவையில் பேசப்பட்ட போது, மக்களின் அபிமானத்தை இழந்து விட்ட கட்சி, மக்களுக்குக் கவர்ச்சியான ஒரு கோஷத்தைக் கொடுத்து, அந்தத் திட்டத்தின் வாயிலாக மக்களின் நம்பிக்கையை மீண்டும் பெறுவதற்காக இந்தக் கோஷத்தைக் கொண்டு வந்தார்கள் என்று குற்றச்சாட்டு இந்த அவையில் சொல்லப்பட்டது. அப்படியானால், இந்தத் திட்டம் மக்களைக் கவரும் வகையில், மக்களின் அபிமானத்தைப் பெறும் வகையில் இருக்கிற சிறந்த திட்டம், மக்கள் விரும்புகிற ஒரு திட்டம் என்பதாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பொருள். நான் தெளிவாகச் சொல்லிக் கொள்கிறேன். டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த 4½ கோடி மக்களின் நன்மைக்காக, தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காக இந்தத் திட்டத்தை, இந்த மாநில சுயாட்சிக் கொள்கையை வலியுறுத்தி வருகிறார்கள். அவர்கள் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன்.

MR. DEPUTY SPEAKER : The hon. Member has already taken 30 minutes.

THIRU M. A. LATHEEF : No, Sir, I began only at 10-10 a.m.

MR. DEPUTY SPEAKER : There are about 16 members to speak today.

THIRU J. JAMES : Point of order, Sir.

MR. DEPUTY SPEAKER : I have to inform hon. Members that 16 members have to speak to-day.

THIRU J. JAMES : Mine is a very important and serious point of order.

[1975 மார்ச் 8

MR. DEPUTY SPEAKER: May I ask Mr. James whether he will agree to curtailment of five minutes in the speech of a member of his party? Then, I will allow his point of order. We are pressed for time, now.

THIRU J. JAMES: Let me say my important point of order, Sir. தலைவரவர்களே, இந்த மன்றத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக நாங்கள் எதிர்க்கட்சியாக இருக்கிறோம். இப்போது சில மாதங்களுக்கு முன்பு ஏ.டி.எம்.கே. எங்களைவிடக் கூடுதல் பலம் வாய்ந்ததாக இருக்கிறது என்பது உண்மை தான். ஆனால் இந்த மன்றத்தில் எங்களுக்குப் பேசுவதற்குக் கொடுக்கும் சமயத்தையும், நேரத்தையும் பார்க்கிறபோது நாங்கள் எதிர்க்கட்சியாகச் செயல்படுவதற்கு இந்த மன்றத்தில் அனுமதிக்கிற முறை சரியல்ல என்று தோன்றுகிறது. ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், இன்று எதிர்க்கட்சியாக இருந்து கொண்டிருக்கிற ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு நாள் ஆரம்பத்தில் பேச வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று முறை வைத்துக் கொண்டுள்ளோம். தலைவர்கள் முதலில் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்து வந்தீர்கள். இப்போதும்கூட அந்த முறையைத்தான் கையாண்டு வருகிறோம். ஆனால் கடந்த ஏழு நாட்களாகப் பார்க்கிறேன், ஒரு நாள்கூட எங்கள் கட்சியைச் சார்ந்தவர்களை ஆரம்பத்தில் பேசுவதற்கு அழைக்கவில்லை. மற்ற அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களுக்கும் அது தரப்பட்டு இருக்கிறது. எங்களுக்குக் கொடுக்கும் நேரம் மிகவும் குறைவாக இருக்கிறது. நேற்றைய தினமும் எங்கள் கட்சியைச் சார்ந்தவர்களுக்குப் பேசுவதற்கு அனுமதி அளிக்கவில்லை. இன்றும் கூட இதுவரையில் அழைக்கவில்லை. முதன் முதலில் திரு. கே. பி. கோபால் அவர்களைப் பேசுவதற்கு இன்று அழைப்பதாகச் சொன்னீர்கள். இது காறும் அழைக்கவில்லை. எங்கள் கட்சிக்கு எந்த விதமான பாதுகாப்பும் கொடுக்கப்படவில்லை. நாங்கள் எண்ணுவது எல்லாம், ஒரு வேளை இந்த மன்றத்தில் நாங்கள் எதிர்க்கட்சியாகச் செயல்படுவதற்கு உள்ள வாய்ப்பைக் குறைப்பது என்ற ஒரு திட்டத்தை மேற்கொண்டு வருகிறீர்களோ என்று தோன்றக் கூடிய நிலையில் இருக்கிறது. இந்த மன்றத்தில் அந்த மாதிரியான காரியங்கள், நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று நான் நிச்சயமாக எடுத்துக் கூற விரும்புகிறேன்.



1975 மார்ச் 8] [Thiru J. James]

இந்த முறை நீடித்தால் நாங்கள் இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: I would like to supplement what the hon. Member Mr. James has said. The point that has been raised has been raised with great force. We have been treated with scant respect. I do not know why. Is it because the ruling party want to curry the favour of certain parties who want to eulogize them, that they are resorting to this method so far as allotment of time is concerned? Even in the discussion on Governor's Address, the initiative has been shown to another Opposition party. That right has not been granted to us. Similarly in the budget discussion we are not treated fairly. We request you only to give us a fair deal. I think the Chair would give favourable ruling regarding this point.

MR. DEPUTY SPEAKER: I am very sorry to say that Mr. James used certain expressions which amounted to a threat to the Chair. He should, being a lawyer, try to show some respect and regard for the Chair, whoever may preside here. I say there has been no discrimination in allotment of time. ADMK members had taken 150 minutes, Congress (O) 105 minutes and Ruling Party with its massive majority even though entitled to ten times the time of the Opposition has taken only 20 minutes. Actually the time of the ruling party has been curtailed and not the time of Opposition parties. There has been no discrimination at all in allotment of time to Opposition parties. Now Mr. Muthiah will address.

THIRU R. PONNAPPA NADAR: Yesterday none of our party members spoke. To-day also no member from our party has been called upon to speak so far. That is the reason why we have our legitimate grievance. so far as our party is concerned. We have got a right to say that our rights should be protected. We do not want to reflect on the conduct of the Chair or hurl any such insinuation at all. We will never do it. We have never done it also. In spite of our repeated requests, we have not been called to speak. That is why we have that legitimate grievance.

MR. DEPUTY SPEAKER: Mr. K. P. Gopal is the fourth member in the list. Yesterday his turn did not reach. I did not tell Mr. James that Mr. Gopal would be allowed to initiate the

discussion to-day. I only said that he will be called to speak and that he will be given precedence. That is all. So there has been no discrimination at all in the matter of allotment of time.

Thiru J. JAMES : Yesterday a member of the Muslim League spoke. Our Party members did not speak. But to-day also a member of the Muslim League has been asked to speak even though we are in a majority when considered to the strength of the Muslim League. Is it fair? They are five members and we are 13 members.

Thiru M. A. LATHEEF : We are six, Sir. May I know what is the time allotted to the Muslim League?

Mr. DEPUTY SPEAKER : Ninety minutes so far. The hon. Member has taken 30 minutes.

Thiru J. JAMES : They are six and we are 13 members. Their party has been given 120 minutes but our party only 105 minutes. Is it fair?

Mr. DEPUTY SPEAKER : We do not go by numerical strength. One of your party members Mr. K. P. Gopal is yet to speak to-day. I again say there has been no discrimination in the allotment of time so far and there would not be any discrimination in future also.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, விகிதாசாரப்படி அந்த அந்த கட்சிகளுக்கு நேரம் ஒதுக்க வேண்டும் என்றுதான் கேட்டுக் கொள்கிறேன். எல்லா எதிர்க்கட்சிகளுக்கும் சேர்த்து, என்று, நேரத்தைக் கணக்கிடக் கூடாது என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். எங்களுக்கு 180 நாட்கள்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 130 நிமிஷங்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட் : 180 நிமிஷங்கள். இன்றைக்கு 6-ஆவது நாள். ஐந்து பேர் பேசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்றும் பேச இருக்கிறார்கள்.



திரு. க. உரொ. எட்மண்ட் : முதல் நாள் பா
பேசும்போது மொத்தத்தில் 40 நிமிடங்கள் எடுத்
கிறார்கள். இன்றைக்கு யாருமே பேசவில்லை
காரர்கள் எல்லோருக்கும் சேர்த்து மொத்தமாக
பட்டிருக்கிறது என்றால் எதிர்க்கட்சிக்காரர்கள்
கொள்ள முடியாது. ஆளும் கட்சியினர் நிதி நி
ஆதரித்துப் பேசுகிறார்கள். தோழமை கட்சிகளு
பேசுகிறார்கள். விமரிசனம் செய்து பேசுபவர்
கிடைக்காமல் போய்விடுகிறது. ஒரு ஜனநாய
இருந்து கொண்டிருக்கிற நமக்கு, எதிர்க்கட்சி
களுக்கு பேசுவதற்குக் கூடுதல் நேரத்தை ஒதுக்க
கேட்டுக் கொள்கிறேன். எல்லோருக்கும் மொத்
எங்களால் அதை ஒத்துக் கொள்ள முடியாது எ
நிலையில் இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :
களுக்கும் தங்களுடைய கருத்தைச் சொல்
இருக்கிறது. எதிர்த்துத்தான் பேச வேண்டும்,
வேண்டியதில்லை என்று நாம் வரையறுத்து
முடியாது. முறைப்படி பார்த்தால் அதிக நேரம்
யினருக்கு ஒதுக்கப்பட வேண்டும். இருந்தாலும்
வகுத்துக் கொண்டு, பாதி, பாதி என்று நே
பிடிக்கலாம். ஆனால் இப்போது நடைமுறையில்
ஆளும் கட்சியினர் எடுத்துக் கொள்கிறார்கள். 2
கட்சிகளுக்குப் போய் விடுகிறது. 1/2 மணி
எடுத்துக் கொண்டால் அந்த நேரங் கட்டுப்ப
வதில்லை. ஒரு சில நேரங்களில் ஒரு சிறிது
எடுத்துக் கொள்ளும்படி ஆகிவிடுகிறது. எல்லாச்
இது பொருந்தும். எனவே, எல்லோரும
ஒத்துழைப்பு தந்தால் ஒரு நேர அடிப்படை
கொள்ளலாம். அடிக்கடி இந்த நேரக் கட்டுப்பா
லிதாலும் நேரம் வீணாகப் போய்விடுகிறது. இட
பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்ற போதே 15
விட்டது. இந்த நேரத்தில் யாராவது
ஒத்துழைப்பு தேவை என்று கூறிக் கொள்கிறே

[1975 மார்ச் 8

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: நாங்கள் பணிவாக இருப்பதைக் கோழைத் தனமாக இருக்கிறோம் என்று நினைத்து விடக் கூடாது. நாங்கள் இங்கு ஜால்ரா போடுவதற்கு வரவில்லை. எங்களுடைய கருத்துக்களை எங்களுக்குத் தெரிந்த வகையிலே சொல்லி வந்திருக்கிறோம். எங்களுக்கும் சம வாய்ப்பும் சம சந்தர்ப்பமும் அளிக்கப்பட வேண்டும் என்பதைத்தான் வலியுறுத்துகிறேன். எனவே நேரத்தைக் கூடுதலாக எங்களுக்கு ஒதுக்கும் விஷயத்தில் தலைவர் அவர்கள் கொஞ்சம் கடுமையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல்: உறுப்பினர் என்ற அளவில் எனக்கு ஒரு சந்தேகம். நேரம் பற்றிய விவரங்களை பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் பேசித் தீர்த்துக் கொள்கிறார்களா அல்லது இங்கே பொது விவாதத்தின் போது தலைவர் அவர்களுடன் உட்கார்ந்து கொண்டு பேசி முடிப்பதா, இது நியாயமா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: பிசினஸ் அட்வைசரி கமிட்டிக்கே நாங்கள் போக வேண்டாம் என்ற நிலைமை உருவாகி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. மு. இராசகோபால்: எதிர்கட்சியிலே இருக்கிறவர்களுக்குத் தான் நிறைய பேச சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. ஆளும் கட்சியிலே இருப்பவர்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு இரண்டொரு முறைதான் சந்தர்ப்பம் வருவதால், 234 பேர்கள் உங்களை நாங்கள் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறோமே, தொகுதி பிரச்சினைகளைப் பற்றி நீங்கள் ஏன் பேசவில்லை என்று கேட்க மாட்டார்களா? எனவே, எங்களுக்கும் சரியான படி நேரம் ஒதுக்கப்பட்டு, நாங்களும் கருத்துக்களைச் சொல்ல அவகாசம் கிடைக்கச் செய்ய வேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப்: நான் பேச ஆரம்பிக்கும்போது தான் இந்த மாதிரி பிரச்சினைகள் எல்லாம் எழுகிறது. என்னுடைய பேச்சுக்களைத்தான் ஆட்சேபிக்கிறார்கள் என்ற கருத்து உருவாகும் சூழ்நிலை இருக்கிறதோ என்று அஞ்சுகிறேன்.



1975 மார்ச் 8]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் 10.07-லிருந்து பேச ஆரம்பித்தீர்கள் 10.36 ஆகிவிட்டது. 29 நிமிஷங்கள் ஆகிவிட்டதினால்தான் திரு. முத்தையாவைக் கூப்பிட்டேன். மேலும் பேசி இன்னமும் 10 நிமிஷம் ஆகி விட்டது.

THIRU G. R. EDMUND: What the hon. Member says is not correct, Sir.

MR. DEPUTY SPEAKER: Every party has got a leader; they have certain principles and preferences: Members have to think they are members and act accordingly.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, இந்த லெவி முறையைப் பற்றி ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். உற்பத்தி குறைந்துள்ளது. ஆனால் லெவி அளவு அதிகரித்துள்ளது. இது ஒரு விசித்திரமான நிலை. அரசு இது பற்றி கவனித்து தகுந்த முடிவு எடுக்க வேண்டும்.

முதல் போக சம்பாவிற்கான லெவியைப் பாதியாகக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

லெவி நெல்லை முறையாகக் கொடுத்தவர்கள் வீட்டிலும் அதிகாரிகள் சோதனை போடுகிறார்கள். அது கூடாது என்று அவர்களுக்கு உத்தரவு அனுப்பப்பட வேண்டும்.

சாப்பாட்டிற்காக 30 குவின்டால் வரையில் வைத்துக் கொள்ளலாம் என்று அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சம்பா லெவியை இன்றைக்கு அரசாங்க விதிமுறைப்படி முழுதாக அளந்தவர்களுக்கு மூட்டைக்கு ரூ. 10 வீதம் போனஸ் அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புரொக்யூர்மென்ட்டிற்கு என்று வரும் அதிகாரிகள் விவசாயிகளைத் தொல்லைப்படுத்துகிறார்கள். கோஷாப் பெண்களிடம் கூட அந்த அதிகாரிகள் மிகுந்த கெடுபிடியாக நடந்துகொள்கிறார்கள் என்று பலவிதமான புகார்கள் வந்திருக்கின்றன.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1975 மார்ச் 8

இந்த மாதிரி விஷயத்தில் கீழ் மட்டத்திலே இருக்கிற அதிகாரிகளிடத்திலே பலவிதமான ஊழல்கள் பரவியிருக்கின்றன. ஒரு மூட்டை நெல்லை அவர்கள் லஞ்சமாக வாங்கிக் கொண்டு லெவியைப் பெறக் கூடியவர்களிடத்தில் ஒரு மூட்டை சலுகையாகக் கொடுக்கிறார்கள் என்றும் சொல்கிறார்கள்.

தாலுகாவிற்கு தாலுகா நெல் எடுத்துச் செல்வதற்குத் தடை இருக்கிறது. சென்னை போன்ற நகரங்களுக்குள் இந்த நெல் வராவிட்டால் விலை ஏற்றம் ஏற்பட்டுவிடுகிறது. இதை அரசாங்கம் கவனத்தில் கொண்டு ஒரு நல்ல முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூலி ஆட்கள் எடுத்து வருகிற கூலி நெல்லைக் கூட அதிகாரிகள் பறிக்கிறார்கள் என்று புகார்கள் வந்திருக்கின்றன. பணமாகக் கொடுப்பதில் சில சிக்கல்கள் இருப்பதால் நெல்லையே கூலியாகக் கொடுக்கிறார்கள். இந்த நெல்லையும் பிடுங்கிக் கொள்கிறார்கள். அப்படிப்பட்ட கீழ்மட்ட அதிகாரிகளை தெருவிலே நிறுத்தி வைத்துச் சுட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வறட்சிக்குக் காரணம் தண்ணீர் இல்லாமல் இருப்பதுதான். தண்ணீர் பெரும் அளவில் தங்கி இருப்பதற்காக பெரும் பெரும் ஏரிகள் ஏராளமாக வெட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் அவைகளுக்குச் சப்ளை சானல்ஸ் இல்லை. பல சானல்ஸ் திறக்கப்பட்டிருந்தும் அவைகள் எல்லாம் சிலருடைய ஆக்கிரமிப்பில் இருக்கின்றன. அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி விட வேண்டும். ஏரிகளைச் செப்பனிட வேண்டும்.

தமிழ்நாட்டில் தோல் தொழில்களுக்கு மத்திய அரசு ஒரு பெரிய பாதகத்தைச் செய்திருக்கிறது. சானலிசேஷன் என்ற முறையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதனால் ஏற்றுமதிக்குப் பெரிய பாதகங்கள் ஏற்படப்போகிறது. வாணியம்பாடியில் மட்டும் சுமார் 30 தொழில்கள் மூடப்பட்டிருக்கின்றன. இந்த நிலையிலே இன்றைக்கு மத்திய அரசு எக்சைஸ் டூடி போட்டிருக்கிறார்கள்.

காவிரி பிரச்னை வேறு இருக்கிறது. இந்த மாநிலத்திற்கு விரோதமாக மத்திய அரசு இன்றைக்கு செயல்பட்டு வருகிறது. இந்த சட்ட மன்றத்திலே தீர்மானம் போட்டிருக்கிறோம். அதற்கும் மத்திய அரசு செவி சாய்க்கவில்லை.



1975 மார்ச் 8] [திரு. எம். ஏ. லத்தீப்]

தேர்தல் கமிஷனை எடுத்துக் கொண்டால் அப்படித்தான் இருக்கிறது. இந்த மாநில சட்ட மன்றத்தில் ஒரு தீர்மானத்தை நாம் நிறைவேற்றி அனுப்பினோம். ஆறு தொகுதிகளுக்கு 7 தொகுதியாக இருக்க வேண்டும் என்று கேட்கிறோம். 39 பார்லிமென்ட் தொகுதிக்கு ஒரே ஒரு தொகுதி அதிகமாக வேண்டுமென்று கேட்கிறோம். அதைக் கூட மறுத்துவிட்டார்கள்.

ஆனால் அதற்கு மாறாக திரிபுரா, மேகாலயா, நாகாலாந்து, காஷ்மீர் போன்ற மாநிலங்களுக்கு இன்றைக்கு மத்திய சர்க்கார் நிதியிலிருந்து செலவு செய்கிறார்கள். மணிபூரில் 80 சதவீதம் மத்திய சர்க்கார் நிதியிலிருந்து செலவு செய்கிறார்கள்.

தமிழகத்திலும் அந்த மாதிரியான நிதிகள் தேவைப்படும் போது மத்திய அரசை 'காட்டகாரிகலாக' வற்புறுத்திக் கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசைத் தட்டிக் கேட்பதில் இந்த அரசு அஞ்சக் கூடாது. ஆட்சி கவிழ்ந்து விடுமோ என்று பயப்படக் கூடாது. அப்படி ஆட்சி கவிழ்ந்தாலும் மக்களைச் சந்தித்து அவர்கள் வாக்குகளைப் பெற்று மறுபடியும் பதவிக்கு வந்து விட முடியும்.

தோல் தொழில் சம்பந்தப்பட்டவர்களுக்கு வரக்கூடிய இன்னல்களைப் பற்றிச் சொன்னேன். வாணியம்பாடியிலே ஓரே அரசாங்க தொழிற்சாலை கூட கிடையாது. உடனடியாக ஒரு அரசாங்க தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. முத்தையா அவர்களைப் பேசுமாறு அழைக்கின்றேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** எவ்வளவோ கேட்டும் எங்களுக்கு நீதி வழங்கவில்லை. நாங்கள் இந்த மன்றத்தில் செயல்படுவதற்கு வேண்டிய அவகாசம் தராததைத் தெரிவிக்கும் வகையில் நான் இந்த அவையை விட்டு வெளியேறுகிறேன்.

(அமைப்பு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

**திரு. க. உரொ. எட்மண்ட்:** எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் சம நேரம் என்று இருப்பதில் பொருள் இல்லை. நிதி அறிக்கை மீது நாங்கள் விரிவாக விவாதம் செய்வதற்கு அவகாசம் இல்லாமல் நேரம் குறுக்கப்படுகிறது. மத்தியான நேரத்தில் வைத்துக் கொள்ளலாம் என்றும் கூறினார்கள். ஆளும் கட்சி எங்களை நேரத்தைக் குறைக்க நிர்ப்பந்தப்படுத்துகிறது என்று குற்றச் சாட்டை வைக்கிறேன். (குறுக்கிடு) ஒரு கட்சியிலே எத்தனை பேர் இருக்கிறார்களோ அத்தனை பேருக்கும் பேச வாய்ப்பு அளிப்பது என்பது ஒரு விதத்தில் சரி என்றாலும் நாங்கள் 16 பேர் இருக்கிறோம். 6 நாளில் 6 பேர் தான் பேசியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மற்ற பேர்களும் தான் பேச இருக்கிறார்களே.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** முந்தாநாள் எங்கள் கட்சி உறுப்பினர் பேசும்போது நேரம் 1.20. 10 நிமிஷத்தில் முடித்து விடுங்கள் என்று கூறி உத்தரவிட்டிருக்கிறீர்கள்.

எங்களுக்கு உரிய நேரம் தரப்படாததால் நாங்கள் மன்றத்தில் செயல்பட உரிய அவகாசம் கொடுக்கப்படாததால் அதை எதிர்க்கும் வகையில் வெளிநடப்பு செய்கிறோம்.

(அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையை விட்டு வெளியே சென்றனர்.)

**திரு. கே. டி. கே. தங்கமணி:** உதவி சபாநாயகர் பேரிலே ஒரு குற்றச்சாட்டு என்ற முறையிலே இங்கே பேசியிருக்கிறார்கள். பிசினஸ் அட்வைசரி கமிட்டியிலே ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு அதிக அவகாசம் தரப்பட வேண்டுமென்று கேட்கப்பட்டது. நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் பொதுவாக அரசாங்கத்தினுடைய கொள்கைகளை கடுமையாக விமரிசனம் செய்ய எதிர்கட்சிகளுக்கு சிறிது அதிக சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சரியான நாடார் அவர்கள் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். அவரையும் அந்தக் கட்சி உறுப்பினர்களையும் அண்ணா திராவிட முன்னேற்ற அவகாசம் தரப்படவில்லை என்ற கோபத்திலே போனவர்கள் கழக உறுப்பினர்களையும் திரும்பி வரும்படி நீங்கள் அழைப்பு விடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆளும் கட்சியினர் எண்ணிக்கை அதிகமாக இருந்தும் கூட அவர்கள் எடுத்துக் கொண்ட நேரம் 280 நிமிஷங்கள் தான். ஆனால் எதிர்கட்சிகள் எடுத்துக் கொண்டிருப்பது 610 நிமிஷங்கள். தோழமைக் கட்சிகள் எடுத்துக் கொண்டிருப்பது 130 நிமிஷங்கள். இதிலிருந்து எப்படி நான் பாரபட்சமற்ற முறையிலே நடந்து வந்திருக்கிறேன் என்பது புரியும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் துணைத் தலைவர் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்கள். அரசாங்கத்தை கடுமையாக விமரிசிக்க 600 நிமிடங்களுக்கு மேல் எதிர்கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டிருப்பதை எடுத்துக் காட்டியுள்ளார்கள். எல்லோரும் கூடிக் கலந்து ஒரு முறைக்குக் கொண்டு வரலாம் என்பதை எல்லாம் விட, எல்லோரிடமும் ஒத்துழைப்பு உணர்வு தேவை என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். நேரத்தில் முடித்துவிட வேண்டியது நல்லது என்றாலும் நேரத்தைக் கடைப்பிடிப்பது சில சமயம் சாத்தியமில்லாமல் போய்விடுகிறது. எதிர்க்கட்சித் தலைவர்கள் திரும்பி வந்து, நல்ல ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல்: 11.00)

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** சார், பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு குறை இருக்கிறது என்ற காரணத்தினால் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். துணைத் தலைவராக இருக்கின்ற தாங்கள் உள்ள நிலைமைகளைச் சொல்லி முடித்துவிட்டீர்கள். அவர்களை மீண்டும் அழைக்க வேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் தங்களைக் கேட்டுக் கொண்டார்கள். அவர்களை அழைத்து, அவர்களுடைய மனக் குறையை போக்க வேண்டுமென்று நானும் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவை முன்னவர் அவர்கள் நிலைமைகளை எடுத்துச் சொன்னார்கள். இருந்தபோதிலும் வெளிநடப்புச் செய்தவர்களை மீண்டும் அழைக்க வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர்கள் கேட்கிறார்கள். இங்கே சபையை தலைமை தாங்கி நடத்திச் செல்கின்றவர்கள் மீது எந்தவிதமான குறையும் கிடையாது, பேசக் கூடியவர்கள் கொடுக்கப்பட்ட

[பேரவைத் துணைத் தலைவர்] [1975 மார்ச் 8]

நேரத்தைவிட சற்று அதிகமாக எடுத்துக் கொள்வதால் நாங்கள் சில நேரங்களில் சற்றுக் கடுமையாக நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது. சில நேரங்களில் உட்கார வைக்க முடியாமல் சிறிது நேரம் கூட்டிக் கொடுத்திருக்கிறோம். அப்படியெல்லாம் இருந்தாலும் அவர்கள் வெளிநடப்பு செய்தது வருந்தத்தக்கது. சபையைத் தலைமை தாங்கி நடத்துகிறவர்கள்தான் குற்றம் செய்த மாதிரி, எங்களை எதிர்க்கின்ற நிலைமையை உருவாக்கி விட்டார்கள். இருந்தாலும் அதையும் மறந்து, இங்கே எதிர்க் கட்சித் தலைவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, திரு. பொன்னப்ப நாடார், திரு. எட்மண்ட் ஆகியோரையும் அவர்கள் கட்சியைச் சார்ந்தவர்களையும் இங்கே வந்து, பேரவை நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நடத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* **திரு. எம். முத்தையா:** தலைவரவர்களே, 1975-76 ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

இன்று நாட்டில் பருவ மழை தவறியதன் காரணமாக தமிழ் நாட்டில் பெரும் வறட்சி நிலவுகிறது. குறிப்பாக என்னுடைய திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில்பட்டி, ஒட்டப்பிடாரம், விளாத்திகுளம், நான்குனேரி வட்டங்கள் இன்றைக்கு மிகவும் வறண்ட பகுதிகளாக இருக்கின்றன. அங்குள்ள மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பஞ்சம், பசி, பட்டினி, குடிதண்ணீர் கஷ்டம், வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி ஏற்றம், உணவுப் பொருள் இல்லாமை இவைகளால் அந்த வட்டார மக்கள் பெரிதும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். விவசாயப் பெருங்குடி மக்கள் அவர்களுடைய ஆடு, மாடுகளை வந்த விலைக்கு விற்றுவிடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இன்று ஆளுகின்ற அரசு அதை கவனித்து அந்த வட்டாரங்களுக்கு ஒரு நிரந்தரமான நிவாரண வேலைகளைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பாரத கண்டத்திலே முதன் முதலாக சுதந்திர போர்க் கொடியை உயர்த்தியவர்கள், சுதந்திரத்திற்காக பாடுபட்ட தியாகச் செம்மல்கள் வரிசையை எடுத்துக் கொண்டால்



1975 மார்ச் 8] [திரு. எம். முத்தையா]

என்னுடைய மாவட்டம்தான் அதில் முன்னணியில் நிற்கும். உயிர்த்தியாகம் செய்த வீரபாண்டிய கட்டபொம்மன், செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார், தேசிய கவி பாரதியார் போன்ற தியாகச் செம்மல்கள் பிறந்த மாவட்டம் என்னுடைய மாவட்டம். அந்த மாவட்டத்திலே இன்றைக்கு பசி, பஞ்சம், பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி ஏற்றம் இவை போன்ற கொடுமை, குடிதண்ணீர் கஷ்டம் எல்லாம் இருக்கிறது என்றால் இதற்கு என்ன அர்த்தம்? 'தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்' என்று தேசிய கவி பாரதியார் பாடினார். அந்தத் தியாகிகள் எல்லாம் இன்று உயிருடன் இருந்தால் இதற்காகவா நாம் தியாகம் செய்தோம், நாம் பிறந்த இந்த மாவட்டத்தில் இத்தகைய நிலை ஏற்படவா உயிர்த் தியாகம் செய்தோம் என்று வருந்தியிருப்பார்கள். எனவே, அந்த வட்டார மக்களின் தியாகத்தை மனதில் வைத்து, நிரந்தரமான வேலை வாய்ப்பும், கொடுக்கவேண்டும்; நியாய விலைகளில் உணவுப் பொருட்களும் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

உணவுப்பொருள் வழங்குவது என்றால் இன்றைக்கு சொசைட்டிகள் மூலம் அங்கே வழங்குகிறார்கள். 15 நாட்களுக்கு ஒரு தடவை ஒரு ஆளுக்கு இரண்டு கிலோ கோதுமை மட்டும் கொடுக்கிறார்கள்; அதுவும் அந்த குறிப்பிட்ட நாள் வாங்கவில்லை என்றால் கிடைக்காது. இப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் அவர்களுக்கு நிரந்தரமான ஒரு நிவாரணம் செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே பஞ்ச நிவாரண வேலைகள் நடைபெறுகின்றன. ஒரு வாரத்திற்கு 2 அல்லது 3 நாள் தான் வேலை நடக்கிறது. கூலி 2 அல்லது 3 ரூபாய் தான் கொடுக்கிறார்கள். அதனால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் நிரந்தர வேலை வாய்ப்பும், நிரந்தரமாக நியாய விலைகளில் உணவுப் பொருட்களும் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எம். முத்தையா] [1975 மார்ச் 8

அதிகாரிகள் விருப்பம்போல் ஆங்காங்கே நிவாரண வேலைகள் நடைபெறுகின்றன. அமைச்சர்கள் வருகிற இடங்களில் மட்டும் வேலை நடக்கிறது. மற்ற இடங்களில் வேலை கிடையாது. வண்டி இழுக்கின்ற குதிரைக்கு கண்மூடி போட்டு மறைத்து ஓட்டிச் செல்வார்களே அதேமாதிரி வேலை நடக்கிற இடங்களுக்கு மட்டும் அமைச்சர்களை அதிகாரிகள் அழைத்துச் செல்கிறார்கள் அல்லது அமைச்சர்கள் பார்வையிடுகின்ற இடங்களில் மட்டும் வேலைகளைத் தொடங்குகிறார்கள் ; மற்ற இடங்களில் வேலை கிடையாது. அப்படி இல்லாமல் நிரந்தரமாக இந்த நிவாரண வேலைகள் நீடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

எங்கள் மாவட்டத்திலே ஒரு மக்கள் தொடர்பு அதிகாரி இருக்கிறார். அவர் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அந்த அறிக்கையை வெளியிட அரசாங்கம் உத்தரவு கொடுத்ததா அல்லது அவருடைய சொந்த அறிக்கையா என்பது தெரியவில்லை. அவர் வெளியிட்ட அந்த அறிக்கையை கிராம சேவக்குகள் மூலம், மற்ற அதிகாரிகள் மூலம் மக்களுக்கு விநியோகம் செய்யச் சொல்லியிருக்கிறார். அந்த அறிக்கையில் 16 கொள்கைகள் இடம் பெற்றிருக்கின்றன. அதில் அரசு இத்தகைய சலுகைகள் செய்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பொதுவாக உழவர்களுக்கு கிணறு தோண்டவும், கிணறுகளை ஆழப்படுத்தவும் நிலவள வங்கி மூலம் தாராளமாக கடன் வழங்கப்படுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். "வறட்சியை சமாளிக்க தமிழக அரசு வாரி வழங்கிடும் நிவாரணம்" என்று போட்டு, கீழே 'மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரி, நெல்லை' என்று அந்த அறிக்கையில் போட்டிருக்கிறது. அந்த அறிக்கை கிராம சேவக்குகள், மற்றுள்ள அதிகாரிகள் மூலம் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கிறது. அதை வைத்து அங்குள்ள மக்கள் என்னை தொந்தரவு செய்கிறார்கள். நிலவள வங்கியில் போய் கேட்கிறார்கள். நிலவள வங்கியில் அப்படி ஒதுக்கீடு எதுவும் கிடையாது என்று சொல்கிறார்கள். பழைய கிணறுகளுக்கும், புதிய கிணறுகளுக்கும் பணம் ஒதுக்கியிருக்கிறீர்களா என்று கேட்டால் அவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த மாதிரியான ஒரு பொய் நோட்டீஸ் போட்டு அந்த மக்கள் தொடர்பு அதிகாரி மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார் என்று நான் குற்றஞ் சாட்டுகிறேன். விவசாயிகளை அவமானப்



1975 மார்ச் 8] [திரு. எம். முத்தையா]

படுத்துகிறார். அவருடைய அறிக்கையைப் பார்த்துவிட்டு, விவசாயிகள் கோவில்பட்டி நிலவள வங்கியில் போய் கேட்டுவிட்டு, ஏமாற்றத்துடன் திரும்புகிறார்கள். இப்படி பொய் நோட்டீஸ் போட்டு, மக்களை ஏமாற்றிய குற்றத்திற்காக அந்த அதிகாரியிடம் தகுந்த முகாந்திரம் கேட்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக் கூறுகிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் மாவட்டத்தில் வறட்சிப் பணி காரியங்களாக புதிய குளங்கள், சாலைகள் அமைக்கப்படுவதாகவும், மராமத்து செய்யப்படுவதாகவும் இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். அப்படி வருகிறபோது, கயத்தாறு யூனியனில் நாச்சியார்புரம், காளம்பட்டி பகுதிகளில் குளம் அமைக்க ஏற்கெனவே எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டது ; அந்த வேலையை ஏன் இந்த ஆண்டாகிலும் தொடங்கக் கூடாது ? அதை உடனடியாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே ஓட்டப்பிடாரம் யூனியனில் தளவாய்புரம், கந்தசாமிபுரம் அருகில் ஒரு புதிய குளம் அமைக்க ஏற்கெனவே சர்வே செய்யப்பட்டு, மதிப்பீடும் தயாரிக்கப்பட்டது. அந்த வேலையையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான்குனேரி வட்டத்தில் நம்பியாற்று குடிமராமத்து திட்டத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. அந்த வேலை இன்னும் நடைபெறவில்லை. அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் வள்ளியூர், நான்குனேரி பகுதி மக்கள் நல்ல முறையில் வாழ்வதற்கு வசதியாக இருக்கும். அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, என்னுடைய மாவட்டத்தில் சில இடங்களில் குடிதண்ணீர் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அந்த இடங்கள் கரிசல் மண் பகுதி. குறுக்குசாலை வட்டாரத்தில் சுமார் 20, 30 கிராமங்கள் கரிசல் மண் பகுதியாக இருக்கின்றன. அங்குள்ள மக்கள் ஊருணி மூலம் கிடைக்கின்ற தண்ணீரைப் பயன்படுத்தி வந்தார்கள். கடந்த ஓராண்டு காலமாக மழை பெய்யாததால் ஊருணி எல்லாம் வற்றி, தண்ணீர் இல்லாமல் போய்விட்டது. நல்ல தண்ணீர் வேண்டுமென்றால் அந்த ஊரை விட்டு, 7 அல்லது 8 மைல்களுக்கு அப்பால் போய்த்தான் கொண்டு

[திரு. எம். முத்தையா] [1975 மார்ச் 8

வரவேண்டியிருக்கிறது. அரசாங்கத்தின் உதவியால் அந்தப் பகுதியில் கிணறுகளை ஆழப்படுத்தினால் கிடைக்கின்ற தண்ணீர் உப்புத் தண்ணீராகத்தான் இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் மாவட்ட ஆட்சித்துறை மூலமாக லாரிகளின் மூலமாகவாவது ஒவ்வொரு வட்டாரத்திற்கும் குடிதண்ணீர் சப்ளை செய்வதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன். நிவாரண வேலைகள் தொடர்ந்து நடைபெறுவதோடு நிரந்தரமாக அந்தப் பகுதி வறட்சி நிலைமையைப் போக்க திட்டங்கள் செயல்படுத்தப் படுவதுடன்—உடனடியாக குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிக்க ஆவன செய்ய வேண்டும். இந்த வறட்சி பகுதி மக்கள் கவனிக்கப்படாமல் வறட்சி வளர்ந்து கொண்டே போனால், பசி பத்தும் செய்யும், வறட்சி கவனிக்கப்படவில்லையென்றால் வறட்சி புரட்சியாக மாறும்.

திரு. கே. பி. கோபால்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள 1975-76 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சாமானிய மக்களைப் பாதிக்காத வகையில் வரி விதிப்பது தான் இந்த அரசின் கொள்கை—ஊதிய உயர்வே கேட்க முடியாத நிலையில் இருக்கிற ஏழை எளியவர்களைக் காப்பாற்ற செயல்படுகிறது என்று சொல்லிக் கொண்டு இருக்கிற இந்த அரசு அந்த ஏழை எளியவர்களைப் பாதிக்கும் வகையில் தான் காப்பி, டீ, எண்ணெய், பருப்பு போன்றவைகளுக்கு வரி விதித்திருக்கிறது. ஏழை விவசாயிகளைப் பாதிக்கும் வகையில் பிண்ணாக்குக்கு வரி விதிக்கப்பட்டிருக்கிறது. வெறும் 6 கோடி ரூபாய்க்குத்தான் வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறீர்கள். இது சரியல்ல. ஆறு மாதங்களுக்கு முன்பு தான் துணை நிதி நிலை அறிக்கையில் 14 கோடிக்கு வரி விதிக்கப் பட்டிருக்கிறது.

நான் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புவது எல்லாம் கண்டிப்பான, நேர்மையான அதிகாரிகளை நியமித்து வரி ஏய்ப்பினைத் தடுத்தால் இந்த 6 கோடி வரியையே போடாமல் தவிர்த்து விவசாயிகளுக்கும் பல சலுகைகளை அளித்திருக்கலாம். யு.ஜி.எஸ். நிர்ணயிப்படி கல்லூரி ஆசிரியர்களுக்கும் ஊதியத்தை கொடுத்திருக்கலாம் என்பதுதான்.



1975 மார்ச் 8] [திரு. கே. பி. கோபால்]

வரி ஏய்ப்பு என்று சொல்கிறபோது கலைஞர் அவர்களே, இந்த மன்றத்தில் ஆகஸ்டு 20 ஆம் தேதி நமக்கு கேளிக்கை வரி மூலமாக ரூ. 25 கோடி வரவேண்டும், இப்போது ரூ. 14 கோடி தான் வருகிறது. ரூ 11 கோடிக்கு வரி ஏய்ப்பு ஏற்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகஸ்டு 28-ஆம் தேதிய அறிவிப்புப்படி செப்டம்பர் 1-ஆம் தேதி முதல் கொண்டு வரப்பட்ட புதிய கேளிக்கை வரியின் மூலமாக மட்டும் நமக்கு ரூ. 30 கோடி வருமானம் வரும் என்று எதிர்பார்த்தோம். நிதி நிலை அறிக்கையில் எதிர்பார்ப்பது ரூ. 16.68 கோடிதான். கலைஞர் அவர்களுடைய கூற்றுப் படியே 44 கோடிக்கு வரி ஏய்ப்பு இருந்திருக்கும்.

(திரு. கு. காமாட்சி—தலைமை)

தியேட்டர் உரிமையாளர்களில் ஒரு சிலர் நேர்மையாக நடக்கிறார்கள். ஒரு சிலர் தவறாக நடக்கிறார்கள். 1974-75-க்கு திட்டமிட்டதில் கேளிக்கை வரி குறைந்திருப்பதற்குக் காரணம் ஒரு சில தியேட்டர்களை—தற்காலிக தியேட்டர்களை கம்பௌண்டு செய்து கொள்ள சலுகை கொடுத்த காரணம்தான் என்று கூறி யிருக்கிறார்கள். இதுபோல எல்லாத் தியேட்டர்களுக்கும் சலுகை செய்வதில் ஒரு சில தியேட்டர்காரர்கள் தவறு செய்கிறார்கள். அதிகாரிகள் சுதந்திரமாக செயல்படும் அளவுக்கு நாம் அனுமதித்து நேர்மையானவர்களை போட்டாலேயே கேளிக்கை வரி ஏய்ப்பைத் தடுக்கலாம் என்று கூறிக் கொள்ள விரும்பு கிறேன்.

அடுத்து, கடந்த ஐந்து தினங்களாக இங்கே கூறியது எல்லாம் மாநில சுயாட்சி பற்றிய கருத்துதான். அண்ணா அவர்கள் சொன்னார்கள், அவர்கள் வழியில் போகிறோம் என்று சொல்லிக் கொள்கிறவர்கள்—அண்ணா அவர்கள் வீண் செலவினங்களை நிர்வாகத்தில் தவிர்த்து சிக்கனத்தைக் கையாண்டார்களே அதுபோல இவர்கள் செய்யத் தவறி விட்டார்கள் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

கவுன்சில் ஆப் மினிஸ்டர்கள் என்ற தலைப்பை மட்டும் எடுத்துக்கொண்டால், 1967-68-இல் அண்ணா அவர்கள் காலத்தில் ஒதுக்கியது ரூ. 5 இலட்சத்து 5 ஆயிரம் தான். இன்றைக்கு 1975-76-இல் இந்தத் தலைப்பில் அமைச்சரவை என்ற இடத்தில்

18 லட்சத்து 39 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது. இதில் இன்னொன்று ஊதியம் அலவன்சு என்ற வகையில் 2 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய்—டெலிபோன்களுக்காக மட்டும் செலவு 5 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய். சென்ற ஆண்டு அதற்கான திட்ட மதிப் பீட்டையும், திருத்த மதுப்பீட்டையும் பார்க்கிற போது—கட்சிக்காரர்கள் அந்த டெலிபோன்களைத் தவறான முறையில் பயன் படுத்துகிறார்கள் என்கிற குற்றச்சாட்டு ஊர்ஜிதம் ஆகும் வகையில்தான் மிக மிக அதிகமாக 76 ஆயிரம் ரூபாய் செலவு ஆகியிருக்கிறது.

மேலும் விளம்பரத்திற்கு ஆகும் வீண் செலவுகளைப்பற்றி ஏற்கனவே குறிப்பிட்டேன். அண்ணா அவர்கள் காலத்தில் அந்த இனத்தில் ரூ. 2.18 இலட்சம் தான் செலவிட்டார்கள் என்று சொன்னேன். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதலளிக்கும்போது "இது தவறான குறிப்பு. அண்ணாத்துரை அவர்கள் ரூ. 13 இலட்சம் செலவழித்தார்கள்" என்று சொன்னார். நான் எடுத்த குறிப்பு ஊழல் புகார்களுக்கு பதிலாகக் கொடுக்கப் பட்ட புத்தகத்தில் இருந்துதான்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அண்ணா அவர்கள் காலத்தில் 9 அமைச்சர்கள்தான் இருந்தார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

**திரு. கே. பி. கோபால்:** நிர்வாகத்தில் சிக்கனத்தைக் கடைப் பிடிக்க வேண்டும் என்பதற்காகத்தான் சுட்டிக் காட்டுகிறேன். ஊழல் புகாரில் தவறான புள்ளிவிவரம் கொடுக்கப்பட்டிருந்தால் அதற்கான திருத்தமாவது வரும் என்று எதிர்பார்த்தேன். அதுவும் வரவில்லை.

தமிழ்நாடு செய்தித் துறையின் மூலமாக 8 இலட்சம் ரூபாய் சினிமாப் படங்களைத் தயாரித்து வெளியிடுவதற்காக செலவாகி யிருக்கிறது. மக்களுக்குப் பயன்படக் கூடிய கல்வி அறிவை போதிக்கும் படங்களாகவும் இல்லை. கட்சிப் பிரச்சாரத்திற்காக இப்படி மக்களின் வரிப் பணத்தை எடுத்து பிரச்சாரம் செய்யப் படுகிறது.

அடுத்ததாக, 20 ஆண்டு காலத்தில் காங்கிரஸ்காரர்கள் என்ன செய்தார்கள் என்று கூறினார்கள். முதியோர் பென்ஷன் சமூக நலன் என்ற தலைப்பில் ரூ. 2 கோடி 61 இலட்சம் அவர்கள் காலத்தில் ஒதுக்கப்பட்டது என்றால் அதில் முதியோர்





பென்ஷனுக்காக மட்டும் ஒதுக்கியிருப்பது ரூபாய் ஒரு கோடிக்கு மேலாகும். அதுவும் 1963-64-இல் அரசாங்க வருமானம் ரூ. 170 கோடியாக இருந்தபோது முதியோர் பென்ஷனுக்காக அவர்கள் காலத்தில் ஒரு கோடி 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதற்குப் பின்பு திராவிட முன்னேற்றக் கழகம் அரசாங்கப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு முதியோர் பென்ஷன் ரூபாய் ஒரு கோடிக்கும் குறைவு. அதிலும் குறிப்பாக 1975-76-இல் மொத்த வருமானம் ரூ. 501 கோடியாக இருக்கும் போது இவர்கள் முதியோர் பென்ஷனுக்காக ஒதுக்கியிருப்பது ரூபாய் ஒரு கோடியே 29 இலட்சம் தான். முன்பு காங்கிரஸ் காரர்கள் காலத்தில் ஒதுக்கப்பட்டதை விட 4 இலட்சம் ரூபாய் தான் அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருப்பதி கூடக் குறிப்பிட்டார்கள். முதியோர் பென்ஷன் கேட்கிறபோது ஏற்கனவே லிஸ்டில் இருக்கிற யாராவது இறந்து போனால்தான் புதியதாக வேறு எவரையும் சேர்த்துக் கொள்ள முடியும் என்கிற நிலைமைதான் இருக்கிறது.

அடுத்ததாக, கல்விக்காக ரூ. 111 கோடி ஒதுக்கப்பட்டிருக் கிறது. எவ்வளவு கல்விக்காகச் செலவழிக்கிறோம் என்பதைவிட அந்தத் தொகை எந்த அளவுக்குப் பயன்படுகிறது, அதனால் மாணவர்கள், ஆசிரியர்கள் எந்த அளவு பயன் பெறுகிறார்கள் என்பதை பார்க்க வேண்டும்.

நான் ஒன்றை உதாரணமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கம்பம் தொகுதி கூடலூரில் வ.உ.சி. உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. சென்ற முறையே குறிப்பிட்டேன். கல்வி மான்யத்திலும் குறிப்பிட்டேன். இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்தப் பள்ளி நிர்வாகத்தில் 13 ஆண்டுகளில் 16 தலைமை ஆசிரியர்கள் வந்திருக்கிறார்கள். 1965-66-க்கான க்ஷேம நல நிதியை 1973-இல் கட்டுகிறார்கள். 17 ஆசிரியர்களில் 12 ஆசிரியர்கள் சட்டத்திற்குப் புறம்பாக பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அது தவறு என்று கல்வி அதிகாரியே உத்தரவிட்டிருக்கிறார். அவர்கள் அதை மதிக்க வில்லை. அந்த நிர்வாகம் முழுக்க முழுக்க அரசியல் தலையீட்டில் நடக்கிறது. தன் மனைவியை பெயருக்காக நிர்வாகி என்று போட்டுவிட்டு உத்தமபாளையம் கருவூலத்தில் ஷராபாக இருக் கிறவர் அரசியல் ஆதிக்கத்தைச் செலுத்துகிறார்கள்.

[திரு. கே. பி. கோபால்] [1975 மார்ச் 8

போக்குவரத்துத் துறையை எடுத்துக் கொண்டால், 1974-75-இல் 14 கோடி ரூபாய் வருமானம் வந்திருக்கிறது. 1975-76-இல் 8 கோடி ரூபாய் குறைகிறது. இப்படிக் குறைவானதற்கு விளக்கவுரையில் மாவட்ட அளவில் தனித்தனி கார்ப்பரேஷன்கள் அமைக்கப் பட்டதுதான் இதற்கான காரணம் என்று கூறப்பட்டிருக்கிறது. இது வருமான இழப்பாக ஏற்பட்டது போல இல்லாமல் இருக்க, போக்குவரத்துத் துறையின் அங்கமாக இந்த கார்ப்பரேஷனை அரசாங்கம் ஏன் வைக்கக் கூடாது என்று கேட்டுக் கொள் கிறேன்.

பால் பண்ணை வளர்ச்சிக்காக 1974-75-இல் ஒதுக்கப்பட்ட தொகையைவிட இந்த ஆண்டு அதிகமாக ஒதுக்கப்பட வேண்டும். நேரம் இல்லாத காரணத்தினால் இதைப்பற்றி அதிகம் பேசாமல் இக்கருத்தை இத்துடன் முடித்து விடுகிறேன்.

மீனவர்களுக்கு அரசு வீடு கட்டும் திட்டத்தை ஆதரிக்கிறேன். பெரியகுப்பம் விசாரணையின் முடிவை இந்தச் சட்டசபை கூட்டத் தொடர் முடிவதற்குள் இந்தப் பேரவையில் சமர்ப்பிக்கும்படி நான் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக நான் ஒன்று கூற விரும்புகிறேன். "உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்" என்று சொன்ன நீங்கள் இன்றைக்குத் தவம் கிடக்கும் பக்தர்களாக இருக்கிறோம் என்று சொல்லியிருக்கின்றீர்கள். ஆனால், 1969 முதல் 1971 வரை எங்களுடைய உதவியினால்தான், ஒத்துழைப்பினால் தான் பதவியில் இருக்க முடிந்தது என்று கூறினீர்கள். 1969-லே ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் நாங்கள்தான் உதவினோம் என்று கூறினீர்கள். 1969 முதல் தவம் கிடந்தபோது நீங்கள் சாதித்துக் கொள்ள வேண்டியதைச் சாதித்துக் கொள்ளத் தவறி விட்டீர்கள் என்று சொல்லி அமர்கிறேன்.

*திரு. சி. க. வடிவேலு: தலைவர் அவர்களே, டாக்டர் கலைஞர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 1975-76க்கான நிதி நிலை அறிக்கையைக் குறித்து என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.



1975 மார்ச் 8] [திரு. சி. க. வடிவேலு]

பொதுவாக, நிதி நிலை அறிக்கையைப் படித்துப் பார்க்கும் போது இன்றைக்கு வறட்சி நிலைமை ஏற்பட்டிருக்கின்ற நேரத்தில் விவசாயிகளுக்கான பல திட்டங்களை டாக்டர் கலைஞர் அவர்கள் வகுத்துத் தந்திருக்கிறார்கள். குறிப்பாக, பாசனத் திட்டங்களுக்காக 31.57 கோடி ரூபாய் அளவிலே நல்ல திட்டங் களைத் தயாரித்து, உணவு உற்பத்தியைத் தமிழகத்தில் பெருக்கு வதற்கு வழி வகைகள் செய்திருக்கிறார்கள். அதைப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, எதிர்க்கட்சி நண்பர்கள் எல்லாம் பேசி வருகிறார்கள். வறட்சியாக இருக்கின்ற நேரத்தில் விலைகள் எல்லாம் ஏறி விட்டன என்று பல குற்றச் சாட்டுகளைச் சொல்லி யிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பொதுவாக, டாக்டர் கலைஞர் அவர்கள் பட்ஜட் உரையிலேயே குறிப்பிட்டார்கள். ஷேக் அப்துல்லா போல் தானும் நாட்டிற்காகச் சிறை செல்லத் தயாராக இருக் கிறேன் என்று கூறினார்கள். மாநில அரசுக்கு அதிக அதிகாரங்கள் இருந்தால்தான் தமிழ் மக்களுக்கு நல்ல பல திட்டங்களை வழங்க முடியும்; விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முடியும் என்று தெரிவித் திருக்கிறார்கள். உரம் வேண்டும் என்றால் மத்திய அரசைக் கேட்க வேண்டியிருக்கிறது. உணவு தானியங்கள் வேண்டும் என்றாலும் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்ள நமக்கு அதிகாரம் இல்லை. மத்திய அரசைத்தான் கேட்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதால் தான் மாநில சுயாட்சிக்காக ஜெயிலுக்குச் செல்லவும் தயாராக இருக்கிறேன் என்று மிகக் கடுமையாக எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள். நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக் கிறேன். பொதுவாக, டாக்டர் கலைஞர் அவர்களோடு சிறை செல்ல தமிழகத்தில் உள்ள லட்சோப லட்சம் தொண்டர்கள் பின் அணியில் தயாராக இருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப் பத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். காரணம், காவிரிப் பிரச்சினை சம்பந்தமாக 2, 3 மாதங்களுக்கு முன், மத்திய அரசு எப்படி ஒருதலைப்பட்சமாக இருந்திருக்கிறது என்பதையும், அதனால் சேலம், திருச்சி, தஞ்சை விவசாயிகள் எப்படி மன வேதனையோடு இருந்து வருகிறார்கள் என்பதையும் இந்த மன்றத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதைப்

[திரு. சி. க. வடிவேலு] [1975 மார்ச் 8

போக்குவதற்கு மத்திய அரசு நியாயமான தீர்ப்பை வழங்க வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று நாட்டில் வறட்சி நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அதைப் போக்குவதற்கு மத்திய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, டாக்டர் கலைஞர் அவர்கள் ஹரிஜன மக்களுக்கு ஒரு லட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். அது போலவே மீனவர்களுக்காகவும் 2 கோடி ரூபாய் அளவில் வீடு கட்டும் திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால், எனக்கு ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. 'படகோட்டி' என்ற சினிமாவில் கரைமீது மிதக்க வைத்தான், தண்ணீரில் மிதக்க வைத்தான் என்று பாட்டு பாடுகிறார்களே தவிர, மீனவர் சமுதாயத்திற்காக அவர் எந்த நன்மையும் செய்யவில்லை.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது இன்னொரு உறுப்பினர் குறுக்கிடுவது முறையல்ல. ஆனால் உறுப்பினர் பேசும்போது இன்னொரு உறுப்பினரைப் பற்றி வேறுவிதமாக எடுத்துச் சொல்கின்ற காரணத்தால் நான் குறுக்கிட்டுப் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. மீனவர் சமுதாயத்திற்கு எதிர்க் கட்சி உறுப்பினர் என்ன நன்மை செய்யமுடியும்? அரசாங்கம்தான் நன்மை செய்ய வேண்டும். அரசாங்கம் செய்யவில்லை என்றால் சொல்லுவோம். அதை விடுத்து யாரோ செய்யவில்லை என்று சொல்லுவது முறை தானா?

**திரு. முனு ஆதி:** சர்க்கார்தான் செய்யவேண்டும். திரு. எட்மண்ட் என்ன செய்தார், முனுஆதி என்ன செய்தார் என்று கேட்பது முறையல்ல. தனிப்பட்டவர்கள் என்ன செய்ய முடியும்?

**திரு. இராம. அரங்கண்ணல்:** மீனவ சமுதாய மக்களுக்காக அரசாங்கம் இன்னது செய்கிறது என்று சொல்கிற போது ஆத்திரப்படக்கூடாது.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** அரசாங்கம் செய்ததைச் சொல்லுங்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் தனிப்பட்ட முறையில் செய்யவில்லை என்று சொல்வது அரசாங்கத்திற்கே இழுக்கே தவிர யார் மீது சொல்லப்படுகிறதோ அவருக்கு இழுக்கு அல்ல.



1975 மார்ச் 8]

**திரு. முனுஆதி:** இந்த மன்றத்தினரை திசை திருப்புகின்ற போக்காகத்தான் இருக்கும். அவர் ஒரு மன்ற உறுப்பினர். மன்ற உறுப்பினர் செய்யவில்லை என்பது முறையா? நான் கூட மன்ற உறுப்பினர். அரங்கண்ணல் சினிமா படம் எடுத்து அதில் வருகிற பணத்தை தானம் செய்கிறேன் என்று சொன்னார், அப்படிச் செய்யவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கலாம்.

**திரு. சி. க. வடிவேலு:** நானும் மன்ற உறுப்பினர் தான். நான் மன்ற உறுப்பினர் யாரையும் குறிப்பிடவில்லை. பொதுவாக மீனவர் சமுதாயத்திற்கு டாக்டர் கலைஞர் அவர்கள் ரூ. 2 கோடிக்கு கட்டிடங்கள் கட்டித் தர திட்டமிட்டிருப்பதைத் தான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். ரிக்ஷா வழங்கியிருக்கிறார். இது போல பல நல்ல காரியங்களைச் செய்து இருக்கிறார். அதற்காக அவரைப் பாராட்டுகிறேன்.

அதோடு தமிழகத்தில் உள்ள நெசவுத் தொழிலாளர்கள் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு வருகிற ஆண்டிலாவது வீடு கட்டித் தரும் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து, சிறு பாசனத் திட்டங்கள் என்னுடைய தொகுதியில் நீண்ட காலமாக நிறைவேற்றப்படாமல் இருந்து வருகின்றன. நாகை நல்லூர் வாய்க்கால் திட்டம் என்னுடைய தொகுதியில் நிறைவேற்றப்பட அரசின் பரிசீலனைக்கு வந்திருக்கிறது. இந்தத் திட்டத்தினை இந்த நிதி ஆண்டிலேயே சேர்த்து நிறைவேற்றும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தாத்தையார்கார்பேட்டை ஒன்றியத்தில் ஒரு தொழில்பேட்டை வேண்டும் என்று நீண்ட காலமாகக் கேட்டு வருகிறோம். அதையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சிறுதொழில் திட்டம் மிகவும் முக்கியமான திட்டம். தாத்தையார் பேட்டையில் உள்ள சில பகுதிகள் இந்தத் திட்டத்தால் பலன் பெறாமல் இருக்கின்றன. ஆகவே இத்திட்டத்தையும் அமுல் படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

[திரு. சி. க. வடிவேலு] [1975 மார்ச் 8

என் தொகுதியிலே, கரிகால் என்ற ஒரு ஊரிருக்கிறது. அங்கு ஒரு ஏரி இருக்கிறது. 1966-ம் ஆண்டிலிருந்து அந்த ஏரியைச் சீர் செய்யவேண்டுமென்று கேட்டு வருகிறோம். அதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த ஏரித் திட்டத்தை இவ்வாண்டு நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

காட்டுப்புத்தூர் வாய்க்கால் சீரமைக்கப்பட ரூபாய் 13 இலட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அனுமதி வராமலிருக்கிறது. அதற்கும் அனுமதி கொடுக்க அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் ஊரைச் சேர்ந்த ஆர். விசுவநாதன் என்பவர் அனுமதி இல்லாமல், பொதுவாக, தண்ணீர் எடுக்க 2 அடி குழாய் காட்டுப் புத்தூர் வாய்க்காலில் போட்டிருக்கிறார். அதுபற்றி, சம்பந்தப்பட்ட அமைச்சரவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் 19--11--1974 அன்றும் 13--1--1975 அன்றும் மிகக் கடுமையான வார்த்தைகளைச் சேர்த்துக் கடிதம் கொடுத்திருகிறேன். அவர் தண்ணீ எடுத்தால் 5,000 ஏக்கர் நிலம் நஞ்சை பாதிக்கும். ஆனால், அனுமதி இல்லாமல், விசுவநாதன் என்பவர் தண்ணீர் எடுப்பதற்கான வாய்க்காலை வெட்டியிருக்கிறார்கள். பொதுவாக, அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால், காட்டுப்புத்தூர் விவசாயிகள் பாதிக்கப் படுவார்கள் என்று தெரிவித்து, நிதிநிலை அறிக்கையை ஆதரித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஏ. எம். டி. .நாச்சியப்பன்**: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றையதினம் டாக்டர் கலைஞர் அவர்கள் 1975-76-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை அளித்திருப்பதை வரவேற்று நான் ஒருசில கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம், நாட்டிலே வறட்சியின் காரணமாக நாட்டு மக்கள் மத்தியிலே வேலையில்லாத் திண்டாட்டமும், விலைவாசி ஏற்றமும், குடிக்கத் தண்ணீர் கிடைக்கவில்லையென்ற நிலைமை யிருக்கின்றதென்பதை உணர்ந்து, வறட்சி நிவாரணப் பணிக்காக, திட்டத்தைச் செயல்படுத்த முற்பட்டதை நான் வரவேற்கிறேன். வறட்சி, நகர்ப்புற மக்களுக்கு அதிகமாகத் தெரியாது என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால், நகரத்திலே வாழக்கூடிய மக்களில் பெரும்பாலோர் மாத வருவாய் கொண்டவர்களாயும், நடுத்தர



1975 மார்ச் 8] [திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்]

வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாயும், மாத வருவாயில் ரூ. 200, ரூ. 500, ரூ.1,000 ஊதியம் பெறக் கூடியவர்களாயும் இருக்கின் றார்கள்.

அது மட்டுமல்ல, அவர்களுக்கு வேண்டிய அரிசி போன்ற உணவு தானியங்கள், நியாய விலையிலே தாராளமாகக் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. அப்படி இருக்கும்போது, நகர்ப்புறங் களிலே உள்ளவர்கள் கிளர்ச்சிகள், போராட்டங்கள் எல்லாம் நடத்துகிறார்கள். அந்தத் தோழர்களையெல்லாம் நான் கேட்டுக் கொள்வது, கிராமத்தைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். கிராமத் திலே வாழக்கூடிய மக்களுக்கு வேலையில்லை, தினக் கூலி. பொழுது விடிந்தால், வேலைக்குப் போனால் வேலை கிடைத்தாலும் கிடைக்கும், இல்லாமலும் போகும். இந்த நிலைமையிலே வாழக் கூடிய மக்களுக்கு நியாய விலையிலே அரிசி கிடைக்கவில்லை, குடிக்கத் தண்ணீர் கிடைக்கவில்லை. ஆகவே, நான், கேட்டுக் கொள்வதெல்லாம், கிராமத்திலே வாழக்கூடிய மக்களுக்கு நியாய விலையிலே அரிசி கிடைக்க ஆவன செய்யவேண்டுமென்பதுதான்.

அதே நேரத்திலே, வறட்சிப் பணி, மிக உற்சாகமாகக் கிராமங் களிலே நடக்கிறது. அப்படி நடக்கும்போது, அங்கே வேலை செய்கின்ற தொழிலாளிகள் பெறுகின்ற கூலி போதாது. வேலை செய்யக் கூடிய நாள் ஒன்றுக்கு ½ கிலோ அரிசியும், ரூ. 3 சம்பளமும் கிடைத்தால், அதிகமான கிராம மக்கள் அந்தப் பணியிலே ஈடுபடுவார்கள் என்பதை இந்த நேரத்திலே, நான் முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த வறட்சியான காலத்திலே, தமிழக அரசு, ரூ. 57 கோடி ஒதுக்கியிருக்கும்போது, மத்திய ஆட்சி, இந்திய மக்களை ஆளக்கூடிய காங்கிரஸ் ஆட்சி, இன்றையதினம் ரூ. 10,000 கோடிக்கு மேலாக ஒரு திட்டத்தைத் தீட்டியிருக்கிறது. அவ்வளவு பெரிய, ரூ. 10,000 கோடிக்கு மேலாகத் திட்டம் தீட்டிய மத்திய ஆட்சி, தமிழக அரசுக்கு, வறட்சிப் பணிக்கு, ரூ. 100 கோடி ஒதுக்கியிருக்கக் கூடாதா என்று கேட்கிறேன். உண்மை யிலே, தமிழக மக்கள் மீது அவர்களுக்குக் கருணையும் அன்பும் இருக்குமானால், ரூ. 100 கோடி ஒதுக்கியிருக்கலாம். இதை யெல்லாம், மத்திய ஆட்சியின் ஆளுங்கட்சித் தோழர்கள், மத்திய ஆட்சியிடம் எடுத்துச் சொல்ல, சிந்தித்துப் பார்க்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்] [1975 மார்ச் 8

பிற்பட்ட பகுதிகளுக்குப் பாசன திட்டத்திற்காக இன்றைய தினம் தமிழக மக்கள் சில திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள். முன்பு, பாசனத் திட்டங்கள், இலாபகரமான திட்டங்களாக இருந்தால்தான் எடுத்துக் கொண்டிருந்தார்கள். அது இல்லாமல், அவசியமாகச் செய்ய வேண்டிய நிலைமையிருந்தால் செய்யலாம் என்ற நிலைமையைத் தமிழக முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இதனால் அதைப் பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில், என்னுடைய ஆத்தூர் தொகுதியில் நரசிங்கபுரத்தில் உள்ள மலையையும், மேற்கேயுள்ள மலையையும் இணைத்தால் அந்தப் பகுதியிலே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் விவசாயம் பெற ஏதுவாக இருக்கும் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அவற்றையிணைத்து, அணையைக் கட்டினால், 5, 6 மைலுக்குத் தண்ணீர் கிடைக்கும். அவை ஜீவ நதி ஓடக்கூடிய பகுதிகள். இந்த வறட்சியான நேரத்தில் கூட, தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கிறது அங்கே என்பதைச் சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன். அதே சமயத்தில், திண்டுக்கல் போன்ற பகுதி மக்களுக்கும் கூட தண்ணீர் பிரச்னை தீரும். இன்றைய தினம், காமராஜ் சாகர் திட்டத்தில் இருப்பது 3 அடி தண்ணீர் தான் என்று சொல்கிறார்கள். ஆகவே, அந்த அணையைக் கட்டிக் கொடுத்தால், இப்பிரச்னை தீரும். அதை அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சின்னாளப்பட்டியில் குடி தண்ணீர்க் கஷ்டம் இருக்கிறது. அந்தக் கஷ்டத்தைப் போக்கவேண்டுமென்று ஒரு திட்டத்தை ரூ. 33 இலட்சம் செலவில் பரிசீலனை செய்தார்கள். அது முதலமைச்சரிடம் இருக்கிறது. அந்தத் திட்டத்தையும் செயலாக்கி, அது நிறைவேற ஆவன செய்து சின்னாளப்பட்டியிலே வாழக் கூடிய மக்களுக்குக் குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கோழிப் பண்ணை வைப்பதற்காக, ரூ. 20 இலட்சம் ஒதுக்கி இருக்கிறார்கள். இந்த நேரத்திலே, ஒன்றைச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். கோழி வளர்ப்பினால் இலாபமிருக்கிறது, ஏழைகள் வாழலாம் என்ற ஒரு கருத்தை அதிகாரிகள் சொன்னார்கள். அந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு, சின்னாளப்பட்டியில் 50 ஏழைகளுக்குக் கோழிப் பண்ணைகள் ஏற்



1975 மார்ச் 8] [திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்]

படுத்திக் கொடுத்தோம். ஆனால், அந்த 50 ஏழைகளும் இன்றைய தினம் கடனாளியாக இருக்கிறார்கள். காரணம், வருகின்ற வருவாய் செலவுக்கே போதவில்லை. ஆகவே முடிவிலே அவர்களுக்கு நஷ்டம்தான் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இன்றையதினம் அவர்கள் ஸ்டேட் பாங்கிடம் கடனாளியாக இருக்கிறார்கள். அவர்களுக்கு, மானியமாக ரூ. 20 இலட்சம் ரூபாயில் ஒதுக்கித் தந்து, ஏழைகளைக் காப்பாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், ஆத்தூர் தொகுதியிலே பல கிராமங்கள் மலைப் பகுதியிலேயிருக்கின்றன, 20,000 மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு மருத்துவ வசதி இல்லை. அவர்கள் வைத்திய வசதி பெற 25 மைலுக்குக் கீழே வரவேண்டும். அந்த நிலைமையிருக்கிற காரணத்தினால், ஆத்தூர் தொகுதியிலே, மணலூர் பஞ்சாயத்திலே ஒரு மருத்துவ மனை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நெசவாளர் பிரச்னை. நெசவாளர் சேமிப்புப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை கலைஞர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் கொண்டு வந்ததற்காக, நான் கலைஞர் அவர்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்திலேயுள்ள கைத்தறி நெசவாளர்களும் கலைஞர் அவர்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறார்கள். ஏனென்றால், அவன் ஆதரவற்றவன். அவனுக்கு ஆதரவளிக்க யாரும் இல்லை. 40, 50 வயது வரை அவன் வேலை செய்கிறான். அதற்குப் பிறகு, அவனை ஆதரிக்க யாரும் இல்லை. நீங்கள், நினைக்கலாம், பிள்ளை குட்டிகள் இருக்கிறார்களே, காப்பாற்றலாம் என்று. ஆனால், 100-க்கு 90 பங்கினர், திருமணம் செய்துகொண்டால், வேறு குடும்பம் நடத்தக் கூடிய நிலைமைதான் இருக்கிறது. ஆகவே, அந்த ஏழை நெசவாளர்களைப் பாதுகாக்க இந்தத் திட்டம் கொண்டு வந்ததை மனதாரப் பாராட்டுகிறேன்.

அடுத்து, மாநில சுயாட்சியைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். இங்கே, மாற்றுக் கட்சி நண்பர்கள் எதிர்த்துப் பேசினார்கள், அண்ணா சொல்லவில்லை. அண்ணா சொல்லவில்லையென்று. அண்ணா எந்த இடத்திலே மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டாமென்று சொல்லியிருக்கிறார். அதைச் சொல்லவேண்டும். ஏழைகளுக்கு வேண்டிய நூல் வேண்டுமென்றால், நூல் விலையை நிர்ணயிக்க வேண்டுமென்றால் மத்திய ஆட்சியை எதிர்பார்க்க

வேண்டியிருக்கிறது. நெல் கொள்முதல் செய்ய மத்திய ஆட்சியை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையிருக்கிற காரணத்தால் மாநில சுயாட்சி அல்லது மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்பது நல்ல கொள்கை, நல்ல தத்துவம், தமிழர்களின் மேல் அன்புள்ள அன்பர்கள் அத்தனை பேர்களும் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இம்மாதிரி சொல்வது சரியல்ல என்று சொல்லிக்கொண்டு, கைத்தறி நிதிக் கழகத்தின் மூலமாக கைத்தறி நெசவாளர்களுக்கு கடன் கொடுக்கிறார்கள், கூட்டுறவுத் தொழில்முறையில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்குக் கடன் கொடுக்கும்போது ஏழரை சதவீதம் வட்டி, ஆனால் அதையே தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கிறபோது 16 சதவீதம் வட்டி. ஏன் இப்படி வாங்குகிறீர்கள் என்று கேட்டால் மத்திய அரசிலே 14½ சதவீதம் என்று வாங்குகிறோம், நாங்கள் 1½ சதவீதம் வரை லாபம் வைத்து கொடுக்கிறோம், ஆகவே அதை அவர்கள் தான் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, 1000 ரூபாய் கடன் வாங்கினால் 12½ சதவீதம் என்று வாங்கி 14½ சதவீதம் என்று கொடுக்கிறார்கள் நஷ்டத்திற்கு. ஆனால் ரூ. 1,000 முதல் ரூ. 5,000 வரை நம்முடைய மாநில அரசு 14½க்கு வாங்கி 13½ சதவீதத்திற்கு நஷ்டத்திற்கு கொடுக்கிறார்கள். இங்கே உள்ள மக்கள் வாழ வேண்டுமென்ற முறையிலே, மாநில அரசு நஷ்டப் பட்டாலும்பரவாயில்லை என்று உதவிகளைச் செய்கிறது, ஆனால் மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையில் செய்துகொண்டிருக்கிறது. ஆகவே, மாநில சுயாட்சி அடைந்தே தீரவேண்டும், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வந்தால்தான் நன்மைகள் பெறமுடியும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. மணலி சி. கந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்வதற்கு நான் இங்கே நிற்கிறேன். அந்தக் கருத்துக்களுக்குப் போவதற்கு முன்பே என்னுடைய நிலைமையைப்பற்றிப் பேசவேண்டிய நிலைமை இருக்கிறது. என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் திரு. கே. டி. கே. அவர்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதியாக இருக்கக்கூடியவர்





நான் ஒரு எக்ஸ் கம்யூனிஸ்ட் என்று குறிப்பிட்டிருந்ததை ஞாபகப்படுத்தவிரும்புகிறேன். நான் குறிப்பிடுவது உலகத்திலே உள்ள கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சித்தாந்தம் எப்படிச் செயல்படுகிறது என்று பார்த்தாரானால் ஆங்காங்கு பல நாடுகளிலே உள்ள சூழ்நிலைகளுக்கு ஏற்ப பாரம்பரிய கம்யூனிஸ்ட் கட்சிக்குப் போட்டியாகவோ அல்லது அதுபோன்ற வேறு கம்யூனிஸ்ட் கட்சிகளையோ ஏற்படுத்தமுடியும் என்பதை நாம் சரித்திரத்திலே பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்பதை கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். என்னை ஒரு எக்ஸ்-கம்யூனிஸ்ட் என்று சொன்னதால் நான் ஆத்திரப்படவுமில்லை, அதிருப்திப்படவுமில்லை. இன்றைக்கு உலகத்திலே இருக்கிற கம்யூனிஸ்ட் தத்துவம் என்ன என்று பார்க்கிறபோது அது 'கோ-எக்ஸிஸ்டன்ஸ் ஆப் கேபிடலிஸம் அன்ட் சோஷலிசம்' என்ற அளவிற்குத்தானே இருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** என்னுடைய பெயரைச்சொல்லி கம்யூனிஸ்ட் தத்துவம்பற்றிச் சொன்னார்கள், கம்யூனிஸ்ட் தத்துவம் தன்னை காப்பாற்றிக்கொள்ளும். ஏற்கனவே மார்க்ஸிஸம், லெனினிஸம் என்று இருந்தது. லெனினிஸம் என்ற அடிப்படையிலே அது ஒரு கட்டுக்கோப்புக்குள் இருக்க வேண்டுமென்ற முறைதான். அந்த முறையில்தான் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கம் பார்த்துக்கொண்டிருக்கிறது. ஏற்கனவே கம்யூனிஸ்ட் கட்சியிலே இருக்கலாம், பின்னாலே தீவிரவாதியாகக்கூட இருக்கலாம். மார்க்ஸிஸம் லெனினிஸம் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள் என்று சொன்னால், அதற்கு ஒரு கட்டுப்பாடோ ஒரு அமைப்போ இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் முதலாளிகளுக்காக நாங்கள் பேசுகிறோம் என்று புது கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து பேசினால் அது எங்கள் கட்சிக்கு வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு சில அமைப்பும் கட்டுக்கோப்பும் இருக்கிறது. இன்றைக்கு அவர்கள் எங்கள் கம்யூனிஸ்ட் கட்சியில் அல்ல இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இல்லை; தவறு இருக்கலாம், அந்தக் கருத்தில்தான் சொன்னேன்.

**திரு. மணலி சி. கந்தசாமி :** அதைத்தான் நானும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். நான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியிலே இருந்தபோது ஒரு வருஷம் பேசுவது கிடையாது. அதற்குப் பிறகு கட்சி ஆரம்பித்தபோது சட்டமன்றப் பேரவைத் தலைவ

[திரு. மணலி சி. கந்தசாமி] [1975 மார்ச் 8

ருக்கு எழுதி நான் ஒரு கம்யூனிஸ்ட் கட்சி அமைத்திருக்கிறேன் என்று சொல்லிவிட்டுத்தான் பேசுகிறேன். நான் பேசுவது எந்த விதத்திலும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக் கிளையை உட்படுத்தாது. ஆகவே, அந்தக் கவலை அவருக்குத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்குள்ள சூழ்நிலையில்—மார்க்ஸிஸம், லெனினிஸம் என்பதைப்பற்றி நான் படித்த அளவில் என்னுடைய சிற்றறிவிற்கு எட்டியவரையில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்—கம்யூனிஸம் என்பது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்பது மட்டுமல்ல, சோவியத் கம்யூனிஸ்ட், சீன கம்யூனிஸ்ட், கியூபா கம்யூனிஸ்ட் இப்படி பல்வேறு கட்சிகள் இருக்கின்றன, இதிலே ஒன்றுக்கொன்று சம்பந்தம் கிடையாது, வேறுபாடுகள் இருக்கின்றன. கியூபாவில் கம்யூனிஸ்ட் கட்சி இல்லாமல் அதிகாரத்தினைக் கைப்பற்றினார்கள், பின்னால் கம்யூனிஸ்ட் கட்சி ஒத்துக் கொள்ள வேண்டும் என்ற நிலைமை இருந்தது. இப்படி டிரெடிஷனல் கம்ஸனிஸ்ட்ஸ் என்பது பல பல சூழ்நிலைகளுக்கு ஏற்றவகையிலே, இடங்களுக்கு, நாடுகளுக்கு ஏற்ற வகையிலே மாறியிருக்கிறது—புதிய பாதையிலே சொல்லவேண்டும், வேறு நோக்கத்திலே போகவேண்டுமென்று துடித்துக்கொண்டிருக்கிறவர்கள் அங்கேயிருந்து வெளியே வருவது என்பது சகஜமான நிலைதான்.

சமீபத்திலே சிலோனிலே இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆகிவிட்டன, விக்கிரமாசிங்கா என்பவர் தலைமையில் ஒரு கம்யூனிஸ்ட் கட்சி, இன்னொருவர் தலைமையில் இன்னொரு கம்யூனிஸ்ட் கட்சி, ஆக அங்கே இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆகிவிட்டன. ஆகவே, உலகத்திலே பல்வேறு கம்யூனிஸ்டுகள் இருக்கிறார்கள். மார்க்ஸிஸம், லெனினிஸம் என்பதை உலகச் சொத்தாக்க வேண்டும், அதை ஒரு கூண்டுக்குள்ளே போட்டு அடைத்து வைப்பது கம்யூனிஸ்ட் தத்துவத்திற்கே நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா தி.மு.க. பற்றியும் தி.மு.க. பற்றியும் பலத்த கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. கம்யூனிஸ்ட் கட்சியிலே நான் ஒரு நிலை எடுத்தேன், அதில் அழுத்தமாக இருந்தேன். அவர்கள் வேறு நிலை எடுத்தார்கள். அவர்கள் சொன்னார்கள், தி.மு.க. போயாக வேண்டும் என்றார்கள். நான் சொன்னேன், தி.மு.க. தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டது, 5 வருஷம் இருக்க வேண்டும், அதை



1975 மார்ச் 8] [திரு. மணலி சி. கந்தசாமி]

ஆதரிப்போம், கூடியவரையில் இந்தக் கட்சியையும் ஆதரிப்போம், ஒத்துழைப்போம், அவர்கள் தவறு செய்தால் எதிர்ப்போம், நல்லது செய்தால் ஆதரிப்போம் என்று சொன்னேன். அவர்கள் அப்படியல்ல, போகவேண்டும், குறிப்பாக கலைஞர் போயாக வேண்டுமென்ற நிலையை எடுத்தார்கள்; அண்ணா தி.மு.க. பிறந்த பிறகு ஜனநாயக சக்திகள் தி.மு.க.விலிருந்து வெளியே வந்துவிட்டன என்று சொன்னார்கள். நான் அதை ஒத்துக்கொள்ளவில்லை. அந்தக் கட்சி இன்னும் அரும்பக்கூடவில்லை, அது இன்னும் ஒரு கட்சியாகக்கூட ஆகவில்லை என்பதால் ஒத்துக் கொள்ளவில்லை.

தனிப்பட்ட உறவுகளிலிருந்தும் அரசியலிலிருந்தும் நான் அங்கே உள்ளே இருந்தால் வெளியேற்றப்படுவேன், இல்லாவிட்டால் நானே வெளியே வரவேண்டுமென்ற நிலை வந்த பிறகு தான் நான் வெளியே வந்தேன். 45 ஆண்டுகளாக அந்தக் கட்சியை இங்கே வளர்த்ததில் எனக்கும் பங்கு உண்டு. நான் வெளியே வந்துவிட்டேன், ஆகவே மாஜி கம்யூனிஸ்ட் என்றால் எம்.ஜி.ஆர். கூட ஒரு மாஜி தி.மு.க. என்று சொல்லலாம். பல்வேறு மாஜிகள் இங்கே இருக்கிறார்கள் என்று சொல்லலாம். சுத்தமாக வேலை செய்து ஜனங்கள் மத்தியிலே செல்வாக்குப்பெற்று அதிகாரத்தைக் கைப்பற்றுவதுதான் சிறந்தது.

தி.மு.க. போவதைப்பற்றியோ அண்ணா தி.மு.க. வருவதைப் பற்றியோ எனக்குக் கவலையில்லை. சிரமப்பட்டு வேலை செய்து மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்று வந்தால் யாரும் ஒத்துக் கொண்டுதான் ஆகவேண்டும். அதை விட்டுவிட்டு நீ இறங்கு, நான் வருவேன் என்று சொல்வது சரியல்ல. என்னுடைய கட்சி சரியான பாதையிலே செல்கிறதா என்று சொல்ல வேண்டும். அது இல்லாமல் திரு. அழகர்சாமி கூட என்னைக் கேட்டார்கள். உங்கள் கட்சி எங்கே இருக்கிறது என்று கேட்டார்கள். 45 வருஷங்களுக்கு மேலாக நான் கம்யூனிஸ்ட் கட்சியிலே இருந்திருக்கிறேன், இந்த நிலையில் உங்கள் கட்சி எங்கே இருக்கிறது என்று கேட்கலாமா, தன்னடக்கத்தோடு பேச வேண்டும். பணமும் கிடையாது, ஆதரவும் கிடையாது, பத்திரிகைகள் ஆதரவும் கிடையாது, இந்த நிலையில் நான் நடத்திக் கொண்டிருக்கிறேன். இந்த வயதிலே துணிவோடு நான் நிற்கிறேன் என்றால் அதற்கு நீங்கள் உற்சாகமும் ஆதரவும் தரவேண்டும். நான் சரியான நிலைமை எடுக்காமல் இருந்தால் அதைச் சொல்ல வேண்டும். அப்படிச் செய்தால் நல்லதாக இருக்குமே தவிர வேறு ஒன்றும் இல்லை.

அதுதானே தவிர, (குறுக்கீடு) பட்ஜெட்டைப்பற்றிப் பேசுகிறேன், அது எனக்குத் தெரியும், அது எனக்குத் தெரியாதா? ஆகவே, இந்த நிலையிலே நான் இதை என் அழுத்தந் திருத்தமாகச் சொல்கிறேன் என்றால், இந்திய அரசாங்கத்தை எடுத்துக் கொண்டால், அது தேசீய பூஷ்வாக்களின் அரசாங்கம், அதைத் தானே இன்றைக்கு இவர்கள் வரிந்து கட்டிக்கொண்டு ஆதரிக்கின்றார்கள். அதுதானே இன்றைக்கு நடக்கிறது. இந்த நிலையில் ஏகபோக பூஷ்வாக்கள் 'டாமினேட்' செய்யும் அரசாங்கம் இந்திரா அரசாங்கம் அது இன்றைக்கு கம்யூனிஸ்ட் கட்சியின் அரசாங்கம் அல்ல. இப்படிப்பட்ட பூஷ்வா அரசாங்கத்தை ஆதரிப்பது நம்முடைய இலட்சியம் அல்ல. ஏகாதிபத்தியம், நிலப் பிரபுத்துவம், ஏகபோக பூஷ்வாக்கள் ஆகியவற்றை எதிர்ப்பதற்கு எந்த வர்க்கம் முன்னுக்கு இருக்கிறதோ அதை வரவேற்கலாம். ஆனால் அது மல்டிகிளாஸ் அரசாங்கம். நான் படித்தது தான். எனக்குத் தெரியாது என்று நினைக்க வேண்டாம். அதைப்பற்றிப் பல நாட்கள் விவாதித்திருக்கிறோம். இந்த அடிப்படையில் இந்திய அரசாங்கத்தை விமர்சிக்கக் கூடியவர்கள், இந்திய அரசாங்கம் சொல்வதை ஆதரிப்பவர்கள் யோசிக்க வேண்டும்.

இந்தக் காலகட்டத்தில் சென்னை இராஜ்யத்திலேயுள்ள திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தை நான் எப்படிப் பார்க்கிறேன்? தொழிலாளி வர்க்கத்தின் நலன்களை மட்டும் பிரதிபலிக்கக் கூடியதாக இருக்க வேண்டிய அவசியமில்லை. இந்தக் கால கட்டத்தில் தேவைகளை ஓரளவு பூர்த்தி செய்யக்கூடிய அளவில் நிலச் சீர் திருத்தத்திற்கான நடவடிக்கைகளை எடுக்கக்கூடிய அரசாங்கமாக, தொழிலாளர் வர்க்கத்திற்குப் படிப்படியாகச் சில நன்மைகளைச் செய்யக்கூடிய அரசாங்கமாக, இப்படிப்பட்ட இன்னும் சில நடவடிக்கைகளை எடுப்பதற்கான அறிகுறிகளைக் கொண்ட சோஷலிச அரசாங்கமாகத்தான் நான் கருதுகிறேன், ஆகவே, இதற்கு நான் ஒத்துழைப்பு கொடுக்கிறேன். இன்றைக்கு இதை விட மோசமான இராஜ்ய சர்க்கார்கள் இருக்கின்றன. இதையெல்லாம் யோசனை செய்து பார்க்க வேண்டும்.

சிறிது நேரத்திற்கு முன் பேசிய நமது நண்பர்கள் இங்கே இரண்டு விதமான கட்சிகளாக வகுக்க வேண்டும், ஆளுங்கட்சிக்குத் துணை போகிற கட்சி என்று பிரித்து அந்த நேரத்தை ஆளுங் கட்சியின் நேரத்தோடு சேர்த்து ஒதுக்க வேண்டும் என்று சொன்னார்கள். எனக்கு வேடிக்கையாக இருந்தது. இந்திரா





காங்கிரஸ் கட்சி மத்தியிலே ஆளும்கட்சியாக இருக்கிறது. அங்கே கம்யூனிஸ்ட் கட்சியும் இருக்கிறது. அம்மாதிரி கம்யூனிஸ்ட் கட்சியின் நேரத்தையும் அங்கே சேர்த்து கம்யூனிஸ்ட் கட்சிக்கு டைம் கொடுக்காமல் சேர்க்கலாமா? இங்கே ஏதோ 2 பேர், 4 பேர் இருக்கிறோம். இங்கே எதிர்க்கட்சியே இல்லையே, வெட்கக் கேடு. 24 பேர் உள்ள எதிர்க்கட்சியே இல்லையே. என்னென்னமோ செய்து கொஞ்சம் வந்திருக்கிறார்கள். இப்பொழுது அ.தி.மு.கவில். . .

**திரு. க. உரொ. எட்மண்ட்:** எதிர்க்கட்சியே இல்லை என்று சொல்ல முடியாது. "ரெகக்னைஸ்ட் அப்போசிஷன்" இல்லை என்று வேண்டுமானால் சொல்லலாம்.

**திரு. மணலி. சி. கந்தசாமி:** There is no Official Opposition Party. The Party to which the hon. members belongs only an Opposition Group . . . .
ஆகவே, மாஜி கம்யூனிஸ்ட் என்பது அர்த்தம் அல்ல. என்னுடைய கொள்கை பற்றி விமர்சித்தால் நான் விரும்பிக் கேட்பேன். மணலி கந்தசாமி இப்படிப்பட்ட கொள்கைகளை வைத்திருக்கிறார், நிலச்சீர்த்திருத்தத்தைப் பற்றி இப்படிப்பட்ட முடிவை எடுத்திருக்கிறார், ஏகபோக முதலாளித்துவத்தைப்பற்றி இப்படிப்பட்ட நிலையை எடுத்திருக்கிறார் என்று எனக்குப் புத்தி புகட்டினால் கேட்டுக்கொண்டிருப்பேன். என்னுடைய 25 வருஷ அனுபவத்தில் அவர்களோடு தோளோடு தோள் நின்றிருக்கிறேன். மிகச் சிறந்த நண்பர்கள் நானும், தங்கமணியும் என்று கருதப்பட்டவர்கள். ஆனால் இன்றைக்கு என்னை எக்ஸ் கம்யூனிஸ்ட் என்று சொன்னால் அவர் இன்றைக்கு பிரசெண்ட் கம்யூனிஸ்ட் என்று நானும் சொல்ல முடியும். எதிர்காலத்தில் எப்படி இருக்கும் என்று உத்தரவாதம் கொடுக்க முடியுமா?

தத்துவத்தைப்பற்றிப் பேசுவோம். தவறு இருந்தால் திருத்திக் கொள்ளலாம். கம்யூனிஸ்ட் கட்சியில் இருக்கும்பொழுது கூட என்னுடைய வாழ்நாள் பூராவையும் அந்தக் கட்சியை வளர்ப்பதற்காகத் தத்தம் செய்திருக்கிறேனே தவிர, சுயநலத்திற்காக, சீட் வாங்க வேண்டுமென்பதற்காக இல்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தைக்கூட எதிர்த்த ஆள் நான், இது மன்னைக்குக்கூடத் தெரியும். ஆகவே, நான் கூறுகிறேன், என்னை எக்ஸ் கம்யூனிஸ்ட் என்று கூறினாலும், கம்யூனிஸ்ட் கட்சியின் சித்தாந்தங்கள், கம்யூனிஸ்ட் கட்சியின் பழக்க வழக்கங்கள்,

[திரு. மணலி சி. கந்தசாமி] [1975 மார்ச் 8

கம்யூனிஸ்ட் கட்சியின் இலட்சியங்கள் ஆகியன எனக்குப் பலமாக இருக்கின்றன, அப்படிப்பட்ட வழியில் நான் நிற்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கேயுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் தப்பு செய்தாலும் நான் விட மாட்டேன். நான் விட்டு விடுவேன் என்று அவர்களும் எதிர்பார்க்க மாட்டார்கள். நிச்சயமாக என்னைப்பற்றி அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

இந்த பட்ஜெட்டிலே பார்த்தோமானால் கொஞ்சம் துண்டு விழுந்திருக்கிறது. இன்றைக்கு வறட்சி வந்துவிட்டது. அதனால் நிலவரி வஜா செய்யப்பட்டு விட்டது. அந்த வருமானம் போய் விட்டது. அடுத்து புரொஹிபிஷன் கொண்டு வந்தார்கள். அதைப் பற்றி ஒருவர்கூடச் சொல்லத் தயாராக இல்லை. உள்ளபடியே நான் பாராட்டுகிறேன். இந்த வறட்சிக் காலத்தில், புரொஹிபிஷனைக் கொண்டு வந்து அதனால் 24 கோடி ரூபாய் பணம் போகிறது என்றாலுங்கூட இன்றையதினம் அதை அமலுக்குக் கொண்டு வந்திருப்பது பாராட்டுதற்குரிய செயலாகும். இந்த புரொஹிபிஷன் இல்லாவிட்டால் பாட்டாளி வர்க்கம், விவசாயிகள், இன்னும் உள்ள பல்வேறு பகுதி மக்களும் எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டு சந்தியிலே நிற்பார்கள் என்பதையும், அவர்கள் தங்கள் சாமான்களையெல்லாம் அடகுக் கடைகளில் வைத்திருப்பார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அம்மாதிரி நிலைமை ஏற்படாமல் இப்படிக் கொண்டு வந்திருப்பதைப் பாராட்டுவதற்கு இங்கே இருப்பவர்கள் தயாராக இல்லை. அதனால் 24 கோடி ரூபாய் நஷ்டம் வருகிறது.

அடுத்தபடியாக, யூனிட்டி என்று சொல்லும்பொழுது, சமஷ்டி என்று சொல்லும்பொழுது, ஒன்றுபடுத்துவதற்காக, பின்தங்கிய பிரதேசங்களுக்கு அதிகத் தொகையை ஒதுக்கி செய்திருக்கிறார்கள் சோவியத் பார்லிமெண்டில். அவைகளை வளர்ப்பதன் மூலம் நான் ஒற்றுமைப் படுத்த முடியும் என்று வைத்திருக்கிறார்கள் அங்கே. அதற்கான புள்ளி விவரங்களெல்லாம் இருக்கிறது. ஆனால் இங்கே ஜனத்தொகை அடிப்படையிலே, பாரபட்ச அடிப்படையிலே, என் கட்சி வேறு கட்சி என்ற நிலைமை இல்லாமல் இருக்கிறதா? இருக்கத்தான் செய்கிறது. ஆனால் சோவியத் ரஷ்யாவிலே. லித்வேனியா, காகேஷியா. அஸ்பெர்ஜான் போன்ற மிகவும் மோசமான பின்தங்கிய பிரதேசங்களுக்குப் பெரும்பகுதி பணம் ஒதுக்கி அவைகளை முன்னுக்குக் கொண்டு வருவதன் மூலம்தான் ரஷ்யாவைப் பலப்படுத்த முடியும் என்ற



1975 மார்ச் 8] [திரு. மணலி சி. கந்தசாமி]

கோட்பாட்டின் அடிப்படையிலே பல்வேறு ஒதுக்கீடுகளைச் செய்திருக்கிறார்கள். அதற்கான புள்ளிவிவரங்களெல்லாம் இருக்கின்றன, அவைகளை நேற்று இரவுகூடப் படித்துக் கொண்டிருந்தேன்.

ஆனால் இங்கே. இந்தத் தேசத்திலுள்ள பெரிய ஆபத்து என்னவென்றால், "அன்-ஈவன் டெவலெப்மெண்ட்" அதாவது சமனற்ற வளர்ச்சி இங்கே இருக்கிறது. பெங்களூரில் உள்ள வளர்ச்சி எப்படி, பம்பாயில், குஜராத்தில் உள்ள வளர்ச்சி எப்படி? மார்வாடிகளின் பொருளாதார வளர்ச்சி எப்படியிருக்கிறது, தமிழர்களின் பொருளாதார வளர்ச்சி எப்படியிருக்கிறது? இவைகளில் தாரதம்மியம் அதிகமாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையிலே இங்கே பிரதிபலித்து வரும் மத்திய அரசாங்கம் இந்தப் பிரச்னைகள் எழாமலே செய்திருக்க முடியும். பின்தங்கிய பகுதிகளுக்கு உதவ வேண்டும், அங்கே தொழில் வளர்ச்சி ஏற்படுத்த வேண்டும். அப்படிப்பட்ட பின்தங்கிய பகுதிகளை முன்னுக்குக் கொண்டு வருவதற்காக நிதி ஒதுக்க வேண்டுமா? வேண்டாமா?

இன்றைக்கு மின்சாரத்தை எடுத்துக்கொண்டால் பெரிய நெருக்கடி இருக்கிறது. மின்சாரம் இல்லாவிட்டால் வாழ்வு இல்லை, மின்சாரம் இல்லாவிட்டால் தொழில் இல்லை, எல்லாம் ஸ்தம்பித்து விடும். லெனின் சொல்லியிருக்கிறார், "Power is Socialism" என்று. அப்படிப்பட்ட மின்சாரத்தை இன்னும் கொஞ்சம் கூடுதலாக உற்பத்தி செய்வதற்காக நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திற்கு எத்தனை ஆண்டுக் காலமாக அப்ளை செய்கிறோம். ஒருமைப்பாடு வேண்டுமென்று சொல்லுகின்ற இந்திராகாந்தி இதை உணர வேண்டாமா? தமிழ்நாட்டிற்கு மின்சாரம் கிடைப்பது தேசத்தின் பலத்தை அதிகரிப்பதாகும். ஆளுங்கட்சி நண்பர்கள் இதையெல்லாம் பார்க்க வேண்டும். நான் இதைத் தப்பாகச் சொல்லவில்லை. இது முக்கியமான விஷயம்.

மின்சாரம் இல்லையென்றால் தமிழ்நாடு அழிந்துவிடும். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் முதலில் இதற்கு ப்ரிஃபரென்ஸ் கொடுக்க வேண்டும். இங்கே மின்சார உற்பத்திக்கு வசதி வாய்ப்பு இருக்கிறது. ஆனால், இதை ஊக்குவிக்கும் வகையில் செய்ய அதற்கு அனுமதி கிடைக்கவில்லை. இம்மாதிரி நிலைமைகள் இருந்தால் அதை அனுதாபத்தோடு பார்க்க வேண்டுமே தவிர அதை விட்டுவிட்டுப் பேசுவது நல்லதல்ல.

[திரு. மணலி சி. கந்தசாமி] [1975 மார்ச் 8

அடுத்து, பெரும்பாலும் இலஞ்சம், இலஞ்சம் என்றுதான் பேசுகிறார்கள். இலஞ்சத்தைப்பற்றிப் பேசும்பொழுது, இலஞ்சம் வாங்கிக் கொண்டு இன்னது செய்திருக்கிறார்கள், அதற்காக இவர்கள் விலக வேண்டுமென்று சொன்னால் புரிந்து கொள்ளலாம். அன்றைக்கு ஹாண்டே அவர்கள் சுற்றிச்சுற்றி என்ன பேசுகிறார்கள் என்று பார்த்தேன். அவர்கள் கூறியது என்னவென்றால்,

" You should get out and he should come in "

இதை எப்படி ஒத்துக்கொள்ள முடியும்? அரசியலை "சிம்பிளிஃபை" செய்வதை எங்களைப் போன்றவர்கள் ஒத்துக்கொள்ள முடியாது.

(நண்பகல் 12-00)

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** பட்ஜட்டில் நான் பேசிய நேரத்தில் அந்த வார்த்தைகள் வரவில்லை. பட்ஜட்டில் பேசிய நேரத்தில் நான் பல தவறுகளை ஆதாரத்தோடு, ஆடிட்டர்ஸ் ரிப்போர்ட் எல்லாம் சுட்டிக்காட்டிப் பேசினேன். அவர்கள் சொன்னது போல் வேறு ஒருமுறை பேசியிருக்கிறேன், பட்ஜெட்டில் பேசவில்லை. பல குறைபாடுகளை எடுத்துக் காட்டினேன்.

I have pointed out the faults.

அதிலே தவறு இருந்தால் சொல்லுங்கள். மனதில் எதையோ நான் சொன்னேன் என்று கற்பித்துக் கொண்டு பதில் சொல்லிக் கொண்டிருப்பது சரியல்ல.

**திருமதி சத்தியவாணி முத்து:** மாண்புமிகு பெரியவர் மணலி அவர்கள் பேசும்போது மத்திய அரசு சில பலவீனமான மாநிலங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். அப்படிச் செய்யவில்லை என்ற வகையில் பேசினார்கள். நம்முடைய முதல்வர் அவர்கள் உரையிலிருந்து நம்முடைய மாநிலம் அவ்வளவு பின் தங்கிய நிலையில் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். "வளர்ச்சிப் பணிகளுக்கென நிதிவசதிகளைப் பேணித் திரட்டுவதில் நாம் மற்றெந்த மாநிலத்திற்கும் பின் நின்றதில்லை. நாம் கவனிக்க வேண்டியது, ஒரு குறிப்பிட்ட ஆண்டில் நிதிநிலை பற்றாக் குறையாக அமைந்துள்ளதா, அல்லது உபரியாக அமைந்துள்ளதா என்பதல்ல. மாநில மக்களின் தேவைகளுக்கேற்ப வளர்ச்சித் திட்டங்களை வகுக்க மத்திய, மாநில அரசுகளுக்கிடையில் நிதி உறவு நியாயமான முறையில் அமைந்துள்ளதா" என்று கேட்டு



1975 மார்ச் 8] [திருமதி சத்தியவாணிமுத்து]

விட்டு "தன்னாலியன்றவரை வசதிகளைத் திரட்டி, சிக்கனமாகவும், சீராகவும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டுள்ள நம்மைப் போன்ற மாநிலங்களுக்குக் கிடைத்த பரிசு, அந்தப் புள்ளிவிவரங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, வேறு சில மாநிலங்களுக்கு அதிக உதவி கொடுத்து நமக்குக் குறைத்து விட்டதுதான்" என்று முதல்வர் அவர்களே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, மத்திய அரசு சரியாகத்தான் கொடுத்திருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்ளுகிறார்களா?

**திரு. மணலி சி. கந்தசாமி:** நண்பர் ஹாண்டே அவர்கள் சொன்னதைப் புரிந்து கொண்டுதான் பேசுகிறேன். தவறுகளை எடுத்துக் காட்டுகிற நேரத்தில் ஆளுங்கட்சி பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது. இப்போது எல்லாம் பெரிய மாந்திரிகம் போல் நடக்கிறது. இவர்கள் போய் வேறு சிலர் இங்கு வந்து உட்கார்ந்து விட்டால் மக்களின் நிலைமை தலைகீழாக மாறிவிடுமா? என்னைப்போல் 40, 50 வருஷ காலம் அனுபவம் உள்ளவர்கள் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. கலைஞர் போய் எம்.ஜி.ஆர். வந்து உட்கார்ந்து விட்டால் விஷயம் தீர்ந்துவிடும் என்று நான் ஏற்றுக் கொள்ள முடியாது. ஹாண்டே அவர்கள் உட்கார்ந்தாலும் நடக்காது. விஷயங்களைச் சொல்லுங்கள். எப்படி வருமானத்தை அதிகரிக்க வேண்டும், எப்படி செலவினங்களைச் செய்ய வேண்டும், எப்படி லஞ்சத்தை நிறுத்த வேண்டுமென்று கூறுங்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** அப்படி என்றால் மத்தியில் ஆளும் காங்கிரஸ் ஆட்சியும் மாறவேண்டாம்; தொடர்ந்து நீடிக்கட்டும் என்று உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார்களா?

**திரு. மணலி சி. கந்தசாமி:** ஆட்சியை மாற்றுவதை பற்றியல்ல, மாற்றுவது என்றால் வழியோடு மாற்றுங்கள். அங்கும் மாற வேண்டும்; இங்கும் மாற வேண்டும். அது அரசியல் வழியாக இருக்க வேண்டும். மாந்திரிக வழியாக இருக்கக் கூடாது. உள்ளபடியே மந்திரங்கள் வேலை செய்கிறதோ என்று எனக்குச் சந்தேகமாக இருக்கிறது.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** பெரியவர் மணலி அவர்களுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லையா?

**திரு. மணலி சி. கந்தசாமி:** அவர் போக்கு மந்திரத்தில் நம்பிக்கை இருப்பது போல் இருக்கிறது. எனக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை இருக்கிறது

[1975 மார்ச் 8

**திரு. க. உரொ. எட்மண்ட்:** எங்களுக்கு எந்தவிதச் சந்தேகமும் வரவில்லையே.

**திரு. மணலி சி. கந்தசாமி:** இன்றைக்கு இருக்கும் நிலைமைகளுக்குப் பரிகாரம் இவர்கள் போய் அவர்கள் வந்தால் போதும் என்று பேசுகிறார்கள், அது சரியல்ல என்று தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன். நான் எட்மண்டை மதிக்கிறவன்; செழியனை மதிக்கிறவன். புத்திசாலியான வாலிபர்கள். உடம்பில் நல்ல ரத்தம் இருக்கிறது. எம்.ஜி.ஆரை விட்டு விட்டு அவர்கள் கட்சி வைத்தால் அந்தக் கட்சியில் கூடச் சேரத் தயாராக இருக்கிறேன். முறையான எதிர்க்கட்சியாக உருவாக்குங்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** ஒருவர் ஒரு கட்சியை விரும்புவது அந்தக் கட்சியின் கொள்கைகளுக்காகத்தானே தவிர, அந்தக் கட்சியின் தலைவர் யார் என்பதற்காக அல்ல.

**திரு. மணலி சி. கந்தசாமி:** தலைவருக்காக என்று சொல்லவில்லை. நீங்கள் அசெம்பிளியில் மிகச் சிறப்பாக, எதிர்க்கட்சியாக இயங்கிக் கொண்டிருக்கும் காட்சியைப் பார்க்கிறேன். உங்களுடைய தலைவர் 'அசெம்பிளி செத்துவிட்டது' என்று சொல்லுகிறார். நீங்கள் மிகச் சுறுசுறுப்பாக இந்த செத்த அசெம்பிளிக்குள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறீர்கள். (சிரிப்பு.) சிரிப்பதற்காகச் சொல்லவில்லை. யதார்த்த நிலைக்கு வாருங்கள். எம்.ஜி.ஆரைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அவர் அரசியல் வாதியாக இல்லை. அரசியல்வாதி என்று அவரைச் சொல்ல முடியாது. அவர் இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலைக்குத் தன்னை அட்ஜஸ்ட் செய்து கொள்ள வேண்டும். யாரையும் அவமதிக்கும் பழக்கம் எனக்குக் கிடையாது.

இந்த பட்ஜட்டில் மாநில சுயாட்சி பற்றி முக்கியமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கம்யூனிஸ்டு தேசத்தில் பூஷ்வாக்களாலும், போல்ஷ்விக்குகளாலும், பெரிய தேசத்தில் பல தேசீய இனங்கள் இருக்கும்போது சமனமற்ற வளர்ச்சி ஏற்படாது ஒற்றுமைப்படுத்த வேண்டுமென்றால் மாநில சர்க்கார் பூரண உரிமையோடு இருக்கவேண்டும். மாநில சர்க்காரைப் பிரதிபலிக்கும் முறையில் கூட்டமைப்பு இருக்க வேண்டுமென்பது விஞ்ஞான ரீதியான முடிவு. இங்கிருக்கும் கலைஞர் அவர்கள் தமிழ் நாட்டை இந்தியாவிலிருந்து பிரித்து விடுவார்கள் என்று நான்



1975 மார்ச் 8] [திரு. மணலி சி. கந்தசாமி]

நம்பத் தயாராக இல்லை. அவர்கள் அவ்வளவு பெரிய வல்லவர்கள் அல்ல. மக்கள் மீது நம்பிக்கை வேண்டும். மத்திய சர்க்கார் மாநிலங்களுக்குச் சுயாட்சி கொடுத்து மாநிலத்தைக் கூட்டாட்சியாக உருவாக்க வேண்டுமென்பது இன்று அரசியலில் ஏற்படும் மாறுதல்கள் கான்ஸ்டிடியூஷன் மாறுதல்களின் அடிப்படையாகும். ஒரு எவல்யூஷன் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அண்ணா சொன்னாரா இல்லையா என்பதற்கெல்லாம் போக வேண்டாம். 'ரைட் ஆப் செல்ஃப் டிட்டர்மினேஷன்', சுய நிர்ணய உரிமை எந்த மக்களுக்கும் இருக்கக்கூடிய அடிப்படை உரிமை. சுதந்திரம் பிறப்புரிமை என்று சொல்லுவது போல் தேசிய இனங்கள் தங்களுடைய உரிமையை மத்திய சர்க்காரிடமிருந்து பெற வேண்டும். பிரிட்டிஷ்காரன் நான் நன்றாகத்தானே ஆளுகிறேன் என்று அன்று சொன்னான். இன்று எவல்யூஷன் ஏற்பட்டிருக்கிறது. தவிர்க்க முடியாத அடுத்த கட்ட வளர்ச்சி இது. கலைஞர் அவர்கள் இந்தப் பந்தை உருட்டி விட்டிருக்கிறார்கள். நிச்சயமாக இது வேகம் கொள்ளப் போகிறது. பல மாநிலங்களும், பல்வேறு மக்களும் இந்தப் பாதையில் வரப் போகின்றனர்.

இதிலே துர்ப்பாக்கியமானது என்னவென்றால் திராவிட முன்னேற்றக் கழகம் இந்த கோஷத்தை இன்னும் மக்களிடத்தில், மக்கள் மத்தியில் எடுத்துக் கொண்டு போவதிலே தயக்கம் காட்டுகிறது என்பதுதான். உறுதியோடு இந்தக் கொள்கையை மக்கள் மத்தியில் கொண்டு போகக்கூடிய அளவுக்குத் துணிவு இருக்க வேண்டும். காஷ்மீர் வேறு, இது வேறு. அந்த அம்மாள் என்ன சொன்னார்கள்? 'ஷேக் அப்துல்லா பின்னால் மக்கள் இருக்கிறார்கள்' என்று சொன்னார்கள். உங்கள் பின்னாலும் மக்கள் இருந்தால் அந்தப் பிரச்சினையைக் கவனித்துத் தீர்வார்கள். அதற்காக உங்களுடைய கட்சியைச் சித்தப்படுத்தி போராட்டக் கட்சியாகத் திரட்ட வேண்டும். போராட்டக் கட்சியாகத் திருப்பி விடப்படுமானால் கட்சியில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் தீர்ந்து விடும்.

ஹாண்டே அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். எஸ்டிமேட் கமிட்டி ரிப்போர்ட்டில் சில விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இதிலே நிச்சயமாக மந்திரிசபை தன்னுடைய கடமையிலே தவறிவிட்டது. யார் அதற்குப் பொறுப்பாளியாக இருந்தாலும் இப்படிப்பட்ட விஷயங்களில் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

DR. H. V. HANDE : Hear, hear.

THIRU MANALI C. KANDASAMI : I do not want your 'hear'.

டாக்டர் எச். வி. ஹாண்டே: ஒரு வாய்ப்புக் கொடுத்தீர்கள்.

For once the hon. Member gave me a chance to appreciate his speech. Once in his life-time he spoke, according to me, something correct . . . . .

THIRU MANALI C. KANDASAMI : I want to tell Dr. Hande that he is unnecessarily provoking the Ruling Party, about which I am not worried.

DR. H. V. HANDE : For once he spoke *

MR. DEPUTY SPEAKER : That is too much. The hon. Member should not have used that word. It should not form part of the proceedings. I expunge it.

DR. H. V. HANDE : I withdraw that word. I have only stated that only once the hon. Member gave me an opportunity to appreciate his speech.

திரு. மணலி சி. கந்தசாமி: எப்போது பார்த்தாலும் இதே பேச்சு. உங்களுக்கே தலைவலியாகத் தெரியவில்லையா? அதைப் பற்றித் தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும். சில இலாகாக்கள், துறைகள், லஞ்ச லாவண்யத்திற்கான இலாகாக்களாக இருக்கின்றன. மின்சார இலாகா, பி.டபிள்யூ.டி., சிவில் சப்ளைஸ் ஆகியவற்றில் கொஞ்சம் உஷாராக இருக்க வேண்டும். எங்கு பார்த்தாலும் உங்கள் மீது புழுதி வாரி விடப்படுகிறது. கட்சியில் யார் தவறு செய்திருந்தாலும் தைரியமாக நடவடிக்கை எடுங்கள். அது உங்கள் கட்சிக்கு உரமூட்டுவதாக அமையும்.

பண்டித நேரு அவர்கள் ஒரு உபதேசம் செய்கிறார் என்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். உபதேசம் செய்தாலும் ஏறாது. நேரு அவர்கள் லஞ்ச லாவண்யத்தைப் பற்றிப் பேசிய ஒரு விஷயத்தைப் பற்றி நான் குறிப்பிட்டு விட்டு என் பேச்சை முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

---

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





The folklore of corruption then becomes in itself damaging, for it can give an exaggerated impression of the prevalence of corruption, especially among officials at high levels.

Merely shouting from the house-tops that everybody is corrupt creates an atmosphere of corruption. People feel they live in a climate of corruption and they get corrupted themselves. The man in the street says to himself "well, if everybody seems corrupt, why shouldn't I be corrupt". That is the climate sought to be created which must be discouraged.

என்று நேரு அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, லஞ்சத்தைச் சுட்டிக் காட்டுவதைப் பற்றி வேண்டாமென்று நான் சொல்லவில்லை. ஆனால், அதே வேலையாக இருந்தால் எப்படி?

ஜே.பி. இயக்கத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், ஜே.பி. அவர்கள் குறிப்பிட்ட ஒரு மாநிலத்தில் கரப்ஷன் அதிகமாகி விட்டது என்று அந்த மாநில சர்க்கார் கலைக்கப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால், அவரை ரைட் ரியாக்ஷன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அவரைப் பின்பற்றக் கூடிய லட்சக்கணக்கான மக்களை வைத்துக் கொண்டே நாம் ஒரு முடிவிற்கு வரலாமே? டில்லியில் என்ன நடந்தது? உங்களுக்கு விழிப்பு வந்தாச்சு. 10 லட்சம் மக்களைத் திரட்டி பீஹார் சர்க்காரைக் கலைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். காது கொடுத்துக் கேட்கவேண்டிய நிலை அந்த அம்மையாரானாலும் சரி, இந்த அம்மையாரானாலும் சரி, அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஜே.பி. இயக்கம் என்று சொன்னால் அவர் பின்னால் பிஜு பட்னாயக் இருக்கிறாரே என்று சொல்வதல்ல. அவர் சொல்வது என்ன? அவர் குறிக்கோள் என்ன? அந்த குறிக்கோள் பூர்த்தி செய்யப்பட்டால் நாட்டிற்கு நல்லது தானே. உங்கள் செயல்களினாலே அவர் பலரைச் சேர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஜே.பி. இயக்கம் தூய்மையான இயக்கமென்று நான் கருதுகிறேன். அவர் சேர்த்துக் கொண்டிருக்கிற ஆட்களைப் பார்த்தால் அது எங்கே போய் முடியும் என்று கேட்டால் அது நீங்கள் 'டீல்' பண்ணக் கூடிய விதத்தில் தான் இருக்கிறது. அந்தப் பிரச்சனையை முறையாக சந்தித்தால் அதை முறையாகத் தீர்க்க முடியும். கபூர் மந்திரி சபையைக் கலைத்தால் என்ன? கலைக்காமல் இருப்பதற்கான காரியங்களைச் சொன்னால் தீர்ந்தது

[திரு. மணலி சி. கந்தசாமி] [1975 மார்ச் 6

தேர்தல் ரிபார்ம்ஸ் பற்றிச் சொல்ல வேண்டுமானால், அவைகளை ஒத்துக்கொள்ள வேண்டியது தான். பிரதமர் உள்பட எல்லோரையும் விசாரிப்பதற்கு கரப்ஷன் சம்பந்தமாக விசாரிப்பதற்கு, ஒரு சட்டம் இயற்றப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். அதில் என்ன தவறு இருக்கிறது. இன்றைக்கு குறிப்பிட்ட சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். குறிப்பிட்ட கட்சி அதிகாரத்தில் இருக்கிறது.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அரசியல் ரீதியாக இயங்க ஆரம்பித்தால் நான் அதைப் பற்றியும் சிந்திக்கத் தயாராக இருக்கிறேன். ஒரு தலைவர் வழிபாடு வளர வேண்டுமென்று சொன்னால் நான் அவர்களையே கேட்கிறேன். மிகச் சிறந்த தலைவர்களாக உருவாக்கக் கூடியவர்களை விட்டு விட்டு, சட்டசபை செத்துவிட்டது என்று சட்டசபைக்கு மாத்திரமல்ல, தமிழ்நாட்டு மக்களுக்கும் அவர் தீங்கிழைக்கிறார் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். பர்ஸனலிடி கல்ட்டை டெவலப் பண்ணுவது சரியல்ல. அவர் தர்மம் பண்ணுவதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஏற்கெனவே ஆளும் கட்சியில் இருந்தபோது ரிக்ஷாக்காரர்களுக்கு ரெயின் கோட் வாங்கிக் கொடுத்தவர். அரசியல் அதிலிருந்து ஆரம்பமாகிறது. பிலாந்த்ரபியை அரசியலோடு கலக்காதீர்கள். மகா பாவம் அது. தர்மத்தை அரசியலோடு கலக்காதீர்கள். தர்மம் வேறு, அரசியல் வேறு. நான் என்ன பண்ணுவேன். எனக்கே தர்மம் பண்ணவேண்டும். அப்படியிருக்க நான் எங்கே தர்மம் பண்ணுவது? காலையில் யாராவது வந்து இரண்டு இட்லி கொடுத்தால் அதுவே பெரிய தர்மம். ஆகவே தர்மத்தை அரசியலோடு சேர்க்காதீர்கள். தர்மத்திற்காக தலை வணங்காதீர்கள்.

நான் பல விஷயங்கள் கேள்விப்படுகிறேன். அது ரொம்பவும் தப்பு. அது அவர்களுக்கே நல்லதல்ல. அவர் அரசியல் வாதியாக துணிந்து எழுந்து அந்த இயக்கத்தை ஜனநாயகப்படுத்தி உருப்படியான பிரச்னைகளை எடுத்துக் கொண்டு கன்ஸ்ட்ரக்டிவ் அப்போசிஷனாக விளங்கக் கூடிய விதத்தில் இயங்க வேண்டுமென்று நான் சொல்லிக் கொள்கிறேன். தேசத்திலே பல்வேறு மாறுதல்கள் நடக்கத்தான் போகின்றன. ஆனால் அவைகள் ஆச்சரியப்படத் தக்கவை அல்ல. இந்திரா காந்தி அவர்களின் ஆட்சி நீடிக்குமாவென்றே சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது.



1975 மார்ச் 6] [திரு. மணலி சி. கந்தசாமி]

அதை யாரும் மறுக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் நாமும் வருங்காலத்தை உருவாக்கக் கூடிய முறையில் நல்ல அரசியலை, ஆரோக்கியமான அரசியலை வளர்க்கவேண்டும். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பல தோழர்களை நான் மிகவும் நேசிக்கிறேன். அவர்களில் சில பேர்கள் மேல் எனக்கு விருப்பம் கூட உண்டு. அவர்களை, அந்த இயக்கத்தை ஒரு கட்சியாக நடத்துங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரையில் மக்களைப் பாதிக்கக் கூடிய எந்த விஷயமும் இல்லை. கொஞ்சம் வரி போட்டிருக்கிறார்கள், அதனால் விலை ஏறிவிடாது. இது எந்த அளவிலும் மக்களை பாதிக்காது. பஞ்ச ஒழிப்பு நடவடிக்கைகளைப் பொறுத்த மட்டில், மக்களை பஞ்சத்திலிருந்து காப்பாற்றக் கூடிய நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில். நீண்ட காலத்திற்கு உருப்படியாக பணத்தைச் செலவு செய்து பணிகள் செய்யப்பட வேண்டும். ஏரி வெட்டுவதோ, குளம் வெட்டுவதோ எதுவாக இருந்தாலும், நல்ல முறையில் செய்யப்பட வேண்டும். அடியில் இருக்கிற தண்ணீரை வெளியே கொண்டு வரும் நடவடிக்கையை பெரிய வேலையாக எடுத்துச் செய்யவேண்டும்.

எலெக்ட்ரிசிடி போர்டைப் பொறுத்தவரை, அது கிட்டத்தட்ட பாதி சர்க்காராக இருக்கிறது. மாண்புமிகு திரு. சாதிக்பாட்சா அவர்கள் கொஞ்சம் ஊக்கம் செலுத்தி, கவனம் செலுத்தி, எக்ஸ்பர்ட்ஸ்களை வைத்துக்கொண்டு நல்ல முறையில் திருத்தியமைத்து அது மாநிலத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கும் வகையில் அமைக்க வேண்டும். 120 கோடி ரூபாய் அளவிற்கு அது பாதி சர்க்காராக செயல்பட்டு வருகிறது.

சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் பொறுத்தவரை, ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தை எடுத்துக் கொள்ளவேண்டும். அதைப் பற்றி விரிவாக சம்பந்தப்பட்ட நேரம் கிடைக்கும்போது பின்னால் பேசலாம் என்று கருதி, நேரத்தை வீணாக்க விரும்பாத காரணத்தினால் இத்துடன் என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. வ. முத்து:** தலைவரவர்களே, இந்த 1975-76-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையைப் பாராட்டி எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மத்திய அரசு இந்த நேரத்தில் போட்ட வரிச் சுமையின் காலகட்டத்தில் தமிழக அரசு எந்த விதமான அதிக வரியையும் போடாமல், அடித் தளத்து மக்களை மையமாகக் கொண்டு புரட்சிகரமான திட்டத்தைப் போட்டுள்ளது என்று பெருமையாகச் சொல்லிக் கொள்கிறேன். உதாரணத்திற்கு, மீனவர்களுக்கு வீடு கட்டும் திட்டம், நெசவாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு திட்டம், அதேபோன்று ஆதரவற்ற குழந்தைகள், விதவைகள் ஆகியவர்களைப் பாதுகாக்கின்ற திட்டம், இப்படிப்பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது. இப்படிப்பட்ட திட்டங்கள் பாராட்டப்பட வேண்டியவைகளாகும். இன்னும் உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் அரசு ஊழியர்களுக்கு அகவிலைப் படியாக அதிகமாக 24 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிற திட்டமாகும். ஓய்வூதியம் பெறுகிறவர்களுக்கு 5 ரூபாய் உயர்த்திக் கொடுக்கிற திட்டம், அதே போன்று பரம்பிக்குளம், ஆழியாறு திட்டத்தில் மேலும் 89 ஆயிரம் ஏக்கர்களுக்கு பாசன வசதி செய்து கொடுக்கிற திட்டம், இப்படி பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது. ஆக, இந்த நிதி நிலையைப் பாராட்டி, எனது தொகுதியில் முக்கியமாக செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றி நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எனது தொகுதியில் உள்ள சங்ககிரி நகரத்திற்குப் போதுமான குடி தண்ணீர் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. கழக அரசு குடிநீர் வாரியத்தின் மூலமாகவும் வறட்சிப் பணிகள் மூலமாகவும் போர் வெல் போட்டுக் கொடுத்து புதிய கிணறுகளை கட்டிக் கொடுத்து வருகிறது. அப்படியிருந்தும், அந்தப் பகுதி மழை காணாத பகுதியான படியால் தண்ணீர் கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட நிலையில் அங்கே தண்ணீர் இல்லாத காரணத்தினால் அங்குள்ள முக்கிய அலுவலகங்களை, மின்சார வாரியம் போன்ற அலுவலகங்களை வேறு இடங்களுக்கு மாற்றக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதி மக்களுக்குத் தண்ணீர் போதவில்லை என்ற நிலையை மாற்றுகிற வகையில் சங்ககிரிக்கு அருகாமையில் உள்ள சிமெண்டு ஆலை வரையிலும் காவிரித் தண்ணீர் கொண்டு வரப்பட்டுள்ளதை, அந்த இடத்திலிருந்து குழாய் மூலமாக சங்ககிரி நகரத்திற்குக் கொண்டு வர வழி வகை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.



மேலும் சங்ககிரி பஞ்சாயத்து போதுமான வருமானம் இல்லாத பஞ்சாயத்தாக இயங்கிக் கொண்டு வருகிறது. அதில் வருகிற வருமானம் அங்கு வேலை செய்யும் ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கவே போதாத நிலையில் இருக்கிறது. ஆகவே, அருகாமையில் உள்ள அந்த சிமெண்ட் ஆலையை சங்ககிரி பஞ்சாயத்தோடு இணைத்தால் அதற்கு அதிக வருமானம் வரக் கூடிய நிலை ஏற்படும். அதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று எங்கள் தொகுதியில் திருமணிமுத்தாறு ஓடுகிறது. மல்லசமுத்திரம் ஒன்றியம் பகுதியில் உள்ள ஏரிக்கு ஒரு கால்வாய் வெட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க தற்போது அங்கே வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த வேலையைத் துரிதமாகச்செய்து முடித்துத் தர வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மல்லசமுத்திரம், எலச்சிப்பாளையம் ஆகிய ஊர்களில் திருமணிமுத்தாறு அணையின் கால்வாய் ஓடுகிறது. அந்தக் கால்வாய் பழுது பட்டு இருக்கிறது. அந்தக் கால்வாய் இந்த வறட்சி நிவாரணப் பணியின் கீழ் எடுத்துக்கொண்டு. செப்பனிட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எலச்சிப்பாளையம் ஒன்றியத்திற்கு அலுவலகக் கட்டிடம் சொந்தமாக இல்லாமல் 15 ஆண்டுகாலமாக இருக்கிறது. அங்கேயுள்ள மக்களிடையே அந்த ஒன்றிய அலுவலகத்தை எலச்சிப்பாளையத்தில் வைப்பதா, அல்லது மாணிக்கம்பாளையத்தில் வைப்பதா என்று சர்ச்சை இருந்தது. ஆதலால் அது கட்டப்படாமல் இருந்தது. தற்போது அந்த மக்களிடையே ஒரு சமரச உடன்பாடு ஏற்பட்டு, அந்த ஒன்றியத் தலைவரும், பஞ்சாயத்து தலைவரும் ஒன்று கூடி, எலச்சிப்பாளையத்தில் யூனியன் அலுவலகத்தையும், மாணிக்கம் பாளையத்தில் பிரைமரி ஹெல்த் சென்டரையும் கட்டலாம் என்று முடிவு எடுத்து, அந்த முடிவும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எடுத்துச்சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதி மக்கள் விரும்புகிற அந்த இடங்களில் உடனடியாக அந்த இரண்டு கட்டிடங்களை கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நான் இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரிக்கிறேன் என்று கூறி அமர்கிறேன். வணக்கம்.

**திரு. வி. கே. இராஜாப் பிள்ளை :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த அவை முன் வைக்கப்பட்டு இருக்கும் நிதிநிலை அறிக்கை மீது சில கருத்துக்களைக் கூறுவதற்கு விரும்புகிறேன்.

முதலாவதாக எனது தொகுதிப் பிரச்சனை, மாவட்டப் பிரச்சனை ஆகியவற்றை எடுத்துக் கூறலாம் என்று நினைக்கிறேன். எனது தொகுதியைப் பொறுத்தவரையில் உலக்கையருவி அணைத் திட்டத்திலிருந்து, தோவாளைப் பஞ்சாயத்து யூனியனுக்கு குடிநீர் திட்டம் அமைப்பதற்கு அந்தப் பஞ்சாயத்து யூனியனிலிருந்து ரூ. 26,000 ஆய்வுப்பணமாகக் கட்டி, ஆய்வு முடித்து 1½ ஆண்டுகள் ஆகிவிட்டது, இன்றும் அது என்ன நிலையில் இருக்கிறது என்பதை அறிய முடியாமல் இருக்கிறது. இந்த அவையிலே ஒரு கேள்விக்கு முதலமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிற நேரத்தில் எந்த அளவுக்கு அந்தத் திட்டம் முடிவடைந்து இருக்கிறது, எப்போது அது நிறைவேற்றப்படும் என்று கேட்டதற்கு, அந்தத் திட்டத்தை விரைவில் முடிப்பதற்கு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று கூறினார்கள். ஆகவே, அந்தத் திட்டத்தை விரைவில் முடித்துத் தந்திடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முக்கடல் நீர்த்தேக்கத்திலிருந்து-பூதப்பாண்டி, திட்டுவிளை போன்ற இடங்களில் சில குடி நீர் குழாய்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பூதப்பாண்டி ஊராட்சி மன்றம் அந்த நீர்த்தேக்கத்திலிருந்து அதிகக் குழாய்கள் தரவேண்டுமென்று கேட்டு தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறது. அந்தக் குழாயை இணைப்பதற்காக மதுரையிலிருந்து குடிநீர் வாரிய பொறியாளர் ஒப்புதல் தந்து இருக்கிறார்கள். அந்த ஒப்புதல் வந்து பல மாதங்கள் ஆகியும் இன்னும் அந்த வேலை செய்து முடிக்கப்படவில்லை. அதை விரைவில் நடத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொய்கை அணைத் திட்டம் குறித்து நிதி நிலை அறிக்கையிலேயே கூறப்பட்டு இருக்கிறது. அது ஏட்டளவில் நின்றுவிடாமல் செயல் வடிவம் பெறவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அந்தத் திட்டத்தை ஆரல்வாய்மொழி, தோவாளை செண்பகராமன்புதூர், குமாரபுரம் போன்ற இடங்களும் பயன்படும் வகையில் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





தடிக்காரன் கோணத்திலிருந்து தூவச்சி வரை சுமார் 3,000 ஏக்கர் நிலங்கள் மரங்கள் அடர்ந்ததாகவும், தண்ணீர் வசதி நிரம்பியதாகவும் இருக்கிறது. பல நிபுணர்களாலும் ஒப்புதலளிக்கப்பட்ட அந்த இடத்தில் ஒரு கால் நடை வளர்ப்புப் பண்ணை அமைத்துத் தந்தால் அது அந்தப் பகுதிக்கும், தமிழ் நாட்டுக்குமே பயன்படும் என்றும் கூறிக் கொள்கிறேன்.

அண்மையில் உலக வங்கி அதிகாரிகளும், மத்திய அரசு அதிகாரிகளும் கன்னியாகுமரி நகரியத்திற்கு வந்து பார்வையிட்ட போது, சின்னமுட்டம் ஒரு இயற்கையான துறைமுகமாக அமைந்து இருப்பதால் அங்கே ஒரு மீன்பிடி துறைமுகம் அமைக்கலாம் என்று கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். அங்கே ஒரு மீன்பிடி துறைமுகம் அமைக்கப்பட்டால், அந்த இடத்திலிருந்து சுமார் 40 கி. மீ. தொலைவில் உள்ள இன்டர்நேஷனல் வாட்டர்ஸ் வெட்ஜ் பாங்கிலிருந்து ஏராளமான மீன்களைச் சிறிய கப்பல் மூலமாகக் கொண்டு வரமுடியும். அப்படிக் கொண்டு வந்தால் தற்போதுள்ள உணவுப் பற்றுக்குறையை ஓரளவு தவிர்ப்பதற்கு உதவிகரமாக இருக்கும். ஆகவே, அங்கேயொரு மீன்பிடி துறைமுகத்தை அமைத்துத்தர இந்த அரசோ அல்லது இந்த அரசின் பரிந்துரை மீது மத்திய அரசோ செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், கன்னியாகுமரி மாவட்டத்தில், அரிசன மக்கள் பெருவாரியாக வசிக்கும் பகுதியாக இருக்கிறது. அவர்களுக்குக் குறிப்பாகவும், சிறப்பாகவும், வீட்டுவசதி செய்து கொடுக்கவேண்டும். ரத்தினபுரம், திடல், பாக்கியநேரி, ஊட்டுவாழ்மடம் ஆகிய இன்னும் பல பழைய அரிசன காலனிகளில் குடிநீர் வசதி, சுகாதார வசதி, மின் வசதி ஆகியவை செய்து தரப்படவில்லை. அவற்றைச் செய்து தருவதோடு, சுசீந்திரம், கரையான்குழி, சிறமடம், குமாரபுரம் போன்ற இடங்களில் குடியிருப்புகள் கட்டிக்கொடுக்கவேண்டும். அங்குள்ள அரிசனங்கள் ஏழைகளாகவும் விவசாயத் தொழிலாளர்களாகவும் இருப்பதால் ஏர், விவசாயக் கருவிகள் ஆகியவற்றை இலவசமாக வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் நஞ்சை நிலங்கள் ஏராளமாக இருப்பதால், அது நாஞ்சில் நாடு என்று பெயர் உடையதாக இருக்கிறது. அந்தப் பகுதியில் பல குளங்கள் பல வருடங்களாக தூர்

எடுக்கப்படாமல் மண் மேட்டுக் கிடக்கிறது. அந்தக் குளங்களைத் தூர் எடுத்துக்கொடுத்தால், இந்த வறட்சி நேரத்தில் மிகவும் உகந்ததாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். அதே நேரத்தில் கீழ்க்கண்ட இந்தத் திட்டங்களை விரைவில் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்க்குளம், பறக்கைக்குளம், புத்தேரிகுளம், இறச்சக்குளம், பெரியகுளம் செண்பகராமன் புதூர் பெரியகுளம், அழகிய பாண்டியபுரம் பெரிய குளம், பொய்கைக்குளம், ஒழுகின சேரி பாலத்திலிருந்து கோதை கிராமம் வழியாக தேரூர் செல்லும் ரோடு, மருங்கூர் காமராயன்புதூர், தோவாளைச் சாரல் ரோடு, நாற்கால் மடம், தாழக்குடி-பூதப்பண்டிரோடு, இறச்சகுளத்திலிருந்து தாழக்குடி போகும் ரோட்டை விரிவுபடுத்தி, பழையாற்றின்மீது ஒரு புதுப்பாலம் கட்டுதல், அருமநல்லூரிலிருந்து தடிக்காரன் கோணத்திற்குப் போகும் ரோடும், பழையாற்றின்மீது ஒரு பாலமும் கட்டுதல், வடக்கு தாமரைக்குளம்—கற்குறும்பொத்தையை இணைக்கும் பாதையில் பழையாற்றின்மீது ஒரு பாலம் கட்டுதல் ஆகிய திட்டங்களை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த மாவட்டத்தில் பாசன வசதிக்காக மிகவும் பயன்படுவது பேச்சிப்பாறை அணைத்திட்டமாகும். மடை மட்டத்திற்குமேல் உள்ள 48 அடி தண்ணீரால் சுமார் 65,000 ஏக்கர் நிலங்களில் இரு போக விளைச்சல் கிடைக்கிறது. மடை மட்டத்திற்குகீழே 40 அடி தண்ணீர் இருக்கிறது. மேல் மட்டத்திலுள்ள தண்ணீர் தீர்ந்த உடனே, கீழே உள்ள 40 அடி தண்ணீரை உபயோகிக்க முடியாமல் இருக்கிறது. ஆகவே, அந்தக் கீழ் மட்டத்தில் உள்ள தண்ணீரை மின்சார பம்ப் வைத்து அதன் மூலம் தண்ணீர் மேலே எடுத்து பாசனத்திற்குத் தந்தால் இந்த வறட்சி நேரத்தில் இரு போகம் விளையும் நிலங்களிலும் மூன்று போகம் பயிர் செய்யும் நிலை ஏற்படும். அதைச் செய்து கொடுத்தால் அந்த மாவட்டமும் அபிவிருத்தியாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதைக் குறித்து, அந்த மாவட்டத்திற்கு சுற்றுப்பயணம் வந்திருந்த மின்சார வாரியத் தலைவரும், போர்டு மெம்பருமான திரு. ராஜாராம் அவர்கள் அங்கே வந்தபோது எடுத்துக்கூறினேன். இது விரைவில் அது நிறைவேற்றப்படவில்லை. ஆகவே, பேச்சிப்பாறையில் பம்ப் செட் வைக்கும் திட்டத்தை அமலுக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





நமது மேலவையில் ஒரு பொறுப்புள்ள உறுப்பினர் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். அவர்கள் கன்னியாகுமரியைப் பற்றிக் குறிப்பிடும்போது, அது தமிழ் நாட்டைச் சேர்ந்ததா அல்லது வட நாட்டைச் சேர்ந்ததா, அல்லது சைனாவைச் சேர்ந்ததா என்று சொல்லியிருக்கிறார்கள். தலைவரவர்களே, உங்கள் அனுமதியோடு அவர் பேசியதைப் படிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மேலவையில் ஒரு உறுப்பினர் பேசியதை இங்கே படிப்பது சரியல்ல. அந்தக் கருத்தை மட்டும் சொல்லுங்கள்.

(பிற்பகல் 12.30)

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** உறுப்பினர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்ததால், அந்த மாவட்டத்தைப் பற்றி மேலவையில் மேலவை உறுப்பினர் என்ன பேசினார் என்ற கருத்தைத்தான் இங்கே சொல்கிறார். அவருடைய கருத்தைத் தான் ஏற்றுக் கொள்ளவில்லை என்று இங்கு கூறுகிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கருத்து கூறியதாகக் கூறி கிரிடிசைஸ் பண்ணக் கூடாது.

**திரு. நா. வீராசாமி:** உறுப்பினர் அவர்கள் பேச்சை ஆரம்பித்தபோது வருத்தப்பட்ட வார்த்தைகளைப் பேசினார். மேலவைத் உறுப்பினரைக் குறை கூறுவது போலப் பேசினார். மேலவை உறுப்பினருக்கும் இந்த அவையில் பாதுகாப்பு வேண்டும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மேலவை உறுப்பினர் பேச்சின் கருத்தைத்தான் குறிப்பிட்டார். அவர் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்று இங்கே உறுப்பினர் பேசுவதற்கு உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது சரி, கொள்கையளவில் நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். அந்த உறுப்பினருடைய பேச்சை இங்கே நாம் கிரிடிசைஸ் பண்ணக் கூடாது. அப்படிச் செய்தால் அது பிரீச் ஆப் பிரிவிலேஜ் ஆகிவிடும். ஆதலால்தான் கிரிடிசைஸ் பண்ணிப் பேச வேண்டாம் என்கிறேன்.

திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை: குறை கூற வேண்டுமென்பதற்காக நான் சொல்லவில்லை. முன்னாள் முதல்வர் திரு பக்தவத்சலம் அவர்கள் காலத்தில் கன்னியாகுமரி விவேகானந்தர் நினைவுச் சின்னத்திற்கும், போட் ஜட்டி கட்டுவதற்கும் ஏராளமான பணம் கொடுத்து உதவி செய்திருக்கிறார்கள். வடநாட்டுப் பாணியில் கட்டப்பட்டிருக்கிறது என்றால் வடநாட்டு யாத்திரிகர்களால் ஏராளமான வருமானம் தமிழ்நாட்டிற்கு வருகிறது. இங்கே கூடத்தான் ராஜாஜி மண்டபத்தில் ராமர் கிரீடம் போல் கட்டி வைத்திருக்கிறார்கள். ஆதலால் கலை, கலாச்சாரம் மாறுபட்டுக் இருக்கிறது என்று சொல்லுவது சரியல்ல.

அடுத்ததாக, கன்னியாகுமரி நகரியத்திற்குத் தேவையான மானியம் இதுவரையில் கொடுபடாமல் இருக்கிறது. எந்த ஒரு காரியத்திற்கும் அரசை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்பதில் எனக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. தோவாளை பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் அமைக்கப்பட்டதற்கு அங்குள்ள மக்கள் பணம் வசூலித்து இடம் வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். கட்டடம் கட்ட மாத்திரமே பணம் அரசாங்கம் கொடுத்திருக்கிறது. அந்தக் கட்டடத்தைச் சுற்றி பஞ்சாயத்து யூனியன் பொது நிதியிலிருந்து செலவு செய்து முள்வேலி போடுவதற்குக் கூட அரசு அனுமதியைப் பெற்றுத்தான் செய்ய வேண்டியிருக்கிறது.

ஆட்சி அமைப்பிலே மத்திய அரசிற்கு இன்ன இன்ன சட்டங்கள், மாநில அரசிற்கு இன்ன இன்ன சட்டங்கள் என்று வரைமுறை இருக்கிறது. பஞ்சாயத்து யூனியனுக்கும் சில சட்டங்கள் இருக்கின்றன. நாம் அவைகளை எல்லாம் மதித்துத்தான் நடக்க வேண்டும். மாநில சுயாட்சி கேட்பது, பிரிந்து போகிறேன் புரட்சி செய்கிறேன் என்று கூறுவது இவைகள் எல்லாம் சரியில்லை என்பதைக் கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ப. முத்துசாமி: தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த நிதிநிலை அறிக்கையை நான் பாராட்டி வரவேற்றுப் பேசுகிறேன்.



பொதுவாக நம்முடைய அரசாங்கம் ஏழைகளின் சிரமங்களை உணர்ந்து இந்த நிதிநிலை அறிக்கையை ஏழை மக்களுக்கு சாதகமாக தயாரித்திருப்பது கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

அதுமட்டுமல்ல, மதுவிலக்கினால் ஏற்பட்ட வருவாய் நஷ்டத்தையும் தாங்கிக் கொண்டு ஏழை மக்களின் மேல் வரியைப் போட்டு விடாமல் தயாரிக்கப்பட்டிருக்கிற இந்த நிதி நிலை அறிக்கையை கொண்டு வந்த முதலமைச்சர் அவர்களை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

அடுத்து, இன்று தமிழ்நாட்டிலே வரலாறு காணா வறட்சி ஏற்பட்டுள்ளது. துயர் துடைப்பு பணிகள் எந்த அளவிற்குச் செய்ய வேண்டுமோ அந்த அளவிற்குச் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் வறட்சிப் பணி செய்வதிலே ஒரு சிறிது காலதாமதம் ஏற்பட்டு விடுகிறது. காரணம், காண்டிராக்டர்கள், அவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிற ரேட் போதவில்லை என்கிறார்கள். இப்போது இருக்கும் விலைவாசியில் இந்த ரேட் குறைவு தான். 10 மாத காலத்திற்குள் எல்லா வறட்சிப்பணி வேலைகளும் முடிவு அடைய வேண்டுமென்ற நிலையில், இந்த ஒரு அம்சத்தைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குடிநீர் வசதிகள் அதிகம் செய்து தர வேண்டும், விரைவில் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு வேலை விரைவாக நடைபெற வேண்டுமென்றால், குளங்கள் சீக்கிரம் மராமத்து செய்யப்பட வேண்டுமென்றால், மானுவல் லேபர், மெட்டீரியல் லேபர் இரண்டையும் விரைவு படுத்த வேண்டும்.

இதற்கென அக்ரிகல்சுரல் டிபார்ட்மென்ட்டிலிருந்து இயந்திர வசதிகளைத் தருவித்து இந்தச் செயல்களை நிறைவேற்றலாம்.

போரிங் பம்புகளை 100, 110 அடிக்குக் கீழே தோண்டி துளை போட்டு தண்ணீர் எடுப்பதற்கு முயற்சி செய்யலாம்.

இன்றைக்குப் பல இடங்களில் குளம் மராமத்துப் பணிகள் நடைபெறுகின்றன. ஆனால் அங்கே வேலை செய்கிறவர்கள் 'அன் ஸ்கில்டு' லேபராக இருக்கிறார்கள். மண் வெட்டுகிற வேலை அவர்களுக்குப் பழக்கம் இல்லாமல் இருக்கிறது. சாதாரணமாக சேரிகளில் இருக்கிறவர்கள் அல்லது விவசாயிகளைக் கொண்டு குளம்

[திரு. ப. முத்துசாமி] [1975 மார்ச் 8

வெட்டச் சொல்லும்போது அவர்களுக்கு அந்த வேலை பழக்கம் இல்லாமல் இருப்பதால் வேலை அவ்வளவாக நடக்கவில்லை. அதிலும் சில இடங்களில் சுக்கான் மண் இருப்பதால் வெட்டுவது கடின மாக இருக்கிறது. ஆகையால் எதிர்பார்க்கின்ற வேலை நடைபெறாமல் போய்விடுகிறது. இப்படிப்பட்ட குறைபாடுகள், தடைகள் பல்வேறு இடங்களில் இருப்பதால், எந்தெந்த இடங்களில் வேலை நடைபெற்றதோ அங்கெல்லாம் முதல் பில் வாங்கியவுடன் வேலையை நிறுத்திவிட்டார்கள் கட்டுபடியாகாத காரணத்தால். அதனால் வேலை தடைபட்டிருக்கிறது.

இங்கே பேசிய பல உறுப்பினர்கள் வேலை நடக்காமல் இருக்கிறது, பணம் கான்ட்ராக்டர் கைக்குப் போய்ச் சேருகிறது என்று பலரும் பேசினார்கள். ஆனால் நடைமுறையில் பார்த்தால் எதிர்பார்க்கின்ற அளவுக்கு வேலை நடைபெற முடியாத தடைகள் இருப்பதால் கட்டுபடியாகவில்லை என்று சொல்லி, செய்த வேலையையும் நிறுத்தி விடுகிறார்கள். ஆகவே, உண்மை நிலை என்ன என்று தெரியாமல் இப்படிப்பட்ட குறைகளைச் சொல்வது, அந்த வேலைகளில் ஈடுபட்டிருக்கிற அதிகாரிகளுக்கும் கான்ட்ராக்டர்களுக்கும் ஒரு அச்சத்தை ஏற்படுத்துகிறது. இந்த அச்சம் நீடிக்குமானால் அவர்களால் வேலையை சரியாக செய்ய முடியாமல் போய்விடும். அதனால் வேலை பாதிக்கும். வேலை பாதித்தால் அல்லது நின்றுவிட்டால் பாதிக்கப்படக் கூடியவர்கள் சாதாரண மக்கள்தான். அதையும் அவர்கள் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேலை எப்படி நடக்கிறது என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திண்டுக்கல் டிவிஷனல் எஞ்சினீயர் ஒரு குளம் மராமத்துப் பணியை எடுத்துக் கொண்டார். அவருக்கு உதவியாக இரண்டு உதவி எஞ்சினீயர் களையும் வைத்துக் கொண்டார். 45 கூலி ஆட்கள் அந்த வேலைக்கு நியமிக்கப்பட்டார்கள். நாங்கள் எல்லாம் அந்தப் பணியைப் பார்வையிட்டோம். ஒரு நாள் வேலை முடிந்தது. அத்தனை பேரும் சேர்ந்து ஒரு நாள் செய்த வேலையை கணக்கிட்டதில் 50-58 சதவீதம் ரேட் நஷ்டம் வருகிறது என்று சொன்னார்கள். அந்தக் கணக்கை கலக்டருக்கும் அனுப்பியிருக்கிறார்கள். மராமத்துக்குப் பணம் ஒதுக்கியிருக்கிறோம். ஆனால் நடைபெறுகின்ற வேலையைப் பார்த்தால் எதிர்பார்க்கின்ற அளவுக்கு இல்லை.



1975 மார்ச் 8] [திரு. ப. முத்துசாமி]

இங்கே கொடுக்கிற கணக்கு கூட சரியாக இருக்காது என்று நான் கருதுகிறேன். ஒரு வேலைக்கு இவ்வளவு செலவாகும், இத்தனை பேர் வேலை செய்வார்கள் என்ற கணக்குப் போடு கிறார்கள். ஒரு வாரம் வேலை செய்தால் எவ்வளவு செலவாகும், என்ன வேலை நடக்கும் என்று கணக்குப் போடுகிறார்கள். அது பற்றி பி.டி.ஓ. விடம் கேட்டு, அதை கலெக்டர் அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கிறார். என்ன வேலை நடக்கும் என்பதை எதிர் பார்த்துதான் அந்த அளவுக்கு நடக்கிறது என்ற கணக்கை அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கிறார்கள். ஆனால் உண்மை நிலவரம் என்னவென்றால், அவர்கள் கொடுக்கும் கணக்கைவிட குறைவாகவே வேலை நடக்கிறது. இந்த மந்த நிலைக்குக் காரணம் ரேட் கட்டுப்படியாகாதது தான். ஆகவே, அரசாங்கம் ஓரளவேனும் இந்த ரேட்டை உயர்த்திக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குளம் மராமத்துப் பணிகளை மேற்கொள்ளும்போது வெறும் மராமத்துப் பணியோடு நின்றுவிடாமல் புதிய குளங்களை அமைப் பதற்கும் முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டும். புதிய குளங்களை அமைக்கும்போது குட்டைத் திட்டங்களை மேற் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் ஓரளவு நிரந்தரமாகக் காரியங்கள் நடைபெற உதவியாக இருக்கும். ஆகவே, இந்த குட்டைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல இடங்களில் குட்டைத் திட்டங்கள் மேற்கொள்ள வேண்டு மென்று சொல்லி, அந்த இடங்களை அமைச்சரவர்கள் வந்து பார்வையிட்டார்கள். அந்தத் திட்டங்களில் பல "அன் எக்னமிக்" என்று சொல்லித் தள்ளி வைக்கப்பட்டிருக்கின்றன. அவை அரசாங்கத்தின் பரிசீலனைக்கு வந்திருக்கின்றன. அப்படிப்பட்ட திட்டங்களை இந்த வறட்சி நிவாரணப் பணிகளில் சேர்த்து, செய்தால் பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வறட்சி நிவாரணப் பணிகளின்கீழ் புதிய சாலைகளைப் போடும் போது ஏற்கெனவே இருக்கக்கூடிய சாலைகளுக்கு மெட்டல் போடும் பணியையும் எடுத்துக் கொள்ள வேண்டும். அதனால் போக்குவரத்திற்குப் பெரிதும் உபயோகம் ஏற்படும். மெட்டல்

[திரு. ப. முத்துசாமி] [1975 மார்ச் 8

போடுவதில் அதிகமாக மானுவல் லேபர் தான் இருக்கிறது. ஆகவே, அதிலும் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு விவசாயிகளுக்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. இந்த அவையிலே பல சந்தர்ப்பங்களில் அதைப்பற்றிப் பேசியிருக்கிறோம். எல்.டி. வங்கி மூலம் விவசாயிகள் கடன் பெறுவது பற்றி அரசாங்கம் அறிவித்திருந்தது. அந்த அறிவிப்பு வந்தவுடனே ஒவ்வொரு யூனியனுக்கும் 2,000, 3,000 மனுக்கள் வந்தன. ஆனால் விவசாயிகள் எதிர்பார்த்த அளவுக்குக் கடன் கிடைக்கவில்லை. அதற்குக் காரணம் கிணறுகளுக்கு இடையே இருக்க வேண்டுமென்று சொல்கிற 'ஸ்பேஸ் டிஃபரன்ஸ்' தான். இடைவெளி எவ்வளவு தூரம் இருந்தாலும் கடன் கேட்டால் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதோடு 'ஜே' லைசென்ஸ் கிடைத்தவுடன் போதுமான அளவுக்கு தோட்டாக்கள் கொடுப்பதற்கும் உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில், பல இடங்களில் கம்பங்கள் நட்ட பின்னால், கம்பி இல்லை என்று சொல்கிற நிலை இருக்கிறது. 60,000 பம்பு செட்டுகளுக்கு மின்சார இணைப்புக் கொடுக்க வேண்டுமென்று சொல்லும் போது இதுபோன்ற பொருட்கள் இல்லை என்ற நிலைமையை இல்லாமல் செய்தாக வேண்டும். தேவையான பொருட்கள் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் இவ்வாண்டு 2,000 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கப்படும் என்பது நல்ல காரியம். ஆசிரியர் வேலைக்குப் படித்துவிட்டு, இன்னும் ஏராளமானவர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, இன்னும் அதிக அளவில் அவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும் அல்லது கொஞ்ச காலத்திற்குப் பயிற்சி அளிப்பதை நிறுத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் குடகனாறு திட்டம் இருக்கிறது. அதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இன்னும் நஷ்ட ஈடு கிடைக்கவில்லை. அங்கே இருக்கிற கிணறுகளுக்கு உரிய நஷ்ட ஈடு



1975 மார்ச் 8] [திரு. ப. முத்துசாமி]

கொடுக்கவில்லை. ஒரு கிணறு வெட்ட 25,000 ரூபாய், 30,000 ரூபாய் செலவாகியிருக்கிறது. அதற்கு 'டிப்பிரிசியேஷன் வால்யூ' போட்டு, 5,000 ரூபாய், 7,000 ரூபாய் என்று கொடுக்கிறார்கள். அதனால் விவசாயிகளுக்குப் பெருத்த பாதிப்பு ஏற்படும். ஆகவே, 'பிரசென்ட் வால்யூ' கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, வேடசந்தூரில் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் இருக்கிறது. அதை மருத்துவ மனையாக மாற்றி அமைக்க வேண்டும். அதைப்போல குஜிலியம் ஒன்றியத்திற்கு உடனடியாக ஸ்டாஃப் குவார்ட்டர்ஸ் கட்டித்தர வேண்டும். அதோடு, வறட்சியால் அதிகமாக பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து தரவேண்டுமென்று கேட்டு, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற நிதிநிலை அறிக்கையை ஒரு தேர்தல் அறிக்கை என்றுதான் என்னால் பார்க்க முடிகிறதே தவிர, அதை ஒரு நிதிநிலை அறிக்கை என்று பார்க்க முடியவில்லை. அதை வருகிற 76 தேர்தல் போருக்கு இப்போதே தீட்டப்படுகிற ஆயுதமாகத்தான் பார்க்க முடிகிறது.

அதுமட்டுமல்ல. இந்த அரசாங்கம் செய்திருக்கிற குற்றங்களையும், குறைகளையும் மூடிமறைப்பதற்காக ஒரு திரையாக மாநில சுயாட்சி கோரிக்கை எழுப்பப்பட்டிருக்கிறது.

It is really a smoke-screen for hiding their serions omissions and commissions.

என்றுதான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த பட்ஜெட் உரையிலே மாநில அரசுக்குப் போதுமான நிதி வாய்ப்புகள் இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் எப்படி இருக்கிற நிதியைக்கூட சரிவரச் செலவிடாமல் இந்த அரசு இருக்கிறது; எப்படி கணக்கு வைத்திருக்கிறது, எப்படி கணக்கு விடப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். ஆகவே, அதுபற்றி அதிகமாக நான் சொல்ல விரும்பவில்லை.

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1975 மார்ச் 8

1972-73 ஆம் ஆண்டுக்கான இந்த அரசினுடைய வரவு-செலவுத் திட்டத்தைப்பற்றி ஆடிட்டர் ஜெனரல் ஆப் இந்தியா தன்னுடைய அறிக்கையில் சுட்டிக் காட்டியிருக்கிற ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தனக்கு இருக்கிற நிதி வசதிகளைக் கூட சரியாகப் பயன்படுத்திக் கொள்வதில் இந்த அரசு எப்படி தவறியிருக்கிறது என்பதற்கு மட்டும் ஒன்றிரண்டு விஷயங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முதலில் டில்லியிலே இருக்கிற தமிழகம். அதுபற்றி ஏற்கெனவே பேசப்பட்டிருக்கிறது. 1968 ஜனவரியிலிருந்து ஜூலை 69 வரையில் இருக்கின்ற வரவுகளை ட்ரஷரியில் கட்டியிருப்பதாகக் கணக்கில் காட்டினார்கள். ஆனால் கட்டவில்லை என்று ஆடிட் ரிப்போர்ட் சொல்கிறது. அந்த தமிழகத்தில் நிர்வாகம் எப்படி இருக்கிறது என்பதை அங்கே பார்த்தால்தான் தெரியும். நான் நேரில் பார்த்திருக்கிறேன். நான் அண்மையில் அங்கே சென்றிருந்த போது, அங்கே இருக்கிற கார் ஓட்டிகள் வேலை நிறுத்தம் செய்துகொண்டிருந்தார்கள். 6 மணிக்கு வர மாட்டோம், 9 மணிக்கு வரமாட்டோம் என்று சொன்னார்கள். ஏதாவது குறைகள், கோரிக்கைகள் இருக்கிறதா என்று கேட்ட போது அப்படி ஒன்றும் இல்லை என்று சொன்னார்கள். பின் ஏன் வேலை நிறுத்தம் என்று கேட்டபோது, எங்களுக்கு நீண்ட நாட்களாக 'ஓவர் டைம்' கணக்கிட்டு, பணம் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அங்கு போகிறார்கள். இந்த சின்ன விஷயத்தைக்கூட அங்கே இருக்கிற நிர்வாகத்தினர் ஒழுங்காகக் கவனிக்க முடியவில்லை. எதற்காக அங்கே அவர்களை வைத்திருக்கிறோமோ அந்த வேலைகளை அவர்களால் செய்ய முடியவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் வேறு ஏதேதோ வேலைகளைத்தான் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, வெளி மார்க்கட் சர்க்கரை ஒதுக்கீட்டைப் பற்றி ஆடிட் ரிப்போர்ட்டில் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1968 ஆகஸ்டில் 8 டீலர்களுக்கு கிட்டத்தட்ட 11,858 டன் சர்க்கரை கொடுத்ததில் 76 லட்சம் ரூபாய் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்



1975 மார்ச் 8] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. 76 லட்சம் நஷ்டம் என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, அந்த டீலர்ஸ் யார் என்று விபரம் இல்லை. அதைப்போல இன்னும் வேடிக்கை. அப்படியானால்

files and records of open market sugar called for from the department in October 69 have not yet been made available to audit i.e., till July 74.

**For draft objections reply is still awaited, i.e., July 74.**

எட்டு டீலர்களுக்குக் கொடுக்கப்பட்டு — அவர்கள் யார்? — அதனால் அரசுக்கு 76 லட்சம் நஷ்டம் ஏற்பட்டு — அதுபற்றிய பைல்களை 69 ஆகஸ்டில் கேட்டும் இதுவரை நாலேமுக்கால் ஆண்டுகள் ஆகியும் அந்த பைல் கொடுக்கப்படவில்லை என்றால் இதில் இருக்கிற மர்மம் என்ன என்பதை அறியவிரும்புகிறேன்.

In Chapter VIII, there is mention about outstanding audit objections. The number of objections relating to Civil Departmetn in 1968–69 was 7600; in 1972–73, it was 17,392 objections.

Likewise, want of detailed contingent vouchers, receipts, etc. 21000; want of sanction to miscellaneous contingent expenditure 2000.

இதில் இருந்து என்ன தெரிகிறது? இருக்கக்கூடிய பணத்தைக் கூட ஒழுங்கான முறையில் இந்த அரசால் செலவிட முடியவில்லை. அதைச் செய்வதில்லை.

இன்றைக்கு உணவைப் பொறுத்தவரையில் ஒரு மனிதனுடைய வருமானத்தில் எழுபது, எழுபத்தைந்து சதவிகிதம் அதற்கே செலவழிக்கப்படுகிறது. முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த எங்களுக்கு அதிகாரம் இல்லை என்று. மற்ற மற்றப் பொருள்களைப் பொறுத்தவரையில் அது சரியாக இருக்கலாம். உணவுப் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்த மாநில அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. ஒருவருடைய வருமானத்தில் 75 சதவிகிதம் உணவுக்காகச் செலவிடப்படுகிற நிலைதான் இருக்கிறது. உணவுப் பண்டங்களின் விலைகள் உயர்ந்தால் மற்றப் பண்டங்களின் விலைகளும் தாமாக உயரும். உணவுப் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்த என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? இன்றைக்கு அரிசியின் விலை ஓராண்டுக்குள் 3 மடங்கு உயர்ந்திருக்கிறது. அரிசி விலையாது

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1975 மார்ச் 8

மாநிலங்களில் கூட இந்த அளவுக்கு உயர்வு இல்லை. பீகாரை எடுத்துக்கொண்டால் ஒரு கிலோ 2 ரூபாய்க்குக் கிடைக்கிறது. கல்கத்தாவில் ஒரு கிலோ இரண்டேமுக்கால் ரூபாய்தான். கேரளத்தில் கூட நம்மாநிலத்தில் இருப்பதைவிட விலை குறைவாகத்தான் இருக்கிறது. இதற்குக் காரணம்—எஸ்டிமேட் கமிட்டியே எடுத்துச் சொல்லியிருக்கிறது. பிறக்காத, இல்லாத தாண்டவராயன் பேரில் அனுப்பப்பட்டிருக்கிற அரிசி—அப்துல் சலாம் போன்றவர்கள் மூலமாக அனுப்பப்பட்ட அரிசி—ஆகிய அரிசி பேர ஊழல்கள் எல்லாம் தான் இப்படி நம் மாநிலத்தில் அரிசி விலையை உயர்த்திவிட்டதற்குக் காரணம். இந்த நிலையில் இவர்கள் எங்களுக்கு அதிகாரம் கிடையாது என்று சொன்னால் இந்தச் சட்டமன்றத்தை என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை.

அண்மையில் மத்திய அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக கோதுமை, இண்டஸ்ட்ரியல் ரா மெட்டீரியல்ஸ், வனஸ்பதி, சிமிண்ட், இரும்பு ஆகியவற்றின் விலை எல்லாம் குறைந்திருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டில் அரிசி விலை உயர்ந்திருக்கிறது என்றால் இதற்கு இவர்களிடம் அதிகாரம் இல்லையென்று பொருள் அல்ல.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** சிமெண்டு விலை குறைந்திருக்கிறதா ?

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** பகிரங்க மார்க்கெட்டில் மூட்டை 38, 35 க்கு விற்றுவந்தது, இன்றைக்கு ரூ. 17, 18 என்று குறைந்திருப்பதைத்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் பகிரங்க மார்க்கெட்டைப்பற்றித்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அதாவது மத்திய சர்க்கார் ஆட்சியில் ஒரு கள்ளச்சந்தை இருந்தது. அதை மூடிவிட்டார்கள் என்கிறீர்கள்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** உங்கள் ஆட்சியின் அனுமதியோடு நடைபெற்று வந்ததைத்தான் சொல்கிறேன். அந்த விலை குறைந்திருக்கிறது. அமைச்சர் அவர்கள் புதியதாகப் போட்டிருக்கிற



1975 மார்ச் 8] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

வரியைப்பற்றிச் சொல்கிறார் என்று நினைக்கிறேன். மொத்த குறியீட்டு எண்ணும் குறைந்து வருகிறது. ஆனால் அரிசி விலை ஏன் குறையவில்லை ? உங்கள் அரிசிபேர ஊழல்களினால்தான் நமது மாநிலத்தில் அரிசி விலை உயர்ந்துவிட்டது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சென்ற ஆண்டும் இந்த ஆட்சிதான் இருந்தது. மற்ற மாநிலங்களில் அரிசி விலை உயர்ந்திருந்தபோது இங்கே விலை குறைவாக இருந்ததே. இந்த ஆண்டு வறட்சி காரணமாக உயர்ந்திருக்கிறது.

**திரு. ஏ, சுப்பிரமணியம்:** இந்த ஆண்டு விளையவில்லை என்பது இதற்குக் காரணம் அல்ல. நீங்கள் ஐந்தாறு ஆண்டுகளாகச் செய்து வருகிற ஊழல்கள்தான் இதற்குக் காரணம்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** காங்கிரஸ்காரர்கள் ஆளுகின்ற மாநிலங்களிலும் விலைவாசிகள் உயர்ந்துதான் இருக்கின்றன.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** அரிசி விளையாத மாநிலங்களில் அரிசி விலை உயர்ந்தது என்பது வேறு. நம் மாநிலத்தில் அதிக அளவில் உற்பத்தியாகிறபோது ஏன் உயர்ந்தது? தவறான உணவுக்கொள்கை — அரிசி பேர ஊழல்கள்தான்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இந்த விலைவாசி உயர்வைப்பற்றி ஒரு கருத்து, விவாதத்திற்கு சுவையாக இருக்கும் என்று சொல்கிறேன். 1965-66 ஆம் ஆண்டோடு இந்த நாட்டு மக்கள் வரி செலுத்துகின்ற சக்தியை இழந்துவிட்டார்கள். 50-51 இல் 400 கோடிக்கு வரியைப்போட்டு, பின்னர் மத்திய அரசு 6,300 கோடிக்கு வரியைப்போட்ட பிறகு — இப்போது போடுகிற வரிகளை எல்லாம் பொருள்களின் விலையை உயர்த்துவதன் மூலமாகத்தான் பெற்றுத் தருகிறார்களே தவிர வேறு அல்ல என்கிற புள்ளி விவரத்தையே கொடுத்திருக்கிறார்கள். ஆக போடுகிற வரிகள் எல்லாம் இப்போது பொருள்களின் விலையைத்தான் உயர்த்துகிறது, விலைவாசி உயர்வுக்கு இதுதான் காரணம். இதை மத்திய அரசு உணர்ந்திருப்பார்களானால் இந்த விலை உயர்வுப் பிரச்சினையைத் தீர்க்க முடிந்திருக்கும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்திரா காந்தி அம்மையார் பேசிய பேச்சை நான் வானொலியில் கேட்டேன். அதை மொழி பெயர்த்தவரும் அவர்களது கட்சியைச் சேர்ந்த டெபுடி

[திரு. செ. மாதவன்] [1975 மார்ச் 8

லீடர்தான். உலகத்திலேயே விலை ஏறிவிட்டது, விவரம் தெரியாமல் பேசுகிருர்கள் என்று குறிப்பிட்டதாகச் சொன்னுர்கள். அதுவும் அவர்கள் இந்தப் போக்குக்குக் காரணம் விஷச் சக்கிரம் என்று சொன்னுர்கள். இந்த அம்மாள் அதை விஷமச் சக்கிரம் என்று மொழிபெயர்த்தார்கள். அதையும் வாஞெலியில் கேட்டேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : ஜப்பான் போன்ற நாடுகளில் 30 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. நான் அரிசி விலையைத்தான் சொல்கிறேன். அப்படி ஒட்டுமொத்தமாகச் சொல்லித் தப்பிக்க வேண்டாம். இங்கே அரிசி விலை ஏறினதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : திரு. குமாரசாமி அவர்கள் நெல் விலையை உயர்த்த வேண்டுமென்று சொன்னுர்கள். நெல் விலையை உயர்த்திஞல் அரிசிவிலை உயராதா ?

திரு. ஏ. சுப்பிரமணியம் : நெல் விலையை உயர்த்தவேண்டுமென்ற கோரிக்கையை இப்போதுதான் வைத்தார்கள். நீங்கள் 57 கிலோ மூட்டையை 54-க்கு வாங்கி கொடுத்தபோது நீங்கள் கொள்முதல் செய்த விலைக்கும் விற்றவிலைக்கும் பொருத்தமில்லாமல்தான் இருந்தது. உங்கள் நிர்வாக ஊழலிஞல் வறட்சி வருவதற்கு முன்பே நெல் விளைகிற நமது மாநிலத்தில் அரிசி விலை ஏறிவிட்டது. ஏன் ஏறிற்று என்பதற்கு எஸ்டிமேட் கமிட்டி அறிக்கை ஒன்றே போதும்.

திரு. எம். ஏ. லத்தீப் : நிர்வாகக் கோளாறுகளின் அடிப்படையில் விலைவாசிகள் ஏறுகின்றன என்ற வாதத்தை மாண்புமிகு உறுப்பினர் வைத்தார்கள். வரிக்கொள்கையிஞல் தொழில்துறையில் மற்ற மற்றப் பொருள்கள் விலை ஏறுகிறபோது, தவருன பொருளாதாரக் கொள்கையிஞல் எல்லாம் விலைவாசிகள் பாதிக்கப்படுவதில்லையா ?

திரு. ஏ. சுப்பிரமணியம் : விலைவாசி ஏற்றத்திற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் தோழமைக் கட்சியில் இருந்தாலும் சில நேரங்களில் பல உண்மைகளைச் சொல்லிவிடுவார்கள். இவரேதான் பருப்பின் மொத்த விலை 300-இல் இருந்து 175-ஆகக் குறைந்தும் கூட ஏன் இன்னும் சில்லறை வியாபாரத்தில் குறையவில்லை ? மக்களுக்கு இந்தக்



1975 மார்ச் 8] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

குறைவின் பயன் சேரவில்லை என்று சொன்னுர்கள். மொத்தவிலை குறைந்தது மத்திய அரசாங்கத்தின் நடவடிக்கையிஞல், ஆஞல் இங்கே சில்லரைக்கடைகளில் விலை குறையவில்லை என்ருல் இவர்களது ஆட்சியில் உள்ள குறைகள் காரணமாக சில்லரை வியாபாரிகள் தைரியமாக என்ன விலைக்கு வேண்டுமாஞலும் விற்றுக்கொள்ளலாம் என்று இருக்கிற காரணம்தான். அதுதான் உண்மை.

(பிற்பகல் 1-00)

THIRU M. A. LATHEEF : The hon. Member is confining himself only to administrative measures. I admit that administrative measures also contribute for the rise in price. But at the same time, I would like to know whether fiscal measures have no impact on the price rise.

திரு. ஏ. சுப்பிரமணியம் : திரு. லத்தீப் அவர்கள் என்னிடம் பொருளாதாரப் பாடம் கேட்க வேண்டும் என்று விரும்புகிருர்கள். தனியாகக் கேட்டால் சொல்கிறேன்.

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, I shall answer the question of the hon. Member, Mr. Latheef.

> " The truth is by 65-66, the Government had exhausted the Nation's taxable capacity. Since then tax-payers have countered every fresh levy either by raising their prices or by resorting to wholesale tax evasion. The most depresing feature of the current Budget—not our Budget, but the Union Budget—is that it does not show even the faintest awareness of this fact. Indeed, the very concept of taxable capacity which is central to the teaching of public finance in the universities seems to have been omitted from the Lexicon of the Union Finance Ministry ".

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 2 நிமிடத்திற்குள் முடித்துவிடுங்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : அடுத்ததாக, மின்சார வெட்டின் காரணமாகப் பஞ்சாலைகள், மற்ற ஆலைகளில் லே-ஆப் வருகிறது. தொழில் தகாரறு சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தின்படி

தொழிலாளர்களுக்கு லே-ஆப் காம்பன்சேஷன் கொடுக்க வேண்டும். பஞ்சாலை முதலாளிகள் நிரந்தரம் இல்லாத தொழிலாளர்களுக்கு நான்-பெர்மெனெண்ட் ஆன பதிலி, டெம்பாரி போன்ற தொழிலாளருக்கு லே-ஆப் காம்பன்சேஷன்' கொடுக்காமல் இருக்கிறார்கள். இது பற்றி அரசாங்கத்திடம் பல முறை சொல்லியாகி விட்டது. சட்டப்படி அந்த முதலாளிகள் நடக்க வேண்டும் என்று இந்த அரசாங்கம் வற்புறுத்தி நடவடிக்கை எடுக்கவில்லை. அடுத்ததாக, கைத்தறி நெசவாளர்களிடம் முதலமைச்சர் அவர்கள் அனுதாபம் சொல்லியிருக்கிறார்கள். கடந்த 6, 7 மாதங்களாக அந்த நெசவாளர்கள் மிகுந்த துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்களிடம் தேங்கிக் கிடக்கிற துணியைக் கொள்முதல் செய்ய 3 கோடி ஒதுக்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். எங்கிருந்து கொள்முதல் செய்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் தனிப்பட்ட முறையில்,

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்படிச் சொல்வது முறையல்ல. எல்லா மாவட்டத்திலும் வாங்கப்படுகிறது. ஆர்ட் சில்க் என்றால் எல்லா இடத்திலும் வாங்க முடியாது. இராமநாதபுரம் மாவட்டத்தில் வாங்குவதாகச் சொன்னது அரசியலில் நேர்மையான அரசியலாகக் கருதவில்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** அமைச்சரே அதற்கான புள்ளி விவரம் எடுத்துக் கொடுத்தால் சரி.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அவர்கள் பத்திரிகையிலேயே வருகிறது. கைத்தறி நெசவாளர்கள் பரமக்குடியில் போராட்டம், ஸ்ரீவில்லிப்புத்தூரில் போராட்டம், இராஜபாளையத்தில் போராட்டம் என்று. அந்தச் செய்திகளைப் படித்துப் பார்ப்பார்களேயானால் அதுவே ஆதாரமாக இருக்கும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** உண்மையாக, அவர்களை வாழ வைக்க வேண்டும் என்று தான் சொல்கிறேன். ஸ்பெஷல் ரிப்பேட்டைக்கூட நிறுத்தி விட்டார்கள். கஷ்டம் வரும்போது அதிகம் ரிபேட் கொடுக்க வேண்டும். கொடுத்துக்கொண்டு இருந்ததை நிறுத்தக்கூடாது.





அடுத்ததாக, சமூக நலத்தில் மிகுந்த ஈடுபாடு இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. பூந்தமல்லியில் விக்டோரியா குருடர் பள்ளி இருக்கிறது. அது டிசம்பர் மாதத்திலிருந்து மூடப்பட்டிருக்கிறது. பத்திரிகையிலும் வந்தது. நாங்களும் நேரில் போய்ப் பார்த்தோம். உணவு சரியாக இல்லை என்று அந்த மாணவர்கள் சொன்ன காரணத்தினால் அடிக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள். இன்றைக்கு அந்தப் பள்ளி மூடிக்கிடக்க வேண்டிய அவல நிலைக்கு வந்திருக்கிறது. இப்படிச் செய்வது சமூக நலச் செயலுக்குப் பொருத்தமானதாகத் தெரியவில்லை.

அடுத்ததாக இன்னொன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சிறுவாணித் திட்டத்தைப் பொறுத்து இரண்டாவது திட்டம் நடைபெறுகிறது. கேரளா அரசு அணை கட்ட வேண்டும் என்று இருக்கிறது. அந்த வேலை நிறுத்தப்பட்டு விட்டதாக இன்றைக்குத் தகவல் வந்திருக்கிறது. காரணம், ஆயிரம் டன் சிமெண்டு ஒதுக்கப்பட்டது. 400 டன் தான் கிடைத்தது. 600 டன் கிடைக்கவில்லை என்று தகவல் வந்திருக்கிறது. சம்பந்தப்பட்ட அமைச்சர் இங்கு இல்லை. சம்பந்தப்பட்ட அமைச்சர் இது பற்றி விசாரித்து அந்தக் கட்டுமானத்திற்காக சிமெண்டை உடனடியாகக் கொடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

* **திரு. கோ. சிவபெருமாள்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, 1975-76ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீது பல சட்டமன்ற உறுப்பினர்கள் பேசினார்கள். ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு அதிக நேரம் கொடுத்ததாகக் குறிப்பிட்டுப் பேசினார்கள். நான் இப்போது அது பற்றி விவாதம் செய்ய விரும்பவில்லை. என்னுடைய தொகுதியைப் பற்றிப் பேச விரும்புகிறேன்.

அரியலூரில் கண்டிலாதீர்த்தம் என்ற ஒரு பெரிய ஏரி இருக்கிறது. அது 500 ஏக்கர் நிலத்திற்குப் பாசனம் கொடுக்கிறது. அது பற்றி சட்டமன்றத்தில் முன்பு பேசியிருக்கிறார்கள். அந்த ஏரி அதிகப் பரப்பு உள்ளது. அந்த ஏரி மண் மேடு இட்ட காரணத்தினால் அதை விவசாயிகள் ஆக்கிரமித்து இருக்கிறார்கள். அந்த ஏரியில் கரும்பு, நெல் போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. அந்தப் பகுதி மக்கள் அந்த ஏரியை இலந்தைக் குளம் ஏரி என்று சொல்கிறார்கள். மதிப்பிற்குரிய குன்றக்குடி அடிகளார் கூட கண்டிலாதீர்த்தம் ஏரி பற்றிக் குறிப்பிட்டிருக்கி

றார்கள். அதைத் தூர் வார வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கண்டிலாதீர்த்தம் என்பதால் அது புண்ணிய தீர்த்தம் என்ற எண்ணத்தில் சொல்லியிருக்கிறார்களோ என்னவோ அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சொல்லியிருக்க மாட்டார் என்ற எண்ணத்தில் சொன்னாரோ என்னவோ? நான் அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருப்பதால் கண்டிலாதீர்த்தம் ஏரியைத் தூர் வார வேண்டும் என்று பல முறை கேட்டுக்கொண்டிருக்கிறேன். சுமார் பதினைந்து தினங்களுக்கு முன்புகூட எங்களது திருச்சி மாவட்ட அமைச்சர் மாண்புமிகு திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்களை இந்த ஏரியை வந்து பார்வையிடும்படியாகக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அது போலவே மாவட்டக் கலெக்டர் திரு. வைத்தியலிங்கம், ஐ.ஏ.எஸ். அவர்களையும் வந்து பார்வையிடும்படி கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

அடுத்து, அரியலூர் பகுதியில் திருமானூர் ஒன்றியம் பகுதி ஏலாக்குறிச்சி. தஞ்சை மாவட்டத்தையும் திருச்சி மாவட்டத்தையும் இணைக்கக்கூடிய வகையில் திருமானூர் இருக்கிறது. திருமானூரிலிருந்து ஏலாக்குறிச்சி, காமரசவல்லி, குருவாடி, தூத்தூர் ஆகியவற்றுக்கு மண் ரோடு போட்டு செப்பனிடப்பட வேண்டும். ஏலாக்குறிச்சி வரை பஸ் போய் வருகிறது. அதற்கும் அப்பால் மண் ரோடு போட வேண்டும். தூத்தூரைப் பற்றிக் கேள்விப்பட்டு இருப்பீர்கள். அது உள் தங்கிய பகுதியில் இருக்கிறது. மழைக் காலங்களில் யாரும் அங்கே போக முடியாது. மழைக் காலங்களில் அங்கு உற்பத்தியாகக்கூடிய பொருள்களை வெளியே எடுத்து வர முடியாது. ஆகவே, பஞ்ச நிவாரண வேலையின்கீழ் பஸ் போகக்கூடிய நிலைமையில் அந்தப் பகுதிக்குப் போய் வரக்கூடிய ரோடு போட்டுத் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

சுக்கிரன் ஏரியிலிருந்து புள்ளம்பாடி வாய்க்காலில் வரக்கூடிய தண்ணீர் தட்டுப்பாடு காரணத்தினால் பயிர் செய்கின்ற விவசாயிகள் அவதிப்படக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். புள்ளம்பாடி வாய்க்கால் திட்டத்தில் கடைசி ஏரி சுக்கிரநேரி. அது காமரசவல்லப்பாக்கத்திற்குப் பக்கத்திலிருக்கிறது. அந்த சுக்கரநேரிக்கு அருங்கால் ஓடை ஒன்று ஓடுகிறது. அது அரியலூர் தொகுதியிலே உற்பத்தியாக, அந்த அருங்கல்லில் ஒரு பகுதிக்குப் பாய்ந்து சுக்கரநேரிக்குப் பாய வேண்டிய நிலை இருக்கிறது. ஒரு பகுதி





பயனற்றுக் கொள்ளிடத்திலே போய் விழுகிறது. அந்த நீரில் ஒரு பகுதி வேறு ஒரு பகுதிக்குப் போய் விழுகிற நிலைமையிருக்கிற காரணத்தாலே, அந்த அருங்கால் நீரையும் சுக்கரநேரிக்குப் பயன்படுத்தவேண்டிய நிலையிருப்பதால், அருங்கால் ஓடைத் தேக்கம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என் தொகுதியிலே மருதையாறு என்ற பெரிய ஆறு ஓடுகிறது. எல்லோருக்கும் தெரிந்த ஆறு மருதையாறு. அங்கு ரெயில் கவிழ்ந்ததும் தெரியும், அதிகப்படியான தண்ணீர் ஓடுகின்ற ஆறு. அரியலூர் தாலுகா, பெரம்பலூர் தாலுகா இரண்டு பகுதிகளும் புஞ்சை நிலங்கள். அங்குள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாக மாறக் கூடிய நிலைமையுண்டு. முன்னாள் ஆட்சியில் காமராசர் முதலமைச்சராக இருந்தபொழுது, அந்தப் பகுதியில் மருதையாற்றைத் தேக்கக்கூடிய திட்டத்தை அரசு கொண்டு வந்தது. ஆனால், மருதையாறு தேக்கம் ஏற்பட்டால் 10 கிராமங்களை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்ற காரணத்தினால், அந்தத் தண்ணீர் நல்லதல்ல என்ற தீர்ப்பைக் கூறிவிட்டார்கள். ஆனால், அதே தண்ணீர் தான் இப்பொழுது நமக்குப் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு. இதே மருதையாறு தண்ணீர்தான், லோயர் அணைக்கு வந்து, வீராணம் ஏரிக்குப் போய், சென்னைக்குக் குடிநீராக வரவிருக்கிறது. அப்படி அது நல்ல தண்ணீரில்லையென்றால், லோயர் அணைக்குச் சென்று பாயக்கூடிய நிலையிருக்கிறதே. அதில் ஒரு பகுதி, கடலில் போய் விழக்கூடிய நிலையிருக்கிறது. ஒரு பகுதி வீராணம் ஏரிக்குப் போய், சென்னைக்கு வரவிருக்கிறது. அப்படியிருக்கிற மருதையாறு எப்படி பயனற்றுப் போகும் என்று கேட்கவிரும்புகிறேன். அப்பொழுதிருந்தவர்கள் தான் குறிப்பிட்ட நிலையில் திட்டத்தை மாற்றினார்கள். இந்த அரசு திரும்பவும் மருதையாறு நீர்த் தேக்கம் ஏற்படுத்தினால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் விவசாயம் பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான், அரசியலைப் பற்றி அதிகமாகப் பேச விரும்பவில்லை. எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர்கள் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு நேரம் அதிகம் அதிகம் என்று சொன்னார்கள். ஆளுங்கட்சி உறுப்பினர்களாகிய நாங்கள் ஆண்டிற்கு ஒருமுறை 10 நிமிடம் கூடப் பேசக் கூடிய நிலைமையில்லை. நாங்கள் தொகுதிகளுக்குச் செல்லும்போது, இவரைப் போன்று ஒன்றும்

[திரு. கோ. சிவபெருமாள்] [1975 மார்ச் 8

தெரியாதவர்களுக்கெல்லாம் ஓட்டு போட்டு அனுப்பி வைத்தோம், தொகுதி நிலைமையைக் கூட எடுத்துப் பேச யோக்கியதை இல்லை, குன்றக்குடி மடாதிபதி பேசுகிறார், எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் பேசுகிறார்கள், ஆளுங்கட்சியிலே உள்ள இவர்கள், தம் கட்சி என்று சொல்லிக் கொண்டு பொம்மைகளாக இருந்துகொண்டு இங்கே நியூ ஹாஸ்டலில் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று எங்களைப்பற்றிப் பேசுகிறார்கள். நீங்கள்—எதிர்க்கட்சிக் காரர்கள் ஒவ்வொரு பட்ஜெட்டிலும் பேசுகிறீர்கள், உங்களுக்கு ஜனநாயகம் அதிகம் இருக்கிறது, ஆனால் நாங்கள் ஆளுங்கட்சி என்ற பாவத்திற்குரிய எங்களைப் போன்றவர்கள் எங்கே பேச முடிகிறது? எங்கள் தொகுதிகளிலே உள்ளவர்கள், எங்களைப் பார்த்துக் கேட்கிறார்கள், அந்த எதிர்க்கட்சிக்காரர் பேசியிருக்கிறார், அடித்துப் பேசியிருக்கிறார், அழுத்திப் பேசியிருக்கிறார். அனந்தநாயகி அம்மையார் அவர்கள் அடித்துப் பேசினார், ஹாண்டே பேசினார்—என்று—இப்படியெல்லாம் அவர்கள் பேசும்பொழுது, நீங்கள் ஏன் * * * ஆளுங்கட்சி என்ற பெயரை வைத்துக்கொண்டு, அங்கு போய் ஆமென்றால், ஆமாம், இல்லையென்றால், இல்லையென்று எங்களைப் பார்த்து, ஏளனமாகப் பேசக்கூடிய நிலைமையிருக்கிறது என்பதை தலைவர் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இன்னொன்று, இப்பொழுது ஒரு சினிமா வந்திருக்கிறது, சினிமா பைத்தியம் என்ற சினிமா. கவர்ச்சி என்ன என்று பார்த்தால், மக்கள் அதிகமாகக் கெடக்கூடிய அந்த சினிமா பைத்தியத்தைப் பற்றி அந்த சினிமா பைத்தியத்தில் படம் பிடித்துக் காட்டிய, எ. எல். சீனிவாசன் அவர்களையும், அதில் நடித்த நடிகர்களையும் பார்த்து—மக்கள் பாவமாக அது என்ன சினிமா பைத்தியமா அல்லது, வேறு பைத்தியமா என்று கேட்கத் தோன்றுகிறது. அ.தி.மு.க. நண்பர்கள் என்மீது கோபப்படக்கூடாது. நாமெல்லாம் சகோதரர்களாக இருந்தோம். அ.தி.மு.க. உறுப்பினர்கள் அதிகமாக எழுந்து நிற்கிறார்கள். முனு ஆதி அவர்கள் நடுவிலே சாமி வந்ததைப் போல் எழுகிறார்கள். ஆகவே, என் தொகுதி குறித்து அவையின்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1975 மார்ச் 8]

முன் வைத்துள்ள நல்ல பல திட்டங்களை முதல்வர் அவர்கள் உடனடியாக நிவாரணம் காண ஆவன செய்யுமாறு கேட்டுக் கொண்டு எனது உரையை முடிக்கிறேன்.

**திரு. கு. காமாட்சி:** தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள், பேசாத உறுப்பினர்கள் எல்லாம் * என்று நினைப்பார்கள், இந்தக் கட்சியிலே மட்டுமல்ல, எதிர்க்கட்சியிலே பேசாதவர்களைக் கூட அது சேரும். ஆகவே, * என்ற வார்த்தைகளை எடுத்து விட வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** * பார்லிமெண்டரி வார்த்தையில்லை, நானே எடுத்துவிடலாம் என்று இருந்தேன்; உறுப்பினருக்கு நன்றி.

**புலவர் சி. பழனிசாமி:** ஆன் எ பாய்ண்ட் ஆப் ஆர்டர், சார் மணி 1¼ ஆகிறது. இந்த விவாதத்தில் கடைசி நாள் இன்று. எங்களைப் போன்றவர்கள் எப்போதோ ஒரு நாள் பேசுகிறோம். 3 நாளைக்கு முன்னாலே என் பெயரை எழுதிக்கொடுத்தேன். எனக்குப் பேச வாய்ப்புக் கிடைக்குமா என அறிய விரும்பு கிறேன். ஆகவே, பிற்பகலும் அவையை நடத்தி எங்களுக்கு வாய்ப்புத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, ஆர்வமுள்ள உறுப்பினர்கள் மானியக் கோரிக்கை வரும்போது, மிக அக்கறையோடு. நாங்கள் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் தருவோம் சில கோரிக்கைகளில், அதிலே கலந்து கொண்டு பேருதவி புரிந்து, தங்கள் பெரும் கருத்துக்களைத் தருவார்களானால் மிக நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** * என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்

**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** தலைவரவர்களே, பாலம் ஒதுக்குவது சம்பந்தமாக பல பிரச்னைகள் வந்தன. அவைபற்றி ஓரிரு நிமிடங்களில் முடித்துக்கொள்கிறேன். நானும் சரி, எனக்கு முன்னால், சேரன்மாதேவி தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், முக்கூடலுக்கும் வீரமாநல்லூருக்கும் இடையில்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்] [1975 மார்ச் 8

தாம்பிரபரணி என்ற ஒரு ஆற்றுக்குப் பாலம் வேண்டுமென்று கேட்டிருந்தோம். 1969-ம் ஆண்டு நெல்லை மாவட்ட வளர்ச்சி கூட்டத்தில் இதுபற்றிய தீர்மானத்தைக் கொண்டு வந்து ஏகமனதாக நிறைவேற்றி அரசுக்குச் சிபாரிசு செய்து அனுப்பினோம். அதன்மேல், எந்த நடவடிக்கையும் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை. கடந்த ஆண்டு பட்ஜெட் கூட்டத்தில் பொதுப்பணித் துறை அமைச்சர் பதில் சொல்லும்போது, இந்தத் திட்டம் அடுத்த ஆண்டு நிறைவேற்றப்படும் என்று உறுதிமொழி கூறினார்கள். ஆனால், இந்தத் திட்டம், நிறைவேறவிருப்பதாகத் தெரியவில்லையென்பதற்காக, என் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள், சேரன்மாதேவி தொகுதி, எதிர்க்கட்சிகளுடைய தொகுதியாக இருக்கிற காரணத்தால், இந்த அரசு நிறைவேற்ற முன்வரவில்லை என்ற குற்றத்தைக் கூறி, இங்கு எந்த விஷயத்தைப் பற்றிப் பேசுவதாலும் எந்தப் பிரயோஜனமும் இல்லையென்று கருதுவதால், நான் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. இ. இராமசாமி:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, டாக்டர் கலைஞர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 1975–76-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த அரசு ஏழை எளிய மக்கள் அரசு, நடுத்தர மக்கள் அரசு என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான் இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது. இதில் என்ன இருக்கிறது? இன்று விலைவாசி ஏறியிருக்கிறது, அதைக் கட்டுப்படுத்த போட்ட திட்டங்கள் என்ன என்றெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆனால், மத்திய சர்க்கார், அங்கே ரூபாய் 288 கோடிக்குப் புதிய வரிகளைப் போட்டிருக்கிறது. நம், தமிழக அரசு வரி போட்டிருந்தாலும்கூட, ஏழை எளிய மக்களைப் பாதிக்கக்கூடிய வரி இல்லை என்பது, நமக்குத் தெளிவாகத் தெரிகிறது.

வாழ்க்கை அடித்தளத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிற, ஏழை அரிசனங்களுக்கு 1 இலட்சம் வீடு கட்டித் தரும் திட்டம், மீனவப் பெருமக்களுக்கு ரூபாய் 2 கோடியில் வீடு கட்டிக் கொடுப்பது, குடும்ப நலத்திட்டம், கண்ணொளித் திட்டம் போன்ற ஏழை எளிய மக்கள் பயன்படக்கூடிய நல்ல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிற காரணத்தால்தான் இந்த அரசு ஏழை எளிய மக்களுடைய அரசு என்று நான் சொல்லிக்கொள்வேன். தமிழக அரசிற்கும் தமிழக அரசுத் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் தோட்டத் தொழிலாளர்களின் சார்பாகப் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த மாதம் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தம் சிறப்பான முறையிலே முடிவுபெற்றது, 1956 ஆம் ஆண்டிலே தோட்டத் தொழிலாளர்களுக்குக் கூலியை உயர்த்தவேண்டுமென்று ஊர்வலம் நடத்தினார்கள், அப்போதிருந்த காங்கிரஸ் கட்சி ஆட்சியின்போது துப்பாக்கியால் அவர்களைச் சுட்டார்கள், நான்கு பேர்கள் வால் பாறையிலே சுட்டு அவர்கள் செத்தார்கள். 1963 ஆம் ஆண்டிலே இரண்டே கால் ரூபாயாக இருந்த கூலி போன மாதம் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் காரணமாக 7.24 ரூபாயாக உயர்ந்திருக்கிறது, அது மட்டுமல்ல மே மாதம் வந்தால் 8 ரூபாய் சில்லரை பெறுவார்கள்.



1975 மார்ச் 8] [திரு. இ. இராமசாமி]

இரண்டே கால் ரூபாயிலிருந்து 8 ரூபாய் சில்லரை அளவுக்குக் கூலியைப் பெறுகிறார்கள் என்றால் அதற்காக தமிழக சர்க்காருக்கும் அதை சுமூகமாகத் தீர்த்துத்தந்த தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் ஊதிய முடக்கச் சட்டத்தின் காரணமாக, தொழிலாளர்கள் இப்போது அதிகச் சம்பளம் பெற்றாலும்கூட, ஒரு ரூபாய் சில்லரை பிடிக்கப்படுகிறது. மே மாதத்திலிருந்து 2 ரூபாய் பிடிக்கப் போகிறார்கள். இப்போதுள்ள விலைவாசியில் வாங்குகிற பணத்தில் 2 ரூபாய் பிடித்தால் என்ன ஆகும்? இரண்டு ரூபாய் பிடிக்கப் படுவதற்கு மத்திய சர்க்காரின் ஊதிய முடக்கச் சட்டம்தான் காரணம், ஆகவே அதிலிருந்து தோட்டத்தொழிலாளர்களுக்கு விதிவிலக்கு வாங்கித்தரவேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

காடாம்பாறை நீர் மின்திட்டம் ஆசியாவிலேயே முதன்மையான திட்டம். கடந்த ஆண்டு அதற்காகப் பணம் ஒதுக்கப்பட்டு வேலைகள் நடந்துகொண்டிருந்தன. திடீரென வேலையை நிறுத்தி விட்டார்கள். அதற்கு என்ன காரணம் என்று புரிந்து கொள்ள முடியவில்லை. டெல்லி சர்க்கார் பணம் கொடுக்க மறுத்து விட்டதா அல்லது இத்திட்டத்திற்கு அனுமதி கொடுக்கவில்லையா என்று தெரியவில்லை. இன்றைய தினம் மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது, இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் மின்சாரமும் கிடைக்கும், பல தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

ஆகவே தயவுசெய்து காடாம்பாறை நீர் மின்திட்டத்தைத் தொடர்ந்து வேலைகளை ஆரம்பித்து நிறைவேற்றித் தர ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தோட்டத் தொழிலாளர்களுடைய பிரச்னை. சம்பள உயர்வு கிடைத்தது பற்றிச் சொன்னேன். பாராட்டினேன். வால் பாறையிலே உள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு வாரத்திற்கு 2 கிலோ அரிசி கொடுக்கப்படுகிறது. ஆனால் நீலகிரிமலையில் உள்ள தொழிலாளர்களுக்கு 5 கிலோ அரிசி கொடுக்கப்படுகிறது. இங்கே யும் தேயிலைதான் விளைகிறது, அங்கேயும் தேயிலைதான் விளைகிறது. கார்டுக்கு 2 கிலோ என்று கொடுக்கிறார்கள், ஒரு தனிநபருக்கு ஒரு கார்டு, அந்தக் கார்டுக்கும் 2 கிலோதான், அதேபோன்று ஒரு குடும்பம் பூராவுக்கும் ஒரு கார்டு, அந்தக் கார்டுக்கும் 2 கிலோ தான் என்றால் சரியாக இல்லை. நான் உணவு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், தேயிலை, காப்பி உற்பத்திசெய்கிற பகுதிகளிலே வாழ்கிற மக்களுக்கு, நீலகிரியில் உள்ளவர்களுக்குக் கிடைக்கக்கூடிய அளவுக்கு வால்பாறையிலும் கொடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

காளியாபுரம், சோமநாதபுரம், சோழன்துறை போன்ற இடங்களில் குடிநீர்ப் பஞ்சம் அதிகமாக இருக்கிறது, அதற்கான திட்டங்கள் வாட்டர் போர்டில் இருக்கின்றன, 2, 3 ஆண்டுகள் ஆகியும் பூர்த்தி செய்யப்படவில்லை. அவற்றை விரைவாகப் பூர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

* **திரு. ந. தருமலிங்கம்:** சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப் பட்ட 1975-76 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களைக் கோடிட்டுக் காட்டலாம் என விழைகிறேன்.

இங்கே பேசிய அத்தனை பேர்களும் ஏதோ இந்த அரசு செய்ய வில்லை, செய்யவில்லை என்று சொன்னார்களே தவிர எதைச் செய்ய வேண்டுமென்று அவர்கள் திட்டவட்டமாகச் சொல்லவில்லை, அது தான் என்னுடைய குற்றச்சாட்டு. பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் செய்யவில்லையென்று எதிர்க்கட்சி நண்பர்கள்கூட சொன்னார்கள்.



தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த அரசு உறுதுணையாக இருக் கிறது என்று சொன்னார்கள், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அவர் களுடைய நலனைக் கருதி அதற்காக என்று ஒரு துறையை ஆரம் பித்து 3 ஆண்டுகள் ஆகின்றன, அதற்கு 5.8 கோடி ரூபாய் ஒதுக் கப்பட்டிருக்கிறதென்றால் இந்த அரசு தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் ஆகியவர்களுக்கெல்லாம் எந்த அளவிற்குச் செய்திருக்கிறது அவர்கள்மேல் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பது தெரியும்.

என்னுடைய பகுதி வறட்சிப் பகுதியாக இருப்பதால் இந்த அரசு துரித நடவடிக்கைகளை எடுத்து மாவட்ட ஆட்சித் தலைவர், கோட்டாட்சித் தலைவர், வட்ட ஆட்சித் தலைவர் ஆகியவர்களின் மூலமாக நல்ல பணிகளைச் செய்ததற்காக அமைச்சர் அவர் களுக்கும் அதிகாரிகளுக்கும் இந்த அரசிற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் லெவி போடவேண்டுமென்று போட்டு அங்கே உள்ள விவசாயிகளைத் துன்புறுத்துவதாக அறிகிறேன். 1972 ஆம் ஆண்டில் என்னுடைய தொகுதியில் வெள்ளம் பெருக்கெடுத்துப் பெரும் பாலும் பாதிக்கப்பட்டது. அதிலிருந்து தொடர்ந்து மழை யில்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிறது. வறட்சி எங்கே பார்த்தாலும் தாண்டவமாடுகிறது. இந்த நேரத்திலே ஒரு சிலர் பயிர்செய்து வைத்திருக்கின்ற நெல்லையும் லெவி என்று சொல்லிவிட்டு வாங்கிக் கொள்கிறார்கள். அவர்கள் விதைக்கு என்று வைத்த நெல்லைக்கூட கொடுத்துவிட்டு விலைக்கு வாங்கிச் சாப்பிடக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே அங்கே லெவியை எடுத்துவிடவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலவள வங்கிகள் மூலமாக விவசாயிகளுக்குக் கடன்கொடுக்கி றார்கள் என்று சொல்கிறார்கள். அரசு எத்தனையோ கோடி ரூபாய் ஒதுக்குகிறது. ஒரு கிணறுக்கும் மற்றொரு கிணறுக்கும் இடையே 600 அடி வித்தியாசம் இருந்தால்தான் கடன் கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிற, அந்த விதியினால் பல விவசாயிகள் பலன் அடையவில்லை, ஆகவே இந்தக் குறிப்பிட்ட அளவை எடுத்து விட்டு கோரிக்கை கொடுக்கின்ற அத்தனை பேர்களுக்கும் கிணறு வெட்டுவதற்குக் கடன் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ந. தருமலிங்கம்] [1975 மார்ச் [illegible]

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அனந்தநாயகி அவர்கள் 6 கோடி ரூபாய்க்கு வரிப்போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மத்திய அரசு கணுடி, பீடி, புகையிலை இப்படி சாதாரண ஏழை மக்கள் பயனபடுத்துகின்ற பொருட்களுக்கு 280 கோடி ரூபாய் அளவிற்கு வரி போட்டிருக்கிறது, அதைப்பற்றி உங்கள் கருத்தை எடுத்து சொல்லாமல் இந்த அரசைப்பற்றிச் சொல்வது என்ன நியாயம் என்று தெரியவில்லை. அண்ணா தி.மு.க. நண்பர் கோவை செழியன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் மாநில சுயாட்சியைப்பற்றி அண்ணா அவர்கள் எந்த மாநாட்டிலே, எந்த மேடையிலே, தீர்மானத்தை நிறைவேற்றினார்கள் என்று கேட்டார்கள் நான் கேட்கிறேன், அவர்கள் அண்ணாயிஸம் என்று சொல்கிறார்களே, அந்த அண்ணாயிஸத்தை அண்ணா அவர்கள் எந்த மேடையிலே, எந்த மாநாட்டிலே தீர்மானம் போட்டுக் கேட்டார்கள் என்று சொன்னால் நன்றாக இருக்கும். உங்களைத் தோழமைக் கட்சியான வலது கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகையிலே அண்ணாயிஸம் என்றால் என்ன என்று கேட்டதற்கு மோசடி என்று சொல்லியிருக்கிறார்கள் என்று வெளியிடப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : கோரம் இருக்கிறதா அவையில் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இருக்கிறது, உட்காருங்கள். உறுப்பினர் இன்னும் 10 நிமிடங்களில் முடித்துவிட வேண்டும்.

திரு. ந. தருமலிங்கம் : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி போன வருடத்திலே வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது, தொடர்ந்து மழையில்லாமல் இருக்கிறது. அதைப்பற்றிப் பேசுவதற்கு அதிக நேரம் கொடுங்கள். என்னுடைய தொகுதியிலே விடமாமந்தூர் என்ற இடத்திலே சோதனைக்கூடம் ஒன்று அமைக்கப்பட்டு மத்திய அரசு அங்கே கனிவளம், காப்பர் போன்றவை இருப்பதாக சீப் ஜியாலஜிஸ்ட் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அங்கே நெய்வேலி போன்ற ஒரு திட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையின் அனுமதியோடு நேரத்தை நீட்டிக்கிறேன்.



1975 மார்ச் [illegible]]

புலவர் சி. பழனிசாமி : தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற 1975-76 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி வரவேற்கிறேன். (குறுக்கீடு.)

திரு. ந. தருமலிங்கம் : தலைவர் அவர்களே, எனக்கு இன்னும் 5 நிமிடங்களாவது கொடுக்கவேண்டும், தயவுசெய்து கொடுங்கள். தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அங்கத்தினர் மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறார், கொஞ்ச நேரம் பேசி முடிக்கட்டும்.

(பிற்பகல் 1-30)

திரு. ந. தருமலிங்கம் : ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசாமல் பொம்மைகளாக இருக்க வேண்டுமா ? அவர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான். மக்கள் ஓட்டுப் போட்டுத்தான் நாங்கள் வந்திருக்கிறோம். எதிர்க் கட்சி உறுப்பினர்கள் மட்டும் தான் மக்கள் ஓட்டுப் போட்டு வந்தார்களா ? அதை தயவுசெய்து சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சரி, நீங்கள் பேசுங்கள்.

திரு. ந. தருமலிங்கம் : அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியிலே நீண்ட காலக் கோரிக்கையாக உள்ள மையூரா நதியின் குறுக்கே ஒரு தரைப் பாலத்தையும், கொங்கராயபுரத்தில் மணிமுத்தாற்றின்மேலே ஒரு மேம்பாலத்தையும் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அதைப்பற்றி சட்ட மன்றத்திலே சொல்லியும், மாவட்ட வளர்ச்சி மன்றத்திலே சொல்லியும்கூட இன்னும் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை நினைத்து நான் உள்ளபடியே வருந்துகிறேன். இனிமேலாவது இதுபற்றித் துரிதமாக நடவடிக்கை எடுக்க முன் வர வேண்டுமென்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், கிராமப்புறங்களிலே சர்க்கரை கிடைக்கவில்லை, சர்க்கரை கிடைக்கவில்லை என்றெல்லாம் பொதுமக்கள் பேசுகிறார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், எல்லா

அதிகாரங்களும் மத்திய அரசாங்கத்திடம் இருக்கிறது. அளவிற்கு மீறிய கரும்பை நாம் உற்பத்தி செய்கிறோம்; என்றாலும் அவற்றைக் கொண்டு சர்க்கரை உற்பத்தி செய்யும் நேரத்தில் சாதாரண குடிசைகளிலுள்ள மக்கள் பயன்படுத்த முடியாத நிலை இருக்கிறது. அவர்கள் குறிப்பிட்ட அளவிற்குத்தான் பயன் படுத்த வேண்டுமென்ற முறையில் மத்திய அரசுதான் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அதற்காகத்தான் மாநில சுயாட்சி கேட்கிறோம். ஏழை எளிய மக்கள் வாழ்வு வளம் பெற வேண்டும், ஏழை மக்கள் வாழ்வு வளம் பெற வேண்டுமென்பதற்காகத்தான் மாநில சுயாட்சி கேட்கிறோம். மாநில சுயாட்சி பற்றிய விளக்கங்களை இதற்குமுன் பேசியவர்கள் சொல்லியிருப்பதால் நான் அதைப் பற்றி இதோடு விட்டுவிடுகிறேன்.

என்னுடைய பகுதியிலே உள்ள தாழ்ந்த நிலையிலே உள்ள மக்கள், அடித்தளத்திலே உள்ள மக்கள் வறட்சியால் எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றி முன்னதாகவே நான் முதலமைச்சரவர்களிடத்தில் கூறியிருக்கிறேன். சாத்தனூரிலிருந்து கால்வாய் வெட்டி என்னுடைய பகுதிக்கு நீர்ப் பாசன வசதிகளை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதி மக்களின்மேல் கருணை வைத்து அதை முதல்வரவர்கள் விரைவில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன், வணக்கம்.

*புலவர் சி. பழனிச்சாமி: பேரவைத் தலைவரவர்களே, 1975-76-ம் ஆண்டுக்கு தமிழக முதல்வரவர்களால் கொண்டுவரப் பட்டிருக்கும் நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய ஒரு சில கருத்துக்களைக் கூற விழைகின்றேன். எனக்கு மிகவும் குறைந்த நேரமே இருக்கின்ற காரணத்தினால் இந்த நிதிநிலை அறிக்கையிலே மிக முக்கியமாக எதைக் குறிப்பிட வேண்டுமென்று எண்ணினேனோ அதை முதலில் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே மிகவும் சிறப்பான திட்டங்களாக, அரசு ஊழியர்களுக்கு அதிக அகவிலைப்படி அளித்திருப்பது, நெசவாளர்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டம், பென்ஷன்தாரர்களுக்கு 5 ரூபாய் உயர்வு கொடுத்திருப்பது, மீனவ





மக்களுக்கு வீட்டு வசதி ஏற்பாட்டுத் திட்டம் ஆகிய பல நல்ல திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையிலே டாக்டர் கலைஞர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால், இந்த நாட்டிலே உள்ள இலட்சோபலட்சம் பகுத்தறிவுக் கொள்கை கொண்ட மக்களின் மனம் வருந்தும்படியாக ஒரு குறிப்பு இந்த நிதிநிலை அறிக்கையிலே இருக்கிறது. அது தான் காரைக்குடியில் தமிழ்த்தாய் கோயில் கட்டுவது என்பது. அதற்கு அரசு நிதி கொடுப்பதாகக் குறிப்பு இருக்கிறது. நான் முதல்வரவர்களையும், நம்முடைய அரசையும் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்வதெல்லாம், இந்த நாட்டிலே கோயில்கள் ஏராளமாக இருக்கின்றன. மக்கள் ஏற்கனவே அறியாமையில் மூழ்கிக் கிடக்கிறார்கள். அந்த நிலையில் தமிழ்த் தாய்க்கு என்று புதிதாகக் கோயில் கட்டி பல காரியங்களைச் செய்ய முன்வந்திருப்பது சரியான காரியம் அல்ல என்பதைத் தாழ்மையுடன் கூறிக்கொள்ள விழைகிறேன். தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும், தமிழ் மொழியை அரியாசனத்தில் ஏற்ற வேண்டுமென்றால் அதற்கு ஆக்கபூர்வமாக சில நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும். அண்மையிலேகூட நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ்ப் பேரறிஞர் தேவநேயப் பாவாணரை 'அகர முதலி'-யைத் தொகுக்க ஏற்பாடு செய்து, அவருக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டினார்கள். இப்படிப்பட்ட ஆக்கபூர்வமான நல்ல காரியங்களைச் செய்து தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு வழி தேட முயல வேண்டுமேயொழிய தமிழ்த் தாய் கோயில்களைக் கட்டி, அறியாமையில் மூழ்கியிருக்கும் மக்களை மீண்டும் அவ்வாறு செய்ய இடம் கொடுக்கக் கூடாது என்பதை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, நம்முடைய அரசின் மூலமாக, அறநிலையத் துறையின் மூலமாக இன்றையதினம் கோயில்களுக்குச் சாயம் பூசுவது, கும்பாபிஷேகம் நடத்துவது, பல ஆண்டுகளாக ஓடாமல் இருக்கும் தேர்களை ஓட்டுவது இப்படிப்பட்ட காரியங்களை அறநிலையத்துறையின் மூலமாகச் செய்கிறார்கள். இதனால் எல்லாம் நாட்டுக்கு என்ன நன்மைகள் விளைகிறது என்று கேட்க விரும்புகிறேன். நீண்ட காலமாக ஓடாமல் இருந்த திருவில்லிப்புத்தூர் கோயில் தேரை ஓட்டினார்கள். மேலேயிருந்த கலசம் விழுந்து அந்த இடத்தில் 4 பக்தர்கள் நசுங்கிச் செத்தார்கள். திருப்பதியிலே ஆண்டுக்கு ஒரு பஸ் உருண்டு பக்தர்கள் மரணம் அடைகி

[புலவர் சி. பழனிச்சாமி] [1975 மார்ச் 8

றார்கள். ஆகவே, இப்படிப்பட்ட பல காரியங்களை மத நம்பிக்கையுடையவர்களுக்காகச் செய்யும் நேரத்தில், இந்த நாட்டிலே உள்ள இலட்சோபலட்சம் பகுத்தறிவுக் கொள்கை கொண்ட மக்களுக்காக இந்த அரசு ஏதாவது செய்ய வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அந்த மக்களும் இந்த நாட்டிலே உள்ள மக்கள்தானே. ஆகவே, அவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு என்னுடைய தாழ்மையான ஆலோசனையையும் கூற விழைகிறேன்.

அண்மையில் மதுரைப் பல்கலைக் கழகத்திலே காந்திய சிந்தனைகள் என்ற படிப்புத் துறையை ஏற்படுத்தி, காந்தியடிகளின் கொள்கையைப் பரப்புவதற்காக மதுரைப் பல்கலைக் கழகம் ஏற்பாடு செய்திருக்கிறது. அதைப்போல, இந்த இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சிந்தனையாளர், பகுத்தறிவுப் பகலவன், சுயமரியாதைச் சுடர், தந்தை பெரியாரின் கருத்துக்களைப் பரப்புவதற்காக டாக்டர் கலைஞர் அவர்கள் அருள்கூர்ந்து துணிச்சலாக ஏதாவது செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்காக இன்றையதினம் திருச்சியிலே சிந்தனையாளர் கழகம், "பெரியார் ஈ.வெ.ரா.-வின் சிந்தனைகள்" என்ற ஒரு நூலை ஏறத்தாழ ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவிட்டு மூன்றாண்டுக் காலம் பெருமுயற்சி செய்து வெளியிட்டிருக்கிறார்கள். அந்த நூலை பல்கலைக் கழகத்தில் பாடநூலாக வைத்து பகுத்தறிவைப் பரப்புவதற்கு மிக முக்கியமான நூலாக இருக்கும். அந்த நூலை வைத்துக் கொண்டு நம்முடைய மதுரைப் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகம் ஆகிய பல்கலைக் கழகங்களிலே ஒரு படிப்புத் துறையை ஏற்படுத்தி, பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்புவதற்கு அருள்கூர்ந்து மிகத் துணிச்சலோடு நம்முடைய அரசு முன் வர வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, என்னுடைய தொகுதியைப்பற்றி ஒரு சில கருத்துக்களைக் கூறி முடிக்க விரும்புகிறேன். சென்ற நிதிநிலை அறிக்கையிலே வரதமால் நதி அணைத் திட்டத்தை எங்களுக்குக் கொடுத்து, எங்கள் பகுதியிலே முன்னேற்றம் ஏற்படச் செய்தார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1975 மார்ச் 8] [புலவர் சி. பழனிச்சாமி]

அதைப்போல பழனிக்கு மேற்கில் குதிரையாறு சிறியநீர்த் தேக்கத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை நம்முடைய அரசு ஏற்றுக் கொள்ள இருப்பதாக மதுரையில் நடைபெற்ற நீர்ப்பாசனக் கருத்தரங்கில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். ஏறத்தாழ 10,000 உழவர் பெருமக்களுக்கு அருமருந்தாக குதிரையாறு நீர்த் தேக்கத் திட்டம் இருக்கும். அதை அமல்படுத்த வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், பழனிக்கு அண்மையில் உள்ள ஆயக்குடி பகுதியில் வரதாபட்டணா ரோடு, பெரியகுளம் கரை ரோடு ஆகிய இரண்டு ரோடுகளும் சீர்கேடடைந்திருக்கின்றன. 10,000 உழவர்கள் பயன்படுத்தும் அந்தச் சாலையையும் வறட்சிப் பணியிலே சேர்த்துக்கொண்டு சீர்திருத்திக் கொடுக்கும்படி மிகவும் பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அய்யன்குளத்திற்கு 1,16,000 ரூபாய் இந்த அரசு நிதி ஒதுக்கியிருக்கிறது. 6, 8 மாதங்களுக்கு முன்பு அமைச்சரவர்கள் இங்கே கூறினார்கள். ஆனால் எட்டு மாதங்களுக்கு மேலாகியும்கூட அய்யன்குளம் திட்டம் இன்னும் செயலுக்கு வரவில்லை. ஆகவே, அய்யன்குளத் திட்டத்தை வெகுவிரைவிலே தொடங்கி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து லெவி பற்றி ஒன்றை மட்டும் என்னுடைய கருத்தாகக் கூற விரும்புகிறேன். லெவி கொள்முதல் செய்வதில், பெரும் பெரும் நில முதலைகளுக்கு ஏராளமான நெல் விளைந்தும் அவர்களிடத்திலிருந்து மிகவும் குறைந்த அளவிலே தான் கொள்முதல் செய்கிறார்கள். அதற்குக் காரணமாக இருப்பவர்கள், அந்தந்தப் பகுதிகளிலே இருக்கின்ற கணக்குப் பிள்ளைகள். பெருநில முதலாளிகள் 50 மூட்டைகள் நெல் கொடுக்க வேண்டுமென்றால், அந்த ஊர் கணக்குப்பிள்ளை அவர்களிடத்தில் சில பேரங்களைப் பேசி, தன்னுடைய வீட்டில் நான்கு மூட்டைகளைத் தள்ளி விட்டால், 50 மூட்டைகள் என்பதை 20 மூட்டைகளாகக் குறைத்து விடுகிறார்கள். ஆகவே, நான் சொல்ல விரும்புவதெல்லாம். . .

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): நம்முடைய புலவர் பழனிசாமி அவர்கள் கோயில்களைப் பற்றி என்னவெல்லாமோ பேசினார்கள். அப்படிப்பட்டவர்கள் பழனி கோயில்

டிரஸ்டியாக இருக்கிறுரே, அது முறையா? (குறுக்கீடு) கோயில்களுக்கு வெள்ளையடிப்பதெல்லாம் வீண் என்று பேசுகிறவர் டிரஸ்டியாக இருக்கலாமா என்றுதான் கேட்கிறேன்.

திரு. எம். ஆர். கண்ணன்: டிரஸ்டியாக இருப்பவர்கள் . . .

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பெரியார் அவர்கள் ஈரோடு பிள்ளையார் கோயில் டிரஸ்டியாக இருந்தார். டிரஸ்டியாக இருப்பது கணக்குப் பார்க்கத்தானே தவிர, பக்தி பூர்வமாக இருக்க வேண்டுமென்பதல்ல.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் டிரஸ்டியாக இருக்கும் கோயில் நிர்வாகத்தில் நடத்தும் கல்லூரியில் அவர்களைப் போன்றவர்கள் டிரஸ்டியாக இருப்பதால் தான் தந்தை பெரியார் அவர்களுடைய படத்தைத் திறந்து வைத்து சிறந்த முறையில் பகுத்தறிவுக் கருத்தைப் பழனியில் எடுத்துச் சொல்லும் வாய்ப்பு என் போன்றவர்களுக்கு கிடைத்தது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கணக்குப் பார்ப்பதற்காகத்தான் டிரஸ்டி என்றூர்கள். டிரஸ்டியாக நியமிக்கப்படுகின்றவர்கள் எப்படி எப்படி இருக்க வேண்டுமென்று விதிமுறைகள் இருக்கின்றன. அவர்கள் கடவுள் பக்தியுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று விதி இருப்பதாக அறிகிறேன். அந்த விதியை மீறி டிரஸ்டி நியமனம் செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: கோயிலில் ஆறு கால பூஜையும் நடக்கிறதா என்று பார்க்க வேண்டும். அதுவும் கணக்குதான் கோயிலில் கொள்ளை போகக் கூடாது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): கோயில் கட்டுவதை எதிர்க்கின்றவர், கோயிலில் வெள்ளை அடிக்கக் கூடாது என்று சொல்லுகின்றவர், கோயில் தேர்களை ரிப்பேர் செய்யக் கூடாது என்று சொல்லுகிறவர் கோயில் டிரஸ்டியாக இருக்கலாமா என்றுதான் கேட்டேனே தவிர, வேறல்ல.

(புலவர் சி. பழனிச்சாமி எழுந்து நின்றூர்.)





Dr. H. V. HANDE: Mr. Deputy Speaker, Sir, a valid point of order has been raised by the hon. Member, Thiru Krishnamurthy. There is a lot of substance in what he has stated and the entire House is looking forward to your verdict on the point, whether the point of order is valid or not. So far as repairs to temples are concerned, they are looked after by the Hindu and Religious Endowments Department. The question is, when a person has openly stated that he has no faith in God.........

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): விதி என்பதல்ல. விதி பற்றிச் சொல்லவில்லை.

Dr. H. V. HANDE: The question is, when a person has openly stated that nothing need be done for the temples and that he has no faith in God, whether such a person could be a trustee. That is the valid point raised by the hon. Member, Thiru Krishnamurthy...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பசி நேரத்தில் பக்தியைப் பற்றிக் கிளப்பிக் கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை. இப்போது இருக்கிற சட்டப்படி—

' He should be a Hindu எனக்குத் தெரிந்து திரு. பழனிசாமி பழனி கோயில் டிரஸ்டியாக இருக்கிறுர்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இந்த அளவில் முடிவுற்று மீண்டும் 10—3—1975 திங்கட்கிழமை அன்று காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-44 மணி அளவில் ஒத்தி வைக்கப் பட்டது.

### 5. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

#### *A. Statutory Rules and Orders*

124. Notification issued in G.O. Ms. No. 2557, Home, dated the 21st October 1974 in regard to collection of reduced rate of tax in respect of the lorry MDN. 2762 belonging to the Lawrence school, Lovedale, Ootacamund. (Laid on the table of the House under section 26(2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).

125. Notification issued in G.O. Ms. No. 2297, Home, dated the 24th September 1974, in regard to levy on single point tax in respect of light motor vehicles not covered by permits and plying between Tamil Nadu and Kerala. (Laid on the table of the House under section 26(2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974)].

126. Notification issued in G.O. Ms. No. 2760, Home, dated the 4th December 1974 in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

*B. Reports, Notifications and Other Papers*

51. Notification issued in G.O. Ms. No. 31, Commercial Taxes and Religious Endowments, dated the 10th January 1974 in regard to exemption from stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the sale deed to be executed in favour of the Panchayat Union, Ponnamaravathi.

52. Notification issued in G.O. Ms. No. 787, Commercial Taxes and Religious Endowments, dated the 28th December 1974 in regard to date of commencement of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Third Amendment) Act, 1974 (Tamil Nadu Act 50 of 1974).



**இணைப்பு**

*[. 283ம் பக்கத்தில் 242 ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]*

**சுருக்கம்**

*நகர மன்றங்கள்—சிறப்பு மலர் வெளியீடு—வெளியிடுவதற்கு முன் ஒப்புதல் வேண்டல்—விளக்க ஆணைகள்—பிறப்பிக்கப்படுகின்றன.*

**ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை**

*அரசாணை (நிலை) எண். 1773* *நாள் : 31—7—1974.*

1. பண்ருட்டி நகர மன்றத் தலைவரின் கடித ஆர்.ஓ.சி எண். 2519/74 இ-1, நாள் : 21—1—1974.

2. நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் கடித ஆர்.ஓ.சி. எண். 2519/74 இ-1, நாள் : 21—1—1974.

**ஆணை**

பொருட்காட்சிகளைத் தொடங்குவதை முன்னிட்டோ, புது நிலையங்கள் ஆரம்பமாவதை ஒட்டியோ, மற்றும் புதியத் திட்டங்களைத் தொடங்கப்படுவதை முன்னிட்டோ, சில நகர மன்றங்கள், பொது மக்களிடம் நன்கொடை பெற்றும், விளம்பர வருவாய் மூலமும், நினைவு மலர் வெளியிடுகின்றன. இவற்றில் நகராட்சி நிதிகளுக்குத் தொடர்பில்லாவிடினும், நகராட்சி அலுவலர் அல்லாதோர் நினைவு மலர் வெளியிடும் பொருட்டு நன்கொடைக்காக பொதுமக்களை அணுக வேண்டியதிருக்கலாம். ஆகையால், முறையின் மறபிலான குழுக்கள் மூலம் நன்கொடைகளைத் திரட்டுவதற்கு முன்னர் அரசிடமிருந்து ஒப்புதல் பெற்றுக் கொள்ளுமாறு அரசு நகர மன்றங்களுக்கு ஆணை பிறப்பிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி.)

**எம். எம். இராஜேந்திரன்,**
**அரசுச் செயலாளர்.**

**ABSTRACT**

**MUNICIPAL COUNCILS — Publication of Souvenir — Prior Permission Instruction issued.**

**RURAL DEVELOPMENT AND LOCAL ADMINISTRATION DEPARTMENT**

G.O. Ms. No. 1773. Dated 31st July 1974.

READ :

1. From the Chairman, Panruti Municipality, Letter Roc. No. 206/74-C1, dated 8-1-1974.
2. From the Director of Municipal Administration, Roc. No. 2519/74-E1, dated 21-1-1974.

ORDER :

On the eve of exhibitions, opening of new installations or launching new schemes, certain Municipal Councils publish souvenir by raising public donations and through advertisements. Even though the Municipal Funds are not involved, yet the non-officials of the Municipal Council may have to approach the public for donations for bringing out souvenirs. The Government, therefore, direct that Municipal Councils should obtain the prior permission of the Government before undertaking any collection drive through the agency of informal committees consisting of non-officials.

(By order of the Governor)

M. M. RAJENDRAN,
*Secretary to Government.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1975 மார்ச் 10.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

திருநெல்வேலி தெற்கு கல்விச் சரக அலுவலகம்.

* 251. வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டக் கல்வி அதிகாரி அலுவலகங்கள், கோட்டாட்சித் தலைவர் அலுவலகங்கள் உள்ள இடங்களிலேயே அமைய வேண்டும் என்ற விதி முறை ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், திருநெல்வேலி மாவட்டம், தெற்குக் கல்விச்சரக அலுவலகம், சேரன்மாதேவியிலல்லாமல் பாளையங்கோட்டையில் அமைந்திருப்பதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, மற்ற மாவட்
டங்களில் மாவட்டக் கல்வி அதிகாரி அலுவலகங்கள், கோட்டாட்சித் தலைவர்
அலுவலகங்கள் உள்ள இடங்களிலேயே இருக்கும் போது, திருநெல்வேலி
மாவட்ட தெற்குக் கல்விச் சரக அலுவலகம் மட்டும் சேரன்மாதேவியிலல்
லாமல் பாளையங்கோட்டையில் அமைந்திருப்பதன் காரணம் என்ன ?
அதை உடனடியாக சேரன்மாதேவிக்கு மாற்ற அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படியொரு கட்டாயம் இல்லை. வேறு பல இடங்களிலும் இடம் மாறி இருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் ஓரிடம் அப்படி இருக்கிறது. சேரன்மாதேவிக்கு மாற்றலாமா என்பது குறித்து செயற்குறிப்புக

ளெல்லாம்கூட வந்தன. அங்கிருக்கும் இடங்கள், மற்றவைகளெல்லாம் அதுபற்றி பார்க்கப்பட்டன. ஆனால் நாங்குநேரி பகுதி, மற்ற பகுதிகளில் இருப்பவர்களெல்லாம் பாளையங்கோட்டையில் இருக்கவேண்டும் என்று வற்புறுத்தி வருகிறார்கள். அம்பாசமுத்திரம் தாலுக்காவின் சில பகுதியினர் பாளையங்கோட்டையில் இருப்பது நல்லது என்று கருதுகிறார்கள். இப்படி இருவேறு கருத்துக்கள் இருப்பதன் காரணமாக எந்த முடிவும் எடுக்காமல், இருக்கிற இடத்திலேயே இருந்து வருகிறது.

## நாட்டறம்பள்ளி உயர்நிலைப்பள்ளி.

* 252 வினா.—திரு. ஜி. இராமசாமி : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நாட்டறம்பள்ளி உயர்நிலைப்பள்ளியில் பொறியியல் மற்றும் வணிகவியல் பிரிவு தொடங்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. ராமசாமி : தலைவர் அவர்களே, எஸ். எஸ். எல். சி. வகுப்பு தேறிய மாணவர்கள் பிறகு வேலை கிடைக்காமல் அவதிப் படக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அதைப் போக்கும் பொருட்டு, உயர்நிலைப் பள்ளிகளிளெல்லாம் பொறியியல், வணிகவியல் போன்ற பாடங்கள் போதிக்கத்தக்க வசதியை ஏற்படுத்தினால், மாணவர்கள் வாழ்வுக்கு வழி ஏற்படுமல்லவா ? அதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே "பைஃபர் கேடட் கோர்ஸ்" என்று இருந்தது. விருப்பப்பட்டவர்கள் அதை எடுத்துப் படிக்க வகை செய்யப்பட்டிருந்தது. அதற்குப் பதிலாக இப்பொழுது காம்ப்ரஹென்சிவ் ஸ்கூல் என்று, எந்தெந்த உயர்நிலைப் பள்ளிக்குப் பக்கத்தில் என்ன தொழில்கள் இருக்கின்றனவோ அவற்றைப்—பள்ளி நேரம் போக மீதி நேரத்தில்—பயன் படுத்தும் ஒரு திட்டம் வகுத்து, சென்ற ஆண்டு 19 உயர்நிலைப் பள்ளிகளில் பரிட்சார்த்தமாகக் கொண்டுவந்திருக்கிறோம். அதை வேறு பல பள்ளிகளுக்கும் விரிவு படுத்த வேண்டும் என்ற செயற்குறிப்பு இருக்கிறது. அந்தந்தப் பள்ளிகளில் அதற்கான வசதிகள், சுற்றுச் சூழ்நிலைகள், இடவசதி ஆகியவற்றை ஆராய்ந்து தக்க வகையில முடிவு எடுக்கப்படும்.

திரு. ஆர். பொனனப்ப நாடார் : தலைவர் அவர்களே, இப்பொழுது சில பள்ளிக்கூடங்களில் இது ஒரு "பார்ட் டைம்" படிப்பாக வைத்திருக்கிறார்கள். இதை முழு நேரப் படிப்பாக வைக்க அரசு ஆணை பிறப்பிக்குமா ?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "பார்ட் டைம்"ஆக வைக்காமல், முழு நேரப் வைத்தால் வேறு பல பாடங்களுக்குரிய நேரத்தைக் குறைக்க வேண்டி வரும். மற்ற பாடங்களுக்கும் உரிய நேரம் கொடுக்க வேண்டியிருக்கிறது. தொழில் அறிவு வளர வேண்டும் என்பதற்காக மற்ற பாடங்களுக்குரிய நேரத்தை அதிகமாகக் குறைப்பதற்கு இல்லை. கூடுமான வரையில் தொழிற்கல்விக்குறிய நேரத்தைக் கொஞ்சம் அதிகப்படுத்தி, மற்ற படிப்புகளுக்கு சற்று நேரத்தைக் குறைக்கலாம். தொழிற்கல்விக்கே முழுநேரத்தை ஒதுக்கினால் மற்ற வகுப்புகளின் நேரத்தைக் குறைக்கவேண்டிவரும்.

## Melpuram Government School.

* 253 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state whether there are proposals under the consideration of the Government to upgrade Melpuram Government Middle School, Kanyakumari district, into a High School?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மேல்புரம் அரசு மத்தியதரப் பள்ளிக்கூடத்தில் இப்பொழுது ஒரு உயர்நிலைப்பள்ளக்கூடத்திற்குள்ள ஸ்ட்ரெங்க்த் இருக்கிறது. அந்த ஊரிலிருந்து உயர்நிலைப் பள்ளக்கு செல்ல வேண்டுமென்றால், மூன்று நான்கு மைல் நடந்து மார்த்தாண்டத்திற்கு செல்லவேண்டியிருக்கிறது. ஆகவே, இந்தத் தேவையை உணர்ந்தாவது இந்த மத்தியதரப்பள்ளியாக உள்ளதை உயர்நிலைப்பள்ளியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தப்பள்ளியைச் சுற்றி ஒரு ஐந்து கிலோ மீட்டர் தூரத்திற்கு நான்கு உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. ஏ. எம். ஹைஸ்கூல்ல், மருதாங்கோடு, 4 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. ஆண்டிகோட்டில் ஒரு எய்டெட்-ஸ்கூல், மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அருமனையில் ஒரு எய்டெட்-ஸ்கூல், $4\frac{1}{2}$ கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அருமனையிலேயே ஒரு அரசினர் உயர்நிலைப்பள்ளி, $4\frac{1}{2}$ கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. ஆக, நான்கு உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. அவை பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற இடத்தில் உயர்நிலைப்பள்ளியாக்குவதற்குரிய இட வசதி இருக்க வேண்டும். இட வசதியோடு ஐந்து எக்கர் நிலமும், கட்டட வசதிகளும் இருக்கவேண்டும். மேலும், டெபாசிட் கட்டவேண்டும். இந்த நிபந்தனைகளையெல்லாம் பூர்த்திசெய்யும் நிலை இருந்து, அது குறித்து மாவட்ட முதன்மை கல்வியதிகாரி மூலமாக எழுதியனுப்பினால் அதுபற்றி ஆராயலாம். மற்ற பள்ளிகள் பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும். உயர் பள்ளி துவக்கப்படுவதற்கு விதிக்கப்பட்டிருக்கக்கூடிய நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டு விண்ணப்பங்கள் அனுப்பினால் அதுகுறித்து பிறகு ஆராயலாம்.

[1975 மார்ச் 10

## விலைவாசிகள் மீது கண்காணிப்பு

* 254. விஞ—திரு. என். இட்டப்பா: மாண்புமிகு உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) விலைவாசிகளைக்கண்காணிக்க தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் உஷார் பிரிவு ஒன்று அமைந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ மாதவன் : (அ) இல்லை.

(இ) இவ்விஞவிற்கு இடமில்லை.

திரு. என். இட்டப்பா : தலைவர் அவர்களே, விலைவாசிகள் அதிகமாகக் கூடிவருவதைக் கண்காணிப்பதற்கு இனிமேலாவது அரசு ஒரு ஆய்வுக்கு வர இயலுமா ? அண்மையில் துவரம்பருப்பு, புளி போன்ற பொருள்களின் மொத்த விலை கணிசமான அளவுக்கு குறைந்திருந்தும், சில்லறை விலை குறையவில்லை. அதைப்பற்றி அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் பொருள்களை சந்தையிலே வாங்கி சில்லறையாக விநியோகம் செய்கிறார்கள். சந்தையில் வாங்கும்போது விலைவாசிகளைக் கண்காணிப்பதற்கு அதிலே ஒரு பிரிவை நாம் போட்டிருக்கிறோம். அந்தப் பிரிவு இந்த விலைகளைப் பரிசீலித்து வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஃபுட் செல் என்று அமைக்கப்பட்டு அதற்கு தனி டி. ஐ. ஜி. போடப்பட்டிருக்கிறார். அவர்களுடைய டிபார்ட்மெண்டில் வேலைகள் அவ்வளவு ஜாஸ்தியாக இருப்பதாகத் தெரியவில்லை. அந்த ஃபுட் செல்லில் இம்மாதிரியான பிராஞ்சு அமைத்து, முக்கியமான பொருள்களின் விலைவாசிகளின் ஏற்றத்தாழ்வைக் குறித்து அப்போதைக்கப்போது ரிப்போர்ட் கொடுக்க வேண்டும். அதிகமான விலைக்கு எங்காவது விற்றால், அது குறித்து அரசுக்கு உடனடியாகத் தகவல் கொடுக்க வேண்டும் என்ற முறையில் ஃபுட் செல்லின் வேலை விரிவுபடுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதைப் பரிசீலிக்கலாம்.

திரு. ஆர் பொன்னப்ப நாடார் : இப்பொழுது புள்ளிவிவர இலாக்காவிலிருந்து மார்கெட் இன்டெலிஜென்ஸ் அடிப்படையில் சில தகவல்கள் வந்திருக்கின்றன. அதுமாதிரி தகவல்களை வைத்துக்கொண்டு விலையைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு துரித நடவடிக்கை எடுப்பதற்கு 'ஸ்க்வாட்' அமைத்து ஏற்பாடு செய்யுமா ?



1975 மார்ச் 10]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இன்ன விலைக்கு விற்கலாம் என்று சட்டம் இயற்றாமல் நாம் அதைக் கண்காணித்து கட்டுப்படுத்த முடியாது. இப்பொழுது சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் பின்பற்றி வரும் முறை என்னவென்றால், பொதுச் சந்தையில் என்ன விலைக்கு விற்கிறது, ஹோல் சேலில் என்ன விலை விற்கிறது என்று மட்டும் பார்க்கிறார்கள். அதற்கென்று ஒரு பிரிவு இருக்கிறது. சில்லறை விலை எப்படி இருக்கிறது என்று திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்ன யோசனைப்படி, விஜிலன்ஸ் செல் பார்க்க முடியுமா என்பதை யோசிக்கலாம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கடைகளில் விற்கின்ற பொருள்களின் விலைப் பட்டியலை கடை முன்பு தொங்க விட வேண்டும் என்று அரசு ஆலோசனை கூறியது. ஆனால் பல கடைகளில் அப்படிப் பின்பற்றப்படாமலிருக்கிறது. அது பற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, சில பொருள்களின் விலையேற்றம் மிக அதிகமாகும் போது பாதுகாப்புச் சட்டத்தின் கீழும், எஸன்ஷியல் கமாடிடீஸ் சட்டத்தின் கீழும் அவர்கள் அந்த விலைக்குமேல் விற்கக் கூடாது என்று வற்புறுத்தி வருகிறோம். அப்படி அவர்கள் சட்டத்தை மீறினால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, நேற்று தமிழ் முரசு மாலைப் பத்திரிகையில் தியாகராய நகர் பகுதியில் புளி, சர்க்கரை போன்ற பொருள்களின் விலை பாதிக்குமேல் குறைந்திருப்பதாகச் செய்தி வெளிவந்திருக்கிறது. தியாகராய நகரில் இருக்கும் கடைக்காரர்களைப் போல் தமிழ் நாட்டில் இருக்கும் எல்லாக் கடைக்காரர்களும் விலைவாசியைப் பாதி அளவிற்கு இல்லாவிட்டாலும், 25 சத வீதம், 30 சத வீத அளவுக்காவது குறைக்குமாறு நம்முடைய அரசு கேட்டுக்கொள்ளுமா ? இல்லையென்றால், அந்தக் கடைகளுக்கு மட்டும் விலை கட்டுப்படியாகும்போது, மற்ற கடைக்காரர்களுக்கு ஏன் கட்டுப்படியாகாது என்பதை ஃபுட் செல் ஆராயுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மொத்த விலை குறைந்து சில்லறை விலை குறையவில்லை என்பது ஒரு குறைபாடாக உள்ளது என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலை இருக்குமானால் நிச்சயமாக அசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. எம். சுரேந்திரன் : சார், அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது சிவில் சப்ளைஸ் அமைப்பு சந்தையிலிருந்து பொருள்களை வாங்கி விநியோகிக்கிறது' என்று சொன்னார்கள். அப்படி சந்தையிலிருந்து வாங்கிய விலைக்கும் விற்கிற விலைக்கும் இடையே லாபம் நிர்ணயித்து அதற்குமேல் ஒரு விலை நிர்ணயம் செய்து இந்த விலைக்கு அவர்கள் விற்கவேண்டுமென்று சொன்னால், அதன் மூலம் அதிகம் விற்பவர்கள் யார் யார் என்பதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க முடியும் அல்லவா ? அந்த நடவடிக்கையை மேற்கொள்ள அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, நம்மு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் சில்லரை விலையைக் கட்டுப்படு அந்த விலைக்குத்தான் அதனுடைய நிறுவனங்கள் விற்க வேண்டுமெ செய்திருக்கிறது. அதற்குமேல் அந்த நிறுவனங்கள் விற்க முடிய தனியார் விலைக்கும் நம்முடைய கார்ப்பரேஷன் கடைகள் விலைக் இடையே விலை வித்தியாசம் இருந்தால், அவற்றைக் கண்காணிக்க சி சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஒரு அமைப்பு ஏற்படுத்தி அதன் மூ கண்காணித்து வருகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, உணவுப் பொருள் வேண்டுமென்றே கடத்துகிறவர்கள், செக்போஸ்டில் சரியான பாதுகா இல்லாததால், அங்கே இருக்கும் சிப்பந்திகளை கடுமையாகத் தாக்கு கள். அதிலிருந்து அந்த சிப்பந்திகளைப் பாதுகாக்கின்ற முறை விசேஷப் போலீஸ் படைகளை செக்போஸ்டில் நியமிக்க ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதே கடத்தல் அதிக இருக்கும் பகுதிகளில் அதை நாம் செய்திருக்கிறோம். அப்படிப்பட்ட நி சில இடங்களில் நடைபெற்றபோது உடனடியாக புட் செல் பிரிவு அ சென்று நடவடிக்கை எடுத்து இருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, போன வரு இந்தச் சபையிலே அரிசி இன்ன விலைக்கு விற்கவேண்டுமென்று உத்தரவு போட்டது. ஆனால் இது வரையில் அது நடைமுறைக்கு வ தற்குக் காரணம் என்ன ? அந்த உத்தரவை வாபஸ் வாங்கக் கார என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, ஏற்கனவே இ மன்றத்திலே அது பற்றி விளக்கப்பட்டு இருக்கிறது என்று நி கிறேன். நம்முடைய மாநிலத்தின் சார்பில் ஒரு விலையை நிர்ண அதற்கு மேல் அரிசி விலை விற்கக்கூடாது என்று முடிவு எடுத் அதை இந்த மன்றத்திலும் அறிவித்தோம். மத்திய அரசுக்கு மளவில் அந்தக் கொள்கையில் நம்பிக்கை இல்லை. இப்படி நிர்ணயித்தால், பதுக்கல் அதிகமாகும், விலைவாசி ஏறும், அரிசி காது என்று வாதாடுகிறார்கள். நம்மைப் பொருத்தவரையில் பதுக்கலை நாங்கள் வெளிக் கொணரத் தயாராக இருக்கிறோம். அரிசி விலையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் எங்களுக்குத் தர மென்று கேட்டு இருக்கிறோம். அதற்கான ஒரு சட்டத்தையும் தய அங்கே அனுப்பி இருக்கிறோம். இன்னும் பதில் வரவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, பொதுவாக பட்டண ஓப்பன் மார்க்கெட்டில் சாமான்கள் விலை குறைந்தாலும், கிராம சில்லரைக் கடைகளில் அந்த விலைக்குக் கிடைப்பதில்லை. சில்லரை பாரிகளுக்கு லைசென்சு வழங்கும் அதிகாரம் மாநில அரசின் இருக்கிறது. ஆகவே, அவர்களைக் கட்டுப்படுத்தி, அங்கேயுள்ள விற்பனைக் கடைகளிலும் நியாயமான விலைக்கு விற்க இந்த அ அவ்வப்போது நடவடிக்கை எடுக்க முன்வருமா ?



மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்தப் பொருள்களின் விலையையும் நாம் சட்டப்படி நிர்ணயித்தால் தான் கட்டுப்படுத்த முடியுமே ஒழிய வேறு வகையில் முடியாது. அதனால் தான் நடவடிக்கை எடுக்க முடியாமல் இருக்கிறது.

### *Distribution of food articles*

* 255 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal to change the present method of public distribution system of food articles; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், சென்னை நகரத்தில் ஒரு விதமாகவும், மாவட்டத்தில் ஒரு விதமாகவும், பஞ்சாயத்தில் ஒரு விதமாகவும், கிராமத்தில் ஒரு விதமாகவும் பலவிதமாக வினியோகம் செய்யப்படுகிறது. கிராமங்களில் பலவிதமாக குறைபாடுகள் இருக்கின்றன. பாமிலி கார்டு, தனிப்பட்ட கார்டு என்ற முறையில் எல்லாம் கொடுக்கிறார்கள். இந்த பஞ்சகாலத்தில் ரொம்ப வறட்சியாக உள்ள பகுதிகளில் மாதத்திற்கு இரண்டு கிலோ என்று கொடுக்கும் நிலை இருக்கிறது. அந்த முறையை மாற்றி எல்லோருக்கும் ஒரே அளவில் விநியோகம் செய்யும் முறையை சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாநிலம் முழுவதுமே சட்டப்படி முழுமையாக ரேஷன் கொண்டு வந்தால்தான் அப்படிப்பட்ட நிலை ஏற்பாடு செய்ய முடியும். இப்போது இருக்கிற நிலைமையில் சென்னை, கோவை, ஓரப்பகுதிகள், கன்னியாகுமரி மாவட்டம், போன்ற பகுதிகளில் மட்டும் நாம் ஓரளவிற்கு பங்கீடு முறையை செயல்படுத்தி வருகிறோம். ஆனால், கிராமங்களைப் பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்கள் மாவட்டத்திற்கு என்று ஒரு புட் பட்ஜெட் போட்டு, எங்கெங்கே வறட்சி பாதிப்பு இருக்கிறதோ, தானியங்கள் எங்கே விளையவில்லையோ, அங்கங்கே விநியோகம் செய்து வருகிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : சார், இப்போது ஏற்பட்டு இருக்கிற வறட்சியின் விளைவுகளைப் பெருவாரியான கிராமங்களில் உள்ளவர்கள் அனுபவிக்க வேண்டி இருக்கிறது. அரிசனங்கள், நிலம் இல்லாத விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, நகரங்களில் உணவுப் பொருள்கள் விநியோகிப்பதைவிட, கிராமங்களில் பொருள்களை வினியோகிக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும். ஆகவே, அந்த வகையில் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1975 மார்ச் 10

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நகரங்களில் விநியோகம் தேவை இல்லை என்று சொல்வது சரியாகாது. நகரங்களில் பெரும் அளவுக்கு ஜனத்தொகை இருக்கின்ற காரணத்தாலும், அங்கே நெல் விளையாத காரணத்தாலும், வெளியே இருந்து பொருள்களை வாங்கி, அந்தப் பகுதிகளுக்கு எடுத்து வந்து, விநியோகம் செய்ய வேண்டியிருக்கிறது. கிராமங்களில் இப்படிப்பட்ட விநியோக முறை வரவேண்டுமென்றால், நாடு முழுவதும் கட்டாய ரேஷன் முறை கொண்டு வந்தால்தான் சரியாக அமையும்.

திரு. கு. திருப்பதி: தலைவரவர்களே, மதுரையில் சூப்பர் மார்க்கெட் மூலமாக அரிசி விநியோகிக்கப்படுவதால் நிறைய கியூ இருக்கிறது. அதை சூப்பர் மார்க்கெட் மூலமாக இல்லாமல் வேறு யார் மூலமாகவோ, அல்லது சூப்பர் மார்க்கெட்டின் நிறைய கிளைகளைத் தந்து அதன் மூலமாகவோ விநியோகிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போது 2,000 கார்டுகள் ஒரு இடத்தில் இருந்தால் அங்கே ஒரு கடை திறக்க வேண்டும் என்று முடிவு செய்து இருக்கிறோம். நிறைய கடைகள் திறந்து அங்கே அரிசி மட்டும் விநியோகிக்கப்பட வேண்டுமென்றால் வரவு-செலவு கட்டுப்படியாகாது. இது தான் உண்மை நிலை. அதற்காகத்தான் கிராமங்களில், கிராமக்குழு அமைத்து அவர்கள் அரிசி வழங்க உரிமை கேட்பார்களானால் அவர்களிடம் கொடுத்து விநியோகிக்கலாம் என்று முடிவு எடுத்து இருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த உணவுப் பங்கீட்டு முறையை மாற்றுவதற்கு இல்லை என்று சொன்னார்கள். இப்போது பல இடங்களில் 4,000 5,000 என்று இருக்கிறது. அங்கேயெல்லாம் பெரிய கியூ நிற்பது மட்டுமல்ல. மொத்தமாக ஒரு மாதத்திற்குக் கொடுத்தால் நல்லது. வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிற பகுதிகளில் இப்படிப்பட்ட நியாய விலைக் கடைகள் வைக்கப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். ஆனால், திருச்சி மாவட்டத்தில் கரூர், குளித்தலை போன்ற இடங்களில் ஒரு நியாய விலைக் கடையில் கூட ஒரு மணி கோதுமை போடவில்லை. இனி மேல் ஒரு கடையில் 500 குடும்பக் கார்டுகளுக்கு உணவுப் பொருள் வழங் கப்படும் என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு அங்கத்தினர் சொல்கின்ற அப்படிப்பட்ட நிலை இருக்குமானால், மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டுக் கொள்ளலாம். அது பற்றி விசாரித்து, தகுந்த நடவடிக்கை எடுக்க. 500 கார்டுகளுக்கு ஒரு நியாய விலைக் கடை என்ற முறை பின் பற்றப்படுமானால், அந்தக் கடைகள் நடத்துவதற்கான செலவு கட்டுப்படி யாகாது. அது தான் இன்று பெரிய பிரச்சினையாக இருக்கிறது (குறுக்கீடு). கோதுமையாக இருந்தாலும், மற்ற உணவுப் பொருள்களாக இருந்தாலும், அதுதான் நிலைமை. அதற்காகத்தான் கிராமக் குழு அமைப்பது போன்ற முயற்சி எடுத்தால், அதற்கு நாங்கள் தருகிறோம் என்று சொல்கிறோம்.



1975 மார்ச் 10]

டாக்டர் ச. மு. பழனியப்பன்: இந்த உணவுப் பொருள்களை வழங்கும் இடத்திற்கு எடுத்துச் செல்வதற்கு லாரி வாடகை அதிகமாக இருக்கிறது. ஆகவே, ஏற்றிச் செல்கிற அந்த இடத்திலிருந்து கொண்டு செல்கிற அந்த இடத்திற்கு எடுத்துச்செல்ல எவ்வளவு வாடகை தரவேண்டுமென்று அரசு ஏதாவது லாரி வாடகை நிர்ணயம் செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நாம் கொடுக்கிற இடத்திலிருந்து விநியோகிக்கிற இடம் வரையில் எவ்வளவு தூரம் இருக்கிறது என்பதைப் பார்த்து ஓரளவிற்கு பணம் கொடுக்கிறோம். இந்தச் சிக்கல் எல்லாம் தற்போது இந்த ஆண்டு ஏராளமான கடைகளைத் திறந்து, எல்லா இடங்களிலும் உணவு விநியோகம் என்று ஏற்படுகிறபோது வந்திருக்கிறது. ஆகவே, இப்படி பல தவறுகள் ஏற்படுவது இயற்கையே.

திரு. ஏ. எம். அபுசாலி: சிதம்பரம் தாலூக்காவில் சிறிய கிராமங் களில் எல்லாம் சர்க்கரை சரியாக விநியோகம் செய்யப்படவில்லை. அதை அந்தக் கூட்டுறவுத் துறையிலிருந்து மாற்றி வேறு கடைகளில் கொடுக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கூட்டுறவு சங்கம் வேண்டாம். தனியார் கடை வேண்டுமென்று சொல்லுகிறார்கள். கூட்டுறவுச் சங்கம் தவறு செய்தால் அதன் மீது நடவடிக்கை எடுக்கலாம். அதற்காக தனியாரிடம் கொடுங்கள் என்று சொல்வது சரியல்ல.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, நகரங்களில் குடும்ப கார்டில் ரேஷன் கொடுக்கிறார்கள். சில குடும்பங் களில் இரண்டு மூன்று என்று குறைவான அங்கத்தினர்கள் இருக்கி றார்கள். சில குடும்பங்களில் 10 அங்கத்தினர்கள் கூட இருக்கிறார்கள். அதை ஏ, பி, சி என்று மூன்று பிரிவாக பிரித்து 5 அங்கத்தினர்கள் கொண்ட குடும்பத்திற்கு இந்த அளவு என்று நிர்ணயம் செய்து அந்த அடிப்படையில் ரேஷன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். சிலர் அதி காரிகளிடத்தில் செல்வாக்கு இருக்கிற காரணத்தால் தங்கள் திறமை காரணத்தால் பாமிலியை பிரித்து இரண்டு மூன்று கார்டுகளை பெற முடிகிறது. அப்பாவிகளுக்கு அது முடிவது இல்லை. ஆகவே, பாமிலி கார்டில் இத்தனை நபர்களுக்கு இந்த அளவு என்று நிர்ணயம் செய்து வழங்க வழி வகுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போது குடும்ப கார்டு என்ற முறையைப் பின்பற்றுகிறோம். மாண்புமிகு அங்கத்தினர் சொன்ன குறையை நிவர்த்திக்க ஒரு தனி மனிதனின் தேவை இவ்வளவு என்று நிர்ணயம் செய்து அதை முழுமையாக அரசாங்கமே கொடுக்கிற நிலை உருவானா லொழிய முடியாது. அதுவரை இந்த சங்கடம் இருக்கத்தான் செய்யும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, குடும்ப கார்டு அடிப்படையில் ஒவ்வொரு நபருக்கும் வழங்கப்படுகின்ற உணவு அளவு ஒவ்வொரு இடத்திலும் வெவ்வேறாக இருக்கிறது. மனிதக்குறை

வாயும் வயிறும் ஒன்றுதான் என்ற நிலையில் இப்படி வேறுபாடு இல்லா மல் எல்லா இடத்திலும் ஒரே சீரான அளவு உணவு தானியம் கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏற்கெனவே இது பற்றி நான் விளக்கம் சொன்னேன். சில இடங்களில் தான் நாம் முழுமையான ரேஷன் கொடுக்கின்ற நிலையை நாம் வைத்து இருக்கிறோம். இந்த ஆண்டு பெரும்பாலான இடங்களில் வறட்சி காரணத்தால் ரேஷன் வழங்குவது என்று வைத்திருக்கிறோம். அந்த இடங்களில் குடும்பத்தின் அடிப்படை யில் வினியோகம் செய்து வருகிறோம்.

திரு. கு. காமாட்சி : சர்க்கரை போன்ற பொருள்கள் ஒரு இடத்தில் இரண்டு விலையில் விற்கப்படுகிறது. ஒன்று நியாய விலைக்கு, அதே சர்க்கரை கள்ள மார்க்கெட்டில் அதிக விலைக்கு விற்கப்படுவதற்கு ஆன அனுமதியை அரசு வழங்கி இருக்கிறது. இதை எல்லாம் ஒரே சீராக ஒரே விலையில்தான் விற்க வேண்டும் என்று ஒரு உத்தரவை அரசு பிறப் பிக்குமா ? அல்லது இது பற்றி இந்த அரசாங்கம் மத்திய அரசிடம் வாதாட முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கள்ள மார்க்கெட் என்று சொல்லு வது சரியல்ல. மத்திய சர்க்கார் அனுமதிக்கின்ற ஒப்பன் மார்க்கெட் என்று கூறப்பட வேண்டும். இந்த இரட்டை விலைக் கொள்கையானது நாட்டில் பல தொல்லைகளை உருவாக்குகிறது என்று நாம் தொடர்ந்து மத்திய அரசினிடம் வலியுறுத்தி இருக்கிறோம். ஆலை முதலாளிகள் அதிகம் சம்பாதிக்கவும் கிராமங்களில் இருக்கிற மக்கள் அல்லல்படுவதற்கும் கிராமங்களில் கொண்டு செல்லப்படுகிற லெவி சர்க்கரை தவறான முறை யில் விநியோகப்படுவதற்கும் இந்த இரட்டை விலை கொள்கை வழி வகுக்கிறது என்பதால் இதைப்பற்றி மத்திய அரசிடம் தொடர்ந்து வலி யுறுத்தி வருகிறோம்.

திரு. என். கே. பழனிசாமி : சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் விற்கின்ற பஜ்ரா என்ற சோளத்தின் விலை கிலோ இரண்டே கால் ரூபாய். லைசென்ஸ் பெற்ற வியாபாரிகளிடம் இங்கே ஒரு கிலோ 1 ரூபாய் 80 பைசா என்ற அளவில் குறைவாக இருக்கிறது. இதற்கு என்ன காரணம்? அதிகப்படி யாக லைசென்ஸ் கொடுத்து தானியங்கள் குறைந்த விலையில் கிடைக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சில சமயங்களில் தனியார் நம் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுல் தோற்கடிக்க முயற்சி எடுப்பது சாதாரணம் தான். நம் சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷனுல் இந்த ஆண்டு அதிக அளவு தேவை என்ற காரணத்தால் வெளி மாநிலங்களிலிருந்து கொண்டு வர திட்டமிட்டது. ஆகவே, ஏற்றத்தாழ்வு விலையில் இருப்பது உண்மை.





திரு. மு. சண்முகம் : தலைவரவர்களே, சர்க்கரை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் கரும்பு சாகுபடியாளர்களுக்கு போதுமான அளவு சர்க்கரை நியாய விலையில் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆலையில் வேலை செய்கிறவர்களுக்கு ஆலை உற்பத்தியில் ஒரு பகுதியை வழங்க வகை செய்யப்பட்டு இருக்கிறது. அதுபோல கரும்பு சாகுபடி செய்யும் விவசாயி களுக்கும் சர்க்கரை வழங்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது ஒரு யோசனை.

## புதிய வட்டம் அமைப்பு

*256 வினு : திரு. என். இட்டப்பா & திரு. என். டென்னிஸ் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினு வுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் இரணியல் தாலூக்கா என புதிய தாலூக்கா ஒன்று அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : கல்குளம் வட்டத்தினை பிரித்து புதிய வட்டம் ஒன்றினை உருவாக்க பல நபர்களிடமிருந்து முறை யீடுகள் வந்துள்ளன. புதிய வட்டத்தில் தலைநகரை இரணியல், குளச்சல் முதலிய இடங்களில் வைக்குமாறு முரணை கருத்துக்கள் தெரிவிக்கப் பட்டுள்ளன. மேலும் பிரிப்பது பற்றி அரசு ஆய்வு செய்து வருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, முன்பு இரணியல் தாலுக்கா என்று ஒரு தாலுக்கா இருந்தது. அது இடையில் மாற்றப் பட்டது. அங்கு இருப்பவர்களுடைய சௌகரியத்திற்காக இரணியல் மறு படியும் தாலுக்காவாக கொண்டு வரவேண்டும் என்று கருதப்படுகிறது. குளச்சல், இரணியல் என்று இருந்தால் பரவாயில்லை. அதில் உடனடி யாக நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் 13—7—1974 அன்று அது பற்றி வேறு வட்டம் அமைக்கப்படுவதற்கும் கல்குளம் வட்டம் இரண்டாக பிரிக்கப்பட வேண்டும், இரணியல் நீண்ட காலம் இருந்ததை போல இருக்க வேண்டும் என்றும் முறையிட்டு உள்ளார்கள். அதன்பேரில் பத்மனுபபுரம் கோட்டாட்சித் தலைவரும், கன்யாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரும் பரிசீலனை செய்து அறிக்கை அனுப்புவதாக சொல்லியிருக்கிருர்கள்.

திரு. என். இட்டப்பா : சில தாலுக்காக்கள் இரண்டாகப் பிரிக்கப் படுகின்றன. அதைப் போன்று தஞ்சை மாவட்டத்தில் உள்ள பெரிய தாலுக்காவான மாயூரம் தாலுக்காவை இரண்டாகப் பிரிக்க அரசாங் கத்தினிடம் ஏதாவது செயற்குறிப்பு உள்ளதா என்று அறிய விரும்பு கிறேன்.

[1975 மார்ச் 10

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : கல்குளம் மாத்திரம் அல்ல. பல்வேறு வட்டங்களைப் பிரிக்கவேண்டும் என்று கேட்டு இருக்கிருர்கள். அது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : கல்குளம் வட்டத்தில் இப்போது பத்மனுபபுரம் தலைநகரமாக இருக்கிறது. இரணியல் பிரிக்கப்பட இருக்கிறது. இரணியலுக்கும் தற்போதைய தலைநகரத்திற்கும் மூன்று மைல் தூரம்தான். பத்மனுபபுரத்திற்கு வடபகுதியில்தான் கல்குளத்தின் பெரும்பகுதியும் இருக்கிறது. ஆகவே, அப்பகுதியின் மத்தியிலிருக்கும் குலசேகரத்தை தலைநகரமாகக் கொண்டு ஒரு வட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அது திரு. ஜேம்ஸ் அவர்கள் தொகுதியாக இருக்கும் என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட முறையீடு குளச்சலில் இருந்தும் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். திங்கள் சந்தை ஊராட்சி ஒன்றியம் கூட இது பற்றி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பி இருக்கிறது. ஆகவே இது பற்றி பல்வேறு பிரச்னை இருப்பதால் அது பற்றி அரசு ஆராய்ந்து கொண்டு இருக்கிறது என்று சொன்னேன்.

நரிக்குறவர்களுக்கு வீட்டு மனைகள்.

* 257 வினு : திரு. த. சோனையா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் எங்கெங்கு நரிக்குறவர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்பத்தூர் வட்டம், திருப்பத்தூர் கிராமம், புல எண். 300/7-ல் உள்ள 93 செண்டு நிலத்தை தலா மூன்று செண்டு வீதம் 31 நரிக்குறவர்களுக்கும், சிவகெங்கை வட்டம், பாயூர்பிள்ளவயல், கிராமம் புல எண் 104/2-ல் உள்ள 1.86 ஏக்கர் நிலத்தை தலா மூன்று செண்டு வீதம் 62 நரிக்குறவர்களுக்கும் ஒப்படை செய்யப்பட்டுள்ளன.

மீனவர்களுக்கு வீடுகள்.

* 258 வினு : திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா —

பூம்புகார் கடல் ஓரப்பகுதியில் மீனவர்களுக்கு பல மாடிக் குடியிருப்புக்கள் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பூம்புகார் கடல் ஓரப்பகுதியில் மீனவர்களுக்கு பல மாடிக் குடியிருப்புக்கள் கட்டித் தரும் செயற்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை. எனினும் வீட்டு வசதி



1975 மார்ச் 10]

வாரியத்தால் 132 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, பூம்புகார் மீனவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும் 368 வீடுகள் விரைவில் கட்டி முடிக்கப்படும்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, பூம்புகாரில் மீனவர்களுக்கு கட்டி கொடுப்பது போல தஞ்சாவூர் மாவட்டத்தில் கடல் ஓரப் பகுதியில் வாழ்கிற மீனவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்கும் இந்த திட்டத்தை விஸ்தரிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, இரண்டு கோடி ரூபாயில் 5 ஆயிரம் வீடுகளைக் கட்டித்தர நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கப் பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

திரு. என். இட்டப்பா : தற்போதுகூட மாண்புமிகு முதல்வர் பூம்புகாரில் 132 வீடுகளைத் திறந்து வைத்திருக்கிருர். அது போலவே இன்னும் சில வீடுகள் கட்டப்பட இருக்கிறது என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. கட்டப்பட்ட வீடுகள் மதிப்பீட்டுத்தொகை எவ்வளவு? கட்டப்பட இருக்கிற வீடுகளின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? எத்தனை வீடுகள் கட்டப்பட இருக்கின்றன என்பதையும் அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தற்போது கட்டப்பட்ட வீடுகள் இரட்டை வீடுகள். அநேகமாக 7 ஆயிரம் ரூபாய் பெறுமானமானவை. ஆனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்த பிறகு என்னிடமும் வீட்டு வாரியத் தலைவர் அவர்களிடமும் பொறையார் பகுதியில் ஆதிதிராவிடர்களுக்காகக் கட்டப்பட்ட வீடுகளைக் காட்டி அதைப் போலவே எல்லா பகுதிகளிலும் கட்டி விட்டால் சரியாக இருக்கும் என்று அபிப்பிராயத்தை சொல்லி இருக்கிருர்கள். வீட்டு வசதி வாரியம் எவ்வளவு பணம் ஒதுக்க வேண்டும் என்பதை ஆராய்ச்சி செய்து கொண்டு இருக்கிறது.

திரு. கு. ஆ. பொம்மன் : தலைவரவர்களே, பூம்புகாரில் கட்டப்பட்ட வீடுகளின் மதிப்பீடு எவ்வளவு என்று...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான் இப்போது சொன்னுரே, ஏழாயிரம் ஆகும் என்று சொன்னுரே.

திரு. கு. ஆ. பொம்மன் : அந்த வீடுகள் அவர்களுக்கு ப்ரீயாக கொடுக்கப்படுகிறதா பணம் ஏதாவது கட்ட வேண்டுமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னது 25 ஆண்டுகால தவணையில் அந்தவீட்டுக்கான விலையை அவர்கள் செலுத்திவிட வேண்டும் என்று தீர்மானித்து வைத்து இருந்தோம். ஆனால் முதல்வர் அவர்கள் 75 சதவீதம் மானியமாகவும் 25 சதவீதம் கடனுகவும் வசூலித்தால் போதும் என்று சொல்லிவிட்டார்

கள். அந்த வகையில் மீனவர்கள் மாதத்திற்கு 11 ரூபாய் 85 பைசா செலுத்தி வந்தால் 25 ஆண்டுகளில் அந்த வீடுகள் அவர்களுக்கு சொந்த மாகும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(முற்பகல் 9-30)

திரு. எம். சுரேந்திரன் : சார், பூம்புகார் என்ற அந்தப் பகுதி சிறப்பான பல காரியங்கள் செய்யப்பட்டிருப்பதால் அங்கே மீனவர்களுக்கு வீடு கட்டித் தருவது என்று அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக அமைச் சர் அவர்கள் கூறினார்கள். அந்தப் பகுதியில் மீனவர் அல்லாத சமூகத்தினர் இருக்கிறார்களா? இருந்தால் அவர்களுக்கும் வீடு கட்டித்தர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, பூம்புகார் பகு தியைப் பொறுத்தவரையில் அங்கு மீனவர்களைத் தவிர வேறு எந்த சமூகத்தாரும் இருப்பதாகத் தெரியவில்லை. பொதுவாக கடலோரப் பகுதி களில் இருப்பவர்கள் மீனவர்களாகத்தான் இருக்கிறார்களே அல்லாமல் வேறு எந்த சமுதாயத்தினரும் இருப்பதாகத் தெரியவில்லை.

*Funds for Housing Schemes*

* 259 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there was diversion of funds in the State allotted for Housing Schemes to other purposes during the last two years 1972-73 and 1973-74; and

(*b*) if so, to indicate the extent or amount of diversion and the necessity therefor?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) வினுவிற்கு இடமில்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, வீட்டுவசதி வாரியத்தில் 72—73, 73—74 ஆகிய ஆண்டுகளில் நடுத்தர வர்க்கத்தினர்களுக்கு 16 டிசைன்ஸ் போட்டு, 10 ஆண்டு தவணையில் வீடு கட்டித்தரும் திட்டம் இருந்தது. அது இப்போது செயல்படவில்லை. அதனால் மத்திய வர்க்கத் தினருக்கு இருந்த பலன் இல்லாமல் போய்விட்டது. ஆகவே, அதற்கான நிதி வசதி அரசாங்கத்திடம் இல்லாவிட்டாலும் எல். ஐ. சி., வங்கிகள் மூலம் அல்லது வேறு ஏதாவது ஒரு வகையில் கடன் பெற்று, நடுத்தர வர்க்கத்தினருக்குப் பலன் தரும் அந்தத் திட்டத்தை மீண்டும் செயல் படுத்த நடவடிக்கை எடுக்க அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா?



மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, அந்தத் திட்டம் இதுவரையில் நிறுத்தப்படவில்லை; தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. உயர்ந்த சம்பளம் வாங்குகின்ற தொழிலாளர்கள் அவர்களாகவே வீடு கட்டிக் கொள்கிறார்கள். நடுத்தர வர்க்கத்தினருக்கு வீடு கட்டித்தருவ தற்கான பணம் கடனாக வேண்டுமென்று கேட்டால், வங்கிகளிலிருந்து பெற்றுத்தர அரசாங்கம் தயாராக இருக்கிறது.

*Employees of Transport Department*

* 260 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state whether there are proposals under the consideration of the Government to consider the transfer of employees between Transport Corporations and State Transport Department?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : போக்குவரத்துக் கழகங்களுக்கு மூகமையில் சென்றுள்ள தமிழ் நாடு அரசுப் போக்குவரத்துத் துறைப் பணியாளர்கள் அப்போக்குவரத்துக் கழகங்களிலேயே தொடர்ந்து பணி புரியவோ அல்லது தாய்த்துறைக்கு (தமிழ் நாடு அரசுப் போக்குவரத்துத் துறைக்குத்) திரும்பிவிடவோ விருப்பம் தெரிவிப்பதற்கான வாய்ப்பை அவர்களுக்கு அளிக்க அரசு கருதியுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இப்போது சர்க்கார் ட்ரான்ஸ் போர்ட்டிலிருந்த தொழிலாளர்கள் எல்லாம் பெரியார் ட்ரான்ஸ்போர்ட் அல்லது பல்லவன் போன்ற போக்குவரத்துக் கழகங்ககளுக்கு மாற்றப் பட்டிருக்கிறார்கள். அதனால் ஏற்கெனவே இருந்த உரிமை பறிபோய் இருக்கிறது என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதை பரிசீலனை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா? மேலும் அரசாங்க பஸ்கள் இங்கேயிருந்து கேரளாவுக்குப் போனால் அதற்கு தனி மரியாதை இருக்கிறது. ஆனால் பெரியார் அல்லது கட்டபொம்மன் போன்ற போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த பஸ்கள் போனால் அந்த மரியாதை இல்லை. ஆகவே, மற்ற மாநிலங்களுக்குச் செல்கின்ற பஸ்கள் அரசாங்க பஸ்களாக இருக்கவேண்டுமென்ற முறையில் ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அரசுத் துறை என்று சொல்லும்போது, அரசு போக்குவரத்து என்றாலும் அல்லது அரசால் நடத்தப்படுகின்ற போக்குவரத்து கழகங்கள் என்றாலும் ஒரே மாதிரிதான் நம்முடைய மாநிலத்தில் நடத்தப்படுகிறது. மற்ற மாநிலங் களிலும் வேறுபாடு எதுவும் காட்டப்படுவதாகத் தெரியவில்லை. அரசால் நடத்தப்படுகின்ற போக்குவரத்துக் கழகங்களாக இருப்பதால் அரசு போக்கு வரத்து தொழிலாளர்கள் அந்த கழகங்களிலும் இருக்கிறார்கள். அரசாங்க பஸ்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கும், போக்குவரத்துக் கழக பஸ்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கும் ஒரே சர்வீஸ்

கண்டிஷன்தான் இருக்கவேண்டுமென்ற முறையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அந்த பணி முறையிலும் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, பொதுவாக இந்த நிறுவனங்களில் வேலை செய்கின்ற ஊழியர்கள், தங்களுடைய பணி பாதுகாப்பு சரியாக இல்லை, உத்தியோக உயர்வு நிரந்தரமாக கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று சொல்கிறார்கள். அதுமட்டுமல்ல, அவர்களுக்கென்று கொடுக்கப்படுகிற பஞ்சப்படி போன்றவைகள் குறைவாக இருக்கிறது. அடுத்த ஸ்டேட்டுக்குப் போனால் கேரளாவில் அதிகப் படி கொடுக்கிறார்கள். அந்த மாதிரி இங்கே கொடுக்கப்படவில்லை. அதைப் போலவே இங்கும் அடுத்த ஸ்டேட்டுக்குப் போனால் கூடுதல் படி கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? இன்னொரு விஷயம். இங்கே ட்ரான்ஸ்போர்ட்டிலே புதிதாக ஒரு கழகம் அமைக்கப் போவதாக பேச்சு இருக்கிறது. அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் பொன்னப்ப நாடார் அவர்கள் தொழிற் சங்கங்களின் அனைத்துக் கோரிக்கைகளையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. ஆனால் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் எந்த போக்குவரத்துக் கழகத்தில் இருந்தாலும் அவர்களுக்கு எந்தவிதமான கஷ்டமும் கிடையாது. உண்மை நிலைமை என்னவென்றால் அரசாங்க நிர்வாகத்தில் இருக்கிற அதிகாரிகள் கெசட்டட் அந்தஸ்தில் இருக்கிறவர்களுக்கு கஷ்டம் இருக்கிறது. அவர்கள் கழகங்களுக்கு மாற்றப்படும்போது கெசட்டட் அந்தஸ்து போய்விடும். ஆகவே, தொழிலாளர்கள் தயாராக இருந்தாலும் அதிகாரிகள் தயக்கம் காட்டுகிறார்கள். தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் வேலை செய்யும் போக்குவரத்து கழகத்தோடு பேச்சு வார்த்தை நடத்தி, ஊதியம், அடிப்படைச் சம்பளம் போன்றவைகளில் தீர்வுகாண வழிவகை இருப்பதால் அவர்களுக்கு சங்கடம் எதுவும் இல்லை. ஆனால் அரசாங்க அதிகாரிகளுக்கு கெசட்டட் அந்தஸ்து போய்விடும் என்பதால் அவர்கள் தயக்கம் காட்டுகிறார்கள், அதுவும் சரியாகப் போய்விடும் என்று கருதுகிறேன்.

நீண்டதூர போக்குவரத்தைப் பொறுத்தவரையில் இப்போது அரசு போக்குவரத்து இருக்கிறது. அதில் இப்போது சில சிரமங்கள் இருப்பதால் நிர்வாக சீர்திருத்தம் என்ற அடிப்படையில் அதை ஒரு தனி நிர்வாகமாக ஆக்குவது பற்றி ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. அநேகமாக இந்த சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே அரசு அதுபற்றி முடிவு செய்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, அரசு போக்குவரத்துத் துறையில் பணியாற்றுகின்ற டிரைவர்களை, கேரளாவில் உள்ளதைப்போல அவரவர்களுடைய சர்வீசைப் பொறுத்து கிரேடு 1, கிரேடு 2 என்று பிரித்து, அதற்குத் தகுந்த ஊதியம் வழங்குவது பற்றி அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கேரளத்தில் எப்படி இருக்கிறது என்ற விபரம் இல்லை. இருந்தாலும் கூட அண்மையில் நான் ஜப்பான் நாட்டுக்குச் சென்றிருந்தேன். அங்கே தொழிலாளர்களுக்கு "லைஃப் டைம் ஸ்கேல்" தருகிறார்கள். வாழ்க்கை முழுவதும் படிப்படியாக அவர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டு வருகிறது. பதவி உயர்வுக்கான இடம் காலியாகும்போது பதவி உயர்வு தரப்படுகிறது. இல்லை என்றால் தொடர்ந்து சம்பள உயர்வு கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். நம்முடைய போக்குவரத்துத் துறை தொழிலாளர்களுக்கும் அதே முறையில் "லைஃப் டைம் ஸ்கேல்" கொடுக்கும் முறையை உருவாக்குமாறு ஏற்கெனவே அரசு சொல்லி, அந்தத் திட்டத்தை செயல்படுத்தும் முயற்சியில் நிர்வாகத்தினர் ஈடுபட்டிருக்கிறார்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கும், அரசு போக்குவரத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கும் சம்பளத்தில் வித்தியாசம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதை ஒரே நிலைப்படுத்தி, எல்லோருக்கும் ஒரே சீரான சம்பளம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர்களே, அரசு ஆவன செய்யும்.

திரு. எம். சுரேந்திரன் : சார், நம்முடைய போக்குவரத்து கழக ஊழியர்களும், அரசு போக்குவரத்து ஊழியர்களும் கேரளா, மைசூர் போன்ற அண்டை மாநிலங்களுக்கு சென்று வருவதால், அங்கே இருக்கிற டிரைவர், கண்டக்டர்கள் சம்பளத்தோடு தங்களுடைய சம்பளத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. மற்ற மாநிலங்களில் சம்பளம் அதிகமாக இருப்பதாகவும், நம்முடைய மாநிலத்தில் குறைவாக இருப்பதாகவும் அவர்கள் புகார் சொல்கின்றார்கள். அந்த புகாரை நிவர்த்திக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அத்தகைய புகார் எதுவும் இல்லை. தொழிலாளர்களுக்கு கிடைக்கின்ற பணம் என்று பார்க்கின்றபோது வெறும் சம்பளத்தை மட்டும் பார்க்க கூடாது. அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற சலுகைகள், போனஸ் போன்ற எல்லாவற்றையும் சேர்த்து கணக்கிட வேண்டும். அப்படிப் பார்க்கிறபோது மற்ற மாநிலங்களைவிட நம்முடைய மாநிலத்தில் குறைவாக இல்லை.

திரு. ஏ. ஆர். சுப்பையா : சார், ஹோல்டிங் கம்பெனி ஒன்று நிறுவப்போவதாக தகவல் கொடுக்கப்பட்டது. அது உடனடியாக நிறுவப்படுமா அல்லது காலதாமதம் ஏற்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய ஏற்பாடு எதுவும் இப்போது இல்லை.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : தலைவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் பலர் சென்னையில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலும், அரசு போக்குவரத்துத் துறையிலும் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய சொந்த மாவட்டத்திற்குச் செல்ல மனு கொடுத்திருக்கிறார்கள். அவர்களை கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உடனடியாக மாற்றும் வாய்ப்பு இல்லாவிட்டாலும் தென் மாவட்டங்களில் இருக்கும் போக்குவரத்துக் கழகங்களுக்கு மாற்றி அவர்களுடைய வாழ்க்கையை வளப்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த யோசனை கருத்திற்கொள்ளப்படும்.

### *Travel concessions for blind*

*261 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether it is a fact that the Government propose to give concessional travel facilities in State buses in the city of Madras for the blind; and

(b) if so the details thereof?

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : (அ)&(இ) குருடர்களும் உடலுறுப்பை இழந்தவர்களும் சென்னை மாநகரிலும் அதைச்சுற்றி 15 மைல் வரையிலும் தங்களுடைய குறைபாடுகளுக்குச் சிகிச்சை பெறும் காலத்தில் அரசுப் பேருந்துகளில் ஒரு நாளில் 2 முறை பயணம் செய்ய அவர்களுக்கு மாதாந்திர இலவசப் பயணச்சீட்டுகள் வழங்கப்படுகின்றன. மருத்துவச் சான்றிதழையும் மருத்துவ மனைச்சீட்டையும் காட்டுவதன் பேரில் இவை வழங்கப்படுகின்றன.

<u>திரு. என். கே. பழனிசாமி</u> : குருடர்களைக் கூட்டிக்கொண்டு வர ஒரு ஆள் தேவையிருக்கிறது. அவர்களுக்கும் இந்தச் சலுகை அளிக்கப்படுமா ?

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

<u>திரு. பெ. சீனிவாசன்</u> : அந்தத் திட்டம் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில்தான் இந்தத் திட்டம் இருக்கிறது.



### *Khadi Emporium, Madurai*

*262 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether the Khadi Emporium at Madurai has started functioning; and

(b) if so, the details thereof?

<u>மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்</u> : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

<u>திரு. எம். தேவராசன்</u> : மதுரையில் கதர் விற்பனை நிலையம் ஏற்படுத்த கதர் வாரியம் ஒரு இடத்தை வாங்கியுள்ளதாகத் தெரிகிறதே, என்ன விலையில் வாங்கப்பட்டது ? அந்த இடத்திற்கு வரலாற்று முக்கியத்துவம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்</u> : மதுரை மேலமாசித் தெரு 271—எ என்ற கட்டிடத்தை கதர் வாரியம் வாங்கியுள்ளது. அந்தக் கட்டிடத்தை வாங்குவதற்கு ரூ.1·31 லட்சமும், அதைப் புதுப்பித்து செப்பனிட ரூ.1·69 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. மகாத்மா காந்தி அவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்தபோது அந்த இடத்தில்தான் முதன் முதலில் அரை ஆடை அணிவதற்கு முடிவு செய்தார் என்கிற வரலாற்று அடிப்படையில் அதை அந்த நினைவுச் சின்னமாக ஆக்கவேண்டுமென்ற முறையில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

<u>திரு. கே. டி. கே. தங்கமணி</u> : வருபவர்கள் வந்து பார்த்துச் செல்வதற்குரிய இடமாக அதை அமைக்கப்போகிறார்களா ? அல்லது அங்கே கதர் போன்ற பொருள்களை விற்பனை செய்வதற்கும் அந்த இடத்தில் ஏற்பாடு செய்யப்போகிறார்களா ?

<u>மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்</u> : அந்தக் கட்டிடத்தின் முகப்புப் பகுதியில் ஏற்பட்டிருக்கிற பழுதுகளை மாத்திரம் செப்பனிடுவதற்கும், அந்தக் கட்டிடத்தின் பின் பகுதியை மாற்றி கட்டி அங்கே கதர் விற்பனை நிலையத்தை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

### <u>கைக்குத்தல் அரிசி நிலையங்கள்.</u>

*263.—வினா : <u>திரு. பெ. சௌந்தரபாண்டியன்</u> : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1973 டிசம்பர் மாதத்தில் கதர் கிராமத் தொழில்கள் கமிஷனுக்கு போதிய நெல், மாநில அரசு, வழங்காத காரணத்தால் கைக்குத்தல் அரிசித் தயாரிப்பு நிலையங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அங்கு உற்பத்தியாகும் கைக்குத்தல் அரிசி எவ்வாறு வினியோகம் செய்யப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கூட்டுறவு சங்கங்களின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு, கூட்டுறவு சங்கங்களின் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. அது அல்லாமல் கிராம கைத்தொழில் வாரியத்தின் விற்பனை நிலையங்களின் மூலமாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

திரு. எம். சுரேந்திரன் : இந்தக் கைக்குத்தல் அரிசி நிலையங்கள் ஒரு சந்தர்ப்பத்தில் வளர்வதைப்போன்ற தோற்றம் இருந்தது. இப்போது படிப்படியாகத் குறைந்து உயிரை வைத்துக்கொள்வதற்குக் கூட முடியாத தோற்றம் இருக்கிறதே, அதற்குக் காரணம் என்ன ? இவை சிறந்த முறையில் வளர்வதற்கு அரசாங்கம் ஏற்படுமா செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அப்படிப்பட்ட நிலைமை கிடையாது. ஏற்கனவே இருந்த சங்கங்களின் எண்ணிக்கை இப்போது அதிகமாகியிருக்கிறது. மேலும் அந்தச் சங்கங்களே 73, 74-ஆம் ஆண்டுகளில் வெளியே நெல்லைக் கொள்முதல் செய்துகொள்வதற்கும் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சங்கங்கள் வளர்ந்தே வருகின்றன.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : அந்தச் சங்கங்களுக்கு போதிய நெல் கொடுப்பதாகச் சொன்னார்கள். திருப்பூரில் இருக்கிற நிலையத்திற்கு நெல் கிடைக்கவில்லை. கைக்குத்தல் அரிசியில் பி1 சத்து இருக்கிறது. இது நரம்பு வியாதிகளுக்கு மிகவும் தேவையாக இருப்பதால் கைக்குத்தல் அரிசியை சாப்பிடச் சொல்லி டாக்டர்களும் அட்வைஸ் செய்கிறார்கள். ஆகவே கூடுதலாக கைக்குத்தல் அரிசி மக்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : திருப்பூர் பகுதியைப்பற்றிச் சொன்னார்கள். அதுபற்றி குறிப்பு இல்லை. ஆயினும் பரவலாக எல்லா இடங்களிலும் உள்ள மக்களுக்கு கைக்குத்தல் அரிசி கிடைக்க வேண்டுமென்றுதான் அங்கங்கே இந்தக் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்த



லாம் என்ற விதிமுறைகளை வைத்திருக்கிறோம். எந்தப் பகுதியில் மக்கள் விரும்புகிறார்களோ அந்தப் பகுதியில் கதர்வாரியத்தின் மூலம் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க ஏற்பாடு செய்யப்படும்.

## சேலம் மாவட்டத்தில் அரிசனங்களுக்கு வீட்டுமனைகள்.

*264 வினா.—திரு. வ. முத்து : மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரிசனங்களுக்காக சேலம் மாவட்டத்திற்கு வீட்டு மனைக்காக நடப்பு ஆண்டில் ஒதுக்கிய தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ந. இராசாங்கம் : ரூபாய் 1.50 லட்சம்.

*265 வினா.—திரு. வ. முத்து : மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டத்தில் தாழ்த்தப்பட்டோர் வீடு கட்டும் கழகத்தின் சார்பாக தற்போது எந்த எந்த இடங்களில் வீடுகள் கட்டப்படவிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ந. இராசாங்கம் : சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டத்தில், உஞ்சனை கிராமத்தில் வீடுகள் கட்டும் பணியை தனது முதல் கட்ட திட்டத்தில் அரிசன வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் மேற்கொண்டுள்ளது.

திரு. வ. முத்து : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திற்கு வீட்டு மனைக்காக ஒதுக்கிய தொகை போதாது என்று சொல்லப்படுகிறது. அதை அரசு அதிகப்படுத்த ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ந. இராசாங்கம் : ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இவ்வளவு வீடுகள் என்பதாக முன்கூட்டியே தீர்மானித்து விடுகிறார்கள். அந்த வீடுகளுக்கான தொகை ஒதுக்கப்பட்டுவிடுகிறது. சேலம் மாவட்டம் மட்டுமல்ல—ஒவ்வொரு மாவட்டத்திலும் இன்னும் அதிகம் வேண்டுமென்றுதான் கேட்கிறார்கள். இவை முடிந்தபின் அதையும் பரிசீலிக்கலாம்.

திரு. வ. முத்து : திருச்செங்கோடு உஞ்சனை கிராமத்தில் அரிசனங்களுக்காகக் கட்டப்படுகிற வீடுகள் எத்தனை ? அதன் மதிப்பு என்ன ?

மாண்புமிகு திரு. ந. இராசாங்கம் : திருச்செங்கோடு உஞ்சனை கிராமத்தில் 81 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : பலயிடங்களில் வீடுகள் கட்டுகிற திட்டத்தின் கீழ் அங்குள்ளவர்கள் 500 ரூபாய் கொடுக்கவேண்டுமென்று சொல்லப் படுகிறது, அப்படிக் கொடுக்க முடியாதவர்களுக்கு வீடுகள் கட்ட முடியாத நிலை இருக்கிறதே, அதுபோல அவர்களிடம் கேட்காது வீடுகளை கட்டித்தர ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ந. இராசாங்கம் : அந்த எண்ணம் நல்ல எண்ணம். 3 சென்ட் நிலம் என்கிறபோது இடம் அதிகமாக உள்ளதால் பேஸ்மெண்டு போடும்போது நாம் ஒதுக்குகிற ரூ. 3,000-க்கும் மேலாக கொஞ்சம் அதிக இடம் வேண்டும் என்று விரும்புகிறவர்கள் 500 ரூபாய் கொடுத்தால் அதற்குத் தகுந்தபடி கொஞ்சம் அதிகமாக கட்டித்தருகிறார்கள். 500 ரூபாய் கட்ட முடியவில்லை என்றால் இந்த 3,000-த்திற்குள் கட்டித் தருகிறார்கள். ரூ. 500 கட்டவில்லை என்றால் கட்டித்தர முடியாது என்று சொல்வதில்லை.

திரு. தி. பொன்னுமலை : சேலம் மாவட்டத்தில் அரிசனங்களுக்கு மனைக்கட்டு வழங்க நாம் நிலத்தை எடுத்தால் அவர்கள் கோர்ட்டுக்குப் போய்விடுகிறார்கள். அந்த கேஸ் முடிய ஐந்தாறு ஆண்டுகள் ஆகின்றன. திரும்பவும் எடுத்தால் ஐந்தாறு ஆண்டுகள் ஆகின்றன. இதுபோன்று பல கிராமங்களில் நடைபெறுவதால் நிலம் கொடுக்க முடியவில்லை. கோர்ட்டுக்குப் போக முடியாத அளவுக்கு நிலத்தை எடுத்து உடனடியாகக் கொடுக்க ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ந. இராசாங்கம் : எந்த கிராமம் என்று சொன்னால் நல்லது. இதுபோல எல்லா இடங்களிலும் இல்லை. மேலும் மக்களின் நன்மைக்காக ஒரு காரியம் செய்கிறபோது கோர்ட்டுக்குப்போனால் இதுபோன்ற வழக்குகளில் 6 மாதங்களுக்குள் தீர்ப்புகள் வழங்கவேண்டுமென்று நீதிமன்றங்களுக்கு அரசாங்கம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது. அதிக நாள் ஆவதைத் தடுக்கத்தான் அரசாங்கம் விரும்புகிறது.

திரு. எம். சுரேந்திரன் : அரிசனங்களுக்கு வீடுகட்டும் திட்டத்தின்கீழ் நாம் 1 லட்சம் வீடுகள் என்று நிர்ணயித்துக் கொண்டிருக்கிறோம். இதுபோல ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இவ்வளவு வீடுகள் என்று முன் கூட்டியே நிர்ணயித்துக்கொண்டு அந்த மாவட்டத்தில் கட்டப்பட இருக்கிற வீடுகளையும் எந்தப் பகுதியில் அதிக சிரமத்துடன் அரிசன மக்கள் வாழ்கிறார்கள், எந்த எந்தப் பகுதியில் கொஞ்சம் சுமாரான வசதியுடன் வாழ்கிறார்கள் என்பதைக் கண்டு அதிக சிரமத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிற பகுதியில் முதற்படியாக வீடுகள் கட்டித்தருவது, அதற்கு அடுத்த நிலையில் உள்ளவர்களுக்கு அதற்கு அப்புறம் கட்டித் தருவது என்கிற முறையில் அரசாங்கம் சிந்திக்குமா?

மாண்புமிகு திரு. ந. இராசாங்கம் : இந்தக் கருத்தை அனுசரித்துத்தான் இப்போது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மாவட்டத்தில் உள்ள அரிசன மக்களின் தொகைக்கேற்றவாறு முன்கூட்டியே வீடுகள் நிர்ணயிக்கப்படுகிறது. அதுவும் மிகவும் சிரமமான பகுதியில் உள்ளவர்களுக்கு முதலில் கட்டிக் கொடுக்கவும் வசதி செய்யப்படுகிறது.



திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் அரிசன மக்களின் மனைகளுக்காக நடப்பாண்டில் ஒதுக்கப்பட்ட தொகையில் இதுவரையில் எவ்வளவு செலவழிக்கப்பட்டிருக்கிறது ? ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கப்படுகின்ற தொகையில் ஒரு பகுதியை செலவு செய்யாமல் அரசுக்கு திருப்பிவிடப்படுகிறதே, இதற்குக் என்ன காரணம்? இந்தக் குறையை நிவர்த்திக்க ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ந. இராசாங்கம் : அந்தக் குறை நல்ல காலம் இல்லை. வீடு கட்டுவதற்கு ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டது என்றால், அதுவே போதவில்லை. மூன்று மாதங்களுக்கு முன்பு கூட மந்திரி சபைக் கூட்டம் கூடி வேறு ஓர் இனத்திலுள்ள 33 லட்சம் ரூபாயை இதற்கு ஒதுக்கி வேகமாக நடவடிக்கை எடுக்க முடிவு எடுக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. செபமாலை : தலைவர் அவர்களே, சில மாவட்டங்களில் அரிசன மக்களுக்காக இந்த வாரியத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கு அதிகாரிகளே சென்று இடத்தை ஆய்வு செய்கிறார்கள். அப்படி நடக்கும் போது பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. இடத்தை செலக்ஷன் செய்யும் போது பொது மக்களுக்குப் பல தொந்தரவுகளை அதிகாரிகள் செய்கிறார்கள். அப்படி நடப்பது அமைச்சருக்குத் தெரியுமா? இதைத் தடுப்பதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. ந. இராசாங்கம் : தலைவர் அவர்களே, அதிகாரிகளே போய் தேர்ந்தெடுக்க முடியாது. என்னென்ன இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கான பட்டியல் அவர்கள் கையில் இருக்கிறது. அந்தப் பட்டியலை வைத்துக் கொண்டு அவர்கள் அந்தந்த இடங்களை எடுக்கிறார்கள்.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, கோவையில் அரிசன மக்களுக்கு 1966-லிருந்து வீட்டு மனைகளை கொடுக்கப்படவில்லை. அங்கு வீட்டு மனைகள் அதிக விலையாக இருப்பதால் அதிகத் தொகை ஒதுக்கித் தருமாறு கவர்ன்மெண்டைக் கேட்டிருக்கிறார்கள். கவர்ன்மெண்டிலிருந்து இன்னமும் பதில் வரவில்லை. ஆகவே, உடனடியாக அதிகத் தொகை ஒதுக்கி வீடு கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. இராசாங்கம் : வீடுகள் சம்பந்தமாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டதில் அந்தப் பணிகள் நடந்து முடியும் தருவாயில் இருக்கின்றன. மனைக்கட்டு சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார் என்று நினைக்கிறேன். அதில் கொஞ்சம் தாமதம் ஏற்படுவது உண்மை. இந்த ஆண்டில்கூட 6 லட்சம் ரூபாய் இரண்டு மாதங்களுக்கு முன்னால் கொடுத்து பெண்டிங் பேமெண்ட் கேஸ்களில் கொடுத்து, ஆர்ஜிதம் செய்ய உத்தரவு பிறப்பித்திருக்கிறோம். அந்த வேலையையும் விரைவு படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார் ஹரிஜனங்களுக்கு வீடு கட்டுகின்ற முறையில் 'பிரிபேப்ரிக்கேட்டெட்' முறையை உபயோகித்து சீக்கிரமாக அவர்களுக்கு வீடு கட்டுவதற்கு ஏதாவது ஆலோசனை உண்டா? இல்லையென்றால் அது பற்றி ஆலோசிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ந. இராசாங்கம் : அந்தத் திட்டம் இல்லை.

திரு. பி. பழனிவேலு : தலைவர் அவர்களே, நிலங்கள் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. நீண்ட காலம் ஆகி விடுகிறது. கிடைக்கக் கூடிய நிலத்திலும் ஒரு குடும்பத்திற்கு 3 செண்ட் கொடுப்பதானால் அதிகப் பேர்களுக்குக் கொடுக்க முடிவதில்லை. ஆகவே, 2 செண்ட் வீதமாவது கொடுத்து அதிகமான பேர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க முடியுமா?

மாண்புமிகு திரு. ந. இராசாங்கம் : தலைவர் அவர்களே, சில இடங்களில் 5 செண்ட் கூட கொடுக்கப்பட்டிருக்கிறது. தஞ்சையிலே 2 செண்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏழெட்டு பேர்கள் உள்ள ஒரு குடும்பத்திற்கு 3 செண்டு கொடுக்கபடுமானால், 2, 3 வருஷங்களில் 12, 13 பேர்கள் அந்தக் குடும்பத்தில் ஆகிவிடுகிறது. 2 செண்ட் என்று கொடுத்தால் எதிர் காலத்தில் ரொம்ப பாதிக்கப்படுவார்கள்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, குடி இருப்பு மனைகளுக்கு நில ஆர்ஜிதம் செய்யும்போது காலதாமதம் ஆவதற்குக் காரணம் லாண்ட் அக்விசிஷன் ஆக்ட் தான். அதிலுள்ள ரூல் களினால் 6 மாதம், ஒரு வருஷம் 2, வருஷம் காலதாமதம் ஆகிறது. ஆகவே, லாண்ட் அக்விசிஷன் ஆக்டையும், அதிலுள்ள ரூலையும் மாற்றுவதற்கு அரசு ஏதாவது ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு ந. இராசாங்கம் : தலைவர் அவர்களே, இது வெள்ளையர் போட்ட சட்டம். இந்தச் சட்டங்களை மாற்றவேண்டியது அவசியம்தான் ஆனால் பொது நலனை உத்தேசித்து யாருடைய நிலமாக இருந்தாலும் அதை எடுத்துக் கொள்ளுகிறபோது அவர்களைக் கோர்ட்டுக்குப் போகாமல் தடுப்பதற்கு இந்தச் சட்டத்தில் வகை இல்லை. ஆகவே, எல்லாவற்றையும் சேர்த்து ஆலோசிக்கலாம்.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படுகிறபோது, குடும்ப நலத் திட்டத்தின் கீழ் யார் வருகிறார்களோ அவர்களுக்குத்தான் வீடுகள் ஒதுக்கப்படும் என்பதாக ஒன்றியத்தின் மூலம் சொல்கிறார்கள். இது அரசினரின் கவனத்திற்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ந. இராசாங்கம் : தலைவர் அவர்களே, இந்த நிலை காதில் கூட விழவில்லை. அப்படி யாரும் சொன்னதாகக் கூட கேட்டதில்லை. இது விசித்திரமாக இருக்கிறது. எந்த இடத்தில் அந்த மாதிரி சொல்லப்படுகிறது என்பதைத் தெரிவித்தால், நடவடிக்கை எடுக்கப்படும்.



(திரு. துரை கோவிந்தராசன் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி ஏதாவது இருந்தால், மந்திரியிடம் எழுதிக் கொடுங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக் குப்பம்) : நண்பர் ஜெபமாலை கேட்கும்போதுகூட சில சங்கடங்கள் இருப்பதாகத் தெரிவித்தார். என்ன சங்கடம்? அதிகாரிகளே, அந்தந்த இடத்தில் கட்டப்படுகின்ற வீடுகளை ஒதுக்கிக் கொடுக்கின்ற பொறுப்பில் இருக்கின்ற காரணத்தினால் தவறு செய்கிறார்கள். அந்தத் தவறு ஏற்படாமல் இருக்க என்ன திட்டத்தை வைத்து இருக்கிறார்? அமைச்சர் என்னிடத்தில் பேசுகின்ற நேரத்தில் "கட்டப்படுகின்ற வீடுகள் எம்.எல்.ஏ. சிபாரிசுகளின் அடிப்படையில் ஒதுக்கப்படும்" என்று சொன்னார்கள். அதை நடைமுறையில் ஏற்றுக்கொண்டார்களா?

மாண்புமிகு திரு. ந. இராசாங்கம் : தலைவர் அவர்களே முதலில் கட்டப்பட்ட வீடுகளைப் பற்றி ஏற்கெனவே முடிவு செய்யப்பட்ட ஒன்று. இரண்டாவது கட்டமாக கட்டப்படக்கூடிய வீடுகளுக்குத்தான் முழுமையாகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறேன். இந்த வீடுகள் கட்டப்பட்டவுடன் அந்த, அந்த இடத்தில் அந்த அந்தச் சட்டமன்ற உறுப்பினர் சிபாரிசின் பேரில் அந்த வீடுகள் ஒதுக்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன் : ஹரிஜனங்களுக்கு வீட்டு நிலம் ஆர்ஜிதம் செய்வதற்காக எடுத்துக் கொள்ளப்படுகிற இடங்களைப் பற்றி இந்தச் சபையில் பேசப்பட்டது. ஆர்ஜிதம் செய்ததற்குப் பின்னால் அதை எடுத்துக் கொள்வதில்லை. எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களுடைய நிலமாக இருக்கிறதோ அந்த வகுப்பார் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்த அதை விட்டுவிடுகிறார்கள். அரசியல் செல்வாக்குக்கு உட்படாது அரசாங்கம் உறுதியாக நின்று ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்தையே அரிசனங்களுக்கு வாங்கித்தர முன்வருமா?

மாண்புமிகு திரு. ந. இராசாங்கம் : உறுப்பினர்கள் எல்லோரும் நல்ல எண்ணம் உள்ளவர்கள். அதையும் மறுத்துக்கூற விரும்பவில்லை. சில இடங்களில் அதுபோல பல உறுப்பினர்கள் வந்து சொல்கிறார்கள். வேறு இடம் பார்த்துக் கொடுக்கிறோம் என்றும் சொல்கிறார்கள். எல்லாக் கட்சியிலும் இதுபோல் இருந்து செய்கிறார்கள். அதை மாற்றுவதற்கு இல்லை. இருந்தாலும் யார் சொன்னாலும் அதை மனதில் வைத்துக் கொண்டு வேகமாகத்தான் காரியங்கள் செய்யப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி* இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

(முற்பகல் 10.00)

திரு. கே. டி. கே. தங்கமணி எழுந்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் அறிக்கையை சபைக்கு அளிக்கட்டுமே.

THIRU K. T. K. TANGAMANI: Sir, on a point of order, I want to make a submission. Last week, you were pleased to tell us that your ruling on the point of order would be given to us. We were waiting for it, but on Saturday, you were not here. We would like to know if you would be giving your ruling today.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் நாளைக்குச் சொல்கிறேன்.

(2) அறிக்கை அளித்தல்.

சட்ட விதிகள் ஆய்வுக்குழுவின் ஆறாவது, ஏழாவது அறிக்கைகள்.

THIRU N. GANAPATHY: Mr. Speaker, Sir, I rise to present the Sixth and Seventh Reports (Fifth Assembly) of the Committee on Delegated Legislation.

(3) நடைமுறைக் கேள்விகள்.

(அ) டில்லியில் நடந்த மாநில முதலமைச்சர்கள், உணவு அமைச்சர்கள் மாநாடு குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். சென்ற இரண்டு தினங்களாக டில்லியிலே மாநில முதலமைச்சர்களின் மாநில உணவு அமைச்சர்களின் மாநாடு நடைபெற்றது. நமது மாநிலத்தில் ஏற்பட்டிருக்கிற உணவுப் பிரச்சினை சம்பந்தமாக ஏற்கெனவே நமது டில்லி சர்க்காரிடத்திலே கூடுதல் உணவு கேட்டுக் கொண்டிருக்கிறோம். நமது மாநிலத்தின் முதலமைச்சரவர்களோ உணவு அமைச்சரோ போய் நமது கோரிக்கையை வலியுறுத்தாததற்கு காரணம் என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. முக்கியமான விஷயமாக இருந்தால் உங்கள் தலைவர் பேசுவார். பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்ற தலைப்பை வைத்துக் கொண்டு உறுப்பினர்கள் எந்த நேரத்திலும் எதை வேண்டுமானாலும் சொல்லலாம் என்று இதைப் பயன்படுத்தினால் அது நல்ல முறையல்ல. இது பாயிண்ட் ஆஃப் ஆர்டரில் வராது.

(ஆ) அரிசன நல அமைச்சர் சபைக்குத் தவறான தகவல் அளித்ததாகக் கூறி எழுப்பப்பட்ட பிரச்சினை.

திரு. பெ. சௌந்திரபாண்டியன்: தலைவரவர்களே, மாண்புமிகு அரிசன நல அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது 10 ஆண்டுகளில் அரிஜனங்கள் வீட்டு மனைக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் எந்தத் தொகையும் திரும்ப அரசுக்கு வரவில்லை என்றார். நான் அரிசன நலக் குழுவில் இருந்தபோது இப்பேர்ப்பட்ட புகார்கள் வந்தன.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயிண்ட் ஆஃப் ஆர்டரில் வராது. பிரிவிலெஜ்ஜாகக் கொண்டு வாருங்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்தச் சபைக்கு நிறைய தவறான தகவல்கள் அடிக்கடி வந்து கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தவறான தகவல்கள் என்றால் நீங்கள் சொல்வது எனக்குத் திருப்தி படவேண்டும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: நான் ரிகார்டுகளைப் பார்த்துச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவரிடம் அதைக் கொடுங்கள். நான் பார்க்க வேண்டும். நீங்கள் எழுதிக் கொடுங்கள். நாளைக்கு எழுதிக் கொடுங்கள். அப்படி தவறான தகவல் இருக்கிறதென்றால் பிரிவிலெஜ் கிளப்புங்கள்.

புலவர் பழனிச்சாமி அவர்கள் தொடர்ந்து பேசுவார். 5 நிமிஷத்தில் முடித்து விடுங்கள்.

(4) 1975–76-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

புலவர் சி. பழனிச்சாமி: பேரவைத் தலைவரவர்களே, லெவி கொள்முதல் செய்வதில் பெரிய நில முதலாளிகளுக்கு சலுகை வழங்கப்படுவதாக எனது பகுதியில் இருக்கிற விவசாயிகள் புகார் சொல்லியிருக்கிறார்கள். அம்மாதிரியான........

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ரிப்போர்ட்டை சப்மிட் பண்ணியாச்சு. நீங்கள் திரு. பொம்மனோடு பேசிக் கொண்டிருந்தீர்கள், கவனிக்கவில்லை.

புலவர் சி. பழனிச்சாமி: அப்படிக் கொள்முதல் செய்வதில் பெரிய முதலாளிகளுக்கு சலுகைகள் செய்வதாக, அதற்கு ஆங்காங்கு இருக்கிற கணக்குப் பிள்ளைகள்தான் காரணம் என்று சொல்கிறார்கள். லெவி கொள்முதல் செய்வதிலே இந்தக் கணக்குப்பிள்ளைகள் ஈடுபடாமல் இருப்பது நல்லது என்று நான் சொல்லிக் கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் யார் யாருக்கு எவ்வளவு நிலங்கள் இருக்கிறதோ அந்த நிலங்களிலிருந்து யார் யாரிடமிருந்து எவ்வளவு நெல் கொள்முதல் செய்யப்பட்டது என்ற விவரத்தை ஒரு அறிக்கையாக வெளியிட்டு ஆங்காங்குள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலேயும், தாலுகா அலுவலகங்களிலேயும் பொது மக்கள் பார்வைக்கு வைக்கவேண்டுமென்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

(புலவர் சி. பழனிச்சாமி) [1975 மார்ச் 10

அது மட்டுமல்லாமல், மிகக் குறைந்த அளவு, அதாவது ஒரு ஏக்கர், அதற்குக் குறைந்துள்ள நில உடமையாளர்களிடம் கொள் முதல் செய்ய வேண்டாமென்று மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், இந்த மனு நீதிநாள் நடப்பதைப்பற்றி ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். மனு நீதி நாளிலே விவசாயி கொடுக்கிற கோரிக்கைகளுக்கு அவ்வப்போது தீர்வு காணப்படுகிறதென்று சொல்கிறார்கள். ஆனால் நடைமுறையில் 3 ஆண்டுகளுக்கு முன்பு கொடுத்த மனுக்களில் கூட இன்னும் தீர்வு காணப்படாமல் இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் என்னுடைய ஊரில் லட்சுமணன் என்ற விவசாயிக்கு அவருடைய நஞ்சை நிலம் 50 ஆண்டுகளாக நஞ்சை நிலமாக இருக்கிறது. அந்த நஞ்சை நிலத்தை இடையில் சர்வே செய்தவர்கள் புஞ்சை நிலமாக மாற்றி விட்டார்கள். அவருடைய நிலத்திற்கு நான்கு திசைகளிலும் இருக்கிற நிலங்களெல்லாம் நஞ்சை நிலம ா க இருக்கிற போது இந்த ஒரு நிலத்தை மட்டும் புஞ்சை நிலமாக எப்படி மாற்றினார்கள் என்று தெரியவில்லை. இதை மீண்டும் நஞ்சை நிலமாக மாற்றித்தர வேண்டுமென்று 3 ஆண்டுகளுக்கு முன்பு மனு நீதி நாளில் மனு கொடுத்து அது இன்னும் தீர்வு காணப்படாமல் இருக்கிறது. ஆகவே, அந்த விவசாயிக்கு பாதுகாப்பு கொடுக்கக் கூடிய முறையிலே அந்த நிலத்தை மீண்டும் நஞ்சை நிலமாக அவருக்கு புஞ்சை நிலத்திற்குரிய நீர் வரியை கட்டாத அளவிற்கு, மாற்றிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், என் பகுதியில் இருக்கிற தேவநாயக்கன் குளத்திற்கு நீர் மட்டம் கட்டித்தர வேண்டுமென்று மனு நீதி நாளிலே மனு கொடுக்கப்பட்டது. இன்னும் நீர் மட்டம் கட்டி முடிக்கப்படாமல் இருக்கிறது. இப்படி நீண்ட காலமாக மனு நீதி நாட்களில் கொடுக்கப்பட்ட மனுக்கள் தீர்வு காணப்படாமல் இருக்கிற நிலையை மாற்றி, அவ்வப்போது உடனடியாகத் தீர்வு செய்து விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த இந்த நிதி நிலை அறிக்கையானது சமதர்ம மணம் வீசுகிற, ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்யக் கூடிய நிதிநிலை அறிக்கை என்று பாராட்டி, வரவேற்று, எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். பெருமாள்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் மார்ச் 1-ஆம் நாள் இந்த மாமன்றத்திற்கு வழங்கிய 1975-76-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை எனது கட்சியின் சார்பாக மனப்பூர்வமாக வரவேற்று ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையை தயாரிக்கிற போது 5 குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று, திட்டப் பணிகள், இரண்டு, திட்டத்திற்கு அப்பாற்பட்ட பணிகள், மூன்று, வறட்சி நிவாரணப் பணிகள், நான்கு, சமூக நல சிறப்புப்



1975 மார்ச் 10] [திரு. ஏ. ஆர். பெருமாள்]

பணிகள், ஐந்து, சமதர்ம சமுதாய அமைப்புப் பணிகள், ஆக, இந்த பஞ்ச நோக்கங்களைக் கொண்டு இந்த நிதி நிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. பஞ்ச நோக்கங்கள் என்று நான் குறிப்பிடுவது, ஐந்து என்பதற்காகத் தான். பஞ்சம் ஏற்பட்டிருக்கிற காரணத்தினால் அந்த நோக்கத்தை அடிப்படையாக வைத்து அல்ல. ஐந்து நோக்கங்களை குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதி நிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், இந்த அறிக்கையின் மீது நடத்தப்பட்ட விவாதங்களிலேயெல்லாம், இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னால் இந்த 8 ஆண்டு காலத்தில் இந்த தமிழகத்திற்கும், தமிழ்ச் சமுதாய மக்களுக்கும் எடுத்துக் கொண்ட முன்னேற்றகரமான நடவடிக்கைகள் குறித்து, எடுத்துக்கொண்ட முற்போக்கான திட்டங்கள் குறித்து அதற்காக வாதாடியவர்கள் எடுத்துச் சொன்னார்களாவென்றால் அநேகமாக சொல்லவில்லை என்று தான் சொல்லவேண்டும். காரணம், ஜனநாயக நாடுகளில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று இருக்கிற போது, ஆளும் கட்சி செய்த அரும் பெரும் சாதனைகளை எதிர்க் கட்சி வரிசையில் இருப்பவர்கள் சொல்ல மாட்டார்கள். ஆளும் கட்சி செய்யத் தவறிய காரியங்களை, செய்து விட்ட குறைகளை மட்டும் பெரிதாக எடுத்துச் சொல்லி, தங்களுக்கு ஆதரவாக மக்களைத் திருப்புகிற பணியை எதிர்க்கட்சிகள் ஒவ்வொரு நாட்டிலும் செய்கின்றன. அந்த மரபை ஒட்டியே, இங்கு எடுத்து நிறைவேற்றப்பட்ட பெரிய காரியங்களையெல்லாம் ஞாபக மறதியாலோ சொல்லாமல் விட்டு விட்டு, குறைபாடுகளை மட்டும் சொல்வது என்ற நிலையிலே குறைகளை மட்டும் விரிவாக எடுத்துப் பேசினார்கள். தமிழ்ச் சமுதாயத்திற்கும் சமூகத்திற்கும், இன்னின்ன காரியங்களைச்- செய்தால், அதன் மூலம் ஏழை எளிய மக்கள், வாழ்வில் தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள் வாழ்வார்கள் என்று எதிர்க் கட்சி வரிசையில் இருந்து திட்டங்களை, தீர்மானங்களைக் கொண்டு வந்து, அவைகளை நம்முடைய முதலமைச்சரோ அல்லது அரசாங்கமோ மறுத்திருக்குமானால், இன்னின்ன திட்டங்களை, முற்போக்கான திட்டங்களை மாமன்றத்திற்குக் கொண்டு வந்தோம், ஏழை எளிய மக்கள் வாழ வகை செய்யக் கூடிய முன்னேற்றகரமான திட்டங்களை, தீர்மானங்களை இந்த மாமன்றத்திற்குக் கொண்டு வந்தோம், இதை ஏழை எளிய மக்களுக்குப் பாடு படுகிற டாக்டர் கலைஞர், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற டாக்டர் கலைஞர் அவர்கள் மறுக்கலாமா, அவர் மறுத்து விட்டார் என்று இந்த 8 ஆண்டு காலத்திலே ஒரு கருத்தை எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்ல முடியாது. காரணம் என்னவென்று கேட்டால், அந்தந்த நோக்கங்களை அடிப்படையாக வைத்து தமிழ்ச் சமுதாயத்தில் இருக்கிற ஏழை எளிய மக்களுக்கும், பாடு படுகிற பாட்டாளி மக்களுக்கும், உழைத்து ஓடாகிப் போன தொழிலாள மக்களுக்கும், வேளாண்மையை பிழைப்பாகக் கொண்டிருக்கிற விவசாயப் பெரு மக்களுக்கும், நெசவாளப் பெரு மக்களுக்கும், இன்னும் சமுதாயத்தில் இருக்கிற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்கும் என்னென்ன காரியங்களைச் செய்யவேண்டும் என்று நாட்டின் நிலைமை

களுக்கேற்ப நடுநிலைமையாளர்கள் கருதுகிறார்களோ அவைகளையெல்லாம் அவர்கள் சொல்வதற்கு முன்னாடியே, முயற்சித்து, முன் கூட்டியே திட்டமிட்டு மனப்பூர்வமாக இந்த அரசும், டாக்டர் கலைஞர் அவர்களும் செயல்படுகின்ற காரணத்தினால் அவர்கள் சொல்வதற்கு எதுவும் இல்லாமல் போய்விட்டது.

சொல்வதற்கென்று எதுவுமே இல்லாமல் போய்விட்ட காரணத்தாலே, எதையாவது சொல்வோமென்றுஅவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி இல்லாமல் போனால், இந்த மன்றத்திலே, எத்தனையோ தீர்மானங்களை நாங்கள் கொண்டு வந்தோம், ஏழை எளிய மக்களுக்காக, பாட்டாளி மக்களுக்காக, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, பிற்பட்ட மக்களுக்காக, அவர்களுடைய நலன்களுக்காக, முன்னேற்றத்திற்காக, இந்த இந்தத் தீர்மானங்களை நாங்கள் கொண்டு வந்தோம், அந்தத் தீர்மானங்கள் முதலாளிகளுக்கு விரோதமான தீர்மானங்கள், நிலச்சுவான்களுக்கு விரோதமான தீர்மானங்கள், பெரும் பணக்காரர்களுக்கு விரோதமான தீர்மானங்கள் என்று கொண்டு வந்தோம், அவற்றை இந்த மாமன்றம் ஏற்க மறுத்தது, டாக்டர் கலைஞர் ஏற்க மறுத்தார் என்று 8 ஆண்டுக்காலத்திலே நடைபெற்றதைப் பற்றி, இந்த மன்றத்திலே எதிர்க்கட்சிகளாலே எடுத்துக் காட்ட முடியாது.

முற்போக்குத் திட்டங்களை முனைந்து செயல்படுத்துகிறது இந்த அரசு. செய்து முடித்த காரியங்களெல்லாம் அவர்களுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. எந்த ஒரு காரியமானாலும் ஜனநாயகத்தில் ஒரு முறைக்குப் பலமுறை, வலியுறுத்தி, வலியுறுத்திக் கேட்டு அதற்குப் பிறகு, நடைபெறவில்லையென்று போராட்டங்கள் நடத்தி, அந்தப் போராட்டங்களிலே பல அடக்கு முறைகளைக் கையாண்டு, அந்தப் போராட்டங்களிலேயிருந்து எல்லோரும் விடுபட்ட பிறகு, 6 கோரிக்கைகள் கொடுக்கிறார்கள் என்று சொன்னால், இரண்டை நிறைவேற்றித் தருவதுதான் மரபு. அப்படி டாக்டர் கலைஞர் அவர்கள் செயல்படுவாரானால், நிச்சயமாக இவ்வளவு பெரிய எதிர்ப்பு வந்திருக்காது. சொல்கின்ற கோரிக்கை, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, தொழிலாளிகளுக்காக, உண்மையிலே சாதகமான, முன்னேற்றமான திட்டங்களாக இருக்குமானால் சொன்னவுடனே, அல்லது எடுத்துக் காட்டியவுடனே, அவற்றைச் சட்டமாக ஆக்கிய காரணங்களாலே, செய்கிற முறைகள் அவர்களுக்குப் புதிதாகத் தெரிகிறது. அவற்றிற்குப் போராட்டம் நடத்தி, 5 கேட்டால், இரண்டை நிறைவேற்றுகின்ற மரபை, இதற்கு முன்னால் இருந்த மரபை டாக்டர் கலைஞர் அவர்களும் கையாண்டிருப்பாரானால், இந்த நிலைமைவந்திருக்காது. அதற்கு மாறாக இருப்பதால்தான், எதிர்க்கட்சிக்காரர்களுக்கு இவர்கள் செய்கிற காரியங்கள் பெரிதாகத் தெரியவில்லை. அதே நேரத்தில், நாங்கள் இன்ன இன்ன காரியங்களைச் செய்யவேண்டுமென்றோம், அதை இந்த அரசு மறுத்து விட்டது என்று சொல்லவும் முடியாது. ஆகவே, எதையாவது, பேசவேண்டுமென்று பேசினார்களே தவிர, இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னர், பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர், அதற்குப்பின்னாலே டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பை



ஏற்றுக்கொண்ட பின்னர், முற்போக்கான திட்டங்களுக்கு விரோதமாக அல்லது (இந்திய மாநிலங்களிலே செய்யப்படாத அளவுக்கு) சோஷலிசச் சமுதாயப் பணிகளுக்கு விரோதமாக எந்த ஒரு திட்டத்தையாவது இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது என்று எடுத்துக் காட்ட முடியாது. அந்த அடிப்படையை வைத்துத்தான், இந்த 5 குறிக்கோள்களை, திட்டப் பணிகள், திட்டத்திற்கு அப்பாற்பட்ட வளர்ச்சிப் பணிகள், வறட்சி நிவாரணப் பணிகள், சமூகநல சிறப்புப் பணிகள், சமதர்ம சமுதாய அமைப்புப் பணிகள் என்ற 5 குறிக்கோள்களை அடிப்படையாக வைத்து, இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. தலைசிறந்த பொருளாதார நிபுணர்களால் கூட, இவ்வளவு நெருக்கடியான கட்டத்தில், இவ்வளவு பொருளாதாரச் சங்கடங்களுக்கு மத்தியில், இவ்வளவு வறட்சியான நேரத்தில், இவ்வளவு சிறப்பான நிதிநிலை அறிக்கையைத் தயாரித்திருக்க முடியாது.

இதைச் சுருக்கமாகச் சொல்வோமானால், சமதர்ம சங்கநாதம் என்று சொல்லலாம். அப்படி சமதர்ம சங்கநாதத்தை இவ்வளவு பெரிய நிர்ப்பந்தங்களுக்கு மத்தியிலே, சிக்கல்களுக்கு மத்தியிலே, மத்திய அரசு இவ்வளவு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடக்கின்ற இந்த நேரத்தில் துணிவோடும், அதே நேரத்தில், அறிவுத் தெளிவோடும், டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த மாமன்றத்தில் கொண்டு வந்திருப்பதை நான் மனமார, நெஞ்சார பாராட்டுகிறேன்.

1967-ம் ஆண்டுக்குப் பின்னால் நடந்த ஒவ்வொரு ஆளுநர் உரை விவாதத்திலும் ஒவ்வொரு நிதிநிலை அறிக்கை விவாதத்திலும் கலந்து கொண்டு பேசுகின்றபொழுது, என்னுடைய காரியாப்பட்டி தொகுதியில் உள்ள கிருதமால் நதியைப் பற்றி நான் எடுத்துக் கூறாத நாளே கிடையாது. இந்த 8 ஆண்டுக்காலம் நடந்த ஆளுநர் உரையிலும், நிதி நிலை அறிக்கையிலும் கிருதமால் நதியைப் பற்றி, டாக்டர் கலைஞர் அவர்களுக்கு அடிக்கடி நினைவுபடுத்தி வருகிறேன். அதை நினைவில் வைத்துக்கொண்டு, காரியாப்பட்டி தொகுதியில் உள்ள கிருதமால் கால்வாய்த் திட்டப் பரிசீலனை விரைவில் முடிந்துவிடும் என்று நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார். பரிசீலனை மாத்திரம் விரைவில் முடியாமல், அதனுடைய வேலை தொடங்குகிற காரியம் விரைவில் நடத்தப்பட்டு, அது விரைவில் முடித்துத் தரப்பட வேண்டும் என்று டாக்டர் கலைஞர் அவர்களை, இந்த விவாதத்தில் கலந்து கொள்ளும் இந்நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மதுரையிலேயுள்ள திருமலை நாயக்கர் மகாலை அரும்பெரும் பொருட்காட்சியாக மாற்றுவதற்கு அரசு ஏற்பாடு செய்கிறது என்ற பெருமகிழ்ச்சியான செய்தியை நிதிநிலை அறிக்கையிலே பார்க்கிறோம். காரைக்குடியிலே தமிழ்த்தாய்க் கோயில் ஒன்று வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மதுரை திருமலை நாயக்கர் மகால், அழகுமிகு பொருட்காட்சியாகி, சிறப்பான பொருட்காட்சியாக அமையும் என்று நம்புகிறேன்.

காரைக்குடியிலே தமிழ்த்தாய் கோயில் கட்டுவதிலே கருத்து மாறுபாடு இருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். தமிழ்த்தாய்க் கோயிலை காரைக்குடியில் கட்ட வேண்டுமா ? அங்குகட்டுவதற்கான

முக்கியத்துவம் என்ன ? தமிழ்த் தாய்க்கு ,தமிழ் வளர்த்த பொதிகை
மலையிலே கோயில் கட்டலாம், இன்னும் சிறப்பான இடத்திலே கட்ட
வேண்டும். ஆனால் காரைக்குடியிலே ஏன் கட்டவேண்டும் ? ஆண்டு
தோறும் கம்பர் விழா நடக்கின்ற காரணத்தாலேயா, அல்லது வேறு
காரணத்தாலேயா ? அதையும் முதலமைச்சர்...........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தமிழ்த் தாய்க் கோயில் காரைக்
குடியில் நண்பர் சா. கணேசன் முயற்சியில் கட்டப்படுகிறது. அதற்கு
அரசு உதவி செய்கிறது.

திரு. எ. ஆர். பெருமாள் : விளக்கத்திற்கு நன்றி.

அடுத்தபடியாக, மதுரை, சென்னைக்கு அடுத்த மிகப்பெரிய நகரமாக
இருக்கிற காரணத்தாலும், மாநகராட்சியில் இரண்டாவது மாநகராட்சி
யாகத் தமிழகத்திலேயிருக்கிற காரணத்தாலும், இந்த மதுரை மாநகராட்சி
யிலே அமைக்கப்படுகின்ற திருமலை நாய்க்கர் மகால் அரும்பெரும்
பொருட்காட்சி என்று சொல்லப்பட்ட அந்தப் பொருட் காட்சியைத்
தமிழகத்திலே மிகச்சிறந்த, மிக உயர்ந்த பொருட்காட்சியாக அமைக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பூம்புகார் கலைக்கூடம், பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் கோட்டை
இவைகளெல்லாம் இந்த அரசு எடுத்துக்கொண்டு அமைத்த பெரிய
காரியங்கள் என்பதால் பாராட்டுகிறேன். சிலப்பதிகாரத்திற்கு அடிப்படை
யாக அமைந்த பூம்புகார் நகரத்திலே, அந்தப் பழைய பூம்புகாரை
நினைவுபடுத்துகின்ற முறையில் கலைக்கூடம் அமைத்ததற்கும், வீரபாண்டி
யனுக்குப் பாஞ்சாலங்குறிச்சியிலே ஒரு மகத்தான கோட்டையை எழுப்பி,
அழிந்துபோன கட்டபொம்மன் பெயரை நிலை நாட்டுவதற்காகவும்
நான் நன்றி தெரிவிக்கின்ற நேரத்தில், கட்டபொம்மனுக்குப் பின்னால்
வாழ்ந்த மருதுபாண்டியனது வரலாறு, வரலாறு தெரிந்த டாக்டர்
கலைஞர் அவர்களுக்குத் தெரியும். கட்ட பொம்மனாவது வரி கொடுக்க
மறுத்ததன் காரணமாக தூக்கிலிடப்பட்டான். ஆனால், கட்ட பொம்
மன் தம்பிக்கு அடைக்கலம் கொடுத்த காரணத்தாலே, அன்னியனுக்குப்
பிடித்துக் கொடுக்க முடியாது என்று மறுத்த காரணத்தாலே, மருது
பாண்டியன் கோட்டையிழந்து, நாடிழந்து, அரசிழந்து, கடைசியில் சமாதி
யானான்.

மருதுபாண்டியர் பிறந்த இடம் நரிக்குடி. அந்த நரிக்குடி என்ற
பெயரை மருதுநகர் என்று மாற்றவேண்டும். அந்த நரிக்குடி மருது
பாண்டியன் பிறந்த இடம், பிறந்த ஊர். கலைஞருடைய பேனாவின்
ஒரு துளி மையிலே அந்த உத்தரவைப் போட்டுவிட முடியும். அந்த
நரிக்குடி என்ற ஊரை, மருதுநகர் என்று மாற்றி, முடிந்தால் நரிக்
குடியிலே, மருதுபாண்டியனுக்கு ஒரு சிலை எழுப்பலாம். அந்தக் கோரிக்
கையை கொஞ்சம் மெதுவாக நிறைவேற்றலாம்.



அடுத்தபடியாக, இந்த அரசு, தாழ்த்தப்பட்டோர் நலனில், பிற்
படுத்தப்பட்டோர் நலனில் அக்கறை கொண்ட அரசு என்பதை நான்
எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்காக,
பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்காக, அவசியம் ஏற்பட்டால், என்
உயிரையும் பணயம் வைத்து போராடத் தயாராக இருக்கிறேன் என்று
சொல்லியிருக்கிற முதலமைச்சரது இந்த அறிக்கையில் அவர்கள் முன்
னேற்றத்திற்காகப் பல காரியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதனை
நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக
ஒதுக்கி இருக்கிற பணத்தையும், பிற்பட்டுத்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கி
யிருக்கிற பணத்தையும் பார்க்கும்போது, ஏறத்தாழ 50 சத விகிதம்
வித்தியாசமிருக்கிறது. ஏற்கெனவே, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அதிக
மாகப் பணம் ஒதுக்குகிறார், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்னும் அதிக
மாக ஒதுக்கவில்லை, குறைவாக ஒதுக்கிறார், என்று சொல்லி, சொல்லி,
இப்பொழுது தாழ்த்தப்பட்டவர்களுக்கு அரசு ஏறத்தாழ ரூ. 10 கோடிக்கு
ஒதுக்கியிருக்கிறது. அதே நேரத்தில், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஏறத்
தாழ ரூ. 5 கோடிதான் ஒதுக்கியிருக்கிறது. இன்னும் ஓரிரு கோடி ரூபாய்
பிற்பட்ட சமுதாயத்திற்காக ஒதுக்க துணை நிதி நிலை அறிக்கை தயாரிக்
கும் போதாவது வழிவகை செய்ய வேண்டும்.

ஆம்னிபஸ்ஸை நாட்டுடமையாக்குவது பற்றி என்னுடைய மகிழ்ச்சியைத்
தெரிவித்துக் கொள்கிறேன். கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்,
சேரன் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் போக்குவரத்துக் கழகம்
என்று அமைத்திருப்பது போல் தென்பாண்டி நாட்டில் போக்குவரத்துக்
கழகத்தைத் தொடங்கும்போது பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்
போக்குவரத்துக் கழகம் என்ற பெயரில் தொடங்கப் பட வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். ஆம்னி பஸ்களை நாட்டுடமையாக்கும்போது அந்தப்
பெயரை வைத்து விடலாம். கலைஞர் அவர்கள் இது பற்றிப் பரிசீலனை
செய்து உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மீனவப் பெருங்குடி மக்களுக்கு வீடு கட்டும் திட்டம் பிரம்மாண்ட
மான திட்டம். பிற்பட்ட சமுதாயத்தாரை அடிப்படையாக வைத்துப்
போடப் பட்ட திட்டங்கள் என்பதற்கு இது ஆதாரமாகும். ஏழை எளிய
மக்களுக்கு ஏற்ற சமதர்ம சங்கநாதமாக இருக்கிறது.

விவாதத்திற்குரிய ஒன்றாக மாநில சுயாட்சி பற்றிக் குறிப்பிடப்பட்டி
ருக்கிறது. மாநில சுயாட்சி என்பதிலே “சுயாட்சி” என்ற வார்த்தை
இருப்பதால் டாக்டர் கலைஞர் எங்கே தனி நாடு கேட்கிறாரோ என்ற
ஐயப்பாட்டின் காரணமாகத்தான் விவாதத்திற்குரிய ஒன்றாக அமைந்து
விட்டது. அப்படிப்பட்ட ஐயப்பாடு எழக் காரணம், திராவிட முன்னேற்றக்
கழகம் தொடங்கப்படுகிற நேரத்திலேயே திராவிட நாடு லட்சியத்தை
அடிப்படையாக வைத்துத் தொடங்கப்பட்டதாலே, அதைக் கைவிட்ட பிற
கும், அண்ணா அவர்கள் பொதுக் குழுவிலே வைத்து நாட்டுப் பிரிவினை
கைவிடப்பட்ட பிறகும், இப்போது மீண்டும் மாநில சுயாட்சி என்று
கேட்கும்போது எங்கே தமிழ் நாட்டைப் பிரித்துக் கேட்கிறார்களோ என்ற
ஐயப்பாடு எழுகிறது.

நன்றாக யோசித்துப் பார்க்க வேண்டும், சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாநில சுயாட்சி என்று திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப் பில் இருக்கும் இந்த நேரத்தில் அந்தக் கோரிக்கையை வைத்தாலும், அடுத்த ஐந்து ஆண்டுகளிலே, பத்து ஆண்டுகளிலே, பதினைந்து ஆண்டு களிலே திராவிட முன்னேற்றக் கழகந்தான் இந்த ஆட்சிப் பொறுப்பிலே இருக்கப்போகிறது என்பதற்கு ஜனநாயகத்தில் உத்தரவாதம் கிடையாது. கேட்கப்படுகிற கோரிக்கை, அந்த லட்சிய முழக்கம் நாட்டுக்குத் தேவை யானதுதானா? வளர்ந்து வரக் கூடிய இந்திய அரசியலுக்கு உகந்தது தானா? என்று யோசிக்க வேண்டும்.

இதிலே காஷ்மீரைச் சுட்டிக்காட்டி காஷ்மீர் தனியான நிலைமை, அதைப் பற்றிப் பேசக் கூடாது என்று சொல்லுகிறார்கள். என்ன தனியான நிலைமை? 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15ம் தேதி வெள்ளைக் காரன் இங்கிலாந்து தேசத்திற்குச் செல்லுகிறான். அதற்கு முன்னால் மூன்று பிரிவாக இந்தியாவைக் கொடுத்து விடுகிறான். இந்துக்கள் அதிக மாக வாழும் பகுதி இந்திய யூனியன் என்றும், முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பகுதி பாகிஸ்தான் என்றும், சுதேச சமஸ்தானங்கள் இந்திய யூனியனோடு சேர விரும்பினால் சேரலாம், பாகிஸ்தானோடு சேர விரும் பினால் சேரலாம், அல்லது தனித்து சுதந்திரமாக இருக்க வேண்டு மென்றால் இருக்கலாம் என்று மூன்று பிரிவாகச் சுதந்திரத்தைக் கொடுத் தான். காஷ்மீர் மக்கள் முஸ்லீம்கள், ராஜா இந்து, ஹைதராபாத் ராஜா முஸ்லீம், மக்கள் இந்துக்கள். எல்லா சமஸ்தானங்களையும் இணைக்கும் போது ஹைதராபாத்துக்குள் போலீஸ் நுழைந்தது. உடனே பாகிஸ்தான் பட்டாளம் காஷ்மீரில் நுழைய முயற்சித்தது. அப்போது காஷ்மீரைக் கையில் வைத்துக் கொள்ள வேண்டும், பாதுகாப்புக்குக் கேந்திரமான இடம் அது என்று சொல்லி சில சலுகைகளை அப்போது காஷ்மீருக்கு அளித்தார்கள். இன்று பல நிலைமைகளுக்குப் பிறகு மீண்டும் ஷேக் அப்துல்லா அங்கு பிரதமராக வந்திருக்கிறார்.

காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரை, பம்பாயிலிருந்து கல்கத்தா வரை இந்தியா ஒரே நாடு என்று ஒத்துக் கொண்டவர்கள் நாங்கள்; இந்திய மண் ஒரே மண் என்பதை நம்புகின்றவர்கள்; அந்த லட்சியத் திற்காகப் போராடி சிறைச்சாலைக்குச் சென்றவர்கள், தடியடிபட்டவர்கள். ஒரே நாடு என்று சொல்லும்போது காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை யில் ஒரே அரசியலமைப்பு என்ற நிலைமை இருக்க வேண்டுமல்லவா? அதைக் கேட்கும்போது நாட்டுப் பிரிவினை என்று சொல்லுவதா? யார் அதைக் கேட்பது? மாநில சுயாட்சி கொடுப்பது பற்றிக் கூடக் கவலை இல்லை. கேட்பது டாக்டர் கலைஞர் அல்லவா? நான் உற்சாகப் படுத்து வதற்காகச் சொல்லவில்லை. உண்மையைச் சொல்லுகிறேன். இன்றைக்கு மாநில சுயாட்சி கேட்கத் தகுதி படைத்த ஒரே ஒருவர் தமிழக முதல மைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். மற்றவர்கள் ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முதலமைச்சர்கள், அல்லது அவர்களுக்குத் துணை போகும் முதலமைச்சர்கள். அந்த முதலமைச்சர்கள் இந்தக் கோரிக் கையை, உரிமையை எடுத்துச் சொல்லத் தயாராக இல்லை. அந்தத் துணிவு அவர்களுக்கு வராது; டாக்டர் கலைஞர் அவர்களுக்குத்தான் வரும்.





"பாதுகாப்பு ஒன்றைத் தவிர மற்ற அதிகாரங்களைப் பிரித்துக் கொடுக்க வேண்டும்" என்று அண்ணா அவர்கள் சொன்னதாக அறிக்கையில் குறிப் பிட்டிருக்கிறார்கள். எந்த இடத்தில், எப்போது கூறினார்கள் என்று அறிக் கையில் தெளிவாக இல்லை.

நேத்தாஜி சுபாஷ் போஸ் எப்பேர்ப்பட்ட தேசிய வீரர், தேச ஒருமைப் பாட்டில் உறுதியுடையவர் என்பதை நாடு நன்குஅறியும். இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு இந்திய அரசியலமைப்பு எப்படி அமைய வேண்டுமென்று தெளிவாக அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்தியாவின் பாதுகாப்பு, கரன்சி, வெளிநாட்டுக் கொள்கை, தபால் இலாகா, ரயில்வே இலாகா இந்த ஐந்தைத் தவிர வேறு அத்தனை அதிகாரங்களும் மாநிலங்களுக்குக் கொடுத்து விட வேண்டுமென்று மிகத் தெள்ளத் தெளிவாக எழுதி யிருக்கிறார்கள். நேத்தாஜி போஸ் பிரிவினைவாதியா? நாட்டைத் துண் டாட வேண்டுமென்ற நோக்கத்தோடா சொன்னார்? நேத்தாஜி சுபாஸ் போஸ் ஒருமைப்பாட்டுக்கு எதிரானவர் என்று வெள்ளைக்காரர்கள் கூடச் சொல்லமாட்டார்கள்.

ஒரு கோரிக்கையைச் சொல்லும்போது அடிப்படையைப் புரிந்து கொண்டு விவாதிக்க வேண்டும். சொல்லுவது டாக்டர் கலைஞரா என்று பார்க்கக்கூடாது. இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கலாம், நாளைக்கு வேறு கட்சி வரலாம். எந்தக் கட்சி வந்தாலும் தமிழ்த்தாய் வயிற்றில் பிறந்த தமிழ் மகன்தான் ஆட்சியிலே உட்கார வேண்டும்; தமிழ் மண்ணில் பிறக்காத, தமிழ்த்தாய் வயிற்றில் பிறக்காத ஒருவரை நிச்சயமாக ஏற்றுக் கொள்ள முடியாது; அவர் இந்த ஆட்சியில் உட்கார முடியாது; கலைஞராக இருந்தாலும், வேறு யாராக இருந்தாலும் தமிழ் மண்ணில் பிறந்த, தமிழ்த் தாயின் வயிற்றில் பிறந்த ஒருவர் தான் இந்த இடத்தில் உட்கார முடியும் என்பதுதான் எங்கள் கட்சியின் கருத்து; அதுதான் பொதுவான நியாயம் கூட.

(முற்பகல் 10-30)

ஆகவே, உட்காருவது யார் என்பதல்ல பிரச்சனை. சொல்கிற இந்தக் கோரிக்கை நியாயம் தானா என்று பார்க்க வேண்டும். இதை ஏற்க மறுப்பதில் என்ன கருத்து மாறுபாடு இருக்க முடியும். தோழமைக் கட்சிக்காரர்களைத் தவிர எதிர்க் கட்சிக்காரர்களைக் கேட்டால் மாநில சுயாட்சிக்கு மறுப்பு தெரிவிப்பார்கள். மாநிலங்களுக்கு அதிகப்படியான அதிகாரங்கள் வேண்டுமென்று டாக்டர் கலைஞர் அவர்கள் கேட்டார்கள், பெரும் பெரும் தேசியத் தலைவர்களும் ஏற்கனவே சுயராஜ்யத்திற்குப் பின்னால் இப்படித்தான் அரசியல் அமைப்பு உருவாக்கப்பட வேண்டு மென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இது பிரிவினை வாதத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. பிரிவினை நோக்கத்தைக் கொண்டதல்ல, வளர்ந்து வரக்கூடிய முன்னேற்றத்தை அடிப்படையாகக் வைத்து ஒவ் வொரு மாநிலமும் தங்கள் மாநில மக்களுக்கு, வாழ்கிற ஏழை எளிய மக்க ளுக்கு, பல்வேறு மக்களுக்கு, பாட்டாளி மக்களுக்கு, விவசாய மக்களுக்கு ஏற்ற முன்னேற்றகரமான திட்டங்களை நிறைவேற்றுவதற்கும், ஜீவாதத்தில

இந்தியா கடைப்பிடித்து வருகிற சோஷலிச சமுதாய ஒழுங்கு முறைக்குத் திட்டமிட்டுச் செயல்படுவதற்கும் ஏதுவாகத்தான், அடிப்படையாகத் தான் இந்த மாநில சுயாட்சி கோரிக்கை இருக்கிறது என்று அத்தனை கட்சிக் காரர்களும் வரவேற்று அந்த மாநில சுயாட்சி கோரிக்கையை ஆதரிக்க வேண்டுமென்று எதிர்க் கட்சிக்காரர்களைப் பணிவோடு நான் கேட்டுக் கொண்டு இந்த நிதி நிலை அறிக்கையை, நான் ஆரம்பத்தில் சொன்னது போல சமதர்ம சங்க நாதம் ஒலிக்கின்ற அறிக்கை என்று வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

THIRU R. PONNAPPA NADAR: Mr. Speaker, Sir,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூன்று மணி நேரம் இருக்கிறது. மூன்று பேர்கள்தான் பேசவேண்டும். ஆகவே ஒரு மணி நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு மணி நேரத்திற்குள் முடித்துக்கொள்ளுங்கள் என்று சொல்லவில்லை.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I will be very brief. I have been listening to the various speeches made by the Hon. Members regarding the Budget that has been presented before this House. It is a pre-election budget and I was expecting that there would be a very strong dose of taxation. But to my surprise the dose of taxation is also very much and that is only the indirect taxes that have been imposed by the State Government. Before I deal at any length with the Budget, I would like to say a few words regarding the State Autonomy demand that has been discussed on the floor of the House.

Sir, so far as the State Autonomy is concerned, it has been stated in the Budget speech—

> "The present Constitution under which the Centre is the Deity dispensing favours and States are Devotees seeking them should be redically restructured ......",

This is the background under which the present Budget has been presented before this Honourable House.

I may say, with your permission, that the arguments advanced by the learned Member regarding the State Autonomy are not acceptable. So far as the State Autonomy is concerned, we emphatically object to the demand of State Autonomy. On the other hand, I understand that if argument is advanced for more



powers under the Constitution and those powers could be formulated by a consensus among all the Chief Ministers of the various States and that could be taken up at the Central level in which the Central and State Governments can discuss what should be the amendments so far as the devolution of powers for the States concerned.

Now, Sir, there are sufficient powers for the State Government to do whatever is needed. It may be stated that there are certain powers which are concentrated in the Centre but that is no argument. The powers that are now with the States are sufficient in the sense that the previous Government which had been administering the Government with their limited finances were able to do much better than the present D.M.K. Government. The present D.M.K. Government, under the cloak of State autonomy, is just making political propaganda when its image is on the decline, and when its popularity is declining. They want to reconstruct the strength of their party. It is with that political objective that the State autonomy demand has been made.

Sir, so far as the State Autonomy is concerned, it has been discussed at length in this House and a resolution has been passed by this House and the matter is pending consideration with the Central Government. What is the immediate provocation for this new slogan, is the thing which I cannot understand.

One hon. Member was saying that our Chief Minister should be christened as 'Wazir-e-Azam' or the premier or the Prime Minister of Tamil Nadu. Is there any necessity for two Premiers and that is the question has been posted before this House.

So far as Kashmir is concerned, it is entirely different from Tamil Nadu. It enjoyed a peculiar status in view of its geographical position and defence importance. The question whether the accession of Kashmir to India is complete or not, was a live issue and that has been hanging fire for so many years. Now in order to have a final settlement, both the parties, the Central Government and the State Government, consulted

each other and they came to a decision and on the question whether the decision is proper or not, many leading parties have stated that the settlement on the Kashmir issue is the most proper and opportune thing to do at this time. There had been so much confusion and we fought two wars with Pakistan and Kashmir was a thorn in the defence of India. That is the reason why Kashmir has been given a special status and Sheikh Abdullah has been re-introduced into the mainstream of Indian politics. That is my submission.

Now we may consider what is meant by State autonomy and whether it is independence or more powers is a matter which will have to be considered. If it is a question of more powers I can understand that argument. But the antecedents of the Ruling Party and their demand for Dravidistan and the agitations that have been launched by them when they were in the Opposition, leads us to the conclusion that the whole thing is fishy and suspicious and that is the reason we say that the demand of State Autonomy should be opposed tooth and nail and we oppose the demand of State autonomy because it smacks of separation and secession and however much the ruling party may say that they are not for separation, we suspect their *bonafides*, and the people of Tamil Nadu also suspect them because of their antecedents. It may be a war-cry against the Centre but this is a matter of give and take and adjustment.

So, the argument that without autonomy nothing could be done is fallacious, false and absurd and these are the only epithets which I want to use.

Another point is, that while answering a point raised by an hon. Member belonging to the Ruling Party, he said that he was prepared to court imprisonment and launch agitation. Does it speak well of the Chief Minister is the question which will have to be considered. He is the Chief Minister and it is only on his advice that the Governor has to carry on the day-to-day administration. As he is the head of the administration, can he launch an agitation and is it correct and proper? It may be argued that he wants some amendments to the Constitution.



So far as amendments to the Constitution are concerned, there is a specific provision, Article 368 of the Constitution. Members of Parliament are there and they can just move the Parliament to suitably amend the Constitution. If the present Ruling Party at the Centre is not amenable for amending the Constitution, he can bring the issue for the verdict of the people in the next elections — whether it is a snap poll or not — in 1976 and till then he can wait. If he wants more powers, he can leave the issue to the verdict of the people. Without doing that, is it necessary to have an agitational approach and I would say that that would not speak well of this Government and the Ruling Party and especially coming as it does from the mouth of the Chief Minister, it would be viewed with the greatest suspicion. Sir, the Press in India has given so much of prominence to the statement made by the Chief Minister, namely, that he is prepared to court arrest and start an agitation. In this connection, I would just refer to the oath of office that will have to be taken by a Minister of State.

Form of oath of office for a Minister for a State :—

"I, A, B do *swear in the name of God* that I will bear true faith and allegiance and solemnly affirm to the Constitution of India as by law established, that I will uphold the sovereignty and integrity of India, that I will faithfully and conscientiously discharge my duties as a Minister for the State of.............. and that I will do right to all manner of people in accordance with the constitution and the law without fear or favour, affection or illwill."

Now, Sir, he is the defender and protector of the Constitution, and the laws of the State. If he were to take such a stand, it would be highly dangerous. It is the slogan of the CPM because I remember them telling that administration and agitation will go hand in hand. That was their dogma and that was their theory. I do not know whether the Ruling Party has borrowed that dogma that is the question that arises so far as this statement is concerned. It is not a happy state of affairs. I can understand if the Chief Minister relinquishes his office and says that he is prepared to court arrest, but occupying the Chief

Minister's chair and position, it does not speak well of him to say that he is prepared to lead an agitation. That is the point that I am pressing.

Next point is, I want to say something regarding matters which are now alive. In this connection I would refer to Vellore Hosptial strike that is going on for a pretty long time. So far as Vellore hospital strike is concerned, there is so much of politics in it; whether it is based on linguistic hatred or some such thing, I do not want to deal with that aspect at length, now.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஸ்தாபன காங்கிரஸ் தலைவர் ஒரு கருத்தைச் சொல்லுகிறபோது, அங்கேயுள்ள நிலைமையைத் தெரிந்து கொள்ளாமல் ஏதோ மொழி வெறி காரணமாக, இன மனப்பான்மை காரணமாக அரசியல் கட்சி மனப்பான்மையோடு போராட்டம் நடத்துவதாகச் சொல்லுகிறார்கள். நேற்றைய தினம் நான் வேலூருக்குச் சென்று இருந்தேன். சர்வ கட்சித் தலைவர்களும்—ஸ்தாபன காங்கிரஸ் தலைவர் உள்பட—சேர்ந்து வேண்டுகோள் விட்டு இருக்கிறார்கள் மருத்துவமனை நிர்வாகத்திற்கு. ஒரு கட்சி மட்டுமல்ல. ஸ்தாபன காங்கிரஸ், இன்றைய தினம் ஆளும் காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்தவர்கள், அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள், எல்லோரும் சேர்ந்து சிறந்த முறையில் அந்த வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதற்கு அந்த 15 பேரை வேலைக்கு எடுத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டு இருக்கிறார்கள். 4 நாட்களாக அந்த நிர்வாகத்தினர் அதை ஏற்க மறுக்கிறார்கள். இதிலே எங்கே அரசியல் கட்சி வருகிறது என்று எனக்குப் புரியவில்லை.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I would like to say to the Health Minister that I will be absolutely fair to both sides. So far as the Vellore Hospital strike is concerned, I have got also enough materials with me and I have facts with me. I know how the trouble originated. It originated on account of the disciplinary action taken against five persons, whose hands have been tainted with corruption. Are we sitting in the Government or sitting in this House encouraging corruption?

As far as this matter is concerned, I would like the Hon. Chief Minister to have an open mind. I have got a press report of the Special Correspondent of the 'Mail'. He has dealt with



this issue at length. I do not want to deal with all the details but suffice it for me to say that the attitude taken by the Government is not helpful in resolving this trouble.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பட்ஜெட் விவாதத்தில், வேலூர் மருத்துவமனை விவகாரம் பெரிதாகக் கொண்டு வருவதால், நான் பதில் சொல்கிற நேரத்தில் விரிவான பதிலைச் சொல்ல இயலாது என்பதால் இப்போதே சொல்லிவிடுகிறேன்.

வேலூர் மருத்துவமனை நிர்வாகம் 5 பேர் மீது எடுத்த நடவடிக்கை மீது இந்த அரசு கவலைப்படவில்லை. 5 பேர் மீது எந்தவிதமான விசாரணை வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள், எந்தவிதமான நடவடிக்கை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள் என்பதற்காக வெளியேற்றியுள்ள 15 தொழிலாளிகளைத் திரும்ப எடுத்துக் கொள்ளுங்கள். இது தான் முதலமைச்சரின் சமரச ஏற்பாடு. இதை ஏற்றுக்கொள்ளத்தான், அந்த 15 பேரைத் திரும்ப வேலைக்கு ஏற்றுக்கொள்ளத்தான் இந்த நிர்வாகம் மறுத்து வருகிறது.

அதை நாம் இன்றைக்கு அமல்படுத்தாமல் போனால், பிறகு எந்தத் தொழிற்சங்கப் போராட்டத்திலும் ஒரு நிர்வாகம் நாங்கள் நிச்சயமாக அவர்களை ஏற்றுக் கொள்ள முடியாது, டிசிப்பிளின் கெட்டுவிடும் என்று சொல்கிற நிலைமை வரும். நாட்டிலுள்ள எல்லாத் தொழிற்சங்கத் தலைவர்களும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமா? 15 பேர் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுக்கக் கூடத் தயாராக இருக்கிறார்கள் என்று நிர்வாகத்திற்குச் சொல்லப்பட்டது. அந்த 15 பேரிடம் மன்னிப்புக் கடிதம் எழுதி வாங்கிக் கொள்ளுங்கள். மீண்டும் தவறு செய்தால் நடவடிக்கை எடுக்கலாம் என்ற அந்த அளவுக்குத் தொழிலாளப் பிரதிநிதிகள் இறங்கி வந்து, அரசாங்கமும் அதை ஒப்புக்கொண்டு, அந்த 15 பேரை எடுத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டு இருக்கிறோம். அவர்கள் மனம் இளகாமல் இருப்பதுதான் வேடிக்கையாக இருக்குகிறது.

THIRU R. PONNAPPA NADAR: I am happy that the Chief Minister has reiterated the point of view that has been stressed on behalf of Government.

So far as the case that has been put forward on behalf of the management is that it is a case of indiscipline and indiscipline should not be tolerated. I am not going to deal at length with the issue raised by the Chief Minister. Let me once again say that once again the two sides may sit over the table and negotiate and come to a settlement. I want settlement in the

best interests of the institution and in the best interests of Vellore town I am saying this. I do not want to apportion blame on any party.

But, the follow-up action taken by State Government so far is not very happy. That is the reason why I want to bring to the notice of this House certain things that have happened subsequently, after the statement has been made by the Hon. Chief Minister. I may be permitted to read one portion of a press report. It is up to the Government to deny or affirm that report. It says:

"A Bill has been forwarded putting in a demand for Rs. 5.85 lakhs for providing police assistance during the period January to March and a team of commercial tax officials have visited the hospital and had assessed a turnover of Rs. 74 lakhs for 1969-70 and also a penalty at $1\frac{1}{2}$ times the normal rate for wilful and deliberate non-disclosure of turnover liable to tax. The authorities of the 74 year-old hospital have been asked to remove the portion abutting into the national highway."

Some other things are also said. The Chief Minister and Health Minister were stating that it is not based on any linguistic trouble. In that report there is a portion which says that the Workers' Union wanted to start the strike as an anti-Malayalee agitation. Further down in the report, it is said that one union leader was saying that there was an undercurrent of hostility between Vellala and Nadar christians among workers and this has worsened the situation. These are conflicting reports giving political colour. We do not know whether that version is correct or not.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஒரு மாநில சர்க்காருக்கு ஒரு தனியாரின் நிர்வாகம் இந்த அளவுக்குச் சவால் விடுவதை இந்த அவை ஏற்றுக்கொள்ளுகிறதா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இந்த அவையில் மாத்திரமல்ல. மேலவையில் கூட எதிர்க்கட்சித் தலைவர் ராஜாராம் நாயுடு அவர்கள் அந்த 15 பேரை நிர்வாகம் திரும்பி எடுத்துத் தீரவேண்டுமென்று வலியுறுத்தி எடுத்துச் சொன்னார்கள். மற்ற எதிர்க்கட்சித் தலைவர்களும் அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இங்கேயுள்ள தலைவர்களுக்கும், அந்த



பேரை வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கூறுவதிலும் ...த அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதிலும் எந்த விதமான ...றுப்பும் இருக்கமுடியாது என்று கருதுகிறேன்.

ஒரு தனிப்பட்ட நிர்வாகம் ஒரு மாநில அரசாங்கத்தை எதிர்த்து ...ந்த அளவுக்கு ஒரு போர்க்கொடி உயர்த்தி, என்னதான் வந்தாலும் ...ட்க மாட்டோம், எங்களுக்கு டிசிப்பிளின் தான் முக்கியம் என்று ...சால்லுகிறார்கள். அதே நேரத்தில் ஜான்சன் என்ற டாக்டரை— ...வர் பெரியாருக்கு, மற்றும் பழைய காங்கிரஸ் தலைவர்களுக்கு மிகவும் ...வண்டியவர், எல்லோருக்கும் வைத்தியம் பார்த்தவர், பேரறிஞர் ...ண்ணா அவர்கள் நோய்வாய்ப்பட்டு இருந்த நேரத்தில் இங்கேயே ...ந்து அவர்களுக்கு வைத்தியம் பார்த்தவர்—விஸ்வாச ஊழியர்களைக் ...காண்டு அடிக்கச்சொல்லியிருக்கிறார்கள். அந்த மருத்துவ மனையில் ...டம் இல்லாமல் அவர்கள் சென்னை ஜெனரல் ஹாஸ்பிடலில் இருக்கிறார். ...வருடைய கபால எலும்பு முறிந்து இங்கே வந்து சிகிச்சை பெற்று ...ருகிறார். அந்த அளவுக்கு அங்கே நிலைமை இருக்கிறது. இதற்கும் ...றகும் அந்தத் தனியார் நிர்வாகம் சொல்லுவதைக் கேட்கவேண்டு ...மென்று சொல்லுவது முறையல்ல.

ஒரு முறை கோயம்புத்தூர் மில்லின் நிர்வாகங்களுடன் பேச்சு ...வார்த்தை நடைபெற்றபோது, தொழிலாளர்கள் சில பேரை எடுத்துக் ...கொள்ளவேண்டுமென்று சொன்னோம். அவர்கள் அதை மறுத்து விட் ...டார்கள். என்னுடைய யோசனையை தொழிற்சங்கத் தலைவர்களும் ...ஏற்றுக்கொண்டார்கள். மில்முதலாளிகள் ஏற்றுக்கொள்ள மறுத் ...தார்கள். கடைசியில் நான் சொன்ன வார்த்தை, நீங்கள் ஏற்றுக் ...கொள்ளாவிட்டால், நாளை காலை இந்த மில்களை எல்லாம் தேசியமயமாக்கு ...வேன் என்று சொன்னேன். அடுத்தநாள் காலை நாங்கள் அதை ...ஏற்றுக்கொள்ளுகிறோம் என்று மில் முதலாளிகள் சொன்னார்கள். ...இப்படிப்பட்ட நடவடிக்கைகூட ஒரு மாநில அரசு எடுப்பதற்கு உரிமை ...இல்லையென்று கூறுவது முறையாகாது.

THIRU R. PONNAPPA NADAR: I am sorry that the Hon. Chief Minister has not understood me in the correct sense. I am only saying that a salutary approach should be made. Even now, it is not too late for both the parties to agree to some settlement and come to some understanding. I do not say that the workers who have been there should be totally sent away. It is a matter which will have to be considered on its merits. There are very grave allegations—allegations of misappropriation, defalcation and also indecent assalut on staff members and also patients. I do not want to go into all those details, because it may not be proper.

So far as assault on Dr. Johnson is concerned, I have enquired and I have got some information. According to that, it is this Doctor who met the angry crowd. In the crowd, it was alleged that—I do not say that he bet them, but according to the people in the crowd—it was he who started the trouble and he was the aggressor and there was retaliation...........

மாண்புமிகு திரு ப.உ. சண்முகம்: தலைவரவர்களே, டாக்டர் ஜான்சன் சென்னை ஜெனரல் ஹாஸ்பிடலில் தான் இருக்கிறார்கள். நான் காங்கிரஸ் கட்சித் தலைவரை தயவுசெய்து போய் பார்த்து விட்டு வாருங்கள் என்று கேட்டுக்கொள்வேன். யார் தாக்கி இருந்தாலும் அது குற்றம் தான். ஜான்சன் அடிபட்டு இருக்கிறார்கள். உண்மைதான். ஹைவேஸ் என்று சொல்லப்பட்டதால் அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறோம். இது பற்றி, ஐந்தாறு மாதங்களாகக் கடிதப்போக்குவரத்து நடந்து கொண்டு இருக்கிறது. அதையும் இதையும் பின்னிப் பேசவேண்டாம் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஆன் எ பாயிண்ட் ஆப் கிளாரி பிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கிளாரிபிகேஷன் வேண்டாம் அவர்கள் பேசுகிறார்கள். திரு பொன்னப்ப நாடார், நீங்கள் பேசுங்கள்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, so far as the CMC Hospital issue is concerned, I want to say that I have the greatest regard for the doctors, I do not say that all persons who have committed violence should be protected; the arms of law are quite long enough and legal steps can be taken against those persons. But the timing is such, the feelings are such that an amicable settlement is the best thing. For, Vellore Town should not suffer on account of this trouble. This institution will have to be protected and no vindictive measures should be taken by the Government. . . . . .

மாண்புமிகு திரு க. அன்பழகன்: தலைவரவர்களே, இதிலே ஏதோ அரசாங்கம் தனிப்பட்ட முறையில் அந்த மருத்துவ மனைக்கு தீமை செய்ய முயற்சிப்பது போல ஒரு எதிர்க் கட்சித் தலைவர் சொல்லுவதை நான் மிக வருத்தத்துடன் கேட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது. காரணம், எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களும் ஒன்று கூடி அத்தனை பேரும் உட்கார்ந்து பேசி கட்சி வித்தியாசம் இல்லாமல் சொல்லி இருக்கிறார்கள். இந்த 15 பேரை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். குற்றம் இருந்தால் விளக்கம் கேட்டுத் தொடர்ந்து நடவடிக்கை எடுங்கள். எந்தக்



குற்றமும் செய்யாமல் ஸ்டிரைக்கில் சேர்ந்தார்கள் என்பதாலேயே 5 பேரை விலக்கி இருக்கிறார்கள். முதலில் 5 பேரை வேலையிலிருந்து அகற்றி விடுவது என்ற அந்த முடிவில் நாங்கள் தலையிடவில்லை. சர்வ கட்சியில் உள்ள எல்லோரும் வேண்டுகோள் விடுத்து அதை ஒரு நிர்வாகம் மறுக்கிறது என்றால் அதில் என்ன அரசியல், ஆளும் கட்சி அதிலே என்ன தவறு செய்கிறது, அரசாங்கம் என்ன தவறு செய்கிறது என்று எதிர்க்கட்சிகள் எண்ணிப்பார்க்க வேண்டும். எல்லோரும் ஒன்றாகச் சொல்லுகிறார்கள். கடந்த இரண்டு மூன்று நாட்களாகக் நிர்வாகம் கேட்கவில்லை. அந்த நிர்வாகத்திற்கு அறிவுரை கூற வேண்டும்.

THIRU R. PONNAPPA NADAR: That is the reason why even now I say and I am reiterating that conciliatory methods may be intiated. All parties are agreed on that. My only fear is that there are very many people who have been adversely affected and the management wants to shift the Institution to some other place. By that Vellore Town will be affected and. . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதைச் சொல்லியே பயமுறுத்து கிறார்கள். அதை ஷிப்ட் செய்து விடுவேன் என்று. வேலூர் ஆஸ்பத்திரியே போய்விட்டால் தமிழ்நாட்டில் வேறு பெரிய ஆஸ்பத்திரியே வைக்க முடியாதா. போனால் போகட்டும். நான் இதைச் சொல்லுவது அறைகூவலாகச் சொல்லவில்லை. 15 பேரை எடுத்துக்கொள்ள மாட்டேன் என்று சொல்லுவதற்கு அவ்வளவு ஆணவம் ஒரு தனிப்பட்ட நிர்வாகத்திற்கு ஏன் என்று தான் கேட்கிறேன். சிம்சனில் எவ்வளவு பெரிய ரகளை ஏற்பட்டது. 150 பேரை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று உத்தரவு போட்டேன். எடுத்துக் கொண்டார்கள். அப்போது எல்லாத் தொழிற்சங்க தலைவர்களும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வாதிட்டார்கள். இது 15 பேர் விவகாரம். அதைப் பிரமாதப்படுத்துகிறது. இதில் இலர் நிர்வாகத்தின் பக்கம் நிற்பதுதான் எனக்கு வேடிக்கையாக இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் முதலமைச்சர் பேசுகிறபோது இது ஒரு ஆணவ பிரச்சினை என்ற முறையில் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் அப்படி எடுத்துக்கொண்டாலும் நீங்கள் அப்படி எடுத்துக் கொள்ளக்கூடாது என்றுதான் சொல்ல விரும்புகிறேன்.

அதை prestige question ஆக பார்க்கக்கூடாது. This is a very big issue.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அம்மையார் அவர்களே! அந்தத் தொழிலாளர்களுக்கு என்ன பதிலைச் சொல்ல? 15 பேரை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமா, வேண்டாமா?

திருமதி த. ந. அனந்தநாயகி: நீங்களே நியாயத்தை விசாரித்து நீங்களே ஒரு முடிவுக்கு வாருங்கள்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I have got the greatest regard for the attitude of the Government. But Government should not, the Chief Minister should not think that we are all siding with the management and inciting them or, that we are advocating that it should be shifted and all that. That is not my case. I would once again appeal to this House, through you, Sir, that a settlement may be effected very soon. I am not going to apportion the blame on the management. I do not say that the workers are all on the wrong side and that Government..........

மாண்புமிகு திரு ப.உ. சண்முகம்: தலைவரவர்களே, எல்லா கட்சித் தலைவர்களும் அந்த ஆஸ்பத்திரி மேனேஜ்மெண்டை சந்தித்து பேசி இருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தகவல் தந்து இருக்கிறார்கள். மானேஜ்மெண்டார் மதுரை சென்று தங்கராஜை சந்தித்து இன்னும் ஒரு நாள் இரண்டு நாளைக்குள் இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்த பிரச்சினையை மேலும் பேசி காம்பிளிகேட் ஆக ஆக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சுமூகமான முடிவு ஏற்பட வேண்டும் என்ற ஆசை இருப்பதால் தா[illegible] யாரும் பழைய விவகாரங்களை மேலும் பேசி காம்பிளிகேஷன் உண்டா[illegible] வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: I accept the suggestion. That is the reason why I plead that a conciliatary attitude should be taken. I do not want that trouble should be fomented. I say this with all good intention and that is why I am arguing the case and not because that there should be bitter feelings. There should not be bitter feelings. That is what I want and what I plead for. We should forget and forgive. I am not against the institution or the workers. I am only interested in the Institution being there and not ...........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: Forget and forgive என்ற அறிவுரையைத்தான் நாங்கள் அவர்களுக்குச் சொல்லுகிறோம். நிர்வாகத்திற்கு. தொழிலாளர்கள் தவறுகள் செய்து இருந்தாலும் Please forget and forgive என்று சொல்லுகிறோம். [illegible] நிர்வாகம் ஏற்க மறுக்கிறது.



திரு கே.டி.கே. தங்கமணி: எல்லா கட்சியை சேர்ந்தவர்களும் சட்ட மன்ற உறுப்பினர்கள், அமைச்சர் கலெக்டர் முன்னிலையிலும் பிறகு பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட பிறகும் அவர்கள் எல்லோரும் யோசனையைச் சொன்ன பிறகும் இந்த நிர்வாகம் [illegible]ள் எல்லாம் சேர்ந்து ஒரு சரியல்ல என்று தான் சொல்ல விரும்புகிறேன். காட்டுகிற பிடிவாதம் நியாயம் இருக்கிறது என்றெல்லாம் சொன்ன அவர்கள் சொல்லுவதில் திருப்பிச் சொல்லி வருவது நல்லது அல்ல. இவ்வளவு தையே திருப்பித் இன்னும் கொஞ்சம் சிந்தித்து முடிவு செய்ய விவகாரம் ஆன பிறகு The initiative will have to be taken by முயற்சி செய்ய வேண்டும். the Management என்று direction கொடுத்தால் உதவியாக இருக்கும்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, the discussions that have taken place have been carried on with the best of intentions. I do not want to say anything which would further complicate the issue. I want an early settlement. That is all what I want to say.

திரு எம்.ஏ. லத்தீப்: தலைவரவர்களே, பேரவைத் தலைவர் அவர்களும் எங்கள் மாவட்டத்தை சேர்ந்தவர் என்ற காரணத்தால் இந்த சமாதான முயற்சியில் ஈடுபட்டு முகமான ஒரு முடிவைக் கொண்டு வர உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர். ஆனால் வேலூரிலேயே பிறந்த மேலவைத் தலைவர் அவர்களே இது பற்றி ஒரு மணி நேரம் அவர்களோடு பேசிப் பார்த்தும் முடியவில்லை.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I will leave this at this juncture. People there are infuriated and agitated over this matter. It is a very vital issue. Some of the minorities' representatives came and represented to us and that is the reason why I felt it my duty to bring this to the notice of the Government and the notice of this House. I want a settlement early. Whether the management should bow down or the workers should be victimised, that is not my concern at all.

I will go to the next point which I want to stress and that is regarding the food situation. Sir, I saw in the papers that there was the Conference of Chief Ministers and Food Ministers in Delhi. So far as our case is concerned, it has not been heeded by the Centre. That is the reply that has been furnished by the Hon. Food Minister. So far as import of rice is concerned,

the Hon. Food Minister has said—I mean the Central Agriculture Minister—that the prices in international market is very high and so, the request of Tamil Nadu cannot be acceeded to. That is the situation that he has made out. Another point which he has also indicated is that no inter-State movement of foodgrains either at Government to Government level or between the co-operatives would be permitted.

Now, Sir, so far as the food situation is concerned it is in an alarming stage and it is in a bad shape.

முற்பகல் 11·00

Is the Centre giving us more rice is another point which the Hon. Chief Minister should clarify. It has been stated that they are allotting more wheat for our State, about 60,000 tonnes of wheat would be allotted and some letter has reached our Government. What is the understanding and what is the discussion that has been made in the Food Ministers' Conference and whether our viewpoint has been put forward in strong language and whether it has been accepted by the Centre are the points that will have to be clarified. Tamil Nadu should have a fair deal so far as food is concerned. We are now in the grip of drought and sufferings of the people are untold. For tiding over the crisis some more rice will have to be allotted. No political consideration should weigh with the Central Government or any other Government in the matter of food. Food should be considered on a national level and not at political level. That is the point which I am stressing.

Then, I will refer to the Budget. So far as the current Budget is concerned, the revenue receipts are said to be Rs. 501.37 crores and expenditure is of the order of Rs. 537.5 crores. There is a revenue deficit and the revenue deficit is sought to be made good by fresh taxation. Fresh taxation is in the shape of sales tax and also additional stamp duty. So far as these matters are concerned, Rs. 6 crores is the amount that is now sought to be the anticipated revenue in this Budget. It is a deficit Budget. So much so, there would be an inflationary tendency and prices would naturally shoot up because it is an inflationary Budget and deficit financing has been resorted to by the State. Sir, it may be said that the Central Government has also got a deficit of Rs. 225 crores and they are also imposing Central tax to the tune of Rs. 288 crores. With all the taxation, there is so much of spiralling of prices because money circulation has increased. That is the reason why the goods are limited and the demand and supply line would operate and because there is too much money put in circulation and the goods and services are very scarce, there would be a price spiral. That has not been sought to be looked into by this Government. There is a paragraph in this Budget speech in which it has been said that the price control cannot be made because this Government is not clothed with sufficient powers. I would say that with the powers that are now available with the State Government, they can control the prices, they can reduce the prices.





I have got one suggestion to make. So far as payment of wages is concerned. in the drought areas it may be made in kind and not in money. If payment is made in kind, I am sure that there may not be so much of inflationary tendency. That can be avoided by payment in kind.

So far as N.G.G.Os. are concerned, they are also not very happy about the increase that has been given by the State Government. Some of them say that the increase is not proportionate to the cost of living index or the points that have recently been risen up. It is not on a par with the Central D.A. increase, but some relief has been given. I would only say that the N.G.G.Os. can also be supplied essential commodities such as food, cheap cloth and other articles in common use at concessional rate, so that they would be benefited.

Another point which I want to stress is regarding the rental value which has also been increased. In the City certain houses are allotted to the Government servants and the rent they have to pay is 10 per cent of their salary. 10 per cent of salary means, it is not the market rent. It is 10 per cent of the pay. Supposing a person is occupying 'A' premises and his salary is not static, whenever there is increase in his salary the amount of rent also increases. This is not a very healthy thing. It should be the market rent. The market rent should be fixed for the premises with reference to the facts available with the

department. Some preference may be given to the N.G.G.Os. in the matter of allotment of houses at concessional rates. Then, they would be very happy because most of them find it very difficult to get accommodation and if that is done, their grievance can be redressed to a large extent.

The next point which I would like to stress is this. Sir, there are 13 States in which deficit financing has been resorted to. So far as those States are concerned, Rs. 145 crores is the deficit that is now brought to light. There are yet other States who will have to announce their Budget proposals. I think with all this there would be a price spiralling throughout India. It has been stated that the price increase is an All-India phenomenon and there is sufficient reason for that. That can also be seen by the statement made in the Budget.

Another point on which I would lay stress is the indirect taxes that have been levied by the State which is unconscionable. So far as sales tax is concerned, there has been periodical increase. It may be said that the increase is only on luxury goods and not on essential commodities. Sir, so far as this argument is concerned, oil is taxed, pulses are taxed gram is taxed. These are all essential commodities. Why should we touch those commodities is the question which I am just stressing before this House. I can understand if luxury goods like refrigerator and things like that, electrical goods and other goods are taxed more. So far as the goods which are in common use are concerned, they should be exempted.

Oil cake is also there. Edible oil is there. These things should be avoided. That is the reason why I say that we should tax just to the minimum. So far as the principles that have been adumbrated by this Government are concerned, 'tapping the rich and patting the poor' was the favourite slogan that had been put forward by this Government when this Government assumed office. Now the position is reversed. It is the rich men who are taxed less, or are not taxed at all whereas the poor sections are adversely affected on account of the indirect and more taxes is the rule in this Budget. So, judging the Budget in that line, I would once again say that it is against the common man. It is not a common man's Budget. It has been stated that



it is a panacea for all the ills and the panacea that has been sought to be introduced does not help the poor at all. Starvation is on the increase. The untold miseries of the poor man or the common man is on the increase in the drought affected areas and the panacea that has been sought to be introduced does not help the poor man at all. Starvation is on the increase. The untold miseries of the poor man or the common man is on the increase in the drought affected areas.

Then in the City there is scarcity of water. Drinking water is very scarce. In the slum areas people are finding it very difficult, inspite of the efforts taken by the Corporation, drinking water could not be made available. A pot of water costs four annas and even more. Even good drinking water is not available. Potable water will have to be given. So far as the attitude of the present Government is concerned my humble submission is that they have failed in their duty, in their elementary duty of providing drinking water to the people.

Regarding food also, some measures have been introduced. But the measures that have been taken up, the relief that has been given are not adequate. They are grossly inadequate, if I may be permitted to use that expression. So far as the queues are concerned, in the City it is daily growing. As for the power cut, it is growing day in and day out. With all these things we say that we are going to give more power for the pump sets. But are we having enough power to be given for the pump sets is the question which will have to be answered. It may be very good to say so for advertisement. It may be very good for platform speeches. But the people are aware that pump sets are not getting connection in spite of the best efforts.

Another point which affects the ryots and other people is this. The consumers are asked to pay more by way of deposit. I know that the Electricity Board is not paying interest to the Government. With all that they are now demanding more money from the consumers. Is it just and proper? Is it fair on the part of the Electricity Board to ask for more deposit?

It may be said that recently a Government Order has been passed that more deposit need not be collected from the agriculturists. But what about the other people? People could not pay the increased amount in a lump. The consumers are not very rich people. I can understand if big industrialists are asked to pay more by way of deposit, but not the poor consumers whose economic conditions are not very bright.

Sir, there is non-availability of essential commodities throughout the State and there is no gainsaying the fact that the Government would be supplying consumer goods at concessional rates.

So far as drought is concerned, I have got one more point to make. I want to call the attention of the Hon. Minister under Rule 41 to the situation prevailing in our district. In our district, the village system is not there in the strict sense of the term. Our entire district consists of 64 revenue villages and some of the revenue villages are 30 square miles, 25 square miles, 6 square miles and 10 square miles.

There are also pockets in these villages where the crops have completely withered, and where nothing is available, not even a drop of water for drinking. The provision that has been made is only for deepening old wells. I would say that new wells should be sunk. As the old wells are 90 to 100 feet deep, their deepening would be another problem. In this connection, I would suggest that some arrangement may be made for overhead tanks, as otherwise, what money is sunk for wells, would be of no avail.

I would also bring to the notice of the Government that in my constituency, there is a place called Pudukarai where drought relief work was started previously and a sum of Rs. 65,000 was spent for that purpose. A tube-well has been constructed and what is the result? Not even a drop of water is available. So some other source will have to be thought of and that is the reason why in the changed and peculiar situation prevailing in that district, the pattern of assistance should be entirely different and that is the point which will have to be taken note of by this Government.





of variations to the disadvantage of the incumbents should be made. That is the point. Public are thoroughly dissatisfied; Students are dissatisfied; and workers are dissatisfied because they cannot catch the buses in time. N.G.O.s could not go to their offices in time. Local people could not go to hospital or school, etc. That is the pitiable state of affairs prevailing there and I am sure that the Hon. Minister for Transport will take note of these things and when the Transport Demand is taken up for discussion, he will make good and encouraging announcement about the things I have mentioned just now.

Then I come to another point regarding rice scandal. Sir, the Estimates Committee has pointed out that there is a rice scandal and there has been sufficient discussion in this House. I would once again reiterate and affirm that the rice scandal affair should be enquired into. Of course, it may be stated that they have launced prosecutions. But we want a judicial enquiry by a judicial officer to find out how this scandal arose and who are responsible for it either directly or indirectly. The persons who are responsible for it by virtue of their office may also be roped in so that there would be a clean administration in the State. People suspect so many things. They say that Thandavarayan is only a name-lender and the real persons are somebody else and they go scot-free. In order to resolve the tangle, a judicial enquiry by a High Court Judge would be the most proper thing. Our leader, Thiru Kamaraj, has been saying in the public platforms that a judicial enquiry may be made and I think the rice scandal is a fit and eminent thing to be enquired into by a judicial officer so that all the materials may be placed before the Government which may take suitable and proper action as they deem fit and necessary to meet the ends of justice.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த விவகாரத்தைப் பொறுத்து அரசு குற்றவாளிகளின் மீது நடவடிக்கை எடுத்து வழக்குப் போட்டிருக்கிறது. இதற்கு சம்பந்தமுடைய வேறு யாராவது விடப் பட்டிருப்பதாக ஆதாரபூர்வமாக குற்றஞ்சாட்டப்படுமானால் அவர்கள் மீது விசாரணை வைப்பதற்கு ஒன்றும் தடை கிடையாது.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I am aware that prosecution has been launched against 19 persons and I had occasion also to peruse the file that was placed in the Hon. Speaker's Chamber

So far as Famine relief is concerned, there is the Famine Code and that is a legacy of the Englishmen. We should change and recost it or tear it to pieces because it is an outmoded thing. Now the State Government are implementing a socio-economic programme and this is a Welfare State and for the welfare of the people there should be a change in the outlook of the Government and more money should be allotted.

Only a sum of Rs. 4 lakhs has been allotted and the crops in Kodayar, Neyyar and tail-end areas have completely withered away and the report given by the authorities is not very encouraging because they do not go and inspect the areas. They will have to give a correct picture of the things that are prevailing in those areas.

Then I come to nationalised transport. So far as nationalised transport is concerned, it is in a very bad state. Kattabomman Corporation is functioning in Tirunelveli and Kanyakumari districts. So far as this Corporation is concerned, the vehicles that have been already plying, are not now plying as most of the vehicles are old and outmoded and some of them will have to be condemned. With all that the services are cut.

There is a growing feeling that because of nationalisation, people of that area are put to so much of difficulties. The employees are not satisfied because there is so much of uncertainty with regard to employment prospects and the recruitment is also not done through Employment Exchange. The services that they have been operating are very meagre and the people call it ' Katta Mannu Corporation ' because they are very much fed up with the Corporation. The pay scales in the Corporation are also very low. There are so many problems in the Corporation. Some of their workers are former Government servants in the erstwhile Travancore-Cochin Government recruited through the Public Service Commission. What is the safeguard for these workers? These are the matters which will have to be considered by the Government.

It cannot be said that the Kattabomman Corporation is also a Government Corporation. The services which they had put in the erstwhile State would have to be consider...





and it is something very fishy and suspicious. That is the reason we say that the persons who are responsible for it should also be booked. Under the criminal prosecution, only a limited number of persons has now been booked. So far as enquiry is concerned, that would be something......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இன்னும் யார் யார் விட்டுப்போய் இருக்கிறார்கள், யார் யார் தவறு செய்திருக்கிறார்கள். யார் யார் மீது விசாரணை வைக்கவேண்டுமென்று குறிப்பிட்டுச் சொன்னால் அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராயிருக்கிறது.

THIRU R. PONNAPPA NADAR : Is it to be judicial enquiry or prosecution, which will be best, are all matters which have to be decided by Government. It would be better to remove certain lurking suspicions in the minds of political parties. I do not want to mention any specific name because Tamil Nadu knows who are all behind it. That is the reason why we have been saying that this matter should be enquired into by a judicial officer. It is upto Government to take my suggestion or not. I am leaving it at that stage.

Another point is with regard to a charge against the co-operative department. In the Thanjavur Co-operative Marketing Federation there have been certain irregularities and that has been pin-pointed and made mention of in this House and surcharge proceedings are now pending against Directors and President of that federation. I do not want to deal at length with the merits or demerits of the case. Large amounts are involved, nearly Rs. one crore is not to be seen and there is so much of shortage of paddy and rice and also of gunny bags. It may be said that the authorities had taken the matter before the High Court by filing a writ and had obtained a stay.

I would once again say that however influential he may be, prosecution would be the most important thing, in spite of the surcharge proceedings. If one is really guilty, let him face the Court. On the other hand what we find is that only surcharge proceedings had been initiated at the instance of Government. If that be the case, many people would go un-punished. That is why we have been saying that the guilty should be brought to book and this would be brought to light if there is prosecution.

[Thiru R. Ponnappa Nadar] [1975 மார்ச் 10

We find that the Tanjore Co-operative Marketing Federation has been superseded and I think it is now not doing very well. Its reputation has been tarnished. Its image in the minds of the public is at its lowest ebb and prosecutions may be initiated against the guilty persons.

Another point. There has been a clash in Udumalaipettai. There have been rival factions. There has been a procession and there has been a clash which resulted in certain things which culminated in a murder. Now, Sir, in that case most of our trade union leaders and members of our party have been not only harassed but also taken into custody by the police and who has done the crime is a matter which requires investigation. My complaint is that we have not been given a fair deal so far as this matter is concerned. Who started the trouble, who is the murderer—all these matters will have to be decided by Court.

It is true that there has been a procession started by Congress(O) party workers and there has been a clash between ruling party workers and workers of Congress(O) and exchanges seem to have taken place. In that case two or three people, who are active supporters of our party, have been roped in and they are now in jail. Whether they are actually involved in murder case or not is a thing which will have to be investigated and investigation has not been done fairly and I think it has been one-sided. They have taken a one-sided view of the matter and I think Government will look into all these matters and see that justice is meted out to them.

Such clashes should have been avoided whether it is by the ruling party or from opposition party. I am not holding brief for anyone and saying that opposition parties should clash with the ruling party but the situation that is prevailing there is very tense and I think in the interest of Government, they should take note of the feelings of the people there. People who have nothing to do with it should not be unnecessarily penalised. That is the point I am stressing.

I have got a telegram from Koilpatti. Some anti-social elements entered into a shop, armed with deadly weapons. There has been a clash with one section of people and this group. One Mohamed has sent me this telegram from Koilpatti. It says that the situation is very tense there. There have been some injuries and clash has



1975 மார்ச் 10] [Thiru R. Ponnappa Nadar]

taken place and sufficient protection may be given to the people there, and shop-owners. I do want to say that anti-social elements should be brought to book whether it be in this place or some other place. They should be rooted out in Koilpatti area first. Government should take firm and effective steps to see that law and order is restored and there is no rival clash there.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

I would once again say that the budget that has been presented by the Chief Minister is only an election stunt. It is a catalogue of grievances against the centre and whether actually the grievances are well-founded or ill-founded, it is for the people to decide. What is apparent is that poorer sections of the people have been affected with the present food scarcity, price rise, growing unemployment, labour unrest and other things that are now prevalent. There are certain reported cases of starvation deaths in certain areas. Whether they are actual starvation deaths or death by some other things will have to be enquired into and investigated by Government.

Drought relief work will have to be speeded up and wherever people are suffering, aid will have to be rushed. The Centre also should give more money for drought relief. They should not adopt step-motherly attitude so far as Tamil Nadu is concerned.

There is another point I want to say. So far as discussions that have taken place in the House are concerned, they have to be taken in the true sense and perspective.

We have put forward certain views to Government. Let them be judged on its merits. We do not want to apportion blame on any one. The Opposition has got a right to criticise Government in this House.

I want to have a clarification from the Hon. Chief Minister. I would like to know whether justice would be done to the common man, to the poor man, for his amelioration and whether social justice would be meted out to him. What is the use of saying that we are going to remove poverty from the land? Poverty is not being removed. There are many parts of the land where people are on the verge of starvation. Their daily income is less than 50 P. Most of them are starving. The conditions of backward classes and

scheduled castes, their upliftment should be taken up in right earnest. There are certain heads wherein money that has been allotted had not been spent fully.

I oppose the demand of State autonomy of the ruling party. That is a big question that has to be decided at the all-India level and not by a declaration of war against the Centre. With these words I conclude.

THE HON. THIRU S. RAMACHANDRAN : I would like to seek a clarification from Thiru R. Ponnappa Nadar. He used the word கட்டை மண் instead of கட்ட பொம்மன் while referring to the Kattabomman Transport Corporation. I would like to know the meaning of the word கட்டை மண்.

THIRU R. PONNAPPA NADAR : I wanted to place before the House the feelings of the people and how they are dissatisfied with it and how they are expressing their feelings. It is not my intention to denigrate the name of Kattabomman or anything like that. The Hon. Minister can go incognito and find out the feelings of the people and their dissatisfaction and what they are saying. If what I say is not true, sufficient punishment may be given to me. That is the challenge I am throwing.

THE HON. THIRU S. RAMACHANDRAN : I am not against voicing any grievance by the people. I only wanted to know the meaning of the word கட்டை மண் used by Thiru R. Ponnappa Nadar. I wanted to know its meaning since no such word is found in the Tamil lexicon. If that word has been used, I would like to know its meaning.

(முற்பகல் 11-30)

திரு ஆர். பொன்னப்ப நாடார்: இதை எங்கள் பகுதியில் தமிழில் குட்டிச்சுவர் என்று சொல்லுவார்கள்.

திரு க. உ.ரொ. எட்மண்ட்: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் இந்த மன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டிருக்கின்ற 1975-76-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின்மீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எடுத்துக் கூறிய கருத்தோடு இன்னும் சில கருத்துக்களை நான் இந்த மன்றத்தில் எடுத்துக்கூற முன் வந்திருக்கிறேன்.





நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையில் குறிப்பிடுகின்ற நேரத்தில், இந்த நிதி நிலை அறிக்கையில் 1-வது பக்கத்தில் 2-வது பாராவில் ஒன்றைச் சுட்டிக்காட்டிருக்கிறார்கள். "கட்டுக்கடங்காத நிலையில் விலைவாசிகள் ஏறிக்கொண்டு போவதும், அதனை எட்டிப் பிடிக்க முடியாத அளவுக்கு வாங்கும் சக்தி இருப்பதுமான ஏற்றத்தாழ்வான பொருளாதார நிலைக்குத் தீர்வு காண முடியாமல், இந்திய நாடு குழம்பிக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் வெளியிடப்படும் நமது மாநிலத்து நிதி நிலை அறிக்கையில்" என்று அவர்கள் நிதி நிலை அறிக்கை வெளியிடுகின்ற சூழ்நிலைபற்றி எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தமட்டில் இந்த நிதி நிலை அறிக்கை, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கடைசி நிதி நிலை அறிக்கை இந்த முறைக்கு. இந்தக் கடைசி நிதி நிலை அறிக்கையில்—அடுத்த 1976 ஆம் ஆண்டில் ஒரு பொதுத் தேர்தலைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலையில் நமது முதல்வர் அவர்கள் சமர்ப்பித்துள்ள நிதி நிலை அறிக்கை ஒரு புரட்சிகர மான நிதி நிலை அறிக்கையாக இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்த் தோம். இந்த நாட்டில் எந்த அளவுக்கு வறட்சி இருக்கிறதோ அந்த அளவுக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாக்கல் செய்துள்ள நிதி நிலை அறிக்கையில் வறட்சி ஓட்டிக்கொண்டிருப்பதைத் தான் நாங்கள் இங்கே காண்கிறோம்.

இந்த அறிக்கையைப் பார்க்கும்போது எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. "ஸ்காட்ச்ட் எர்த் பாலிசி" என்று சொல்லுகிறார்கள். இரண்டாவது உலக மகாயுத்தத்தில் ஜெர்மன் நாட்டிற்கும் ரஷ்யா நாட் டிற்கும் உலகப்போர் மூண்ட நேரத்தில், ஜெர்மன் நாட்டில் அதிபர் இட்லர் அந்தப் போரில் புறமுதுகு காட்டி ஓடிவருகின்ற நேரத்தில் சுற்று வட்டாரத்திலுள்ள கோதுமை விளையும் நில வயல்களை எல்லாம் தீயிட்டு அழித்து வந்தான் என்று வரலாற்றில் படித்த ஞாபகம் இருக்கிறது, அதைப் போல் ஆட்சியை விட்டுப்போக இருக்கிறோம். அதற்கு முன்னால் நாட்டிலே இருக்கின்ற சூழ்நிலையில் நிதி நிலை நெருக்கடியை இந்த நாட்டில் உருவாக்கிவிட்டுச் செல்ல வேண்டும் என்று நம்முடைய முதல்வர் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையைத் தாக்கல் செய்து இருக்கிறார் களோ என்ற சந்தேகம் நாட்டில் உள்ள எல்லோருக்கும் உதித்துக் கொண்டு இருக்கிறது.

நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-68-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை இந்த மன்றத்திலே தாக்கல் செய்தபோது அன்றைய தினம் இருந்த பற்றுக்குறை 1.12 கோடி. 1968-69-ம் ஆண் டுக்கான நிதி நிலை அறிக்கையைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த மன்றத்தில் தாக்கல் செய்த நேரத்தில் அன்றைய தினம் பற்றுக்குறை நிதி நிலை அறிக்கை அல்ல. உபரி நிதி நிலை அறிக்கையை நம்முடைய அண்ணா அவர்கள் இந்த மன்றத்தில் முதன்முறையாக வைத்தார்கள்.

அது 76 லட்சம் ரூபாய் உபரி நிதி நிலை அறிக்கை. இன்றைய தினம்
நம்முடைய முதல்வர் அவர்கள் இந்த மன்றத்திலே தாக்கல் செய்து
இருக்கிற இந்த நிதி நிலை அறிக்கையில், இங்கே பல்வேறு கட்சித்
தலைவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல் ரூ. 36.10 கோடிக்குப் பற்றாக்
குறை இன்றைய தினம் இருந்துகொண்டிருக்கிறது. பேரறிஞர் அண்ணா
அவர்கள் அன்றைய தினம் நிதி நிலை அறிக்கையை இந்த மன்றத்திலே
சமர்ப்பித்தபோது பற்றாக்குறை ரூ. 1·12 கோடியாக இருந்தது. அன்றைக்
கும் நாட்டிலே வறுமை இருந்துகொண்டிருந்தது; விலைவாசிகள்
எல்லாம் ஏறிக்கொண்டிருந்தன. மது விலக்கு அமுலில் இருந்த
அந்த அளவுக்கு இருந்த நேரத்திலும் நாட்டிலே அசாதாரணமான
நிலை உருவாகாத நேரத்திலும், பஞ்சம், பட்டினி உருவாகாத நேரத்திலும்
பட்டினியால் வாடுகின்ற மக்கள் பிழைப்புக்காகப் பிற மாவட்
டங்களை நாடிச் செல்வதும், பிற மாநிலங்களை நாடிச் செல்வதும்
உருவாகாத நேரத்திலும் அண்ணா அவர்கள் அன்றைய தினம்
கிடைத்த சொற்ப வருவாயை வைத்துக் கொண்டு தமிழகத்தி
னுடைய பல்வேறு நகரங்களில்—கோவை, சென்னை போன்ற நகரப்
பகுதிகளில்—ஆண்டு ஒன்றுக்கு 8 கோடி ரூபாய் அரசாங்க கஜானாவில்
இருந்து செலவழித்து அன்றைய தினம் படி அரிசி அளித்த நிலைமையை
அண்ணா அவர்கள் உருவாக்கித் தந்தார்கள். இதை யாரும் மறக்க
முடியாது. இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற
வர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தில் புதிதாகத் தங்களை இணைத்துக்
கொண்டவர்கள் அந்த இயக்கத்திற்குத் தலைவராக இருக்கின்ற
நமது முதல்வர் அவர்கள் அண்ணா வழியில் நடக்கின்றோம் என்று அடிக்
கடி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த மன்றத்திலே சொல்
கிறார்கள். பொது மேடைகளில் சொல்கிறார்கள். வெளியில் நடக்கின்ற
அரசு விழாக்களிலும் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

அப்படிச் சொல்கின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்
நாட்டிலே ஒரு அசாதாரண நிலை இருக்கிறது என்று ஒப்புக்கொண்ட
பின்பும், நாட்டிலே விலைவாசிகள் எல்லாம் எட்டிப் பிடிக்க முடியாத
அளவிற்கு உயர்ந்து கொண்டு போகின்றன என்று தெரிவித்த பின்னு
லும், நாட்டிலே இன்றைய தினம் படி அரிசி 7 ரூபாய், 8 ரூபாய்க்கு
விற்றுக்கொண்டிருப்பதை அறிந்து புரிந்து வைத்திருக்கின்ற பின்னும்
தமிழகத்தின் வருவாய் 501 கோடி ரூபாயாக இருந்தும் இன்றைய தினம்
படி அரிசி போடுவதற்கான முயற்சியை எடுத்துக்கொள்ளவில்லை என்
பதைத்தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மிக
வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அண்ணா அவர்கள் சென்னையிலும் கோவையிலும் படி அரிசி அளித்
தார்கள். அதைப் போலவே நமது முதல்வர் அவர்கள் சென்னையிலும்
கோவையிலும் அளிக்கவில்லை. பஞ்சத்தால் வாடுகின்ற மூகவை மாவட்ட
மக்களுக்கு உடனடியாகப் பரிகாரத்தை இந்த நிதி நிலை அறிக்கையில்
தருவோம் என்று நிச்சயமாகச் சொல்லவில்லை.





ஆளுநர் உரையிலும் சரி, நம்முடைய முதல்வர் அவர்கள் தாக்கல்
செய்துள்ள நிதி நிலை அறிக்கையிலும் சரி, 6 மாத, 7 மாத காலத்திற்
கான திட்டங்களை வகுத்து, அதன்மூலம் அந்தப் பகுதி வறட்சியை நீக்கிவிட
லாம் என்று தான் இன்றைய தினம் அவர்கள் கருதிக்கொண்டு இருக்கிறார்
கள். இது எப்படி முடியும் என்பதைத்தான் எங்களால் புரிந்துகொள்ள
முடியவில்லை. ஆனால், வெளியில் உள்ளவர்கள் என்ன சொல்கிறார்கள்
என்றால், இதற்கு முன்னால் பல்வேறு துறைகளில் இருந்த பாக்கி வேலை
களைத்தான் இப்போது மேற்கொண்டு இருக்கிறார்களே தவிர வறட்சி
நிவாரணத் திட்டத்தின்கீழ் எந்த விதமான பணிகளையும் துவங்கப்பட
வில்லை என்று இன்றைய தினம் நாட்டிலே மக்கள் சொல்லிக்
கொண்டு இருக்கிறார்கள். ஆனால், அடிப்படையில்தான் இன்றைய தினம்
இந்த நிதிநிலையில் வறட்சிகரமான சூழ்நிலையை எங்களால் பார்க்க
முடிகிறது.

கல்வி மானியத்திற்குக் கல்வி மானிய இனத்தில் 118 கோடி ரூபாய்
ஒதுக்கியிருக்கிறார்கள். நான் உண்மையிலேயே பாராட்டக் கடமைப்
பட்டிருக்கிறேன். கல்விக்காக ரூ. 54 கோடியிலிருந்து—இன்றைய தினம்
திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ரூ.118 கோடியாக உயர்த்தியிருக்
கிறது. ஆனால், 118 கோடி ரூபாய் கல்விக்குச் செலவழிக்கின்ற இந்த
அரசாங்கம் அண்ணா சொன்ன கொள்கையை "Tap the rich pat the poor"
என்ற கொள்கையை பின்பற்றுகின்றார்களா என்றால் இல்லை.

கல்விச் சலுகையைப் பொறுத்த வரையில் பணக்காரர்களுக்கு ஒரு
விதம், ஏழைகளுக்கு ஒரு விதம் என்ற முறையில் கல்வி நிலைமையை
மாற்றி அமைத்து இருக்கிறார்களா என்றால் அந்த மாற்றம் எதையும்
காணவில்லை. அண்ணா அவர்கள் புகுமுக வகுப்பு வரைக்கும் கல்லூரியில்
இலவசக் கல்வி கொடுத்தார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்தப் பெருமை அண்ணா
வுக்குப் போவதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. ஆனால், நான் முதல்
அமைச்சர் ஆன பிறகுதான் பி.யூ.சி. வரை இலவசக் கல்வியைக்கொண்டு
வந்தேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : நீங்கள் புகுமுக வகுப்பு வரை இலவசக்
கல்வி கொடுத்தீர்கள். ஆனால், அண்ணா சொன்ன கொள்கையின் அடிப்
படையில் நிறைவேற்றினீர்களா ? இந்தச் சலுகை யாருக்கு எல்லாம்
போகிறது? பணக்காரர்களுக்கும் போகிறது, ஏழை எளியவர்களுக்கும்
போகிறது. ஆனால், அண்ணா சொன்ன தத்துவத்தை, லட்சியத்தை,
நீங்கள் இந்தக் கல்வித் துறையில் பின்பற்ற முன் வந்தீர்களா என்பதை
எண்ணிப் பார்க்க வேண்டும்.

கிராமத்திற்குச் சென்றால் உடுத்துவதற்கு உடையில்லாமல், உண்னு
வதற்கு உணவில்லாமல், புத்தகங்கள் வாங்க வழியில்லாமல், கோவணத்
துணிகளை உடுத்திக் கொண்டு, சிறுவர்கள், இன்றைய தினம் [illegible]

மெய்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பொருளாதார நிலைமை, இத்தனை கோடி ரூபாயை இந்த அரசாங்கம் வருமானமாகப் பெற்ற பின்னாலே, ரூ. 118 கோடியைக் கல்விக்காக ஒதுக்கிய பின்னாலே, இன்றைய தினம் இருக்கிறது. இதை அரசாங்கம் மாற்றலாம்.

"Tap the rich and pat the poor" என்ற தத்துவத்தை முழுமை யாக நூற்றுக்கு நூறு கல்வி இலாக்காவிலே நமது அரசாங்கம் கடைபிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கி றேன். கல்வியமைச்சரோ, முதலமைச்சரோ, சொல்லலாம், பணக் காரர்களுடைய பிள்ளைகள் சம்பளம் கொடுத்து படிக்கக்கூடிய பெரிய பள்ளிக்கூடங்களிலே படிக்கிறார்கள். அல்லது கல்லூரிகளிலே படிக்கிறார் களென்று. ஆனால், நான் சொல்வதெல்லாம், இந்த நாட்டிலிருக்கிற ஏழை எளியவர்கள் குறைந்தபட்சம் ஒரு கல்வித் தகுதியைப் பெறு வதற்கு இலவசக் கல்வி தருவது மாத்திரமல்லாமல்—அதாவது, சம்பளம் கொடுக்காமல் படிக்க வைப்பது மாத்திரமல்லாமல்—அவன் குறைந்தபட்சக் கல்வியைப் பெறுகிற வரைக்கும் இலவசமாக உணவு, இலவசமாக உடை, இலவசமாகப் புத்தகங்கள் இவற்றை வாங்கிக் கொடுக்க இந்தத் திட்டத்திலே எதாவது இருக்கிறதா என்றால், நிச்சய மாக இல்லை.

இலவசக் கல்வியிருக்கிறது. ஆனால், எல்லோரும் இலவசக் கல்வியைப் பெற முடிகிறதா என்றால் இல்லை, பணக்காரர்களே இந்த இலவசக் கல்வி யைப்பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு இந்த நிதி நிலை அறிக்கையிலே பல கோளாறுகள், குறைபாடுகள் இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அதைப் போல், அடுத்ததாக, மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்தவர் களுக்கு ரூ. 2 கோடியிலே 5,000 வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கு இந்த ஆண்டிலே ஏற்பாடு செய்யப்படும் என்று நிதி நிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால், எனக்கிருக்கிற சந்தேகம் ரூ. 2 கோடிக்கு 5,000 வீடுகள் கட்டுவதென்றால், ஒரு வீட்டிற்கு ரூ. 4,000 ஆகிறது. அந்த ரூ. 4,000-ஐ அரசாங்கம் மானியமாகக் கொடுக்கிறதா, அல்லது அந்த வீட்டில் மீனவர்கள் குடியேறுகின்ற காலத்திலே, அதற்கு வாடகை கொடுக்க வேண்டுமா, என்பதற்கு எந்த விதமான விளக்கமும் நிதி நிலை அறிக்கையில் இல்லை. அந்தச் சந்தேகம் எனக்கு எதற்கு எழுகிறது என்றால், இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால், அடையாறுக்குப் பக்கத்திலேயிருக்கிற இந்திரா நகர்ப் பகுதியில் ஒரு பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளப் போயிருந்தேன். அங்கேயிருக்கிற காலனியைச் சேர்ந்த வர்கள் ஒரு கடிதத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு அண்ணா வின் காலத்தில், வீட்டு வசதி வாரியத்தினர் வீடுகளைக் கட்டித் கொடுத் திருக்கிறார்கள். கீழேயுள்ள வீட்டிற்கு ரூ. 6,000 என்றும், மேலேயுள்ள வீட்டிற்கு ரூ. 5,000 என்றும் சொல்லி, அவர்களெல்லாம் குடியேறி ஏறத்தாழ 6, 7 ஆண்டுகள் கடந்த பின்னால், இன்றைய தினம் அந்த என்ன நிலைமையிருக்கிறது? ரூ. 6,000 கொடுத்தால் போதும் என்று



அன்றைக்குச் சொன்ன அந்த கீழ்ப் பகுதிக்கு ரூ. 10,000 கேட்கிறார்கள். அதைப்போல், ரூ. 5,000 கொடுத்தால் போதும் என்று சொன்ன மாடி வீடுகளுக்கு இன்றைக்கு ரூ. 8,000 கேட்கிறார்கள் என்று என்னிடம் புகார் கொடுத்திருக்கிறார்கள். நான், இதை எதற்குச் சொல்கிறேன்? இந்த நிதிநிலை அறிக்கையிலே தெளிவாக இல்லை . . . . . .

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவரவர்களே, அந்த வீடுகளுக்கு கீழே ரூ. 10,000 மேலே ரூ. 8,000 கேட்கிறார்கள் என்று சொல்கிறார். எந்த வகையில் கேட்கிறார்கள் ?

திரு. க. உரொ. எட்மண்ட் : அடையாறு பகுதியிலே, ஷெனாய் நகர், இந்திரா நகரிலே, ஹவுசிங் போர்ட் வீடுகளுக்கு ஏறத்தாழ, 6, 7 ஆண்டு களுக்கு முன்னால், அண்ணா அவர்களது தீ பிடிக்காத வீடுகளைக் கட்டிய திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட வீடுகள் . . . . . .

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவரவர்களே, எதிர்க்கட்சித் தலை வர் அவர்கள், குடிசை மாற்று வாரியத்தைப் பற்றி பேசுகிறார்களா ? வீட்டு வசதி வாரியத்தைப் பற்றி பேசுகிறார்களா என்று தெரியவில்லை. (குறுக்கீடு) ஹவுசிங் போர்ட் பற்றி பேசினார்கள். முன்பு நிலக் கிரயம் ரூ. 5,000 என்று வாங்கப்பட்டது. ஆனால், அந்தக் கிரயம் போதாது என்று சொல்லி, சிலபேர் வழக்காடி, அதிகமாக தொகை கொடுக்க வேண்டுமென்று உத்தரவு வந்திருக்கிறது. அந்த உத்தரவு வந்து, தொகையை வசூலிக்க வேண்டிய கட்டாயத்திலே, வீட்டு வசதி வாரியம் இருக்கிறது. வசூலிக்கப்பட்டால், ஆடிட் அப்ஜெக்சன் வரும். நம்மு டைய சட்ட மன்றமும் கேள்விகள் எல்லாம் கேட்கும். அந்தத் சூழ் நிலையில், பின்னால் கூடக் கொடுக்க வேண்டுமென்றால், கொடுக்க வேண்டு மென்றுதான் அப்பொழுது மனையே ஒதுக்கப்பட்டது.

திரு. க. உரொ. எட்மண்ட் : அவர்கள் சொல்வதெல்லாம், அன் றைக்கு ரூ. 6,000 கேட்டார்கள். இன்றைக்கு அதற்கு ரூ. 10,000 கேட்கி றார்கள். மேலேயுள்ள வீடுகளுக்கு ரூ. 5,000 கேட்டார்கள். இன் றைக்கு ரூ. 8,000 கேட்கிறார்கள் என்று எங்களிடம் புகார் கொடுக்கிறார்கள். எனக்கிருக்கிற சந்தேகம் எல்லாம், இன்றைக்கு மீனவர்களுக்கு 5,000 வீடுகள் கட்ட ரூ. 2 கோடி ஒதுக்கியிருக்கிறீர்கள். ஒரு வீட்டிற்கு ரூ. 4,000 ஆகிறது. அந்த வீடுகளை அவர்களுக்கு இலவசமாகக் கொடுக்கப் போகிறீர் களா அல்லது . . . .

திரு. இராம். அரங்கண்ணல் : மன்னிக்க வேண்டும். நான் குறுக் கிடுவதற்காக. குடிசை மாற்று வாரியம் கட்டிக் கொடுப்பதைப் போலவே மீனவர்களுக்கு வீடு கட்டுகின்ற திட்டமும் இருக்கிறது. ஒரு வீடு கட்ட, உதாரணத்திற்கு ரூ. 8,000 செலவாகிறது. அதிலே ரூ. 5,000-ஐ மானியமாக அரசு கொடுத்து விடுகின்றது. அவருடைய கணக்கிலே ரூ. 4,000 தான் வருகிறது. அந்த ரூ. 4,000-க்குக் கணக்கிட்டு, மாதம

ஒன்றுக்கு ரூ. 45 வாடகை வாங்க வேண்டும். ஆனால், ரூ. 45 கூட வாடகையாக வாங்காமல் ரூ. 15 தான் வாடகையாக வாங்கப்படுகிறது. அதிலே ஏற்படுகிற ரூ. 30 நஷ்டத்தைக் கூட அரசுதான் ஏற்கிறது.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர், வீட்டு வசதி வாரியத்தாலே கட்டப்பட்ட வீடுகளுடைய விலைகள் ஏறியிருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நிலத்தினுடைய விலை, எதிர்பாராத விதமாக, நிலச் சொந்தக்காரர்கள், ஹைகோர்ட்டுக்குப் போனதால், நிலத்தினுடைய விலைதான் ஏறியிருக்கிறதே தவிர, கட்டப்பட்ட வீடுகளின் விலை ஏறவில்லையென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பொழுது கிருஷ்ணா டைல்ஸ், ஓடு செய்கின்ற தொழிற்சாலையின் உரிமையாளரிடமிருந்து நிலம் வாங்கப்பட்டிருக்கிறது. நிலத்தை நாம் வாங்கிய பிறகு, அவர்கள் விலையை ஏற்றவேண்டுமென்று ஹைகோர்ட்டுக்குப் போய், ஹைகோர்ட் ரூ. 30 இலட்சம் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறது. ஹைகோர்ட் தீர்ப்பை எதிர்த்து, சுப்ரீம் கோர்ட்டுக்குப் போயிருக்கிறோம். ஆகவே, நிலத்தின் விலைக்குக் காரணமே ஹைகோர்ட்டிலே அளிக்கப்படுகிற தீர்ப்புகளே தவிர, மற்றப்படி வீட்டு வசதி வாரியத்தால் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மனையை விற்கும்போதே, மனையின் விலை கோர்ட்டுகளிலே நிர்ணயிக்கப்படும்போது, அதற்கான, விலையேற்றத்தை வீடுகளிலே குடியிருப்பவர்கள், தர வேண்டுமென்ற நிபந்தனையோடுதான், விற்றிருக்கிறோம் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார். கனம் அமைச்சரவர்கள், கூறியதிலிருந்து, தனிப்பட்டவர்களிடத்திலேயிருந்து எடுக்கக்கூடிய இடங்களுக்கு அரசாங்கம் கொடுக்கின்ற பணம் போதவில்லை, சரியில்லை என்று அவர்கள் கோர்ட்டுக்குப் போன பிறகு ஹையர் காம்பன்சேஷன் கொடுக்கவேண்டியிருக்கிறது. அதன் பேரில், வீட்டை வாங்கியவர்களிடமிருந்து வாங்குகிறது, ஹவுசிங் போர்ட் என்று, தெரியவருகிறது. ஆனால், அதுவே அதிகமாக இருக்கிறது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். சமீபத்திலே பத்திரிகையிலே பார்த்தோம், ஹவுசிங் போர்ட் ஏலம் விட்ட ஒரு இடம் ரூ. 1 இலட்சத்துக்குப் போனதாக. இப்படி, ஹவுசிங் போர்ட் ஆக்ஷன் மூலமாக, ரூ. 1 இலட்சத்துக்கு மனையை விற்பார்களானால், அது எந்த அளவுக்கு நிலமில்லாதவர்கள் நிலம் வாங்கும்போது பாதகம் ஏற்படுத்தாது என்பதற்கு விளக்கம் தேவை.

மாண்புமிகு திரு க. இராசாராம் : அந்த நிலத்தைப் பொறுத்தவரையிலே, கடைகள் கட்டுவதற்காக, வியாபாரிகள் மத்தியிலே வந்த போட்டியே தவிர நடுத்தர மக்கள் குறைந்த வருமானம் உள்ளவர்கள் ஆகியோருக்குக் குறைந்த விலையில் வீடுகள் விற்கவேண்டுமென்றுதான் கருதுகிறோம்.*

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்ிணங்க அகற்றப்பட்டது.





மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : நீதிபதிகளுக்கு நோக்கம் கற்பிக்கிற மாதிரி சொல்வது சரியல்ல.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்கள் ஒரு வழக்கறிஞர். இருக்கிற சூழ்நிலை அது. இன்னும், நான் சொல்லவேண்டுமானால், யாரோ ஒருவர் போய் நிலத்தை வாங்கி, அதிக விலை கொடுத்து வாங்கிய பிறகு, வீட்டு வசதி வாரியத்தாலே மட்டும் ஏன் குறைவாகக் கொடுக்கப்படுகிறது என்று கூறியிருப்பதாக எனக்குத் தகவல் வருகிறது, அதனால் சொல்லுகிறேன். பல பேருக்கு நாட்டு நிலவரம் தெரிவதில்லை. ஆகவே தான் இந்தமாதிரி சூழ்நிலை வருகிறதே தவிர, குறைந்த, நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்குக் குறைந்த செலவில் வீடுகள் வழங்க வேண்டுமென்பதுதான் வீட்டு வசதிவாரியம் உருவாக்கப்பட்டதின் நோக்கம். அந்த வகையில்தான், தமிழ் நாடு முழுவதும் நிலங்களை ஆர்ஜிதப்படுத்தி, குறைந்த நடுத்தர வருமானமுள்ளவர்களுக்கு விற்றுக்கொண்டு வருகிறோம். ஏதோ, ஒரு இடத்தில் நடந்தால், அதை வைத்துக் கொண்டு எல்லா இடங்களுக்கும் ஒன்று என்று சொல்லக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீதிபதிகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்ன நேரத்தில், *** என்றுசொன்ன அந்தக் கருத்தை மாத்திரம் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குகிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு நான் மேற்கொண்டு பேசுவதற்கு விரும்பவில்லை. மீனவர்கள் வீட்டுப் பிரச்சினை பற்றிக் கூட முதலமைச்சர் அவர்கள் என்னிடம் சொன்னார்கள். ஆயிரம் வீடுகள் எப்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவசமாகக் கட்டித் தரப்படுகிறதோ அதைப்போல் மீனவர்களுக்கும் இலவசமாக வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையிலே அது தெளிவாக இல்லை என்ற காரணத்தாலே சந்தேகத்தை எழுப்பினேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நிதிநிலை அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். அரிசனங்களுக்கு வீடு கட்டித் தருவதைப் போல், மீனவர்களுக்கும் கட்டித்தரப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அரிசனங்களுக்கு இல்வசமாக வீடு கட்டித் தரப்படுகிறது. அதைப் போல் மீனவர்களுக்கும் கட்டித்தரப்படும் என்றுதான் பொருள். குடிசை மாற்று வாரியத்திற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

*** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

திரு. எம். சுரேந்திரன் : காலையில் ஒரு கேள்விக்குப் பதில் சொல் லும்போது மீனவர்களுக்குக் கட்டிக் கொடுக்கும் வீடுகளுக்கு 75% மானியமாகவும், 25% கடனாகவும் அளிக்கப்படுகிறது என்று சொன்னார் கள். இப்போது முதலமைச்சர் அவர்கள் சொன்னது வேறு மாதிரியாக இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது பூம்புகார் சிறப்புத் திட்டத்தில் நடைபெறுவது. பூம்புகாரைப் புதுப்பிக்க முயற்சி எடுத் துக் கொண்ட போது மீன் இலாகா சார்பாகவும், அரசு சார்பாகவும், அங்குள்ள மீனவர்களுக்கு ஒரு அறிவிப்புச் செய்யப்பட்டது. கலைக்கூடங் கள் மட்டும் கட்டுவது போதாது ; அந்தப் பகுதியில் வாழ்ந்து கொண் டிருக்கும் ஏழை எளிய மக்களுக்கு, கடற்கரை ஓரத்தில் வாழும் மீனவ மக்களுக்கு வீடுகள் கட்டித்தரப்படும் என்று அறிவிக்கப் பட்டது. அவர்களுக்காக 500 வீடுகள் கட்ட 22 லட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. நாம் கட்டுகின்ற கலைக்கூடத்திற்குச் செலவு ஏறத்தாழ 22 லட்சம் ரூபாய்; மீனவர்களுக்காக வீடுகள் கட்டுவதற்கான செலவும் 22 லட்சம் ரூபாய் ; அதிலே 75 சதவிகிதம் மானியமாகவும், 25 சதவிகிதம் கடனாக 20 அல்லது 30 ஆண்டு காலத் தவணையில் செலுத்த வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அது வேறு திட்டம், இது வேறு திட்டம். இந்தத் திட்டம் வந்த பிறகு அதுவும் இதிலே இணைய வேண்டுமென்ற முறையிலே வரலாம். பிறகு அதுபற்றி அரசு முடிவெடுக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். அரிசனங்களுக்கு கட்டப்பட்ட வீடுகளில் இருப்பவர்களுக்கு இதுவரை 10 ரூபாய் வாங்கப்பட்டு வந்தது—அதிலே இருப்பவர்கள் அரசாங்க ஊதியத் தில் இருந்தால் எச். ஆர். ஏ. தவிர சம்பளத்தில் 10 சதவிகிதத்தையும் தரவேண்டுமென்று கூறி 40 ரூபாய் அவர்கள் கட்டக் கூடிய நிலைமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது பாயிண்ட். ஆப் ஆர்டர் அல்ல. பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன் என்று கேளுங்கள். ஹவுசிங் மானியம் வரும்போது இதைப் பற்றிக் கேளுங்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட் : நம்முடைய அரசாங்க ஊழியர்களுக்கு இன்றைபதினம் கிராக்கிப்படியை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். இதிலே அரசாங்க ஊழியர்கள் திருப்தி அடையவில்லை. அந்த அதிருப் திக்கு எங்களைப் பொறுத்தமட்டில், நியாயம் இருக்கிறது, காரணங்கள் இருக்கின்றன என்பதை இந்த மன்றத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். கிராக்கிப்படி கொடுத்திருக்கிறீர்கள். 500 ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்குகிறவர்களுக்கு எந்தவிதமான நிவாரண மும் கிடைக்கவில்லை. கிராக்கிப்படிக்கு 100 ரூபாய் என்று சீலிங் போட்டி ருக்கின்றார்கள்.



இன்றையதினம் வேறு ஒரு கோரிக்கையும் அவர்கள் வைத்திருக் கிறார்கள். பொதுவாக அரசாங்க ஊழியர்கள் நகரங்களில் வாழ்கிறவர் கள்; சென்னை கோவை போன்ற ஜனத்தொகை நெருக்கமுள்ள இடங் களில் குடியிருக்கிறவர்கள். அவர்கள் புழுங்கல் அரிசியோ, பச்சரிசியோ படி மூன்று ரூபாய் வீதத்தில் எங்களுக்குக் கொடுக்க வழி வகை செய்ய வேண்டுமென்ற நியாயமான கோரிக்கையை வைத்திருக் கிறார்கள். அண்ணாவின் காலத்தில் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்டார்கள். இன்றைக்கு நம்முடைய அரசு ஊழியர்கள் மூன்று ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்டால் போதும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதைப் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் எந்த விதமான விளக்கம் இல்லை. மேலும் அரசு ஊழியர்கள பல ஊர் களிலிருந்து வந்து வேலைக்காக ஒரு இடத்தில் பணியாற்றுகிறவர்கள். அவர்கள் ஆண்டுக்கு ஒரு முறையாவது தங்கள் சொந்த ஊருக்கு விடு முறையில் குடும்பத்தோடு சென்று வர, அரசாங்கப் பேருந்துகளில் இலவச மாகப் போய்வர வசதிகள் கேட்டிருக்கிறார்கள். அதைக்கூட இந்த அரசாங்கம் செய்து கொடுக்கவில்லை. நமக்கு அரசாங்கப் பேருந்துகளில் இலவசமாகச் செய்ய வழி செய்திருக்கிறார்கள். நாடாளுமன்ற உறுப் பினர்கள் கூட அவர்கள் ரயில் பாஸ் வைத்திருந்தாலும் கூட—அர சாங்கப் பேருந்துகளில் இலவசமாகச் சென்று கொண்டிருக்கிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குச் சலுகை கொடுக்கும்போது இந்த மா நிலத்திலே பணியாற்றிக் கொண்டிருப்பவர்களுக்கு இந்த அரசாங்கத்தின் வளர்ச்சிக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற அரசாங்க ஊழி யர்களுக்கு இதைச் செய்து கொடுப்பதில் எந்தவிதமான தயக்கமும் கூடாது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அதைப் போல் நகரப் புறங்களில் வேலை செய்யக் கூடிய அரசாங்க ஊழியர்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருக்கும் ஹவுசிங் போர்டு வீடுகளில் குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வேலையில் சேர்ந்து ஓய்வுபெற்று போகும்வரை மாதம் 150 வீதம் வாடகை கொடுக்கிறார்கள். 20 ஆண்டு காலம் 30 ஆண்டு காலம் அந்த வீடுகளில் குடியிருந்து விட்டு பணிக்காலத்தில் ஆயிரக்கணக்கான ரூபாயை வாடகையாக இழந்து விட்டு ஓய்வு பெற்று போகிற நேரத்தில் இந்த வீட்டுக்கும் அவர்களுக்கும் எந்தவிதமான பந்தமும் இல்லை என்ற அடிப் படையில் அவர்கள் போவது நியாயமா என்பதை அரசாங்கம் எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படி எண்ணிப் பார்ப்பார்களேயானால் அந்த அரசாங்க ஊழியர்கள் அந்த வீடு தங்களுக்குச் சொந்தமாக்கப்பட வேண்டு மென்று விரும்பினால் அதை கொடுப்பதற்கான முயற்சியை இந்த அர சாங்கம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நம்முடைய மருத்துவத் துறையைப் பொறுத்தமட்டில் வேலூர் சி.எம்.சி. மருத்துவ மனையில் பல்வேறு தகராறுகள், சச்சரவுகள் நடை பெற்றுக்கொண்டிருக்கின்றன. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூட காங்கிரஸ் கட்சித் தலைவர் மாண்புமிகு திரு.பொன்னப்ப நாடார் அவர் களுக்குப் பதில் சொல்லுகின்ற நேரத்தில் இது அரசாங்கத்திற்குக் கவுரவப் பிரச்சினையாகிவிட்டது என்று கூறுவது முதலமைச்சருக்கு உகந்ததா என்று பணிவோடு கேட்க விரும்புகிறேன்.

__மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி__ : அரசாங்கத்திற்குக் கவுரவப் பிரச்சினை என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை. தொழிலாளர்களை யும் கூப்பிட்டுப் பேசித் தீர்க்கின்ற பிரச்சினை என்றுதான் சொல்லியிருக் கிறேன்.

__திரு. க. உரொ. எட்மண்ட்__ : "இந்த பிரச்சினையில் அவர்கள் பணிய மாட்டேன் என்கிறார்கள். இது அரசா? அல்லது மருத்துவ மனையா?...." என்று அவர்கள் சொன்ன காரணத்தால்தான் நான் இதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

75 ஆண்டுகளுக்கு முன்னால் இந்த நாட்டுக்குச் சொந்தம் இல்லாத வர்கள், இந்த நாட்டின் நலனில் அக்கறைப்படத் தேவையற்றவர்கள், வெளிநாட்டினைச் சேர்ந்த பெண்மணி 'ஐடா ஸ்கட்டர்' என்பவர் இந்த மருத்துவ மனையை ஆரம்பித்திருக்கிறார். இன்றைக்குத் தமிழ்நாட் டில் வேறு அரசாங்க ஆஸ்பத்திரிகள் குணப்படுத்த முடியாத பெரிய வியாதிகளையெல்லாம் வேலூர் சி.எம்.சி. ஆஸ்பத்திரியில் குணப்படுத்து கிறார்கள். ஏழைகள் பயனடைகிறார்கள். பணக்காரர்களும் பயனடை கிறார்கள். வசதியுள்ளவர்களிடம் பணம் வாங்குகிறார்கள். வசதியற்றவர் களுக்கு இலவசமாக மருத்துவ சிகிச்சை அளிக்கிறார்கள். அப்பேர்பட்ட உலகப் புகழ் வாய்ந்த மருத்துவ மனையில் சில விரும்பத்தகாத சச்சரவுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 15 தொழிலாளர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் அதை அரசாங்கம் பெரியதாக எடுத் துக் கொள்ளக்கூடாது. தொழிலாளர்களுக்கும் நிறுவனத்திற்கும் இடை யே தகராறு இருக்கிறது. அதைத் தீர்க்க தொழில் கோர்ட்டுகள் இருக் கின்றன. டிரிப்யூனல் இருக்கிறது. அரசாங்கம் சொல்லுகிற சமரசத்தை எல்லாம் நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லுவது அரசாங்கத்தின் பிடிப்பைக் காட்டுகிறதே தவிர அரசாங்கத்தின் கவுரவப் பிரச்சினையைத்தான் காட்டுகிறதே தவிர வேறல்ல. அது தொழில் கோர்ட்டுகளில் தீர்த்துக்கொள்ளக்கூடிய ஒன்று.

__மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி__ : தலைவர் அவர்களே, தொழிற் சங்கச் சட்டத்திற்குள்ளே அந்த நிறுவனம் வராது என்பதைத் தெரி வித்துக் கொள்ளுகிறேன்.

__திரு. க. உரொ. எட்மண்ட்__ : இதை அவர்களே பேசி முடிவு செய்து கொள்ளலாம். அரசாங்கம் இதிலே தலையிட வேண்டிய அவசி யம் இல்லை. லேபர் கோர்ட்டுக்குப் போக முடியவில்லை என்றால் நீதி மன்றத்திற்குச் செல்லலாம்.

__திரு. எஸ். வடிவேல்__ : தொழில் கோர்ட்டுக்குப் போக வக்கற்ற அந்தத் தொழிலாளர்களுக்காக நம்முடைய மாநில அரசு தொழிலாளர் வர்க்க நலனைக் கருதி சமரசம் செய்வது சாலச் சிறந்த கொள்கையாகக் கருதுகிறேன். அவர்கள் மீது இரக்கம் காட்ட வேண்டுமே தவிர, எப்படி





வேண்டுமானாலும் போகட்டும் என்று சொன்னால் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான நியாயமும் கிடைக்காமல் போய்விடும். அரசு தொழிலாளர் நலனைப் பாதுகாக்கும் நடவடிக்கையை எடுக்கத்தான் வேண்டும்.

(நண்பகல் 12.00)

__திரு. க. உரொ. எட்மண்ட்__ : தலைவரவர்களே, நான் திரு. வடிவேலு அவர்களுக்குச் சொல்லிக் கொள்வதெல்லாம் தொழிலாளர்கள் எப்படியும் போகட்டும் என்ற பொருளில் நான் பேசவில்லை. தொழிலாளர்கள் நியாயம் பெறுவதற்கு நீதிமன்றங்கள் இருக்கின்றன. அவர்களால் முடிய வில்லையென்று வடிவேலு போன்ற நல்ல உள்ளம் படைத்த அரசியல் வாதிகள் கருதினால் நாமே சுமுகமான முடிவிற்கு ஏற்பாடு செய்யலாம். அதை விட்டு விட்டு நிர்வாகத்தையே பழி வாங்குவது நியாயம்தானா என்று இந்த நேரத்தில் கேட்க ஆசைப்படுகிறேன்.

__மாண்புமிகு திரு. க. அன்பழகன்__ : தலைவரவர்களே, எதிர்க்கட்சி வரி சையில் இருக்கிற நண்பர் அவர்கள் அரசாங்கம் ஏதோ நிர்வாகத்தைப் பழி வாங்குகிறது. அரசாங்கம் தானாக தலையிட்டது என்று சொல்வது உண் மைக்கு மாறானதாகும். அந்த நிர்வாகிகளும் சேர்ந்துதான் சமாதானம் செய்து வையுங்கள் என்று வந்தார்கள். $1\frac{1}{2}$ மணி நேரம் பேசப் பட்டது. முதலில் நீக்கப்பட்ட 5 பேர்களைப் பற்றிய பிரச்சினை இல்லை. பின்னால் தொடர்ச்சியாக 15 தொழிலாளர்களை நீக்கியிருக்கிறீர்கள், அவர் களைத் திரும்ப வேலைக்கு சேர்த்து சமாதான முறையில் மருத்துவ மனையை நடத்துங்கள் என்று ஆலோசனை வழங்கியதை ஏற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையோடு வந்த தலைவர் திரும்பிப் போனார். அங்கே உள்ள ஒரு குறிப்பிட்ட சிறுபான்மைக் கூட்டம் இந்த சமரச முடிவை ஏற்றுக்கொள்ளாமல் பிடிவாதம் செய்கிற காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. வந்த தலைவர் புரிந்து கொண்டு செயல்பட நினைத்தா லும் அந்த சிறுபான்மைக் கூட்டம் ஒத்துப்போக மனமற்ற நிலையில், இதில் ஏதோ அரசாங்கம் தலையிட்டு கெடுத்து விட்டதுபோல அரசியல் கட்சி என்ற முறையிலே நியாயம் கற்பிக்கலாம். ஆனால் நாட்டின் நிலைமைக்கு ஒத்து வராது.

__திரு. க. உரொ. எட்மண்ட்__ : நான் சொன்ன கருத்தெல்லாம் அரசாங் கம் சில நிபந்தனைகளைச் சொன்னது. ஒரு சுமுகமான நிலைமை ஏற்பட வேண்டுமென்பதற்காக ஒரு யோசனையைச் சொன்னது. இது அரசாங் கத்தைப் பொறுத்த மட்டில் நல்ல யோசனையாக இருக்கலாம். ஆனால் நிரவாகத்தைப் பொறுத்தவரையில் அவர்களுடைய சூழ்நிலைக்கு அது ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்றாக இருக்கலாம். மேலும் அவர்களோடு பேசி பரிகாரத்திற்கு வழிவகை தேட வேண்டுமே தவிர்த்து தாங்கள் சொன்னதைக் கேட்கவில்லை, தங்களுடைய நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள வில்லை, தாங்கள் சொன்னதற்குக் கட்டுப்படவில்லை என்ற காரணத்திற்காக இப்பேர்ப்பட்ட ஒரு தலைசிறந்த பொதுமக்களுக்குத் தொண்டாற்றுகிற

[திரு. க. உரோ. எட்மண்ட்] [1975 மார்ச் 10

ஒரு நிர்வாகத்தைப் பழி வாங்குவது நியாயம்தானா என்பதை இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன். அமைச்சரவர்கள் சொல்கிறார்கள், நாங்கள் பழி வாங்கவில்லையென்று, ஆனால் பழி வாங்கவில்லையென்று....

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன்</u> : பிரச்சனையை எதிர்க்கட்சித் தலைவ சவர்கள் தம் பேச்சை மாற்றுகிற முறையில் மாற்றுகிறார். பிரச்சினை என்னவென்றால், போராட்டம் நடத்துகிற தொழிலாளர்களுக்கும், நிர்வா கத்திற்கும் போராட்டம். அரசாங்கம் தானாக தலையிட்டது என்பது உண்மை யல்ல. அரசாங்கத்தை இரண்டு சாராரும் சேர்ந்து சமாதானம் செய்து வையுங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். இங்கே அதை ஒத்துக் கொள்வதுபோல இங்கே பேசுகிற போது வந்த தலைவர் சொல்லி திரும்பிச் சென்றார்கள். ஆனால் அவர் போனதற்குப் பின்னாலே நிர்வாகத்தில் உள்ள ஒரு சிறு சாரார் குறுக்கிட்டு இந்த சமாதானம் திட்டத்திற்கு ஒத்துப் போக இடம் தராமல் மறுக்கிறார்கள். ஆகவே போராட்டம் நிர்வாகத் திற்கும், தொழிலாளர்களுக்கும் இடையேதான். அந்த 15 தொழிலாளர் களை திரும்ப எடுத்துக் கொண்டு பின்னால் முறைப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமானால் நியாயமான குற்றச்சாட்டுக்களைச் சாட்டி விசாரியுங்கள். முறைப்படி விசாரித்து அவர்களை நீக்கலாம் என்ற ஆலோசனையும் சொல்லப் பட்டு விட்டது. அதற்கும் ஒத்துப்போக மாட்டோமென்று இருந்து கொண்டி ருக்கிறார்கள் என்றால் அதை இங்கே உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆதரிக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

<u>திருமதி த. ந. அனந்தநாயகி</u> : தலைவரவர்களே, சி.எம்.சி. தொழிலா ளர் பிரச்னை என்பது அங்கே அடிக்கடி எழுந்துள்ள தொழிலாளர் பிரச்சினை யாகும். நிர்வாகம் கேட்க மறுக்கிறது. ஆகையினாலேதான் நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். சி.எம்.சி. ஆஸ்பத்திரியில் கடந்த சில ஆண்டுகளில் எத்தனை முறை தொழிலாளர் ஸ்டிரைக் நடந்திருக்கிறது. வேறு தொழிலாளர் பிரச்சினை என்றால அவைகளைத் தீர்ப்பதற்கு மார்க்கங் கள் இருக்கின்றன. சிம்ஸன் தொழிலாளர் பிரச்சினை போன்று சி.எம்.சி. தொழிலாளர் பிரச்சினையைப் பார்க்கக்கூடாது. That is Industry, this is hospital அங்குள்ள பிரச்சனை என்னவென்றால் அங்குள்ள தொழிலாளர் கள் அடிக்கடி வேலை நிறுத்தம் செய்து அதனால் வேதனை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இதை அரசு பிரஸ்டிஜ் க்வஸ்சனாகப் பார்க்கக் கூடாது. உங்களுடைய அதிகாரத்தை நிர்வாகத்தின் மேல் திணிக் காமல் சமரசம் செய்ய முயற்சி செய்யுங்கள். வேண்டுமானால் எங்களையும் கூப்பிடுங்களேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : இதைப்பற்றி தனியாக பேச வேண்டுமென்றால் உங்களுக்கு சான்ஸ் வருமே.

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன்</u> : இதிலே இருக்கிற வேதனையெல் லாம் சட்டசபையில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் யாரோ பத்திரிகை களில் எழுதியதை வைத்துக் கொண்டு பலவற்றை இங்கே பேசுகிறார்கள். வேலூரில் இந்திராகாந்தி காங்கிரஸ் தலைவர் ஜீவரத்தின முதலியார்—



1975 மார்ச் 10] [திரு. க. அன்பழகன்]

அவரை முதலியார் என்று சொல்லுகிறார்கள்—அந்த ஜீவரத்தின முதலி யார் அவர்கள், சிண்டிகேட் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த லாலா லஜபதி அவர்கள், அண்ணா தி.மு.க. உள்ளிட்ட எல்லோரும் இந்த 15 பேர்களை திருப்பி எடுத்திக் கொள்வதை ஆதரிக்கிறார்கள். ஆனால் இங்கே உள்ள திரு. எட்மண்ட் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இங்கே நாங்கள் உட்கார்ந்திருக்கிற இந்த வரிசைதான் கவனத்திற்கு வருகிறது. நாட்டின் நிலைமை அவர்களுக்கு கவனத்தில்இல்லை.

அங்கே உள்ள பிரச்சனையைப் பற்றி நேற்று இரவு பேசினேன். நேற்று முன்னாள் இரவு பேசினேன். எல்லோரும் சேர்ந்து 15 பேர்களை எடுத்துக் கொள்ளுங்கள் என்கிறார்கள். அவர்கள்மீது சரியான குற்றச் சாட்டு சொல்லப்படவில்லை. ஏற்கனவே நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கு மானால் அந்த நிகழ்ச்சிகளைக் காரணம் காட்டி இந்த 15 பேர்களை நீக்குவது சரியல்ல. நிரவாகம் அவர்கள் ஏற்கனவே கட்டுப்படவில்லையென்று சொல் கிறார்கள். நிர்வாகம் அவ்வப்போது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இப்போது அவர்களை மறுபடி எடுத்துக் கொண்டு இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கண்டு, மறுபடியும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கிற உரிமை நிர்வாகத்திற்கு இருக்கிறது என்று சொன்னதற்குப் பின்னாலும் நாங்கள் எந்தவித சமாதானத்திற்கும் வர மாட்டோம் என்று நிர்வாகம் சம்பந்தப் பட்ட குழு 7, 8 முறை கூடி அந்த முடிவில் இருப்பார்களானால் அதை எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆதரிப்பதுபோல் ஒரு தவறான எண்ணத்தை உண்டாக்க வேண்டாமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. கே.டி.கே. தங்கமணி</u> : தலைவரவர்களே, இந்த விவாதத்திற்குப் பிறகு உறுப்பினர் மிஸஸ் ஃபவுலர் அவர்கள் அந்த நிர்வாகத்தோடு தொடர்பு கொண்டு இங்கு வந்திருக்கிறார்கள். இதுவரையிலும் முதலமைச் சரவர்களை, அரசாங்கத்தைப் பார்த்ததில் உள்ள நிலைமையில் மேலும் எதிர்க்கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசவேண்டுமென்று ஒரு முயற் சியை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த முயற்சிப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் நாங்கள் அந்த அளவிற்கு அரசுக்கு உதவிச் செய்யத் தயாராக இருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன்</u>: அங்குள்ள தொழிற்சங்க தலைவர்கள், அதேபோல சர்வ கட்சித் தலைவர்கள் இவர்களைச் சேர்த்துக்கொண்டு எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசுவார்களானால் நியாயம் எது என்பது அவர்களுக்கு மிகத் தெளிவாக விளங்கும்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : எனக்கு எவ்வளவு தூரம் அதிகாரம் இருக்கிறதென்று தெரியவில்லை. மாண்புமிகு திரு. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். ஏதோ பேச்சுவார்த்தை நறைபெறுகிறது என்றார்கள். பேசி ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்படுமென்றால் அந்த சூழ்நிலை ஏற்பட அந்த அளவிற்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் அதைப் பற்றி இங்கு விவாதிக்காத ஒரு நிலையைக் கடைப்பிடித்தால் நலமாக இருக்கும்.

திரு. க. உ.ரொ. எட்மண்ட் : நான் என்ன பேசப் போகிறேன் என்பதை மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சரவர்கள் பொறுமையோடு கேட்டு வந்தால் இவ்வளவு பெரிய குறுக்கீடுகளுக்கு அவசியம் ஏற்பட்டிருக்காது.

இங்கே இருக்கிற பிரச்சனை, அது நியாயமா, நியாயமில்லையா என்பது அல்ல. நிர்வாகம் ஒழுங்காக நடக்கிறதா, தொழிலாளர்கள் ஒழுங்காக நடக்கிறார்களா என்ற பிரச்சனைக்கும் நான் போகவில்லை. என்னுடைய பிரச்சனையெல்லாம் அரசாங்கம் தலையிட்டு சுமுகமான ஒரு முடிவை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்து அந்த முயற்சிக்கு அங்கேயிருக்கிற நிர்வாகம் பணியவில்லையே என்ற காரணத்தினால் அதை வைத்துக் கொண்டு அந்த நிர்வாகத்தின்மீது பழி வாங்குவது இந்த அரசாங்கத்திற்கு நியாயம்தானா என்பதைத்தான் நான் கேட்டேன். நம்முடைய நல்வாழ்வுத்துறை அமைச்சரவர்கள் எந்த விதமான பழிவாங்கலும் செய்யவில்லை என்று சொன்னார்கள்.

நேற்றைய தினம் டில்லியிலிருந்து வெளிவருகிற பத்திரிகை, ஆங்கிலப் பத்திரிகை, பேட்ரியட் என்ற பத்திரிகையிலே அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அதனுடைய முழு விவரங்களை வாசிக்க வேண்டிய தேவையில்லை. அந்த செய்திக்கு என்ன தலைப்பு கொடுத்திருக்கிறார்கள் என்று அன்னாள் கூர்ந்து பார்க்க வேண்டும். **Tamil Nadu Government at War with Hospital** என்று கொடூரமான சொல்லை அந்த பத்திரிகைக்காரர்கள் உபயோகித்திருக்கிறார்கள். கீழே எழுதியிருக்கிறார்கள். அவைகளை ஆதாரமற்ற செய்தி என்று சொல்ல முடியாது. ஆதாரத்தோடு அந்த பத்திரிகையில் சொல்லியிருக்கிறார்கள். போலீஸ் அதிகாரிகள் அந்த மருத்துவமனையில் பணியாற்றுகிற முக்கிய அலுவலர்களைப் பார்த்து ஒரு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அங்கே 15 பேர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். ஜனவரி 6-ஆம் தேதியிலிருந்து மார்ச் 6-ம் தேதி வரைக்கும் கிட்டத்தட்ட இரண்டு மாத காலத்திற்கு போலீஸ் பந்தோபஸ்து வகைக்காக கட்டணமென்று, அரசாங்கத்திற்கு 5.85 லட்சம் ரூபாய் கட்டவேண்டுமென்று நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார்கள். இப்படி பணம் வாங்கலாமா................

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அவர் முதல் செய்தி 15 பேர் வேலை நிறுத்தம் என்றார்கள். 15 பேர் நீக்கப்பட்டிருக்கிறார்கள். 1,300 பேர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். ஆகவே 15 பேர் வேலை நிறுத்தம் என்ற செய்தி தவறு. அந்த குடும்பங்கள் சோற்றுக்கு கூட வழி இல்லாமல் திண்டாடுகின்றனர். தனிப்பட்ட நிர்வாகத்திற்கு சம்பந்தப் பட்ட நிறுவனத்தில் வேலை நிறுத்தம் நடைபெறுமானால் போலீஸ் இத்தனை பேர்கள் என்று தேவைப்படுமானால் அவர்களுக்கு அதற்குரிய கட்டணத்தை அவர்கள் செலுத்த வேண்டுமென்ற முறை தமிழ் நாட்டில் மட்டுமில்லை, எல்லா அரசாங்களிலும் இந்த முறை இருக்கிறது. தெருவில் இருக்கிறபோது நடைபெற்று விடுமானால் போலீஸ் பாதுகாப்பிற்கு கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. ஆனால் ஒரு அமைப்பிற்குள்ளே நடைபெறுமானால் போலீஸ் பாதுகாப்பு வேண்டுமானால் அதற்குக் கட்டணம் செலுத்துவது என்பது முறைதான்.



திரு க. உ.ரொ. எட்மண்ட் ; தலைவரவர்களே, போலீஷ் எதற்கு இருக்கிறது? நாட்டிலே எங்காவது குழப்பம் ஏற்பட்டால் கலவரங்கள் ஏற்பட்டால், அங்கே போய் தக்க நடவடிக்கைகள் எடுக்க இருக்கிறது. 10 பேர்கள் என்னை வந்து தாக்குகிறார்கள் என்று சொன்னால் பணம் கொடுத்தால்தான் போலீசை அனுப்புவோம் என்றால் என் வர்ப்பணத்தில்தான் அவர்கள் செயல்படுகிறார்கள்....

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அப்படி ஒருவர் திடீரென்று தாக்கப் படுகிறார் என்றால் அதற்காக போலீசில் கட்டணம் வசூலிப்பதில்லை. ஆனால் நிரந்தரமாக பாதுகாப்பிற்கு போலீசை நிறுத்தி வைத்துக் கொள்ள வேண்டும், என்றால் ஸ்பெஷல் போலீசில் இவ்வளவு பேர்கள், அதற்கு இவ்வளவு செலவாகும் என்று இருக்கிறது. அரசாங்கம் இதற்கு பொறுப் பேற்றுக் கொண்டு எப்படி செலவை ஏற்றுக்கொள்ள முடியும் என்பதை யோசிக்க வேண்டும்.

திரு. க. உ.ரொ. எட்மண்ட் : நீதி மன்றத்தில் நீதி பெறுவதற்கு கோர்ட் பீஸ் கட்ட வேண்டுமென்று சொல்வதுபோல எங்களுடைய போலீஸ் பாதுகாப்பிற்கும் கட்டணம் கட்ட வேண்டுமென்று அதற்கும் ஸ்டாம்ப் பீஸ் கேட்கலாம். இது வேடிக்கையாக இருக்கிறது. இரண்டு மாதங்களுக்கு 5.85 லட்ச ரூபாய் இன்றைய தினம் போலீஸ் பாதுகாப்பிற்காக கட்ட வேண்டுமென்று அவர்களைக் கேட்டிருக்கிறார்கள் என்றால் உண்மையில் சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. இதை உங்களுடைய கௌரவப் பிரச்சனை யாக எடுத்துக் கொண்டு, நீங்கள் சொன்னதை அவர்கள் கேட்டுப் பணிய மறுத்ததினால் இந்த நிலைமை இருக்கிறது.

இவ்வளவு காலமாக 75 ஆண்டுகாலமாக அந்த மருத்துவமனை அங்கே நடந்து கொண்டு இருக்கிறது. 75 ஆண்டு காலத்தில் அந்த கமர்சியல் டாக்ஸ் ஆபிசர் அந்த ஹாஸ்பிடல் விளாகத்தில், காம்பௌண்டில் நுழையவில்லை. இன்று புதிதாக நுழைந்து இருக்கிறார்கள். நுழைந்து 1969–70 ஆண்டுக்கு 74 லட்சம் ரூபாய் டர்ன் ஓவர் இருப்பதாகவும், அதற்கு அவர்கள் சேல்ஸ் டாக்ஸ் கட்ட வேண்டுமென்றும், இதற்கு முன்னே கட்டாமல் இருக்கும் வரிக்கு $1\frac{1}{2}$ மடங்கு அபராதம் கட்ட வேண்டுமென்றும் உத்தரவிட்டு இருக்கிறார்கள். என்ன அடிப்படையில் இவ்வளவு காலம் இருந்தீர்கள் ? ஏன் இப்போது செய்தீர்கள் ?

(Thiru N. Veeraswamy rose)

THIRU G. R. EDMUND : I am not yielding. I am sorry. Most of time is taken away by interruptions.

MR. DEPUTY SPEAKER : The hon. Member is not yielding. Are you raising a point of order?

THIRU N. VEERASWAMY : Yes, Sir.

[1975 மார்ச் 10

THIRU G. R. EDMUND : The Chair should not give any sug-
gestion to the hon. Member.

MR. DEPUTY SPEAKER : That is not a suggestion. I want
to know what is the point that he is raising.

திரு. நா. வீராசாமி : என்னுடைய பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ன
வென்றால், ஒரு தவறான தகவலைக் கொடுக்கிறார்கள். 75 ஆண்டு கால
மாக அந்த மருத்துவ மனை இருந்தாலும், 1969-ம் ஆண்டு கால
டாக்ஸ் போட்டு இருக்கிறீர்கள் என்று சொல்லுகிறார்கள். 1969-ம்
ஆண்டுதான் அங்கே மருந்து தயாரிக்கப்போகிறோம் என்று அரசாங்கத்
திற்கு விண்ணப்பம் கொடுத்தார்கள். பொதுவாக, அரசாங்கம் யார்
மருந்து தயாரித்தாலும் அவர்களுக்கு சேல்ஸ் டாக்ஸ், வணிக வரி போடு
வார்கள். அவர்கள் இலவசமாக தரப்போகிறோம் என்று சொல்லி....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயிண்ட் ஆப் ஆர்டர்
என்று சொல்லிவிட்டு விளக்கம் கொடுத்தால் சரியல்ல. தவறான தகவல்
கொடுத்தார்கள் என்று சொல்வது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நண்பர்
எட்மண்ட் அவர்களுடைய பேச்சில் அடிக்கடி குறுக்கீடுகள் தேவையில்லை
என்று கருதுகிறேன். திரு. தங்கமணி, திரு. வடிவேல் போன்றவர்கள்
என்னதான் தி.மு.க. அரசிடம் ஈடுபாடு இல்லையென்றாலும், தொழி
லாளர் பிரச்னை என்று வந்த நேரத்தில் அவர்களையும் அறியாமல்
அக்கறை வந்ததை நாம் பார்த்தோம். திரு. எட்மண்ட் அவர்கள்
தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு தரவேண்டுமென்று சொல்வதற்கு
(குறுக்கீடு) சத்தியா ஸ்டுடியோஸ் விவகாரத்திற்குப் பிறகு தொழிலாளர்கள்
பக்கம் நீங்கள் இருப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கில்லை.

திரு. க. உரொ. எட்மண்ட் : எங்களுடைய தலைவர் அந்த ஸ்டுடி
யோவை அங்கே பணியாற்றும் தொழிலாளர்களுக்குச் சொந்தமாக
ஆக்கித் தந்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தொழிலாளர்களுக்குச் சொந்த
மாக ஆக்கியிருந்தாலும், அந்த ஸ்டுடியோவில் படப்பிடிப்பு நடப்பது
இல்லை. உங்கள் தலைவர் நடிக்கும் படங்கள்கூட அங்கே எடுக்கப்பட
வில்லை.

திரு. க. உரொ. எட்மண்ட் : நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் ஒரு தவறான தகவலை, கருத்தைச் சொல்கிறார்கள். தொழி
லாளர்களுக்கு மாற்றிக்கொடுத்துவிட்டு, அதிலே எந்தவிதமான படப்
பிடிப்பும் நடக்கவில்லை என்று சொல்வது தவறு. அங்கே படப்பிடிப்பு



1975 மார்ச் 10] [திரு. க. உரொ. எட்மண்ட்]

நடக்கிறது. என்னோடு வேண்டுமானால் வாருங்கள். நான் அழைத்துச்
சென்று காட்டுகிறேன். அங்கே மலையாளப் படங்களை எடுக்கிறார்கள்.
(சிரிப்பு). ஏன் சிரிக்கிறீர்கள். நீங்கள் நன்றாகச் சிரியுங்கள். சிரிப்பை
நிறுத்தியவுடன் பதில் சொல்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : They are just applauding.

திரு. க. உரொ. எட்மண்ட் : நான் அடிக்கடி உங்களுக்கு நினைவு
படுத்த வேண்டியிருக்கிறது. உங்களுடைய கட்சித் தலைவர் "மனோகரா"
படத்தில் வசனம் எழுதியிருக்கிறார்கள் " சிரித்தவர்கள் வாழ்ந்தது இல்லை,
அழுதவர்கள் கெட்டது இல்லை." மலையாளப்படம் எடுத்தால் என்ன,
மலையாளப்படம் எடுத்தாலும் ஸ்டுடியோவிற்கு வருமானம் வருகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : என்னுடைய வசனத்தைப்
பயன்படுத்திக்கொண்டதற்காக நான் ஒன்றும் ராயல்டி கேட்கவில்லை.
தாராளமாக பயன்படுத்திக்கொள்ளுங்கள். நான் சொல்வது, எம். ஜி. ஆர்.
நடிக்கும் படம் என்றால் அதிகமான கால் ஷீட் வரும், அதிகமான
வருமானம் வரும். அவர் நடிக்கும் படம் அந்த ஸ்டுடியோவில் எடுக்கப்
படவில்லை என்றுதான் குறிப்பிட்டேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : இதற்கும் விளக்கம் சொல்லிவிடு
கிறேன். அவர் நடித்து முடியும் தருவாயில் இருக்கும் படம் " நினைத்
ததை முடிப்பவன் " அங்கேதான் எடுக்கப்பட்டு வருகிறது. எடுக்கிற
படங்களின் தயாரிப்பாளர்கள் வேறு ஸ்டுடியோவில் எடுக்கவேண்டுமென்று
சொல்கிறார்கள். அதோடு அங்கே போதுமான மின்சாரம் இல்லை.
மைசூரில் இருக்கும் அரசாங்கம் மின்சாரம் தாராளமாக தருகிறது.
ஒரு படத்திற்கு 1 லட்சம் கொடுக்கிறார்கள். ஆகவே, படத்தயாரிப்பாளர்
பெங்களூரில் படம் எடுக்கவேண்டுமென்று விரும்புகிறார். அதற்கு எங்கள்
தலைவர் என்ன செய்ய முடியும்? 1 லட்ச ரூபாயை இழந்து விட்டு
இங்கே வந்து சத்தியா ஸ்டுடியோவில் படம் எடுக்க வேண்டுமானால் அந்த
1 லட்சம் ரூபாயை அரசாங்கம் கொடுத்தால் நல்லது. அதிலே எந்த
விதமான ஆட்சேபனையும் இல்லை. என்னை திசை திருப்பாதீர்கள்.

நான் முதலில் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். வேலூரில் இருக்கும்
மருத்துவ மனைத் தொழிலாளர்களுக்கு அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகம் விரோதமாக நடக்காது என்பதை நான் முதலமைச்சர் அவர்களுக்கு
மிகுந்த பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய வாதம் எல்லாம், தொழிலாளர்கள் பழி வாங்கப்படு
கிறார்கள் என்பது மட்டும் அல்ல. என்னுடைய வாதம் தொழிலாளர்
களின் கோரிக்கை நியாயம் அற்றது, நியாயம் இல்லை என்பது அல்ல,
என்னுடைய கோரிக்கை எல்லாம்—அதைப் புரிந்து கொள்ளவேண்டும்—

நான் சொல்கிற நிபந்தனைகளை அந்த நிர்வாகத்தினர் ஏற்றுக்கொள்ளாத காரணத்தினால் இதற்கு முன்னால் இல்லாத பழி வாங்குகிற நடவடிக்கை களை நாம் எடுக்கலாமா என்பது என்னுடைய வாதமாகும்.

நண்பர் வீராசாமி அவர்கள் 1969-ம் ஆண்டு அங்கே மருந்து தயாரிப் பதற்கு அவர்கள் அனுமதி கேட்டார்கள். மருந்து தயாரிப்பதற்கு அனு மதி கேட்டு இருக்கிறார்கள், விற்பனை வரி போடவேண்டுமென்று சொன் ஞர்கள். 1972-ல் 74 லட்ச ரூபாய்க்கு டர்ன் ஓவர் ஆகியிருக்கிறது என்று சொன்னார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இதற்கு முன்னால் 72-க்கு முன்னால் வரி கட்டவேண்டுமென்றால் அதற்கு 1½ மடங்கு அபராதம் கட்டவேண்டுமென்றால் அது எந்த அளவுக்கு இருக் கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அவர்கள் இன்றைய தினம் அத்தகைய ஒரு ஆதாரம் அற்ற கருத்துக்களைச் சொல்லிக்கொண்டு இருக் கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, அந்த நிர்வாகத்தில் தகராறு ஏற்பட்டதிலிருந்து, அந்த மாவட்டத்தில் இருக்கும் அதிகாரிகள் பலரை மாற்றியிருக்கிறார்கள். இன்னும் வேடிக்கை என்னவென்றால், 75 ஆண்டுகளாக மருத்துவ மனை இயங்கிக் கொண்டு இருக்கிறது. இத்தனை நாள் இல்லாத அளவுக்கு இன்றையதினம் என்க்ரோச்மெண்ட் என்ற அடிப்படையில், ரோடுக்கு வெளியே காம்பௌண்ட் வந்திருக்கிறது என்று சொல்லி நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> தலைவரவர்களே, வேலை நிறுத்தத்திற்குப் பிறகு நோட்டீஸ் விடப்பட்டு இருக்கிறது என்று சொல் கிறார்கள். 6 மாதகாலமாக கடிதப்போக்குவரத்து நடந்து வருகிறது. அவர்களும் அது குறித்து கடிதம் எழுதிக் கொடுத்து இருக்கிறார்கள். அதற்குள் ஏதோ இடித்து விட்டார்கள் என்று பத்திரிக்கையில் படித்தேன். ஆனால் உண்மையில் அப்படி ஒன்றும் நடக்கவில்லை.

<u>திரு. க. உரொ. எட்மண்ட் :</u> அங்கே தகராறு, உள்-தகராறு 6 மாதகாலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த மாவட்டத்தில் அமைச்சர் அதில் தலையிட்டு இருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> மன்னித்துக்கொள்ளுங்கள், நான் எழுந்து குறுக்கிடுவதற்கு. அந்த மருத்துவ மனைக்கு நான் ரொம்ப வேண்டியவன். அங்கேயுள்ள எல்லா டாக்டர்களும் எனக்கு தெரிந்த வர்கள். அந்த மருத்துவ மனையின் 75-வது ஆண்டு விழாவிற்கு நான் சென்று இருந்தேன். அப்போது நிதி உதவி கேட்டார்கள். என்னுடைய ஒரு மாதச் சம்பளத்தை நான் கொடுத்து இருக்கிறேன். எனக்கும் அந்த மருத்துவ மனைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. என்னையும் மருத்துவ மனையையும் பிரித்துப் பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.





<u>திரு. க. உரொ. எட்மண்ட் :</u> அந்த அளவுக்கு பழி வாங்குகிற நிலை இருக்கிறது. நீங்கள் எது வேண்டுமானாலும் கூறலாம். எனக்குத் தெரியும். எந்தக் குற்றச்சாட்டு சொல்லி நீங்கள் ஏற்றுக்கொண்டு இருக் கிறீர்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் அரிசி பேர ஊழல் பற்றிச் சொன் ஞர்கள். அரசு அப்துல் சலாம் என்பவருக்கு காண்டிராக்ட் கொடுத்தது என்று சொன்னார்கள். இதே மன்றத்தில் மறுத்தீர்கள். ஆதாரம் காட்ட முடியுமா என்று கேட்டீர்கள், நிரூபிக்க முடியும் என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் அதற்குப் பிறகு மாலை 1 மணிக்கு டாக்டர் ஹாண்டே அவர்கள் இல்லாத நேரத்தில் அவர்கள் சொன்னது வாஸ்தவம் தான், குற்றச்சாட்டு ஆதாரம் வாய்ந்ததுதான் என்று ஒப்புக்கொண்டீர்கள். அதைப்போலத்தான் எதிர்க்கட்சியில் நாங்கள் என்ன குற்றச்சாட்டு சொன் ஞலும், அதை மறுக்கிறீர்கள்.

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன் :</u> அப்படி ஏதாவது நீங்கள் சொல்வது உண்மையாக இருந்தால் இங்கே ஒரு மணி நேரத்தில் ஒப்புக் கொள்வோம். உண்மையில்லை என்றால் எப்படி நாங்கள் வந்து ஒப்புக் கொள்ளமுடியும் ?

<u>திரு. க. உரொ. எட்மண்ட் :</u> உண்மை ஒப்புக்கொண்ட பின்னாலும், ஊழலில் சம்பந்தம் இருக்கிறது என்று சொன்ன பின்னாலும், என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள்?

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன் :</u> உண்மை என்று ஒப்புக்கொள்வது ஒன்று. ஊழல் என்று ஒப்புக்கொள்வது ஒன்று. உண்மை என்று ஒன்று இருக்கிறது. ஊழல் என்பது பிரச்னை.

<u>திரு. க. உரொ. எட்மண்ட் :</u> செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு இருக்கிறீர்கள். குற்றத்தை ஒப்புக்கொண்டால் கிருஸ்துவர்களுக்குப் பாவ மன்னிப்புக் கிடைக்கும். இந்துக்களாக இருந்தால் கங்கையில் குளித்தால் பாவம் தீர்ந்து விடும். ஆட்சியில் இருப்பவர்கள் தவறு செய்தால், அதற்கு என்ன பரிகாரம்? இங்கே உட்கார்ந்து இருப்பதா? அதைச் செய்து விட்டு, நீங்கள் இந்த மன்றத்தில் உட்கார்ந்து இருக்க வேண்டுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> என்னைச் சம்பந்தப்படுத்தி, இங்கே உட்கார்ந்து இருப்பதா என்று கேட்டார்கள். முதலில் கேட் டார்கள். அவர்கள் சொன்னபோது அதை ஒப்புக் கொள்ளவில்லை. பிறகு விவரம் அறிந்த பின் அதை ஒப்புக்கொண்டிருக்கிறோம். முதலில் ஒப்புக் கொள்ளவில்லை என்றால், ஒப்புக் கொள்ளாதது எப்படி குற்றமாக இருக்க முடியும்?

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே :</u> ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். இது பயங்கரமான தகவல். இந்த மன்றத்தில் நான் சொன்ன பிறகு, அப்துல் சலாம் விடுதலை செய்யப்பட்ட பிறகு, காண்டிராக்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நீங்கள் திசை திருப்பாதீர்கள். இந்த மன்றத்தில் நான் பேசிய பேச்சு மிக தெளிவாக இருக்கிறது. அரசாங்கம் காண்ட்ராக்ட் கொடுத்து இருக்கிறது என்று குற்றம் சாட்டினேன். அப்போது மாண்புமிகு திரு. ப. உ. சண்முகத்தை மந்திரியை குறிப்பிட்டு சொல்லவில்லை. அப்போது அமைச்சர் மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் எழுந்து மறுத்தார்கள். கடைசி கட்டமாக நான் செய்யவில்லை என்றார். நிரூபிக்க முடியுமா என்று கேட்டார்கள். நிரூபிக்க முடியும் என்று சொன்னேன். 1-10-க்கு வந்து திரு. ஹாண்டே சொன்னது ஓரளவு உண்மைதான், முன்பும், பின்பும் கொடுத்தோம் என்று சொன்னார்கள். சபாநாயகர் நிரூபிக்க வேண்டாம் என்று சொன்னார்கள். அரசாங்கம் செய்தாலும் அமைச்சர் செய்தாலும் குற்றம் குற்றம் தான். அதற்கு பிறகு தண்டனை என்ன என்பதுதான் கேள்வியே தவிர வேறு ஒன்றும் இடையாது.

<u>மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்</u> : அழுத்தந்திருத்தமாக பேசி விடுவதால் மட்டும் உண்மைக்கு புறம்பான செய்தியாக ஆகிவிட முடியாது.

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே</u> : அப்படி கொடுத்திருந்தால்..........

<u>மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்</u> : டாக்டர் ஹாண்டேவுக்கு திடீரென்று கோபம் வரக் கூடாது. அப்துல் சலாம் பிளாக் லிஸ்ட் செய்த பிறகு காண்ட்ராக்ட்..........................

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே</u> : முதல் நாள் நான் சொல்லவே இல்லை. காண்ட்ராக்ட் முன்பும், பின்பும் தவறு கண்டு பிடித்த பிறகு ஒப்புக் கொள்ளப்பட்டது.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : தலைவரவர்களே, அமைச்சர்கள் சில நேரங்களில் அதைப் போல தகவல்களை சொல்லும்போது சில தவறுதலாக கொடுக்கப்படலாம். அப்படி நிரூபிக்கப்பட வேண்டும், நிரூபிக்கிறேன் என்று குறிப்பிட்டு மறு நாள் வந்து மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் நிரூபிக்கத் தவறியோ திருத்தம் கொடுக்காமல் இருந்தோ இருந்தார் என்றால் மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் மீது குற்றச்சாட்டாகக் கூறலாம். ஆனால் விவாதம் நடைபெற்ற சில மணி நேரத்தில் அவரே வந்து நான் கொடுத்த தகவல் தவறானது. திரு. ஹாண்டே அவர்கள் கொடுத்ததுதான் சரியானது என்று குறிப்பிட்டு வருத்தம் தெரிவித்து இருக்கிறார். அது எப்படி தவறாக முடியும்?

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே</u>: நான் சுமத்தியது உண்மையான குற்றச்சாட்டு என்றால் அதற்கு என்ன தண்டனை? அது இந்த அமைச்சர் செய்தாலும் வேறு அமைச்சர் செய்தாலும் சரி அதை குற்றம் என்று ஒத்துக் கொண்டு நான் போடவில்லை, மற்றொரு அமைச்சர் போட்டார். நான் பொறுப்பாளி இல்லை என்று சொன்னால் அதை எப்படி ஒத்துக் கொள்வது? எனக்கு பர்சனலாக ஒன்றும் இடையாது. முதலமைச்சரே



கையெழுத்துப் போட்டார்—நான் சொல்லவில்லை—மறை முகமாக அமைச்சர் அவர்களே இப்படி குற்றம் சாட்டி இருக்கிறார்கள், முதலமைச்சர் மீது. என்ன அதற்கு தண்டனை ?

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u>: தலைவரவர்களே, இன்னொரு அமைச்சர், முதலமைச்சர் கையெழுத்து போட்டு இருக்கிறார் என்று . . . கையெழுத்தைப் பற்றித்தான் மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் சொன்னது பெரிதுபடுத்தப்பட்டது. அதற்கு முன்பு திறந்த பகுதியாக சபாநாயகர் அறையில் எல்லோருடைய பார்வைக்கும் வைக்கப் பட்டிருந்தது. காண்ட்ராக்ட் விஷயம் தனி விவகாரம். ப்ளாக் லிஸ்ட்டில் இருப்பவர்களுக்குக் கொடுக்கப்பட்டதா என்றால் அது நியாயமான கேள்வி. பத்திரிகையில் பார்த்தேன். ப்ளாக் லிஸ்ட் தான் என்று போட்டிருந்தது. மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் அவர்கள் காண்ட்ராக்ட் கொடுக்கப் படவில்லை என்று சொன்னார்கள். சொல்லிவிட்டு, கொடுக்கப் பட்டு இருக்கிறது என்பதுதான் சரியான தகவல் என்று திருத்திக் கொண்டார்கள்.

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே</u> : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்.

ஆகவே முதலில் கொடுக்கப்படவில்லை என்று சொன்னவர்கள் அதை கொடுத்து இருந்தால் குற்றம் என்று ஒத்துக்கொள்கிறார்கள். இதிலே தான் Subject-matter வருகிறது. கொடுத்தால் குற்றமே இடையாது என்று சொல்லலாம் அல்லவா. அந்த Admissionல் confessionல் தான் கொடுத்தால் குற்றம் என்று மறைமுகமாக ஒத்துக் கொள்கிறார்; கொடுத்தது குற்றம் தானே.

<u>திரு ஆலடி அருணா</u> : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்.

திருத்தம் கொடுக்கும்போது காலையில் தவறான தகவலை தந்து விட்டேன் என்று தவறை திருத்திக்கொண்டார். என் கேள்வி எல்லாம் அப்துல் சலாம் சிவில் சப்ளைஸ் இலாகாவில் ஒரு பெரிய ஊழலை செய்கிறார். அரசாங்கப் பணத்தை மோசடி செய்கிறார். அப்படிப் பட்டவருக்கு இன்னொரு இலாகாவில் பி. டபிள்யுடி. இலாகாவில் காண்ட்ராக்ட் கொடுக்கப்படுகிறது. அந்த அமைச்சர் பொறுப்பில் இல்லாமல் இருக்கலாம். ஒரு இலாக்காவில் மோசடி செய்த ஒருவருக்கு இன்னொரு இலாகாவில் எப்படி காண்ட்ராக்ட் கொடுக்கலாம்.

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே</u> : நான் இப்போது ஒன்று சொல்லுகிறேன். மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் காண்ட்ராக்ட் கொடுத்து இருக்கிறார். ப்ளாக் லிஸ்ட் என்று தெரிந்தும். இந்த மன்றத்தில் நான் வந்து நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன், மூன்று நாளைக்குள். Under the Ministership of Thiru P. U. Shanmugam himself contracts were given.

<u>மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்</u> : நானா?

DR. H. V. HANDE : He is trying to escape. I have cornered him. You are cornered now.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : டாக்டர் ஹாண்டே அவர்கள் வீணாக என் மீது பாய்கிறார்கள், மூன்று நாளைக்குள் நான் காண்ட்ராக்ட் கொடுத்து இருக்கிறேன் என்று நிரூபிக்கிறேன், அப்படி நிரூபித்தால் என்ன தண்டனை என்று..........

(DR. HANDE rose).

MR. DEPUTY SPEAKER : Why do you interrupt ? Let him finish; you had your say. I will give the hon. Member opportunity to explain if he wants.

திரு. எட்மண்ட் அவர்கள் பேசலாம்

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, அந்த அளவுக்கு குற்றச்சாட்டுகளை ஒப்புகொள்கிறார்கள். நம் தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. மணலி கந்தசாமி சொன்னார்கள். இந்த அரசாங்கத்தை ஆதரித்து விட்டு நிதிநிலை அறிக்கை மீது கடைசியாக ஏதோ சமாதானம் சொல்லுவதைப் போல சொன்னார்கள். லஞ்சம், லஞ்சம் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். ஆனால் அதைப்பற்றி கவலைப் படுவதாக தெரியவில்லை. இந்த அமைச்சரவையில் அரிசி பேர ஊழல் நடந்து இருக்கிறது. அதற்காக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நம் பெரியவர் திரு. மணலி கந்தசாமி பேசி இருக்கிறார்கள். நான் கூறுவது எல்லாம், எதை எடுத்துச் சொன்னாலும் அப்துல் சலாம் ஊழல் நடந்திருக்கிறது. என்ன செய்திருக்கிறீர்கள். நீதி மன்றத்திலே வழக்கு இருக்கிறது. தாண்டவராயன் ஊழல். நீதி மன்றத்தில் வழக்கு இருக்கிறது. ஒன்றரை கோடி ரூபாய் என்ன செய்து இருக்கிறீர்கள். நீதி மன்றத்தில் வழக்கு இருக்கிறது. வேறு என்ன எதிர்பாக்கிறீர்கள். மக்கள் நலத்துறை அமைச்சரை பார்த்து கேட்கிறேன். வேறு என்ன செய்ய இருக்கிறது. ஒன்றரைக் கோடி ரூபாய் கொடுத்து விட்டு போயிருக்கிறீர்கள்.. உங்களால் ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமா என்றால் முடியாது. நீங்கள் யாருக்கு கொடுத்து இருக்கிறீர்கள்? Inch நிலம் இல்லாதவன் Insolvent பேர்வழி. மஞ்சள் காகிதம் கொடுத்து விட்டு போகிறவன் இப்படி கொடுத்து இருக்கிறீர்கள். வழக்கு போட்டு இருக்கிறோம். பணம் பாழாவது யாருடைய பணம்? இந்த நாட்டு மக்களுடைய பணம். சிவில் கோர்ட்டு சென்று டிகிரி வாங்கினால் அந்த டிகிரியை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்? என்ன நடவடிக்கை எடுக்க முடியும்? misappropriation க்காக criminal நடவடிக்கை எடுப்பீர்கள். இன்னொரு ஆறு ஆண்டு காலம் சிறைச் சாலையில் நிம்மதியாக மக்கள் வரிப்பணத்தில் சாப்பிட்டுவிட்டு இருப்பான். அதை உணராமல் வேறு என்ன செய்ய முடியும் என்று கூறுவீர்களேயானால் அந்த அளவுக்கு இந்த நாட்டில் நிதி நிலை நெருக்கடியை



உருவாக்கினீர்கள். என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. அதற்கு உடந்தையாக இருந்தவர்கள் யார். ஒன்றரைக் கோடி ரூபாய்க்கு தாண்டவராயன் ஊழல் நடந்திருக்கிறது. அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. ஏழு ஜென்மம் அவர் அரசாங்கத்திற்கு வேலை பார்த்தாலும் அவன் பட்ட கடனைத் தீர்க்க முடியுமா என்று கேட்டால் முடியாது. அதற்குப் பொறுப்பு யார்? இந்த ஊழலில் சம்பந்தம் யார்?

மாண்புமிகு திரு செ. மாதவன் : தாண்டவராயனுக்கு எங்கே கடன் வழங்கப்பட்டு இருக்கிறது ? எதற்காக வழக்கு போட்டு இருக்கிறார்கள் என்பதைக் கூட தெரிந்து கொள்ளாமல் சொல்லுவதால் தான் குறுக்கிடுகிறேன். தாண்டவராயனுக்குப் பணம் எதும் தரவில்லை. பொது மக்களுடைய நெல்லை கடத்தினான். பிடித்திருந்தால் உள்ளே தள்ளியிருப்போம்.

(பிற்பகல் 12-30)

திரு க. உரொ. எட்மண்ட் : நான் இல்லை என்று சொல்லவில்லை. அது யாருக்குப் போக வேண்டிய அரிசி? வெளி மாநிலங்களுக்கு கடத்தப் பட்டு விட்டதால் இன்றைக்கு இங்கே ரேஷன் கொடுக்க அரிசி இல்லை. $1\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கான அரிசி வெளி மாநிலங்களுக்குக் கடத்தப்பட்டிருக்கிறது. அப்படி கடத்தப்படாமல் இருந்தால் இன்றைக்கு இந்த அளவுக்கு விலை ஏறியிருக்காது.

மாண்புமிகு திரு செ. மாதவன் : தவறான தகவல் கொடுக்கக் கூடாது. நீங்கள் தவறான தகவலைக் கொடுப்பதால் நான் மீண்டும், மீண்டும் குறுக்கிட வேண்டியிருக்கிறது.

திரு க. உரொ. எட்மண்ட் : $1\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கான அரிசி இந்த மாநிலத்தை விட்டு வெளி மாநிலங்களுக்குக் கடத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும் இந்த அரசுக்கு $1\frac{1}{2}$ கோடி ரூபாய் நஷ்டம் என்று சொன்னாலும் ஒன்றுதான். அதில் ஒன்றும் பெருத்த வித்தியாசம் இல்லை. ஆக $1\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கான அரிசி வெளி மாநிலங்களுக்குக் கடத்தப்பட்டிருக்கிறது அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது ? ஒன்றுமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் ஒரு மணி நேரம் பேசி விட்டீர்கள். இன்னும் 5 நிமிடங்களில் முடித்து விடுங்கள்.

திரு க. உரொ. எட்மண்ட் : நான் அரை மணி நேரம்தான் பேசியிருக்கிறேன். மற்றவர்கள் எல்லாம் சேர்ந்து அரை மணி நேரம் பேசியிருக்கிறார்கள். ஆகவே, எனக்கு இன்னும் அரை மணி நேரம் வேண்டும்.

அடுத்தபடியாக, காதி இலாகாவில் வேலை வாய்ப்பை ஏற்படுத்தப் போகிறோம் என்று சொல்லி, பட்டதாரிகளுக்கும், பட்டதாரி அல்லாதவர் களுக்கும் காதி இலாகாவில் பயிற்சி கொடுத்தீர்கள். பயிற்சி காலத்தில்—6 மாதம் பயிற்சிகாலம்—பட்டதாரிகளுக்கு மாதம் 300 ரூபாய் என்றும், பட்ட தாரி அல்லாதவர்களுக்கு மாதம் 200 ரூபாய் என்றும் உதவித் தொகை யெல்லாம் கொடுத்தீர்கள். இன்றைக்கு நிலைமை என்ன? பயிற்சி முடிந்து, உடனே வேலை கொடுக்கப்படும் என்று சொன்னீர்கள். வேலை கிடைக்கும் என்று நினைத்து பயிற்சி பெற்றார்கள். ஆனால் இன்னும் அவர்களுக்கு வேலை கொடுக்க வில்லை. இப்படி செலவு செய்வதால் யாருக்கு லாபம்? யாருடைய பணம் வீணாகிறது. மக்களுடைய பணம் தான் விரயமாகிறது.

அதைப் போல காவல் துறைக்கு பணம் செலவிடப்படுகிறது. அது இந்த நாட்டு மக்களுடைய வரிப்பணம் என்பதை மறந்து விடக்கூடாது. அது ஆளும் கட்சியினர் மட்டும் கொடுக்கிற பணமல்ல ; எதிர்க்கட்சியினரும் இந்த மன்றத்திற்கு வெளியே இருக்கிறவர்களும் சேர்ந்து கொடுக்கிற பணம். அதைக் காவல் துறைக்கு கொடுக்கிறீர்கள். ஆனால் அந்தத் துறை ஒழுங்காக நடக்கிறதா என்று பார்த்தால் இல்லையே.

இரண்டு நாட்களுக்கு முன்னால் பத்திரிகையில் ஓர் பரபரப்பான செய்தி வந்தது. யாரோ ஒரு நடிகர் வீட்டில், வேலைக்காரன் கொலை செய்யப் பட்டிருக்கிறார். அதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? இரண்டாந் தேதி உயிரோடு இருக்கிறார் ; 3-ந் தேதி காலையில் அகோர மரணம் அடைந்திருக்கிறார். இறந்தவருடைய உறவினர்கள் வருவதற் குள்ளாக புதைத்திருக்கிறார்கள். அந்தச் சம்பவத்தைப் பார்த்த அவருடைய தாய், தம்பியை அடைத்துப் போட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் அந்த நடிகர் உங்களுடைய மேடையில் வக்காலத்து வாங்கி பேசக்கூடியவர் என்பதுதான்.

சில நாட்களுக்கு முன்னால் சினிமா நடிகை லீலாராணி கொலை செய்யப்பட்டார். அவருடைய சித்தி சாவித்திரி தாக்கப்பட்டார். அந்த அம்மாளிடம் மரண வாக்குமூலம் வாங்கப்பட்டிருக்கிறது. சப் மாஜிஸ் ரேட் மரண வாக்குமூலம் வாங்கியிருக்கிறார்.

* * * *

Mr. DEPUTY SPEAKER : The hon. Member is making a grave allegation against a newspaper editor. Has the hon. Member got any evidence before him ? At least he should produce a copy of it before the Chair.

திரு க. உரொ. எட்மண்ட் : சாவித்திரி அம்மையார் மரண வாக்கு மூலம் கொடுத்திருக்கிறார்கள். அந்த மரண வாக்குமூலம் கோர்ட்டிலே இருக்கிறது.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கோர்ட்டில் இருப்பதை நீங்கள் பார்த்தீர்களா? அதைப் பார்க்காமல் எப்படி சொல்ல முடியும்?

திரு க. உரொ. எட்மண்ட் : கோர்ட்டிலே இருக்கிற வாக்குமூலத்தை வேண்டுமானால் நீங்கள் பார்த்துக் கொள்ளலாம். நான் குறிப்பிடுவதில் தவறு இருந்தால் சொல்லுங்கள்.

Mr. DEPUTY SPEAKER : That cannot be a valid evidence. At least you should produce some tangible evidence in support of such a grave allegation. Now, I order expunction of the remarks made against the newspaper editor.

Thirumathi T. N. ANANDANAYAKI : There is the record. There is a dying declaration and the Chair itself can call for it. It is not necessary that we should produce it. When it is before the Court, the Chair itself can call for it.

Mr. DEPUTY SPEAKER : I appreciate the feeling of the hon. Lady Member but at the same time Members have got certain responsibilities. They cannot make an allegation and ask the Chair to verify it. Whenever they make allegations, they should produce some tangible evidence......

Thiru G. R. EDMUND : The dying declaration given by the deceased is a public document......

Mr. DEPUTY SPEAKER : May be it is a public document. But you can apply for a copy of it. Let the hon. Member please proceed......

திரு க. உரொ. எட்மண்ட் : நான் கேட்டுக் கொள்வதெல்லாம் பேரவைத் தலைவருக்கு சில தஸ்தாவேஜ்களை நீதி மன்றத்திலிருந்து பெறுவதற்கு அதிகாரம் இருக்கிறது. நீங்கள் கேட்டு, அவர்கள் தர வில்லை என்றால் நான் அதற்கான சர்டிபிகேட் காப்பி எடுத்து வரு கிறேன். இப்படி சம்பவம் நடந்திருக்கிறது. இதற்கு ஆதாரம் இருக் கிறது என்றுதான் நான் சொல்ல முடியும்.

Thirumathi T. N. ANANDANAYAKI : The primary duty of the Chair......

Mr. DEPUTY SPEAKER : The hon. Member should realise that the primary duty lies upon the hon. Member who makes an allegation and not upon the Chair.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : This is an allegation. This is a dying declaration and it is a public document. So, the Chair should not take us to task......

MR. DEPUTY SPEAKER : I am not taking you to task.

THIRU R. PONNAPPA NADAR : Sir, so far as this matter is concerned, the dying declaration is in the custody of the court and to get a certified copy, it would take some more time. So, the learned Member has referred to it. If it incorrect, he can be pulled up. So, he is well within his rights to refer to it and simply because he has not got a copy of it now, the Chair cannot say that the whole thing is expunged. Now, the Chair can call for the records because they are public records......

திரு க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, அதைப்போல நம் மூடைய சென்னை மாநகராட்சியில் மஸ்டர் ரோல் இருக்கிறது. அங்கு வேலை செய்த குமாஸ்தா கைது செய்யப்பட்டார். அவர் அப்ரூவராக மாறிவிடுகிறார். அவரிடமிருந்து ஸ்டேட்மெண்ட் வாங்கியிருக்கிறார்கள். குற்றவாளி கொடுத்த வாக்குமூலத்தில் சில திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. குற்றவாளிகள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக் கிறது. ஆனால் குற்றவாளி தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்த திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களின் மேல் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை.

Cases against them have been dropped and they have been discharged.

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட வில்லை. அந்த அளவுக்கு இன்றைய தினம் மாநகராட்சி நடந்துக் கொண்டிருக்கிறது. அந்த அளவுக்கு அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்கிறார்கள். அதிகாரம் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு செ. மாதவன் : சம்பந்தப்பட்ட எல்லோர் மீதும், எல்லாக் கட்சியினர் மீதும் வழக்குப் போட்டிருக்கிறோம். குற்றவாளி கள் யாராவது விடுபட்டிருந்தால் சொல்லட்டும். உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம்.

திரு எஸ். வடிவேல் : எல்லாக் கட்சியினர் மீதும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருப்பதாக அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சி அதில் சம்பந்தப்படவில்லை. ஆகையால் தயவுசெய்து அதை மாற்றிக் கொள்ள வேண்டும்.



மாண்புமிகு திரு செ. மாதவன் : கம்யூனிஸ்ட் கட்சி சம்பந்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட் : சென்ற சட்ட மன்ற கூட்டத் தொடர் என்று நினைக்கிறேன், குதிரைப் பந்தயத்தை ஒழிக்க சட்டம் கொண்டு வருகிறோம் என்று சொன்னார்கள். அது நல்ல எண்ணம்தான். குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட வேண்டியதுதான். அதுதான் அண்ணாவின் கொள்கையும். ஆனால் அதில் பணியாற்றுகின்ற 2,000 பேர்களுக்கு மாற்று வேலை கொடுத்துவிட்டு, குதிரைப் பந்தயத்தை ஒழித்துக்கட்டுங்கள் என்று சொல்லியிருக்கிறோம். இன்று சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் 2,000 பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. அந்த குதிரைப்பந்தயம் மூலம் கோடிக்கணக்கில் வருமானம் இருக்கிறது. இப்போது வறட்சி உள்ள நேரம். இந்த நேரத்தில், இந்த வறட்சியான நேரத்தில் குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்கான நேரம் இதுவல்ல. அது ஒழிக்கப்பட வேண்டியதுதான். நான் இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும்போது முதலமைச்சரவர்கள் ரொம்ப மகிழ்ச்சியோடு சிரித்துக்கொண்டிருக்கிறார்கள். எட்மண்ட் ஏதோ மாட்டிக் கொண்டான் என்று சிரிக்கிறார்கள் போலிருக்கிறது. எங்கள் கோரிக்கை 2,000 பேர்களுக்கு வேலை கொடுப்பது என்ற உறுதி மொழியை ஏற்கெனவே கொடுத்திருக்கிறீர்கள். அந்த உறுதிமொழி நிறைவேற்றபடவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மார்ச் 31-ந் தேதி வரையில் குதிரைப் பந்தயம் நடக்கிறது. அதற்குப் பிறகு இல்லை என்று சொல்லியிருக்கிறோம். அதற்கு முன்னால் அவர்களுக்கு வேலை கொடுத்து விட்டால் அங்கே என்ன செய்வார்கள். வேலை போய்விடும், வருமானம் போய்விடும் என்று சொல்ல வந்தார்கள். நாங்கள் ஏமாந்து, கொஞ்சம் முன்னதாக சிரித்து விட்டோம்.

திரு. க. உரொ. எட்மண்ட் : சென்ற சட்டமன்ற கூட்டத்தில் கொடுத்த உறுதிமொழியை ஒட்டி—மார்ச் 31-ந்தேதி கடைசி நாள் குதிரைப் பந்தயம் ஒழிக்கப்படுவதற்கு.

அதற்குள்ளாக—இந்த மார்ச் 31-ஆம் தேதிக்குள்ளாக அங்கு வேலை செய்கிற இரண்டாயிரம் பேர்களுக்கும் இந்த அரசு மாற்று வேலையைத் தேடித் தருவார்களானால் முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளபடி குதிரைப் பந்தயத்தை மார்ச் 31-ஆம் தேதியோடு ஒழிப்பதை அண்ணா தி.மு.க. நிச்சயமாக வரவேற்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒருவேளை இந்த இரண்டாயிரம் பேர்களுக்கும் வேலை கொடுக்க முடியவில்லை என்றால் மார்ச் 31-ஆம் தேதியோடு குதிரைப் பந்தயத்தை ஒழித்துவிடக்கூடாது என்று திரு. எட்மண்ட் சொல்கிறாரா ?

திரு. க. உரொ. எட்மண்ட் : மார்ச் 31-ஆம் தேதிக்குள் ஏதோ ஒரு சில பகுதியினருக்கு வேலை கொடுத்துவிட்டு பாக்கிப் பேர்களை ஏமாற்றிவிடக்கூடாது என்பதற்காகத்தான் இதனை வற்புறுத்துகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அங்குள்ளவர்களுக்கு படிப்படியாகத்தான் வேலை கொடுக்க முடியும். மார்ச் 31-ஆம் தேதிக்குள் அங்குள்ள இரண்டாயிரம் பேர்களுக்கும் வேலை கொடுக்க முடியாது. ஆகவே குதிரைப் பந்தயத்தை மார்ச் 31-ஆம் தேதியோடு ஒழிக்க வேண்டுமென்று சொல்கிறாரா, இல்லையா ?

திரு. க. உரொ. எட்மண்ட் : அண்ணா அவர்களின் கொள்கை எதுவாக இருந்தாலும் அதனை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொள்ளும். அண்ணா அவர்களின் கொள்கை குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டும் என்பதுதான். அதை நாங்களும் சொல்கிறோம். குதிரைப் பந்தயத்தை ஒழித்தாக வேண்டும். அதே சமயம் அந்தத் தொழிலில் ஈடுபட்டு இருந்தவர்களுக்கு இந்த அரசாங்கம் மார்ச் 31-ஆம் தேதிக்குப் பிறகு மாற்று வேலை கொடுத்தாக வேண்டும். ஏதோ கொஞ்சம் பேர்களுக்குத்தான் கொடுப்போம். மொத்த பேர்களுக்கும் பிழைப்பு கொடுக்க முடியாது என்று சொன்னால் அது இந்த நிர்வாகத்திற்குத் திறமையில்லை என்றுதான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், குதிரைப் பந்தயத்தை ஒழிப்பது என்கிற முடிவை எடுத்து மூன்று மாதங்களுக்கு மேலாகிறது. இந்த 3 மாதங்களுக்குள்ளாக அதைக் கொண்டு பிழைத்து வந்தவர்களுக்கு மாற்று வேலை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து 31-ஆம் தேதியோடு அதனை ஒழிக்க முன்வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அதற்கு எவ்வித முயற்சியும் எடுக்காது, மொத்தப் பேர்கள் அனைவருக்கும் வேலை கொடுக்க முடியாது. குதிரைப் பந்தயத்தை ஒழிக்கலாமா, அல்லது அதை நீடிக்கலாமா என்று கேட்டால் முதலமைச்சர் அவர்கள் உள்ளுக்குள் அதுபற்றி என்ன எண்ணம் இருக்கிறதோ, அதற்குச் சாக்குப் போக்காகத்தான் இதை வைத்து அதனை நீடிக்கச் செய்ய விரும்புகிறாரோ என்னமோ தெரியவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அது போன்ற எண்ணம் நிச்சயமாக இல்லை. மார்ச் 31-ஆம் தேதியோடு, குதிரைப் பந்தயம் ஒழிந்தேயாகவேண்டும். அதுதான் இந்த அரசின் கொள்கை. திரு. எட்மண்ட் அவர்கள் கண்டிஷன் போட்டு—அதை வைத்தே நீடித்துக் கொடுங்கள் என்று நிர்ப்பந்திக்க நிர்வாகிகளை தூண்டச் செய்வதற்கு இந்தப் பேச்சு உதவியாக இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். படிப்படியாகத்தான் இந்த இரண்டாயிரம் பேர்களுக்கும் இரண்டு மூன்று மாதங்களில் மாற்று வேலையைத் தேடித் தர முடியும். அத்தனை பேர்களுக்கும் மார்ச் 31-ஆம் தேதியே மாற்று வேலை கொடுக்க முடியாது, என்றாலும் மார்ச் 31-ஆம் தேதிக்குப் பிறகு குதிரைப் பந்தயம் நீடிக்கக் கூடாது என்பதில் அரசாங்கம் திண்மையாக இருக்கிறது.





திரு. க. உரொ. எட்மண்ட் : அரசாங்கம் எந்தக் கொள்கையில் திண்மையாக இருக்கிறதோ அதே கொள்கையில் நாங்களும் திண்மையாக இருக்கிறோம். நான் கேட்டுக்கொள்வது எல்லாம் மூன்று மாதங்களுக்கு முன்பே மார்ச் 31-ஆம் தேதியோடு குதிரைப் பந்தயத்தை நிறுத்திவிட தீர்மானித்திருக்கிறபடியால் மார்ச் 31-ஆம் தேதிக்குள் அவர்கள் அனைவருக்கும் மாற்று வேலை அளிக்க இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்க வேண்டும்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்வது போல் அங்கே இரண்டாயிரம் குடும்பங்களோ, இரண்டாயிரம் பேர்களோ இல்லை. 154 பேர்கள்தான் பர்மனெண்ட் வொர்க்கர்ஸ். பாக்கி இருக்கக் கூடியவர்கள் டெம்பரரி வொர்க்கர்ஸ்தான். இவர்கள் வெவ்வேறு வேலைகளில் இருக்கிறார்கள். ரேஸ் நடக்கிற காலங்களில் தான் இங்கு வருகிறார்கள். நாம் வேலை கொடுக்க வேண்டியது இந்த 154 பேர்களுக்குத்தான்.

திரு. க. உரொ. எட்மண்ட் : அங்குள்ள தொழிலாளர்கள் எத்தனை பேர்கள் என்பது அல்ல. அவர்களுக்கு எல்லாம் மாற்று வேலை கொடுக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதி காப்பாற்றப்படவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வாக்குறுதியைக் காப்பாற்றிவிடக்கூடாது என்பதற்கு யாரையும் தூண்டிவிட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் நான் சொன்னேன். அரசு இதில் மிகத் தீவிரமாக இருக்கிறது. யார் எதற்குத் தூண்டுதலாக வந்தாலும் அதில் இந்த அரசு தயவுதாட்சண்யம் காட்டப்போவதில்லை.

திரு. க. உரொ. எட்மண்ட் : திரு. ராஜா அவர்கள் குறிப்பிட்டதைப் போல அங்கே வேலை செய்பவர்கள் 154 பேர்கள்தான் என்றாலும் அங்குள்ளவர்கள் அனைவருக்கும் மாற்று வேலை தரப்பட வேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேன்.

குதிரைப் பந்தய ஒழிப்பைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிற முடிவினை நான் முழுமையாக வரவேற்கிறேன். முதலமைச்சர் அவர்கள் அதில் திசை திருப்பிவிடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். நான் குதிரைப் பந்தய நீடிப்பை ஆதரித்துப் பேச வந்ததாகச் சொன்னார்கள். நான் அன்றைக்கே இதை எவ்வளவு காலம் ஒத்திப் போடவேண்டும் என்று கேட்டபோது அங்கு வேலை செய்கிற அத்தனை தொழிலாளர்களுக்கும் மாற்று வேலை தேடிக்கொடுக்கின்ற காலம் வரைக்கும் ஒத்திப் போடுங்கள்—ஆனால் சீக்கிரமாகவே இதைச் செய்யுங்கள் என்றுதான் சொன்னேன். அன்றைக்கே நாங்கள் குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்கு பச்சைக் கொடியைக் காட்டியிருக்கிறோம், நான் சொன்னது போல இரண்டாயிரம் பேர்கள் இல்லாமல் இருக்கலாம், நமது ராஜா அவர்கள் சொன்னதைப்போல இருநூறு அல்லது 154

பேர்கள் இருக்கலாம். எனக்குத் தெரியாது. ஒருவேளை அருமை நண்பர் ராஜா அவர்கள் போய் இருக்கலாம். அவருக்குத் தெரிந்திருக்கலாம். (திரு. ஏ. எம். இராஜா குறுக்கீடு).

இன்றைய தினம் நாட்டில் எத்தனையோ நிலைமைகள் இருக்கின்றன. அத்தனையையும் மறைப்பதற்காக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர் கள் அடிக்கடி ஒரு தந்திரத்தைக் கையாள்கிறார்கள். பொதுக்கூட்டத்தில் பேசினாலும் சரி, சட்டமன்றத்தில் பேசினாலும் சரி, எந்தத் திருமணத்திற்கு சென்று பேசினாலும் சரி மாநில சுயாட்சிப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள்.

அண்ணா தி.மு.க.வைப் பொறுத்தவரை—ஏற்கனவே ராஜமன்னார் குழு அறிக்கையைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில் அதைச் சொல்லியிருக் கிறோம். மாநில சுயாட்சி என்ற தத்துவம் அண்ணா அவர்களது லட்சியம் அல்ல என்பதை எங்கள் கட்சியைச் சேர்ந்த அருமை நண்பர் திரு. ஆலடி அருணா அவர்கள் மிகத் தெள்ளத் தெளிவாக—அதற்கான ஆதாரங்களைக் காட்டி எடுத்து விளக்கமாகப் பேசியிருக்கிறார்கள்.

அண்ணா தி.மு.க.வைப் பொறுத்த வரையில் அன்றைக்கும் சரி-இன்றைக்கும் சரி-நாங்கள் கொண்டிருக்கிற கொள்கை எல்லாம், மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள் தரப்பட வேண்டும் என்பதுதான். அண்ணா அவர்களும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டு மென்றுதான் கேட்டார்கள். மாநில சுயாட்சி வேண்டுமென்று அண்ணா அவர்கள் என்றைக்கும் கேட்டது கிடையாது. மாநில சுயாட்சி என்பது வேறு—கூடுதல் அதிகாரங்கள் வேண்டும் என்பது வேறு.

அண்ணா அவர்கள் ஸ்டேட் அடானமி என்று மாநில சுயாட்சி பற்றிச் சொல்லவில்லையா என்றார்கள். நான் அவர்கள் எழுதிய பல்வேறு, புத்தகங்களை எடுத்துப் பார்த்திருக்கிறேன். ஒரு முறை நமது மேலவை யில் ஆங்கிலத்தில் பேசும்போது கூட ஸ்டேட் அடானமி என்று சொல்லி அதற்கு விளக்கம் கொடுக்கிற நேரத்தில்—"நான் கூடுதல் அதிகாரங்கள் தான் மாநிலங்களுக்கு வேண்டுமென்று கேட்கிறேன். இந்த மாநிலத் திலே ஒரு கல்வித்துறை, ஒரு கல்வி அமைச்சர்-மத்தியிலே ஒரு கல்வி அமைச்சர், ஒரு கல்வித்துறை என்று இருக்கவேண்டுமா" என்றுதான் பேசியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு முன்னேற்றக் கழக பொதுக் கூட்டங்களில்—பொதுக்குழுவில்—செயற்குழுவில் பேசுகின்ற நேரங்களில் கூட கூடுதல் அதிகாரங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறாரே தவிர, மாநில சுயாட்சி என்ற வார்த்தையை அவர்கள் உபயோகப்படுத்தவில்லை என்பதை நான் ஆணித்தரமாகக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அண்ணா அவர்கள் தம்பிக்கு என்று எழுதிய கடைசிக் கடிதத்திலும் கூட கூடுதல் அதிகாரங்கள் வேண்டும் என்று எழுதினாரே தவிர மாநில சுயாட்சிப்பற்றி எழுதவில்லை. தமிழில் எழுதினாலும் சரி, ஆங்கிலத்தில் எழுதினாலும் சரி ஒவ்வொரு வார்த்தையையும் அளந்து, அதன்



உட்பொருளை அறிந்து எழுதக்கூடிய ஆற்றல் பெற்ற அண்ணா அவர்கள் ரத்தினச் சுருக்கமாக ஒரே வார்த்தையில் மாநில சுயாட்சி என்று எழுதியிருக்கலாம்.

ஆளுங்கட்சியில் உள்ளவர்கள் சொல்வார்கள்—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அண்ணா அவர்கள் ம.பொ.சி. மகாநாட்டில் கலந்து கொண்டார்கள்—அங்கே மாநில சுயாட்சியைப் பற்றி ஆதரித்துப் பேசினார்கள் என்றார். மாநில சுயாட்சியைப் அங்கே ஆதரித்துப் பேசிய அண்ணா அவர்கள் அதற்குப் பிறகு எத்தனையோ பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு எங்காவது மாநில சுயாட்சி என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார்களா என்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ளவர்கள் ஆதாரத்தோடு காட்டு வார்களேயானால் அண்ணா தி.மு.க. நிச்சயமாகத் தலை வணங்கும்.

அண்ணா அவர்கள் கேட்டது கூடுதல் அதிகாரங்கள். அதைத்தான் நாங்களும் கேட்கிறோம். இதைப்பற்றி அண்ணா தி.மு.க. சார்பில் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம்.

**We are neither for Independence; nor dependence; but we are for Inter-dependence**

என்றுதான் நாங்கள் சொல்கிறோம். கட்டுண்டு வாழோம்—பிரிவினை நாடோம்—சமநிலையில் வாழ்வோம் என்பதைத்தான் அண்ணா அவர்களும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தினர்தான் மாநில சுயாட்சி என்று சொல்கிறார்கள். கேட்டால், நம்முடைய கல்வியமைச்சர் நாவலர் அவர்கள் விளக்கம் சொல்கிறார்கள், நாங்கள் கேட்பது தன்னாட்சிதானே தவிர தனியாட்சி அல்ல, என்று. தன்னாட்சி என்றால் என்ன பொருள்? இண்டிபென் டண்ட் ஸ்டேட், இண்டிபெண்டண்ட் என்றுதான் பொருள்...........

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: செப்பரேஷன் என்பதும், இண்டிபெண்டண்ட் என்பதும், அட்டானமி என்பதும் ஒரே சொற்களா? அட்டானமி என்பதற்கும், செப்பரேஷன் என்பதற்கும் வேறுபாடு இல்லையா? அட்டானமி என்பதே கூடுதலான அதிகாரங்கள் என்பதுதானே. இப்பொழுதே அட்டானமி இருக்கிறது என்றுதான் இந்தியாவினுடைய தலைமையமைச்சரவர்களும் கூறியிருக்கிறார்கள். அட்டானமி எந்த அளவுக்கு இருக்கிறது என்பதே தவிர, அட்டானமி என்பதே தவறா? செப்பரேஷன் என்றால் பிரிவினை, அட்டானமி என்றால் கூடுதல் அதிகாரம். இண்டிபெண்டன்ட் என்றால்........................

திரு. க. உரொ. எட்மண்ட்: இப்பொழுதே, அண்ணா அவர்கள் அட்டானமி இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இல்லஸ்ட் ரேட்டட் வீக்லியில் fuller autonomy in the states என்று சொல்லி யிருக்கிறார்கள். 3-வது பாராவிலே, அண்ணா ஃபுல் அட்டானமி என்று சொல்லவில்லை. (ஆளுங்கட்சித் தரப்பில் சிரிப்பு.) சிரிப்பதிலே அர்த்தமில்லை:

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சிரிக்காமல் என்ன செய்வது? ஏனென்றால், எங்களுக்கொன்றும் உங்களிடத்திலே விரோதமில்லை. கட்சி மாறுபாடு வந்துவிட்ட காரணத்தாலே, ஆங்கிலச் சொற்களுக்கோ, தமிழ்ச் சொற்களுக்கோ பொருள் மாறுபட்டு விடாது. எந்தக் கட்சியிலே இருந்தாலும் ஆங்கிலச் சொற்களுக்கும் தமிழ்ச் சொற்களுக்கும் பொருள் மாறுபடாது. அண்ணா அவர்கள், திராவிட நாடு பிரிவினைக் கொள்கையை விட்டவுடன் நான் பிரிவினைக் கொள்கையை மட்டும்தான் விட்டிருக்கிறேனே, தவிர பிரிவினைக்காகச் சொன்ன அத்தனை காரணங்களும் தொடர்ந்து இருக்கும் என்று சொன்னார். அதுகூட ஸ்டேட் அட்டானமியாக, புரவின்ஷியல் அட்டானமியாக ஆகாமல், வேறு என்னவாகும் என்று 30 ஆண்டுக் காலம் அவற்றைப் பயன்படுத்தியதாலே நான் கேட்கிறேன்.

திரு. க. உரொா. எட்மண்ட்: திராவிட நாடு பிரிவினைக் கொள்கையைத் தான் கைவிட்டேன், அதற்குண்டான காரணங்களை நான் விடவில்லை யென்று சொன்ன அண்ணா அவர்கள் இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆசிரியர் அவர்களுக்குப் பேட்டி கொடுத்த நேரத்திலே, என்ன சொல்லியிருக்கிறார்கள்?

Dravidian Union within the Indian Constitution

என்றும் சொல்லியிருக்கிறார்கள். திராவிடக் குடியாட்சி. ஆனால் இந்திய அரசியல் சட்டத்திற்குட்பட்ட குடியாட்சி. ஆகவே, அண்ணா அவர்கள் ஒன்றுபட்டிருக்கவேண்டுமென்றுதான் சொன்னார்களே தவிர, இந்திய அரசோடு இணைந்திருக்க வேண்டுமென்றுதான் சொன்னார்களே தவிர, பிரிவினைக்கு உண்டான காரணங்களை விடவில்லை என்று சொன்னது பிரிவினைக்காக அல்ல. அண்ணா அவர்கள் அதை விட்டு விட்டார்கள், முழுமையாக விட்டுவிட்டார்கள் என்பதைத்தான் அண்ணா அவர்கள்.....

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: Fuller autonomy to the states மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் எட்மண்ட் அவர்கள் பேசுகின்றபொழுது Fuller autonomy to the states என்றுதான் அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார் என்று குறிப்பிட்டார்கள். இன்னும் சொல்லப் போனால், நான் இல்லஸ்ட்ரேட்டட் வீக்லியில் வந்ததைப் பற்றி சொன்னவுடன், அந்த இல்லஸ்ட்ரேட்டட் வீக்லியை அவர்கள் என்னிடத்திலே கேட்டார்கள், நானும் கொடுத்தேன். புல் அட்டானமி என்று அண்ணா அவர்கள் சொல்லி இருந்தால் அவர் ஒத்துக்கொள்கிறாரா?

திரு. க. உரொா. எட்மண்ட்: அதைச் சொல்லியிருந்தால், "அவர் ஒத்துக் கொள்கிறாரா" என்பதல்ல. என்னுடைய வாதம், அதுவல்ல.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, எதிர்க்கட்சித் தலைவரவர்கள், முதல் பக்கத்தை மட்டும் படித்துவிட்டு இரண்டாவது பக்கத்தை அவர் படிக்காமல் விட்டு விட்டார்.



இரண்டாவது பக்கத்தில், அறிஞர் அண்ணா அவர்கள் இப்படியெல்லாம் வரும் என்று எதிர்பார்த்திருக்கிறார் என்று தெரிகிறது. எங்கே, இவைகளெல்லாம் கொள்கைகளா என்று, பிற்காலத்திலே கேட்டு விடுவார்களோ என்று கருதியோ என்னவோ, இதைப்போல் நிருபர் கேட்டபொழுது அவர் அழகாகச் சொல்லியிருக்கின்றார். Are these principles ? என்று நிருபர் கேட்கிறார் எப்படி நண்பர் எட்மண்ட் அவர்கள் இப்பொழுது கேட்கிறாரோ, அப்படி நிருபர் கேட்கிறார். அண்ணா அவர்கள் "Your presumption is wrong" என்றார். எட்மண்ட் அவர் களுக்கு இன்றைக்குப் பொருத்தம், அன்றைக்கு நிருபருக்கு அது பொருத்தம்.

Federalism. Full autonomy for the States இது வேண்டும், இது வேண்டும் Full autonomy for the states and egalitarianism—are these not principles ?

இவைகளெல்லாம் கொள்கைகளா இல்லையா என்று அண்ணா அவர்கள் கேட்கிறார்கள். எட்மண்ட் தான் பதில் சொல்லவேண்டும்.

திரு. க. உரொா. எட்மண்ட். அண்ணா அவர்கள் ஃபுல்லர் அட்டானமி என்றும் சொல்லியிருக்கிறார்கள். (ஆளுங்கட்சித் தரப்பில் சிரிப்பு).

You do not have the patience to hear me.

சொன்னவுடனே சிரித்துவிடுவது என்றால் என்ன அர்த்தம்? அண்ணா அவர்கள் ஃபுல்லர் அட்டானமி என்றும் சொல்லியிருக்கிறார்கள், அதற்குப் பின்னாலே, ஃபுல் அட்டானமி என்றும் அதே பேட்டியிலே சொல்லி யிருக்கிறார்கள். நீங்கள் அதைக் கருத்திலே வைத்துக்கொள்ளவேண்டும். ஃபுல் என்பதற்கும், ஃபுல்லர் என்பதற்கும் அண்ணா அவர்கள் வித்தியாசத்தைப் புரிந்து வைத்துத்தான் பேசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, மாநில சுயாட்சி கொள்கைக்கு அண்ணா அவர்கள் எதிரானவர் அல்ல. ம. பொ. சி. அவர்கள் கூட்டிய மாநாட்டிலே அவர் கலந்துகொண்டு உரையாற்றி யிருக்கிறார் என்றால், அதிலிருந்து என்ன தெரிந்து கொள்ளவேண்டும்? அந்தக் கொள்கையைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் வரவேற்றிருக்கிறார் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். ஆகவே, அதற்கு எதிராகப் பேசுவது அண்ணாவின் கொள்கையாகாது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூடுதல் அதிகாரம் கிடைத்தால் போதும் என்று சொன்னார்கள். அதையும் அவர்கள் சார்பிலே, ஹனுமந்தையா அவர்கள் பேசும் பொழுது பாராளுமன்றத்தில் எடுத்துச் சொன்னார்கள். அதையும் முடியாது என்று நிராகரித்து விட்டார்கள், இந்தியப் பிரதமர் அவர்கள். ஆகவே, அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள்?

திரு. க. உரொ. எட்மண்ட். கூடுதல் அதிகாரங்களை இந்திரா காந்தி கொடுக்கிறாரா, இல்லை மறுக்கிறார்களா? அதைப் பின்னால் பார்க்கலாம். அவர்கள் தரப் போவதில்லையென்றால், நாங்கள் போராடிப் பெறுவோம். ஸ்டேட் அட்டானமி கிடைக்கவில்லையென்றால் போராட்டத்தில் இறங்குவோம் என்றீர்கள்; ஸ்டேட் அட்டானமி இடையாது என்றார்கள், போராடவா செய்கிறீர்கள்? மாநில சுயாட்சி பெறுவதற்காக, பதவியிலிருந்து இறங்குவோம், போராட்டத்திலிறங்குவோம் என்று சொன்னீர்களே, பதவியிலிருந்தா இறங்கினீர்கள்? போராடவா செய்தீர்கள்? பதவியில் ஒட்டிக் கொண்டுதானே யிருக்கிறீர்கள்? அதைப் பெற நீங்கள் வெளியேறத் தயாராக இல்லையே. கிடைக்கவில்லையென்பதற்காக, அவர்கள் சொல்லிவிட்டார்கள் என்பதற்காக அ.தி.மு. கழகம் சும்மா இருக்கப் போவதில்லை. (குறுக்கீடு.)

We are also for more powers.

கூடுதல் அதிகாரங்கள் மக்களுக்கு வேண்டுமென்றுதான் அ.தி.மு.க. சொல்லிக் கொண்டிருக்கிறது. நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள், நம்முடைய அண்ணா அவர்கள் மாநில சுயாட்சி தேவையென்று சொல்லியிருக்கிறார்கள். அதை ஏற்றுக் கொள்ளவில்லையென்றால், அதிலே என்ன நியாயம் என்று. நான் சொல்கிறேன், அண்ணா அவர்கள் மாநில சுயாட்சி தேவை என்று சொல்லியிருந்தால், நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயார். அதுபற்றி அண்ணா அவர்கள் மேலவையிலே, 1968 என்று நினைக்கிறேன், மிகத் தெளிவாக விளக்கம் கொடுத்திருக்கிறார்கள்.

Mr. DEPUTY SPEAKER: Please conclude within two minutes.

Thiru G. R. EDMUND: Yes, Sir, I will conclude by 1-00 p.m.

திராவிட முன்னேற்றக் கழகத்திலேயுள்ளவர்கள் அருள்கூர்ந்து புரிந்து கொள்ளவேண்டும். அண்ணா அவர்கள் சொன்ன மாநில சுயாட்சி என்பது வேறு, நீங்கள் கொண்டிருக்கிற மாநில சுயாட்சி என்பது வேறு. அண்ணா அவர்கள் மாநில சுயாட்சியை ஆதரித்துப் பேசினார்கள் என்றால், கூடுதல் அதிகாரங்களுக்காகத்தான் பேசினார்கள். தனியாகப் பிரிந்து போய், ஒரு சுதந்திரத் தமிழ்நாடு வேண்டுமென்று, அண்ணா அவர்கள் பேசவில்லை. அதை இலஸ்ட்ரேட்டட் வீக்லியிலே கொடுத்திருக்கிற பேட்டியிலே மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

Autonomy as far as we are concerned, is only for getting more powers to the States and not independence or self-Government என்று. இன்றைக்கு நீங்கள் சொல்கிற மாநில சுயாட்சியென்பதன் பொருள் என்ன? நீங்கள் வெளியே சொல்கிறீர்கள், மாநில சுயாட்சி யென்றால் கூடுதல் அதிகாரங்களைத்தான் நாங்கள் கேட்கிறோம் என்று. கல்வியமைச்சர் அவர்கள், மாநில சுயாட்சியென்றால் தனி யாட்சியல்ல, தன்னாட்சி என்று சொல்கிறார். அண்ணா அவர்களே சொல்லியிருக்கிறார்கள், திராவிட நாடு பத்திரிகையிலே, தனித்



திராவிட நாடு கேட்பதிலே, தன்னாட்சிதான் கேட்கிறேன் என்று. ஆதாரங்கள் வேண்டுமென்றால் நான் கொண்டு வருகிறேன், நம்முடைய கல்வி அமைச்சர் சொல்லியிருக்கிறார், மாநில சுயாட்சி என்பது தனியாட்சியல்ல, தன்னாட்சி என்று. அப்படியென்றால், அண்ணாவினுடைய பொருள் பிரகாரம் தன்னாட்சி தனியாட்சியல்லவா? (குறுக்கீடு.) திராவிட நாட்டினுடைய பழைய பிரதிகளை நான் கொண்டு வந்திருக்கிறேன். 1—4—1956 ஆம் ஆண்டிலே, அண்ணா அவர்கள் எழுதிய ஒரு கட்டுரை திராவிட நாடு பத்திரிகையில் வந்திருக்கிறது. "நான் தனித் திராவிடநாடு கேட்கிறேன். . . .

Thiru V. KRISHNAMOORTHI (Nellikuppam): On a point of Order, Sir . . . .

Mr. DEPUTY SPEAKER: We are short of time. I am not allowing point of Order now.

திரு. க. உரொ. எட்மண்ட்: தன்னாட்சியின் உயர்வினை எண்ணுந் தோறும் என்று தன்னாட்சியென்றுதான், திராவிட நாட்டைப் பற்றி அண்ணா அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதே திராவிட நாட்டில், அண்ணா அவர்கள் எழுதியுள்ளதைத் தருகிறேன். ஆனால், இங்கு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், நம்முடைய மாநில சுயாட்சி என்பது தனியாட்சியல்ல, தன்னாட்சி என்று. அப்படியென்றால், தன்னாட்சி வேறு, தனியாட்சி வேறா? தன்னாட்சி என்றால் மாநில சுயாட்சி, தனியாட்சி என்றால் இண்டிபெண்டண்ட் ஸ்டேட்ஸ் என்று சொல்கிறார். அண்ணா அவர்கள் சொன்னது தன்னாட்சி அப்போழுது. ஆகவே, கல்வியமைச்சரவர்கள் சொல்கிற விளக்கம். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் ½ நிமிடத்தில் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட்: இதோ முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மணி அடிக்க, மணி அடிக்க பேசிக்கொண்டிருந்தால் எப்படி?

(பிற்பகல் 1.00)

திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு முதல்வர் அவர்கள் "தனிக் கொடி கேட்டிருக்கிறேன்" என்று மதுரையில் பேசும்போது "ஒன்றாக இருந்த இந்தியா இரண்டாயிற்று; இரண்டாக இருந்த இந்தியா மூன்றாயிற்று; மூன்றாக இருக்கும் இந்தியா. . . . . . . . .? அதற்குமேல் நான் சொல்லமாட்டேன்" என்று "அது நான்காகும்" என்ற பொருள்படப் பேசியிருக்கிறார்கள். தமிழ்நாடு பிரியும்

என்ற எண்ணத்திலேயே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அண்ணா அவர்கள் கூட மாநில சுயாட்சி என்று சொல்லியிருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். அண்ணா அவர்கள் கூடுதல் அதிகாரந்தான் கேட்டார்கள். நீங்கள் மாநில சுயாட்சி என்று சொல்லிக் கொண்டு, கூடுதல் அதிகாரம் என்று சொல்லி கொண்டு உள்ளுக்குள் வைத்திருக்கும் எண்ணத்தில் தனித் தமிழ்நாடு பிரிந்து போக வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டிருக்கும் காரணத்தாலேதான், இந்த மாநில சுயாட்சியை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம், கடுமையாக எதிர்க்கிறோம், அதே நேரத்தில் அண்ணா கேட்ட கூடுதல் அதிகாரங்களைப் பெற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இறுதி மூச்சு உள்ள வரை போராடும் என்பதை இந்த நேரத்தில் என்னுடைய கருத்துக்களாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தெரிவித்துக் கொண்டு, தலைவர் அவர்கள் கொடுத்த வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு முதல்வர் அவர்கள் எழுந்தார்கள்.)

திரு. கே. டி. கே. தங்கமணி. அரை மணி நேரந்தான் இருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் அதற்குள் முடித்துவிட வேண்டாம். எல்லா விஷயங்கள் பற்றியும் விரிவாக அவர்கள் கருத்துத் தெரிவிக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையின் மீது அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் எடுத்து வைத்துள்ள மிகச் சிறந்த வாதங்களுக்கு நான் என்னுடைய மனமார்ந்த நன்றியை முதற் கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விவாதத்திலே கலந்து கொண்டு உரையாற்றிய பலரில் ஒரு சிலர் வரவு செலவுத் திட்டத்தில் புள்ளி விவரங்களில் அதிக மாகப் புகுந்து தங்களுக்கு ஏற்பட்ட ஐயப்பாடுகளை விளக்க வேண்டு மென்றும், சில தவறுகள் நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றிருக் கின்றன என்றும் கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள்.

இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்த நண்பர் ஹாண்டே அவர்களும், எனக்கு முன்பு எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கும் நம்முடைய நண்பர் எட்மண்ட் அவர்களும் பேசியபோது இது என்னுடைய இறுதி நிதிநிலை அறிக்கை என்று குறிப்பிட்டார்கள். அது எந்த வகையில் இறுதியாக இருந்தாலும், அதைப்பற்றிக் கவலைப் படாத உள்ளத்துடன்தான் கழக அரசு தன்னுடைய கடமையைச்





செய்து கொண்டிருக்கிறது என்கின்ற உறுதியை மாத்திரம் "இறுதி" என்று கூறுகின்ற எனது இனிய நண்பர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வேன்.

வரவு செலவுத் திட்டத்தில், நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் கே. டி. கே. அவர்களும், நண்பர் ஹாண்டே அவர்களும் சில ஐயப்பாடு களை எழுப்பினார்கள். அதாவது, மூலதனச் செலவு முந்தைய ஆண்டு திருத்தப்பட்ட மதிப்பீட்டை விடக் குறைந்துவிட்டது என்கின்ற ஒரு குற்றச் சாட்டும், இந்த ஆண்டு 41 கோடி ரூபாய் என்று இருப்பது மேலும் குறைவானது என்கின்ற ஒரு குற்றச்சாட்டும் கே. டி. கே. அவர்களாலும் ஹாண்டே அவர்களாலும் எடுத்து வைக்கப்பட்டது.

இது பற்றி ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டபோது—

**The budget bristles with a dangerous trend of systematic erosion into capital expenditure that may ultimately ruin the development of our State**

என்று குறிப்பிட்டார்கள். திரு. தங்கமணி அவர்களும் இது நம்முடைய வளர்ச்சிக்காகக் கொடுத்த மூலதனச் செலவில் ஏற்பட்டிருக்கும் இந்த வேறுபாடு என்று நண்பர் ஹாண்டே அவர்களின் கருத்தை ஆதரித்துப் பேசினார்கள்.

நம்முடைய நிதிநிலை அறிக்கை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றது. வருவாய்க் கணக்கு (ரெவன்யூ கணக்கு), மூலதனக் கணக்கு (காபிடல் எக்ஸ்பெண்டிச்சர்), கடன்கள் என்ற மூன்று பிரிவு களாக நம்முடைய நிதி நிலை அறிக்கை வகுக்கப்பட்டிருக்கிறது. பட்ஜட் தயாரிக்கப்படுகின்ற முறையே இவ்வாறுதான்.

இப்படித் தயாரிக்கப்படுகின்ற நேரத்தில் நம்முடைய 1975-76 ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை எடுத்துக் கொண்டால் வருவாய்க் கணக்கைப் பொறுத்தவரை மொத்த வருவாய் 501.37 கோடி ரூபாய்; மொத்தச் செலவினங்கள் 537.50 கோடி ரூபாய்; பற்றுக்குறை 36.13 கோடி ரூபாய்.

வருவாய்க் கணக்கில் வரவுகள் தனியாகவும், செலவுகள் தனியாகவும் காட்டப்படுகின்றன. அந்த வகையிலே இந்த மொத்தக் கணக்கை நான் குறிப்பிட்டேன். மூலதனக் கணக்கு என்பது அவ்வாறு அல்ல. மூலதனக் கணக்கைப் பொறுத்தவரையில் மொத்தச் செலவுகளையும், வரவு களையும் எடுத்துக் கொண்டு நிகரச் செலவை மாத்திரம் (நெட்) எடுத்துக் கொண்டுதான் கணக்குக் காட்டப்படும். அப்படித்தான் நாம் கணக்குப் பார்க்க வேண்டும். மூலதனக் கணக்கில் வருவாய்கள் தனியாகக் காட்டப் படுவதில்லை. நிகரச் செலவு மட்டுமே மூலதனக் கணக்கில் காட்டப்

படுகிறது. இதுதான் பட்ஜட் கணக்கு முறையாக, பல்லாண்டு காலமாக இருந்து வருகிறது. மூலதனச் செலவு களைப் பொறுத்தவரை மொத்தச் செலவு எவ்வளவு, மூலதன வரவுகள் எவ்வளவு என்பதைப் பார்த்த பின்னரே மூலதனம் உயர்ந்துள்ளதா இல்லையா என்பதை நாம் சரிவரக் கணக்குப் பார்க்க முடியும்.

மூலதனச் செலவுகள் என்றாலே—நான் சற்று விளக்கம் தர விரும்புகிறேன். கட்டடங்கள் கட்டுதல்; அதாவது அலுவலகக் கட்டடங்கள், குடியிருப்புகள், பள்ளிக்கூடக் கட்டடங்கள், கல்லூரிக் கட்டடங்கள், மருத்துவமனைக் கட்டடங்கள். கட்டடங்கள் அல்லாமல், பாசனத் திட்டங்கள், புதிய சாலை அமைப்பு, சாலை மேம்பாட்டுத் திட்டங்கள், பல்வேறு அரசு நிறுவனங்களுக்காகக் கொடுக்கப்படும் பங்கு மூலதனங்கள், அரசுப் போக்குவரத்துத் துறைக்குப் புதிய பேருந்துகள் வாங்குதல், உரம் போன்ற விவசாயப்பொருள்கள் மக்களுக்கு வினியோகிப்பதற்காக வாங்கி சேமித்து வைத்தல், காடு வளர்ச்சி போன்ற இப்படிப்பட்ட பல்வேறு இனங்கள் இந்த மூலதன நிகரச் செலவு என்பதிலே அடங்கும். மூலதனச் செலவுகளுக்கு எதிராக ஆண்டுதோறும் சில வருவாய்களும் வந்து கொண்டே இருக்கும்.

குறிப்பாக, உரங்களை விற்கும்போது கிடைக்கின்ற வருவாய், இந்த வருவாய்களை மூலதனச் செலவில் இருந்து கழித்து பின்பு நிகரமாக இருப்பதை மட்டும்தான் நாம் மூலதனக் கணக்கில் காட்டுவது வழக்கம்.

உதாரணமாக, டாக்டர் ஹாண்டே அவர்கள் நிதிநிலை அறிக்கையின் பின்சேர்க்கையில் 29-வது பகுதியில் கடைசி கூடுதலைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1974-75ம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் மூலதனச் செலவு 56.36 கோடியாக இருந்தது. தற்போது மதிப்பீட்டில் 32.64 கோடியாகக் குறைந்துவிட்டது என்பது அவருடைய கருத்தாகும். இது தவறு என்பது தான் எனனுடைய வாதமாகும்.

1974-75ம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் மூலதன மொத்தச் செலவு 86.83 கோடி ரூபாய். இது எங்கே இருக்கிறது? இதிலே குறிப்பிடப் படவில்லையே என்றால், தனியாகத் தந்திருக்கிற 'நிதிநிலைக் குறிப்பு' என்ற புத்தகத்தில் அந்த விவரங்கள் அடங்கியிருக்கின்றன.

மூலதன மொத்தச் செலவு 86.83 கோடி ரூபாய்; திருத்திய மதிப்பீடு 1974-75ம் ஆண்டுக்கு 99.71 கோடி ரூபாய். இதைத் துணை மானியத்திலே நான் காட்டியிருக்கிறேன். இந்த அளவில் 1974-75ம் ஆண்டு 86.83 கோடி ரூபாய் என்று நிதிநிலை மதிப்பீட்டில் நம் மூலதனச் செலவு என்று காட்டியிருப்பதில் அந்த இனத்தின்கீழ் வரவாக வந்தது 30.47 கோடி ரூபாய். அதைக் கழித்துக் கொண்டால் "நெட் எக்ஸ்பென்டிச்சர்" நிகரச் செலவு ரூ. 56.36 கோடி ஆகும்.



அதைப்போலவேதான் தற்போது திருத்திய மதிப்பீட்டில் 99.71 கோடி என்பதும் அந்த இனத்தின் கீழ் வரவு வந்த வகையில் 67.06 கோடி ரூபாய் கழிக்கப்பட்டு நிகரச் செலவு 32 கோடி என்று குறைந்ததே அல்லாமல் வேறு அல்ல.

இந்த ஆண்டு 1975-76ல் மூலதன மொத்தச் செலவுக்காக 103.80 கோடி ரூபாய் என்ற அளவுக்கு நிர்ணயித்திருக்கிறோம். இந்த இனத்தின்கீழ் வரவு 62.04 கோடி என்ற அளவிற்கு வரவு வந்து 41.76 கோடி ரூபாய் என்ற அளவுக்கு மூலதன நிகரச் செலவு அமைகிறது. ஆகவே, நம்முடைய மூலதன மொத்தச் செலவு 86 கோடியிலிருந்து 99 கோடியாகத் திருத்தப்பட்டு, தற்போது 103 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. வருகிற திருத்த மதிப்பீட்டில் இன்னும் அதிகமாகுமே தவிர, அது குறையவில்லை என்ற அவர்களுடைய சந்தேகத்தைப் போக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மூலதனக் கணக்கில் மொத்தச் செலவு 1974-75 நிதியாண்டில் சுமார் 87 கோடி ரூபாய் என்று கணக்கிட்டபடி அது திருத்தப்பட்ட மதிப்பீட்டில் ஏறத்தாழ 100 கோடி ரூபாய் ஆக வளர்ந்து 1975-76ல் 104 கோடி ரூபாயாக அதிகமாகியுள்ளது. திருத்தப்பட்ட மதிப்பீடு அதை விட அதிகமாக இருக்கும். ஆகவே மூலதனச் செலவுகள் உண்மையில் வளர்ந்துள்ளதே தவிர, மற்றவர்கள் இங்கே குறிப்பிட்டது போல் குறையவில்லை என்பதை இந்த விளக்கத்தின் மூலமாக நான் தெரிவித்துக் கொள்வேன்.

அடுத்தபடியாக திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பற்றித் தம்முடைய முன் பகுதியிலே குறிப்பிட்ட போது, என். ஜி. ஓக்களுக்கு ரூ. 20 முதல் ரூ. 30 வரை உயர்வு கிடைக்குமென்று சொல்கிறார்கள், அதனால் 24 கோடி ரூபாய் செலவாகும் என்று சொல்கிறார்கள், எப்படி என்று தெரியவில்லை, வறட்சிக்கு 30 கோடி ரூபாய் செலவழிக்கப்படுகிறநேரத்தில் 24 கோடி ரூபாய் அரசு ஊழியர்களுக்காகத் தருவது என்று அரசு அறிவிக்குமானால் பொது மக்களுக்கு அரசாங்க ஊழியர்கள் மீது ஒரு தவறான எண்ணத்தை ஏற்படுத்தாதா என்ற வருத்தத்தை அவர்கள் தெரிவித்துக் கொண்டார்கள். அதற்குச் சரியான கணக்கு வேண்டுமென்றும் திரு. கே. டி. கே. அவர்கள் கேட்டார்கள்.

நான் தற்போது அறிவித்த அகவிலைப் படி விகிதங்கள்மூலம் அரசாங்க அலுவலர்கள், ஆசிரியர்கள் பயன் பெறுவார்கள். அதில் யார் யார் எவ்வளவு பயன் பெறுகிறார்கள் என்ற கணக்கைப் பார்க்கவேண்டும். கடந்த 2 மாதங்களுக்கு முன்பு, பொங்கல் அன்று அக விலைப் படியினை உயர்த்தி சில மாற்றங்களைச் செய்து அரசின் சார்பில் ஒரு அறிக்கையினைப் பிறப்பித்தோம். அது, அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், மற்றும் பல தரப்பட்ட ஊழியர்களுக்கு மன நிறைவைத் தராத காரணத்தினால் மீண்டும் மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று என்னை அவர்கள்

சந்தித்துப் பேசிய போது சொன்னார்கள். அதன் பேரில் ஜனவரியில் செய்யப்பட்ட அந்த அறிவிப்பை அடுத்த இரண்டொரு மாதங்களுக்குள்ளாக மாற்றி அமைத்திருக்கிறோம். எப்படி 24 கோடி ரூபாய் வர முடியும், 30 கோடி ரூபாய்களை வறட்சிக்காகச் செலவழிக்கும்போது 24 கோடி ரூபாய் அரசு அலுவலர்களுக்கு அதிகமாகத் தருவது என்று சொல்வது, பழி போடுவதாகாதா என்ற வாதத்திற்கு நான் தருகிற பதில் 100 முதல் 180 ரூபாய் வரை சம்பளம் வாங்குகிறவர்கள் மாதம் ஒன்றுக்கு 20 ரூபாய் இந்த அறிவிப்பின் மூலமாக அதிகம் பெறுகிறார்கள். அப்படிப் பெறுகிறவர்களுடைய தொகை 1 லட்சத்து எழாயிரம் ஆகும். அவர்களுக்கு ஆகும் மொத்த அதிகச் செலவு 2 கோடியே 57 லட்சம் ரூபாய். 185 முதல் 210 ரூபாய் வரை சம்பளம் பெறுகிறவர்கள் மாதம் ஒன்றுக்குக் கூடுதலாக 20 முதல் 30 ரூபாய் வரை பெறுகிறார்கள். அப்படிப் பயன் பெறுகிறவர்களுடைய எண்ணிக்கை 1 லட்சத்து 43 ஆயிரம் பேர்களாகும். அவர்களுக்கு அதிக மொத்தச் செலவு 4 கோடியே 29 லட்சமாகும். ரூபாய் 215-ம் அதற்கு மேலும் சம்பளம் பெறுகிறவர்கள் மாதம் ஒன்றுக்கு இன்றைக்குக் கூடுதலாக 30 ரூபாய் பெறுகிறார்கள். அப்படிப் பயன் பெறுகிறவர்களுடைய மொத்த எண்ணிக்கை 3 லட்சத்து 38 ஆயிரம் ஆகும். அதற்கு ஆகிற மொத்தச் செலவு 12 கோடியே 17 லட்சமாகும். உள்ளாட்சி நிறுவன ஊழியர்களுக்கு ஆகும் செலவு 3 கோடியே 17 லட்சம் ரூபாயாகும். ஆக, மொத்தம் 22 கோடியே 20 லட்ச ரூபாய். அது அன்னியில் ஏற்கெனவே அளிக்கப்பட்ட அக விலைப்படி வீதங்களை பென்ஷன், கிராச்சுவிடி தரும் பொருட்டு சம்பளத்தோடு சேர்த்து கணக்கிடலாம் என்ற முடிவின்படி அரசுக்காகும் கூடுதல் செலவு ஒரு கோடியே 50 லட்ச ரூபாயாகும். 54 ஆயிரம் கிராம அலுவலர்களுக்குக் கூடுதல் சிறப்பு ஊதியம் தருவதால் ஆண்டுக்கு ஆகும் கூடுதல் செலவு 46 லட்ச ரூபாயாகும்.

ஓய்வூதியம் பெறும் 62 ஆயிரம் பேர்களுக்குக் கூடுதலாக 5 ரூபாய் அதிகமாக அகவிலைப்படி தருவதால்—பொங்கல் நேரத்தில் அறிவித்த வகையில்—அரசுக்கு ஆகும் கூடுதல் ஆண்டுச் செலவு 37 லட்சமாகும். ஆக மொத்தம் 24 கோடியே 53 லட்ச ரூபாய் இந்தக் கணக்கின்படி ஆகிறது என்பதையும்—சொல்லிக் கொள்கிறேன்.

30 கோடி ரூபாய் வறட்சி நிவாரணப் பணிகளுக்காகச் செலவாகும் போது 24 கோடி ரூபாய் அரசாங்க ஊழியர்களுக்காகச் செலவிடப்படலாமாவென்று மக்கள் அவர்கள்மீது வருத்தப்படுவார்கள் என்று திரு. நங்கமணி அவர்கள் எடுத்துச் சொன்னது சரியல்ல. அப்படி இருந்த போதிலும் மக்கள் வருத்தப்படமாட்டார்கள். வறட்சி காரணமாக கஷ்டப்படுகிறவர்களில் அரசு ஊழியர்களும் இருக்கின்ற காரணத்தினால் 24 கோடிக்காக மக்கள் வருத்தப்படமாட்டார்கள் இதிலே தவறில்லை என்பதையும் அவருக்குத் தெரிவித்துக்கொள்வேன்.

திரு. கே.டி. கே. அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள், சேல்ஸ்டாக்ஸ் மூலமாக 138 கோடி ரூபாய் கிடைக்குமென்று சொன்னார்கள். ஆனால் ரிவைஸ்டு எஸ்ட்டிமேட்டில், திருத்தப்பட்ட மதிப்பீட்டில்



174 கோடியாக உயர்ந்திருக்கிறது, 36 கோடி ரூபாய் அதிகமாக கிடைத்திருக்கிறது, அதே மாதிரி ஸ்டாம்ப் ரெஜிஸ்ட்ரேஷனில் 23½ கோடி ரூபாய்க்குப் பதிலாக 28½ கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது. வாகன வரியில் இருபத்தி மூன்றே முக்கால் கோடியை எதிர்பார்த்தோம். ஆனால் கிடைத்தது 33 கோடி. செலவினங்களை எடுத்துக்கொண்டாலும் கல்விக்காக 108 கோடி என்பது 112 கோடியாக ஆகியிருக்கிறது. இப்படிச் செலவினங்களை எடுத்துக் கொண்டாலும் சரி, வருமானங்களை எடுத்துக்கொண்டாலும் சரி, இவைகள் சரியான வகையில் செய்யப்படவில்லை என்று கே. டி. கே. அவர்கள் கூறினார்கள். விற்பனை வரி 1974—75 மதிப்பீட்டின்போது 139 கோடி என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி அது 175 கோடியாக மாறியது. அதனால் அதிகமாக வந்தது 36 கோடி என்பதை ஒத்துக்கொள்கிறேன். இந்த 36 கோடி, உயர்வாக வந்தது என்றால் ஏன் வந்தது என்று யாரும் கேட்கமாட்டார்கள், எப்படி வந்தது இந்தக் கணக்கு என்று திரு கே. டி. கே. கேட்டதன் காரணமாக, நான் அவர்கள் தவறாகச் சொன்னார்கள் என்று கருதவில்லை, விளக்கம் அளிப்பது நிதித் துறை பொறுப்பேற்றிருக்கிற என் கடமை என்ற வகையில் விளக்கம் அளிக்க விரும்புகிறேன். இந்த ஓராண்டுக் காலத்தில் ஏற்பட்டிருக்கிற விலைவாசி உயர்வு ஒரு காரணம். விற்பனை வரி விலைவாசி உயருகிற நேரத்தில் அதிகமாகும் என்பதை மறந்துவிடக் கூடாது. இது தவிர பொருளாதார வளர்ச்சி, இதுமாத்திரமல்லாமல் முனைப்பான விற்பனை வரி வசூல்—கெடு பிடியான அல்ல—பல முனை விற்பனை வரியை 3½ சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக மாற்றி அமைத்தது, ஆகஸ்டில் இதைச் செய்தோம். இவையெல்லாம், இந்த விற்பனை வரி 36 கோடி ரூபாய் அளவிற்கு உயர்வதற்குக் காரணங்களாக அமைந்திருக்கின்றன.

திரு. கே. டி. கே. இன்னொன்றைக் கேட்டார்கள், முத்திரைத் தாள்களில் 23.50 கோடிக்குப் பதிலாக திருத்திய மதிப்பீட்டில் 28.50 கோடியாக உயர்ந்திருக்கிறது, இதற்குக் காரணம் என்னவென்று கேட்டார்கள். இதற்குக் காரணம் நகரங்களிலும், பிற சுற்றுப் புறங்களிலும் வீட்டு மனைகளின் விலை ஏற்றம், நிலங்களின் மதிப்பில் ஏற்றம், நில உச்ச வரம்புச் சட்டத்தைப் படிப்படியாகச் செயல்படுத்தி வருவதால் சொத்து மாற்றங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு போன்றவையாகும். இவைகளின் காரணமாக இந்த உயர்வு ஏற்பட்டிருக்கிறது.

வாகன வரியில் 23 கோடியாக இருந்தது 33 கோடியாக திருத்திய மதிப்பீட்டில் ஆகியிருக்கிறதென்று சொன்னார்கள். இந்த உயர்வுக்குக் காரணம், வாகனங்கள் அதிகமானது என்பது ஒன்று. இரண்டாவது 1974 அக்டோபர் முதல் சீட்டிற்குக் கூடுதலாக நாம் வரியை உயர்த்தியிருக்கிறோம். அதன் காரணமாக இந்த உயர்வு

ஏற்பட்டிருக்கிறது. திரு. கே.டி.கே. அவர்கள் வருவாய் இனங் களிலே மட்டுமல்லாமல் செலவினங்களிலே இப்படி வித்தியாசங்கள் இருக்கலாமா என்று கேட்டார்கள். செலவினங்களில் கல்விக்காக 1974-75 நிதி நிலை மதிப்பீட்டில் 108.52 கோடியாக இருந்தது, திருத்திய மதிப்பீட்டில் 112.50 கோடியாக உயர்ந்து இருக்கிறதே என்று கேட்டார்கள். இதற்கும் காரணங்கள் உண்டு. 1—10—1974ல் குடும்பப் பாதுகாப்பு திட்டத்திற்காக அரசு ஊழியர்கள் செலுத்தி வந்த தொகையை அரசே செலுத்த முன் வந்தது. இப்படி அரசு ஊழியர்களுக்குச் செலுத்தியபோது அதிலே ஆசிரியர்களும் உட்படுவார்கள். அந்த வகையிலும், மதிய உணவுத் திட்டத்திற்காக அரசு தரும் பங்கை மேற்கொண்டு உயர்த்தியதன் காரணமாக இரண்டு கோடி ரூபாய் அதிகச் செலவினம் ஏற்பட்டது. அது அன்னியில் பல கல்லூரிகளுக்கு மானியங்களையும் உயர்த்தி வழங்க வேண்டி வந்தது. இவ்வாறு நிதி நிலை வரவு—செலவு களில் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகளுக்காக துணை மதிப்பீடுகளின் வாயிலாக அவ்வப்போது சட்ட மன்ற ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறது. என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்வேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, வாகன வரி பொறுத்த வரையில் சீட்டின் அடிப்படையில் கணக்குப் போடு கிறார்கள். எத்தனை ஊர்திகள் ஓடுகின்றன, இவைகளில் எவ்வளவு சீட்டுக்கள் உள்ளன என்ற விவரங்கள் தெரியும். ஆகவே, ஏறக் குறைய அந்த வரியின் மூலமாக இவ்வளவு எதிர்பார்க் கிறோம் என்று சொல்லுகிற போது அப்படிப் போடக்கூடிய கணக்கில் இவ்வளவு பெரிய வித்தியாசம் வரக் கூடியதைப் பார்த்தால் வியப்பாக உள்ளது. இதற்கு என்ன காரணம் என்று விளக்கத் திலிருந்து புரிந்து கொள்ள முடியவில்லை. டாக்ஸைக் கூட்டும் போது அப்ராக்ஸிமேட்டாக இவ்வளவு வரும் என்று தெரியும். அதற்கும் மேலே இவ்வளவு வருகிறதென்று சொன்னால் கணக்குப் போட்டு சட்டசபைக்குச் சொல்கிற தகவல் தவறான தகவலா, அல்லது குறைத்துக் காட்டி கூடுதலாகப் பிறகு காட்டவேண்டுமென்ற முறையில் போடப்பட்டிருக்கிறதா என்பது எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுகிற போது ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் வரவு வைக்கப்படுகிறது. இந்த நிதி ஆண்டில் அதற்குப் பிறகு வரி கூடுதலாக ஆக்கப்படுகிற போது கூடுதலான தொகையை ரிவைஸ்ட் எஸ்டிமேட்டில் கொண்டு வர முடியுமே தவிர, ஒரிஜினல் பட்ஜெட் எஸ்டிமேட்டில் கொண்டு வர முடியாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதைத்தான் நான் சொன்னேன், நாம் மதிப்பீட்டில் 23 கோடி ரூபாய் வாகன வரி மூலமாக வரும் என்று நிர்ணயித்து, அதற்குப் பிறகு தான் 1974—ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சீட்டுகளுக்கு வரி உயர்த்தி



யிருக்கிறோம் என்பதை மனதில் கொள்ள வேண்டும். அதன் மூலமாகக் கிடைத்த தொகை தான் திருத்த மதிப்பீட்டில் 33 கோடியாக உயர்ந்திருக்கிறது என்று சொன்னேன்.

ஆகவே, இந்த வரவு-செலவுத் திட்டம் முழுவதும் ஏதோ செய லாக்க ரீதியில் அமையவில்லை என்று திரு. கே. டி. கே. அவர்கள் சொன்னார்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

திரு. கே.டி.கே. தங்கமணி : ஏற்கெனவே போட்ட எஸ்டி மேட் படி, ரிவைஸ்ட்டு எஸ்டிமேட்டிலும் 23 கோடிதான் வரி, புதிய வரி போட்டதால் தான் 10 கோடி அதிகமாக வரி வந்தது என்று சொன்னால் அது பட்ஜெட் தயாரிக்கும் முறை ஒழுங்கு என்று வரும். அப்படியல்லாமல், ரிவைஸ்ட் எஸ்டிமேட் போடு வதற்குக் காரணம் உண்டு, இங்கே வந்து ஒப்புதல் பெற்று இருக்கிறோம் என்று சொல்வது வேறு. நான் தெரிந்து கொள்ள விரும்புவது, முதலில் போட்டு இருந்த 23 கோடி வருமானம் தான் முதலில் இருந்த வரியின் அடிப்படையில் வந்திருக்கிறது, பின்னால் புதிய வரி போட்டதால்தான் 10 கோடி அதிகமாக வரி கிடைத்ததா என்று அறிய விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஒன்மோர் பாயின்ட் டு கிளாரிபை. கூடுதல் வரி போடும் போது 10 கோடி வரும் என்று சொல்லி யிருக்கிறீர்களா, குறைவாக வரும் என்று தானே சொல்லியிருக்கிறீர்கள் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏதோ சில இனங்களில் வரி அதிகமாக எதிர்ப்பார்ப்போம், குறைவாக வரும், குறைவாக எதிர்ப்பார்ப்போம், அதிகமாக வரும். அப்படி அதிகமாகக் கிடைத்தது எனபதால் திருப்பிக் கொடுத்து விடுங்கள் என்று சொல்லமுடியாது.

ரூ. 23 கோடி நிதி நிலை மதிப்பீட்டில் என்று சொல்கிற போது. சீட்டுக்கு வரியை உயர்த்தக்கூடிய நிலை இல்லை. வரி உயர்த் தியதால் 23 கோடி ரூ. 33 கோடியாக ஆகி இருக்கிறது என்று சொன்னேன்.

திரு. கே. டி. கே. அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். இந்த பட்ஜெட் முழுவதுமே ஏதோ ஒரு "வெல்பேர் ஆர்கனை சேஷன்" என்ற அளவுக்கு அமைந்து இருக்கிறதே அல்லாமல் இதிலே பெரிய சாதனைகள் ஏதும் இல்லை என்று குறிப்பிட்டார்கள்.

எனக்கு நினைவு, கம்யூனிஸ்ட் சித்தாந்தம் கூட, மாநிலங்கள் வெல்பேர் ஸ்டேட்களாக இருக்கவேண்டும், போலீஸ் ஸ்டேட்களாக இருக்கக்கூடாது. அது கம்யூனிஸ்ட் கட்சியின் அடிப்படைத் தத்துவம்

6 கோடியே 41 லட்சம். திட்டத்தின் கீழ் செலவு செய்ய இருப்பது 3 கோடியே 97 லட்சம். மத்திய அரசு முழுமையாகப் பொறுப்பு ஏற்று நமது அரசின் மூலம் நடத்தும் திட்டங்களுக்காகச்செலவு செய்ய இருப்பது 50 லட்சம். ஆக மொத்தம் 10 கோடியே 88 லட்சம் என்று நாம் குறிப்பிட்டு இருக்கிறோம். மாநில ஆண்டுத் திட்டத்தை மத்திய திட்டக்குழுவோடு கலந்து பேசி நாம் அவ்வப்போது முடிவு செய்கிறோம். மத்திய திட்டக்குழு மாநில திட்டத்தின் அளவு எந்த அளவில் இருக்கவேண்டும் என்றுதான் குறிப்பிடுகிறது. அதே நேரத்தில் மத்திய அரசிடமிருந்து மொத்தமாகக் கிடைக்கும் உதவியின் அளவையும் குறிப்பிடுகிறது. உங்களுடைய வருவாய் (resources) என்ன, உங்களுடைய வருவாயை எப்படிப் பெருக்குவீர்கள், வரிகளை அதிகமாக்குவதாலோ அல்லது பல்வேறு வருவாய் இனங்களைப் பெருக்குவதாலோ உங்களுடைய வருவாய் எவ்வளவு இருக்கும் என்றெல்லாம் கேட்டு திட்டத்திற்கு அனுமதி கொடுக்கிறார்கள். நாம் 160 கோடி கூட போட்டுக்கொள்ளலாம். நாம் 140 கோடி என்ற அளவுக்கும் இணங்கலாம். ஆனால் அதிலே நாம் 143 கோடி என்று இந்த ஆண்டு இணங்கி இருக்கிறோம் என்றால் அதில் மத்திய அரசு மானியமாகவும் கடனாகவும் வழங்குகிற தொகைதான் (central assistance) 143 கோடியில் மத்திய அரசு வழங்குகிற மானியம் கடன் உள்பட மொத்தத் தொகை 41 கோடியே 15 லட்சமாகும். மத்திய திட்டக்குழுவில் நான் பேசும்போது தமிழ்நாட்டு மக்களுக்காக..........

(பிற்பகல் 1·30)

திருமதி சத்தியவாணிமுத்து : நான் அன்றைக்குக் கூறியதெல்லாம் 143 கோடி மத்திய அரசு வற்புறுத்தியன் பேரில் மாநில அரசைச் சேர்ந்த அதிகாரிகளோ அமைச்சர்களோ ப்ளானிங் கமிஷனிடம் விவாதிக்கும்போது அவர்கள் ஒதுக்கவேண்டும். என்று கேட்டுக் கொண்ட தொகை. அதை நான் இப்போதும் இல்லை என்று சொல்லவில்லை. எனக்குத்தெரிந்தவரை தாழ்த்தப்பட்ட மக்கள் நலனுக்காக இங்கே இருக்கிற அதிகாரிகள் சென்று கேட்டது 13 கோடி ரூபாய். ஆனால் ப்ளானிங் கமிஷன் ஒத்துக்கொண்டது 19 கோடி ரூபாய். 41.15 கோடி மத்திய அரசின் நிதி உதவியாகத் தரப்படுகிறது. அந்தப் பணம் 143 கோடி ரூபாயில் சேரும் என்றால் தனியாக அதை ஏன் இனம் பிரித்து தாழ்த்தப்பட்ட மக்களின் கீழ் காட்டவேண்டும். அதைத் தான் நான் திருப்பிக் கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எல்லாம் மத்திய அரசுதான் செய்கிறது என்ற தவறான பிரச்சாரத்தை நாட்டு மக்களிடையே சிலர் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பேசுவதாகக் கூறிக்கொண்டு பேசிய காரணத்தால் தான் அவைகளை தனித் தனியாகப்போட வேண்டியிருக்கிறது. மறுபடியும் ஏதோ அவர்கள் வலியுறுத்தியதால் தான் நாங்கள் திட்டமாக ஆக்கினோம் என்று சொல்லுவது தவறு. 13 கோடி கேட்டோம் 19 கோடி தருவதாக அவர்கள் கொடுத்தார்கள்.என்றெல்லாம் சொல்லு



வது மிகமிகத்தவறு. முழுமையான தவறாகும். நம் 143 கோடி திட்டத்தில் பல தலைப்புகள் வருகின்றன. நான் இன்னும் சொல்லுவேன் மத்திய சர்க்கார் பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டோர் என்று பிரிப்பதே கிடையாது. நம் மாநிலத்தில்தான் பிற்படுத்தப்பட்டவர் நலனுக்காக ஒரு தனி இலாகாவை வைத்து அவர்களுடைய நலன்களைக் கவனித்து வருகிறோம்.

Backward community என்றாலே மத்திய சர்க்காரில் தாழ்த்தப்பட்டவர்கள் நலனுக்காக என்ற அளவுக்குத்தான் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். நாம் நிலைமைகளை. எடுத்து அவர்களிடம் சொல்லி அவர்களிடத்தில் கேட்டது தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் நலன் ஆகிய இரண்டிற்கும் நாம் கேட்டது 4.56 கோடி ரூபாய் . என்பதைக் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இது திட்டத்தில் 143 கோடி ரூபாயில் கேட்ட தொகை. ஆனால் மத்திய திட்டக்குழு செலவிட நமக்கு அறிவுரை கூறியிருப்பது 3 கோடி ரூபாய். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக செலவிட மத்திய அரசு ஆலோசனை கூறியது 3 கோடி ரூபாய். ஆனால் திட்டத்தின் அடிப்படையில் நாம் ஒதுக்கி, இருப்பது அந்த மொத்தம் 3 கோடிக்கு மாறாக தாழ்த்தப்பட்ட மக்களுக்காக 3.97 கோடியும் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக 64 லட்சமும் ஆக மொத்தம் 4 கோடி 61 லட்சம் ரூபாய். அவர்களுக்காக ஒதுக்கியிருக்கிறோம். நான் ஏற்கெனவே மொத்தமாக 10 கோடி ரூபாய் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக என்றும் ஏறத்தாழ 6 கோடி ரூபாய் பின்தங்கிய மக்களுக்காக என்றும் குறிப்பிட்டு இருக்கிறேன். அது அண்ணியில் அரிசனங்களுக்காக வீட்டு வசதி செய்து தருவதற்காக ஏறத்தாழ 3 கோடி ரூபாயில் 15 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. இந்த மாதத்தோடு அந்த வேலைகள் முடிவடைகின்றன. ஒரு லட்சம் வீடுகள் முதல் கட்டமாகக் கட்டுவதற்கு நாம் ஏற்பாடுகள் செய்து கொண்டு இருக்கிறோம். ஆகவே ஏதோ மத்திய சர்க்கார் வலியுறுத்தி அதை நாம் பெறத் தவறி விட்டோம் என்று கூறுவது சரியான வாதமாகாது.

(திருமதி சத்தியவாணிமுத்து எழுந்தார்கள்.)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதற்கு மேலே உங்களுக்கு விளக்கம் தர முடியாது.

டாக்டர் ஹாண்டே அவர்கள் இன்னொரு பெரிய குற்றச்சாட்டை சொல்லி பத்திரிகைகளில் எல்லாம் அதை மிக விரிவாகப் போட்டிருந்தார்கள். அவர் சொன்னார்

The total irregular financial dealings per year on an average is 42416 cases involving a sum of over Rs. 25 crores. I saw the exact sum. It is Rs. 25,02,75,000 for one year. What a fantastic record of our wonderful Chief Minister for himself.'

என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்ன குற்றச்சாட்டை 42,416 எண்ணிக்கை ஆடிட் அப்ஜெக்ஷன்ஸ் என்று போட்ட அந்த பத்திரிக்கைகள் எல்லாம் இந்த விளக்கத்தையும் போடுவார்கள் என்ற எண்ணத்தோடு தான் இந்த விளக்கத்தைத் தருகிறேன். இல்லாவிட்டால் மாநில மக்கள் ரொம்ப குழப்பமடைவார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் கூட வேண்டும் என்றே சொல்லியிருக்கமாட்டார் என்று கருதுகிறேன். அவர் நம் பழைய பட்ஜெட் வரலாறுகளைப்பார்க்காமல் கூறி இருக்க முடியும். அவர்கள் சொன்னதின் அர்த்தம் மற்றவர்களுக்கு எப்படிப் புலப்படும் என்றால் ஏதோ இந்த ஆண்டு 1972–73-ம் ஆண்டு ரிப்போர்ட்டில் 42,416 எண்ணிக்கை உள்ள ஆடிட் அப்ஜெக்ஷன்ஸ் இருந்தது என்று எண்ணிடத் தோன்றும். நாம் 1962-ம் ஆண்டிலிருந்து பார்த்தால் 1962–63-ல் மொத்தம் நம்முடைய மாநில பட்ஜெட் 163 கோடி. இன்றைக்கு நம் மாநில பட்ஜெட் 499 கோடி அதாவது 499·97 கோடி. ஏறக்குறைய 500 கோடி என்று வைத்துக் கொள்ளலாம். பட்ஜெட் 163 கோடி போட்ட போது மொத்தம் 31,502 ஆடிட் அப்ஜெக்ஷன்ஸ். தொகை இட்டத்தட்ட 15 கோடி involve ஆகிற அப்ஜெக்ஷன்ஸ். இப்போது 42,416 எண்ணிக்கை அப்ஜெக்ஷனில் involve ஆவது 25 கோடி சொச்சம் அதாவது 1962–63-ல் 163 கோடி பட்ஜெட் இருந்தபோது 9·67 சதவீதம் அப்ஜெக்ஷன்ஸ். 1972-73-ல் 500 கோடி பட்ஜெட் இருக்கிற போது 5 சதவீதம் அப்ஜெக்ஷன்ஸ். ஆகவே, குறைந்து இருக்கிறதே அல்லாமல் வேறு அல்ல. இன்னும் ஒன்று, ஆடிட் அப்ஜெக்ஷன்ஸ் என்றால் ஏதோ 1962-ல் காங்கிரஸ் ஆட்சியில் 15 கோடி ரூபாய் இருந்தது, 1972-73-ல் 25 கோடி. ஆகவே ஏதோ தவறு நடந்து விட்டது என்று அர்த்தம் இல்லை. சில செலவினங்களுக்கு ரசீது கொடுக்காமல் இருக்கலாம் கையெழுத்துப்போடத் தவறியிருக்கலாம். கையெழுத்து போடுகிற அதிகாரி ஊரில் இல்லாமல் இருக்கலாம். தொடர்ந்து 5—6 பேர் கையெழுத்து போட வேண்டிய இடத்தில் ஒருவர் போட்டு விட்டு இருக்கலாம். அவர் மாறுதலாகி வேறு வேலைக்குப் போயிருக்கலாம். இந்த அப்ஜெக்ஷனை எழுப்பியிருக்கலாம். அது மறுபடியும் அந்த அதிகாரிக்குச் சென்று கையெழுத்துப் போட்டவுடன் அந்த அப்ஜெக்ஷன் தள்ளப்படும். இந்த 31,562 என்பது 1962-ம் ஆண்டுக்கு மட்டும் உரியது அல்ல. அது பல ஆண்டுகளாக "காரி ஓவர்" ஆகி, கொஞ்சம் கொஞ்சமாக 31,562 ஆகி, மறுபடியும் கூடி, குறைந்து, கூடி குறைந்து 1972–73-ல் இந்த 42,416 என்று ஆடிட் அப்ஜெக்ஷன் வருகிறது. இது 1962-ஆம் ஆண்டை விட இட்டத்தட்ட 4½ சதவிகிதம் குறைவானதுதான். இதற்கான பதில் அவ்வப்போது சான்றிதழ், சர்டிபிகேட், ரசீது அதிகாரிகளால் தரப்பட்டு வருகின்றன என்றும் அதிலே வேறு ஒன்றுமில்லை என்ற விளக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : என்னுடைய வாதம் எல்லாம் இப்படி 1962-ஆம் ஆண்டு வந்ததைவிடக் குறைந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். நான் அந்த பிரச்சினைக்குள் போகவில்லை. கூடியவரை நம்முடைய



"பிஸிகல் கண்ட்ரோல்", "பினான்சியல் கண்ட்ரோல்", சரியாக இருக்க வேண்டுமென்பதற்காகச் சுட்டிக்காட்டினேனே அல்லாமல் வேறொன்றுமல்ல அப்படிச் சுட்டிக் காட்டுவதன் மூலம் அவர்கள் உஷாராக இருப்பார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். முதலமைச்சர் அவர்கள் சொல்லும்போது ஏதோ ஆபீஸர் கையெழுத்துப் போடவில்லை, ரசீது வரவில்லை என்று அப்ஜெக்ஷன் சொல்லியிருப்பதாகச் சொன்னார்கள். இவ்வளவு சிம்பிள் அப்ஜெக்ஷன் எல்லாம் மட்டுமா அவர்கள் கூறுவார்கள்? அதுமட்டுமல்ல.

Some serious irregularities also have been pointed out in the Audit Report. The explanation of the Hon. Chief Minister will look as though there are only very small unnoticeable objections which are raised by the Auditor. That is not correct.

டாக்டர் எச். வி. ஹாண்டே : சார், இன்னும் ஒன்று. அதுமட்டுமல்ல. 5 ஆண்டுகளாக 75 லட்சம் டன் சர்க்கரை விரயத்திற்கு ரிக்கார்டு காட்டவில்லை என்று ஆடிட் ரிப்போர்ட் வந்திருக்கிறது. அதை எல்லாம் முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகத்தான் கூறினேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது ஒன்றும் தி. மு. கழக அரசுக்கு மட்டும் புதிதல்ல. தமிழக ஆட்சியில் வெள்ளைக்காரன் காலத்திலேயிருந்து காங்கிரஸ் ஆட்சியிலிருந்து ஆடிட் அப்ஜெக்ஷன் என்பது, ஆடிட் எல்லாம் ஒழுங்காக செய்து சில தவறுகள் இருந்தால் கண்டு பிடித்து, இன்னின்ன தேவை என்ற கேள்விகளை எழுப்புவதும், அதிகாரிகள் பதில் சொல்வதும் வழக்கமாக இருக்கிறது. இதில் "ஒண்டர்ஃபுல் சீப் மினிஸ்டர்" என்று சொன்ன காரணத்தால்தான் நான் இதைச் சொன்னேனே தவிர வேறு அல்ல.

டாக்டர் எச். வி. ஹாண்டே : ரொம்ப ஜாஸ்தியாக இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 1962-ல் 163 கோடிக்கு 32,000; இப்போது 500 கோடிக்கு 42,000; ஆகவே இதில் குறைவாக இருப்பதைத்தான் "ஒண்டர்ஃபுல் சீப் மினிஸ்டர்" என்று கூறி என்னை வாழ்த்தியிருப்பார் என்று கருதுகிறேன். (சிரிப்பு).

பிறகு இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மிக முக்கியமாக எதிர்க்கட்சிகள் அளவில்—இப்போது இங்கே பேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் ஆரம்பத்திலும் நம்முடைய அனந்தநாயகி அம்மையார் அவர்களும் போடப்பட்டிருக்கின்ற வரிகளுக்கு பெரிய எதிர்ப்புக்களை தெரிவித்தார்கள்.

பொன்னப்ப நாடார் அவர்கள் பழைய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே வரிகளுக்கான எதிர்ப்புகளைத் தெரிவிப்பதில் தற்காலிகமாக நியாயம் இருக்கலாம். ஏனென்றால் அவர்கள் ஆட்சியிலிருந்து வரிகளைப் போட்டவர்கள். அதனால் தற்காலிகமாக நியாயம் என்று சொன்னேன். பருவா அவர்களுடைய ஸ்டேட்மெண்டைப் பார்க்கின்றபோது தற்காலிகமாக என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, பருவா அவர்களுடைய ஸ்டேட்மெண்டுக்கும் எங்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இப்போது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நாடார் அவர்கள் இப்போது என்று சொன்னதைத்தான் தற்காலிகமாக என்று நான் சொன்னேன். தற்காலிகமாக என்பது வடமொழியோ என்னவோ.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: திரு பருவா அவர்கள் ஏதோ பொதுமக்களைக் குழப்ப வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த அறிக்கையைக் கொடுத்திருப்பார்கள் என்று எண்ணுகிறேன். ஏனென்றால் அவர்கள் இங்கு வந்து போகிற நேரத்தில் மறுமுறையும் இங்கு அரசியலைக் குழப்ப வேண்டுமென்று கூறியிருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆகையால் அதைப்பற்றி நோக்கம் கற்பிக்க வேண்டாமென்று மட்டும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: குழப்பம் உண்டு பண்ணவேண்டுமென்று அவர்கள் சொல்லவில்லை. இந்த மாதிரிக் குழப்பம் அங்கே தான் இருக்கிறது. கோயம்புத்தூரில் வந்தீர்கள், பிறகு போனீர்கள். பாண்டிச்சேரியில் வந்தீர்கள். பிறகு போனீர்கள். இப்படிக் குழப்பம் இருப்பதால் சொல்லியிருக்கிறார்கள். (சிரிப்பு).

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அம்மையார் அவர்கள் கூறுகின்றது வேடிக்கைக்காக நாங்கள் எல்லாம் சிரிக்க வேண்டிய நிலையில் இருக்கிறது. அம்மையார் அவர்கள் எங்கள் கட்சியில் துணைத் தலைவராக இருந்தார்கள். இப்போது வேறு கட்சிக்குப் போயிருக்கிறார்கள். அவர்கள் இந்த வாதத்தைச் சொல்லும்போது உள்ளபடியே நாங்கள் வேதனைப்பட வேண்டி இருக்கிறது. யார் யாரோடு போனார்கள் (சிரிப்பு) என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. ஆகையால் இந்த மாதிரியான வாதமெல்லாம் இப்போதைக்குத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: எங்கள் வாதத்தில் சத்து இருக்கிறது. நான் ஒரேயடியாக வந்துவிட்டேன். நீங்கள் அடிக்கடி வருவதும் போவதுமாக இருக்கின்றீர்கள். எப்போது வேண்டுமானாலும் வரலாம். (சிரிப்பு) கதவு எப்போதும் திறந்திருக்கிறது.



திரு. ஆர். பொன்னப்ப நாடார்: உங்கள் வாதத்தில் உப்பும் இல்லை, சப்பும் இல்லை. (சிரிப்பு).

திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அவர்கள் கட்சித் தலைவர் மதிப்பிற்குரிய காமராஜர் அவர்கள் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இன்று பத்திரிகையில் வந்திருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வரிகளைப் பற்றி எடுத்துச் சொல்லப்பட்டது. டில்லியில் இருக்கிற மத்திய அரசின் சார்பில் திட்டக் குழு கூடுகிற நேரத்திலும், நிதி அமைச்சரை நாங்கள் சந்திக்கின்ற நேரத்திலும் முதலமைச்சர்களுடைய மாநாடு நடக்கின்ற நேரத்திலும் நீங்கள் வரிகள் மூலமாக மாநிலங்களின் வருவாயைப் பெருக்க வேண்டுமென்ற திட்டவட்டமாக அறிவிப்புகள் எங்களுக்கு வந்து கொண்டே இருக்கின்றன. அதுபற்றிப் பலமுறை நான் இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறேன். முன்னாள் நிதி அமைச்சர் திரு. சவான் எழுதிய கடிதத்திலும், திட்டக் குழுவின் சார்பில் உறுப்பினர்கள் எழுதிய கடிதத்திலும் விவசாய முனையிலும் நீங்கள் வரி விதிக்க வேண்டுமென்று மாநில அரசுக்கு தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் குறித்து இந்த அவையில் நான் பல முறை சொல்லியிருக்கின்றேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த வரையில் நாம் விதித்திருக்கின்ற வரி மிக மிக குறைவானதுதான் என்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால், இதை எதிர்க்காவிட்டால் எதிர்க் கட்சியாக இருக்க முடியாது என்பதை நானும் எதிர்க்கட்சியாக இருந்தவன் என்ற முறையில் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் இது நாம் எல்லாம் கூறுகின்ற அளவுக்கு இவை ஏழை எளியவர்களை, சாமானியர்களைப் பாதிக்கக்கூடியதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 59 பொருட்களின் மீது விதிக்கப்பட்ட பல முனை விற்பனை வரியை ஒருமுனை வரியாக மாற்றி அமைத்தோம். ஒன்றல்ல இரண்டல்ல. 59 பொருட்கள் மீது, அப்போது $3\frac{1}{2}$ சதவிகிதம் பருப்பு, எண்ணெய் வகைகள் இவற்றின் மீது பல முனை வரி விதிக்கப்பட்டது. அந்தப் பல முனை வரியின் மூலம் பருப்பு, எண்ணெய் போன்ற பொருட்களுக்கெல்லாம் பல முனை வரியாக 7 சதவிகிதம் அவர்கள் வரியாகக் கட்ட வேண்டி இருந்தது. நாம் அதை $3\frac{1}{2}$ சதவிகிதமாக்கி, இப்போது அந்த $3\frac{1}{2}$ சதவிகிதத்தை 4 சதவிகிதம் ஆக்கியிருக்கிறோம். ஆகவே, சென்ற ஆண்டு வரை இருந்த 7 சதவிகிதத்தோடு ஒப்பிடும்போது இந்த 4 சதவிகிதம் என்பது 3 சதவிகிதம் குறைக்கப்பட்டிருக்கின்றதே தவிர இது அதிகமானது அல்ல என்பதை நாம் நன்கு புரிந்து கொள்ள முடியும்.

அது மட்டுமல்ல, அண்டை மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தாலும், சிக்கரி, காப்பி, பிரெஞ்சு காப்பி, இவைகளுக்கு ஆந்திரத்தில் 6 சத விகிதம்தான். கேரளத்தில் 6 சதவிகிதம், கர்நாடகத்தில் 10 சத விகிதம், மராட்டியத்தில் 6 சதவிகிதம், நாம் விதித்திருப்பதும் 6 சத விகிதம். 5½ சதவிகிதமாக இருந்தது 6 சதவிகிதமாக இருக்கிறது.

தேயிலை—ஆந்திராவில் 6 சதவிகிதம், கேரளத்தில் 5 சதவிகிதம், கர்நாடகத்தில் 6 சதவிகிதம், மராட்டியத்தில் 6 சதவிகிதம், நாம் தற்போது விதித்திருப்பது 5½ சதவிகிதத்திலிருந்து ½ சத விகிதம் கூட்டி 6 சதவிகிதமாக ஆக்கியிருக்கிறோம்.

எண்ணெய் வகையைப் பொறுத்த வரையில்—ஆந்திராவில் 2½ சதவிகிதமாக இருந்தது 5 சதவிகிதம் ஆகியிருக்கிறது. கேரளத்தில் 5, சதவிகிதம், கர்நாடகத்தில் 4 சதவிகிதம், மராட்டியத்தில் 4 சதவிகிதம், நாம் விதித்திருப்பது 4 சதவிகிதம்.

இயந்திரத்தால் செய்யப்பட்ட தீக் குச்சிகளுக்கு ஆந்திராவில் இருந்தும் கர்நாடகத்திலிருந்தும் விபரம் கிடைக்கவில்லை. கேரளத்தில் 3 சதவிகிதம், மராட்டியத்தில் 2 சதவிகிதம், நாம் 4 சதவிகிதம்.

பருப்பு வகைகளுக்கு—ஆந்திராவில் 3 சதவிகிதம், மற்ற மாநிலங்க ளில் விபரம் கிடைக்கவில்லை ; நாம் 4 சதவிகிதம் போட்டிருக்கிறோம்.

இப்படி அண்டை மாநிலங்களோடு அதிக வித்தியாசப்படுகின்ற அளவில் இல்லாமல் நாம் இந்த வரிகளை இன்றைக்கு அரை சதவிகிதம், அதிலும் ஏற்கெனவே சொன்னதைப்போல் சென்ற ஆண்டோடு ஒப்பிட்டுப் பார்த்தால், சென்ற ஆண்டு 7 சதவிகிதமாக இருந்ததை 3 சதவிகிதம் குறைத்து 4 சதவிகிதமாக ஆக்கியிருக்கிறோம்.

அனந்தநாயகி அம்மையார் அவர்கள் இந்த கால்நடைகள் என்ன பண்ணின, கால்நடை வரி ஏன், அதை குறைக்கக் கூடாதா என்று கேட்டார்கள். அவர்களுடைய கோரிக்கையை தமிழ் நாட்டு விவசாய பெருங்குடி மக்களின் கோரிக்கையாக ஏற்று, பிண்ணாக்குக்கு போட்ட இந்த அரை சதவிகிதம் உயர்த்திய வரியை ரத்து செய்கிறேன் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்).

திருமதி த. ந. அனந்தநாயகி : பிண்ணாக்கு வரியை ரத்து செய்த தற்காக கால்நடைகள் சார்பாக, மாடுகளின் சார்பாக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். (சிரிப்பு). ஆனால் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். மத்திய அரசு ஏதோ வரி போட தூண்டுவதைப் போலவும் அதற்காகவே இன்றைய தினம் 6 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருப்பதைப் போலவும் சொன்னார்கள். ஆனால் பக்கத்தில் இருக்கிற



கேரளாவில் 26 கோடி துண்டு விழும் பட்ஜெட்டைப் போட்டும், இந்த வருஷம் வரியை போடவில்லை. அதைப்போல ஆந்திரப் பிரதேசமும், அங்கே வரி போடவில்லை. இந்த 6 கோடி ரூபாயைக்கூட mere buoyancy of taxes என்ற முறையில் அடுத்த ஆண்டு சமாளிக்க முடியும் என்று இருக்கும்போது நீங்கள் ஏன் புது வரி போடவேண்டும்? அதற்கு பதில் வரவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இங்கே மதுவிலக்கை நடை முறை செய்கிறோம். வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறோம். அதற்கான வரி விலக்குகளைத் தருகிறோம். குதிரைப் பந்தயத்தை ஒழித்து அதிலே 2 கோடியை இழக்கிறோம். இவைகளை எல்லாம் எண்ணிப் பார்த்து இந்தக் கேள்வியைக் கேட்டால் அதற்கான பதில் தானே அவர்களுக்குக் கிடைக்கும்.

விலைவாசி உயர்வை இன்றைக்கு மாநில அரசால் கட்டுப்படுத்த முடிய வில்லை என்று மாநில அரசின் மீது ஆளும் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் நண்பர்களால் குற்றஞ்சாட்டப்பட்டது. திரு. கே. டி. கே. தங்கமணி அவர் கள். விஜயவாடாவில் நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்களை இங்கே படித் துக்காட்டினார்கள். சாதியை ஒழிக்க, தீண்டாமையை அகற்ற நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களையெல்லாம படித்தார். அவர்களது கட்சியின் சார்பில் விஜயவாடாவில் நடைபெற்ற மகாநாடு சாதாரணமானது அல்ல. பத்தாண்டுக் காலத்திற்கு ஒரு முறை நடைபெறும் மாநாடு ஆகும் என்று கருதுகிறேன்—விஜயவாடாவில் கூடிய மிக முக்கியமான அகில இந்திய கம்யூனிஸ்டுகள் மகாநாடு அது. அந்த மகாநாட்டில் ஜனவரி 27 முதல் பிப்ரவரி 2-ஆம் தேதி வரை 1975-இல் நடைபெற்ற மகாநாட்டில் போடப் பட்ட முக்கியமான தீர்மானத்தை இங்கே நான் படித்துக் காட்டுவதே முறை என்று கருதுகிறேன். திரு கே. டி. கே. படித்துக்காட்ட மறந்திருக் கலாம். ஆகவே, நான் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

"The responsibility for this state of affairs must be placed squarely on the shoulders of the Ruling Congress Government which has not only failed to protect the Indian economy from the ravages of the world-wide inflationary crisis of capitalism and the efforts of the big imperialist powers to transfer its burdens on to the countries of the third world, but has itself contributed to the inflationary spiral by embarking upon a reckless course of deficit financing and mounting taxation of consumer articles and intermediates and essential raw materials."

என்ற இந்த விஜயவாடா தீர்மானம் மிக முக்கியமான தீர்மானமாகும்.

இன்றைக்கு இந்தியாவில் ஏற்பட்டிருக்கிற விலைவாசி உயர்வுக்கும் பொரு ளாதார ஏற்றத்தாழ்வு, பொருளாதார வீக்கம் இதற்கெல்லாம் யார் காரணம் என்பதை ஆணித்தரமாக மத்திய சர்க்காரை நோக்கி விரலை

சுட்டிக் காட்டுகின்ற தீர்மானம்தான் இந்த விஜயவாடா தீர்மானம். இந்தத் தீர்மானத்தை நான் கம்யூனிஸ்டு கட்சியோடு உறவு கொள்ளாவிட்டாலும், திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் கம்யூனிஸ்டு கட்சி இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியதற்காக என்னுடைய பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த விஜயவாடா தீர்மானத்தில் இன்னொரு இடத்தில் குறிப்பிடுகிறார்கள்.

> "Black money which has become a parallel economy is causing havoc to the national economy, apart from boosting the price-spiral. As this has created a most dangerous situation where even the previous limited planning has become impossible........."

இது கறுப்புப் பணத்தைப் பற்றியதாகும். கறுப்புப் பணத்தை அடியோடு ஒழிப்பதற்கு மத்திய அரசு எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகளோடு மாநில அரசு முயற்சிகளை எடுத்துக்கொள்ள மாநில அரசுகளுக்கும் அதிகாரம் தர வேண்டும் என்கிற தீர்மானத்தை இங்கே நாம் ஏகமனதாக நிறைவேற்றினோம். அப்படி ஒரு தீர்மானம் போடுவீர்களா என்று திரு கே. டி. கே.கேட்ட போது, "நாங்கள் தயாராக இருக்கிறோம். நீங்கள் ஆதரிக்கிறீர்களா" என்று கேட்டு, "ஆதரிக்கிறோம்" என்று அவர் சொல்லி, இந்த மாமன்றத்தில் கறுப்புப் பணத்தை ஒழிப்பதற்கு மாநில அரசுகளும் நடவடிக்கை எடுக்கிற அதிகாரம் மாநில அரசுகளுக்கும் வழங்கப் படவேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து, வழிமொழிந்து ஏகமனதாக நிறைவேற்றி அனுப்பினோம். அதற்கு மத்தியிலிருந்து இன்று வரை எந்தவிதமான பதிலும் கிடையாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதிலிருந்து மத்திய அரசுக்கு அதிகாரம் கூடாதென்பது அல்ல—மத்திய அரசுக்கும் இருக்கட்டும்—மாநில அரசுகளுக்கும் இருக்கட்டும் என்றுதான் நாம் கூறினோம். அதற்கு எந்தவிதமான பதிலும் கிடையாது.

அடுத்து சில குறைபாடுகளும், குற்றச்சாட்டுகளும் இங்கே கூறப்பட்டிருக்கின்றன. அவற்றிற்குப் பதில் அளித்தாக வேண்டியது என் மாபெரும் பொறுப்பாகும். நண்பர் திரு ஏ. ஆர். மாரிமுத்து பேசுகையில், பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தின் வாய்க்கால்களில் தற்போது தண்ணீர் ஓடுவது இல்லை. இந்த ஆண்டு 89 ஆயிரம் ஏக்கருக்குக் கூடுதலாக நீர்ப்பாசனம் அளிக்க திட்டமிடப்பட்டிக்கிறது என்று வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் வீணாக முதலீடு செய்ய வேண்டாம் என்ற கருத்தை இங்கே தெரிவித்தார்கள்.

இந்தக் கருத்து உள்ளபடியே ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்து அல்ல. பயங்கரமான கருத்து என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஏனென்றால், பரம்பிக்குளம்—ஆளியாற்றில் தண்ணீரே இல்லாததைப்



போலவும், ஆனால் நாம் 89,000 ஏக்கர்களுக்கு விரிவுபடுத்துவது ஆபத்தான காரியம் என்பதைப் போலவும் குறிப்பிட்டார். உண்மை என்னவென்றால், ஆண்டு ஒன்றுக்கு 2.5 இலட்சம் ஏக்கருக்கு நீர் கொடுக்கத் திட்டமிடப் பட்டிருக்கிறது. பரம்பிக்குளம்—ஆளியாறு ஒப்பந்தமாகி, இடையில் சில கசப்புணர்ச்சிகள் ஏற்பட்டு அது முடிவுபெறாமல் இருந்த சூழ்நிலையில்—நம்முடைய ஆட்சி வந்த பிறகு திரு ஈ. எம். எஸ். அங்கே முதலமைச்சராக இருந்தபோதும், அதற்குப் பிறகு திரு அச்சுதமேனன் அங்கே முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகும், நானும் நம்முடைய அமைச்சர் பெருமக்களும் அடிக்கடி அவர்களைச் சந்தித்து, பேச்சு வார்த்தை நடத்தியதின் விளைவாக, பரம்பிக்குளம்—ஆளியாறு ஒப்பந்தத்தில் ஒரு நல்ல முடிவு ஏற்பட்டது.

அந்த ஒப்பந்தத்தின் மூலம் நமக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர், 30 டி. எம். சி., அதாவது 30,000 மில்லியன் கன அடி தண்ணீர் நமக்குக் கிடைக்க வேண்டும். இதில் தற்போது நமக்குக் கிடைப்பது 16.5 டி. எம். சி., இதற்குப் பிறகு மேலும் 9 டி. எம். சி., வருவதற்கான வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதிலே இப்போதே ஏழு டி. எம். சி. கிடைக்கும். இன்னும் போகப் போக மேலும் இரண்டு டி. எம். சி. நமக்குக் கிடைக்கவிருக்கிறது. ஆகவே, அந்த ஏழு டி. எம். சி. நீரைக் கொண்டுதான் பொள்ளாச்சி, பல்லடம், உடுமலைப்பேட்டை, தாராபுரம் ஆகிய தாலுக்காக்களில் உள்ள 89,000 ஏக்கர்களுக்கு நீர்ப்பாசனம் கொடுக்க நாம் திட்டமிட்டிருக்கிறோம். இதில் ஆண்டு ஒன்றுக்கு 45,000 ஏக்கரா வீதம் மாறி மாறி நீர் வழங்கப்படும். இப்படி மாறி மாறி நீர் வழங்கினால் நல்லது என்றுகூடச் சொன்னார்கள். இல்லாவிட்டால் அந்த நிலங்கள் கூட பாழாகிவிடும் என்ற கருத்தும் இருக்கிறது. அப்படி ஒரு கருத்து இல்லாவிட்டாலும், நமக்குக் கிடைக்கின்ற தண்ணீரை வைத்துக்கொண்டு இப்படி மாறி, மாறி பாசன வசதிக்காக தண்ணீரை விடுவது சாலச்சிறந்தது என்ற முறையில் தான் செய்திருக்கிறோம். ஆகவே, சரியான திட்டமில்லை என்ற வாதத்தை ஒத்துக் கொள்வதற்கில்லை.

இன்னொன்றைக் கூட நண்பர் மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள். நான் நீண்ட நேரம் பேசுவதற்காக வருத்தப்படக்கூடாது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் சில நல்ல பல கருத்துக்களையும் அரிய விளக்கங்களையும் இந்த விவாதத்தின்போது எடுத்து வைத்திருப்பதன் காரணத்தினால் நான் பேசவேண்டியதாக இருக்கிறது—திரு. மாரிமுத்து அவர்கள் இன்னொன்றைக் குறிப்பிட்டார்கள். ஒரு கோடியே நாற்பது லட்சம் ஏக்கரா நிலம் சாகுபடி செய்யப்படாமல் இருப்பதாகச் சொன்னார்கள். அவைகளைச் சாகுபடி செய்ய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் சொன்னார்கள்.

<u>திரு. ஏ. ஆர். மாரிமுத்து</u> : அது தவறாக ரிப்போர்ட் ஆகியிருக்கிறது. மொத்தம் சாகுபடி செய்யக்கூடிய நிலங்கள் ஒரு கோடியே நாற்பது லட்சம் என்றுதான் நான் சொன்னேன்.

[1975 மார்ச் 10

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தவருக இருந்தால்—ஒரு வேளை நிருபர்களால் தவருக எழுதப்பட்டிருக்கலாம். 1974-ஆம் ஆண்டு நம்முடைய விவசாயத்துறை தந்துள்ள புள்ளி விவரப்படி—நமது மாநிலத்தில் பதினேரு லட்சத்து இருபத்தையாயிரம் ஏக்கரா விவசாயம் செய்யப் படாமல் இருக்கிறது என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. இந்த பதினேரு லட்சத்து இருபத்தையாயிரம் ஏக்கராவை படிப்படியாக விவசாயம் செய்ய வேண்டிய பொறுப்பை நாம் ஏற்றுக்கொண்டாகவேண்டும்.

இதிலே அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களை எல்லாம் அரசுப் பண்ணைகளின் மூலமாக எடுத்துக்கொண்டு நாம் சாகுபடி செய்வது என்ற முடிவை மேற்கொண்டு அதை வரவு செலவுத் திட்ட அறிக்கையில் நான் குறிப்பிட்டிருக்கிறேன். இதில் முதல் கட்டமாக செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள கும்மிடிப்பூண்டி தாலுக்காவில் தெருவாய், கரடிப்புத்தூர் என்ற இரண்டு கிராமங்களில் ஆயிரத்து ஐநூற்றிருபத்திரண்டு ஏக்கர் நிலத்தைச் சாகுபடிக்குக் கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

மாவட்டங்களில் சாகுபடிக்குத் தகுந்த—ஆனால் சாகுபடி செய்யப்படாமல் இருக்கிற இத்தகைய நிலங்களை எல்லாம் எடுத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்த அரசுப் பண்ணைக் கழகங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் நாடு நில உபயோகச் சட்டம் என்று 1961-இல் ஒரு சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். அந்தச் சட்டத்தின் மூலம் நிலம் பெற்றவர்கள் பல பேர் நிலத்தைப் பயன்படுத்தாமல் இருக்கிறார்கள். அப்படி இருந்தால் அப்படிப் பயன்படுத்தாமல் இருப்பவர்களிடம் இருந்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலையிட்டு அந்த நிலங்களையும் எடுத்துக் கொள்வதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இன்றுள்ள உணவு நிலைமையை உத்தேசித்தும், மேலும் உற்பத்தியைப் பெருக்கவும்—தமிழ் நாட்டின் எதிர்கால வளம் சிறக்கவும், இந்த 11 லட்சம் ஏக்கராவையும் நாம் சாகுபடிக்குக் கொண்டு வரும் திட்டத்தின் முதல் கட்டமாக அரசுப் பண்ணை மூலமாக இவைகளைச் செய்ய வேண்டுமென்ற முடிவுக்கு வந்திருக்கிறோம்.

(பிற்பகல் 2-00)

திரு. எஸ். வடிவேல் : நாம் அந்த நிலத்தை எடுப்போம் என்று சொல்கிற நேரத்தில், ஒரு சிலர் தங்களுடைய பட்டா நிலமென்று சொல்லி, 5 வேலி, 10 வேலி என்று பட்டா போட்டு வாங்கிக்கொண்டு, வருஷா வருஷம் சாகுபடி பண்ணாமலிருக்கிற நிலையிருக்கிறது. அப்படிப்பட்ட நிலங்களைக் கூட சர்க்கார் உடனடியாகச் சாகுபடி [illegible]





வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சரவர்களுக்கே தெரியும், காரியமங்கலம் பிள்ளை என்பவர் வருஷா வருஷம் 15 வேலி நிலத்தை சாகுபடி பண்ணாமல் போட்டுவிடுகிறார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தனிப்பட்டவர்கள் பயிர் செய்யாமல் இருந்தால் அதை எடுத்துக்கொள்ள சட்டம் இடம் கொடுக்கிறதா என்பதை எல்லாம் பார்க்கவேண்டும். இல்லையென்றால், புதிதாகச் சட்டம் போடுவதைப் பற்றி யோசிக்க வேண்டும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : அரசு புதிதாக மசோதா கொண்டுவந்து அதை பாஸ் செய்யலாம்.

திரு. எஸ். வடிவேல் : நெருக்கடியை உத்தேசித்து, எமர்ஜன்ஸி ஆர்டர் போட வேண்டியதுதானே ? எல்லாவற்றையும் சட்டம் போட்டு எடுக்கவேண்டியதுதானே.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த ஆண்டு வறட்சியின் காரணமாகக்கூட அப்படித் தரிசாகப் போடப்பட்டிருக்கலாம். அதை வைத்துக் கொண்டு, இந்த ஆண்டு சட்டம் போட்டு, அவைகளையெல்லாம் எடுத்துக்கொள்வது முறையாக இருக்க முடியாது. வேண்டுமென்றே வைத்துக்கொண்டிருந்தால், அவைகளைப் பற்றி என்ன சட்டம் போடலாம் என்பதைப் பற்றி அரசு ஆலோசிக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அ.தி.மு.க. சார்பில் பேசிய நண்பர் துரை கோவிந்தராசன் அவர்கள் கர்நாடக மாநிலத்திற்கு ஏற்புடைய ஒரு பயங்கரமான கருத்தைச் சொன்னார். தமிழகத்திலே நீர்வளங்களைப் பொறுத்தவரையில் காவிரியாறு, மற்ற ஆறுகள் மூலமாக 50 சதவிகித நீர் வீணாகக் கடலிலே போய் சேருகிறது என்று குறிப்பிட்டார். இதைத்தான் கர்நாடக அரசும் தன்னுடைய வாதமாகச் சொல்கிறது. இதை சொல்லித்தான் நாம் பயன்படுத்துகிற தண்ணீரை குறைத்துக் கொள்ளவேண்டுமென்று அவர்கள் கூறி வருகிறார்கள். இது முற்றிலும் தவறான வாதமாகும்.

பயன்படுத்த முடியாத, ஆயக்கட்டுகள் இல்லாத பகுதி, காவிரிப்பூம்பட்டினத்தில் போய் கடலோடு காவிரி கலக்கிற அந்த 10 மைல், 20 மைல்களுக்குள் மழை பெய்தால் அந்த நீரைப் பயன்படுத்திக்கொள்ள யாரும் இருக்க முடியாது. அப்படி ஏதாவது தண்ணீர் வீணாகலாமே தவிர 50 சதவிகித தண்ணீர் வழக்கமாக வீணாகிறது என்று சொல்வது தவறான வாதமாகும். அவர் அதைத் திருத்திக் கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட பிரச்சாரத்தை தயவு செய்து வெளியேகூடச் செய்ய வேண்டாமென்று நான் நண்பர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன். நாம் எந்தத் தண்ணீரையும் வீணாக்கவில்லை ; ஒரு சொட்டுத் தண்ணீரைக்கூட வீணாக்காமல் ஆயக்கட்டுகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது என்பதை நான் இங்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பர் வடிவேல் அவர்கள் உலகத்திலேயே எங்குமில்லாத அளவுக்குத் தமிழ்நாட்டில் மின்சார இழப்பு 20 சதவிகிதம் ஏன் ஏற்படுகிறது என்பதைக் கண்டு பிடித்தாக வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இந்த 20 சதவிகிதத்தை இன்னும் குறைக்க வேண்டுமென்பதிலே நான் ஒத்தக் கருத்து உடையவன்; இன்னும் குறைக்கவேண்டும். ஆனால், உலகத்திலேயே எங்கும் இல்லாத அளவிற்கு என்று சொல்லிவிடமுடியாது. உலகம் வரையில் போய்ப் பார்க்க நேரமில்லை என்றாலும், இந்திய அளவில் பார்த்தால், 1971–72 புள்ளி விவரப்படி, ஆந்திரப் பிரதேசத்தில் மின்சாரக் கம்பிகளுடைய நீளம் 1,06,590 கிலோ மீட்டர். அங்கே, இந்த டிரான்ஸ்சிட் லாஸ், அதாவது மின்னியல் நஷ்டம் 26.84 சதவிகிதம் ஆகும். அரியானாவில், 66,695 கிலோ மீட்டர் மொத்த மின்சாரக் கம்பி நீளம், எல்லா இடத்திற்கும் போடப்பட்டிருக்கிற மின்சார கம்பியின் நீளம். அங்கே மின்னியல் நஷ்டம் 28.52 சதவிகிதம். பஞ்சாபில் 53,536 கிலோ மீட்டர் மின்சாரக் கம்பிகளின் நீளம். அங்கே மின்னியல் நஷ்டம் 24.19 சதவிகிதம். இராஜஸ்தானத்தில் 47,063 கிலோ மீட்டர் மின்சார லைன் நீளம். அங்கே மின்னியல் நஷ்டம் 23.62 சதவிகிதம். உத்திரப் பிரதேசத்தில் 1,45,587 கிலோ மீட்டர் மின்சார லைன் நீளம். ங்கே மின்னியல் நஷ்டம் 26.14 சதவிகிதம். கேரளத்தில், 34,845 கிலோ மீட்டர்—குறைவான கிலோ மீட்டர் நீளம். அங்கே 17·29 சதவிகிதம் நஷ்டம். கர்நாடகத்தில் 1,47,266 கிலோ மீட்டர் நீளம். அங்கே நஷ்டம் 15.86 சதவிகிதம். தமிழ்நாட்டில் 2,21,040 கிலோ மீட்டர் கம்பியின் நீளம். இங்கே பல பகுதிகளுக்கும் மின்சாரக் கம்பிகள் இழுப்பதற்கு, தொலை தூரத்திலே கம்பிகளை இழுக்க வேண்டியிருக்கிறது காரணத்தால் 2,21,040 கிலோ மீட்டர் லைன் நீளம். அதிலே மின்னியல் நட்டம் 18.80 சதவிகிதம். இப்பொழுது கொஞ்சம் அதிகமாகி 20 சதவிகிதமாகி இருப்பதாகச் சொன்னார்கள். அது குறைய வேண்டுமென்பதிலே எனக்கு எந்த விதமான கருத்து வேறுபாடுமில்லை. ஆனால், மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிற நேரத்திலே அதிகமாக இல்லையென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: 1971–ம் வருஷத்திலேயிருந்து பார்த்தால் வருஷா வருஷம் கூடிக் கொண்டே போகிறதே, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது. ஒவ்வொரு மாநிலத்தினுடைய நிலைமைகளையெல்லாம் பரிசீலனை செய்யவேண்டியிருக்கிறது டிரான்ஸ்மிஷன் லாசைப் பொறுத்தவரையிலும். அண்டை மாநிலங்கள் இரண்டிலே டிரான்ஸ்மிஷன் லாஸ் கம்மியாக இருக்கிறது. இங்கே, இரண்டு மூன்று வருஷமாக, கூடிக்கொண்டே போகிறதே, என்ன காரணம்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்த 3 ஆண்டுக் காலத்தில், மின்சாரக் கம்பிகள் போடுகின்ற நீளமும் அதிகமாகியிருக்கிறது. அந்தக் காரணத்தாலேதான் கூடுதலாக இருக்கிறது. நான், குறைய வேண்டுமென்ற கருத்துக்கு மாறுபட்டவன் அல்ல என்ற கருத்தை ஏற்கனவே இங்கே குறிப்பிட்டேன்.



நம்முடைய கோரிக்கைகள் சரியாக வலியுறுத்தப்படவில்லை, அவை "இன்னும் அதிகமாக வலியுறுத்தப்பட வேண்டுமென்பதை பெரியவர் மணலி அவர்களும், ஹாண்டே அவர்களும், தோழமைக் கட்சியைச் சேர்ந்த முஸ்லீம் லீக், பார்வர்ட் பிளாக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களும், அனைவருமே கூறி, மேலும் மத்திய அரசிடமும், திட்டக் குழுவிடமும் வலியுறுத்த வேண்டுமென்று கூறினார்கள். நாம் மத்திய திட்டக் குழுவிடமும், மத்திய அரசிடமும் வலியுறுத்தி வருகிறோம்.

1975–76-ம் ஆண்டு திட்டம் பற்றிய பேச்சு வார்த்தைகளைத் திட்டக் குழுவோடு நடத்தியபோது, நாம் வறட்சி நிவாரணத்துக்கு, திட்டத்திற்கு அப்பாற்பட்ட தொகையாக ரூ. 20 கோடி வேண்டுமென்று வற்புறுத்தி இருக்கிறோம். அது மாத்திரமல்ல, 1975–76-ல் நமக்கேற்படுகின்ற பற்றுக்குறையைச் சரிக்கட்ட நில வரி ரத்து, கடன்கள் தள்ளிவைப்பு போன்றவைகளால் நமக்கேற்பட்ட வருமான குறைவை கருத்தில் கொண்டு ரூ. 15 கோடி மத்திய அரசு அதிகமாக நிதியுதவி தர வேண்டுமென்றும் வலியுறுத்தியிருக்கின்றோம்.

மதுவிலக்கை மறுபடியும் அமுல்படுத்தியதால் 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 4 ஆண்டுகளில் நமக்கு ஏற்படும் இழப்புத் தொகை ரூ. 234 கோடி. இதில் 50 சதவிகிதமான ரூ. 117 கோடியை ஆண்டொன்றுக்கு ரூ. 29 கோடி வீதம் தமிழக அரசுக்கு வழங்கவேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறோம்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குப் பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களோடு ஒப்பிட்டுத் திட்டத்துக்கு அப்பாற்பட்ட செலவாக ரூ. 10 கோடி ஒதுக்கவேண்டுமென்றும் கேட்டிருக்கிறோம். இவைகள் மாத்திரமல்லாமல், தொடர்ந்து வேறு பல திட்டங்களையும் கேட்டு வருகின்றோம்.

சுதந்திராக் கட்சி சார்பிலே பேசிய வெங்கடசாமி அவர்கள் நெய்வேலி இரண்டாவது நிலக்கரிச் சுரங்க வேலை நடக்கவில்லையென்றெல்லாம் இங்கே குறைபட்டுக்கொண்டார்கள்.

470 மெகாவாட் மின்விசை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்ட கல்பாக்கம் அனு மின் திட்டம், தன் முதல் மின் உற்பத்தியாக 238 மெகாவாட்டை, 1977–78-லேதான் தொடங்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்திக்கு வழி செய்கிற நெய்வேலி இரண்டாவது நிலக்கரி சுரங்க வேலைக்கு இன்னும் மத்திய திட்டக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்படவில்லை. இது பற்றி பலமுறை திட்டக் குழுவுக்கும், மத்திய அரசுக்கும் நாம் எடுத்துச் சொல்லிவருகிறோம். இந்த மாமன்றத்திலும் நெய்வேலி இரண்டாவது சுரங்க வேலைப்பற்றி நாம் பேசி வருகிறோம். எல்லா கட்சிக்காரர்களும் அதை வலியுறுத்துகிறோம்.

இரண்டு தண்டவாளங்களைப் போலவே இரண்டு தண்டவாளங்களாகத் தான் இரண்டு கட்சிகளும் இருக்கின்றனவேயல்லாமல் இருப்புப் பாதை போடப்படவில்லை. கன்னியாகுமரியில் நடைபெற்ற அந்த விழாவோடு முடிந்து விட்டது.

கன்னியாகுமரி ரயில் பாதை தேவை என்பதற்காகக் கட்சி சார்பற்ற முறையில் அனைவரும் வாதாடியிருக்கிறோம். அது போடப்படும் என்ற நம்பிக்கை தெரிவித்தார்கள். ஆனால் தென் பிராந்தியத்திற்கு ஒதுக்கிய 5 1/2கோடி ரூபாய் பீகாருக்கு எடுத்துச் செல்லப்பட்டதற்கு என்ன காரணம்? என்ன அவசியம் பீகாருக்கு ஏற்பட்டது? வேறு அவசியங்கள் பல அங்கே இருக்கின்றன. அதற்காக நாம்தான் இளித்தவாயர்கள் கிடைத்தோமா என்பதை எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசிடம் நம்முடைய முறையீடுகள் எவ்வளவு தேங்கிக் கிடக்கின்றன? எந்த அளவுக்கு நாம் வலியுறுத்தினாலும் அவை நமக்குக் கிடைக்காமல் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

நிலச் சீர்திருத்தம் பற்றி சோஷலிஸ்டு கட்சி, காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்டு கட்சி எல்லோருமே பேசுகிறார்கள் நிலச் சீர்திருத்தம்தேவை என்பதை. அதற்காக இந்த அவையில் எட்டுக்கு மேற்பட்ட சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்தோம்.

குத்தகைதாரர்களுக்கு உச்ச வரம்புச் சட்டத்தை எட்டு வருடக் கால வரையறையிலிருந்து பத்து வருடமாக நீடிக்க வேண்டுமென்றும் ஒரு சீர்திருத்தம் 1970-ல் கொண்டுவரப்பட்டது.

நிலச் சொந்தக்காரர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த நில உச்சவரம்பை முப்பது ஸ்டாண்டர்டு எக்கரிலிருந்து பதினைந்து ஸ்டாண்டர்டு எக்கராகக் குறைத்து ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. இவைகளை சாதனைகளுக்காகச் சொல்லவில்லை. இதிலே வருகின்ற விளைவுகளுக்காகச் சொல்லுகிறேன்.

சர்க்கரை ஆலைகள் முன்பு உச்ச வரம்பைக் காட்டிலும் அதிகமாக நிலத்தை கரும்பு வேளாண்மைக்கு வைத்துக் கொள்ளலாம் என்ற விதிவிலக்கை நீக்குவது ;

மேய்ச்சல் நிலங்களுக்கு இருந்த விதிவிலக்கை ரத்து செய்வதற்கு 1971-ம் ஆண்டு ஒரு சீர்திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

குத்தகைதாரர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த உச்ச வரம்பிற்கான தற்காலிக ஷரத்துக்களை நிரந்தரமாக ஆக்கப்பட்டது. இது 1972-ம் ஆண்டு சட்டப்படி செய்யப்பட்டது.



அதற்குப் பிறகு ஒரு குடும்பத்திற்கு நாற்பது ஸ்டாண்டர்டு எக்கர் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்ததை முப்பது ஸ்டாண்டர்டு எக்கர் என்று குறைத்து, 1972-ல் ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது.

நிலச் சொந்தக்காரர்கள் தங்கள் நிலத்தை மற்றவருக்கு எழுதி வைப்பது சட்டத்திற்கு முரண்பட்டதாக இருக்குமானால், அவ்வாறு மாற்றப்பட்ட நிலம் அவருடைய உச்ச வரம்பு நிலத்தோடு சேர்த்துக் கணக்கிடப்படும் என்று 1972ல் சட்டம் கொண்டு வரப்பட்டது.

இவ்வளவு சட்டங்களையும் எதிர்த்து இன்றைக்குப் பலர் நீதிமன்றங் களுக்குச் செல்ல முடிகிறது. இதை 9-வது ஷெட்யூலில் சேர்த்து விடுங்கள் என்று இரண்டு மூன்று ஆண்டு காலமாக நாம் கேட்டு வருகிறோம். அப்படி இதைச் சேர்த்து விட்டால் யார் நீதிமன்றங்களுக்குச் சென்றாலும், இந்தச் சட்டங்களுக்கு எந்தப் பாதகமான தீர்ப்பளிக்கப்பட்டாலும், இந்தச் சட்டங்களை அது தொட முடியாது; ஆகவே, இந்தச் சட்டங்களை 9-வது பின் இணைப்பில் சேர்த்துவிட வேண்டுமென்று அரசியல் சட்டம் 31-பி பிரிவு கூறுவதற்கேற்ப, செய்யுங்கள் என்று நாம் 11—3—74-ல், 4—11—74-ல், 16—11—74-ல், அண்மையில் 23—11—74-ல் கேட்டுக் கொண்டோம். இப்படிக் கேட்டுக் கேட்டு இன்னும் இந்தச் சமதர்மத் திட்டம்—இந்தச் சட்டம் பாதுகாக்கப்பட நாம் விடுத்த கோரிக்கை கூட—இன்றளவும் மத்திய அரசால் அரசியல் சட்டத்திலே இணைப்பதற்கேற்ற வகையில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : குத்தகை விவசாயிகள் சம்பந்தமாக இரண்டு உத்தரவுகள் போட்டோம். ரெவின்யூ கோர்ட்டுகள் ரத்தும், ரெண்ட் கோர்ட்டுகள் ரத்தும் செய்யப்பட்டது. ரெவின்யூ கோர்ட் ரத்து செய்தது குத்தகை விவசாயிகளுக்கு ஓரளவு நன்மைதான். ரெண்ட் கோர்ட் ரத்து செய்த பிறகு சரியான உற்பத்தி இல்லையென்ற முறையில் குத்தகையைக் குறைக்க வேண்டுமென்று சொன்னால் என்ன செய்வது, யாரிடத்தில் போவது? குத்தகை நெல்லைத் திருப்பிக் கேட்பார்களேயானால் யாரும் ஒத்துக் கொள்ள முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். அதற்காக அரசு தனி உத்தரவோ, டைரக் டிவ்ஸோ போட்டிருக்கிறார்களா? வறட்சி ஏற்பட்டவுடனே

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது தனியான பிரச்சினை. அது பற்றி அரசு கவனிக்கும். (திரு. எஸ். வடிவேல்—குறுக்கீடு) அது நான் பேசிக்கொண்டிருப்பது தொடர்பானது அல்ல. அதிலே இருக்கின்ற சிக்கலை தனியாக அரசாங்கம் கவனிக்கும்.

மத்திய அரசிடத்தில் முறையீடுகள் எப்படித் தேங்கிக் கிடக்கின்றன என்பதைக் காட்டத்தான் இதைக் குறிப்பிடுகிறேன். சம தர்ம அடிப்படையில் நிறைவேற்றப்பட வேண்டிய காரியங்கள் முடங்கிக் கிடக்கின்றன என்பதற்காகத்தான் சொல்லுகிறேன்.

1973–74-ம் ஆண்டு அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்களின் முதலீட்டில் தொழிலாளர்கள் பங்கு கொள்ளும் திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டது. அதிலே வந்த சங்கடம் என்னவென்றால் லாபத்தைப் பகிர்கின்ற நேரத்தில் வருமான வரியைச் செலுத்திவிட்டுத்தான் மீதியை பகிர்ந்திடவேண்டுமென்பது. இன்றைக்கு சூழ்நிலை—வருமான வரியைச் செலுத்திவிட்டால் பிறகு லாபத்தில் எவ்வளவு கிடைக்கும்? ஆகவே தொழிலாளர்கள் நன்மைக்காக, வருமான வரியைச் செலுத்துவதற்கு முன்பு தொழிலாளர்கள் பங்கினைக் கொடுத்துவிட்டு, மொத்த லாபத்தில் அவர்களுக்குப் பங்கீடு கொடுத்துவிட்டு, பிறகு வருமான வரி என்ற வகையில் கம்பெனி ஆக்டை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டோம்.

பதில் வந்தது. 1974 ஜூலையில் வந்த அந்தப் பதிலில் "மத்திய அரசு இந்தத் திட்டத்தை மிக ஆர்வத்தோடு கவனித்து வருகிறது ; விரைவில் முடிவு எடுக்கப்படும்" என்று பதில் வந்ததே தவிர வேறு இல்லை. ஆர்வம் இருக்கிறது ; கவனம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இது வரையிலே இந்தச் சமதர்மத் திட்டத்திற்கு — நேரிலே பல முறை எடுத்துச் சொல்லியும் — தொழிலாளர்களுக்காக இந்தச் சட்டம் ; நல்ல காரியத்திற்கான இந்தச் சட்டத்தை எழுந்து நடமாடச் செய்யும் திருத்தத்தை அவர்கள் செய்ய இன்றைக்கும் தயங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் நான் இதை இன்றைக்குக் குறிப்பிட விரும்பினேன்.

மால்கோ அலுமினியத் தொழிற்சாலையை தேசிய மயமாக்க வேண்டுமென்று 1973–74 நிதி ஆண்டிலே வரவு செலவு திட்டத்திலே அறிவித்தோம். பிறகு, அந்த நகலை மத்திய அரசுக்கு 27—2—73-ல் அனுப்பப்பட்டது. அதைத் தொடர்ந்து 28—2—73-ல் உள்துறைக்கும் கடிதம் எழுதினோம். பிறகு 2—3—73-ல் கடிதத்தைப் பெற்றுக் கொண்டதாக பதில் வந்தது. அதற்கு அடுத்து மறைந்த திரு. மோகன் குமாரமங்கலம் அவர்களிடத்திலேயும் இதுபற்றி பேச்சு வார்த்தை நடத்தினோம். பிரதமர் அவர்களுக்கு மறுபடி நினைவூட்டி 30—7—73-ல் கடிதம் எழுதினோம். இது வரையில் மால்கோ தொழிற்சாலையை எடுத்துக் கொள்வது சம்பந்தமாக அனுப்பப்பட்டச் சட்ட நகலுக்கு நாம் கேட்ட ஒப்புதல் கிடைக்கவில்லை. இதற்குப் பிறகு எந்தப் பதிலும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் நாடு இந்து மத அறக் கட்டளைகள் திருத்தச் சட்டம்—அதை அர்ச்சகர் சட்டம் என்று சொன்னால் அனைவருக்கும் புரியும் — ஒரு குறிப்பிட்ட ஜாதியார்தான் ஆண்டவனை பூஜிக்கத் தகுந்தவர்கள், அர்ச்சிக்கத் தகுந்தவர்கள் என்று இல்லாமல், அர்ச்சிக்கத் தகுதி உடைய தேர்வு பெறுகிற அனைவரும் எந்த ஜாதிக்காரர்களாக இருந்தாலும் அவர்கள் ஆண்டவனை அர்ச்சிக்கலாம் என்ற கருத்து அமைந்த அந்தச் சட்டம்—அந்த சட்டத்தை எதிர்த்து உச்ச நீதி மன்றத்திற்குப் சில பேர் சென்றார்கள். அதிலே இந்தச் சட்டம் இன்றைக்கு முடங்கிக் கிடக்கிறது. அந்த முடக்கத்தை நீக்கி இந்தச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கேற்ற வகையில் அரிசனங்கள் இடம் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிற மத்திய அரசுக்கு நாம் பல நேரங்களில் எழுதிக் கேட்டு, நம்முடைய



இந்தச் சட்டம் என்ன என்பதையும் அவர்களுக்கு விளக்கமாக எடுத்துச் சொல்லியும்கூட சமுதாயத்திலே அரிசன மக்களுக்கு, தாழ்ந்த மக்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, உயர்ந்த ஜாதி மக்களால் கொடுமைப்படுத்தப்படுகிற மக்களுக்கு நீதி வழங்க வேண்டுமென்பதற்கு, உள்ள இந்த சமதர்ம கொள்கைக்கும் இன்னும் அரசியல் சட்டம் திருத்தப்படவில்லை.

திருமதி சத்தியவாணி முத்து : தலைவரவர்களே, அரிசன மக்கள் மாத்திரம்தான் அர்ச்சகராக முடியாத ஒரு நிலை இருப்பது போலவும், சமுதாயத்திலே இருக்கிற மற்றவர்கள் அர்ச்சகர்களாக ஆகலாம் என்ற நிலை இருப்பது போலவும் அரிசனங்களுக்காக மட்டுமே இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறதா என்பதற்கு முதலமைச்சரவர்களிடமிருந்து விளக்கத்தை கேட்க விரும்புகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, நம்முடைய சபையிலேயே இது சம்பந்தமாக ஏகோபித்த தீர்மானத்தை நிறைவேற்றி நாம் அனுப்பியிருக்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரு கே. டி. கே. அவர்களுக்கு நன்றி. இப்படிப்பட்ட பல்வேறு குறைபாடுகள் ஒரு மாநில அரசின் சார்பாக எடுத்துச் சொல்லப்படுகிறது. இப்படி பல்வேறு முறையீடுகள் மத்திய அரசில் தேங்கிக் கிடக்கின்றன. இந்த மன வேக்காடு நமக்கு மாத்திரமல்ல மராட்டியத்தின் முன்னாள் முதல்வர் திரு. நாயக் அவர்களுக்கே ஏற்பட்டது. அந்த காரணத்தினால்தான் மராட்டிய முதலமைச்சர் திரு. வி. பி. நாயக் அவர்களும் அந்த மாநிலத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுள் சிலரும் பிப்ரவரித் திங்கள் 11ஆம் நாள் 1975ஆம் ஆண்டு—இந்த ஆண்டுதான்—பம்பாயிலே கூடி—மராட்டிய முதல்வரின் இல்லமான வார்ஷா ரெஸிடென்சிலே கூடி—என்னென்ன காரியங்களை மாநில அரசு கேட்டு—மராத்திய மாநில அரசு கேட்டு—மத்திய அரசால் நிராகரிக்கப்பட்டோ, அல்லது புறக்கணிக்கப்பட்டோ, அல்லது அலட்சியப்படுத்தப்பட்டோ கிடக்கின்றன, எவ்வளவு கோரிக்கைகள் இன்றைக்கு முடங்கிக் கிடக்கின்றன என்ற புள்ளி விவரங்களைக் கொண்ட ஒரு புத்தகத்தையே தயார் செய்து அதை டில்லிக்கு அனுப்பி வைத்தார்கள். இது நடந்தது 1975ஆம் ஆண்டு பிப்ரவரி 11ஆம் நாள்—அனுப்பியவர் சீப் மினிஸ்டர் ஆஃப் மஹாராஷ்டிரா—அவருடைய பெயர் திரு. வி. பி. நாயக்—அதே மாதம் 21-ம் தேதி அவருக்கு முதலமைச்சர் பதவி போய்விட்டது. 11ஆம் தேதி அவர் மாநிலத்திற்காக வாதாடினார். 21ஆம் தேதி முதலமைச்சர் பதவி போய் விட்டது. நீ வாதாடினால் என்ன ஆவாய் என்று கேட்கலாம். ஒரே கட்சியினுடைய ஆட்சி மராத்தியத்திலும் மத்தியிலும் இருந்த காரணத்தினால் இந்த நிலைமை திரு. நாயக் அவர்களுக்கு ஏற்பட்டு விட்டது என்பதைத் தவிர நான் வேறு எதுவும் சொல்லி இந்த அரசியலிலே நுழைய விரும்பவில்லை.

நம்முடைய மாநில அரசு இந்த அதிகாரங்களை வைத்துக் கொண்டு என்ன செய்தது? இன்னும் இவைகளையெல்லாம் கேட்கிறீர்களே, சுயாட்சி, கூடுதல் அதிகாரம் என்றெல்லாம் சொல்லுகிறீர்களே என்றெல்லாம் வாதிக்கப்பட்டது. இந்த அதிகாரத்தை வைத்துக்கொண்டு தான் இன்று ஏற்பட்ட வறட்சிக்காக நம்மால் முடிந்தவைகளை செய்திருக்கிறோம். ஆளும் கட்சி சார்பிலும், தோழமைக் கட்சிகளின் சார்பிலும் தலைவர்களும் மற்ற உறுப்பினர்களும் இந்த 8 ஆண்டு காலத்திலே கழக அரசு அண்ணா அவர்கள் தலைமையிலும் அவர்களுக்குப் பிறகு எங்களுடைய முயற்சியிலும் எந்த அளவிற்கு அரும் பெரும் சாதனைகளைச் செய்திருக்கிறதென்ற பட்டியல் களையெல்லாம் போட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் வரிசைப்படுத்தி இந்த மாமன்றத்தில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

வறட்சி நிவாரணத்தை ஒட்டிக் கூட நாம் பல சலுகைகளை அளித்துள் ளதை இந்த மாமன்றம் நன்றாக அறியும். இந்த விளக்கங்களை யெல்லாம் இப்போது சொல்ல விரும்பவில்லை.

இதன் தொடர்பாகச் சொல்லவேண்டுமானால் நில வரி வசூலுக்கு விலக்கு அளித்தோம். விவசாயக் கடனை ஒத்தி வைத்து, கூட்டுறவுக் குறுகிய காலக் கடனை செலுத்துவதில் சலுகை அளித்தோம். ஆயில் பம்ப் செட் வாங்க ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கினோம், பரவலாக மாநிலம் முழுவதும் பல்வேறு வறட்சி துயர் தணிப்புப் பணிகள், கன்னியா குமரி மாவட்டம் உள்ளிட்டு, எடுக்கப்பட்டுள்ளன. விவசாய பெருங்குடி மக்களுக்காக துயர் தணிப்பு வகையில் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் இவைகள். வறட்சியின் விளைவாக இப்போது சில புதிய அறிவுப்புக்களை நான் செய்ய விரும்புகிறேன். வறட்சியின் விளைவாக கூட்டுறவு கடன்களை வாங்குவதில் உள்ள சங்கடங்களை உணர்ந்து மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு தக்காவிக் கடன்களை தரவேண்டுமென்று என்னிடம் முறையீடுகள் வந்திருக்கின்றன. ஆளும் கட்சி சட்ட மன்ற உறுப்பினர்களும் தோழமை கட்சி சட்ட மன்ற உறுப்பினர்களும் என்னிடத்தில் வலியுறுத்திச் சொன்னார்கள். தூதுக் குழுவாக வந்து சொன்னார்கள். பல்வேறு பகுதியிலிருந்தும் விவசாயப் பெருங்குடி மக்கள் இந்த கோரிக்கையை வைக்கிறார்கள். அதாவது, மாநிலத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்து கிணறுகளை ஆழப்படுத்த தக் காவிக் கடன் தரவேண்டுமென்ற கோரிக்கை. இந்த கோரிக்கையின் இன்றியமையாமையை இந்த அரசு உணர்ந்து கிணறுகளை ஆழப்படுத்த குறைந்தது 500 ரூபாய் முதல் 2000 ரூபாய் வரைக்கும் தக்காவிக் கடன் வழங்க அரசு முடிவு செய்திருக்கிறது. என்பதை மகிழ்ச்சியோடு தெரி வித்துக்கொள்வேன். இதற்கான முதல் கட்டமாக 5 கோடி ரூபாயை அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதையும் நான் மிகுந்த மகிழ்ச்சி யோடு அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவது அறிவுப்பு, அக விலைப்படிக் குழு அளித்த பரிந்துரையில் இனிமேல் அக விலைப்படி தரும்போது அரசு ஊழியர்களுக்கு அளிக்கும் அக விலைப்படியில் 33/80 பங்கை ஓய்வூதியம் பெறுகிறவர்களுக்கும்



அளிக்கவேண்டுமென்று பரிந்துரை செய்துள்ளது. அரசு ஊழியர் களுக்கு நாம் தற்போது அக விலைப்படி உயர்வு ரூபாய் 20 முதல் 30 வரை வழங்கியிருப்பதையொட்டி ஓய்வு ஊதியம் பெறுகிறவர்களுக்கு 8 ரூபாய் அளவில் என்று கூடுதலாக வழங்க முடிவு செய்திருக்கிறோம். பொங்கலின் போது அறிவிக்கப்பட்ட 5 ரூபாய் அகவிலைப்படி உயர்விற்குப் பதிலாக 8 ரூபாய் உயர்வு கிடைக்குமென்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே அவர்கள் பெற்று வந்த 20 ரூபாயோடு இந்த 8 ரூபாயும் சேர்ந்து 28 ரூபாயை அக விலைப்படியாக அவர்கள் ஓய்வூதியம் பெறுவார்கள். இதனால் ஓய்வூதியம் பெறுகிற 62 ஆயிரம் பேர்கள் இதனால் பயனடைவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள் கிறேன்.

மூன்றாவது அறிவிப்பாக, 14—1—1970க்கு முன்பு ஓய்வு பெற்ற நகராட்சி ஊழியர்கள் 25 ரூபாய் அல்லது அவர்கள் கடைசியாக வாங்கிய சம்பளத்தில் கால் பகுதி எது அதிகமோ அதை தற்காலிக ஓய்வூதியமாக அட் ஹாக் பென்ஷனை 14—1—1970 முதல் பெற்று வந்தார்கள். 1—4—1974 முதல் இவர்களுக்கு 10 ரூபாய் ஓய்வூதியம் உயர்த்தப் பட்டது. அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படும் குறைந்த ஓய்வூதியமான 50 ரூபாய் என்பது போல் ஓய்வு பெற்ற நகராட்சி ஊழியர்களுக்கும் 1—4—1975 முதல் குறைந்த அளவு ஓய்வூதியமாக ரூபாய் 50 அளிக்கப் படுமென்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்ட விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் என்னைச் சந்தித்து நீலகிரி மாவட்டத்திலேயே உருளைக் கிழங்கு பயிர்கள் பூச்சிகளால் பாதிக்கப் படுவதைத் தடுக்கும் இண்டோ-ஜெர்மன் நீலகிரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நான்காவது, ஐந்தாவது, ஆறாவது ஆண்டு விவசாயத்திற்கு அவர் கள் ஒரு ஏக்கருக்குக் கட்டவேண்டிய 'தசனித்' என்ற பூச்சிகொல்லி மருந்துக் காக கட்டவேண்டிய தொகையையும், வறட்சியின் காரணமாக செலுத்த முடியாத நிலைமை இருப்பதைத் தெரிவித்தார்கள். நான்காவது, ஐந் தாவது ஆண்டுகளில உருளைக் கிழங்கு பயிர் செய்யப்பட்டுள்ள நிலத்தின் மொத்தப் பரப்பளவு 3,417 ஏக்கர், இதற்குக் கட்ட வேண்டிய பூச்சிக் கொல்லி மருந்துக் கட்டணமாகிய பத்து இலட்சம் ரூபாய் ஓராண்டு காலத்திற்கு ஒத்தி வைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 2–30).

முன்னாள் இராணுவத்தினருக்கு வேலை வாய்ப்பு அளித்திடவும், உணவு வழங்கும் நிறுவனத்திற்குப் பயன்படும் வகையிலும், அரசின் பல்வேறு துறைகள் பொருள் போக்குவரத்திற்கு தனியார் துறையினை நம்பிடும் போக்கைப் படிப்படியாகக் குறைக்கவும் தமிழக அரசு தமிழ் நாடு பொருள் போக்குவரத்துக் கழகம் (Tamil Nadu Goods Transport Organisation) ஒன்றை நிறுவ தீர்மானித் துள்ளது. இதனுடைய முதலீடு 120 இலட்சம் ரூபாய் ஆகும்.

திரு. கே.டி.கே. தங்கமணி: நான் சொன்னேன், மதம் பற்றி, லெனின் என்ற புத்தகம் 1924-ல் லெனின் இறந்த பிறகு 10-ஆண்டு காலத்தில் லெனின் புத்தகங்கள் எல்லாம் என்னென்ன வெளியிடப் பட்டு இருக்கின்றனவோ அவையெல்லாம் லெனின் நிலையத்தில் வைத்து இருக்கிறார்கள். இங்கே குறிப்பிட்ட புத்தகமும் 1932-ம் வருஷம் வெளியிடப்பட்ட புத்தகம்: விடுபட்டுப் போய் இருக்கலாம். அங்கே வைக்கப் பட்டு இருக்கிறது. எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையில், நான் சிங்காரவேலரைப் பற்றி சொன்னது—திராவிடர் கழகம் எந்த அளவுக்கு மரியாதை காட்டினார்கள் என்பது வேறு விஷயம்—விஜயவாடா மாநாட்டைப் பற்றிச்சொல்லி, விஜயவாடாவில் கட்சி ஆரம்பித்து 50 ஆண்டுகள் ஆகிவிட்டது. 50 ஆண்டுகள் விழா கொண்டாடுகிற நேரத்தில், கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் மாநாடு 1925-ம் வருஷம் நடைபெற்றது. கான்பூரில் நடைபெற்றது. 1926-ம் ஆண்டு டிசம்பர் 26-ம் தேதி, அந்த மாநாட்டிற்குத் தலைமை வகித்தவர் சிங்காரவேலர் என்று சொல்லி, சர்வதேச அமைப்பான கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பை இங்கே ஏற்படுத்தியவர் சிங்காரவேலர் என்பதற்காகச் சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எங்களுக்குத் தொடர்பு இல்லாமல் போய்விட்டது என்கிற கருத்து வந்துவிடக் கூடாது என்பதற்காகச் சொல்லுகிறேன். அந்தப் புத்தகத்தைத் தேடவே குருசாமி வீட்டிற்குத் தான் வந்தார்கள். அதற்குப் பிறகு விடுதலை ஆசிரியர் வீரமணி தனது பத்திரிகையின் வாசகர்கள் யாரிடமேனும் அந் நூலின் பிரதி இருக்குமா எனக் கேட்டு பத்திரிகையில் ஒரு கோரிக்கை விடுத்ததின் மூலம், அந்த நூலை ஒருவர் கொண்டு வந்து என்னிடம் கொடுத்தார் என்று அந்த ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

ஆகவே, நான் இதைச் சொல்வதற்குக் காரணம் சிங்காரவேலருக்கும், எங்களுக்கும் உள்ள தொடர்பு இன்றளவும் நீடித்துக் கொண்டுதான் போகிறது என்பதற்காகத்தான். இந்த ஆசிரியரே, குருசாமி 200 பேருக்கு லெனின் என்று பெயரிட்டதைக் கூட குறிப்பிட்டு இருக்கிறார்.

நண்பர் சுப்பு பேசும்போதுகூட கம்யூனிஸ்ட் என்பதில் எப்போதும் மாஜியாக இருக்க முடியாது. எல்லோரும் கம்யூனிஸ்ட்டுகள் தான், அந்தக் கொள்கையை ஒத்துக் கொண்டால் என்று சொன்னார். பெரியவர் மணலியும் அதைத்தான் குறிப்பிட்டார். குருசாமி இருநூறு பேர்களுக்கு லெனின் என்று பெயரிட்டார். நான் என்னுடைய மகனுக்கு ஸ்டாலின் என்று பெயரிட்டேன். இப்போது கம்யூனிஸ்ட் கட்சி ஸ்டாலினை எந்த அளவிற்கு அணுகி வருகிறது என்பது எனக்குத் தெரியாது. ஸ்டாலின் இறந்த நேரத்தில் பிறந்த பிள்ளைக்கு ஸ்டாலின் என்று பெயர் வைத்தேன். ஒரு பிள்ளை முத்து, இன்னொருவன் அழகிரி, இன்னொருவன் ஸ்டாலின், இன்னொருவன் தமிழ்.





இந்த நால்வருக்கும் ஏன் இப்படி பெயர் வைத்திருக்கிறீர்கள் என்று கூட ஒருவர் எழுதிக் கேட்டார். நான் அதற்குச் சொன்னேன் "முத்து என்பது வீட்டிற்காக, அழகிரி நாட்டிற்காக, தமிழ் என்பது மொழிக்காக, ஸ்டாலின் என்பது உலகத்திற்காக" என்று பெயர் வைத்திருக்கிறேன் என்று பதில் எழுதினேன்.

லெனின் என்று பெயர் வைத்துக் கொண்ட காரணத்தால் எப்படி சிலர் சங்கடப்பட்டார்களோ அதைப் போல, ஸ்டாலின் என்று பெயர் வைத்த காரணத்தால் என்னுடைய மகனுக்கு ஒரு கிறிஸ்துவக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ள மறுத்து விட்டார்கள். பெயரை மாற்றிக் கொண்டு வா, சேர்த்துக் கொள்கிறோம் என்றார்கள். கல்லூரி வேண்டாம், பெயர் நிலைக்கட்டும் என்று அதற்குச் சொல்லிவிட்டேன். ஆகவே, இந்தத் தத்துவங்களில் எங்களுக்கு நிறைந்த நம்பிக்கை உண்டு என்பதை எடுத்துச் சொல்வதற்காகவும், சிங்காரவேலர் போன்ற பகுத்தறிவுவாதிகளுடைய அந்தக் கோட்பாடுகளை இன்றளவும் கழகத்தில் இருக்கிற நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவிக்கவும்தான் இதைச் சொன்னேன்.

வரவு செலவுத் திட்டத்தின் இறுதிப் பகுதியில் மாநில சுயாட்சி பற்றி சில பக்கங்கள் குறிப்பிட்டிருப்பதை எடுத்துக் கொண்டு, பேசிய அனைவரும் பெரும்பகுதி மாநில சுயாட்சி பற்றிப் பேச அதிக நேரத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

"ஜெயப்பிரகாஷ் நாராயணனோடு உங்களுக்கு என்ன தொடர்பு, 'அவரோடு நீங்கள் சேரலாமா'' என்றெல்லாம்கூட சில பேர் கேள்வியாகக் கேட்டார்கள். ஜெயபிரகாஷ் நாராயணனோடு இந்திரா காந்தி அம்மையாருக்கு தகராறு வந்தது இப்போது; பீகார் மாநிலத்திலே ஜெயப்பிரகாஷ் போராட்டம் ஆரம்பித்தது இப்போது, ஆனால் 1972-ம் ஆண்டிலேயே ஜெயப்பிரகாஷ் நாராயணன் "பப்ளிக்ஸ் ஆக்ஷன்'' என்கிற ஒரு தலைசிறந்த பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதிலே ஜெயப்பிரகாஷ் நாராயணன், வினோபா பாவே போன்றவர்கள் எல்லாம்கூட எழுதியிருக்கிறார்கள். 1972-லேயே ஜெயப்பிரகாஷ் சொல்கிறார். "ஷேக் அப்துல்லாவோடு மோதாதீர்கள், அழைத்துப் பேசுங்கள்'' என்றெல்லாம் மத்திய அரசுக்கு அறிவுறுத்தியிருக்கிறார். அந்தக் கட்டுரையில் மேலும் குறிப்பிடுகிறார்.

The only question that may still be considered to be relevant is that of the quantum of autonomy that Jammu and Kashmir should enjoy within the Union of India and Jammu and Ladak regions in their turn should enjoy within the constitutional framework of that State. But this is not a question in any way peculiar to Jammu and Kashmir. There are several States in this country which have been demanding larger measure of autonomy. There is for instance the Rajammannar Committee's report in regard to Tamil Nadu but as

the same time it must be recalled, with pride, the ringing words of Chief Minister Mr. Karunanidhi which he is recently reported to have spoken at a public meeting at Thanjavur. "The demand for greater autonomy to the States," he declared, "was never meant to divide the country but only to promote the welfare of the people— ". The Prime Minister Mrs. Indira Gandhi herself could examine the demand for more powers to the States for advancing the people's interest without in any way affecting the unity and integrity of the country.

பிறகு சொல்கிறார்

There is enough flexibility in our Constitution and our Central and State leaders have been wise enough to appreciate the limits within which the demand for autonomy may be pressed. I myself have been a consistent advocate of a much larger measure of autonomy to the States in view of the vastness of our population and diversity of our problems.

ஜெயப்பிரகாஷ் நாராயணனுக்கும் எங்களுக்கும் எப்படித் தொடர்பு ஏற்பட்டது என்பதற்கு இதைவிட வேறு என்ன காரணம் உங்களுக்கு நான் சொல்ல வேண்டும் என்று கருதுகிறீர்கள் ? இந்தியாவிலே இருக்கிற எல்லா மாநிலங்களுக்கும் இப்படிப்பட்ட பிரச்னைகள் இருக்கின்றன. அவைகளைப் பேசித் தீர்க்க வேண்டும், விவாத மேடைக்குக் கொண்டு வா வேண்டும் என்று ஜெயப்பிரகாஷ் 1972-ம் ஆண்டே திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்து வைத்த மாநில சுயாட்சி கோரிக்கையில் பிரிவினை வாதம இடையாது. இந்திய ஒற்றுமைக்கு எந்த, விதமான பங்கமும் இடையாது அதை அந்தக் கட்சியின் தலைவர் தஞ்சை பொதுக் கூட்டத்தில் சொல்லி இருக்கிறார் என்று குறிப்பிட்டு நீங்கள் பேச்சு வார்த்தைக்குத் தயாராகுங்கள் என்று ஜெயப்பிரகாஷ் கேட்டு இருக்கிறார்.

1972-ல் அவர் சொன்னதில் ஒன்றை இப்போது கேட்டு இருக்கிறார்கள். இதை பிறகு கேட்பார்கள் என்று நாம் எதிர்பார்ப்போம். ஷேக் அப்துல்லா வோடு படை கொண்டு மோதாமல் திரு. செழியன் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டதைப் போல பனிப் பாறைகளில் கொண்டுபோய் அவரைச் சிறையில் வைக்காமல் 13 ஆண்டுக் காலம் சிறையில் பூட்டாமல் பேச்சு வார்த்தை மூலமாகத் தீர்த்துக்கொண்டு இருந்தால் காஷ்மீர் பிரச்னை எப்போதோ முடிவு அடைந்திருக்கும். அதைப் போலவே தான் காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை பாரதத் தாய் என்று மகிழ்ச்சியோடு பேசுகிறோம். ஆனால் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை சுயாட்சி தன்மையை வழங்க வேண்டும் என்று கேட்டால் காஷ்மீர் தனி என்று சொல்லுகிறார்கள். கன்னியாகுமரி முதல் காஷ்மீர்வரை என்கிற அந்தத் தத்துவம் தற்கு மட்டும் அடிபட்டு போவானேன் என்று நாம் இன்றைக்கு கேட்கி ருேமே அக்காயல் வேறல்ல.



பல அறிஞர்கள் மாநில சுயாட்சி தத்துவத்தை தேவை என்று எடுத்துக்
காட்டி இருக்கிறார்கள். முன்னாள் சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி
திரு. சுப்பாராவ் அவர்கள் சென்னையில் 20—6—1974 அன்று பேசுகையில்
மாநிலத்தில் வாழும் மக்கள் நல்வாழ்வுக்கு அத்தியாவசியமான எத்த
கைய அதிகாரங்கள் மத்திய அரசை விட மாநில அரசு செம்மையாக நிறை
வேற்ற முடியுமோ அத்தகைய அதிகாரங்களை மத்திய அரசின் தலையீடும்
குறுக்கீடும் இன்றி பிரயோகிக்கும் மாநில அரசுக்குள்ள அரசுரிமை
Sovereign என்பதற்குப் பெயர்தான் சுயாட்சி என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

கேரள காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஜார்ஜ் அவர்கள் 10—5—1974-ல்
பாதுகாப்பு, தகவல், ஒலிபரப்பு வெளிநாட்டு விவகாரங்கள் ஆகிய அதிகாரங்
களை மட்டும் மத்திய அரசு வைத்துக் கொண்டு மிதம் உள்ள எல்லா
அதிகாரங்களையும் மாநில அரசுகளுக்கு வழங்க முன் வரவேண்டும் என்ற
கருத்தை சொல்லியிருக்கிறார்.

பழைய காங்கிரஸ் கட்சியின் கர்நாடக மாநில தலைவர் திரு. வீரேந்திர
பட்டீல் சென்னையில் 9—6—1974-ல் கலைவாணர் அரங்கத்தில் பேசும்போது
மாநில சுயாட்சி என்னும் புனிதப் போரில் தமிழக முதல்வர் நிச்சயம்
வெற்றி வாகை சூடுவார். மாநில சுயாட்சிக்காக திரு. கருணாநிதி புனிதம்
மிக்க போரைத் தொடர்ந்திருக்கிறார். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள்
தேவை. பல்வேறு துறைகளில் அதிக சுயாட்சி தேவை. அப்போது
தான் தவறுகள் இழைக்கும் மத்திய அரசின் பிடியில் சிக்காமல் மாநிலங்
கள் பாதுகாப்போடு இருக்க முடியும். இந்த விஷயத்தில் திரு. கருணாநிதி
அவர்களின் வாதத்தை முழுவதும் ஒப்புக் கொள்ளுகிறேன். இந்தப் புனிதப்
போரில் அவர் வெற்றி பெறுவார் என்று நம்புகிறேன் என்று குறிப்பிட்டு
இருக்கிறார்.

இன்னும் பல பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். திருமதி சத்திய
வாணிமுத்து அம்மையார் அவர்கள் மன்னார்குடி மாநாட்டில் பேசும்போது
மாநில சுயாட்சிக் கோரிக்கையை மிக சாதாரணமாகக் கருதுகிறார்கள். ஆனால்
ஒரு காலத்தில் இதற்காக போராடியதற்காக இந்த கோரிக்கையில்
வெற்றி பெற்றதற்காக நாடு நம்மை பாராட்டத்தான் போகிறது. நேரு
அவர்களும் அம்பேத்கார் அவர்களும் State autonomy என்பதை
வற்புறுத்திச் சொல்லி இருக்கிறார்கள். அப்போது மனப்பூர்வமாக அதை
வரவேற்றவர்கள் இப்போது அதே மாநில சுயாட்சிக் கோரிக்கையைப் பிரிவினை
வாதம் என்பது வேடிக்கையாக இருக்கிறது என்று முழங்கி இருக்கிறார்கள்.

இப்போது மாநில சுயாட்சி பெற்றிருக்கிறதே அந்த காஷ்மீ
ருக்குச் சென்ற என்னுடைய இனிய நண்பர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்
அங்கே திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கும் மாநில சுயாட்சி கோரிக்கை
பிரிவினை உணர்ச்சியை அடிப்படையாக கொண்டது அல்ல என்று, எட்மண்ட்
அவர்களே (சிரிப்பு) அங்கேயே கூறியிருக்கிறார். அவர் மேலும் கூறி
யிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகம் கூறி வரும் சுயாட்சி
கோரிக்கை பிரிவினை உணர்ச்சியை அடிப்படையாக கொண்டது அல்ல.
மாநிலங்களுக்கு சுயாட்சி வேண்டும் என்ற கோரிக்கைக்குத் திராவிட

முன்னேற்றக் கழகம் பொதுமக்களின் ஆதரவைப் பெற்றிருக்கிறது. இந்தியாவிலிருந்து தமிழகம் பிரிந்து செல்ல வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் கூறவில்லை. மாநிலங்களின் கையில் கூடுதல் அதிகாரம் இருக்க வேண்டும் என்றுதான் கூறுகிறது. இது 18–5—1972-ல் எம்.ஜி. இராமச்சந்திரன் நிருபர்களுக்குத் தந்த பேட்டியாகும்.

இன்றுள்ள அரசியல் சட்டத்தைத் தூக்கி எறிந்து விட்டு புதிய அரசியல் சட்டத்தை உருவாக்க வேண்டும். மாநில சுயாட்சி பற்றிய கலைஞரின் கருத்தை ஏற்காவிட்டால் இந்த கோரிக்கை எல்லா மாநிலங்களிலும் பரவி இந்தியா சின்னாபின்னமாகும். இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு பெரும் துணையாக விளங்கும் மாநில சுயாட்சி கோரிக்கையை மத்திய அரசு ஏற்க வேண்டும். இது நீலகிரி திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில் திரு. கோவை செழியனுடைய முழக்கம்.

I am the spokesman of the DMK party in Parliament. Do not belittle the importance of my position as the leader of the party in Parliament. And my Chief Minister Mr. Karunanidhi has categorically declared that we will never revive our demand for separation. On the contrary we want State Autonomy.

இது என்னுடைய இன்னொரு இனிய நண்பர் திரு. மனோகரன் பாராளு மன்றத்தில் மார்ச் 21-ஆம் தேதி ஆற்றிய உரை.

மாநில சுயாட்சி என்பது புதிதாக நாம் சொல்லும் கோரிக்கை அல்ல. அண்ணா அவர்களே சொன்னதாகும். எதிர்க்கட்சியாக இருந்தபோதே டில்லிக்கு காவடி தூக்குகிறீர்களே என்று அண்ணா கேட்டார். அதற்கு அர்த்தமே அங்கே போய் சாதிக்கிற அதிகாரம் இங்கே நம்மிடமே இருந்தால் என்ன என்பதுதான். ஆகவேதான் மாநில சுயாட்சி என்பது அண்ணா அவர்களே சொன்னதாகும். இது தர்மபுரி மாநாட்டில் புரட்சி நடிகர் எம். ஜீ. ஆர். பேசியதாகும்.

இப்போது ஒரு புதிய குரல் இன்று பத்திரிகையில் பார்த்தோம். பஞ்சாப்பில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் குரு சரண்சிங் தாரா என்பவர் ஜம்மு காஷ்மீருக்கு வழங்கப்பட்டது போல் எல்லா மாநிலங்களுக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். மாநிலங்கள் அனைத்துக்கும் முழு அளவில் சுயாட்சி வழங்கப்பட வேண்டும். தமிழ்நாட்டு முதல்வர் திரு. கருணாநிதி கூறி வருவதுபோல் அயலுறவு, பாதுகாப்பு, தகவல் தொடர்பு ஆகியவை தவிர மற்ற எல்லா அதிகாரங்களும் மாநிலங்களுக்கே வழங்கப்பட வேண்டும் என்ற இந்தக் கருத்தை அகாலி தள தலைவர் கூறியிருக்கிறார்.

1912-ஆம் ஆண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஓர் தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறது.



A resolution of the September Plenary meeting of the Central Committee, based on a report by G. Adhikari, definitively outlined the Party's new orientation. Its critical passage was as follows.—

> "Every section of the Indian people which has a contiguous territory as its homeland, common historical tradition, common language, culture, psychological make-up and common economic life would be recognised as a distinct nationality with the right to exist as an autonomous state within the free Indian Union or Federation and will have the right to secede from it if it may so desire......... Thus, free India tomorrow would be a federation or union of autonomous States of the various nationalities such as the Pathans, Western Punjabis, Sikhs, Sindhis, Hindustanis, Rajasthanis, Gujaritis, Bengalis, Assamese, Beharies, Oriyas, Andhras, Tamils, Karnatiks, Maharashtrians, Keralas, etc."

அந்த அளவுக்கு 1942-ஆம் ஆண்டிலேயே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நாட்டுக்குத் தேவையான இந்த தீர்மானத்தில் இந்தத் தேசிய இனங்கள் எல்லாம் தனித் தனி கலாசாரங்கள்கள் வரலாற்றுத் தொடர்பு கொண்டவை. ஆகவே இவைகள் எல்லாம் இந்திய யூனியனில் சுயாட்சி பெற்ற தன்மையோடு விளங்க வேண்டும் என்ற அடிப்படையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

அதே 1942-ஆம் ஆண்டு "வெள்ளையனே வெளியேறு" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்ட, ஏ.ஐ.சி.சி. மாநாட்டில் போடப்பட்ட ஒரு தீர்மானம் :

> "The Constitution according to the Congress view should be a federal one, with the largest measure of Autonomy for the federating units with the residuary powers vesting, in these units"—A.I.C.C. 8th August Resolution 1942.

இது வெள்ளையனே வெளியேறு என்று சொன்ன நேரத்தில் இந்திய நாட்டு மக்களுக்குத் தரப்பட்ட உறுதிமொழி. இது காங்கிரஸ் கட்சி தந்த உறுதிமொழி. இதைத்தான் இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் மாநில சுயாட்சி, கூடுதல் அதிகாரம், மத்தியிலே கூட்டாட்சி என்கின்ற வகையிலே எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. நாம் இதற்காகப் போராடத் தேவையா ? அரசியல் சட்டம் திருத்தப்பட்டால் போதாதா என்ற வாதங்கள் வைக்கப்பட்டன. ஷேக் அப்துல்லா போல் கருணாநிதி சிறைக்குச் செல்வதாகச் சொன்னாரே, அவர் சிறைச் செல்ல வேண்டுமா என்று ஆளும் காங்கிரஸ் கட்சியின் சார்பாக அனுதாபத்தோடு கேட்கப்பட்டது. சொல்லாமலேயே மாநில சுயாட்சி தருகிறோம் என்று ஒருவேளை அவர்கள் கூறுகிறார்கள் என்று நான் கருதுகிறேன். அதற்கு முன்கூட்டியே அச்சாரமாக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் மணலி அவர்கள் பேசிய நேரத்தில் நான் இங்கு இல்லை இங்கே இல்லாவிட்டாலும் அவர்களுடைய பேச்சைப் படித்துப் பார்த்தேன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். போராட்டம் இல்லாமல் லட்சியங்களில் வெற்றிபெற முடியாது என்ற உணர்வை பெரியவர் மணலி அவர்கள் தன்னுடைய உரையிலே எடுத்துக் காட்டினார்கள். நான் ஷேக் அப்துல் லாவை என் இல்லத்திலே சந்தித்த நேரத்திலும், ஜெயபிரகாஷ் நாராயண் அவர்களை டெல்லியில் சந்தித்த நேரத்திலும் பெற்ற உணர்வுகள் அவை கள்தான். என்ன உரையாடினேன் என்பதெல்லாம் வேறு விவகாரம். ஆனால் நான் பெற்ற உணர்வுகள், " தியாகங்கள் செய்வதற்கு யார் தயாராக இருந்தாலும் அவர்கள் லட்சியங்களில் நிச்சயமாக வெற்றி பெற முடியும் " என்பதுதான்.

அப்படியானால் பதவியை விட்டு வெளியே வாருங்களேன் என்று அழைக்கிறார்கள். அழைப்பதற்கான அவசரம் என்ன வென்றால் யார் யார் என்னென்ன மந்திரிகள் என்று இப்போதே நிர்ணயித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே உடனே வந்து உட்கார்ந்துவிட லாம் என்று பார்க்கிறார்கள். பதவியை விட்டு கருணாநிதியோ, நாவலரோ, பேராசிரியரோ, மற்றவர்களோ போய்விட்டால், மிச்சம் இருக்கிற 160 பேரும் இங்கே உட்கார்ந்திருப்பார்கள் ; அவர்களை வைத்துக்கொண்டு ஆட்சி நடத்த லாம் என்று யாராவது கருதினால் அது பகல் கனவு : பதவியை விட்டு போராட்டத்தில் தி.மு.கழகம் இறங்குகிறது என்றால் அத்தனை பேரும் இறங்குகிறார்கள் என்றுதான் அர்த்தம். அதற்குரிய காலம் வரத்தான் போகிறது. அந்த நேரத்தில், அந்தப் போராட்ட நினைவோடு, உணர்வோடு மாநில சுயாட்சி பெறுவதற்கு அண்ணா வழியில் நாங்கள் அயராது பாடுபடு வோம்; பாடுபடுவோம் என்று தெரிவித்து, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றுக், நாளை காலை 9.00 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.53 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

5. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

127. Notification issued in G.O. Ms. No. 677, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Kadayanallur local planning area. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]



128. Notification issued in G.O. Ms. No. 96, Rural Development and Local Administration, dated the 22nd January 1975 in regard to inclusion of Public Works Department Circuit House within the jurisdiction of Courtallam Township. [Laid on the table of the House under section 4(3) of the Courtallam Township Act, 1954 (Tamil Nadu Act XVI of 1954).]

129. Notification issued in G.O. Ms. No. 2889, Home, dated the 31st December 1974 in regard to increase of tax on stage carriages and contract carriages with effect from the 1st January 1975. [Laid on the table of the House under section 26(2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

*B. Reports, Notifications and Other Papers.*

53. Errata issued in Memorandum No. 122820/CE/74-2, Rural Development and Local Administration, dated the 16th October 1974 to Notification No. II (2)/RUL/3649 (b) 74, published at 1 and 2 in Part II — Section 2 of the Tamil Nadu Government Gazette Extraordinary, dated the 12th August 1974.

54. Errata issued in Memorandum No. 164916/ME/74-1, Rural Development and Local Administration, dated the 30th December 1974, to Notification No. II(2)/RUL/283(aai)/74, published at pages 10 to 14 of Part II—Section 2 of the Tamil Nadu Government Gazette Extraordinary, dated the 19th January 1974.

55. Sixth and Seventh Reports (Fifth Assembly) of the Committee on Delegated Legislation.

*How to use the index.*

The index is arranged alphabetically. The main headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every main heading including various names, entries pertaining to proceedings other than questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards. Corporations, etc., are consolidated under the said main headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, temples and similar other broad subjects are shown in alphabetical order under these very main headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the main heading "Papers laid on the Table".

Rulings and observations from the Chair are indexed under the main heading "Chair".

A list of abbreviations used in the index is given below:—

| | |
|---|---|
| A.M./Ad. Motion ... | Adjournment Motion. |
| Ann. ... ... ... | Announcement. |
| B.O.H. ... ... ... | Business of the House. |
| C.A ... ... ... | Calling Attention to a matter of urgent public importance. |
| C.A. (St.) ... ... | Calling Attention Statement. |
| Consid. ... ... ... | Consideration stage of a Bill. This stage includes—<br>(i) Motion to refer to Select/ Joint Select Committee |

(ii) Amendment to refer to Select/Joint Select Committee.

(iii) Amendment to circulate.

(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.

(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.

| | |
|---|---|
| Consid. Cl. ... ... | Consideration of clauses of a Bill. |
| D.E.E. ... ... ... | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D. ... | Discussion for Short Duration on an urgent matter of administration. |
| D.S.G. ... ... ... | Demands for Supplementary Grants. |
| G.A. ... ... ... | Governor's Address. |
| G.D. ... ... ... | General Discussion. |
| H.A.A. Dis./H.H.D. ... | Half-hour Discussion. |
| Int. ... ... ... | Introduction stage of a Bill. |
| L.A. ... ... ... | Legislative Assembly. |
| L.C. ... ... ... | Legislative Council. |
| M. ... ... ... | Motion. |
| P.M. ... ... ... | Privilege Motion. |
| R/Res. ... ... ... | Resolution. |
| St. ... ... ... | Statement. |

# Index to Tamil Nadu Legislative Assembly Debates

THIRTEENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

6TH, 7TH, 8TH AND 10TH MARCH 1975.

VOLUME LXIV (Nos. 1 to 4)

## A


| | PAGES |
|---|---|
| ABUSALI, THIRU M. A.— | |
| Budget, 1975-76, G.D. ... ... ... ... | 207-211 |
| ACCIDENT— | |
| Fire at T. Nagar, relief measures ... ... | 155-157 |
| AGRICULTURE— | |
| Pesticides procurement ... ... ... ... | 12-14 |
| Pesticides, purchase ... ... ... ... | 12-14 |
| ALAGARSAMY, THIRU S.— | |
| Pesticides, purchase ... ... ... ... ... | 12-14 |
| ALAGU THEVAR, THIRU S.— | |
| Budget, 1975-76, G.D. ... ... ... | 111-112 |

PAGES

A.—*cont.*


ANANDANAYAKI, THIRUMATHI T. N.—

Budget, 1975-76, G.D. ... ... ... 45, 64, 66, 234-247, 464, 477, 478, 494, 503, 504, 506-507

Housing Schemes, diversion of funds ... 408-409

ANBAZHAGAN, THIRU K.—

Budget, 1975-76, G.D. ... ... ... ... 70, 90, 120, 216, 217, 220, 221, 236, 239, 243, 244, 434, 438-439, 463, 464, 466, 467, 471, 434

ANIMAL HUSBANDRY—

Jersey Farm at Hosur Cattle Farm, starting ... 26-27

Sheep, eradication of snails ... ... ... 295-296

ANNAMALAI, THIRU C. V. M.—

Budget, 1975-76, G.D. ... ... ... ... 186-187

ARANGANNAL, THIRU RAMA—

Budget, 1975-76, G.D. ... ... ... ... 87, 457-458

ARUMUGAM, THIRU C.—

Budget, 1975-76, G.D. ... ... ... ... 107, 108




PAGES

A—*cont.*


ARUMUGAM, THIRU S.—

Budget, 1975-76, G.D. ... ... ... .. 50-55

ARUNA, THIRU ALADI.—

Branch libraries under District Local Library Authority, number functioning ... ... 31-34


B


BILL(S)—

Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1975, Int. ... ... ... ... ... 301

Indian Ports (Tamil Nadu Amendment) Bill, 1975 : Message from Governor, Int., ... ... ... 171-172

Land Encroachment (Amendment) Bill, 1955, Int. 300

BOARD—

Slum Clearance Board, donations from World Lutheran Federation, ... ... ... 162-163

BRIDGES AND CULVERTS—

Across South Pennar ... ... ... ... 286-287

Across Uyyakondan channel ... ... ... 287


C


CEMENT—

Alternative for construction works, ... ... 161-162

CHAIR—

Rulings and observations :

*Allegations*—

Observing that it was not in keeping with Parliamentary traditions to make allegations without basis, the Speaker ordered the expunction of certain allegations made by a Member in view of the Minister's denial of the allegations on the ground that they were made without any basis 218, 219-220

**C—cont.**

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Allegations—*cont.*

On 10th March, 1975 when a Member made grave allegations against a newspaper Editor, the Chair ordering expunction of those allegations, observed that the Member should produce some tangible evidence in support of the allegations. The Chair could not be asked to call for the public documents in the custody of the Court and verify. The primary duty and responsibility to produce a copy of the record in support of the allegations lay upon the Member who made the allegations and not upon the Chair ... ... ... ... ... 476–477

Debate—

*Allotment of Time.*

With reference to points of order raised by some Members that their party had been discriminated upon in the matter of allotment of time and they should be given a fair deal, the Deputy Speaker, taking exception to certain remarks made by the Members which amounted to a threatening, observed that Members should show respect and regard for the Chair, whoever might preside. He assured Members that there had not been any, and would be no discrimination at all in allotment of time to Opposition parties ... ... 314–316

*Criticism of the speech made in the Council.*

It was not in order to refer to the speeches made by a Member in the Legislative Council and criticize it as it would amount to a breach of privilege ... ... ... ... ... 361

Decorum—

Discussion in the House could be kept at a high level only by the use of dignified and decent words, especially, party leaders should not use harsh or undesirable words ... ... ... 58





**C—cont.**

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

*Expressions used in the House—*

'Incapable God' (கையாலாகாத ஆண்டவன்) in

Objectionable expressions

the sentence "spending two lakhs of rupees for an incapable God who could not protect himself" —deprecated ... ... . .. ... 165

Parliamentary expressions

"*Shame, Shame*"

Members have a right to say 'shame, shame'. 214

*Point of clarification—*

Could be sought only if the Member holding the floor yielded. Frequent interruptions in the course of a discussion were not in order ... 46

*Points of order—*

If a Member were to clarify or explain matters under the guise of a point of order and if the Speaker, after hearing him, rules it out as not a ponit of order, it will neither form part of the proceedings nor will it be published in the Press ... ... 45

Rising on a point of order and giving clarification or explanation was not in order. To say that wrong information had been given a point of order could not be raised ... ... ... 468

To raise a point of order to ask why the Chief Minister or the Food Minister did not press at the Chief Ministers' Conference in Delhi, for additional allotment of foodgrains, was not in order ... ... ... ... ... ... 420

It was not proper to speak about anything at any time under the pretext of 'point of order' ... 420

இதில் நாற்பது இலட்சம் ரூபாய் ஆரம்ப முதலாகவும், ரூபாய் எண்பது இலட்சம் வங்கிகள் மூலம் பெறும் கடனாகவும் அமையும். இந்த நிறுவனம் 100 லாரிகளோடு ஆரம்பித்து, படிப்படியாக தன்னுடைய எண்ணிக்கையைப் பெருக்கிக்கொள்ளும். ஆரம்பத்தில் சுமார் 600 பேரும், இரண்டு மூன்றாண்டுகளில் இராண்டாயிரம் பேரும் முன்னாள் இராணுவத்தினர் இதன் மூலம் பயன்பெறுவார்கள். "முதலீட்டில் பங்கு நிர்வாகத்தில் பொறுப்பு" என்ற இந்த அரசின் கொள்கைக்கு ஏற்ப, முதலீட்டில் இருபத்திநான்கு சதவிகிதம் தொழிலாளர்களுக்கு பங்காக அமையும். நிர்வாகக் குழுவில் இரு தொழிலாளர்கள் இடம் பெறுவார்கள். இதன் தலைமையகம் சென்னையிலே அமையும். இத்திட்டம் மேலும் வளர இந்திய அரசின் முன்னாள் இராணுவ மறுவாழ்வுத் துறை உதவியை இதுவரையில் வழங்க முன்வரவில்லை என்றாலும், இனிமேலாவது முன்வந்து உதவி வழங்கிடுவார்கள் என்ற என் நம்பிக்கையைத் தெரிவித்து, இத்திட்டத்தை இங்கே மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன்.

திரு. எஸ். வடிவேல் : பல அறிவிப்புகளை முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உத்தர,ப் பிரதேசத்தில் அரிசனங்களுக்குள்ள கடன்களை எல்லாம் அரசு ரத்து செய்திருப்பதைப் போல இங்கே ரத்து செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவைகளைப் பற்றி எல்லாம் நிதி ஆதாரத்திற்கேற்ப பரிசீலிக்க வேண்டும், சொல்லிக்கொண்டே வரும்போது அதைச் செய்வீர்களா, இதைச் செய்வீர்களா என்றுகேட்டுக் கொண்டிருந்தால், பட்ஜெட் உரைக்கு நான் தருகிறபதிலாக இது அமையாமல் போய்விடும்.

"அதிகாரங்களை வைத்துக் கொண்டு என்ன சாதித்து விட்டீர்கள்? பிறகேன் கூடுதல் அதிகாரம், மாநில சுயாட்சி கேட்கிறீர்கள்?" என்றெல்லாம் இங்கே கேட்கப்பட்டது. எட்மண்ட் அவர்கள் இன்று மிகத் தெளிவாக மாநில சுயாட்சி என்றால் கூடுதல் அதிகாரம், கூடுதல் அதிகாரம் என்றால் மாநில சுயாட்சி என்று கூறிவிட்டார்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே. நான் அப்படிச் சொல்லவில்லை. உங்களுக்கு மாநில சுயாட்சி என்றால் தன்னாட்சி; அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் மாநில சுயாட்சி என்றால் அது கூடுதல் அதிகாரம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதை நான் ஒத்துக்கொள்கிறேன். நான் வேறு ஒன்றும் சொல்லவில்லை. (குறுக்கீடு) அவ்வளவு தான். தி. மு. கழகத்திற்கு மாநில சுயாட்சி என்றால் கூடுதல் அதிகாரம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மாநில சுயாட்சி என்றால் கூடுதல் அதிகாரம், அதைத்தான் சொல்லுகிறேன்.



திரு. க. உரொ. எட்மண்ட் : நான் ஏற்கெனவே என்னுடைய வாதத்தில் சொல்லியிருக்கிறேன். மாநில சுயாட்சி என்ற வார்த்தையை நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் நாங்கள் கூடுதல் அதிகாரம் கேட்கிறோம். நாங்கள் மாநில சுயாட்சி என்று சொல்லி கூடுதல் அதிகாரம் வேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால், தன்னாட்சி என்ற முறையில் உங்களுடைய கருத்து இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது தன்னாட்சி இல்லை என்பதற்கு பிறகு வருகிறேன். நேரம் ஆனாலும் பரவாயில்லை.

தலைவரவர்களே, இங்கே நம்முடைய கே. டி. கே. அவர்கள் பாரம்பரியம் பற்றி எல்லாம் பேசி சிங்காரவேலுவை நீங்கள் மறந்து விட்டீர்கள் என்று சொன்னார். பிறகு திடீரென்று கோபம் வந்து விட்டது. யார் யாரைப்பற்றியெல்லாமோ பேசிக் கொண்டிருக்கிறீர்கள், சிங்காரவேலர், சர்க்கரைச் செட்டியார் இவர்களைப் பற்றி எல்லாம் பேசவில்லை என்று குறிப்பிட்டு, பெரியாரோடு நிறுத்தினார். அண்ணாவை அந்த நேரத்தில் அவர் மறந்த காரணத்தால் சொல்லாமல் இருக்கலாம். அதனால் அவர் மனத்தில் அண்ணா இல்லை என்று நான் கருத மாட்டேன், சிங்காரவேலுவை யாருக்குத் தெரியும்? என். வி. என். க்குத் தான் தெரியும் என்றார். உடனே, அரங்கண்ணல் எல்லோருக்கும் தெரியும் என்றார்.

ஒரு புத்தகம் "மனிதருள் மாமேரு" லெனினைப் பற்றி எஸ்.வி. மீத்ரோகின் என்பவர் எழுதிய புத்தகம். அதிலே அவர் குறிப்பிடுகிறார். "மதம் பற்றி லெனின்" என்ற தலைப்பில் 1933-ல் அவரது மேற்பார்வையில் ஒரு நூல் வெளிவந்தது. அரியதொரு புத்தகமான இதனைக் கண்டு பிடிப்பது எளிதாயிருக்கவில்லை. ராமசாமி நாயக்கரிடமோ, முருகேசனிடமோ இந்த நூல் இல்லை. "குத்தூசி" என்ற தமிழ் வாரப் பத்திரிகையின் ஆசிரியரும், ஒரு பெரும் புத்தக விரும்பியும், அரிய நூல்களைச் சேகரிப்பவருமான திரு. எஸ். குருசாமியை அணுகுமாறு அவர்கள் எனக்கு ஆலோசனை கூறினர். சென்னை நகருக்கு சற்று வெளியேயுள்ள ஒரு சிறிய வீட்டிற்கு நாங்கள் சென்றோம். நுழை வாயிலில் "குருசாமியும், குமாரி ருஷ்யாவும் இங்கே வசிக்கின்றனர்" என்ற அறிவிப்புப் பலகையை நாங்கள் கண்டோம். திரு. குருசாமி எங்களை அன்புடன் வரவேற்று அவரது அழகிய மகள் குமாரி ருஷ்யாவை எங்களுக்கு அறிமுகம் செய்தார். "நானும் மறைந்த எனது மனைவியும்—அவர் ஒரு கம்யூனிஸ்ட்—சேர்ந்து எங்கள் மகளுக்கு "ருஷ்யா" என்று பெயரிட்டோம். இப்போது அவள் பெரியவளாகி டாக்டராகியுள்ளாள். சுயமரியாதை இயக்கத்தில் பங்கு கொண்டவள் என்ற முறையில் நான் 200 குழந்தைகளுக்கு லெனின் என்று பெயர் சூட்டியிருக்கிறேன். அவர்களில் பலரும் அதன் விளைவாகக் கஷ்டப்பட வேண்டியிருந்தது" என்று எழுதியிருக்கிறது. திரு. குருசாமி சொன்னதாக ருஷ்ய எழுத்தாளர் குறிப்பிட்டு இருக்கிறார்.

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

*Point of Order*—cont.

*Alleged furnishing of wrong information by a Minister.*

On a Member rising on a point of order to refer to a wrong information alleged to have been given by a Minister, the Speaker ruled that the matter would not fall within the scope of a point of order, but the Member might raise a privilege matter after giving it in writing to the Chair and the Chair giving consent to it after satisfying itself with reference to the relevant records ... ... ... ... 421

*Reference to a Member belonging to DMK as belonging to ADMK*

A Member raised a point of order stating that certain remarks made by an A.D.M.K. Member had been attributed to a Member belonging to D.M.K. in a news item published by the Indian Express and, as such publication of wrong news would vicariously affect the Member of the D.M.K., he requested the Speaker to take steps to prevent the publication of such incorrect news.

The D.M.K. Member concerned stated that a representative of the newspaper had tendered an apology to him over the phone regretting the error.

The Speaker observed that a representative of the newspaper also contacted him and expressed regret for the inadvertent error, promising publication of correction. The Speaker appreciated the responsible manner in which the newspaper representative had acted, and called upon the Press to be vigilant in the publication of the proceedings of the House in future ... 167-170







CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

*Point of Order—cont.*

*Criticism of Constitution*

A point of order was raised by a Member whether a discussion against the spirit of the Constitution was in order inasmuch as the ruling party had come to power under the Constitution. He also enquired whether it was in order for them to take advantage of the freedom of speech and plead inside the House for State Autonomy.

After a short discussion which ensured on the point, the Deputy Speaker ruled that there was nothing wrong in discussing about the Constitution. While Article 19 (1) (*a*) guaranteed freedom of speech to the people as one of the fundamental rights, subject to certain limitations, Article 194 (1) conferred absolute freedom of speech on the Members of the Legislature within the House without any limitations whatsoever to enable them to express their views freely and frankly without fear or favour, unfettered by any reason. The Supreme Court also had held in a case with reference to a controversy which arose in the Uttar Pradesh Legislative Assembly that the freedom of speech conferred on the Members under Article 194 was absolute and the Members could speak anything and no action could lie against them. ... ... ... 66-73

On 7th March, 1975 a Member rose on a point of order and requested the Speaker to revise the ruling given by the Deputy Speaker the previous day that Members could talk anything in the House and they could criticise the Constitution. He contended that the Chair's

PAGES.

C—*cont.*

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

*Criticism of Constitution*—cont.

ruling appeared to be a blanket liberty granted to Members to talk anything they liked. Inasmuch as certain articles of the constitution have been specifically referred to even in the Assembly Rules, they were bound by those articles. Hence, he requested that the earlier ruling might be revised.

The Speaker deferred his ruling. ... 170-171

QUESTIONS AND ANSWERS—

*Supplementaries*—

A supplementary which did not relate to the main question, was ordered to be expunged. 298

Should be in the form of a question and not a speech. ... ... ... ... ... 294

When a supplementary is disallowed by the Chair, it means it is expunged. ... ... ... 236

*Walk-out.*

*Protest against non-allotmnt of adequate time.*

On 8th March 1975, two Leaders of Parties walked out of the House along with their partymen as a protest against non-allotment of adequate time for them in a debate. ... ...

However, at the instance of some Leaders of the opposition parties and after the Leader of the House appealed to the Members to return to the House, the Deputy Speaker observed :

"The ruling party, despite their greater number, had been allotted only 280 minutes while the opposition had been allotted 600 minutes. The Presiding Officers could not be blamed in the matter as very often the Members exceeded the time limit and, on such occasions, the Presiding Officers had to be strict. In spite of it, many a time, finding it difficult to make the Members resume their seats, the time had been extended to them.



PAGES

C—*cont.*

QUESTIONS AND ANSWERS—*cont.*

*Walk-out*—cont.

*Protest against non-allotment of adequate time*—cont.

Under the circumstances, the walk out was regrettable. However, forgetting the incident, in response to the request made by the Leaders of Parties, he invited those who had walked out to return to the House and co-operate in the successful conduct of the Proceedings of the House." ... ... ... ... ... 321-324

CHEZHIYAN, THIRU Kovai—

Budget, 1975-76, G.D. ... ... ... ... 200

COMMITTEE(S)—

Delegated Legislation, Sixth and Seventh Reports (Fifth Assembly, presentation ... ... 420

CORPORATION(S)—

Civil Supplies, formation of vigilance section .. 398-401

Harijan Housing and Development—construction of hourse in Thiruchengode taluk ... ... 415-419

COSMETICS—

Soaps, distribution through Civil Supplies Corporation ... ... ... ... ... 147

D.

DENNIS, THIRU N.—

Iraniyal taluk, formation ... ... ... 405-406

Melapuram Middle School, upgrading ... ... 397

Transport corporations and Department, transfer of employees ... ... ... ... 409-412

DEVENDIRAN, THIRU A.—

Fishermen construction of houses at Poompuhar 406-408

DHARMALINGAM, THIRU A. P.—

Land Encroachment (Amendment) Bill, 1975. ... 300

D—*cont.*

DHARMALINGAM, THIRU N.—
Budget, 1975–76, G.D. ... ... ... ... 382–386

DISTRICT ADMINISTRATION—
Iraniyal taluk, formation ... ... ... 405–406

DURAI GOVINDARASAN, THIRU—
Budget, 1975–76, G.D. ... ... ... 115–121

DURAI MURUGAN, THIRU—
Budget, 1975–76, G.D. ... ... ... ... 201–207

E.

EDMUND, THIRU G. R.—
Aluminium cables, export ... ... ... 281–282
Budget, 1975–76, G.D. ... ... ... 312, 317, 322, 334, 345, 452–488

EDUCATION—
Funds, Committee to review utilisation ... ... 265–270

ELECTRICITY—
Rural electrification projects ... ... ... 279–281

EXPORTS AND IMPORTS—
Aluminium cables ... ... ... ... 281–282
Mango juice ... ... ... ... ... 145–146

EXPUNCTIONS—
Budget, 1975–76, G.D. ... ... ... ... 79, 80, 121, 212, 213, 214, 215, 218, 219, 352, 378, 379, 458, 459, 476



E—*cont.*

EXPUNCTIONS—*cont.*
Publication in "Indian Express" referring to a D.M.K. Member as A.D.M.K. Member (Point of Order) ... ... ... ... 168

EX-SERVICEMEN—
Rehabilitation scheme in Pudukkottai district ... 20

F.

FINANCIAL BUSINESS—
Budget, 1975–76, G.D. ... ... ... ... 34–123, 172–256, 301–391, 421–530

FISHERMEN
*See Housing.*

F.

FOOD—
Articles, distribution ... ... ... 401–405
Hand-pounded rice Production Centres, inadequate supply of paddy ... ... ... ... 413–415

FORESTS—
Plantation Corporation, details ... ... ... 20–23

G.

GANAPATHY, THIRU N.—
Committee on Delegated Legislation, Sixth and Seventh Reports (Fifth Assembly), presentation 420

GOPAL, THIRU K. P.—
Budget, 1975–76, G.D. ... ... ... 328–332

GURUSAMI, THIRU N. V.—
Budget, 1975–76, G.D. ... ... ... 84–91

PAGES

H.

HANDE, Dr. H. V.—
Budget, 1975–76, G.D. ... ... ... ... 70-71, 471–472, 473
Fire accidents at T. Nagar, relief measures ... 155–157

HARIJAN WELFARE—
House sites, amount allocated for acquisition in Salem district ... ... ... ... 415
Housing and Development Corporation, construction of houses in Thiruchengode taluk ... 415–419
Scheduled Castes list, inclusion of Valaiyar Community ... ... ... ... ... 298
*See housing.*

HORTICULTURE—
Grape cultivation, details ... ... ... 14–17

HOUSING—
Fishermen, construction of houses at Poompuhar 406–408
Harijan colonies in Gummudipoondi and Ellapuram Panchayat Unions, assignment of house-site pattas ... ... ... ...... 27
House-site pattas for Narikuravas in Ramanathapuram district, assignment ... ... 406
New schemes, details ... ... ... ... 288–295
Schemes, diversion of funds ... ... ... 408–409

I.

INDUSTRIES—
Cotton seed oi Mill for Tirunelveli district ... 150–152
Essence from jasmine, pilot plant ... ... 11–12
Small Industries, loans for ... ... ... 147–150



PAGES

J.

JAMES, Thiru J.—
Budget, 1975–76, G.D. ... ... ... ... 96–110, 314–315
Conference of Chief Ministers and Food Ministers of States at Delhi (Point of Order) ... ... 420

JASMINE
*See* Industries

JOTHI VENCATACHALAM, Thirumathi—
Budget, 1975-76, G.D. ... ... ... ... 46

K.

KAMATCHI, Thiru K.—
Bridge across Uyyakondan channel ... ... 287

KANDASAMI, Thiru Manali C.—
Budget, 1975–76, G.D. ... ... ... 340–355

KANDASAMY, Thiru K.—
Ghat roads in Kodaikanal taluk, formation ... 1–3

KANNAN, Thiru M. R.—
Budget, 1975–76, G.D. ... ... ... ... 74–80

KARTHEESAN, Thiru V.—
Budget, 1975–76, G.D. ... ... ... ... [illegible]

K—*cont.*


KARUNANIDHI, Dr. M.—

Budget, 1975–76, G.D. ... ... ... 40, 41, 42, 49, 56, 63, 64, 65, 66, 67, 68–69, 71–72, 77, 78, 196, 197, 198, 236, 237, 238, 240, 241, 242, 247, 426, 435, 436–437, 439, 440, 441, 448, 449, 455, 459, 460, 462, 468, 472, 473, 479, 480, 481, 488–530.

KHADI—

Emporium at Madurai, functioning ... ... 413

KITTAPPA, Thiru N.—

Cement, alternative for construction works ... 161–162

Civil Supplies Corporation, formation of Vigilance section ... ... ... ... ... 398–401

Ex-servicemen, rehabilitation scheme in Pudukkottai district ... ... 26

Grama Sevaks, merger of Grade I and II Posts ... 157–159

[illegible] taluk, formation ... ... ... ... 40[illegible]–406






K—*cont.*


KITTAPPA, Thiru N.—*cont.*

Pumpsets, stoppage of loans ... ... ... 3–4

Schools run by Local Bodies, taking over by Government ... ... ... ... 135–142

Slum Clearance Board, donations from World Lutheran Federation ... ... ... 162–163

Slum clearance works in districts ... ... 17–20

Souvenir, publication by Municipalities ... 282–286

Temple cars, sale ... ... ... ... 26

KOTHANDARAMIAH, Thiru K. S.—

Bridge across South Pennar ... ... ... 286–287

Budget, 1975–76, G.D. ... ... ... ... 251–256

Grape cultivation, details ... ... ... 14–17

KUMARASAMI, Thiru K. N.—

Budget, 1975–76, G.D. ... ... ... 65

New wells, stoppage of oans ... ... ... 4–11


L


LANGUAGE—

Tamil as official language in districts, implementation ... ... ... ... ... ... 142–144

LATHEEF, Thiru M. A.—

Budget, 1975–76, G.D. ... ... 301–321

LIBRARIES—

Branch libraries under District Local Library Authority, number functioning 31–34

LOANS AND ADVANCES—

New wells, stoppage of– 4–11

Pumpsets, stoppage of– ... ... ... 3–4

LOCAL BODIES—

Souvenir, publication ... ... ... 282–286

PAGES

**M.**

MADHAVAN, THIRU S.—
Budget, 1975–76, G.D. ... ... ... 475, 478, 479

MANGO—
Juice, export ... ... ... ... 145–146

MARIMUTHU, THIRU A. R.—
Budget, 1975–76, G.D. ... ... ... 63, 309–310, 323

MARUDACHALAM, THIRU N.—
Budget, 1975–76, G.D. ... ... ... ... 121–123

MINES AND MINERALS—
Graphite, conversion into diamond ... ... 281

MOHIDEEN, THIRU Thiruppur A.M.—
Budget, 1975–76, G.D. ... ... ... 55–63, 64, 65, 73–74

MUNU ADHI, THIRU—
Budget, 1975–76, G.D. ... ... ... 211–220

MUTHIAH, THIRU M.—
Budget, 1975–76, G.D. ... ... ... 324–328

MUTHU, THIRU V.—
Budget, 1975–76, G.D. ... ... ... 355–357
Harijan Housing and Development Corporation, construction of houses in Thiruchengode taluk ... 415–419
Harijans, amount allocated for acquisition of house-sites in Salem district ... ... ... ... 415
Tippu Sultan Fort (Sankari hills), renovation ... 271–279

MUTHUSAMY, THIRU P.—
Budget, 1975–76, G. D. ... ... ... 302–307



PAGES

**N**

NACHIAPPAN, THIRU A. M. T.—
Budget, 1975–76, G.D. ... ... ... 336–340

NARAYANASWAMY, THIRU M. V.—
Drinking water-supply to Harijans of Vadaperumpakkam village ... ... ... ... 28

NARIKURAVARS
*See Housing.*

NEDUNCHEZHIYAN, DR. V. R.—
Budget, 1975–76, G.D. ... ... ... 311, 317, 323, 483

**O**

OFFICES—
District Educational Officer, Tirunelveli district (Southern Range), location ... ... 395–396

**P**

PALANISAMY, PULAVAR C.—
Budget, 1975–76, G.D. ... ... ... ... 386–390, 421–422

PALANISAMY, THIRU M.—
Vellakoil Government High School, fee receipts 271

PALANISAMY, THIRU N. K.—
Adult schools in slum areas ... ... ... 295
B.T. Assistants, appearance for Part II Tamil in degree examination as private teacher candidates 28–29
Cashew plantations, particulars ... ... ... 23–25
Education funds, Committee to review utilisation 265–270
Elementary School Teachers, formation of Teachers Council ... ... ... ... ... 29–31
Essence from Jasmine, pilot plant ... 11–12

PAGES

P—*cont.*

PALANISAMY, THIRU N. K.—*cont.*

Food articles, distribution ... ... ... 401–405
Forest Plantation Corporation, details ... ... 20–23
Graphite, Conversion into diamond ... ... 281
Hotel (new), starting at Mudumalai ... ... 296–298
Housing Scheme (new), details ... ... ... 288–295
Khadi Emporium at Madurai, functioning ... 413
Mango Juice, export ... ... ... ... 145–146
Pesticides, procurement ... ... ... ... 12–14
Rural electrification projects ... ... ... 279–281
Soaps, distribution through Civil Supplies Corporation ... ... ... ... ... 147
Tiruchendur and Tranqubar temples, protection from sea erosion ... ... ... ... 164–167
Travel concessions for blind ... ... ... 412

PAPERS LAID ON THE TABLE—

Agriculture Budget for 1975-76 (detailed) ... 124
Annual Financial Statement (Budget) Summary of Financial Position, 1973-74 (Accounts) (English and Tamil) ... ... ... ... 124
Cinemas (Regulation) Act, 1955, notification ... 257
Committee on Delegated Legislation, Sixth and Seventh Reports ... ... ... ... 531
Courtallam Township Act, 1954, notification ... 531
District Municipalities Act, 1920, notification ... 256
General Sales Tax Act, 1959, notification ... 123–124
Hindu Religious and Charitable Endowments (Third Amendment) Act, 1974, notification ... 392



PAGES

P—*cont.*

*Papers laid on the Table—cont.*

Indian Companies Act, 1956, Government's review and Annual Report and Statement of Accounts of Banana and Fruit Development Corporation, Ltd. ... ... ... ... ... ... 124
Indian Stamp Act, 1899, notification ... ... 392
Industries Budget for 1975-76 (detailed) ... 124
Irrigation Budget for 1975-76 (detailed) ... 124
Motor Vehicles Act, 1939, notifications ... 124, 256, 392
Motor Vehicles Taxation Act, 1974, notifications 391, 392, 531
Notification No. II (2)/RUL/283 (aai)/74, Errata 531
Notification No. II (2)/RUL/1303 (W)/74, Errata 124
Notification No. II (2)/RUL/3649 (b)/74, Errata 531
Panchayats Act, 1958, notification ... ... 124
Parks, play-fields and open-spaces (Preservation and Regulation) Act, 1959, notification ... ... 257
Roads and Bridges Budget for 1975-76 (detailed) 124
Town and Country Planning Act, 1971, notification 530

PARANDHAMAN, THIRU A.—

New wells, stoppage of loans ... ... ... 4–11

PERUMAL, THIRU A. R.—

Budget, 1975-76, G.D. ... ... ... ... 422–430

PLANTATIONS—

Cashew, particulars ... ... ... ... 23–25

PONNAPPA NADAR, THIRU R.—

Budget, 1975-76, G.D. ... ... 315, 318, 321, 430–452, 504

PAGES

## R

RAJAH PILLAY, THIRU V. K.—
Budget, 1975-76, G.D. ... ... ... ... 358-362

RAJANGAM, THIRU N.—
Budget, 1975-76, G.D. ... ... ... ... 43, 44, 86-87, 88 101, 102, 103

RAJARAM, THIRU K.—
Budget, 1975-76, G.D. ... ... ... ... 199, 215, 216, 390, 458, 459

RAMACHANDRAN, THIRU S.—
Budget, 1975-76, G.D. ... ... ... 371, 390, 484, 485 494

RAMAN, THIRU O. P.—
Budget, 1975-76, G.D. ... ... ... ... 239
Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1975 ... ... ... ... ... ... 301

RAMANATHAN, THIRU S.—
Budget, 1975-76, G.D. ... ... ... ... 112-115

RAMASAMY, THIRU G.—
Natrampalli High School, starting of Engineering and Commerce sections ... ... ... ... 396-397

RAMASWAMY, THIRU E.—
Budget, 1975-76, G.D. ... ... ... ... 380-382

RANGANATHAN, THIRU K.—
Budget, 1975-76, G.D. ... ... ... ... 227-231
Small Industries, loans for ... ... ... 147-150



PAGES

R—*cont.*

ROAD(S)—
Kodaikanal taluk, formation of ghat roads ... 1-3
Konapparayankulam, road to burial ground ... 298-299
Thiruppuvanam-Pulvaykarai reconstruction ... 1

SANGUMUTHU THEVAR, THIRU S.—
Court fee stamps, etc., scarcity in Tirunelveli district ... ... ... ... ... 152-155

SATHYAVANIMUTHU, THIRUMATHI—
Budget, 1975-76, G.D. ... ... ... ... 34-50, 51, 57,58, 71, 76, 77, 348-349, 500

SATHYENDRAN, THIRU M. S. K.—
Budget, 1975-76, G. D. ... ... ... ... 91-96

SCHOOL(S)—
Adult Schools in slum areas ... ... ... 295
High School Building at Mailadumparai, construction ... ... ... ... ... ... 142
Melpuram Middle School, upgrading ... ... 397
Municipal and Panchayat Union schools, taking over by Government ... ... ... ... 135-142
Natrampalli High School, starting of engineering and commerce sections ... ... ... ... 396-397
Vellakoil Government High School, fee receipts ... 271

SERVICES—
Gramasevaks, merger of Grade I and II posts ... 157-159

PAGES

S—*cont*.

SHANMUGHAM, THIRU P. U.—
Budget, 1975-76, G.D. ... ... ... ... 438, 440, 470, 471, 472, 474
Indian Ports (Tamil Nadu Amendment) Bill, 1975 171-172

SIVAPERUMAL, THIRU G.—
Budget, 1975-76, G.D. ... ... ... ... 375-379

SIVAPRAKASAM, THIRU D. S. A.—
Budget, 1975-76, G.D. ... ... ... ... 379-380
Office of District Educational Officer, Tirunelveli district (Southern Range), location ... ... 395-396

SLUM CLEARANCE—
Works in districts ... ... ... ... ... 17-20

SOAPS—
Distribution through Civil Supplies Corporation ... 147

SONIAH, THIRU T.—
High School Building at Mailadumparai, construction ... ... ... ... ... ... 142
Narikuravas, assignment of house-site pattas in Ramanathapuram district ... ... ... 406
Scheduled Castes list, inclusion of Valaiyar community ... ... ... ... ... 298
Thiruppuvanam-Pulvayakarai road, reconstruction 1

SOUNDARAPANDIAN, THIRU P.—
Alleged incorrect information furnished by the Minister for Harijan Welfare to the House (Point of order) 420-421



PAGES

S—*cont*.

SOUNDARAPANDIAN, THIRU P.—*cont*.
Chitrakulam tank in Mylapore, repairs ... ... 160
Cotton seed Oil Mill for Tirunelveli district ... 150-152
Hand-pounded Rice Production Centres, inadequate supply of paddy ... ... ... ... ... 413-415
Konapparayankulam, road to burial ground ... 298-299
Sarangapani Temple, Kumbakonam, renovation of temple car ... ... ... ... ... 25
Thiruchitrambalam temple, theft of idol ... ... 163-164

SRINIVASAN, THIRU T. P.—
Budget, 1975-76, G.D. ... ... ... ... 247-251

STAMPS—
Court fee stamps, etc. scarcity in Tirunelveli district 152-155

SUBRAMANIAM, THIRU A.—
Budget, 1975-76, G.D. ... ... ... ... 64, 306-307, 367-375
Statement by Public Works Minister (Point of order) ... ... ... ... ... 300

SUPPU, THIRU K.—
Budget, 1975-76, G.D. ... ... ... ... 197, 198, 199, 200

T

TANGAMANI, THIRU K. T. K.—
Budget, 1975-76, G.D. ... ... ... ... 68-69, 172-201, 322, 341, 441, 465, 495, 497, 512, 515, 517, 519, 524

PAGES

T—*cont.*

TANGAMANI, THIRU K. T. K.—*cont.*
Constitution, Deputy Speaker's ruling re: Members' freedom of speech to criticize the provisions of—, plea for reconsideration (Point of order) ... ... ... ... ... 170–171

TANK—
Chitrakulam tank in Mylapore, repairs ... 160

TEACHERS—
B.T. Assistants, appearance for Part II Tamil in degree examinations as private teacher candidates 28–29
Elementary School teachers, formation of Teachers Council ... ... ... ... ... 29–31

TEMPLE(S)—
Cars, sale of ... ... ... ... ... 26
Sarangapani Temple, Kumbakonam, renovation of temple car ... ... ... ... .. 25
Thiruchitrambalam temple, theft of idol ... 163–164
Tiruchendur and Tranquebar temples, protection from sea erosion ... ... ... ... ... 164–167

THYAGARAJAN, THIRU E. S.—
Budget, 1975–76, G.D. ... ... ... ... 231–234

TOURISM—
Hotel (new), starting at Mudumalai ... ... 296–298
Tippu Sultan Fort (Sankari hills), renovation 271–279

TRANSPORT AND COMMUNICATIONS—
Corporations and Department, transfer of employees 409–412
Travel concessions for blind ... ... ... 412



PAGES

V

VADIVEL, THIRU S.—
Budget, 1975–76, G.D. ... ... ... ... 462, 463, 478

VADIVELU, THIRU S. K.—
Budget, 1975–76, G.D. ... ... ... ... 332–336

VEERASAMI, THIRU N.—
Budget, 1975–76, G.D. ... ... ... ... 104–105, 106
Publication in "Indian Express" referring to a D.M.K. Member as A.D.M.K. Member (Point of order) ... ... ... ... ... 167–168

VENKATASWAMY, THIRU B.—
Budget, 1975–76, G.D. ... ... ... ... 221–227
Forest Plantation Corporation, details ... ... 20–23
Jersey Farm at Hosur Cattle Farm—starting ... 26–27
Sheep, eradication of snails ... ... ... 295–296

VEZHAVENDAN, THIRU K.—
Harijan colonies in Gummudipoondi and Ellapuram Panchayat Unions, assignment of house site pattas ... ... ... ... ... [illegible]
Tamil as Official Language in districts, implementation ... ... ... ... ... 142–[illegible]

W

WALK-OUT(S)—
Walk-out by Members ... ... ... ... 321–322

WATER SUPPLY—
Harijans of Vadaperumpakkam village, supply of drinking water ... ... ... ... ... 28

61690